www.tamilarangam.net

# ஒரு கம்யூனிசப் போராளியின் அரசியல் நினைவுகள்

என். சண்முகதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு கம்யூனிச போராளியின் அரசியல் நினைவுகள்

என். சண்முகதாசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆங்கிலப் பதிப்பு: 1989
தமிழ்ப் பதிப்பு : 1991

விலை ரூ. 20/-

அச்சிட்டோர் :
கிளாரா அச்சகம்
சென்னை-29

வெளியீடு :
Workers Publishing House

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பல்கலைக் கழக வாழ்க்கை | 1 |
| 2. | ல.ச.ச.க.-வில் பிளவு | 14 |
| 3. | கட்சியின் ஆரம்ப நாட்கள் | 40 |
| 4. | யுத்தத்துக்கு பிந்திய காலம் | 59 |
| 5. | 1947 பொதுவேலை நிறுத்தம் | 67 |
| 6. | காலனிசத்திலிருந்து நவகாலனிசத்துக்கு | 82 |
| 7. | ஹர்த்தால் முதல் 1956 வரை | 102 |
| 8. | பண்டாரநாயக்கா சகாப்தம் | 110 |
| 9. | பண்டாரநாயக்காவுக்குப் பிறகு | 140 |
| 10. | கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு | 154 |
| 11. | கொந்தளிப்பான அறுபதாம் ஆண்டுகள் | 175 |
| 12. | மகத்தான பாட்டாளிவர்க்கக் கலாச்சாரப் புரட்சி | 194 |
| 13. | ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அதன் பின்னரும் | 226 |
| 14. | 1971-க்குப் பின் | 258 |
| 15. | மாசேதுங் சிந்தனைக்கு ஆதரவாக | 286 |
| 16. | மார்க்சிய-லெனினியவாதிகள் சர்வதேசிய ரீதியில் ஐக்கியப்படுதல் | 306 |
| 17. | 1983 யூலைக்குப் பின் | 312 |
| | பின்னுரை | 321 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நன்றி

என்னுடைய அரசியல் வாழ்வைப் பற்றி எழுதும்படி எனது நண்பர்கள் பலர் நீண்டகாலமாக என்னைக் கேட்டு வந்தார்கள். இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றத்துடனும் வளர்ச்சியுடனும் என்னுடைய அரசியல் வாழ்வு இணைந்து செல்கின்றபடியால் இந்தக் கோரிக்கை பலமாக எழுந்தது. லண்டனிலுள்ள இன உறவுக் கழகத்தின் தலைவரும் ''இனமும் வர்க்கமும்'' சஞ்சிகையின் ஆசிரியருமான ஏ. சிவானந்தன் இடைவிடாது கோரிக்கை வைத்தார். இவர்களின்றி இந்நூல் வெளிவந்திராது.

கையெழுத்துப் பிரதிகளை தட்டச்சு செய்வதில் துணை புரிந்த டாக்டர் குமாரி ஜயவர்தனாவுக்கும் எனது நன்றி. நான் சொல்ல எழுதிய வீ. தனபாலசிங்கத்துக்கும் எனது நன்றி.

1983 யூலைக்குப் பின் மேலை நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று சில்லறை வேலைகள் பார்க்கும் தமிழ்த் தோழர்களுக்கு நான் பெரிதும் கடப்பாடு உடையேன். பிரசுரச் செலவில் பெரும் பகுதியை அவர்களே ஏற்றுக் கொண்டார்கள்.

— ஆசிரியர்

ஆங்கிலப் பதிப்பின் முன்னுரை



தலைவர் மா சே துங் அவர்களுடன் ஜூன் 1967-ல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1. பல்கலைக் கழக வாழ்க்கை

பல்கலைக் கழகத்தில் எனது இரண்டாவது ஆண்டு 1939-40. அது எனது முழு வாழ்க்கையின் மார்க்கத்தையுமே மாற்றி அமைத்தது. அவ்வாண்டில் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகினேன். அதன் பின்னர் நான் அதனின்றும் வழுவவேயில்லை.

நான் எனது பள்ளிப் படிப்பை மானிப்பாய் இந்துக் கல்லூரியிற் பெற்றேன். அக்கல்லூரி யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாயில் இருந்த எனது வீட்டிலிருந்து அரை மைல் தூரத்திலேயே இருந்தது. நான் சீனியர் கேம்பிரிட்ஜ் பரிட்சையில் சித்தியடைந்த போது லண்டன் மெட்ரிகுலேஷன் பரிட்சைக்கு பிரவேச தேர்வு எழுதாமலேயே பல்கலைக் கழகத்தில் சேரக்கூடியதாயிருந்தது. ஆனால், பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்கு ஒரு வயதெல்லை இருந்தது. அந்த வயதெல்லையாதெனின் பதினேழு வயது. பதினேழு வயது எய்துவதற்கு எனக்கு மூன்று நாட்கள் குறைவாய் இருந்தன. ஆகவே, நான் கொழும்பு சென்று ஜோசப் கல்லூரியிற் சேர்ந்து ஒரு வருடத்தை வீணே ஓட்டினேன். அதன் பின்னர் 1938-1939 ஆம் ஆண்டில்நான் பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்தேன். அந்த ஆண்டுதான் மாணவர்கள் பிரவேசப் பரிட்சையின்றிப் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்ட கடைசி ஆண்டாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1. பல்கலைக் கழக வாழ்க்கை

பல்கலைக் கழகத்தில் எனது இரண்டாவது ஆண்டு 1939-40. அது எனது முழு வாழ்க்கையின் மார்க்கத்தையுமே மாற்றி அமைத்தது. அவ்வாண்டில் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகினேன். அதன் பின்னர் நான் அதனின்றும் வழுவவேயில்லை.

நான் எனது பள்ளிப் படிப்பை மானிப்பாய் இந்துக் கல்லூரியிற் பெற்றேன். அக்கல்லூரி யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாயில் இருந்த எனது வீட்டிலிருந்து அரை மைல் தூரத்திலேயே இருந்தது. நான் சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சையில் சித்தியடைந்த போது லண்டன் மெட்ரிகுலேஷன் பரிட்சைக்கு பிரவேச தேர்வு எழுதாமலேயே பல்கலைக் கழகத்தில் சேரக்கூடியதாயிருந்தது. ஆனால், பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்கு ஒரு வயதெல்லை இருந்தது. அந்த வயதெல்லையாதெனின் பதினேழு வயது. பதினேழு வயது எய்துவதற்கு எனக்கு மூன்று நாட்கள் குறைவாய் இருந்தன. ஆகவே, நான் கொழும்பு சென்று ஜோசப் கல்லூரியிற் சேர்ந்து ஒரு வருடத்தை வீணே ஓட்டினேன். அதன் பின்னர் 1938-1939 ஆம் ஆண்டில்நான் பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்தேன். அந்த ஆண்டுதான் மாணவர்கள் பிரவேசப் பரிட்சையின்றிப் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்ட கடைசி ஆண்டாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனது இரண்டாவது ஆண்டில், இன்டர்மீடியட் இன் ஆர்ட்ஸ் பரிட்சையிற் சித்தியெய்திய நான் வரலாற்றை விசேஷ பாடமாக படிக்க முடிவு செய்தேன். அச்சமயத்தில் யூனியன் ஹாஸ்டலிற் சேர என்னை அனுமதிக்கும்படி என் தந்தையை வேண்டிக் கொண்டேன். அப்போது ஆண்களுக்கென மூன்று ஹாஸ்டல்களும் பெண்களுக்கென ஒரு ஹாஸ்டலும் இருந்தன. பிரதானமாக பௌத்தருக்கும், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்குமாயிருந்த யூனியன் ஹாஸ்டல் அருணாசலம் மண்டபத்தையும் ஜயதிலகா மண்டபத்தையும் கொண்டிருந்தது. கத்தோலிக்கருக்கான கத்தோலிக்க ஹாஸ்டல் ஹவ்விலாக் வீதியிலிருந்தது. அதே சமயம் புரொட்டுஸ்தாந்துக்களுக்கான ஒரு தனி ஹாஸ்டல் ஹோட்டன் பிளேஸில் இருந்தது. அது புருடி ஹாஸ்டல் எனப் பட்டது.

ஒருவன் பல்கலைக் கழகத்தில் செலவிடும் நாட்கள் அவனது வாழ்க்கையின் சிறந்த நாட்கள் என நான் கருதுகிறேன். அப்போதுதான் ஒருவனின் வாழ்க்கையில் முதன்முதலாகச் சுதந்திர உணர்வு கிடைக்கிறது; பெற்றோரின் சகல கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெறுகிறான். அப்போதுதான் ஒருவனுக்கு படித்து முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் எழுகிறது; அறிவுத்துறை முழுவதும் தன் முன் பரந்து விரிந்து கிடக்கக் காண்கிறான். நாடு முழுவதுமுள்ள சிறந்த பாடசாலைகள் எல்லாவற்றிலிருந்தும் தேர்ந்து பொறுக்கியெடுக்கப்பட்ட மாணவரெல்லாம் ஒன்று குழுமுவதால் அங்கேயோர் அறிவுப் போட்டியும் நடக்கிறது. அதுமட்டுமா, அவ்வாறு முன்னேறாத பாடசாலைகளிலிருந்து வரும் என்போன்ற மாணவர்களுக்கு றேயல், சென்ற் தோமஸ், ஆனந்தா போன்ற சிறந்த பாடசாலைகளிலிருந்து வரும் மாணவருடன் சவால் விட வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. சில துறைகளில் நாம் அவர்களை வெல்லவும் செய்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, வாசிக்கவும் படிக்கவும் போதிய நேரம் கிடைக்கிறது, மிகச் சிறந்ததொரு நூல் நிலையமே எமது கையில். நான் கற்ற மார்க்சிய-லெனினியத்தின் பெரும்பகுதி என் பல்கலைக்கழக நாட்களில் கற்றதுதான். இதற்குக் காரண மாயிருந்தது நான் ஆங்கிலத்தில் கல்வி கற்றதுதான். அதுதான் பிரித்தானிய காலனிவாதிகளின் மொழியாய் இருந்தது. ஒவ்வொரு தீய விஷயத்திலும் ஒரு நல்ல விஷயம் இருக்கும் என்பது உண்மையே. நான் ஆங்கிலத்திற் கல்வியூட்டப்பட்டதும் ஒரு சாதகமான விஷயமாகும். காரணம், இன்று ஆங்கிலம்தான் மிக



முக்கியமான சர்வதேசிய மொழியாக விளங்குகிறது. இதனாற் தான் எனது தலைமுறையை சேர்ந்த மாணவர் பலர் சர்வதேசிய சிவில் சேவையில் சிறந்த உத்தியோகங்களைப் பெற்றுக் கொண் டனர். நல்ல ஆங்கில அறிவும் அம்மொழியை நன்கு பேசும் திறமையும் அவர்களை அக்கரை கொண்டு சேர்த்தது.

ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல. குறிப்பாக, கடந்த இருபது ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத்திற்கு வந்த மாணவர்கள் பெரும்பாலோர்க்கு ஆங்கிலமே தெரியாது. சிங்களத் திலும் தமிழிலும் மார்க்சிய-லெனினிய நூல்களே குறைவு. ஆகவே ஆங்கிலந் தெரியாத காரணத்தால் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் நூல்களைப் படிக்க ஆர்வங் கொண்டோராலேயே கூட அவற்றைப் படிக்க முடிய வில்லை. இந்நூல்களெல்லாம் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. அப்படிக் கற்பதென்றால் அவர்கள் ஆங்கில அறிவுடைய மார்க்சிய - லெனினியவாதிகளின் தயவையே நாட வேண்டி யிருந்தது.

நான் முதன்முதலாக யூனியன் ஹாஸ்டலிற் சேர்ந்தபோது, ஒருவர், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இடதுசாரிப் புத்தகங் களைக் கொண்டு வந்து விற்பார். இவ்வாறுதான் நான் ஜோன் ஸ்ராச்சியின் ''நீ ஏன் ஒரு சோஷலிஸ்ட் ஆக வேண்டும்'' என்ற நூலைப் படிக்க நேர்ந்தது. அந்த நூலாசிரியர் காலகதியில் ஒரு துரோகியாக மாறினாலும் அவரது இந்த நூல் சோஷலிசக் கோட்பாடுகளுக்கு ஒரு அருமையான விளக்கம் தந்துள்ளது. இந்த நூல்தான் என்னை மாற்றியது. படிப்புத்தான் முற்றமுழுதாக எனது இந்த மாற்றத்திற்குக் காரணமாகியது.

எனது அரசியல் வளர்ச்சி, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கல்வியை முடித்துக் கொண்டு வந்த மூவரால் துரிதமாக்கப்பட்டது. அவர்கள் பீட்டர்கௌமன், அ. வைத்தியலிங்கம், பொன். கந்தையா ஆகியோராவர். அ. வைத்தியலிங்கமும், பொன். கந்தையாவும் அரசாங்கப் புலமைப் பரிசில் பெற்றுக் கேம்பிரிட்ஜ் சென்றவர்கள். கௌமன் சுப்ரீம் கோர்ட் நீதிவானாயிருந்த அவரது தந்தையால் கேம்பிரிட்ஜுக்கு அனுப்பப்பட்டவர்.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முந்திய ஒரு தசாப்த காலமாக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பாசிசத்தையும் ஹிட்லரையும் தடுத்து நிறுத்துவதற்கான சர்வதேசிய இயக்கம் காரணமாக ஒரு பெரும் கொந்தளிப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. இந்த இயக்கத் தைத் தலைமை தாங்கிய கம்யூனிஸ்டுகள்பால் புத்திஜீவிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈர்க்கப்பட்டனர். ஸ்பெயின் உள்நாட்டு யுத்தம் பல தீவிரவாதப் புத்திஜீவிகளின் உள்ளத்தை உலுக்கியது. அதன் காரணமாய் அவர்கள் தத்தம் நாடுகளின் சர்வதேசிய பிரிகேடுகளிற் சேர்ந்து ஸ்பெயின் நாட்டிற்கு பிராங்கோவை எதிர்த்துப் போரிடச் சென்றனர். ரால்ப் பொக்ஸ் போன்ற பல பிரித்தானியப் புத்திஜீவிகள் ஸ்பெயின் நாட்டில் போரிட்டு உயிரிழந்தனர்.

இந்நிலைமையிற்தான் மேற்கூறிய இலங்கை மாணவர் மூவரும் கம்யூனிஸ்டுகளாகிப் பிரித்தானியக் கம்யூனிஸ்ட் கட்சியிற் சேர்ந்தனர். பிரித்தானியக் கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து அவர்கள் கற்றுக் கொண்டவை அவர்கள் உருவாக்க உதவிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைத் துரதிர்ஷ்டவசமாக பாதித்தது. இதுபற்றிப் பின்னர் விபரமாகக் கூறுவோம். கேம்பிரிட்ஜ் அல்லது ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலிருந்து திரும்பிய மாணவர்கள் மிகுந்த மதிப்புடன் பார்க்கப்பட்ட காலம் அது. அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் எமக்குத் தேவ வாக்காய் இருந்தது. கந்தையா எமது ஹாஸ்டலின் சப் வார்டனாகவும் பல்கலைக் கழகத்தில் சிறப்பு விரிவுரையாளராகவும் ஆனார். இயற்கையாகவே, நான் அவர்கள்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டேன். எனது மார்க்சிய—லெனினியக் கல்வி வளர்ந்தது.

இந்தச் சமயத்தில் இலங்கை சம சமாஜ கட்சியில் (ல.ச.ச.க.) இன்னும் பிளவேற்பட்டிருக்கவில்லை. நானும் அதில் ஸ்தாபன ரீதியிற் சேர்ந்திருக்கவில்லை. டாக்டர் என். எம். பெரேராவுடன் அவருடைய காரில் களுத்துறைப் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற மாணவர் கூட்டத்திற் சொற்பொழிவாற்றச் சென்றது மட்டுமே நினைவில் நிற்கிறது. பல்கலைக்கழக ல.ச.ச.க. மாணவர் தலைவர்களுள் ஒருவரான டிக்கி ஆட்டிகல கலாசாலை யூனியன் சங்கத்தில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு தீர்மானம் ஒன்றை முன்மொழியும்படி என்னைக் கேட்டுக் கொண்டதும் எனக்கு நினைவில் நிற்கிறது. தான் முன்மொழியாமல் என்னிடம் ஏன் அதைத் தள்ளினார் என்பதற்கு அவர் கூறிய காரணத்தால் அந்த நிகழ்ச்சியை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். அவரது சகோதரர் ஒரு உயர் சி.ஐ.டி. அதிகாரி என்றும், தான் இடதுசாரி அரசியலைச் சார்ந்திருப்பதை வெளிப்படையாகத் தெரியப்படுத்தினாற் தனது சகோதரர் பிரச்சினைக்குள்ளாவார் என்றும் கூறினார். தாங்கள் பாதுகாப்பாயிருந்து கொண்டு மற்றவரைப் பிரச்சினைக்குள்ளாக்கும் இதுபோன்ற புத்திஜீவிகளுக்கு நான் மதிப்புக் கொடுப்பதேயில்லை. இது மாத்திரமல்ல,



எனக்கு ல.ச.ச.க-வுடன் எந்தவிதமான ஸ்தாபன ரீதியான தொடர்பும் இருக்கவில்லை. அந்த ஆண்டு டிசெம்பர்-ஜனவரிக்கு இடைப்பட்ட காலத்தில் ல.ச.ச.க-வுக்குள் பிளவு ஏற்பட்டது. இந்தப் பிளவுபற்றிப் பின்னர் கூறுவேன்.

ஆனால், அந்த ஆண்டின் மிக முக்கியமான நிகழ்ச்சி 1939 செப்டம்பரில் 2-ம் உலக மகாயுத்தம் வெடித்ததேயாகும். அன்று நான் ரீகல் தியேட்டரில் பகற் படக் காட்சிக்குப் போனது எனக்கு நினைவில் நிற்கிறது. அதுவும் அன்று நான் பார்த்த படம் நிலைமைக்கு மிகப் பொருத்தமாய் ''பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தில் சூரியன் என்றுமே அஸ்தமிப்பதில்லை'' என்பதாகும். நான் தியேட்டரைவிட்டு வெளியே வந்ததும் 2-ம் உலக யுத்தம் வெடித்தது செய்தித் தாள்களின் தலைப்புச் செய்தியாய் இருக்கக் கண்டேன். ஒரு காலத்தில் வலிமைமிக்கதாய் விளங்கிய இந்த சாம்ராஜ்ஜியத்தில் இதனால் சூரியன் அஸ்தமிக்கத் தொடங்கி விட்டதென உணர்ந்தேன். அந்த யுத்தம் எவரையும் எதையும் நினைக்கொணாதபடி மாற்றக் கூடியதாய் இருந்தது. அந்த நேரத்தில் ஏகாதிபத்தியக் கட்டத்திலிருந்த அந்த யுத்தத்தைக் கண்டித்து பல்கலைக் கழகத்தில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டது என் நினைவில் நிற்கிறது.

அந்த நேரத்தில் பேராசிரியர் எஸ். ஏ. பேக்மன் தற்காலிக பிரின்ஸிபாலாக இருந்தார். அவர் பேராசிரியர் என். மாரைப் போல மாணவரின் பழக்கவழக்கத்தில் மிகக் கண்டிப்பானவராய் இருந்தார். எமது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கண்டனத்தால் பேக்மன் கோபங்கொண்டார். அந்தத் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்ததாய்க் காரணங்காட்டி எங்கள் மூவரை அவர் உடனடியாகக் கல்லூரியிலிருந்து நிறுத்தி வைத்தார். அந்த மூவருள் ஒருவர், சிவில் சேவையாளராகவும், நில கமிஷனராகவும் இருந்த சி. எல். விக்கிரமசிங்காவின் மகனான எஸ்மண்ட் விக்கிரமசிங்க. இன்னொருவர் முன்னாள் கொழும்பு மேயரும், முன்னாள் வடகொழும்புப் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஆர். சரவணமுத்துவின் மகனான அரபி சரவணமுத்து. மூன்றாமவர், நான். மற்ற இருவரும் வசதி படைத்த செல்வாக்கு உள்ள குடும்பங்களிலிருந்து வந்தது நல்லதாய்ப் போயிற்று. அல்லது, நான் மீண்டும் பல்கலைக் கழகத்துக்குள் நுழைய முடிந்திருக்குமோ என்பது சந்தேகந்தான்.

எஸ்மண்ட், டி. எஸ். சேனநாயக்காவின் உதவியைப் பெற எங்களை அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றது எனக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னும் மறக்கவில்லை. எப்போதும் மாணவர் பக்கம் நின்ற பேராசிரியர் சி. சுந்தரலிங்கத்தின் தயவையும் நாங்கள் நாடினோம். ஆனால் அந்த நேரத்தில் அவர் முற்றிலும் வேறு பட்ட மனிதராய்க் காணப்பட்டார். அவர் அந்த நேரத்தில் கல்லூரியின் பிரின்சிபல் பதவியிற் கண் வைத்திருந்ததால், அவர் மாணவரின் ஒழுக்கத்திற் குறியாய் இருந்தார். இறுதியாக ஒருவித சமரசம் ஏற்பட்டு மூவரும் மீண்டும் கல்லூரிக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டோம்.

இந்த நிகழ்ச்சியால் ஒரு நன்மை ஏற்பட்டது. நான் மாணவரின் கவனத்திற்கு உள்ளானேன். நான் பிரபலமானேன். இதன் விளைவாக, என் நண்பர்கள் நான் பலகலைக் கழக யூனியன் சங்க பொதுக் காரியதரிசிப் பதவிக்குப் போட்டியிட வேண்டுமென கூறினர். இந்தச் சங்கம் எல்லாத்துறை மாணவ ரையும் உள்ளடக்கியிருந்தது. இந்தச் சங்கத்தின் கூட்டங்கள் இருவாரத்துக்கொருமுறை நடைபெற்றன. இதில் விவாதங்கள் நடத்தப்பட்டன; ஆண்டுக்கொருமுறை ஒரு மலர் வெளியிடப் பட்டது. பொதுவாக மாணவர் பிரச்சினை அனைத்தும் கவனிக் கப்பட்டன. அந்த நேரத்தில் அந்த சங்கத்தின் தலைவராய் இருப்பதென்பது ஒரு மதிப்புக்குரிய விஷயமாய் இருந்தது. 1940-ம் ஆண்டு நான் பொதுக் காரியதரிசி பதவிக்குப் போட்டி யிட்டபோது எஸ்மண்ட் விக்கிரமசிங்க தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். இருவரும் வெற்றி பெற்றோம். எஸ்மண்ட் அச்சமயத்தில் பல்கலைக் கழகத்தில் ல.ச.ச.க. குழுவின் தலைவ ராக இருந்தார். அவர் பின்னர் யு.என்.பிக்கு மாறியதும், அதன் உயர்மட்டத்தில் ஒருவரானதும், இப்போது வரலாறாகி விட்டது. நான் கம்யூனிஸ்ட் குழுவுக்குத் தலைமை தாங்கினேன். அப்போது இவையிரண்டுந்தான் பல்கலைக் கழகத்தில் அரசியற் குழுக்களாய் இருந்தன. நாங்கள் கீரியும் பாம்புமானோம். ஆனால் அந்த நேரத்தில் அப்போதுதான் நடந்த ல.ச.ச.க-வின் பிளவு அவ்வளவாய் உணரப்படவில்லை.

அடுத்த ஆண்டில் நான் சங்கத்தின் தலைவர் பதவிக்கு போட்டி யிட்டேன். அப்போது என்னை எதிர்த்து போரிட்டவருள் ஒருவல் வணக்கத்திற்குரிய வல்பொலராகுல. அவர் பின்னர் யு.என்.பி.-யார் வித்தியோதயப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அந்த நேரத்தில் அவர் ல.ச.ச.க.-வின் சார்பிற் போட்டியிட்டார். மற்றவர் திஸ்ஸவீரசிங்கம் ஆவார். அவர் அரசியல்சாரா மாணவரின் சார்பிற் போட்டியிட்டார். நான்



இருவரையும் ஏகப் பெரும்பான்மை வாக்குகளால் வென்றேன். நான் தலைமைப் பதவி பெற்ற அன்று ஒரு ருசிகரமான சம்பவம் நடைபெற்றது. புதிதாகத் தெரிவு செய்யப்பட்டோர் வரும் மாணவருக்கெல்லாம் ஏதோ கொடுக்கவேண்டுமென்பது நியதி. அன்று நாங்கள் எம்பயர் தியேட்டரின் இரவு 9-30 காட்சிக்கு முழுத் தியேட்டரையுமே எங்களுக்காக ஒதுக்கிக் கொண்டோம்.

பொதுவாக, மாணவர்கள் படக்காட்சிக்கு அணிவகுத்துத்தான் செல்வர். டாக்டர் ஐவர் ஜெனிங்ஸ் அப்போதுதான் இலங்கைக்கு வந்து பல்கலைக் கழகத்தின் பிரின்ஸிபாலாய் நியமிக்கப்பட்டிருந் தார். எம்பயர் தியேட்டருக்கு மாணவரை அணிவகுத்து அழைத்துச் செல்ல நான் அவரிடம் அனுமதி பெற அவரை அணுகினேன். அந்தக் காலத்தில் தெருவில் அணிவகுத்துச் செல்லப் பொலிஸ் அனுமதி தேவையாய் இருக்கவில்லை. ஜெனிங்ஸ் அனுமதி அளிக்க மறுத்துவிட்டார். நான் அணி வகுத்துச் செல்லாமல் தனியாகத் தியேட்டருக்குப் போகத் தீர்மானித்தேன். ஆகவே கூடியிருந்த மாணவர்களை அணி வகுப்பின்றி, தத்தம் பாட்டிற் தியேட்டருக்குச் செல்லும்படி கேட்டுக் கொண்டோம். ஒரு பெரும் மாணவர் கூட்டம் வீதியாற போகும்போது நடக்கக்கூடாதது நடந்தே தீரும். துரதிர்ஷ்ட வசமாக மாணவர்கள் பிளவர் வீதியிலிருந்த மகளிர் கல்லூரி யைக் கடந்து செல்ல நேரிட்டது. செல்வி ஓபி அதன் பிரின்ஸிபா லாய் இருந்தார். அவரது துரதிர்ஷ்டம் மாணவர் கூட்டம் வாசலைக் கடந்து சென்று கொண்டிருந்த சமயம் அவரும் தன் காரை கல்லூரி வாயிலுக்குள் செலுத்தினார். உண்மையில் என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. அவரை யாரோ சீண்டியிருக்க வேண்டும். அவர் அவசரமாய் உள்ளே நுழைந்து பொலிசுக்குப் போன் செய்தார். பொலிஸ் மாணவரைக் கலைக்க முயன்றது. ஆனால் அவர்களோ பொலிசார் அணுகுமுன்பே தியேட்டருக்குள் புகுந்து கொண்டனர். பொலிசாரால் எதுவுமே செய்ய முடியவில்லை.

அந்தத் திங்கட்கிழமை காலையில் என்னை ஜெனிங்ஸ் அழைத்தார். நானே நடந்தவற்றுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டார். இதற்குப் பொறுப்பான மாணவரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென எனக்கு உத்தரவிட்டார். என்ன நடந்திருந்தாலும் அதற்கு நானே பொறுப்பேற்க வேண்டுமென்பதை நான் நிர்த்தாட்சண்யமாய் மறுத்தேன். அதுதான் நான் அணிவகுப்புக்குத் தலைமை வகித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதை நடத்திச் செல்ல அனுமதி கேட்டேன் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல் அவருக்கு மெல்லச் சொன்னேன். அந்தச் சமயத்தில் எனக்கு அனுமதி வழங்கியிருந்தால், அதன்போது நடந்த சகலத்துக்கும் நானே பொறுப்பேற்றிருப்பேன் என்றும் அவருக்கு நான் தெரியப் படுத்தினேன். அவர் அதற்கு அனுமதி வழங்காதபோது இந்தச் சம்பவத்திற்கு என்னை எப்படிப் பொறுப்பாளியாக்கலாம் என்றும் அவரை நான் கேட்டேன். ஜெனிங்ஸால் என்னை அந்த நிலையில் இருந்து அசைக்க முடியவில்லை.

எனது தேசப்பற்றை வெளிப்படுத்தவும், அந்தக் காலத்தில் அதன் உச்சத்திலிருந்த இந்திய தேசிய சுதந்திர இயக்கத்தின் செல்வாக்கினாலும் நான் சங்கக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குகையிற் தேசிய உடையை அணிந்தது மட்டுமல்ல, அதையும் கதரில் அணிந்து கொண்டேன். நான்தான் இவ்வாறு உடையணிந்த முதலாவது தலைவர். இந்த விஷயம் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க தேசிய உடைக்குப் பிரசித்தி கொடுப் பதற்கு வெகுகாலத்திற்கு முன்பே நடைபெற்றது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக யூனியன் சங்கத் தலைவராக தெரிவு செய்யப் பட்ட அதே சமயம் நான் யூனியன் ஹாஸ்டல் சங்கத் தலைவ ராகவும் தெரிவு செய்யப்பட்டேன். யூனியன் ஹாஸ்டல் சங்கத்தில் ஒரு தவணை மட்டுமே பதவி வகிக்கலாம். முதலாம் தவணையிற் தலைவராய் இருப்பதையே பொதுவாக எல்லோரும் விரும்பினர். காரணம் அந்தத் தவணையின் இறுதியிற்தான் வருடாந்தர இரவு விருந்து நடைபெறும். அந்த விருந்தில் தலைவர் உரையாற்றுவார். அந்தத் தவணை நான் உரையாற்றியதை என்னால் மறக்கவே முடியாது.

மற்ற விடுதிகளைப் போலன்றி யூனியன் விடுதி வருடாந்தர இரவு விருந்தை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகவே எடுத்துக் கொள்ளும். மதுவுக்கும் மாதிற்கும் அங்கு அனுமதி இல்லை. ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி உரையாற்றி, தாய்த் திருநாட்டை வாழ்த்திப் பானமருந்துவது தலைவரின் வழக்கம். ஆனால், தாய்த்திருநாட்டை வாழ்த்துவதற்கு முன் கூறப்படும் விசுவாச வாழ்த்துப் பானங்கள், அதாவது மாட்சிமை தங்கிய அரசர், மேன்மை பொருந்திய கவர்னர் ஆகியோரை வாழ்த்திப் பானமருந்துவது வழக்கமாயிருந்தது.



எனது பதவிக் காலத்தில், விசுவாச வாழ்த்துப் பானங்களை கைவிடுவதாய் முடிவு செய்யப்பட்டது. நாங்கள் முன்னதாகவே விடுதி வார்டனுக்கு இதைத் தெரிவித்தோம். அவர் இதை ஜெனிங்சுக்குத் தெரிவித்தார். ஜெனிங்ஸ் இந்த டின்னருக்குக் கொடுத்த அழைப்பை ஏற்க மறுத்ததன் மூலம் என் தீர்மானத் திற்குப் பதில் அளித்தார். இது எம்மைக் குழப்பியது. காரணம், நாங்கள் அச்சமயம் ஜெனிங்ஸ் அங்கு இருப்பதை விரும்பினோம். அப்போது ஒருமுகப்பட்ட வாசஸ்தல பல்கலைக்கழகத்திற்கெதிரான ஒரு சூடான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதற்கு வக்காலத்து வாங்கியவர் ஜெனிங்ஸ். தலைவர் உரையிற் கூற விருந்த எங்கள் கருத்துக்களை ஜெனிங்ஸ் கேட்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம். ஆகவே நாங்கள் ஒரு சூழ்ச்சி செய்ய நினைத் தோம்.

ஆகவே நாங்கள் விசுவாச வாழ்த்துப் பானங்களைக் கை விடாதிருக்க முடிவு செய்தோம். ஜெனிங்சும் அழைப்பை ஏற்றுக் கொண்டார். பேராசிரியர் சி. சுந்தரலிங்கந்தான் பிரதான விருந் தினராய் அழைக்கப்பட்டிருந்தார். அவர் யூனியன் விடுதியின் நல்லதொரு வார்டனாக நீண்டகாலம் விளங்கினார். ஆனால் அவர் ஏதோ கருத்து வேறுபாடு காரணமாக தனது பதவியைத் துறந்ததோடு மட்டுமல்லாமல், மீண்டும் அந்த விடுதிக்கு குறைந்தது ஐந்து வருடகாலம் வரமாட்டேன் என்றும் சத்தியம் செய்து கொண்டார். டின்னரில் எனது இடப்பக்கத்தில் அவரும் வலப்பக்கத்தில் ஜெனிங்சும் அமர்ந்திருந்தனர். அன்று டின்னருக்கு வந்திருந்து உரையாற்றிய ஏனைய விருந்தினருள் ஜே. ஆர். ஜயவர்த்தனாவும், பீட்டர் கௌமனும் அடங்கியிருந்ததும் எனக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

விருந்தின் முடிவில் விசுவாச வாழ்த்துப் பானங்களைப் பிரேரிப்பது எனது கடமையாகும். நான் பவ்யமாய் எழுந்துநின்று, ஒரு கிளாஸ் சோடாவைக் கையிலேந்தியபடி மாட்சிமை தாங்கிய அரசரை வாழ்த்திப் பானமருந்தும்படி கூறினேன். ஆனால் பானத்தை அருந்தவில்லை. விருந்தினர் எழுந்து நின்றனர். ஆனால் மாணவர் யாருமே எழுந்து நிற்கவில்லை. இது ஏகாதி பத்திய எதிர்ப்பு உணர்வின் சிறந்த வெளிப்பாடாய் அமைந்தது. இது ஜெனிங்ஸின் கன்னத்தில் வீழ்ந்த ஒரு பெரும் அறை போலாயிற்று. ஜெனிங்ஸ் விசுவாச வாழ்த்துப் பானத்தை நாம் கைவிடப் போகிறோம் என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொண்டிருந் தால் எவ்வளவோ நன்றாய் இருந்திருக்கும். மாட்சிமை தங்கிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவர்னர் அவர்களுக்குக் கூறப்பட்ட வாழ்த்துப் பானத்திற்கும் இதே கதிதான். தாய்த் திருநாட்டை வாழ்த்திப் பானம் அருந்து முன் நான் ஜெனிங்சின் ஒருமுகப்பட்ட வாசஸ்தல கல்லூரி பற்றிய கருத்தைச் சாடி உரையாற்றினேன். நான் அமர்ந்ததும், நான் அவரைத் தவறாய்ப் புரிந்து கொண்டிருப்பதாய் அவர் எனக்குக் கூறினார். அவர் தன்னுடன் தேநீர் அருந்த அவர் தங்கியிருந்த கோல்பேஸ் ஹோட்டலுக்கு ஒரு கலந்துரையாடலுக்காக அடுத்த நாள் வரும்படி என்னை அழைத்தார். நான் அவரின் அழைப்பை ஏற்று நான் அங்கே போனேன். ஆனால் இருவரில் யாரும் மற்றவர் கருத்தை மாற்ற முடியவில்லை.

எனது பல்கலைக்கழக வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத சம்பவங்களுள் இன்னும் முனைப்பாயுள்ள ஒரு சம்பவம், 1940-ம் ஆண்டின் இறுதியில் பண்டிட் நேரு கோல்பேஸ் கடற்கரையில் நடைபெற்ற பொது சனக் கூட்டத்தில் உரையாற்றியதுதான். நேரு இலங்கை அரசாங்கத்துடன் இலங்கை-இந்திய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாட இலங்கைக்கு வந்திருந்தார். பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. ஆனால் அவர் திரும்பிச் செல்வதற்கு முன் கோல்பேஸ் திடலில் ஒரு பிரமாண்டமான கூட்டத்தில் உரையாற்றினார். தீவிரமான தேசியவாதி என்ற முறையிலும், தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர் என்ற முறையிலும் நேரு அச்சமயத்தில் இலங்கையிற் பிரபல்யமாகி இருந்தார். டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேருவின் உரையைச் சிங்களத்திற்கு மொழி பெயர்த்தார். ஏ. ஈ. குணசிங்காவின் கையாட்களான காடையர் கூட்டம் ஒன்று கூட்டத்தைக் குழப்புவது மூலம் தம் எதிர்ப்பைக் காட்டினர். நேரு தன் வழமையான முறைப்படி மக்கள் கூட்டத்துக்குட் குதித்து குழப்பத்தை அடக்கப் பார்த்தார். ஆனால் அப்படிக் கூட்டத்துக்குட் குதிக்காதவாறு அவர் தடுக்கப்பட்டார். ஆனால் உடனேயே அமைதி ஏற்படுத்தப்பட்டது.

இன்னொரு குறிப்பிடத்தக்க சம்பவம் நாங்கள் மாணவர் மாநாடொன்று நடத்தியதாகும். நாங்கள் பல்கலைக்கழக மாணவரை மட்டுமல்லாது பிற முக்கிய பாடசாலைகளைச் சார்ந்த மாணவர்களையும் சேர்த்து ஒரு மாணவர் மன்றம் அமைத்தோம். இவ்வமைப்பின் மூலம் நாங்கள் மாணவர் பிரச்சினைகளை விவாதிக்கக் கூடிய ஒரு மாநாட்டைக் கூட்டத் திட்டமிட்டோம். அதற்குப் பல்கலைக் கழகத்திலிருந்த கிங் ஜோர்ஜ் ஹாலைப் பயன்படுத்த அனுமதியும் பெற்றுக் கொண்டோம். ஆனால் நாங்கள்



இந்த மாநாடு பற்றிய டாக்டர். எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் வாழ்த்துச் செய்தி அடங்கிய அறிவித்தலை யூனியன் சங்க அறிவிப்புப் பலகையிற் போட்டபோது, பேராசிரியர் பேக்மன் கடைசி நேரம் அந்த மண்டபத்தை பயன்படுத்த அனுமதி மறுத்து விட்டார். நாங்களும் சளைக்கவில்லை வேறு ஆயத்தம் செய்தோம். கொழும்பு மாநகர மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டு மாநாடு வெற்றிகரமாய் நடந்தேறியது.

மற்றொரு குறிப்பிடத்தக்க சம்பவம் நடைபெற தவறிய ஒன்றாகும். 1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ''இந்தியாவை விட்டு வெளியேறு'' என்ற பிரசித்தி பெற்ற இயக்கம் நடைபெற்றது. இந்திய தேசிய இயக்கம் இலங்கையின் மிகப் பெரிய ஆதரவைப் பெற்றது. ல.ச.ச.க.-வும் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி(இதுதான் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியது)யும் ''இந்தியாவை விட்டு வெளியேறு'' இயக்கத்திற்கு ஆதரவாய் கோல்பேஸ் திடலில் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தன. பல்கலைக் கழகத்தில் நாங்கள் கல்லூரியிலிருந்து கோல்பேஸ் கிறீன்வரை ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதெனத் தீர்மானித்தோம். ஆனால் கூட்டம் நடைபெற இருந்த அன்றைய தினம் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் ல.ச.ச. கட்சி, யூ.என்.பி. ஆகிய இரண்டுக்குமே தடை விதித்ததோடு, அன்று கோல்பேஸ் கிறீனில் நடைபெறவிருந்த கூட்டத்துக்குமே தடை விதித்தது. இதன் காரணமாய், எமது ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறாத ஒன்றாகவே போய் விட்டது.

ஆனால் அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு நாங்கள் ஆயுத்தம் செய்த செய்தி ஜெனிங்ஸ் காதுக்கு எட்டிவிட்டது. அவர் அந்தச் சமயத்தில் யூனியன் சங்கத் தலைவராய் இருந்தவரை அழைத்து யார் இதற்கு பொறுப்பு என்று கேட்டார். தலைவர் எனது பெயரை உளறிக் கொட்டி விட்டார். அடுத்த நாள் கல்லூரியில் இருந்த தனது வீட்டுக்குப் போகும் வழியில் என்னைத் தற்செயலாய்ச் சந்தித்துவிட்டார். பல்கலைக் கழகத்தில் இப்படியொரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்ய எனக்கு யார் அனுமதி அளித்ததென என்னைக் கேட்டார். அந்த ஊர்வலம் கல்லூரிக்கு முன்னாலிருந்த பொது வீதியிலிருந்து ஆரம்பிக்கவிருந்ததென்றும் அதற்கு யாருடைய அனுமதியையும் பெறத் தேவையில்லையென்றும் நான் பதிலளித்தேன். அவருக்குக் கோபம் தலைக்கேறியது. என்னைப் பற்றி வசிப்பிட ஒழுங்குக் கட்டுப்பாடு சபைக்குப் புகார் கொடுக்கப் போவதாய் என்னை அச்சுறுத்தியபடியே போய்ச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேர்ந்தார். அவர் தன் அச்சுறுத்தலைப் பேச்சளவில் விடவில்லை. என்னைக் கல்லூரியிலிருந்து விலக்க நடவடிக்கை எடுத்தார். அப்போது வசிப்பிட ஒழுங்குக் கட்டுப்பாட்டு சபை ஐவரை உள்ளடக்கியிருந்தது. அதில் ஜெனிங்சும் ஒருவர். எனது அதிர்ஷ்டம் ஐவரில் மூவர் ஜெனிங்ஸின் வேண்டுகோளை ஏற்க மறுத்தனர். அவர்களுள் ஒருவர் ஏ. டபிள்யு. மயில்வாகனம். அவர் அப்போது யூனியன் சங்கத்தின் சிரேஷ்ட தனாதிகாரியாய் இருந்தார். அவர் தனிப்பட்ட முறையில் என்னுடன் நெருங்கிப் பழகியவர். மற்றவர், பேராசிரியர் கினிகே. அவர் எனது விடுதி வார்டனாயிருந்தார். மூன்றாமவர் செல்வி மதியாபரணம். அவர் தத்துவவியல் விரிவுரையாளராக இருந்தார். அவர் எனது ஊரைச் சேர்ந்தவர். ஆகவே, நான் காப்பாற்றப்பட்டேன். ஆனால் இப்படியெல்லாம் நடந்ததுபற்றி எனக்குப் பல்கலைக் கழகத்தை விட்டு நீங்கும்வரை தெரியாது. இத்துடன் இன்னொரு சம்பவத்தையும் கூற விரும்புகிறேன். அது ''பல்கலைக் கழகச் செய்தி'' என்ற வாரஏட்டை வெளியிட்டதாகும். அந்த வார ஏடு நான்கு பக்கங்களைக் கொண்டிருந்தது. அதன் விலை இரண்டு சதம். அது பல்கலை மாணவர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டது. பின்னர் அது மாணவர் செய்தி என விஸ்தரிக்கப்பட்டது. இது உண்மையில் பல்கலைக் கழகத்திலிருந்த கம்யூனிஸ்ட் குழுவால் வெளியிடப்பட்டது. ஆனால் இந்த விஷயம் பகிரங்கமாக்கப்படவில்லை. ஆனால் வெளியிடுவோர் யாரென்பது ரகசியமாய் இருக்கவில்லை. முதலாவது ஏடு வெளிவந்து ஒருசில நாட்களான பின் நான் எஸ்மெண்ட் விக்கிரமசிங்காவைச் சந்தித்ததையும், அவர் ''இது ஒன்றில் என்னால் அல்லது உம்மாற்தான் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்'' என்று கூறியதையும், அதனை நான் ஏற்றுக் கொண்டதையும் என்னால் இன்றும் மறக்க முடியாது.

இவை தவிர, கட்சியின் சார்பில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதிலேயே என் நேரம் கழிந்தது. அச்சமயத்தில் நாங்கள் ல.ச.ச.க-வின் ட்ரொஸ்கியவாதிகளுடன் கடுமையான மோதலில் ஈடுபட்டிருந்தோம். இதுபற்றி நான் அடுத்த அத்தியாயத்திற் கூறுவேன். இச்சமயத்தில் எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. இச்சமயத்தில் மௌண்ட் பேட்டன் தனது எஸ்.இ.ஏ.சி (தென் கிழக்காசிய ஆணை)யின் தலைமையகத்தை கண்டியில் அமைத்திருந்தார். பிரித்தானியாவிலிருந்து மட்டுமல்ல, பிரித்தானிய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளிலிருந்தும் ஆயிரக் கணக்கான துருப்புகள் இலங்கையில் இடங்கொண்டிருந்தன.



அவர்களுள் பல கம்யூனிஸ்டுகளும் இருந்தார்கள். சிலர் மிகவும் முதிர்ந்த கம்யூனிஸ்டுகளாய் இருந்தனர். நாங்கள் இந்தக் கம்யூனிஸ்டுகளை விடுதிக்கும் பல்கலை கழகத்திற்கும் அழைத்துக் கலந்துரையாடல் நடத்தினோம். சிலர் விரிவுரைகூட ஆற்றினர். திரிகோணமலையில் பிரித்தானியக் கடற்படையைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் பொருளாதார உதவியினாற்தான் அங்கிருந்த எமது தோழர்கள் ஒரு கிளை அலுவலகத்தை முதன்முதலாகத் தொடங்கக் கூடியதாயிருந்தது என் நினைவில் இன்னும் நிற்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 2. ல. ச. ச. க - வில் பிளவு

நான் ஏற்கெனவே கூறியதுபோல் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகியபோது, லங்கா சம சமாஜக் கட்சி (ல.ச.ச.க) ஆரம்பித்துக் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாகியிருந்தன. அது 1935ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அது தேசியவாதிகள், ஏகாதி பத்திய எதிர்ப்புவாதிகள், சோஷலிசவாதிகள், கம்யூனிஸ்டுகள் போன்ற பல தரப்பட்டோர் ஒன்று சேர்ந்த, பரந்த, அவ்வளவு இறுக்கமற்ற ஒரு கூட்டணியாய் விளங்கியது. இருப்பினும், அத னுள்ளே ஒரு அமுங்குப்பிடியான ட்ரொஸ்கியத் தலைமை மறைந் திருந்தது. அது 1939-40-ல் ஏற்பட்ட பிளவுவரை தன்னை வெளிப் படுத்திக் கொள்ளவில்லை. அக்கட்சியின் பிரதான நடவடிக்கை ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்துக்களையும், சோஷலிச கருத்துக் களையும் பரப்புவதாய் இருந்தது. ஆனால் கட்சி தன் ஆரம்ப காலம் முதல் பாராளுமன்றவாதத்தை ஆதரித்து வந்தது. இரண்டாவது ஸ்டேட் கவுன்சிலுக்கான தேர்தலில், கட்சியின் இரு தலைவர் களான பிலிப் குணவர்த்தனாவும், டாக்டர் என். எஸ். பெரே ராவும் முறையே அவிசாவலையிலும், ருவான்வலையிலும் வெற்றி பெற்றனர். அதே தேர்தலில் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா தனது மொரவக்கத் தொகுதியிற் தோல்வியடைந்தார். ஆனால் 1931ஆம் ஆண்டு அதே தொகுதியில் அவர் வெற்றி பெற்றிருந்



தார். லெஸ்லி குணவர்த்தனா பாணற்துறையிற் தோல்வி யுற்றார். பாராளுமன்றத்தில் பிலிப் குணவர்த்தனாவும், என். எம். பெரேராவும் சம சமாஜ இரட்டையர் என அழைக்கப்பட்டனர். அங்கே அவர்கள், பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு வால் பிடிக்கும் ஜயதிலக சேனநாயக்க கொள்கைகளை அம்பலப்படுத்தி வந்தனர்.

முதலாவது ஸ்டேட் கவுன்சிற் தேர்தலின்போது, மொரவக்கத் தொகுதியில் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா வெற்றி பெற்றார். அவர் பிரித்தானியாவிலிருந்து சோஷலிசக் கருத்துகளுடன் நாடு திரும்பிய முதலாவது ஆட்களுள் ஒருவராவார். ஆனால், மொரவக்க மக்கள் சோஷலிசத்தை ஆதரிப்பவர் என இதைக் கொண்டு முடிவு கட்டுவது தவறாகும். அவர் வெற்றி பெற்றதற் கான உண்மைக் காரணம், அவர் தென்னிலங்கையிலிருந்த செல்வமும், செல்வாக்கும் நிறைந்த ஒரு நிலப்பிரபுத்துவக் குடும்பத்திலிருந்து வந்ததேயாகும். இதுமட்டுமல்ல, அவர் ஒரு திறமைவாய்ந்த டாக்டராக விளங்கியதும் அவரது அடுத்துவந்த தொடர்ச்சியான வெற்றிக்கும், அவர் விரும்பி முன்னுக்குக் கொண்டுவந்தோரது வெற்றிக்கும் காரணமாகியது.

டி. பி. ஜயதிலகவும், டி. எஸ். சேனநாயகவும் ஆதிக்கம் செலுத்திய இந்த ஸ்டேட் கவுன்சிலிற் டாக்டர் எஸ். ஏ. விக்கிரம சிங்கா தனியொருவராய் நின்று இந்த ஏகாதிபத்திய கையாட் களுடன் போராட்டம் நடத்தினார். அதுமட்டுமல்ல, அவர் அங்கு சோஷலிசக் கருத்துக்களையும் பரப்பினார். அவர் டி.பி-யையும் டி.எஸ்.சையும் அதிக அளவுக்கு எரிச்சலூட்டியிருந்தார், எனவே அவர்கள் இரண்டாவது ஸ்டேட் கவுன்சிற் தேர்தலின்போது நேரே மொரவக்காவுக்கு போய் விக்கிரமசிங்காவைத் தோல்வி அடையச் செய்வதில் தனிப்பட்ட கவனம் எடுத்துக் கொண்டனர்.

1934—1935-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட மலேரியாக் கொள்ளை நோயின்போது, கட்சி மலேரியா தாக்கிய இடங்களில் நல்ல நிவாரண வேலை செய்தது. இவ்வேலை தேர்தலின்போது நல்ல பலனைக் கொடுத்தது. இந்த இடத்தில் 1934-ல், அதாவது ல.ச.ச.க. தோற்றம் பெறுவதற்கு ஒரு ஆண்டுக்கு முன் சூரிய மல் இயக்கம் தோன்றியதைப் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. இதன் முக்கிய நடவடிக்கை நவம்பர் 11-ல் (முதலாவது உலகப் போர் நிறுத்தநாள்) முதல் உலகப் போரில் மாண்ட வீரர்களின் நினைவாக விற்கப்படும் செயற்கைப் பூ விற்பனையை எதிர்ப்பதாகும். இந்த விற்பனை ஒரு ஏகாதிபத்தியப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சாரமாகவே கருதப்பட்டது. சூரிய மல் இயக்கம் அதே நாள் சூரிய மாலாவை விற்கத் தொடங்கியது. அது தேசிய இலட்சியம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தேசிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய இலட்சியம் ஆகியவற்றை எதிர்ப்பதாய் இருந்தது. இக்கொடி விற்பனையில் கிடைத்த பணம் ஒரு ரொடியப் பெண்ணின் கல்விக்கு செலவிடப்பட்டது. நவம்பர் 11-ல் சூரியமல் விற்பனை செய்யும் நடவடிக்கை இரண்டாம் உலக யுத்தத்தின் முதலாம் ஆண்டு வரை தொடர்ந்தது. இந்த சூரிய மல் விற்பனையில் இரண்டு முறை ஈடுபட்டது இன்னும் எனக்கு ஞாபகமிருக்கிறது.

ல.ச.ச.க. தனது ஆரம்ப காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரைக் கொண்டிருக்கவில்லையே தவிர மற்றெல்லா விதத்திலும் கம்யூனிஸ்ட் கட்சி போலவே இயங்கியது. அது பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியுடனும் நல்ல சகோதர உறவு கொண்டிருந்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தன் தமிழ் ஊழியரை இலங்கைத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் வேலை செய்யக் கூட அனுப்பியது. இந்தக் கட்சி 3-வது அகிலத்துடன் இணைக்கப்படாதிருந்த போதிலும் அது சோவியத் யூனியனை ஆதரித்தது. இந்த சமயத்தில் ஸ்டாலினுக்கும் ட்ரொஸ்கிக்குமான வாதப் பிரதிவாதம் உச்சக்கட்டத்தில் இருந்தது. அதன் முதலாவது தலைவரான கொல்வின் ஆர். டி. சில்வா அதன் வருடாந்தரக் காங்கிரசுகளில் ஆற்றிய உரைகளில் சோவியத் யூனியனுக்கு ஒரே பாராட்டாய் இருந்தது.

ஆனால் இரண்டாம் உலக யுத்தத்திற்கு சற்றுமுன்பாக நடைபெற்ற சோவியத்-பின்னிஷ் யுத்தத்தின்போது உலக பூர்ஷ்வா வர்க்கம் கட்டவிழ்த்துவிட்ட சோவியத் எதிர்ப்பு வெறிக் கூச்சல் இவை அனைத்தையும் ஒரு கணத்தில் மாற்றியது. பூர்ஷ்வா வர்க்கம் தொடங்கிவைத்த இந்த சோவியத் எதிர்ப்பு அலையின் முதல் தாக்குதலிலேயே ல.ச.ச.க.-வுக்குள் மறைந்திருந்த ட்ரொஸ்கியவாதிகள் அம்பலத்திற்கு வந்தனர். இவர்கள் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தையும் திட்டி ஒரு தீர்மானம் கொண்டுவருவதன் மூலம் வெளிப்பட்டனர். இதுகட்சிக்குள் எந்தவித கலந்துரையாடலுமின்றி மத்திய கமிட்டியாற் கொண்டு வரப்பட்டது. இதை எதிர்த்த கம்யூனிஸ்டுகள் பல்வேறு காரணங்களுக்காகப் பல்வேறு சமயங்களிற் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். இந்தப் பிளவு 1939—1940-ல் அம்பலத்துக்கு வந்தது.



நாம் இந்த பிளவுக்கான சித்தாந்தக் காரணங்களை ஆராய வேண்டும். ஏனெனில், இந்தப் பிளவு இடதுசாரி இயக்கத்தை பல தசாப்தங்களாகப் பிரித்துப் பலவீனப்படுத்தி வருகிறது. 1933-ம் ஆண்டு ஜெர்மனியில் ஹிட்லர் பாசிசம் தோன்றியது முதல், 2-ம் உலக யுத்தத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் சோவியத் அரசாங்கமும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் 3-ம் கம்யூனிச அகிலமும் பாசிச எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு சர்வதேசிய பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டுமென வற்புறுத்தின. இந்த நோக்கித்திற்காக, முன்பு லெனினால் 'கள்வர் குகை' என்று திட்டி ஒதுக்கப்பட்ட உலக நாடுகள் லீக்கில் சோவியத் யூனியன் சேர்ந்தது. ஐரோப்பாவில் பாசிசம் வளரத் தொடங்கிய காரணத்தால் தோன்றிய மாற்றம் பெற்ற சர்வதேசிய நிலைமையில், இன்னொரு உலக யுத்தம் வெடிக்காமற் தடுப்பதற்கு ஒரு கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்க உலக நாடுகள் லீக்கைப் பயன்படுத்த சோவியத் யூனியன் முயன்றது.

ஆனால் அதன் முயற்சிகள் அனைத்தும் வீணாயின. ஹிட்லரும் முசோலினியும் பிரான்கோவின் பிற்போக்குப் படைகளின் சார்பாக ஸ்பெயினுக்குள் வெளிப்படையாக தலையிட்டனர். இந்தப் படை இறுதியில் ஸ்பெயினிலிருந்த சட்டபூர்வமான தேசிய அரசாங்கத்தைத் தூக்கியெறிந்தது. பாசிசத்தை ஆதரித்த இங்கிலாந்து அரசாங்கமும், பிரெஞ்சு அரசாங்கமும் தலையிடாக் கொள்கையென்ற கேலிக்கூத்தை நடத்தின. இது ஹிட்லரை விரும்பியபடியெல்லாம் செயற்பட அனுமதிப்பதாய் இருந்தது. சோவியத் யூனியன் ஸ்பெயின் குடியரசை ஆதரித்தது. ஆனால் புவியியற் காரணங்கள் சோவியத் யூனியன் ஸ்பெயினுக்கு ஆக்கமான உதவி அளிப்பதைத் தடுத்தது. முசோலினி அபிசீனியாவைக் கைப்பற்றினான். 1938-ல் ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவை இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் விழுங்கினான். இந்தக் கடைசி நேரத்திற்கூட சோவியத் யூனியன் ஹிட்லரைத் தடுத்து நிறுத்த பாசிச இயல்பற்ற நாடுகள் மத்தியில் ஒரு கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பியது. ஆனால் பிற்போக்குப் பிரித்தானிய அரசாங்கமும் பிரெஞ்சு அரசாங்கமும் அதை விரும்பவில்லை. அவர்களுடைய நோக்கம் ஹிட்லரைக் கிழக்கு நோக்கி முன்னேறச் செய்து சோவியத் யூனியனை நசுக்கச் செய்து, இவ்விரண்டும் ஒன்றை ஒன்று பிய்த்துக் கொண்டு பலவீனப்பட்டிருக்கும்போது தாங்கள் தலையிடுவதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படியிருப்பினும், சோவியத் அரசாங்கம் பிரித்தானிய, பிரெஞ்சு அரசாங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தது. உயர் பதவியிலில்லாத ஒரு அதிகாரியை அதுவும் சுற்றுப் பாதை மூலம் அனுப்புவதன் மூலம் இவை தமது நேர்மையின் மையை வெளிப்படுத்தின. இருந்தும், பேச்சு வார்த்தைகள் நாலு மாதம் வரை நடைபெற்றது. ஆனால் எந்தவித நல்ல முடிவும் எடுக்கப்படவில்லை. இச்சமயத்தில் ஹிட்லர் இரு முனைகளில் சண்டை செய்ய விரும்பாது, சோவியத் யூனியனுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பினான். அவன் தனது சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடும் விருப்பை வெளியிட்டு, கம்யூனிஸ்ட் சர்வதேசியத்திற்கெதிராக கூறப்படும் உடன்படிக்கையைக் கைவிட்டு, சோவியத் எல்லைகளின் மீறத் தகாத தன்மையை அங்கீகரித்தான்.

பிரித்தானிய, பிரெஞ்சு ஏகாதிபத்திய அரசாங்கங்களின் நேர்மையின்மையை நன்கு உணர்ந்து கொண்டதனாலும், இனி வரக்கூடிய நாசி ஆக்கிரமிப்புக்கெதிராகத் தன் பாதுகாப்பை வலுப் படுத்த நேரத்தைத் தேடிக் கொள்ள வேண்டியிருந்ததாலும், சோவியத் அரசாங்கம் 1939-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி ஹிட்லருடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச் சாத்திட்டுக் கொண்டது. இந்த ஒப்பந்தப்படி இருதரப்பும் ஒன்றை ஒன்று தாக்குவதில்லையெனத் தீர்மானித்துக் கொண்டன. அக்டோபர் புரட்சி முடிந்தவுடன் ட்ரொஸ்கியின் ஆலோசனை யையும் கேளாது லெனின் இப்படியானதோர் விஷயத்தைத்தான் செய்து கொண்டார். அவர் ஜெர்மனியுடன் பிரெஸ்ட் லெட்வஸ்க் ஒப்பந்தத்தை ஒரேபிடியாக நின்று கைச்சாத்திட்டதன் மூலம் ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான யுத்தத்திற்கு ஒரு முடிவு கட்டினார். இதே தந்திரோபாயத்தைத்தான் மாவோ ''முரண்பாடுகளைப் பயன்படுத்தி, பலரை வென்றெடுத்து, சிலரைத் தனிமைப்படுத்தி, உங்கள் எதிரிகளை ஒவ்வொருவராய் அழியுங்கள்'' என்ற வார்த்தைகளில் வடித்தார்.

1939-ம் ஆண்டு உலக ஏகாதிபத்திய முகாம் இரண்டாகப் பிளவுபட்டது. ஒன்று ஹிட்லர் தலைமையிலிருந்த பாசிச முகாம். மற்ற முகாம் பிரித்தானியாவும் பிரான்சும் தலைமை தாங்கியதும் அமெரிக்காவின் ஆதரவு பெற்றதுமான முகாம். இரண்டு முகாம் களும் சோவியத் யூனியனை தமது ஜென்ம எதிரியாகக்கொண்டன. ஆனால் அதே வேளையில் அவை பொருளாதாரப் போட்டியை அடிப்படையாகக் கொண்ட தீர்க்க முடியாத முரண்பாடுகளைக் கொண்டிருந்தன. சோவியத் அரசாங்கம் இந்த முரண்பாடுகளை



தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. அது சரியாகவே பாசிசத்தை அதன் பிரதான அபாயமாகக் கருதி பாசிசமல்லாத வல்லரசுகளுடன் கூட்டு பந்தோபஸ்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள முன்வந்தது. இதனை மற்ற நாடுகள் ஏற்றுக்கொள்ளாத படியால் தான் செய்யக்கூடிய ஒரே விஷயமான, ஹிட்லருடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டது. இதனால் சோவியத் யூனியன் இரண்டு பெருமதிப்பு வாய்ந்த ஆண்டுகளையும் பெற்று அதன் பாதுகாப்பைக் கட்டியமைத்தது. உலக ஏகாதி பத்திய முகாமை அது பிளவுபடுத்தியது. சோஷலிச சோவியத் யூனியனுக்கு எதிராக சகல ஏகாதிபத்திய நாடுகளும் ஒன்றுபடுவ தையும் இது தடுத்தது. (சோஷலிச சோவியத் யூனியனுக்கு எதிராக ஒன்றுபடுவது சகல பிற்போக்குவாதிகளினது கனவாக இருந்தது.)

கூடுதல் விவரங்களை அறிய விரும்புவோர் 1939 செப்டம்பர் 1-ம் திகதிய ''புதிய சர்வதேசிய நிலைமை பற்றி சீனத் தினசரி நிருபர் ஒருவருக்கு மாசேதுங் அளித்த பேட்டி''யையும், 1939 செப்டம்பர் 28-ம் திகதிய ''சோவியத் யூனியனினதும் அனைத்து மனித குலத்தினதும் ஒத்த நலன்கள்'' என்ற கட்டுரையையும் வாசிக்கலாம்.

கிழக்குப் பக்கத்தைத் தற்காலிகமாகப் பாதுகாப்பாக்கிக் கொண்ட ஹிட்லர் மேற்குப் பக்கத்தைத் தாக்கத் தீர்மானித்தான். இதற்கு முதலில் பலியானது போலந்து ஆகும். போலந்தின் சுதந்திரத்தைப் பிரிட்டனும், பிரான்சும் உத்திரவாதம் செய் திருந்தும் பயன் ஏற்படவில்லை. செக்கோஸ்லோவாக்கியாவைப் பாதுகாக்க சோவியத் துருப்புகள் உட்செல்லும் உரிமையைக் கேட்ட போது அதனை மறுத்திருந்த பிற்போக்கான பாசிச போலந்து அரசாங்கம் சண்டை எதுவுமின்றியே சரிந்து வீழ்ந்தது. ஹிட்லரின் துருப்புகள் ஏறக்குறைய சோவியத் யூனியன் எல்லைகள் வரை முன்னேறிச் சென்றன. ஆனால் ஒரு மின்னல் தாக்குதலை நடத்தி சோவியத் துருப்புகள் ஹிட்லரை தடுத்து நிறுத்தி உக்ரேனியர், பைலோ ரஷ்யர் போன்ற போலந்தவர் அல்லாத சிறுபான்மைத் தேசிய இனங்களை விடுதலை செய்து தனக்கும் ஹிட்லர் ஜெர்மனிக்கும் இடையே தடுப்புச் சுவர் ஒன்றை எழுப்பின.

அந்த வேளையில் உலகப் பூர்ஷ்வா வர்க்கப் பத்திரிகைகள் ட்ரொஸ்கியவாதிகளின் உதவியுடன், சோவியத் யூனியன் போலந்தைப் பங்கு போட உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது என்று தெருக்கூச்சல் போட்டன. உண்மையோ நேர்மாறானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செஞ்சேனை கிழக்கு போலந்துக்குள் படை நடப்புச் செய்தமை ஹிட்லருக்குக் கிடைத்த முதலாவது அடியாகும். தோழர் மாசேதுங் இதனை பின்வருமாறு விளக்கியுள்ளார்: ''போலந்து முழுவதையும் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் ஆட்சியின் கீழ் வர அனுமதிப்பதா அல்லது கிழக்குப் போலந்தின் சிறுபான்மை தேசிய இனங்கள் தமது விடுதலையைப் பெறத் துணை புரிவதா என்பதுதான் பிரச்சினை யாகும். பைலோ ரஷ்யர்களும் உக்ரேனியர்களும் வசித்து வந்த பெருமளவு பிரதேசம் 1918-ல் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதி களால் பிரெஸ்ட் லிட்டொல்ஸ்க் உடன்படிக்கை மூலம் புதிதாகத் தோன்றிய சோவியத் அரசிடமிருந்து பறித்து எடுக்கப்பட்டது. பின்னர் இப்பிரதேசம் வெர்செயில்ஸ் உடன்படிக்கை மூலம் பிற்போக்கு போலந்து அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் வைக்கப் பட்டது. இப்போது சோவியத் யூனியன் அதன் இழந்த பிரதேசத் தைத்தான் மீட்டெடுத்துள்ளது. அடக்கி ஒடுக்கப்பட்ட பைலோ ரஷ்யர்களையும் உக்ரேனியர்களையும் விடுதலை செய்துள்ளது. ஜெர்மன் அடக்குமுறையிலிருந்து அவற்றை காப்பாற்றியுள்ளது.

யுத்தம் சோவியத் யூனியனை நெருங்கிக் கொண்டிருந்தது, லெனின் கிராடை பாதுகாக்கும் முயற்சியில் சோவியத் யூனியன் அதன் பாதுகாப்புக்குத் தேவையான பிரதேசத்தை பின்லாந்தில் இருந்து ஈட்டுக்குப் பெற பேச்சு வார்த்தை நடத்தியது. இதற்குப் பதிலாக பின்லாந்தைவிட 3 மடங்கான சோவியத் பிரதேசத்தை அதற்குக் கொடுக்க முன்வந்தது. ஆனால் பின்லாந்தில் இருந்த அரசாங்கம் பாசிச சார்பான சர்வாதிகார அரசாங்கமாகும். ஏகாதிபத்திய வல்லரசுகளின் தூண்டுதலில் இந்த அரசாங்கம் சோவியத் யூனியனுக்கு எதிராக புகழ்பெற்ற மான்னர் ஹீம் கோட்டை அமைத்திருந்தது. சோவியத் யூனியனுடன் எந்த உடன்படிக்கையையும் செய்து கொள்ள அது மறுத்தது.சோவியத் யூனியன் பின்லாந்துக்குள் படை நடப்புச் செய்தது. அடுத்து குளிர்கால யுத்தம் ஏற்பட்டது. ஏகாதிபத்திய வல்லரசுகள் சோவியத் - பின்லாந்து யுத்தத்தை பொதுவான சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தமாக்க முயற்சித்தன. அப்பொழுது ஹிட்லருக்கு எதிரான மேற்கின் யுத்தம் போலியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பின்லாந்துக்கு முண்டு கொடுக்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் பின்லாந்துக்காரர் சமாதானத்தை நாட வேண்டி ஏற்பட்டது. லெனின் கிராடின் பாதுகாப்பு உத்தரவாதம் செய்யப்பட்டது. இந்த யுத்தத்தில் பின்லாந்திடமிருந்து பெற்றுக் கொண்ட சலுகைகள் இல்லாதிருந்தால் லெனின் கிராட் ஹிட்லர் வசமாகியிருக்கலாம் என்று பின்னர் வின்ஸ்டன் சர்ச்சில் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.



ஆனால் அந்த வேளையில் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம், போலந்தின் ஒரு பகுதியை விடுதலை செய்தமை, சோவியத்- பின்லாந்து யுத்தம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உலகின் பிற்போக்கு பூர்ஷ்வா அரசியல்வாதிகளும் அவர்களுடைய ஏகபோக பத்திரிகைகளும் சோவியத் யூனியனுக்கு எதிரான படுமோசமான ஜன்னி ஒன்றை உருவாக்கின. லங்கா சம சமாஜக் கட்சியின் ட்ரொஸ்கியவாதத் தலைவர்கள் இதற்குத் திறமையாக உதவி னார்கள். அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கட்சி யைப் பிளவுபடுத்தி கம்யூனிஸ்டுகளை வெளியேற்றினார்கள்.

லங்கா சம சமாஜக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரும் பின்னர் அதிலிருந்து விலகி தமையனார் பிலிப்புடன் எம்.இ.பி.- யில் சேர்ந்து கொண்டவருமான ராபர்ட் குணவர்த்தனா மறை வதற்கு முன் ''டெய்லி மிரர்'' என்ற பத்திரிக்கையில் எழுதிய தனது வாழ்க்கை நினைவுகளில் லங்கா சம சமாஜக் கட்சியில் ஏற்பட்ட பிளவுக்குக் காரணம் 1939-ல் ஆரம்பித்த உலக மகா யுத்தத்தைப் பற்றிய கணிப்பீடுதான் என்று கூறியுள்ளார். ட்ரொஸ்கியவாதிகள் அதனை ஒரு ஏகாதிபத்திய யுத்தம் என்று அழைத்து அதனை எதிர்த்ததாகவும், கம்யூனிஸ்டுகள் அதனை ஒரு மக்கள் யுத்தம் என்று கூறி அதற்கு ஆதரவு அளிக்க விரும் பியதாகவும் அவர் கூறினார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இந்த யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று கணிப்பீடு செய்வதில் இலங்கை கம்யூனிஸ்டுகள் எந்தத் தவறையும் இழைக்கவில்லை. 1941 ஆம் ஆண்டு யூன் 22 ஆம் திகதி ஹிட்லர் சோவியத் யூனியனைத் தாக்கிய பின்னர்தான் மக்கள் யுத்தம் என்று இந்த யுத்தத்தைக் கணிப்பீடு செய்யும் பிரச்சினை எழுந்தது. இது பிளவை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஏனென்றால் லங்கா சம சமாஜக் கட்சியிலான பிளவு 1934-க்கும் 1940-க்கும் இடையில் ஏற்பட்டது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் ஆரம்பத்தில் (அப்பொழுது இந்த யுத்தம் ஏகாதிபத்திய இயல்புடையதாக இருந்தது.) பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியும் இங்கிலாந்து கம்யூனிஸ்ட் கட்சி யும்தான் சர்வதேசிய நிலைமையில் ஏற்பட்ட மாற்றத்தைக் காணத் தவறி ஐரோப்பாவில் ஹிட்லருக்கு எதிரான பாசிச எதிர்ப்பு முன்னணி ஒன்றைக் கட்டியமைக்கும் தமது இயக்கத்தை மேற் கொண்டு ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தை ஆதரிக்கும் தவறை இழைத்தார்கள். ஆனால் இந்தத் தவறுகூட (இது கடுமையான தவறு என்பதில் சந்தேகமில்லை) இக்கட்சிகளுக்குள் உள்ளிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்த எதிர்ப்பினாலும் கம்யூனிச அகிலத்தின் உத்தரவினாலும் சில மாத காலத்திற்குள் திருத்தப்பட்டது. தோழர் மாசேதுங் நாம் முன்னரே குறிப்பிட்ட இரண்டு கட்டுரைகளிலும் யுத்தத்தின் ஆரம்பத்திலேயே சரியான மார்க்கத்தை முன்வைத்தார். இரண்டாவது கட்டுரையில் அவர் பின்வருமாறு கூறினார்: ''எந்தப் பக்கத்தை எடுத்தாலும், ஆங்கில - பிரெஞ்சுப் பக்கமும் சரி, ஜெர்மன் பக்கமும் சரி இப்பொழுது ஏற்பட்டுள்ள யுத்தம் அநீதியான, மற்றவரை விழுங்கும் ஏகாதிபத்திய யுத்தம். சகல நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் மக்களும் அதற்கு எதிராக எழுந்து இரண்டு யுத்தக்காரர்களினதும் ஏகாதிபத்திய இயல்பை அம்பலப்படுத்த வேண்டும், ஏனென்றால் இந்த யுத்தத்தினால் உலக மக்களுக்கு தீமையே தவிர நன்மை எதுவும் வராது. சமூக ஜனநாயகக் கட்சிகள் இந்த ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஆதரவு அளித்து பாட்டாளி வர்க்க நலன்களுக்குத் துரோகம் செய்யும் கொலைகாரச் செயல்களை அம்பலப்படுத்த வேண்டும்.''

இலங்கைக் கம்யூனிஸ்டுகள் யுத்தத்தைப் பொறுத்து இதே கண்ணோட்டத்தைத் தான் எடுத்தார்கள். யுத்த எதிர்ப்புத் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு விநியோகித்ததற்காக நான் எங்களது பல்கலைக்கழகத்தில் எனது இரண்டாவது ஆண்டில் தடைநிறுத்தம் செய்யப்பட்டேன் என்பதைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன்.

முன்னர் குறிப்பிட்டவாறு யுத்தத்தின் இயல்பு மாறும் பிரச்சினை ஹிட்லர் சோவியத் யூனியனைத் தாக்கிய பின்னர்தான் எழுந்தது. சோவியத் யூனியனுக்குள் படையெடுத்ததும் அதற்குப் பின்னர் சோவியத் யூனியன் நேச நாடுகளின் பக்கத்தில் யுத்தம் பிரவேசித்ததும் ஆகியவற்றின் விளைவாக சர்வதேசிய நிலைமையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றத்தை வேறு சில கம்யூனிஸ்டுகளைப் போலவே இலங்கைக் கம்யூனிஸ்டுகளும் உடனடியாகக் கிரகித்துக் கொள்ளவில்லை. ஆகவே யுத்தத்தைப் பற்றிய சரியான கணிப்பீட்டைச் செய்ய அவர்களுக்கு பல மாதங்கள் எடுத்தன. இதனை மாவோ சோவியத் யூனியனை ஹிட்லர் தாக்கிய அடுத்த நாளே செய்து கொண்டார்.

1941ஆம் ஆண்டு ஜுன் 21ஆம் திகதி ஹிட்லர் ரஷ்யாவுடனான தனது அனாக்கிரமிப்பு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு தனது பரிவாரத்தை ஏவிவிட்டு சோவியத் யூனியனுக்கு எதிராக ஆக்கிரமிப்பை இழைத்தான். இரண்டு முனைகளில் யுத்தம் நடைபெறுவதைத் தடுக்கும் இறுதி முயற்சியாக ஹிட்லர் தனது



லெப்டினன்டான ஹெஸ் என்பவனை சோவியத் யூனியனுக்கு எதிராக கூட்டு யுத்தம் நடத்த நேச நாடுகளை கேட்டுக் கொள்ளும் முயற்சியில் இங்கிலாந்துக்கு அனுப்பினான். ஆனால் ஹெஸ்ஸினுடைய முயற்சி வெற்றி பெறவில்லை.

பிரிட்டன் தவிர முழு ஐரோப்பாவையும் தன் காலடிக்குக் கீழ் கொண்டுவந்த நிலைமையில் ஹிட்லர் கிழக்குநோக்கித் தாக்குதல் தொடுத்தான். அது இந்த யுத்தத்தின் வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் மிகவும் தீர்க்கமான தருணமாகும். கூட்டணி நாடுகள் என்ன செய்யப் போகின்றன? ஹிட்லர் சோவியத் யூனியனுக்குள் படையெடுத்த உடனே வின்ஸ்டன் சர்ச்சில் பி.பி.சி-யில் நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்க மருதானைக் கடை ஒன்றில் வானொலிக்குப் பக்கத்திலே காத்துக் கொண்டிருந்தது எனது நினைவுக்கு வருகின்றது. அந்த வரலாற்று ரீதியான சொற்பொழிவில் சர்ச்சில் சோவியத் யூனியனுக்கு கூட்டாளி நாடுகளின் ஆதரவை உறுதியளித்தார். நாம் ஆறுதல் பெருமூச்சை விட்டோம். ஹிட்லருடைய மரண சாசனம் கையெழுத்திடப்பட்டு விட்டது.

கூட்டணி நாடுகளின் ஹிட்லருக்கு எதிரான கூட்டணியில் ஏறக்குறைய முழுஉலகமும் சேர்ந்திருந்தது. ஹிட்லரின் பலத்தை அழிப்பதில் சோவியத் யூனியன் பிரதான சுமையைத் தாங்கியது. ''செஞ்சேனைப் பதாகையின் கீழ் நாகரிகம் முன்சென்றது'' என்று சார்லி சாப்ளின் நியூயார்க்கில் உள்ள மெயிட்சன் சதுக்கத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்துப் பேசினார்.

1941 ஆம் ஆண்டு ஜுன் 23-ம் திகதி ''பாசிசத்துக்கு எதிரான சர்வதேசிய ஐக்கிய முன்னணியைப் பற்றி'' என்ற உட்கட்சி வழிகாட்டுதலில் மாவோ பின்வருமாறு சுட்டிக்காட்டினார்: ''உலகம் பூராவும் உள்ள கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை அனைத்து நாடுகளிலும் மக்களை அணிதிரட்டி பாசிசத்துக்கு எதிராகப் போராடவும் சோவியத் யூனியனைப் பாதுகாக்கவும், சீனாவை பாதுகாக்கவும், சகல தேசங்களினதும் சுதந்திரத்தையும் விடுதலையையும் பாதுகாக்கவும், சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்றை ஸ்தாபிப்பது தான் இன்றைய பணியாகும். இன்றைய காலகட்டத்தில் பாசிச அடிமைப்படுத்தலை எதிர்த்துப் போராட சகல முயற்சிகளையும் எடுக்கவேண்டும்''. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பணிகளைப் பற்றி குறிப்பிடுகையில் அவர் பின்வருமாறு பணித்தார்: ''வெளி விவகாரங்களில் பொது எதிரிக்கு எதிராக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் உள்ள ஜெர்மனிய, இத்தாலிய, ஜப்பானிய பாசிச ஆட்சியாளர்களை எதிர்க்கக்கூடிய அனைவருடனும் ஐக்கியப்படுங்கள்.''

முதலாவது தொழிலாளர் அரசைப் பாதுகாப்பது உலகிலுள்ள சகல கம்யூனிஸ்டுகளினது பிரதான கடமையாகியது. அதுதவிர, பாசிசத்துக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியனின் பிரவேசம் பாசிசத்துக்கு எதிரான வெற்றி ஏகாதிபத்திய வல்லரசு களுக்கிடையே யுத்தக் கொள்கைகளை பங்கிடுவதில் முடியாது என்பதை முதல் தடவையாக உத்தரவாதம் செய்தது. மேலும், பாசிசம் தோற்கடிக்கப்படுவது சோஷலிசம் மேலும் பரவுவதற்கு வழி கோலும். அது உண்மையில் அப்படித்தான் நடந்தது. இதனால்தான் யுத்தத்தில் சோவியத் யூனியன் பிரவேசித்த பின் அதனை ஒரு மக்கள் யுத்தம் என்று கம்யூனிஸ்டுகள் அழைத்தனர். அதுமுதல் யுத்தத்தை ஆதரித்தனர். பாசிசத்தின் பூரணதோல்வி, மாபெரும் சக்தியாக சோவியத் யூனியன் வளர்ந்தமையும், பாசிச அடிமைத்தனத்திலிருந்து கிழக்கு ஐரோப்பா விடுதலை அடைந்ததும், சோஷலிச சீனாவின் தோற்றமும், உலகம் பூராவும் தேசிய விடுதலை இயக்கங்களின் துரிதப்பாடும் கம்யூனிஸ்ட் ஆய்வின் தவறற்ற தன்மையை ஆணித்தரமாக நிரூபித்தன. ஆனால் இலங்கை சம சமாஜக் கட்சியின் ட்ரொஸ்கியவாதிகளால் இது ஒன்றையும் காண முடியவில்லை. ட்ரொஸ்கியவாதம் என்ற எதிர்ப்புரட்சித் தத்துவத்தை வரிந்து கொண்ட அவர்கள் சோவியத் யூனியனின் பிரவேசத்துக்குப் பின்னரும் யுத்தத்தின் இயல்பில் மாற்றம் எதனையும் காணாத மலட்டுக் கொள்கையைப் பின்பற்றினார்கள். 1964ஆம் ஆண்டுக்கு முன்னர் யூ.என்.பி-க்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் வித்தியாசம் எதனையும் காணாதது போலவே இலங்கை சம சமாஜக் கட்சி பாசிச வல்லரசுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை. தனியொரு நாட்டில் சோஷலிசத்தைக் கட்டியமைக்க முடியாது என்றும், ரஷ்யப் புரட்சியை சர்வதேசிய அரங்கில் அதாவது உலகப் புரட்சியின் வெற்றியினால்தான் காப்பாற்ற முடியும் என்றும் ட்ரொஸ்கி அவர்களுக்குப் படிப்பித்துக் கொடுத்திருந்தார். ஆனால் ட்ரொஸ்கியின் வாதம் தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. உலகப் புரட்சி ஏற்படவில்லை என்பது மாத்திரமல்ல, போல்ஷ் விக்குகள் முதலில் லெனின் தலைமையிலும் பின்னர் ஸ்டாலின் தலைமையிலும் புரட்சி வெற்றி பெற்ற ஒரேயொரு நாடான சோவியத் யூனியனில் சோஷலிசத்தைக் கட்டியமைப்பதிலும்



வெற்றி பெற்றார்கள். அவர்கள் ஜார் மன்னனிடமிருந்து தாம் பெற்றுக்கொண்ட நிலப்பிரபுத்துவ, பொருளாதார ரீதியில் பின் தங்கிய ரஷ்யாவை ஒரு பலம் வாய்ந்த சோசலிச நாடாகக் கட்டியமைப்பதில் வெற்றி கண்டார்கள். அத்துடன் ரசியா, இது வரை உலகம் கண்டிராத மாபெரும் சக்தி வாய்ந்த யுத்த இயந்திரத்துக்கு எதிராக முதலில் தாக்குபிடித்து நின்றும் பின்னர் அதைத் தோற்கடித்தும் அதன் பலத்தைக் காட்டியது. போல்ஷ் விக்குகள் செய்தது அற்புதமே ஆகும். குழப்பமே உருவாயிருந்த இடத்தில் துணிவான புதியதோர் உலகத்தை அவர்கள் படைத் தார்கள். வரலாறு அவரைத் தவறு என்று காட்டியபோதும் ட்ரொஸ்கி தனது தவறுகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். சோவியத் யூனியனுக்கு எதிரான பிரச்சாரம் அனைத்தினது மையமாக அவர் விளங்கினார். அவர் சோவியத் யூனியனை சீரழிந்த தொழிலாளர் அரசு என்று அழைத்து அதை வீழ்த்தப் பாடுபடவேண்டும் என்று கூறினார். லங்கா சம சமாஜக் கட்சியின் உள்ளூர் ட்ரொஸ்கியவாதத் தலைவர்கள் கிளிப்பிள்ளை போலத் தமது எஜமானனின் குரலை ஒப்புவித்தனர்.

கம்யூனிஸ்டுகள் கடைப்பிடித்த மக்கள் யுத்தக் கொள்கையில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சில முரண்பாடுகள் இருந்தது உண்மையே. கம்யூனிஸ்டுகள் அவற்றைக் கண்டு கொள்ளாதது அவர்களின் தவறாகும். இந்தியாவும் இலங்கையும் தான் ஆசியாவில் ஜப்பானிய பாசிச அடிமைப்படுத்தலுக்கு உள்ளாகாமல் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகள் ஆகும். சோவியத் யூனியன் யுத்தத்துக்குள் பிரவேசித்த வேளையில் ஆசியாவின் இதர நாடுகளாகிய இந்தோனேசியா, மலாயா, பர்மா, இந்தோ சீனா, கொரியா, பிலிப்பைன்ஸ் முதலியவையும் சீனாவின் பெரும்பகுதியும் ஜப்பானிய பாசிச ஆக்கிரமிப்பின் கீழிருந்தன. ஜப்பான் பாசிச வல்லரசுகளான ஜெர்மனி, இத்தாலி ஆகியவற்றின் நேச நாடாக இருந்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பு அலை எழுவதற்கு முன்னரே மேற்கத்திய ஏகாதி பத்திய வல்லரசுகள் அனைத்தும் (இந்தியா இலங்கை தவிர) ஆசியாவிலிருந்து ஓடிவிட்டன. ஆகவே இந்த நாடுகளின் மக்களையும் கம்யூனிஸ்டுகளையும் பொறுத்தவரையில் பாசிச எதிர்ப்புக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் இடையில் முரண்பாடு இருக்கவில்லை. தமது நாடுகளில் பாசிச ஆக்கிரமிப்புக்கு எதிராய்ப் போராடுவது, தமது நாடுகளின் சுதந்திரம், விடுதலை ஆகியவற்றுக்காக போராடுவதும் ஆகியது. ஜப்பானை எதிர்த்துப் போராடுவது சோவியத் யூனியனுக்கு ஆதரவளிப்பதை ஒத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்கள் பொது எதிரிக்கு எதிராய்ப் போராடினார்கள், ஒரே எதிரிக்கு எதிராய்ப் போராடும் சகலரும் நேசர்கள் ஆகினார்கள்.

ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியா, இலங்கையைப் பொறுத்தவரையில் விஷயம் அவ்வளவு லேசானதாக இருக்கவில்லை. பாசிச எதிர்ப்புக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் இடையில் சமபலனை நிலைநாட்ட இந்த நாடுகளின் கம்யூனிஸ்டுகள் தவறிவிட்டார்கள். யுத்தத்தின் பாசிச எதிர்ப்பு இயல்பைக் கூடுதலாக வலியுறுத்துவதன் மூலம், அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தக்கூடிய தவற்றை அவர்கள் இழைத்தார்கள். இதை நான் இப்பொழுது கூறுகின்றேன். அப்பொழுது நானும் இதை உணர்ந்து கொள்ளவில்லை. லங்கா சம சமாஜக் கட்சி இலங்கையிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக இந்த முரண்பாட்டைப் பெரிதும் பாவித்தது.

யுத்தத்தின் இயல்பு, ஸ்டாலினிசத்துக்கும் அதாவது மார்க்சிஸம்—லெனினிஸத்துக்கும் ட்ரொஸ்கியவாதத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு உக்கிரமான தத்துவார்த்த மோதல் எனது பல்கலைக் கழக நாட்களில் நடைபெற்றது. ஹிட்லர் சோவியத் யூனியனுக்கு எதிராக ஆக்கிரமிப்பைத் தொடுத்தபோது இந்த விவாதம் மேலும் உக்கிரமாகியது. முதல் சில மாதங்கள் சோவியத் செஞ்சேனை யுத்தத்தந்திர ரீதியில் வாபஸ் பெற்று அதன் புகழ்பெற்ற எல்லாவற்றையும் எரித்துவிட்டுப் பின்வாங்கும் கொள்கையைக் கடைப்பிடித்தபோது பல்கலைக் கழகத்திலுள்ள ட்ரொஸ்கியவாதிகளும், பிற்போக்குவாதிகளும் சந்தோஷத்தில் கை தட்டி மூன்று வார காலத்துக்குள் சோவியத் யூனியன் அழிந்துவிடும் என்று ஜோசியம் கூறினார்கள். பல்கலைக் கழக கத்தோலிக்க சங்கத்தில் நடந்த கூட்டம் ஒன்று என் நினைவுக்கு வருகின்றது. வரலாற்று விரிவுரையாளரான பிதா. பின்ரோ 'ஏன் கம்யூனிசம் வேண்டாம்?' என்ற தலைப்பில் பேசினார். அவர் பேச்சு முழுக்க முழுக்க கம்யூனிச விரோதமானது, சோவியத் விரோதமானது. நாம் அவரைக் குழப்பியடித்து கேள்வி கேட்டு நேரம் செல்லும் வரை அவரை வைத்திருந்தோம். கூட்ட முடிவில் அவர் மண்டபத்தை விட்டு சென்றபோது விராந்தையில் அவர் என்னைச் சந்தித்து ''அப்ப, உங்களுடைய சோவியத் யூனியன் எப்படி? அது எவ்வளவு காலம் வாழும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டார். ''எவர் இறுதியில் வெல்கிறாரோ அவரே வெல்வார்'' என்று நான் அமைதியாக பதில் அளித்தேன்.



கம்யூனிஸ்டுகள்தான் இறுதியில் வென்றார்கள். தொழிலாளி வர்க்கம், சோசலிசம், சோசலிச அரசு, ஸ்டாலின் ஆகிய அனைத்திலும் எங்கள் நம்பிக்கை நிரூபிக்கப்பட்டது. இந்த முக்கியமான தருணத்தில் வாழ்ந்ததும் எங்களுடைய நம்பிக்கை நிரூபிக்கப்பட்டதும் உண்மையில் மதிப்புள்ள விஷயங்கள்தான். சோவியத் வீரர்கள் ஸ்டாலின் பெயரை உச்சரித்துக் கொண்டு போரிட்டு ஸ்டாலின் கிராட்டில் ஜெர்மன் ராணுவத்தைத் தோற்கடித்து பின்வாங்கலை வெற்றியாகவும், முன்னேற்றமாகவும் மாற்றியது முதல் சோவியத் செஞ்சேனை விரைந்து 1945 ஆம் ஆண்டு மே முதலாந் திகதி பேர்லினை அடைந்தது. கூட்டணி நாடுகள் இரண்டாவது முன்னணியைத் தொடுப்பதில் தாமதமாக இருந்த போதும் சோவியத் செஞ்சேனை இதைச் சாதித்தது.

அந்த ஆண்டின் மே தின ஊர்வலத்துக்காக கொம்பெனித் தெரு டிமெல் பூங்காவில் எமது பதாகைகளை நாம் கட்டிக் கொண்டிருந்தபோது சிலோன் அப்சேவர் பத்திரிகை ''ஜெர்மன் நாடாளுமன்றத்துக்கு (ரெயிஸ்டாக்) மேல் செங்கொடி'' என்ற தடித்த தலைப்பை வெளியிட்டது. நாங்கள் உணர்ச்சியின் உச்சத்திலிருந்தோம்.

நான் பின்னர் மாஸ்கோவில் நடைபெற்ற வெற்றி தினக் கொண்டாட்டங்கள் பற்றிய திரைப்படம் ஒன்றைப் பார்த்தேன். வெற்றிகரமான சோவியத் படைப் பிரிவுகள் கடந்து செல்ல, லெனின் சமாதிக்கு முன்னால் மேலேயுள்ள இடத்தில் இருந்து ஸ்டாலின் வணக்கத்தைப் பெற்றுக் கொண்டார். ஒரு காலத்தில் சர்வ வல்லமை படைத்ததாக இருந்த ஜெர்மனியின் (கைப்பற்றப்பட்ட) பதாகையை ஸ்டாலின் பாதத்துக்கு முன்னால்வைத்தார்கள். அது ஸ்டாலினுக்கு ஒரு பெருமையான தருணம், அந்தப் பெருமைக்கு அவர் உரியவர்.

இன்று சோவியத் யூனியனுக்கு சார்பாக இருப்பது இலகுவானது. சோசலிசம் நடைமுறை சாத்தியம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் இறுதியில் சோவியத் யூனியன் மாபெரும் சக்தியாக வளர்ந்தது. பின்னர் அண்டவெளி சாதனைகள் உட்பட மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் சாதனைகளுக்கு இசைவான சாதனைகளை அது பெற்றது. ஆனால் யுத்தத்தின்போது நிலைமை வேறு. பிற்போக்குவாதிகளும், ட்ரொஸ்கியவாதிகளும் கடுமையான சோவியத் விரோதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். சோவியத் யூனியன் நிலைத்து நிற்க முடியாது என்று சந்தேகித்தவர்கள் பலர். கம்யூனிஸ்டுகளாகிய நாம் மட்டும் யுத்தத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிவில் சோவியத் யூனியன் வெற்றிகரமாகும் என்று அசையாத நம்பிக்கையுடன் இருந்தோம்.

நான் இந்த நிலைப்பாட்டை ஒட்டிப் பெருமை அடைகின்றேன். தொழிலாளி வர்க்கத்தின் மீதும் முதலாவது தொழிலாளர் அரசின் மீதும் நாம் கொண்டிருந்த நம்பிக்கை நிரூபிக்கப்பட்டு விட்டது.

லங்கா சம சமாஜக் கட்சியில் ஏற்பட்ட பிளவுக்குப் பின்னால் உள்ள அடிப்படைத் தத்துவார்த்தப் பிரச்சினைகளை இப்பொழுது பார்ப்போம். இன்று இந்த பிணக்குகள் வெறும் கல்வியியற் ரீதியானதாக அமையலாம், ஏனென்றால் வரலாறு கம்யூனிஸ்டுகள் சரி என்பதை நிரூபித்து விட்டது. இந்த உண்மை மறுக்க முடியாததாகும். ஆனால் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்ப் புரட்சிகர 20-வது மாநாட்டில் ஸ்டாலினைத் தாக்கும் அபகீர்த்தி படைத்த இரகசியச் சொற்பொழிவை குருச்சேவ் நிகழ்த்தியபின் ட்ரொஸ்கியவாதம் புத்துயிர் பெற்றுள்ளதனால் இந்தக் கடந்த காலப் பிணக்குகளை சுருக்கமாக என்றாலும் கூறுவது அவசியம்.

ட்ரொஸ்கியவாதத்தின் இன்றைய வக்கீல்கள் இதனைப் பற்றி அவ்வளவு பேச விரும்பாவிட்டாலும், தனியொரு நாட்டில் மட்டும் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியுமா என்பது ட்ரொஸ்கியவாதிகளுக்கும் கம்யூனிசவாதிகளுக்கும் இடையிலான பிரதான பிரச்சினையாக இருந்தது. இந்தப் பிணக்கின் விவரங்களைப் பார்ப்போம்.

ஐரோப்பாவின் பிரதான முன்னேறிய நாடுகளில் புரட்சிகள் நடைபெறும் என்று லெனினும் போல்ஷ்விக்குகளும் எதிர்பார்த்தது உண்மை. அவர்கள் உண்மையில் இதற்காக ஊக்கத்துடன் உழைத்தார்கள். லெனின் ஒரு சர்வதேசியவாதி. ஆனால் புரட்சிவாதி விரும்பும் பாதையிலேயே வரலாறு எப்பொழுதும் செல்வதில்லை. ரஷ்யாவில் மாத்திரம் புரட்சி வெற்றிகரமாக பாதுகாக்கப்பட்டது. புரட்சி ஏற்பட்ட ஹங்கேரி, ஜெர்மனி போன்ற நாடுகளில் அது தோல்வி கண்டது. தாம் வெற்றிக்கு இட்டுச் சென்ற ரஷ்யப் புரட்சியை ரஷ்யப் போல்ஷ்விக்குகள் என்ன செய்வது? ஸ்டாலின் வினவியவாறு ''அதனை உலகப் புரட்சிக்கு காத்திருந்து கொண்டு அதன் சொந்த முரண்பாடுளில் சிக்கி வேர் வரை அழுக விடுவதா?''



லெனின் இத்தகைய ஒரு வளர்ச்சியை எதிர்பார்த்தார். 1915-ல் ''ஐரோப்பாவில் ஐக்கிய ராஜ்யங்கள்'' என்ற கட்டுரையில் அவர் பின்வருமாறு கூறினார்: ''சமாந்திரமற்ற பொருளாதார அரசியல் வளர்ச்சி என்பது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விதி. ஆகவே சோசலிசத்தின் வெற்றி முதலில் சில அல்லது தனியொரு முதலாளித்துவ நாட்டில் கூட சாத்தியம்'' அந்த நாட்டின் வெற்றிகரமான பாட்டாளி வர்க்கம் முதலாளிகளிடம் அபகரித்தப்பின், சோசலிச உற்பத்தியை ஒழுங்கு படுத்திய பின் எஞ்சிய முதலாளித்துவ உலகத்துக்கு எதிராக எழுந்துநின்று மற்ற நாடுகளின் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை அதன் இலட்சியத்தின்பால் கவர்ந்திழுத்து, இந்த நாடுகளில் முதலாளிகளுக்கு எதிராகக் கிளர்ச்சிகளை ஏற்படுத்தி, அவசியம் ஏற்படும்போது சுரண்டும் வர்க்கங்களுக்கும் அவற்றின் அரசுகளுக்கும் எதிராக ஆயுதப் பலத்தைக் கூடப் பாவிக்கும்.''

மீண்டும் 1916-ல் ''பாட்டாளிவர்க்கப் புரட்சியின் யுத்தத் திட்டம்'' என்பதில் லெனின் பின்வருமாறு கூறினார்: ''முதலாளித்துவத்தின் வளர்ச்சி பல்வேறு நாடுகளில் மிகுதியும் சமாந்திரமற்ற முறையில் நடைபெற்றது. பண்ட உற்பத்தி அமைப்பின் கீழ் வேறுவிதமாக அது நடைபெற முடியாது. இதிலிருந்து சோசலிசம் சகல நாடுகளிலும் ஏக காலத்தில் வெற்றி பெற முடியாது என்பது புலனாகின்றது. அது முதலில் ஒரு நாட்டில் அல்லது சில நாடுகளில் வெற்றி பெறும்.''

இந்த லெனினிசக் கருத்துக்களின் அடிப்படையில் முதலில் லெனினாலும் பின்னர் அவருடைய வாரிசான ஸ்டாலினாலும் தலைமை தாங்கப்பட்ட போல்ஷ்விக் கட்சி புரட்சி வெற்றிப் பெற்ற ஒரு நாட்டில் சோசலிச உற்பத்தியை ஒழுங்குபடுத்தியது. இந்தத் துணிவான முடிவை எடுப்பதற்குத் துணிவுள்ள மனிதர்கள் வேண்டும். வரலாறு அவர்களைச் சரியென நிரூபித்துவிட்டது.

ஆனால் ட்ரொஸ்கி வேறுவிதமாக சிந்தித்தார். பின்தங்கிய ரஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி தப்பிப் பிழைப்பதை அவர் முன்னேறிய நாடுகளில் தொழிலாளர்களின் புரட்சிப் போராட்டத்தின் வெற்றியுடன் இணைத்தார். அல்லது, ''உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற அரங்கில்தான்'' ரஷ்யப் புரட்சியைக் காப்பாற்றமுடியும் என்று ட்ரொஸ்கி ஆடம்பரமாகப் பிரகடனம் செய்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவசாயிகளின் புரட்சிகர உள்ளார்ந்த சக்தியின்மீது நம்பிக்கை வைக்காததே ட்ரொஸ்கியின் இந்தத் தவறான தர்க்கத்துக்கு அடிப்படைக் காரணமாகும். புரட்சியின் பூர்ஷ்வா ஜனநாயகக் கட்டத்தின் பொழுது விவசாயிகளும் பூர்ஷ்வா வர்க்கத்தின் பகுதிகளும் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டணிகளாக இருக்கமுடியும் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் புரட்சி சோஷலிசக் கட்டத்தை நோக்கி நகரும்போது பாட்டாளி வர்க்கத்துக்கு பூர்ஷ்வா வர்க்கத்துடன் மட்டுமல்ல, விவசாயிகளுடனும் மோதல் ஏற்படும் என்று அவர் கருதினார்.

அவர் இப்படிக் கூறினார்: ''...பாட்டாளி வர்க்க முன்னணிப் படை அதன் வெற்றியை அடையப் பெறுவதற்காக அதன் ஆட்சியின் அதி ஆரம்பக் கட்டத்திலேயே நிலப்பிரபுத்துவ சொத்தைப் பாதிப்பது மட்டுமல்ல, முதலாளித்துவ சொத்தையும் பாதிக்க நேரிடும். இதில் பாட்டாளி வர்க்கம், புரட்சி போராட்டத்தின் முதல் கட்டங்களில் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவளித்த பூர்ஷ்வா குழுக்களுடன் மட்டுமல்ல, பாட்டாளி வர்க்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்குக் காரணமாயிருந்த பரந்துபட்ட விவசாயிகளுடனும் பகைமையான மோதலில் ஈடுபட நேரிடும்.''

''நிரந்தரப் புரட்சி'' என்பதை ட்ரொஸ்கியே ஏற்றுக் கொண்டார். ''விவசாயிகளின் சுதந்திரமான பாத்திரத்தை கூட்டி மதிப்பீடு செய்கின்றார் என்று லெனின் மீது நான் குற்றஞ் சாட்டினேன். விவசாயிகளின் புரட்சிப் பாத்திரத்தை நான் குறைத்து மதிப்பீடு செய்கின்றேன் என்று லெனின் என் மீது குற்றஞ்சாட்டினார்.''

லெனினுடைய கருத்துக்கள் ட்ரொஸ்கியின் கருத்துக்களுக்கு நேர் எதிர்மாறானவை. ஜார் ரஷ்யாவில் மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினரான விவசாயிகள் வறிய விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் ஆவர். புரட்சியின் இரண்டு கட்டங்களிலும் அவர்களுக்குப் புரட்சிகரப் பாத்திரம் உண்டு இவ்வாறு லெனின் வாதிட்டார். விவசாயிகளின் இந்தப் பெரும்பகுதியை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒழுங்குபடுத்த முடியும் எனவும் அவர்கள் இவ்வாறு மக்கள் தொகையில் பெரும்பகுதியாக விளங்குவார்கள் என்றும் அவர் கருதினார். இந்த விசேஷ நேச அணி பற்றி லெனின் பின்வருமாறு வர்ணித்தார்: ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது உழைப்பாளிகளின் முன்னணிப் படையான பாட்டாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளிகளின் பாட்டாளிகள் அல்லாத எண்ணற்ற பிரிவினருக்கும் (குட்டி



பூர்ஷ்வா, சிறிய கைவினைஞர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் இத்தியாதி) அல்லது பெரும்பாலான பிரிவினருக்கும் இடையிலுள்ள விசேஷ வடிவ வர்க்கக் கூட்டணியாகும்.''

ஆகவே விவசாயிகளுடனான கூட்டணியில் நம்பிக்கை அற்ற ட்ரொஸ்கியால் ரஷ்யப் புரட்சிக்கு எந்த எதிர்காலத்தையும் காண முடியவில்லை. அவருடைய கருத்தில் உலகப் புரட்சிதான் அதைக் காப்பாற்ற முடியும். ஆனால் இது நடைபெறவில்லை. ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியாது என்று அவர் தொடர்ந்து கூறிக்கொண்டே இருந்தார். ஆனால் ஸ்டாலின் தலைமையிலான போல்ஷ்விக்குகள் ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியும் என்பதை நிரூபித்ததுடன் சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பின்போது கட்டவிழ்த்து விடப்பட்ட வரலாறு காணாத கொடிய தாக்குதலுக்கு எதிராகவும் அதனை பாதுகாத்தார்கள். வரலாறு இந்தப் பிணக்குகள் பற்றிய தீர்ப்பை வழங்கிவிட்டு முன்னேறிச் சென்றுள்ளது. ஒரு தத்துவம் என்ற முறையில் ட்ரொஸ்கியவாதம் ஒரு செத்த குதிரை. ஆனால் அது இன்னும் முனகிக் கொண்டிருக்கிறது.

லெனினின் வாரிசு என்ற பிரச்சினையிலும் ஸ்டாலின் ட்ரொஸ்கியின் இடத்தை அபகரித்தார் என்று ட்ரொஸ்கியவாதிகள் பெரும் பிரச்சாரம் செய்தார்கள். பூர்ஷ்வாப் பத்திரிகைகள் இதற்குப் பெரும் துணை புரிந்தன. இந்தப்பொய்க்குப் பதிலளிப்பது எளிது. ஏனென்றால் உண்மைகள் எம்பக்கத்தில் இருக்கின்றன.

வரலாற்றின்படி ட்ரொஸ்கி அக்டோபர் புரட்சியின் ஸ்தாபகரான போல்ஷ்விக் கட்சியில் புரட்சிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்தான் சேர்ந்து கொண்டார். ஸ்டாலினோ 1912-ல் பிராக் மாநாட்டில் மென்ஷிவிக்குகளிடமிருந்து பிரிந்தபோது போல்ஷ்விக் கட்சியில் லெனினுடன் இணை - ஸ்தாபகராக இருந்தார். இந்த மாநாட்டில் ஸ்டாலின் மத்தியக் கமிட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டார். மேலும் ரஷ்யாவுக்குள்ளே புரட்சிகர வேலைக்கு வழி காட்டுமுகமாக ஸ்டாலினைத் தலைவராகக் கொண்ட மத்தியக் கமிட்டி ரஷ்ய சபை என்ற நடைமுறை ரீதியான கேந்திரம் அமைக்கப்பட்டது. இது ஸ்டாலினுடைய தலைசிறந்த ஸ்தாபன திறமைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். லெனின் பெரிதும் வெளிநாடுகளிலிருந்து இயக்கத்துக்குத் தலைமை தாங்கியபோது ரஷ்யாவுக்குள்ளே தலைமறைவுக் கட்சியைக் கட்டியமைத்தது ஸ்டாலின்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1912-ல் ட்ராஸ்கி 'ஆகஸ்ட் குழு' என்பதை மும்முரமாக ஒழுங்குபடுத்தினார். அவர் இதில் லெனினுக்கும் போல்ஷ்விக்கு களுக்கும் எதிரான குழுக்களையும், போக்குகளையும் ஒன்றிணைத் தார். அப்பொழுதுதான் லெனின் அவரை ''யூதாஸ் டிராட்ஸ்கி'' என்று அழைத்தார்.

ஜாரை வீழ்த்தியது பெப்ரவரிப் புரட்சி. இதை அடுத்து 1917 மே 7-ம் திகதி முதல் 12-ம் திகதி வரை நடைபெற்ற மாநாட்டில், ஸ்டாலின் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இந்த மாநாடு லெனின் ரஷ்யாவுக்குத் திரும்பியதும் முன்வைத்த ''ஏப்ரல் ஆய்வுரை''யையும் அங்கீ கரித்தது. அப்பொழுதுதான் முதல் தடவையாக ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழுவுக்கும் ஸ்டாலின் தெரிவு செய்யப்பட்டார். மத்தியக் கமிட்டியின் மூன்று செயலாளர்களில் ஒருவராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். கட்சி ஏடான 'பிராவ்டா'வின் பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

பெட்ரோகிராடில் 1917, ஜூலை 26-ம் திகதி முதல் ஆகஸ்ட் 3-ம் திகதி வரை நடைபெற்ற போல்ஷ்விக் கட்சியின் ஆறாவது காங்கிரசில்தான் ட்ரொஸ்கியை ஒரு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வது என்பது தீர்மானிக்கப்பட்டது. இந்த மாநாடுதான் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதையும் தீர்மானித்தது. லெனின் அப்பொழுது பின்லாந்தில் தலைமறைவாக இருந்தார். இந்த மாநாட்டில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. பின்லாந்திலிருந்து அவர் மாநாட்டுக்கு வழிகாட்டினார். இந்த மாநாட்டில் பிரதான அறிக்கையைச் சமர்பித்ததும் ஸ்வெட்லோவ், மொலொட்டோவ், ஒட்ஜொன்கிட்சே முதலியோருடன் மாநாட்டுக்குத் தலைமை தாங்கியதும் ஸ்டாலின்தான்.

ஆயுதக் கிளர்ச்சியை நடத்துவது என்று தீர்மானித்த போல்ஷ்விக் கட்சி மத்தியக் கமிட்டியின் வரலாற்று ரீதியான கூட்டம் 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது. அக்டோபர் 7 ஆம் திகதி லெனின் இரகசியமாகப் பெட்ரோகிராட் வந்தடைந்தார். அக்டோபர் 16 ஆம் திகதி மத்தியக் கமிட்டியின் விஸ்தரிக்கப்பட்ட கூட்டம் இந்த எழுச்சியை வழிநடத்த ஸ்டாலின் தலைமையிலான கட்சிக் கேந்திரம் ஒன்றைத் தெரிவு செய்தது. எழுச்சியின் சட்டரீதியான தலைமை அலுவலகமும் முழு எழுச்சிக்கும் நடைமுறை ரீதியான வழி நடத்துதலை வழங்கியதுமான பெட்ரோகிராட் சோவியத்தின் புரட்சிகர இராணுவ கமிட்டியின் தலைமைக் கேந்திரமாக இந்தக்



கேந்திரம்தான் இயங்கியது. இதிலிருந்து அக்டோபர் புரட்சியின் போது லெனினுக்கு அடுத்தபடியான பாத்திரத்தை வகித்தவர் ஸ்டாலின் என்பது தெளிவாகின்றது. இதனாற்தான் 1922-ல் துப்பாக்கி ரவைக் காயம் காரணமாக லெனின் செயல்பட முடியாது இருந்த நிலைமையில் கட்சியின் பொதுச் செயலாளராக லெனின் வாழ்ந்த காலத்திலேயே ஸ்டாலின் தெரிவு செய்யப் பட்டார்.

இந்த மறுத்துக்கூற முடியாத உண்மைகளின் முன்னிலையில் ட்ரொஸ்கியவாதிகள் சொல்லிக் கொள்ளப்படும் லெனினின் மரண சாசனத்தை பற்றிநிற்கின்றார்கள். அது உண்மையில் எதிர்வர விருந்த காங்கிரசுக்கு லெனின் சொல்ல எழுதிய கடிதமாகும். இந்த காங்கிரஸ் இறுதியில் லெனின் மறைவுக்குப் பின் 1924-ஆம் ஆண்டு மே 24-ம் திகதி முதல் 31-ம் திகதி வரை நடைபெற்றது. இந்தக் கடிதத்தை காங்கிரசில் வாசிக்க வேண்டும் என்பதுதான் லெனினுடைய வேண்டுகோள். ஸ்டாலினே இக்கடிதத்தை வாசித் தார்.

இக்கடிதத்தில் ஸ்டாலினும் விமர்சிக்கப்பட்டிருந்தார், ட்ரொஸ் கியும் விமர்சிக்கப்பட்டிருந்தார். ஆனால் ட்ரொஸ்கியவாதிகள் கூறுவதுபோல் பொதுச்செயலாளர் பதவிக்கு ஸ்டாலின் இடத்தில் ட்ரொஸ்கியை வைக்க வேண்டும் என்று அது கூறவில்லை. இந்த கடிதம் வாசிக்கக் கேட்டபின்னர்தான் காங்கிரஸ் பொதுச்செயலாள ராக ஸ்டாலினைத் தெரிவு செய்தது. ஒரேயொரு வாக்கு, ட்ரொஸ் கியின் வாக்குதான் எதிராகக் கிடைத்தது. அவர் தன்னையே செயலாளராகத் தெரிவு செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

ஸ்டாலின் ஒரு பூரண எதேச்சதிகாரி எனவும் ட்ரொஸ்கிக்குப் போல்ஷ்விக் கட்சிக்குள்ளே போதிய விவாத வாய்ப்பு அளிக்க வில்லை எனவும் ட்ரொஸ்கியவாதிகள் பிரச்சாரம் நடத்தினார் கள். இது முற்றிலும் பொய். சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் வரலாற்றில், ஸ்டாலினைப்போல் இவ்வளவு அதிகாரம் படைத் திருந்த ஒரு தலைவர் தனது எதிரிக்கு, ஸ்டாலின் ட்ரொஸ்கிக்கு காட்டியது போன்ற பொறுமையைக் காட்டியது கிடையாது.

விவாதங்கள் போல்ஷ்விக் கட்சிக்கு உள்ளேயும் கம்யூனிச அகிலத்துக்கு உள்ளேயும் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நடை பெற்று வந்தது. மீண்டும் மீண்டும் ட்ரொஸ்கி தோற்கடிக்கப் பட்டார். ஆனால் அவர் தோல்வியை ஏற்றுக் கொள்ளவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1927 அக்டோபரில் நடைபெற்ற போல்ஷ்விக் கட்சியின் 15-வது மாநாட்டுக்கு முன்னர் ஒவ்வொரு உறுப்பினரினதும் நிலைப் பாட்டை அறிவதற்காக முழுக் கட்சியினதும் வாக்கெடுப்பு ஒன்று நடைபெற்றது. 7,24,000 உறுப்பினர்கள் ஸ்டாலின் தலைமை யிலான மத்தியக் கமிட்டியின் கொள்கைக்கு ஆதரவாக வாக்களித் தனர். 4,000 பேர் அதாவது ஒரு சதவீதத்துக்கும் குறைவானோர் ட்ரொஸ்கியவாதிகள், சினோவியேவ்வாதிகளின் குழுவுக்கு ஆதர வாக வாக்களித்தனர். இது ட்ரொஸ்கிக்குக் கிடைத்த இறுதி அடியாகும்.

ட்ரொஸ்கிக்கு வேண்டியது ஜனநாயக விவாதமும் தீர்ப்பும் என்றால் அது போதியளவு கிடைத்தது. ஆனால் அவர் இன்னும் விட்டுக் கொடுக்கவுமில்லை. தனது கோஷ்டிவாத நடவடிக்கை யைக் கைவிட்டதும் இல்லை. கட்சியின் பொறுமை சோதிக்கப் பட்டது. 1927 நவம்பர் 14 ஆம் திகதி மத்தியக் கமிட்டி, மத்தியக் கட்டுப்பாட்டுக் கமிஷன் ஆகியவற்றின் கூட்டுக் கமிட்டி ட்ரொஸ்கி யையும் சினோவியேவையும் வெளியேற்றியது. சோவியத்-எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்ற நிபந்தனை யில் அவர் சோவியத் யூனியனின் ஒதுக்குப்புறக் குடியரசு ஒன்றுக்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால் அவர் இந்த நிபந்தனையை மீறியபடியால் ஒருவருட முடிவில் அவர் சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்ட பின் ட்ரொஸ் கியின் நடவடிக்கைகள் பற்றியோ, சர்வதேசிய சோவியத் எதிர்ப்பு நடவடிக்கையின் கேந்திரமாக அவர் எப்படி மாறினார் என்பது பற்றியோ, இந்தக் கேந்திரம் அவருடைய ஆடம்பரத் திட்டங் களுக்கு எவ்வாறு பெருந்தொகை பணத்தைச் செலவழித்தது என்பது பற்றியோ, அவர் இறுதியில் மெக்சிக்கோவில் பெரிதும் அரண்செய்யப்பட்ட கோட்டையில் குடியேறினார் என்பது பற்றியோ, பொறாமையில் அவருடைய காரியதரிசியின் காதலன் எவ்வாறு அவரைக் கொன்றார் என்பது பற்றியோ நான் இங்கு கூற விரும்பவில்லை.

இன்று சோஷலிசத்தை ஒரே நாட்டில் கட்டியமைக்க முடியுமா என்பது போன்ற கேள்விகள் முற்றிலும் கல்வி இயல் ரீதியான கேள்விகள். வேறு பொழுதுபோக்கற்ற அறிவுஜீவிகள்தான் அவைபற்றி விவாதிப்பார்கள். அதனைச் செய்ய முடியும் என்பதை ஸ்டாலின் எப்பொழுதோ உலகிற்கு நிரூபித்தார். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் 20-ஆம் ஆண்டுகளிலும் 30-ஆம் ஆண்டு



களின் ஆரம்பத்திலும் ரஷ்யாவுக்கு உள்ளேயும் வெளியேயும் மக்களுக்கு அது தெளிவாக இருக்கவில்லை. இதனைச் செய்ய முடியுமா? என்று பலர் சந்தேகித்தார்கள். இவ்வாறுதான் ட்ரொஸ் கியவாதத்துக்கு ஒரு சமுதாய அடிப்படை அப்பொழுது இருந்தது. ஆனால் இன்று சோஷலிசத்தை ஒரே நாட்டில் கட்டியமைக்க முடியாது என்ற ட்ரொஸ்கியின் தத்துவம் செத்த தத்துவம். ட்ரொஸ்கியவாதம் என்பது தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு உள்ளேயிருந்த தவறான தத்துவம் என்ற நிலைமையிலிருந்து பகிரங்கமான எதிர்ப்புரட்சித் தத்துவமாக மாறியது.

ரஷ்ய போல்ஷ்விக்குகள் உட்பட சகல மார்க்சியவாதிகளும் உலகப் புரட்சியின் வெற்றியை எதிர்பார்த்து அதற்காகப் பாடு பட்டார்கள். இது நிறைவேறாத நிலையில் போல்ஷ்விக்குகள் மாத்திரம் தமது புரட்சியைக் காப்பாற்றக் கூடியதாக இருந்தபோது தொழிலாளி வர்க்கம் புரட்சியை நடத்தி அதைப் பாதுகாத்த ஒரு நாட்டில் சோஷலிசத்தைக் கட்டியமைக்கும் பாதையை அவர்கள் எதிர்நோக்கினார்கள். இதனை அவர்கள் ஸ்டாலினின் விவேக மான தலைமையில் செய்தார்கள். பின்னர் அதனை மிகவும் கொடிய பாசிச ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பாதுகாத்தார்கள். பாசிசம் தோற்கடிக்கப்பட்ட பின் சோஷலிசம் தனியொரு நாட்டின் எல்லையைக் கடந்து கிழக்கு அய்ரோப்பாவுக்குள்ளும் சீனாவுக்குள் ளும் வியட்நாமுக்குள்ளும் கொரியாவுக்குள்ளும் பரவியது. புரட்சிச் சக்திகளின் பலம் அதிகரித்தது. உலகப் புரட்சி மீண்டும் நிகழ்ச்சி நிரலுக்கு வந்தது. இதற்கும் ட்ரொஸ்கியின் முட்டாள்தனமான நிரந்தரப் புரட்சித் தத்துவத்துக்கும் இடையில் எந்தத் தொடர்பும் கிடையாது.

எனது பல்கலைக்கழக நாட்களிலும் அதன் பின்னரும் கம்யூனிஸ்டுகளுக்கும் ட்ரொஸ்கியவாதிகளுக்கும் இடையில் நடை பெற்ற தத்துவார்த்தப் பிணக்குகளை நான் சுருக்கித் தந்துள்ளேன். கம்யூனிசக் கருத்தை வரலாறு நிலைநாட்டியுள்ளது. இந்தத் தத்துவார்த்தப் போராட்டத்தை விட்டுக் கொடுக்காமல் சரியாக நடத்தி கம்யூனிஸ்டுகள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததோர் பணியை ஆற்றினார்கள்.

இருப்பினும் லங்கா சம சமாஜ கட்சியின் தலைவர்கள் மத்தியில் ட்ரொஸ்கியவாதமும் சோவியத் எதிர்ப்புவாதமும் எவ்வாறு இடம் பெற்றது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தத் தலைவர்களின் வர்க்க இயல்பில் இதற்கான பதில் இருக்கின்றது. அவர்கள் இலங்கையின் உயர் மத்தியதர வர்க்கக் குடும்பங்களைச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேர்ந்தவர்கள். அய்ரோப்பாவுக்கு அல்லது அமெரிக்காவுக்கு உயர் கல்விக்கு அனுப்பக் கூடியளவுக்கு அவர்களுடைய பெற்றோர் பணக்காரராக இருந்தார்கள். வெளிநாடுகளில் மாணவப் பிராயத்தில் அவர்கள் அய்ரோப்பிய,அமெரிக்க மார்க்சிய இயக்கத்துடன் தொடர்பு கொண்டு அதன் செல்வாக்கின் கீழ் வந்தார்கள். இவர்களில் பலர் தீவிரக் கருத்துகளை ஏற்றுக் கொண்டார்கள். சிலர் தாம் மார்க்சியவாதிகள் ஆகிவிட்டதாக நம்பினார்கள். சிலர் இரகசியமாக ட்ரொஸ்கியவாதிகள் ஆகினார்கள். இந்த எதிர்ப்புரட்சிகர தத்துவத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டார்கள். அப்பொழுது முதலாவது சோஷலிச அரசான சோவியத் யூனியனின் வளரும் சக்தியைத் தாக்க சகலவகை பிற்போக்குவாதிகளும் இந்தத் தத்துவத்தை பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் 1935-ல் லங்கா சம சமாஜக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டபோது சில தலைவர்களின் இந்த ரகசிய ட்ரொஸ்கியவாதக் கருத்துக்கள் கவனமாக மறைக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டில் இருந்தபோது மிகவும் உறுதியான ட்ரொஸ்கியவாதிகள் என்று கருதப்பட்ட பிலிப் குணவர்தனாவும் வேர்ணன் குணசேகராகவும் சரியாகவே தமது அரசியல் வாழ்வை யூ.என்.பி.யில் முடித்துக் கொண்டனர்.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் ஏறக்குறைய அனைவரும் மிகுந்த செல்வந்தர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலர் சக்தி வாய்ந்த நிலப்பிரபுத்துவக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். வேறு சிலர் பெரிய பணக்காரக் குடும்பங்களிலிருந்து வந்தார்கள். பெரும் மூலதனமும் வசதியும் பிணைந்த வாழ்வு ஒரு பக்கமும், தொழிலாளிவர்க்க இலட்சியத்துக்காக போராடி தமக்கு வசதியான வாழ்வைத் தரும் ஊற்றுமூலமான சுரண்டலை அழித்தொழிப்பது என்ற பாசாங்கு மறுபக்கமும் கொண்ட இந்த முரண்பாடு லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்களின் வாழ்க்கை பூராவும் பரவி இருக்கின்றது. சிவப்புச் சட்டை அணிந்து காலிமுகத் திடலில் ஜனத்திரளுக்கு முன் கூச்சலிடுவது, பின்னர் காலிமுக ஹோட்டலில் அப்பழுக்கற்ற மாலை உடை அணிந்து மதுவருந்தி விருந்துண்டு நடனமாடுவது — இது இந்தத் தலைவர்களின் நித்திய இரட்டை வாழ்க்கையாகும்.

இன்றுவரை இந்த இரட்டைத் தன்மை லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்களின் இயல்பாக இருந்து வருகின்றது. அவர்கள் புரட்சி பற்றியும் சோஷலிசம் பற்றியும் தொண்டை கிழியக் கத்தினார்கள். இலங்கையில் மாத்திரமல்ல இந்தியாவிலும் பர்மாவிலும் அதனைப் புகுத்த ஆசைப்பட்டார்கள். அதே வேளையில் கவனமான முதலீடுகள் மூலமும் உழைப்புச் சுரண்டலைப் பயன்



படுத்திப் பெற்ற அமிதப் பெறுமதியின் திரட்டு மூலமும் அவர்கள் செல்வத்தைக் குவித்துக் கொண்டார்கள்.

லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர்களில் அநேகரை நாம் பார்ப்போம் என்றால் அவர்களில் எவருக்காவது புரட்சியிலோ,சோஷலிசத்திலோ உண்மையான அக்கறை இருந்திருக்கும் என்று எவரும் நினைக்க முடியாது. கம்யூனிஸ்ட் கட்சியின் வாரப் பத்திரிகைகள் ஒரு தடவை டாக்டர் என். எம். பெறேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தனா ஆகிய லங்கா சம சமாஜக் கட்சியின் முப்பெரும் தலைவர்களின் வருமான வரிக் கணக்கைப் பிரசுரித்தன. அவர்களுக்குச் சொந்தமான தோட்டங்களினதும் முதலாளித்துவக் கம்பெனிகளில் அவர்களுக்கு இருந்த பங்குகளினதும் விவரங்களை இந்தக் கணக்குகள் காட்டின. ''கொள்ளையர் பொருட்களுடன் பிடிபட்டனர்'' என்ற தலைப்பில் வெளியான இந்தக் குற்றச்சாட்டுக்கு லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்கள் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை.

டாக்டர் என். எம். பெறேரா விவசாயக் கடன் கூட்டுத் திட்ட நிறுவனத்திடமிருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் கடன் பெற்று வாங்கிய ஆக்லண்ட் தோட்டத்தின் கதையைப் பலர் அறிவார்கள். பெரிய தோட்டங்களை வாங்குவதற்கான பெரிய கடன்களை வழங்கக்கூடிய ஒரு கூட்டு ஸ்தாபனமாக அது இல்லை என்பது ஒருபுறமிருக்க, இக் கடனுக்கு உத்தரவாதம் செய்தவர் பெரும் வர்த்தகப் புள்ளியும் பிரபல்யமான யூ.என்.பி. கட்சியினருமான சேர். சிறில்டி சோயிஷா ஆவார். பொதுமக்கள் ஆட்சேபனை காரணமாக என். எம். பெறேரா இந்தத் தோட்டத்தை விற்க நேரிட்டது. ஆனால் அவர் அதை ஒன்றரை இலட்சம் ரூபாய் இலாபத்தில் விற்றார் என அறிய வருகின்றது.

பின்னர் அவர் கம்பெனிகளில் முதலீடு செய்தார். பின்னர் அவர் கிரிதரா ஆலையை வாங்கினார். மீண்டும் பொதுஜன ஆட்சேபனை காரணமாக அதனை ஈட்டுக்குக் கொடுத்தார். மாதத்துக்கு ஐயாயிரம் ரூபா ஈட்டுக்கு அவர் அதைக் கொடுத்தார் என அறியப்பட்டது. இவ்வளவு பணம் அவருக்கு எதற்கு என்று கேட்டபோது தனது ஓய்வு நாட்களுக்கு வேண்டும் என்று கூறினாராம். இந்த லங்கா சம சமாஜக் கட்சித் தலைவருக்கு தனது வாழ்நாளில் சோஷலிசத்தை அடையப் பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கவில்லை என்பது மட்டுமல்ல அவர் ஓய்வுபெற்ற பின்கூட தனது சுரண்டலைத் தொடரும் கனவை அவர் கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் லெஸ்லி குணவர்த்தனாவும் இப்படித்தான். டாக்டர் கொல்வினுடைய மகளுக்கும் திரிபுவாதத் தலைவர் ஒருவருக்கும் திருமணம் நடந்தபோது பிரதமர் முதல் யூ.என்.பி. அமைச்சரவை முழுவதும் அதில் கலந்து கொண்டிருந்தது. இத்தகைய வர்க்க சமரச சல்லாபம் லங்கா சம சமாஜக் கட்சியின் விசேஷ முத்திரை. உங்கள் வர்க்க எதிரியுடன் பானம் அருந்தி, விருந்துண்ணும் அதே வேளையில் அவனுக்கு எதிராகப் போராட தீர்க்கமான தயாரிப்புகளை செய்யமுடியுமா? வூவாவில் லங்கா சம சமாஜக் கட்சியின் முன்னாள் தலைவராக இருந்த ஜேக் கொத்தலவாலா இலங்கை தோட்ட முதலாளிகள் சம்மேளனத்தின் சட்ட ஆலோசகராக இருக்க அனுமதிக்கப்பட்டார். அவர்பின்னர் யூ.என்.பி.-யில் சேர்ந்து அதன் மாஸ்கோ தூதரானார். அவர் தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிமாருக்கு வாதாடினார். இதுதான் நரிகளுடன் ஓடிக்கொண்டு நாய்களுடன் வேட்டையாடுவது! பத்தேகம லங்கா சம சமாஜக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ் சென்ற நீல்டி அல்விசும் தென் மாகாண தோட்ட முதலாளிகள் சங்கத்தின் தலைவராக ஒரு காலத்தில் இருந்தார்.

பிலிப் குணவர்த்தனா இறந்தபோது யூ.என்.பி. தலைவர் டட்லி சேனநாயக இறுதிக்கிரியை உரையாற்றினார். டாக்டர் என். எம். பெறேரா இறந்தபோது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா உரையாற்றினார். பூர்ஷ்வாப் பத்திரிகைகள் அனைத்தும் அவர்களைப் பாராட்டி கட்டுரை எழுதின. ஏன்? அவர்கள் முதலாளி வர்க்கத்துக்கு நல்ல சேவை புரிந்துள்ளார்கள். இப்படித்தான் சர்வதேசியப் பூர்ஷ்வாப் பத்திரிகைகள் எப்பொழுதும் ட்ரொஸ்கியைப் பாராட்டும் அதேவேளையில் ஸ்டாலினை இன்று வரை திட்டுகின்றன. உழைப்பின் சுரண்டலில் வாழும் எந்தத் தலைவனும் அதே சுரண்டலை ஒழிக்கத் தான் பாடுபடுவதாகக் கூறுவதை எவரும் பாரதூரமாக எடுக்கமுடியாது.

உண்மையில் லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்கள் புரட்சிவாதிகள் அல்ல. அவர்கள் போலிப் புரட்சிவாதிகள். டி. பி. ஜெயதிலக, டி. எஸ். சேனநாயக ஆகியோர் தலைமையிலான முதலாளி வர்க்கத்தின் தலைமைப் பகுதிகள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு முற்றிலும் அடிமைத்தனமாக இருந்ததன் எதிரொலிப்பே லங்கா சம சமாஜக் கட்சியின் இடதுசாரி குறுங்குழுவாதமாகும். அப்பொழுது இலங்கையில் தேசிய பூர்ஷ்வா வர்க்கமும் இருக்கவில்லை. இந்தியாவில் இருந்தது போன்ற



புரட்சிகர தேசிய இயக்கமும் இருக்கவில்லை. லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்கள் என்போர் இந்திய தேசிய காங்கிரசின் இடதுசாரிகளை ஒத்தவர்கள். அவர்கள் இலங்கையின் நேருக்களும், போசுகளுமாவர்.

இவ்வாறு, லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்களின் வர்க்க இயல்பைப் பார்க்கும்போது ட்ரொஸ்கியவாதம் என்ற எதிர்ப் புரட்சிகரத் தத்துவத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டது அதிசயம் அல்ல. ட்ரொஸ்கியவாதம் இத்தகைய உயர் மத்தியதர வர்க்க அறிவுஜீவிகளுக்கு கவர்ச்சிகரமானது. ஏனென்றால் அது ஏகாதிபத்திய எதிர்ப்பு கொண்டதாக பாசாங்கு செய்கிறது. அதே வேளையில் அதன் பிரதான பங்கும், செயல்பாடும் சோவியத் யூனியனுக்கு எதிரானது. அதாவது அது தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரானது. அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனின் சரியாகப் பிரகடனம் செய்தவாறு, சோவியத் யூனியனைப் பொறுத்த மனோபாவம், ஒரு சோஷலிஸ்டுக்கு உள்ள உரைகல்லாகும். பின்னர் மாவோவின் சீனாவைப் பொறுத்த மனோபாவம் ஒரு சோஷலிஸ்டுக்கு உள்ள உரைகல்லாக இருந்தது.

இந்த உரைகல்லின்படி லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்கள் முன்னரும் பின்னரும் சோசலிசத்துக்கு எதிரானவர்களாக இருந்தார்கள். ஆனால் அதே வேளையில் அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக பாசாங்கு செய்தார்கள். நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஏகாதிபத்தியத்தையும் சோவியத் யூனியனையும் விமர்சிப்பதும் ஆனால் அப்பொழுது சோஷலிசத்தின் உருவகமாக இருந்த சோவியத் யூனியனை தமது பிரதான தாக்குதல் முனையாக்குவதும் முதலாளித்துவ அறிவுஜீவிகளின் விருப்பமான பொழுதுபோக்கு.

www.tamilarangam.net

# 3. கட்சியின் ஆரம்ப நாட்கள்

லங்கா சம சமாஜக் கட்சியில் பிளவு ஏற்படுவதற்கு சில மாதங்களுக்கு முன் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆனேன். நான் ஸ்தாபன ரீதியில் ஒரு லங்கா சம சமாஜ கட்சி உறுப்பினராக இருக்கவில்லை. நான் கம்யூனிஸ்டுகளுடன் தான் தொடர்பு வைத்திருந்தேன். லங்கா சம சமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட கம்யூனிஸ்டுகள் ''தொழிலாளர் மன்றம்' என்ற ஸ்தாபனத்தை அமைத்தனர். இந்த ஸ்தாபனத்தின் பிரதான சாதனை கொழும்புத் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் தொழிற் சங்கங்களை ஸ்தாபித்ததாகும். இவை இலங்கை தொழிற்சங்கங்களை ஸ்தாபித்ததாகும். இவை இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் 1940 செப்டம்பரில் (CTUF) ஒன்றிணைக்கப் பட்டன. சற்றுக் காலத்துக்குப் பின் ஐக்கிய சோஷலிசக் கட்சியை அவர்கள் அமைத்தனர். கொழும்புத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலிருந்த கேரளத்தைச் சார்ந்த சோஷலிஸ்டுகள் குழு அதில் சேர்ந்து கொண்டனர். அப்பொழுது மலையாளத்தவர் கொழும்புத் தொழிலாளி வர்க்கத்திற் ஒரு கணிசமான தொகையினராக இருந்தனர் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். அப்பொழுது பிரித்தானிய மலபார் என்று அழைக்கப்பட்ட கேரளத்திற் அக்



காலத்திற் மிகப் பலமாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கின் கீழ் அவர்கள் இருந்தார்கள். பெருந்தோட்டங்களுக்கு குடும்பமாக குடிவரவு செய்த இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களிலும் பார்க்க இந்த மலையாளத் தொழிலாளர்கள் வித்தியாசமானவர்கள், மனைவிமாரின்றி வந்த அவர்கள், கொழும்பு நகரில் விடுதி இல்லங்களிலேயே தங்கியிருந்தார்கள். இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வது என்ற யோசனையுடன்தான் அவர்கள் இருந்தார்கள். இந்தத் தொழிலாளர்கள் மிகுதியும் அரசியல் உணர்வு உடையவர்கள். பிரித்தானிய பிரஜைகளாக இருந்தபடியால் அவர்களுக்கு வாக்குரிமையும் இருந்தது. இதனால் கொழும்பு மாநகரத் தேர்தல்களில் ஆரம்பத்தில் இடதுசாரிக் கட்சிகள் வெற்றி பெற முடிந்தது. இந்திய தேசிய காங்கிரசுக்காக பணம் சேர்க்க மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்ததுபோலவே மலையாள கம்யூனிஸ்டு தலைவர்கள் தமது கட்சிக்குப் பணம் சேர்க்க இங்கே வந்தார்கள். காலஞ்சென்ற ஏ. கே. கோபாலன் இதற்காக பலதடவை இலங்கை வந்தது எனக்கு நினைவு இருக்கிறது.

டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா தவிர கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்காலத் தலைவர்கள் லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர்களிலும் பார்க்க வேறுபட்ட வர்க்கங்களிலிருந்து வந்தவர்கள். ஆயினும் அவர்கள் கூடுதல் புரட்சியாளர்கள் அல்ல. குருச்சேவுக்கு முன்னரே திரிபுவாத பாதையை எடுத்த பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியில் இளமைப் பயிற்சி பெற்ற இந்தத் தலைவர்கள் திரிபுவாதக் கொள்கைகளை மாத்திரம் அல்ல; திரிபுவாத வேலை நடையையும் இங்கே கொண்டு வந்தார்கள். இலங்கைக் கம்யூனிஸ்டுகள் தொடர்பு கொண்டிருந்த மற்ற கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாகும். இந்தக் கட்சி ஏற்கனவே பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கின் கீழ்வந்து அடிப்படையில் திரிபுவாதக் கட்சியாக இருந்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்திலும் கெனமன், வைத்தியலிங்கம், கந்தையா ஆகியோருக்கு சம காலத்தவராக இருந்த பல இந்தியக் கம்யூனிஸ்ட் மாணவத் தலைவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவந்து திரிபுவாத மார்க்கத்தில் இந்தியக் கட்சியை இழுத்துச் சென்றார்கள். இலங்கையில் இருந்த கம்யூனிஸ்டுகள் லங்காசம சமாஜக் கட்சியின் இடதுசாரி குறுங்குழுவாதத்துக்கு எதிராக நின்று வலதுசாரி சீர்திருத்தவாதப் பாதையை மேற்கொண்டார்கள். இதனால் அவர்கள் சில கேலிக்கிடமான நிலைப்பாடுகளை எடுத்தார்கள். இவைபற்றிப் பின்னர் பார்ப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐக்கிய சோஷலிசக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதும் நான் அதில் சேர்ந்தேன். பல்கலைக் கழகக் கல்லூரியில் கட்சிக்குழு ஒன்றை நாங்கள் அமைத்தோம். குழு உறுப்பினர்களிற் பலர் யூனியன் விடுதியில் என்னுடன் இருந்தார்கள். இவர்களில் ஒருவர் எம். சிவசிதம்பரம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் இன்றைய தலைவர். அப்பொழுதுஅவர் ஊக்கமான கம்யூனிஸ்டாக இருந்தார். 1952 வரை அவர் அவ்வாறு செயற்பட்டார். 1952-ல் பருத்தித் துறைத்தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பொ. கந்தையா போட்டியிட்ட வேளையிற் நான் அங்கு சென்றிருந்தபோது கந்தையாவுடன் தங்கி இருக்கவில்லை, சிவசிதம்பரத்துடன்தான் தங்கினேன். விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கு சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தவும் அவர் என்னை அழைத்துச் சென்றார். அப்பொழுது இந்தக் கல்லூரி அவருடைய குடும்பத்தினரால் நிர்வகிக்கப்பட்டது.

அப்பொழுதும் சிவசிதம்பரத்திடம் குறைபாடுகள் இருந்தன. அவருடைய விடுதி அறையில் கல்வித் தெய்வம் சரஸ்வதியின் படம் இருந்தது. நாங்கள் அவரைக் கேலி செய்வதுண்டு. அவருடைய மூளையில் மார்க்சிசம் — லெனினிசம் வெற்றி காண வேண்டும் இல்லையென்றால், சரஸ்வதி வென்றுவிடுவார் என்று நாங்கள் அவரிடம் கூறினோம். துரதிருஷ்டவசமாக சிவசிதம்பரத்தைப் பொறுத்தவரையில் சரஸ்வதி வெற்றி கண்டார். ஒரு மார்க்சியவாதி மதத்தில் நம்பிக்கை வைக்க முடியுமா என்ற கேள்வியை இது எழுப்புகின்றது. கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபிகள் பலர் மதத்தில் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றார்கள். இது பிரச்சினை இல்லை. நானே கம்யூனிஸ்ட் ஆகுவதற்கு முன் மிகுதியும் மத நம்பிக்கை உடையவனாக இருந்தேன். எனது பள்ளிக் காலத்தில் நெற்றியில் நிரம்ப விபூதி பூசாமல் நான் வீட்டைவிட்டு வெளியே சென்றதில்லை. ஆனால் ஒருகம்யூனிஸ்டாகி முற்றிலும் பொருள் முதல்வாதமான மார்க்சிசம் — லெனினிசம் என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் பிரச்சினை வருகின்றது. பொருள்முதல் வாதியான எவரும், பொருள் பிரதானமானது என்று கருதும் எவரும் உலகத்தைக் கடவுள் படைத்தார் என்பதையோ இயற்கைக்கு எந்த மேலான நம்பிக்கையையுமோ கொண்டிருக்க முடியாது. அப்படி ஒருவர் நம்பிக்கை கொண்டிருப்பார் என்றால் அவர் நேர்மையற்றவர், படிப்படியாக கற்பனாவாத சகதிக்குள் இழுத்துச் செல்லப்படுவார். ஆகவே ஒரு கம்யூனிஸ்ட் அனுதாபி மத நம்பிக்கை உடையவராக இருக்கலாம். ஆனால் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மத நம்பிக்கை உடையவராக இருக்க முடியாது.



பல்கலைக் கழகத்தில் இருந்த எமது கம்யூனிஸ்ட் குழு 'பல்கலைக் கழகச் செய்தி'யைப் பிரசுரித்ததுடன் மாணவர் நலன்களை ஆதரித்தும் நல்ல வேலை செய்தது. ஒருமுகப்பட்ட வாசஸ்தலப் பல்கலைக்கழகம் என்ற ஐவர் ஜெனிங்சின் பிரேரணையை எதிர்த்து நாங்கள் பிரச்சாரம் செய்தோம். இலங்கையில் எத்தகைய பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்ற பிரச்சினை நீண்டகாலமாக சர்ச்சைக்கு உரியதாக இருந்து வந்தது. முதலில் பல்கலைக்கழகம் எங்கே அமைய வேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. கொழும்பு, கண்டி ஆகிய இரு இடங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றின் குறைநிறை பற்றி உக்கிரமான விவாதம் நடைபெற்றது. ஏரிக்கரை முதல்வரான டி. ஆர். விஜயவர்தனாவின் ஆதரவுடன் கண்டி வெற்றி பெற்றது. லண்டன் பிரிவின் உற்பத்தியும் பொருளாதாரத் துறையிலான லண்டன் பிரிவின் உற்பத்தியும் தாராளவாதி என்ற பாசாங்கும் உடைய டாக்டர் ஐவர் ஜெனிங்ஸ் பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகக் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்துக்கான மாற்றத்தைச் செயற்படுத்துவதே அவருடைய பணியாக இருந்தது. பல்கலைக்கழகத்தில் எனது மூன்றாவது ஆண்டின் இறுதியில் அவர் அங்கு வந்தார். ஓராண்டுக்குள் பல்கலைக் கழகக் கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. 1943-ல் நான் பட்டம் பெற்றபோது புதிய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டம்பெற்ற மாணவர்களில் ஒருவனாக நான் இருந்தேன். லண்டன் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தையே நாம் படித்திருந்தோம். சித்தி எய்திய பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு நடந்த முதலாவது ஆண்டு அதுவாகும்.

பேராதனையில் புதிய பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்கும் பணி இன்னும் செய்யப்படாதிருந்தது. கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போட் பல்கலைக்கழகங்களின் மாதிரியில் வாசஸ்தலப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க ஜென்னிங்ஸ் விரும்பினார். வேறு வார்த்தைகளில் கூறினால் உயர்தட்டு மக்களுக்கான பல்கலைக்கழகம் அது. ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனும் பல்வேறு மண்டபங்களில் நல்ல தளவாடங்கள் கூடிய அறைகளில் வாழுவான். கேம்பிரிட்சும் ஆக்ஸ்போர்டும் பயன்தரவில்லை என்று கூற முடியாது. பிரிட்டிஷ் சமுதாயத்தின் உயர் வர்க்கங்களுக்கானவை அவை என்பதும் ஈட்டன், ஹேரோ போன்ற உயர்தட்டு பொதுப் பாடசாலைகளின் மாணவர்களுக்கானவை அவை என்பதும் மறுக்கமுடியாத உண்மை. ஆனால் கேம்பிரிட்ஜில் அல்லது ஆக்ஸ்போடில் சேர்வதற்கான போட்டியில் தவறிய அல்லது அதில் சேரும் பணவசதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லாத பிரிட்டிஷ் மாணவர்கள் பிரிட்டன் பூராவிலும் உள்ள இன்னொரு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

ஆனால் பேராதனை அப்பொழுது இலங்கையில் ஒரேயொரு பல்கலைக் கழகமாக இருந்தது. இயல்பாகவே, பல்கலைக் கழக பிரவேசம் கோரும் மாணவரில் ஒரு பகுதியினரையே அது ஏற்றுக் கொள்ள முடியும். ஒரு உயர்மட்டத்தினரைப் பயிற்றி அவர் களையும் பின்னர் தாம் வந்த சமுதாயத்திலிருந்து பிரித்து விடுவதே ஜென்னிங்சின் கருத்தாக இருந்தது. பல பல்கலைக் கழக மாணவர்கள், குறிப்பாகக் கிராமங்களிலிருந்து வந்த மாணவர்கள், நவீன கக்கூசையோ குளிக்கும் அறையையோ கண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் பாயில் அல்லது பலகையில் தான் படுத்திருப்பார்கள். பேராதனைப் பல்கலைக் கழக விடுதி களில் இந்த மாணவர்களுக்கு இத்தகைய ஆடம்பரங்களை அளிப்பதன் மூலம் பட்டம் பெற்ற பின்னர் அவர்களைச் சமுதாயத் திலிருந்து பிரிப்பதும் இதே ஆடம்பரத்தையும் வசதியையும் வழங்கக்கூடிய வேலைகளைத் தேடிச் செல்ல அவர்களைச் செய்வதும் நோக்கமாகக் கொண்டது. இவர்கள் தாம் வந்த சமுதாயத்துக்குப் பின்னர் சென்று சேர முடியாது. அத்துடன் பேராதனை இலங்கையின் தலைநகரமும் சகல அரசியல், தொழிற் துறை வாழ்வினதும் கேந்திரமான கொழும்பிலிருந்து கணிசமான தூரத்தில் இருந்தது.

நாம் இயல்பாகவே இந்த பிற்போக்குத் திட்டத்தை ஒரு ஏகாதிபத்திய சூழ்ச்சி என்று கூறி எதிர்த்தோம். தீவின் பல பாகங்களிலும் இணைப்புக் கல்லூரிகள் உடைய விடுதியற்ற பல்கலைக் கழகம் ஒன்று தான் வேண்டும் என்று நாங்கள் கோரினோம். லண்டன் பல்கலைக் கழகத்தைப் போல மாணவர்கள் வெளி மாணவர்களாகப் பதிவு செய்யக் கூடிய பல்கலைக்கழகம் ஒன்றை நாங்கள் கோரினோம். எமது திட்டத்தின்படி பல்கலைக் கழகத்தில் தங்குவதற்காக மாணவர்கள் பெருந்தொகையான செலவைச் செலவழிக்கத் தேவையில்லை. அவர்கள் வீட்டிலிருந்தும் வரலாம், போர்டிங்குகளிலும் தங்கலாம். மாணவர்கள் எமது ஆலோசனையைப் பெரிதும் ஆதரித்தனர். பல்கலைக் கழக யூனியன் விடுதியின் வருடாந்தர இரவு விருந்தில் என்னுடைய தலைவர் உரையின் பிரதான அம்சமாக இது அமைந்தது. ஆனால் ஜென்னிங்ஸ் மசியவில்லை.

மிகப் பெரிய அளவு செலவு செய்து அவர் இன்றைய பேராதனைப் பல்கலைக் கழகக் கட்டடத்தை அமைத்தார். ஆனால்



நெருக்கடி விரைவில் வரவிருந்தது. ஆண்டுக்காண்டு கூடுதலான பிரவேசக் கோரிக்கை எழுந்தது. ஆனால் விடுதி அறைகளை அதிகரிக்க முடியவில்லை. இரண்டு மூன்று மாணவர்கள் ஒரு அறையில் இருக்க நேரிட்டது. மேலும் கூடுதலான பிரவேசம் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டபோது மாணவர்கள் வெளியில் தங்கிப் படிக்கும் முறையில் சேர்க்கப் பட்டனர். முற்றிலும் விடுதிப் பல்கலைக்கழகம் என்ற ஜெனிங்சின் கனவு குலைந்தது. தற்பொழுது புதிய பல்கலைக்கழகங்கள் வடக்கு, தெற்கு, மேற்கு மாகாணங்களில் திறக்கப் பட்டுள்ளன. இவை அனைத்தும் விடுதியற்ற பல்கலைக் கழகங்கள், வெளியி லிருந்து மாணவர்கள் அவற்றில் சேர்ந்து படிக்கலாம். இறுதியில் எமது கருத்துக்கள் ஜெனிங்ஸ்சின் கருத்துக்களை வென்றன என்பதை நான் இப்பொழுது பெருமையுடன் நினைவு கூறு கின்றேன்.

புதிதாகச் சேர்ந்தவர்களை 'றாக்' பண்ணும் விஷயத்திலும் அதனை எதிர்த்து எமதுமுற்போக்கான கருத்துக்கள் வெளிவந்தன. இன்றைய பல்கலைக் கழகங்களில் இருப்பது போல் அல்லாது அப்பொழுது 'றாக்கிங்' கடுமையற்றதாக இருந்தது. பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் யூனியன் விடுதியின் வார்டனாக இருந்தபோது கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போட் பல்கலைக் கழகங்களில் இருந்து இதனைக் கொண்டு வந்தார் போலத் தெரிகின்றது. மாகாணப் பாடசாலைகளில் இருந்துவந்த 'முரட்டு' மாணவர்களை மென்மை யாக்குவதே இதன் ஆரம்பகாலக் கருத்தாக இருந்தது. பிரச்சினை என்னவென்றால் இது அடிக்கடி அளவுக்கு மீறிச் செய்யப்படுவ தாகும்.

எனது காலத்தில் பல்கலைக் கழகத்தில் 'றாக்கிங்' மிகக் குறைவாக இருந்தது. சிரேஷ்ட மாணவர்களுக்கு 'விருந்து' அளிக்க புதியவர்களிடம் பணம்திரட்டுவது மட்டும் செய்யப்பட்டது. முதலாவது தவணையில் புதியவர்களின் 'ருக்' ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. எனது முதலாவது ஆண்டில் மாணவர்கள் தேர்ஸ்ரன் வீதியிலுள்ள கல்லூரி விடுதியில் ஒன்றுகூடி காலிரோட் வழியாகக் காலிமுகத் திடலுக்குச் சென்றனர். அப்பொழுது ஊர்வலமாகச் செல்வதற்கு அனுமதி தேவையில்லை. துரதிருஷ்ட வசமாக மாணவர்கள் கொள்ளுப்பட்டி பொலிஸ் நிலையத்தைத் தாண்டிச் சென்றபோது ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஊர்வலத்தில் சிக்குபட்டு சற்று கைவைக்கப்பட்டார். அப்பொழுது கொள்ளுப்பிட்டி பொலிசார் தமது நிலையத்திற்கு முன்னால் கரபந்தாட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு பொலிஸ் விசில் சத்தத்துடன் முழுபொலிசாரும் விரைந்து வந்து மாணவர்களைத் தாக்கினார்கள். சில மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரான்லி சேனநாயகா. அவர் பின்னர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகினார். மாணவர்களின் சாம்பியனான பேராசிரியர் சுந்தரலிங்கத்துடன் தொடர்பு வைக்கப்பட்டது. மாணவர்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். தவறான தாக்குதல், கைது ஆகியவற்றுக்காக பொலிசார் மீது வழக்குத் தொடர்வது பற்றிப் பேச்சு அடிபட்டது. ஆனால் ஸ்ரான்லிக்கு அப்பொழுதே பொலிசில் சேரும் ஆசை இருந்தபடியால் அது நடைபெறவில்லை.

யூனியன் விடுதியில் நிலைமை வித்தியாசமாக இருந்தது. 'றாக்கிங்' இருந்தது. ஆரம்பகாலத்தில் அது நாகரிகமானதாகவும் அறிவுபூர்வமானதாகவும் கூட அமைந்தது. ஒரு உதாரணம் : முதலாம் தவணையின்போது புதியவர்கள், பேசினால் தவிர சிரேஷ்ட மாணவர்களுடன் பேசக்கூடாது. சிரேஷ்ட மாணவர்களுக்கு பெரும் பயத்துடன் புதிய மாணவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு நாள் சற்றுக் கறுப்பான புதிய மாணவன் காலைச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவ்வழியே பொறாமைபிடித்த சிரேஷ்டமாணவன் ஒருவன் தனது வாயிலிருந்து பைப்பை எடுக்காமல், ''புதியவரே, உனது பெயர் என்ன?'' என்று கேட்டார். நடுங்கிக் கொண்டே ''ரீ. செல்வரத்தினம்'' என்று புதிய மாணவர் பதிலளித்தான். ''நீ ரீயிலும் பார்க்க கோப்பி மாதிரி இருக்கிறாய்'' என்று அவர் கூறினார். இது அறிவு ரீதியான ஆர்ப்பாட்டம். இதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் பிற்காலத்தில் 'றாக்கிங்' என்பது புதியவர்களுக்கு எதிராக உடல் ரீதியான வன்முறை என்ற அளவிற்கு மோசமாகியது.

நான் விடுதியில் சேர்ந்தபோது பல்கலைக் கழகத்தில் இரண்டாம் ஆண்டில் இருந்தேன். எனக்கு விடுதியில் நண்பர்கள் இருந்தார்கள். என்ன நடக்கும் என்பது பற்றி அவர்கள் எனக்கு எச்சரித்திருந்தார்கள். என்னைக் கண்டதும் ஒரு வாளி தண்ணீரை எனது கட்டிலில் ஊற்றினார்கள். அதற்குப் பின் சிரேஷ்ட மாணவர்கள் அறைக்குள் வந்து காப்பிதரும்படி உத்தரவிட்டுவிட்டு சரளமாக உரையாடினார்கள். ஆனால் பிந்திய ஆண்டுகளில் 'றாக்கிங்' அசிங்கமாகியது. நாம் சகல வடிவ றாக்கிங்கையும் எதிர்க்கத் தீர்மானித்தோம். நான் விடுதிச் சங்கத்தின் தலைவராகிய ஆண்டில் இதனை அமுல்படுத்த வேண்டிருந்தது. உணர்ச்சிகள்



உக்கிரமானவையாக இருந்தன. முந்திய ஆண்டுகள் 'றாக்'படுத்தப்பட்ட மாணவர்கள் அதனை மிகுதியும் ஆதரிப்பவர்களாக இருந்தனர். விடுதி இரண்டாகப் பிரிந்திருந்தது. ஆகவே பதற்ற நிலை அளவைத் தாண்டுவதற்கு முன் சமரசம் செய்ய நாங்கள் முனைந்தோம். அப்பொழுது 'றாக்கிங்' வேண்டும் என்று பலமாக வாதிட்ட ஒரு மாணவன் பின்னர் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஒரு பேராசிரியராகி பல்கலைக் கழகத்தில் றாக்கிங்கை எப்படி சமாளிப்பது என்பது பற்றிய கமிஷன் ஒன்றின் தலைவரானார்!

றாக்கிங் என்பது சாதாரண மனிதன் விரும்ப முடியாதது. அதனைத் தடை செய்ய வேண்டும். சமீப ஆண்டுகளில் அது பயங்கர ரூபங்களை எடுத்துள்ளது. மாணவரை முடமாக்கும் உடல்ரீதியான வன்முறை கூட அதில் இடம் பெற்றுள்ளன. புதிய மாணவர்கள் நம்ப முடியாத பயங்கரத்துக்கூடாகச் செல்கின்றனர். அதில் ஓரிரு நல்ல விஷயங்கள் இருந்திருக்கலாம். ஆனால் அதன் தீய அம்சங்கள் பலவாக இருப்பதால் அதனைத் தடை செய்ய வேண்டும். அத்துடன் 'றாக்கிங்' என்பது ஒரு இறக்குமதிச் சரக்கு. அது எமது கலாச்சாரத்துக்கு முற்றிலும் அந்நியமானது.

பல்கலைக் கழகத்தில் எனது இறுதி ஆண்டான அடுத்த ஆண்டில் நான் மேற்கொண்ட இந்தியப் பயணம் எனது அரசியல் வளர்ச்சியில் முக்கியமானது. டில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் மாநாட்டில் நான் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன். அரசியல் ரீதியில் அப்பொழுது இந்தியாவுக்குச் செல்வது ஒரு பயனுள்ள விஷயமாகும். இந்தியத் தேசியத் தலைவர்கள் அப்பொழுது சிறைச்சாலையில் இருந்தார்கள். இங்கிலாந்தில் தொழில் கட்சி கொன்சர்வேட்டிவுகளுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டது. ஒரு உயர்மட்ட தொழில் கட்சித் தலைவரான சேர் ஸ்ராவ்வோல்ட் கிறிப்சின் தூதுக் கோஷ்டி வந்து சென்றது. இந்திய அரசியல் இழுபறி நிலையில் ஒரு முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உத்தியோகபூர்வமாக சட்டவிரோதமாக்கப்பட்டிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அநேக தலைவர்கள் சிறைகளில் இருந்தார்கள், அல்லது தலைமறைவாக இருந்தார்கள். சில கம்யூனிஸ்டுகள் ஓரளவு வெளியே வந்து வேலை செய்ய ஆரம்பித்தார்கள். டில்லிக்குப் போன வழியில் சென்னையில் ஒரு கம்யூனிஸ்டின் இல்லத்தில் நான் தங்கியிருந்தேன். அவர் மதராஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஹிந்து பத்திரிகையில் உயர் பதவியில் இருந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்த அவர் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகிய பின்னர் பீக்கிங் உட்படப் பல தலைநகரங்களில் இந்தியாவின் தூதராகப் பணியாற்றினார். வீட்டில் அவர் எந்த அரசியல் கலந்துரையாடலையும் நடத்தவில்லை. அவ்வளவு, பாதுகாப்பு உணர்வுடையவர் அவர். என்னை சென்னையிலுள்ள மரினாக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று அதன் மத்தியில் அமர்ந்து அரசியல் பேசினார். நாங்கள் பேசுவதை யாரும் கேட்க முடியாது என்று அவர் கூறினார். அவர் வெகுகாலத்துக்குப் பின்னர் 1983 ஜூலை இனக்கலவரங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு இந்தியாவின் விசேஷ தூதராக வந்து சென்றார்.

அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் மாநாடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஓரளவான வெளி நடவடிக்கைகளில் ஒன்றாகும். இச் சம்மேளனத்துக்கு கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்கினார்கள். இந்தியாவின் சகல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கானோர் அதில் கலந்து கொண்டார்கள். வந்தடையும் ஒவ்வொரு புதிய பிரதிநிதிக் கோஷ்டியையும் காக்கி யூனிபோம் அணிந்த மாணவத்தொண்டர்கள் முழக்கமிட்டு வரவேற்றது இன்னும் என் நினைவில் இருக்கின்றது. மாநாட்டுக் கூட்டங்களுக்கு இடையிலுள்ள நேரங்களில் ஒரு பொதுக் கொள் கையை வகுப்பதற்காக கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளின் பிரத்தியேக கூட்டங்கள் நடைபெற்றன. அப்பொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த பி. சி. ஜோசி இக் கூட்டங்களில் உரை நிகழ்த்தினார். ஜோசியைப் போல இடை நிறுத்தாமல் உரை நிகழ்த்தக்கூடிய ஒருவரை நான் அதுவரை கண்டதில்லை. அவர் ஆங்கிலத்தில் பேசினார். வார்த்தைகள் நீர் வீழ்ச்சி போல வந்து விழுந்தன. ஆனால் அவர் முழுக்க முழுக்க ஒரு திரிபுவாதி. பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்படும் வரை அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரும் தீங்கிழைத் தார். ஆனால் இதனைப் பின்னர்தான் நான் உணர்ந்தேன். இலங்கை அரசியல் பற்றி அவர் என்னுடன் தனியாகப் பேசினார். அவரை நான் மீண்டும் 1956-ல் பீக்கிங்கில் சந்தித்தேன். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 8-வது மாநாட்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்று பிரதிநிதிகளில் ஒருவராக அவர் வந்திருந்தார். பம்பாய் மூலம் நான் இலங்கை திரும்பினேன். வழியில் ஆக்ராவில் பிரசித்தி பெற்ற தாஜ்மகாலைப் பார்த்தேன்.

இதற்கிடையில், இலங்கையில் 1940-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐக்கிய சோஷலிசக் கட்சியும் லங்கா சம சமாஜக் கட்சியும் தடை செய்யப்பட்டன. லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர் களில் சிலர் போகம்பரவில் தடைக் காவலில் வைக்கப்பட்டனர். கம்யூனிஸ்ட் தலைவர்களில் சிலருக்கு எதிராக அரசாங்க விரோதக் குற்றச்சாட்டில் வழக்கு போடப்பட்டது. எஸ். ஏ. விக்கிரசிங்க, யசோதிஸ் முதலிய கம்யூனிஸ்டுகள் சிறைத்தண்டனை அனுபவித் தார்கள். டெய்லி மிறர் பத்திரிகையில் றொடோட் குணவர்தனா எழுதிய நினைவுக் குறிப்புகளின்படி இந்தியா, பர்மா, இலங்கை போல்ஷ்விக்—லெனினிசக் கட்சியின் முதலாவது மாநாடு கண்டியில் நடைபெற்றது. இந்தியாவிலிருந்தும் சில ட்ரொஸ்கியவாதிகள் இந்த மாநாட்டுக்கு வந்திருந்தனர். சம சமாஜக் கட்சித் தலைவர்கள் சிறை அதிகாரிகளின் அனுமதியுடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். காலையில் அவர்கள் சிறைக்குத் திரும்புவார்கள் என்ற உத்தரவாதத்தின் பேரிலேயே இந்த அனுமதி கிடைத்தது — லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்களும் அப்படியே நடந்து கொண்டார்கள்.



1942-ல் லங்கா சம சமாஜக் கட்சியின் தடைக் காவலில் வைக்கப்பட்ட தலைவர்கள் சிறைக்காவலர் ஒருவரின் உதவியுடன் சிறையை உடைத்து இந்தியாவிற்குத் தப்பிச் சென்றார்கள். இந்தியாவில் அவர்கள் இந்தியா, பர்மா, இலங்கை ஆகியவற்றுக் கான போல்ஷ்விக் — லெனினிசக் கட்சியில் இந்திய ட்ரொஸ்கிய வாதிகளுடன் சேர்ந்து வேலை செய்தார்கள் என அறியப்பட்டது. அவர்கள் தலைமறைவாகவே வேலை செய்ய நேரிட்டது. சுமார் ஓராண்டுக்குப் பின்னர் லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்கள் இந்தியாவிற் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப் பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அப்பொழுது பிலிப் குணவர்தனாவும் என். எம். பெறேராவும் சேர்ந்து பழைய லங்கா சம சமாஜக் கட்சியைப் புதுப்பித்தார்கள். கொல்வின் ஆர். டி. சில்வாவும் லெஸ்லி குணவர்தனாவும் இந்தியா, பர்மா, இலங்கை ஆகியவற்றின் போல்ஷ்விக் — லெனினிசக் கட்சி என்ற பிரமையைத் தொடர்ந்தார்கள்.

கம்யூனிஸ்டுகள், சோவியத் யூனியன் இரண்டாம் உலக யுத்தத்திற் பிரவேசித்ததும் நேச நாடுகளுடன் கூட்டணி சேர்ந்தது மான சாதகமான சர்வதேசிய நிலைமையைப் பயன்படுத்தி வெளியே வந்து ஓரளவு பகிரங்கமாக வேலை செய்ய ஆரம்பித் தார்கள். 'சோவியத் யூனியனின் நண்பர்கள்' என்ற ஸ்தாபனத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்கள் ஆரம்பித்தார்கள். சோவியத் யூனியனின் சாதனைகளை இந்த ஸ்தாபனம் நன்கு பிரச்சாரம் செய்தது; பொதுவான பாசிசத்துக்கு எதிரான பிரச்சாரத்திலும் ஈடுபட்டது. மாறிய சர்வ தேசிய நிலைமையில் சோவியத் யூனியனின் பாத்திரத்தை நன்கு விளம்பரப்படுத்தியது. நான் இந்த ஸ்தாபனத்தில் ஊக்கத்துடன் செயற்பட்டேன். ''நட்சத்திரம் சிவப்பாகின்றது'' என்ற முற்போக்கு நாடகத்தை பல்கலைக் கழக நாடக சங்கத்தால் நடிக்க வைத்து அதில் கிடைத்த பணத்தை சோவியத் யூனியனுக்கு உதவியாக அனுப்பச் செய்தது என் மனதில் ஞாபகமாக இருக்கிறது.

1943-ம் ஆண்டு ஜுலை 3-ம் திகதி ஐக்கிய சோஷலிசக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் அக்கட்சியை உத்தியோகபூர்வமாகக் கலைத்துவிட்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தனர். எமது கட்சி மூன்றாவது கம்யூனிச அகிலம் கலைக்கப்பட்ட பின்னர் ஸ்தாபிக்கப்பட்டது. கம்யூனிச அகிலத்தின் சட்டதிட்டத்தின்படி சகல கட்சிகளும் பல்வேறு நாடுகளிலுள்ள கிளைகளாகும். மக்கள் நினைப்பது போல இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அப்பொழுது எந்த சர்வதேசியத் தொடர்பும் இருக்கவில்லை. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தொடர்பிருக்கவில்லை; சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தொடர்பிருக்கவில்லை; பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன்தான் அதற்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இந்த இரண்டு கட்சிகளினதும் தவறான, திரிபுவாத சிந்தனைகளும் கொள்கைகளும் எமது கட்சியைப் பெரிதும் பாதித்தன. 1956-ல் தான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக் கோஷ்டி ஒன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 8-வது மாநாட்டில் கலந்து கொண்டது. இந்த மாநாட்டில்தான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முதல் தடவையாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக் கோஷ்டியுடன் தொடர்பு வைத்தது. இந்த வேளையில் ஸ்டாலின் இறந்து விட்டார். குருச்சேவ் ஒரு அரண்மனைப் புரட்சியை நடத்தி சோவியத் கட்சியைத் துரோகத்தனமான நவீன திரிபுவாதப் பாதையில் எடுத்துச் சென்றார். இதற்குப் பின்னர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் கட்சிக்கும் இடையிலான உறவுகள் அதிகரித்தன. இறுதியிற் சோவியத் திரிபுவாத வட்டத்துக்குள் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பூரணமாக விழுந்தது. அது சோவியத் திரிபுவாத எஜமான்களின் விசுவாசமான கருவியாகியது.

கட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன் நான் எனது இறுதிப் பரிட்சையை எழுதினேன். கட்சி ஸ்தாபிக்கப்பட்ட



இரண்டு வாரங்களின் பின்னர் இப்பொழுது குமார ரத்னம் வீதி என்று கூறப்படும் சோட்ஸ் வீதியின் இல. 124-ல் அமைந்திருந்த இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் காரியாலயத்தில் முழு நேர ஊழியராக வேலை செய்தேன். நான் கட்சியின் முழு நேர ஊழியனாவது என்ற தீர்மானம் எனது இறுதிப் பரிட்சைக்கு இரண்டு வாரங்களுக்கு முன் எடுக்கப்பட்டது. ஓராண்டுக்கு முன் பல்கலைக் கழகத்தில் படிப்பை முடித்து விட்டு முழு நேர ஊழியனாகிய ஒரு தோழருடன் நடத்திய கலந்துரையாடல் மூலமே நான் இந்த முடிவை எடுத்தேன். பட்டம் பெற்ற பின் என்ன செய்ய யோசிக்கிறீர்கள் என்று அவர் என்னிடம் கேட்டார். நான் அரசியல் வேலை செய்ய விரும்புகின்றபடியால், ஒரு ஆசிரியனாக விரும்புகின்றேன் என்று நான் கூறினேன். ''நீங்கள் ஒரு கட்சி முழு நேர ஊழியனாக வேலை செய்தால் என்ன?'' என்று அவர் கேட்டார். நான் எப்படி ஜீவிப்பது என்று அவரைக் கேட்டேன். கட்சி மாதந்தம் 60 ரூபா அலவன்ஸ் தரும் என்று அவர் கூறினார். அப்பொழுதே நான் அதை ஏற்றுக் கொண்டேன். நான் ஒரு பட்டதாரி என்ற முறையில் பதவி ஏற்றிருந்தால் மாதந்தம் 400 ரூபா சம்பளமாக நான் பெற்றிருப்பேன். இந்த முடிவை நான் எடுத்த வேகத்தை ஒட்டி நான் சில வேளைகளில் ஆச்சரியப்படுவதுண்டு. நான் அதை அவ்வளவு இலேசாக ஏற்றுக் கொண்டதற்கு அந்த எண்ணம் என் மனதில் நீண்டகாலமாக இருந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அந்த முடிவை ஒட்டி நான் என்னுடைய வாழ்வில் என்றுமே கவலைப் பட்டதில்லை.

இயல்பாகவே என்னுடைய பெற்றோர் இந்த முடிவை விரும்பவில்லை. பெருந்தோட்டம் ஒன்றில் ரப்பர் மேக்கராகப் பணி புரிந்தார் எனது தந்தையார். எனது பெற்றோர் பானையைச் சுண்டி எடுத்துத்தான் எனது பல்கலைக் கழகக் கல்விக்குப் பணம் செலவழித்தார்கள். சிவில் வேலையில் நான் சேர வேண்டும், அல்லது உயர் சம்பளப் பதவி ஒன்றில் சேர வேண்டும் என்று விரும்பினார்கள். அப்பொழுது பட்டதாரிகள் வேலைப் பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. தமது கடைசி நாட்களைச் சந்தோஷமாகக் கழிக்க நான் உதவி செய்வேன் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். என்னுடைய முடிவைக் கேட்டு அவர்கள் தத்துவ ரீதியில் பதில் அளித்தார்கள். ''உனக்கு நல்ல கல்வியைத் தருவது எமது கடமை. நீ கல்வியைக் கொண்டு என்ன செய்கின்றாய் என்பது உன்னுடைய விஷயம்'' என்று எனது தாயார் கூறினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''வயோதிப காலத்தில் நோயாளியாகினால் நீ என்ன செய்வாய்?'' என்று மட்டும் அவர் கேட்டார். ''அப்பொழுது சோஷலிசம் வந்து விடும்'' என்று நான் நம்பிக்கையுடன் பதில் அளித்தேன். இருப்பினும் அனுதாபமும் நல்லெண்ணமும் உள்ள வசதியான சில நண்பர்களின் உதவியால் எனது தந்தையார் இளைப்பாறிய பின் நான் ஒரு குறைந்தபட்சப் பணத்தை எனது பெற்றோருக்கு அனுப்பி வந்தேன்.

சி.டி.யு.எப்.-ல் (இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம்) முழு நேர ஊழியனாக வேலை செய்ய ஆரம்பித்தபோது இறுதிப் பரிட்சையில் சித்தி அடைந்த செய்தி எனக்குக் கிடைத்தது. சி.டி.யு.எப். இன் ஆரம்ப காலத்தில் பல தொழிற்சாலைத் தொழிலாளர் சங்கங்கள் அதனுடன் இணைந்திருந்தன. இவை தனியொரு தொழிற்சாலையில் உள்ள தொழிலாளரின் நலனைக் கவனிக்கும் தொழிற்சங்கங்கள் ஆகும். இதற்கு ஒரு உதாரணம் புறாக்பெண்ட் தொழிலாளர் சங்கம். பிரித்தானிய தொழிற்சங்க காங்கிரசை பின்பற்றி இந்த தனியான சங்கங்கள் தொழில்துறைச் சங்கங்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்டன. இவ்வாறுதான் ஒரு தொழிலுக்கு அல்லது வர்த்தகத்துக்கு ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. இந்தக் கோட்பாட்டைக் கடைப்பிடித்த முதலாவது தொழிற்சங்க சம்மேளனம் சி.டி.யு.எப். ஆகும். இவ்வாறுதான் அகில இலங்கை தேயிலை, ரப்பர் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. தேயிலை, ரப்பர் ஏற்றுமதி வர்த்தகத்தில் உள்ள சகல தொழிலாளர்களினது நலன்களை அது கவனித்தது. அதுபோலவே என்ஜினியரிங் துறையைச் சேர்ந்தவர்களுக்காக ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. இப்படியே பிற. நான் அகில இலங்கை தேயிலை, ரப்பர் தொழிலாளர் சங்கத்தின் கூட்டுச் செயலாளராக நியமிக்கப்பட்டேன். தேயிலை, ரப்பர் ஏற்றுமதி வர்த்தகம் யுத்த முயற்சிக்கு மிக முக்கியமாகியது. அத்துடன் அப்பொழுது தொழிலாளர் பற்றாக்குறையும் இருந்தபடியால் எமது பேரம் பேசும் நிலைமை பலமானதாக இருந்தது.

1942-ல் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் அரசாங்கம் வேலை நிறுத்தங்கள், கதவடைப்பு ஆகியவற்றைத் தவிர்க்கும் உத்தரவு ஒன்றை நிறைவேற்றியது. இதன் மூலம் அத்தியாவசிய சேவைகளில் வேலை நிறுத்தங்கள் தடைசெய்யப்பட்டன. அதுபோலவே முதலாளிகள் கதவடைப்புச் செய்வதும் தடுக்கப்பட்டது. தொழிற் துறைப் பிணக்குகள் அனைத்தும் விசேஷ நீதிமன்றங்களால் மத்தியட்சம் செய்து தீர்க்கப்பட்டன. அத்துடன் அந்தத் தொழிலில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சராசரியான நிபந்தனைகள்,



நிலைமைகளுக்குக் குறைவான முறையில் எந்த முதலாளியும் தொழிலாளர்களை நடத்தக் கூடாது எனவும் வகுக்கப்பட்டது. சி.டி.யு.எப். தவிர்க்க முடியாதவிடத்து வேலை நிறுத்தத்தையும் அவசரச் சேவைச் சட்டத்தின் கீழான மத்தியட்ச முறையையும் விவேகமான முறையில் பயன்படுத்தி தொழிலாளர்களின் நிலைமையைச் சிறப்பாக்கியது.

அகில இலங்கை தேயிலை ரப்பர் தொழிலாளர் சங்கம் 1943-ல் ஹாரிசன் அன்ட் கிறொஸ்பீல்ட் லிமிடெட்டுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்தது. அப்பொழுது இந்தக் கம்பெனி முக்கியமான தேயிலை, ரப்பர் ஏற்றுமதியாளராக இருந்தது. 1943 மே 18-ம் திகதி அமுலுக்கு வந்த இந்த உடன்படிக்கையின்படி தேர்ச்சியற்ற ஆண் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச நாட் சம்பளம் 90 சதமாக உயர்த்தப்பட்டது. தேர்ச்சியற்ற பெண் தொழிலாளர்களுக்கான சம்பளம் 70 சதமாக உயர்த்தப்பட்டது. அடிப்படைச் சம்பளத்தில் 40 சதவீதமான பஞ்சப்படியும் வழங்கப்பட்டது. இலவச மதிய போசனம் வழங்கவும் முதலாளிகள் உடன்பட்டனர். ஹரிசன் அன்ட் கிறொஸ்பீல்டில் சி.டி.யு.எப். முதலில் பெற்ற இந்த இலவச மதிய போசனம் பின்னர் தேயிலை ரப்பர் ஏற்றுமதித் தொழிலிலும் எஞ்ஜினியரிங் தொழிலிலும் இருந்த அனைத்துத் தொழிற்சாலைகளிலும் வழங்கப்பட்டது. யுத்தத்தின் விளைவாக உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்த அக்காலத்தில் இலவச மதிய போசனம் தொழிலாளர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது.

28-4-1944-லிலும் 28-8-1945-லிலும் விசேஷ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளின்படி இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் மேலும் சிறப்பாகின. ஹாரிசன் அன்ட் கிறொஸ்பீல்ட் லிமிடெட்டின் நிபந்தனைகளும் நிலைமைகளும் முழு தேயிலை, ரப்பர் ஏற்றுமதி வர்த்தகத் தொழிற்சாலைகளிலும் அமுலாக்கப்பட்டன. இத்துறையிலுள்ள தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள் ஹாரிசன் அன்ட் கிறொஸ்பீல்ட் லிமிடெட்டில் நாம் வென்றெடுத்த கோரிக்கைகளைப் பெறுவதற்காக எமது சம்மேளனத்தில் வந்து சேர்ந்தனர். விரைவில் அகில இலங்கை தேயிலை ரப்பர் தொழிலாளர் சங்கம் கொழும்பிலுள்ள மிகப் பெரிய சங்கங்களில் ஒன்றாகியது.

சில பிடிவாதமான முதலாளிகளுக்கு எதிராக நாம் வேலை நிறுத்தம் செய்வோம் என்ற அச்சுறுத்தலை செய்ய வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் சட்டத்தின்படி நடக்க வேண்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்ததால் இறுதியில் நாமே வெற்றி பெற்றோம். அப்பொழுது இந்த முதலாளிகளில் அநேகர் பிரித்தானியகாரர். ஆகவே ஆங்கிலக் கல்வி பெற்ற பட்டதாரி என்ற முறையில் இக்காலத்தில் நடைபெற்ற எண்ணற்ற பேச்சு வார்த்தைகளில் என்னுடைய சேவை மிக முக்கியமானதாக அமைந்தது. சி.டி.யு.எப். தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்ச 90 சத சம்பளத்தைப் பெற்ற பின்னரே அரசாங்கம் அதன் தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கு இந்த சம்பளத்தை வழங்கியது.

அடுத்த குறைந்தபட்ச சம்பளத்தின் உயர்வு சம்பள சபைகளின் ஸ்தாபகத்துடன் கிடைத்தது. 1944 ஆகஸ்டில் அரசாங்கம் சம்பள சபைகளை நியமிக்க ஆரம்பித்தது. எஞ்ஜினியரிங் தொழில் தேயிலை, ரப்பர் ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவற்றில்தான் முதலாவது சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்தச் சபைகளில் தொழிலாளர்களினதும் முதலாளிகளினதும் சமமான தொகை பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் அதில் இருந்தார். தொழில் கமிஷனர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர் இச்சபையின் தலைவராக இருந்தார். தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அதன் செயலாளராக இருந்தார். முதலாவது சம்பள சபையில் தொழிலாளரின் 3 பிரதிநிதிகளும் முதலாளிகளின் 3 பிரதிநிதிகளும் இருந்தார்கள். தேயிலை, ரப்பர் ஏற்றுமதித் துறைகளுக்கான சம்பள சபைகளின் மூன்று தொழிலாளர் பிரதிநிதிகளில் இருவரை நியமிக்கும்படி சி.டி.யு.எப்.-பைக் கேட்டார்கள். இத்துறையில் உள்ள தொழிலாளர்களில் பெரும்பாலோனோர் சி.டி.யு.எப். தொழிற்சங்கங்களில் இருந்ததுதான் இதற்குக் காரணம். ஏ. வைத்தியலிங்கமும் நானும் சி.டி.யு.எப். பிரதிநிதிகளாக இருந்தோம். மற்ற பிரதிநிதி திரு. ஏ. குணசிங்கா ஆவார். திரு. குணசிங்கா அப்பொழுது தொழிற்சங்க இயக்கத்தில் செல்வாக்கை இழந்து கொண்டிருந்தார்; தொழிலாளர்களுக்கு துரோகம் செய்ய ஆரம்பித்து விட்டார். சபைக் கூட்டங்களுக்கு அவர் தயாரிப்பு செய்து ஒருபோதும் வந்ததில்லை. ஒரு கூட்டத்தில் அவர் கதிரையில் சாய்ந்து, நிகழ்ச்சி நிரல் என்ன என்று தமிழில் கேட்டது எனது நினைவில் இருக்கின்றது.

சம்பள சபை முடிவுகள் அறிவியல் ரீதியானவை அல்லது ஓரளவு அறிவியல் ரீதியானவை என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இது உண்மையில்லை, அவை அநேகமாக நியமன அங்கத்தவரால் செய்யப்பட்ட சமரசம் அல்லது சரிப்படுத்தலாகும். ஒரு மத்தியட்



சத்தை ஒத்தது அது. சம்பள சபையின் முதலாவது முடிவு எப்படி செய்யப்பட்டது என்பதைப் பார்த்தால் மேலே சொன்னது புரியும். தேயிலை, ரப்பர் ஏற்றுமதித் துறையின் சம்பள சபைகளின் முதலாவது கூட்டத்தில் சி.டி.யு.எப். பிரதிநிதிகள் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ஒரு ரூபா அறுபது சதம் சம்பளம் என்ற கோரிக்கையைப் பிரேரித்தார்கள். அப்பொழுது கொடுக்கப்பட்ட 90 சத சம்பளத்தை முதலாளிகளின் பிரதிநிதிகள் பிரேரித்தார்கள். நியமன அங்கத்தவர் எந்தத் தரத்துக்கும் ஆதரவாக வாக்களிக்காததால் இழுபறி நிலைமை ஒன்று ஏற்பட்டது அப்பொழுது டாக்டர் டாஸ் குப்தா நியமன அங்கத்தவராக இருந்தார். இவர் பல்கலைக்கழகத்தில் என்னுடைய பொருளாதாரப் பேராசிரியராக இருந்தவர். அவர் ஒரு நாளைக்கு ஒரு ரூபா இருபத்து நாலு சதம் என்ற சமரச யோசனையை முன்வைத்தார். இது 34 சத உயர்வு, நாங்கள் கேட்ட 70 சத உயர்வில் அரைவாசி. தொழிலாளர் பிரதிநிதிகள் அவருடைய ஆலோசனையை ஆதரித்தார்கள். ஏனென்றால் உள்ள நிலைமையிலும் பார்க்க அது ஒரு முன்னேற்றமே. வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்புக்கு ஈடாக விசேஷப்படி ஒன்றை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது வாழ்க்கைச் செலவு புள்ளி 200 ஆக இருந்தது. விசேஷ அலவன்ஸ் 1 ரூபா 24 சதம் கொடுக்கப்பட வேண்டும் என்று சி.டி.யு.எப். பிரதிநிதிகள் பிரேரித்தார்கள். அப்படி என்றால் வாழ்க்கைச் செலவின் உயர்வுக்கு 100 சதவீத ஈடு கிடைத்திருக்கும். மீண்டும் முந்திய இழுபறி நிலைமை ஏற்பட்டது. டாக்டர் டாஸ் குப்தா 62 சதம் என்று ஆலோசனை முன்வைத்தார். நாங்கள் கேட்டதிலும் பார்க்க அரைவாசி. இதிலிருந்து டாக்டர் டாஸ் குப்தா ஒரு மத்தியஸ்தப் பாத்திரம் வகித்தது புரியும்.

ஒரு வழமையான வேலை நாள் 8 மணி நேரத்தைக் கொண்டது எனவும் அதற்குக் கூடுதலாக வேலை செய்யும் மணித்தியாலங்களுக்கு ஒன்றரை மடங்கு மேலதிக நேரச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் சம்பள சபை தீர்மானித்தது. வருடாந்தர இரண்டு வார கால விடுமுறையையும் அது வழங்கியது. சம்பள சபைகள் இந்த முடிவுகளை எடுத்த பின்னர் தான் கொலின்ஸ் — குணதிலக சம்பளக் கமிஷன் அரசாங்கத்தில் உள்ள தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் சம்பளத்தை 1/24 சதமாக உயர்த்தியது. இவ்வாறு அடுத்த சம்பளக் கமிஷன் அதனை உயர்த்தும் வரை ரூபா 1/24 சதம் தேசிய குறைந்தபட்ச சம்பளமாக இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னர் நான் வேறு பல சம்பள சபைகளின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டேன். நான் இன்னும் சில சம்பள சபைகளின் உறுப்பினராக இருக்கின்றேன். முதலாவது சம்பள சபைகளின் உறுப்பினராக இருந்து இன்றுவரை அவற்றின் உறுப்பினராக இருப்பவர் நான் ஒருவனே என்று நினைக்கிறேன். 40 ஆண்டுகளுக்கு மேலான காலம் நான் சம்பள சபைகளின் உறுப்பினராக இருந்து வருகின்றேன். தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரித்து அவர்களின் நிலைமைகளையும் நிபந்தனைகளையும் விருத்தி செய்யவும் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரிக்கவும் நாம் வேறு எந்த தொழிற்சங்க மத்திய ஸ்தாபனத்தையும் விட சம்பள சபையை நன்கு பயன்படுத்தினோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது அடிப்படை சீர்திருத்தவாத வேலை.

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவுக்காலத்தில் சி.டி.யு.எப். இலங்கையில் தோட்டத் தொழிற்சங்கங்கள் தவிர்த்த மற்ற தொழிற்சங்கங்களின் மிகப் பெரிய கேந்திரமாகியது. நான் முன்னர் கூறியவாறு, தவிர்க்க முடியாத இடத்து வேலை நிறுத்தங்களை நடத்தியும் மற்ற வேளைகளில் மத்தியட்ச சபை சம்பள சபை ஆகியவற்றை விவேகத்துடன் பயன்படுத்தியுமே நாம் இந்த நிலைமையை அடைந்தோம். இந்த உச்ச கட்ட வளர்ச்சிக் காலத்தில் சி.டி.யு.எப். 1946 ஜனவரியில் விசேஷ மாநாடு ஒன்றை நடத்தியது. கொழும்பில் பிரைஸ் பூங்காவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரசின் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இந்த வேளையில், இரண்டாவது அரசு சபை நிறைவேற்றிய சுதந்திரத் தீர்மானத்துக்கு இணங்க என்ன சீர்திருத்தங்களை வழங்குவது என்பதைப் பற்றித் தீர்மானிக்க இங்கிலாந்து அரசு சோல்பரி கமிஷனை இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்தது. சோல்பரி கமிஷன் இலங்கைக்கு வருவதை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. அதில் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொண்டது. ஐக்கியப்பட்டு பூரண சுதந்திரத்தைக் கோரும்படியும் கமிஷனைப் பகிஷ்கரிக்கும்படியும் மக்களை அது கேட்டுக் கொண்டது. சி.டி.யு.எப் -பின் விசேஷ மாநாடு இக்கோரிக்கையின் பேரணியாக அமைந்தது. பூரண சுதந்திர முழக்கம் உரத்துக் கேட்டது. விசேஷ மாநாடு பெருவெற்றி பெற்றது. அப்பொழுது இலங்கைத் தொழிற்சங்க இயக்கத்தில் சி.டி.யு.எப். வகித்த தலைமைப் பாத்திரத்தை அது காட்டியது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலமும்



பொதுக் கூட்டமும் அதுகால வரை நடைபெற்றவற்றில் மிகப் பெரியனவாகும்.

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் பிரதிநிதிகள் இந்தியா திரும்பியபோது சென்னையில் நடைபெற்ற அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் சி.டி.யு.எப்.-பின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ள நான் அவர்களுடன் சென்றேன். அது ஒரு உற்சாகமான அனுபவம். அப்பொழுது அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் இந்தியாவின் தலைமைத் தொழிற்சங்க கேந்திரமாக இருந்தது. இன்னும் அதில் பிளவு ஏற்படவில்லை. கம்யூனிஸ்டுகள் அதற்குத் தலைமை தாங்கினார்கள். கம்யூனிஸ்ட் அல்லாதவர்களும் அதில் அங்கம் வகித்தார்கள். பின்னர் இந்தியாவின் ஜனாதிபதியான வி. வி. கிரி அப்பொழுது அதன் தலைவராக இருந்தார். இந்திய தேசிய காங்கிரசின் முதுபெரும் தலைவரும் புகழ்பெற்ற கவிஞருமான சரோஜினி நாயுடு இறுதிப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். பெருந்தொகையான பிரதிநிதிகள் கம்யூனிஸ்டுகள். மாநாட்டுக் கூட்டங்களுக்கு இடையே கொள்கை தந்திரங்கள் பற்றி விவாதிக்க கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளின் தனியான கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் கலந்து கொள்ள என்னை அனுமதித்தார்கள். 600-க்கும் அதிகமான பேர் ஒரு கூட்டத்தில் இருந்தார்கள். இவை குழுக் கூட்டங்கள் என அழைக்கப்பட்டன. அங்கேதான் நான் முதல் தடவையாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பலரைச் சந்தித்தேன். தொழிற்சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் பலத்தைக் கண்டு நான் பெரிதும் வியந்தேன். ஆனால் தவறான கொள்கைகளாலும் தந்திரங்களாலும் இவை அனைத்தும் விரயமாக்கப்பட்டன. விரைவில் இந்தியத் தொழிற்சங்க இயக்கம் பல கூறுகளாகியது.

யுத்த நாட்களில் தொழிற்சங்க இயக்கங்கள் துரிதமாக வளர்ந்ததற்கான ஒரு காரணத்தை நாம் கவனிக்க வேண்டும். யுத்தத்துக்கு முந்திய காலத்தில் தீவிர வேலையின்மை நிலவியது என்பதை நான் நினைவுகூர வேண்டும். அரசாங்கத்தில் வேலை பார்த்த இந்திய குடிவரவுத் தொழிலாளர்களை நாட்டுக்கு (இந்தியாவுக்கு) அனுப்ப வேண்டும் என்று இரண்டாவது அரசு சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அரசு சபையில் இருந்த சம சமாஜ இரட்டையர்கள் கூட இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால் யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டபின் குறிப்பாக மவுண்ட்பேட்டன் கண்டியில் தமது அலுவலகத்தை அமைத்தபின், விஷயங்கள் தீவிரமாக மாறின. ஆயிரக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கணக்கான காமன்வெல்த் துருப்புகள் இலங்கைக்குள் வந்து குவிந்தன. அரசாங்கத்தின் செலவு அதிகரித்தது. இதனால் வேலையின்மை மறைந்தது. மக்களுக்கு ஏதோ தொழில் கிடைத்தது. சில வேளைகளில் ஆட்கள் போதாமற்கூட இருந் தனர். இதனால் தொழிலாளரின் பேரம் பேசும் சக்தி அதிகரித்தது. இதனால் தொழிற்சங்கங்கள் வளர்ந்தன. யுத்தத்தின் முடிவில் இந்த நிலைமை மாறியது. துருப்புகள் திருப்பி அழைக்கப்பட்டன. அரசாங்கச் செலவு நின்று விட்டது.

# 4. யுத்தத்துக்குப் பிந்திய காலம்

1945 மே மாதத்தில் ஐரோப்பாவில் யுத்தம் முடிவடைந்தது. சோவியத் செஞ்சேனை துருப்புகள் பெர்லினுக்கு விரைந்து சென்று ரெயிச்ராக் என்ற ஜெர்மன் பாராளுமன்றத்துக்கு மேல் செங்கொடி யைப் பறக்க விட்டன. 1945 ஆகஸ்டில் ஜப்பான் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் ஆசியாவிலும் யுத்தம் முடிவடைந்தது. யுத்த முடிவின் பிந்திய மாதங்களில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி உலக தொழிற்சங்க சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டதாகும். யுத்தத்தின் வெற்றியில் தொழிலாளர்கள் பெரும் பாத்திரம் வகித் தார்கள். யுத்தத்தை வென்றெடுத்த பாசிச — எதிர்ப்புச் சக்தி களின் ஐக்கியத்தைப் பேணிக்காக்குமுகமாக உலகந் தழுவிய தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று பெரிதும் உணரப்பட்டது.பாசிசம் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்கு இது ஒரு உத்தரவாதம் என்று கருதப்பட்டது. உலகத்தின் அனைத்துத் தொழிற் சங்கங்களினது மாநாடு ஒன்றைக் கூட்டுவது சர்வதேசிய ரீதியில் பாராட்டப்பட்டது.

யுத்தம் முடிவதற்குமுன் லண்டனில் ஒரு மாநாடு ஏற்கனவே நடத்தப்பட்டது. இப்பொழுது பூரணமான மாநாடு பாரிசில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடைபெற இருந்தது. எமது தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்புக் கிடைத்தது. எஸ். ஏ. விக்கிரமசிங்காவையும், என்னையும் இந்த மாநாட்டுக்கான பிரதிநிதிகளாகத் தெரிவு செய்திருந்தார்கள். யுத்தம் அப்பொழுது தான் முடிவடைந்திருந்தது. போக்குவரத்து இன்னும் பூரணமாக மீட்கப்படவில்லை. இதனால் ஐரோப்பாவுக்கான விமானங்களில் இடம்பிடிப்பது கஷ்டமாக இருந்தது. விமானங்களில் எல்லாம் ராணுவ ஆட்கள் பயணம் செய்தார்கள். இருப்பினும் இந்தியாவின் பகுதியாக இருந்த கராச்சிக்கு நாம் விமானம் மூலம் சென்றோம். அங்கு ஒரு வார காலம் தங்கியிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் விமானம் ஒன்றில் இடம்பிடித்தோம். அந்த நாட்களில் லண்டனுக்கு நேரடி விமானம் கிடையாது. எமது விமானம் இரவில் கெய்ரோவில் தங்கியது. இதனால் பிரமிட்டுகளை நாம் பார்க்க முடிந்தது. அடுத்தநாள் நாம் லண்டனை அடைந்து சில நாட்களின் பின் புகையிரத மூலம் பாரிஸ் சென்றடைந்தோம். ஆங்கில கால்வாயைப் படகில் கடந்தபோது கடற்பயண நோயை நான் முதல் தடவையாக அனுபவித்தேன்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாரிசை நாம் சென்றடைந்தோம் பாரிசிலுள்ள கருநோட் புகையிரத நிலையத்தை நாம் அடைந்த போது அங்கு போட்டர்களும் இருக்கவில்லை. டாக்சிகளும் இருக்கவில்லை. நாம் சூட்கேசுகளைத் தூக்கிக் கொண்டு எமக்கான ஹோட்டல்களுக்குச் சென்றோம். வசதியான ஹோட்டல். ஆனால் மின்தடை அடிக்கடி ஏற்பட்டது. ஒருநாள் நான் 'லிப்ட்' ஒன்றில் இருந்தபோது மின்தடை ஏற்பட்டு நாம் லிப்டிலிருந்து ஏறித் தப்பினோம். ஹோட்டலில் நல்ல கோப்பி, தேநீரும் கிடையாது. மூலிகைகளைக் கொண்டு தேநீர் தயாரித்த சாப்பாட்டு விடுதி ஒன்றை இந்தியப் பிரதிநிதி ஒருவர் கண்டு பிடித்தார். தேநீருக்காக அந்த விடுதிக்கு நாம் சென்று சாப்பிட்டோம். ஆனால் யுத்தம் முடிந்து 4 மாதங்கள் தான் ஆகியது என்பதையும் பாரிஸ் நீண்டகாலமாக ஜெர்மன் இடங் கொள்ளலில் இருந்தது என்பதையும் யோசிக்கும்போது இது பெரிய பிரச்சினை ஆகாது.

மாநாடு பெரிதும் வெற்றிகரமாக அமைந்தது. சீனா, ஆஸ்திரேலியா, லத்தீன் அமெரிக்கா ஆகியன உட்படப் பல நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். குசென்றசோவ் சோவியத் பிரதிநிதிக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கினார். சோவியத் பிரதிநிதிகள் பேசியபோதெல்லாம் அமோக கைதட்டல்



கிடைத்தது. ஹிட்லரைத் தோற்கடிப்பதில் சோவியத் யூனியன் வகித்த பாத்திரத்துக்குக் கிடைத்த பாராட்டு அது. தொழிற்துறை ஸ்தாபனங்களின் காங்கிரசின் (சி.ஐ.ஓ.) அரசியல் செயல் கமிட்டியின் தலைவரான பிலிப் முர்ரே அமெரிக்கப் பிரதிநிதிக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கினார். ரூஸ்வெல்டுக்கு நெருங்கிய வராக இருந்த அவர் அப்பொழுது தொழிற்சங்க இயக்கத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகித்தார். அப்பொழுது அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கம் சி.ஐ.ஓ.வுக்கும் ஏ.எப்.எல்.லுக்கும் (அமெரிக்க தொழிற்சங்க சம்மேளனம்) இடையில் பிளவுபட்டு இருந்தது. இப்பொழுது அவை ஐக்கியப்பட்டுள்ளன. ஏ.எப்.எல். மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்தது.

பிரித்தானிய பிரதிநிதிக் கோஷ்டிக்கு பிரித்தானிய தொழிற் சங்க காங்கிரசின் (டி.யு.சி.) பொதுச் செயலாளரான சேர்வால்டர் சைற்றைன் தலைமை தாங்கினார். தென் அமெரிக்கப் பிரதிநிதிக் கோஷ்டிக்கு லொம்பாடோ ரெலேடானோவும் இந்தியப் பிரதிநிதிக் கோஷ்டிக்கு எஸ். ஏ. டாங்கேயும் தலைமை தாங்கினார்கள். சீனாவின் கொமிந்தாங்கிலிருந்து ஒரு பிரதிநிதி வந்திருந்தார். இவர் பின்னர் மக்கள் சீனக் குடியரசின் தபால் அமைச்சர் ஆனார். அவர் கராச்சியிலிருந்து லண்டன் வரை எங்களுடன் விமானத்திற் பயணம் செய்தார். சீனக் கம்யூனிஸ்டுகள் அமெரிக்கா வழியாகத் தமது பிரதிநிதியை அனுப்பியிருந்தார்கள். ஆனால் அவர் வழியில் விமான விபத்தில் மரணமானார். பிரெஞ்சுத் தொழிற்சங்க சம்மேளனம் (சி.ஜி.டி.) இத்தாலித் தொழிற்சங்க சம்மேளம் (சி.ஜி.ஐ.ஏ.எல்.) ஆகியனவும் பல பிரதிநிதிகளைக் கொண்டிருந்தன. பிரெஞ்சுத் தொழிற்சங்க சம்மேளனம் மாநாட்டை நடத்தி வேலைகளைக் கவனித்தது. பிரதிநிதிகள் பஸ் மூலம் பாரிசைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்லப் பட்டார்கள். பாரிசில் பேர் லாச்சேலை இடுகாட்டில் உள்ள (பாரிஸ்) கம்யூன் வீரர்களின் சுவருக்கும் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். இங்குதான் பாரிஸ் கம்யூனின் கடைசி பாதுகாவலர்கள் 1871-ல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மாநாடு உலகப் பிரசித்திபெற்ற ஈபெல் கோபுரத்தின் அண்மையில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

இந்த மாநாடு உலகத் தொழிற்சங்க சம்மேளனமாக அமைய தீர்மானித்தது. அதன் தலைமை அலுவலகம் பாரிசில் இருக்கும். ஆனால் நீண்டகாலம் பாரிசில் தலைமை அலுவலகம் இருக்க வில்லை. 1949-ற் இத்தாலிய மிலானில் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. அமெரிக்க,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரித்தானிய தொழிற்சங்கங்களும் அவற்றின் ஆதரவாளர்களும் சம்மேளனத்திலிருந்து விலகி அதைப் பிளவுபடுத்தினார்கள். இதற்குப் பின் பிரெஞ்சு அரசாங்கம் பாரிசிலிருந்து சம்மேளனத்தை வெளியேற்றிய பின் அது வியென்னாவிற்கு நகர்ந்தது. வியென்னாவிற் சோவியத் இடங்கொள்ளல் பகுதியில் அதன் தலைமை அலுவலகம் அமைந்தது. அப்பொழுது ஆஸ்திரியாவில் இன்னும் நேச சக்திகள் இடம் கொண்டிருந்தன. பெர்லினைப் போல வியென்னாவும் 4 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. ஆஸ்திரியாவுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு அது இறைமையைப் பெற்றபோது ஆஸ்திரியாவும் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தை வெளியேறும்படி கேட்டுக் கொண்டது. இறுதியிற் செக்கோஸ்லேவாக்கியாவின் தலைநகரான பிராக்கில் அதன் தலைமை அலுவலகத்தை அமைத்தது. இன்றுவரை அங்கேதான் தலைமை அலுவலகம் இருக்கின்றது.

இந்த உலக மாநாட்டில் பல பிரதிநிதிக் கோஷ்டிகளுக்கு இடையே வேறுபட்ட கருத்துகள் இருந்தபோதும் இறுதியிற் உடன்பாடு காணப்பட்டது. இதற்குக் காரணம் ஹிட்லரைத் தோற்கடிக்கும் பொதுநோக்கத்துக்காக நடைபெற்ற யுத்தம் அப்பொழுதுதான் முடிந்தது என்பதாக இருக்கலாம். பிரெஞ்சுத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரேரணையின் பேரில் பிரெஞ்சுப் போராட்ட இயக்கத்தின் ஒரு தலைவரான லூயிசயிலன்ஸ் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். இத்தாலியரான கியூசெப்பேடி விற்றோரியா தலைவராகினார். துணைத் தலைவர் பதவிகளை ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், தென்அமெரிக்கா, இந்தியா முதலியவற்றின் பிரதிநிதிகள் பெற்றுக் கொண்டார்கள். சகல தொழிற்சங்க சம்மேளனங்களினதும் பிரதிநிதிகள் பொதுசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். எஸ். ஏ. விக்கிரமசிங்கா இலங்கையிலிருந்து பொதுசபையின் முதல் உறுப்பினர் ஆகினார். பிரதேச அடிப்படையில் ஒரு நிர்வாகக் கமிட்டி தெரிவு செய்யப்பட்டது இந்தியாவும் இலங்கையும் ஒரு பிரதேசமாக அமைந்தன. இந்தியாவின் எஸ். ஏ. டாங்கே இதன் உறுப்பினராகவும் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா பதில் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பாரிசிலிருந்த சோவியத் தூதர் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கு அளித்த விருந்துபசாரத்தை குறிப்பிடாமற் இருக்கமுடியாது. வந்த பிரதிநிதிகளிற் பலர் யுத்தம் காரணமாக உணவும் பணமும் அரிதான அல்லது பங்கீட்டு முறையிற் விநியோகிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வந்திருந்தார்கள். இந்த நிலைமையிற் பாரிஸ் சோவியத் தூதரகத்திற் மாஸ்கோவிற் இருந்து கொண்டு வரப் பட்ட உணவும் மதுவும் தாராளமாகப் பரிமாற்றப்பட்டன. சில பிரதிநிதிகள் 'கபக்' 'கபக்'கென்று குடித்தார்கள். விரைவில் பலர் தரையிலும் மேசைக்குக் கீழும் இருந்தார்கள்.



மாநாட்டுக்குப் பின் நான் லண்டனுக்குத் திரும்பி இலங்கைக்கு வருவதற்குக் கப்பல் கிடைக்கும்வரை 3 மாத காலம் தங்கி இருந்தேன். அந்த ஆண்டின் டிசெம்பரில் உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனத்தின் முதலாவது மாநாடு லண்டனில் நடைபெற்றது. எமது சம்மேளனம் என்னைப் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டது. 1945-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி லண்டன் சோவியத் தூதரகத்தில் நடைபெற்ற மகத்தான அக்டோபர் புரட்சியைக் கொண்டாடும் விருந்துபசாரத்தில் நான் கலந்து கொண்டேன். சோவியத் வெளிநாட்டு அமைச்சர் விஷின்ஸ்கி இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டார். லண்டனில் தங்கியிருந்த மீதி நாட்களில் நான் பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கில் இருந்த பல தொழிலாளர் சபைகளில் உரை நிகழ்த்தினேன். ஹக்பி பொதுப் பாடசாலையின் சோஷலிச மாணவர் சங்கத்திலும் நான் உரை நிகழ்த்தினேன். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற் படித்துக் கொண்டிருந்த நண்பர் ஒருவரின் அழைப்பின் பேரில் அப்பல்கலைக் கழகத்துக்கும் வார இறுதியிற் சென்று வந்தேன். லண்டனில் மோசமான குளிர் இருந்தது. அங்கு மத்திய வெப்பமாக்கல் கிடையாது. நான் இரவுகளிற் பல கம்பளிகளால் போர்த்துக் கொண்டு படுத்தேன், விரிப்புகளுக்கு இடையிற் வெந்நீர் போத்தல் ஒன்றை வைத்தேன். உணவும் பங்கீட்டு முறையிற்தான் வழங்கப்பட்டது. உணவு விடுதிகளிற் ஒரே நேரத்தில் மூன்று வகைகளைத்தான் வழங்கமுடியும்.

லண்டனிற் இருந்தபோது பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சி ஒழுங்கு செய்த பல பொதுக்கூட்டங்களுக்கு நான் சென்றேன். இக்கட்சியின் பொதுச் செயலாளரான ஹரி பொலிஸ் சிறந்த சொற்பொழிவாளர். இக்கூட்டங்களிற் அவர் பேசுவதைக் கேட்கவே மக்கள் திரண்டிருந்தார்கள். ஒரு கூட்டத்தில் அவர் பேசிய பின்னர், கம்யூனிஸ்ட் கட்சியிற் சேரவிரும்புவோரைக் கை உயர்த்துமாறு தலைவர் கேட்டார். பின்னர் கை உயர்த்தியவர்களுக்கு விண்ணப்பப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆள் சேர்க்கும் இந்த முறையைக் கண்டு நான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிர்ச்சி அடைந்தேன். இந்த அளவுக்கு திரிபுவாத வேலை முறை கட்சிக்குள் ஊடுருவி இருந்தது. அவர்கள் கொன்சர்வேடிவ் தொழிற்கட்சிகளைப் போல வருடாந்தர மாநாடுகளை நடத்தினார்கள். டிசெம்பர் 28ஆம் திகதி நான் புகையிரதம் மூலம் கிளாஸ்கோ சென்று கப்பல் மூலம் நாடு திரும்பினேன்.

நாட்டில் யுத்தத்தின் முடிவு, மவுண்ட்பேட்டனும் மன்னருடைய துருப்புகளும் திரும்பியமை, மன்னர் செலவின் வாபஸ் ஆகியவற்றால் யுத்தத்தின்போது நிலவிய செயற்கைச் செழிப்பு முடிவுக்கு வந்தது. வேலையின்மை மீண்டும் தலைதூக்கியது. முதலாளிகள் முன்னர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட சலுகைகளை வாபஸ்பெற இந்த நிலைமையைப் பயன்படுத்தினார்கள். பாதுகாப்பு சட்டங்கள் வாபஸ் பெறப்பட்டதுடன் விசேஷ தொழிற் கோர்ட்டுகள் வழங்கிய யுத்த காலத் தீர்ப்புகள் இனிமேலும் சட்ட ரீதியானவையாக இருக்கவில்லை. முதலாளிகள் தொழிலாளர்களைக் குறைத்தார்கள். வேலையில் இருந்த தொழிலாளர்களுக்கு முழுவேலை கிடைக்கவில்லை.

மேலும் மோசமாக, தொழிற்சங்க இயக்கத்தில் பிளவுகள் ஏற்பட்டன. யுத்தத்தின் இறுதியில் லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். சி. டி. யு. எப். நன்கு ஸ்தாபிக்கப்பட்டிருப்பதையும் அதன் மூலம் கம்யூனிஸ்டுகள் கொழும்புத் தொழிலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் மீது இறுக்கமான பிடியைக் கொண்டிருப்பதையும் கண்டார்கள். லங்கா சம சமாஜக் கட்சியின் ஆரம்ப ஆண்டுகள் அக்கட்சி தொழிற் சங்க வேலையை சீர்திருத்தவாதம் என நிராகரித்திருந்தது. அது வெள்ளவத்தை ஆலையில் குணசிங்காவின் தலைமை வெற்றிகரமாகத் தோற்கடித்த போதும் இப்படிக் கருதியது. தோட்டத் தொழிலாளர்களுக்காக அது அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தையும் அமைத்திருந்தது. தொழிற்துறைப் பிணக்குகளை நிதானப்படுத்துவதற்காக தோட்டத் தொழிலிற் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் 1940 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 திகதி கைச்சாத்திடப்பட்ட 7 அம்ச உடன்படிக்கையில் இந்த சங்கமும் கைச்சாத்திட்டது. இப்பொழுது தொழிலாளர்களின் ஆதரவைப் பெற லங்கா சம சமாஜக் கட்சி சி.டி.யு.எப்.வுடன் போட்டிபோட வேண்டியிருந்தது. ஏற்கனவே இருந்த இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனக் கட்சியின் தொழிற் சங்கக்கேந்திரமாக அவர்கள் அமைத்து சீர்திருத்தவாத நெறிகளில் அதனைக் கட்டி அமைத்தார்கள். கம்யூனிஸ்டுகளின் தலைமை



யிலான சங்கம் இருந்த ஒவ்வொரு துறையிலும் அவர்கள் போட்டிச் சங்கம் ஒன்றை ஆரம்பித்தார்கள். இவ்வாறுதான் தொழிற்சங்க இயக்கத்திலான தற்கொலை ரீதியான பிளவு ஏற்பட்டது. இது பின்னர் தொழிலாளி வர்க்கத்தைப் பெரிதும் பாதித்தது. இப்பொழுது வேறு பல கட்சிகளும் அரங்கிற்கு வந்தபடியால் இந்தப் பிளவு மேலும் பெரிதாகியுள்ளது.

இலங்கையில் தொழிற்சங்கங்களின் ஸ்தாபனத்துக்கு முன் அரசியல் கட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டது துரதிருஷ்டவசமானது. இது 1931-ல் கிட்டத்தட்ட கேட்காமலே கிடைத்த சர்வ சன வாக்குரிமையால் ஏற்பட்டது. அப்பொழுது குணசிங்காவினுடையதைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும், தொழிற்சங்கமும் இருக்கவில்லை. சர்வ சன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட தேர்தல்களில் வாக்குப் பெறுவதற்கு அரசியல் கட்சிகளை அமைப்பது நல்லது என்று மக்கள் விரைவில் உணர்ந்தார்கள். தொழிலாளர்களைத் தொழிற்சங்கங்களில் ஸ்தாபனப்படுத்தி அவர்களுடைய பொருளாதார நலன்களுக்காக வாதாடுவது வாக்குகளைப் பெறுவதற்கு சிறந்த வழியாகப்பட்டது. ஆகவே ஒவ்வொரு அரசியற் கட்சியும் தமது அரசியற் கிளைகளாக தனியான தொழிற்சங்கங்களை ஸ்தாபித்தன. இன்று யூ.என்.பி., சிறீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி (மொழி அடிப்படையிலான தொழிலாளர் ஸ்தாபனம்) ஆகியன உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் அரசியல் கிளைகளாக தனியான தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

ஆனால் இங்கிலாந்தில் இதற்கு நேர் எதிர்மாறாக நடந்தது. அங்கு 19-ம் நூற்றாண்டின் இறுதியில் வருடக்கணக்காக முதலாளிகளுடன் கடுமையான சமர்கள் செய்தபின் பிரித்தானிய தொழிற்சங்கங்கள் பிரதான சக்தியாக விருத்தி அடைந்தன. பாராளுமன்றத்தில் செல்வாக்குக் கொண்டிருந்த முதலாளிகள் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு அதிகாரத்தைப் பயன்படுத்த முயன்றபோது தொழிற்சங்கங்கள் அரசியல் நடவடிக்கையின் தேவையை உணர்ந்து கொண்டன. அவை தமது உறுப்பினர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்ப விரும்பின. லிபரல் கட்சியின் வாலாக இருக்க விரும்பவில்லை. இவ்வாறுதான் பிரித்தானிய தொழிற்கட்சி தோன்றியது. அது பிரித்தானிய தொழிற்சங்க இயக்கத்திலிருந்து தோன்றியது. தொழிலாளர்களின் ஆதரவைப் பெறத் தொழிற்கட்சிக்கு சவாலாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல இடதுசாரிக் கட்சிகள் தோன்றியபோதும் தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்துக்கு எந்தவித கடுமையான அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. ஐக்கியம் என்பது தொழிற்சங்க இயக்கத்தின் ஒரு புனிதக் கோட்பாடு ஆகியது.

ஆனால் இலங்கையில் அப்படி நடக்கவில்லை. சி.டி.யு.எப். பின் சட்டதிட்டம் பிரித்தானிய தொழிற்சங்கக் கவுன்சிலின் சட்ட திட்டம்போலவே சகல தொழிற் சங்கங்களையும் உள்ளடக்கக் கூடியதாக அமைக்கப்பட்டபோதும் லங்கா சம சமாஜக் கட்சி எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் முதலாளி வர்க்கத்தின் தாக்குதல்களையும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தைக் குறைப்பதற்கான அவர்களின் முயற்சிகளையும் தொழிலாளர்கள் எதிர்த்துப் போராட வேண்டியிருந்த நிலையில் ஐக்கியப்பட்ட தலைமை ஏற்படவில்லை. 1946-ல் பல வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இவற்றில் சிலவற்றுக்கு லங்கா சம சமாஜக் கட்சி தலைமை தாங்கியது. வேறு சிலவற்றுக்கு கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கியது. ஆனால் யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் ஏற்பட்ட கடுமையான தொழிலாளர் அமைதியின்மை காரணமாக 1947 மே-ஜூனில் வெடித்த பிரசித்தி பெற்ற பொது வேலை நிறுத்தத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சம சமாஜக் கட்சியும் கூட்டுத் தலைமை அளிக்க வேண்டி ஏற்பட்டது. சி.டி.யு.எப், சி.எப்.எல்., பி.எல்.டபிள்யு., டி.யு.எப். (கம்யூனிஸ்ட் கட்சி, ல.ச.ச.க. கூட்டுத் தலைமை) ஆகியவற்றால் இந்த வேலை நிறுத்தம் தலைமை தாங்கப்பட்டது. உச்ச கட்டத்தில் அரசாங்க ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களுமாக ஏறக்குறைய 50 ஆயிரமபேர் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றினார்கள். அது இதுவரை நடந்த மிகப்பெரிய வேலை நிறுத்தமாகும். மத்தியதர வர்க்க ஊழியர்கள் தொழிலாளர்களுடன் கூட்டுவேலை நிறுத்தம் நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

# 5. 1947 பொது வேலை நிறுத்தம்

அரசாங்கமும் முதலாளிமாரும் இந்த வேலை நிறுத்தத்தை நசுக்க முழு சக்தியையும் பிரயோகித்தார்கள். பொய்பேசும் பூர்ஷ்வா வர்க்கப் பத்திரிகைகள் குறிப்பாக ஏரிக்கரைப் பத்திரிகைகள், அவர்களுக்குத் துணைபுரிந்தன. ஏரிக்கரையின் ஒரு பத்திரிகையாளர் தான் எவ்வாறு அரசாங்க அலுவலகங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அரைவாசி ஊழியர்கள் வேலைக்கு வந்திருந்தார்கள் என்று எழுத வைக்கப்பட்டார் என்று என்னிடம் கூறினார். உண்மையில் ஏறக்குறைய எவருமே வேலைக்குச் சென்றிருக்கவில்லை. ராணுவம் வெளியே வந்தது. பிரித்தானிய முடிக்குரிய கடற்படை வீதிகளில் ரோந்து புரிந்தது. ஒரு ஆர்ப்பாட்டப் பேரணி கொலன்னாவை எண்ணெய் நிறுவனங்களை நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக பொலிசார் சுட்டபோது ஒரு அரசாங்க லிகிதரான கந்தசாமி கொல்லப்பட்டார்.

அமைச்சரவை ஒன்றரை மணி நேரத்தில் பொலிஸ் திருத்தச் சட்டத்தையும் பொது பந்தோபஸ்து சட்டத்தையும் நிறைவேற்றியது. இவற்றால் மக்களின் ஜனநாயக உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன. அரசாங்கம் அமித அதிகாரங்களையும் பெற்றது. தற்பொழுது வேலை நிறுத்தம் அரசாங்கத்துக்கும் அதன் எதிராளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கும் இடையிலான அரசியல் போராட்டம் ஆகியது. அது தெளிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயல்பை எடுத்தது. தியாகி கந்தசாமிக்கு அஞ்சலி செலுத்த பெருந்திரளான மக்கள் காலிமுகத் திடலில் கூடினார்கள். அங்கிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக கோட்டைப் புகை ரத நிலையத்துக்கு அவருடைய உடல் எடுத்துச் செல்லப்பட்டபோது பெரும் ஊர்வலமாக மக்கள் சென்றார்கள். அப்பொழுது பொலிசாருக்குப் பொறுப்பாக இருந்த உள்விவகார அமைச்சர் ஏ. மகாதேவ் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அரசாங்கப் பலம் கடுமையாகச் சோதிக்கப்பட்டது. இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சேர்ஜோண் கொத்தலாவலை பீதிஅடைந்து வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக்கைகளை வழங்குமாறு டி.எஸ். சேனநாயக்காவிடம் கூறினாராம். முதியவர் டி. எஸ். ''லயனல், நான் நினைத்தேன் நீங்கள் ஒரு இராணுவக்காரன் என்று'' என்று கூறினாராம்.

ஆனால் ஒரு பொருளாதாரப் போராட்டத்தை அரசியல் போராட்டமாக மாற்றும் அளவுக்கு தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு இன்னும் வளரவில்லை. இது தவிர, சரியான புரட்சிகரத் தலைமை அவர்களுக்கு இருக்கவில்லை. அரசியல் கோஷங்கள் எழுப்பப்பட்ட போதும் அரசியல் நடவடிக்கைக்கான செறிந்த முயற்சி எடுக்கப்படவில்லை. துரிதவெற்றி பற்றிய பிரமைகளைக் கொண்டிருந்த வேலை நிறுத்தக்காரர்களில் சில பகுதியினர், குறிப்பாக மத்தியதர வர்க்க ஊழியர்களில் சில பகுதியினர் மெல்ல மெல்ல வேலைக்குத் திரும்பத் தொடங்கினார்கள். பொய் பேசும் பூர்ஷ்வா வர்க்கப் பத்திரிகைகள் இந்த எண்ணிக்கையைப் பெரிதாக்கி எழுதின. இதனால் வேலை நிறுத்தக்காரரின் உறுதி தளர்ந்தது.

இறுதியில், வேலை நிறுத்தக்காரர் களைத்துப் போனபடியாலும் பிடிவாதமான அரசாங்கம் அதன் முழு அரசு இயந்திரத்தையும் கொண்டு வேலை நிறுத்தத்தை நசுக்கியபடியாலும் ஜூன் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. நாட்டில் முன்னர் காணாத முற்றுமுழுதான அடக்குமுறை வேலை நிறுத்தங்கள் மீது அவிழ்த்து விடப்பட்டது. அரசாங்கமும் முதலாளிமாரும் வேலை நிறுத்தங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கத் தீர்மானித்தார்கள். பகிரங்கமான அடக்குமுறை நடைபெற்றது. சம்பளங்கள் குறைக்கப்பட்டன. சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டன. தொழிற்சாலை மட்டத்தில் வேலை



நிறுத்தத்துடன் தொடர்புடைய சகல தலைவர்களும் அரசாங்க இலாக்காக்களிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். இலங்கை கோல்ட் ஸ்ரோல்ஸ் லிமிடெட் போன்ற சில கம்பெனிகள் நூற்றுக்கு மேலான ஊழியர்களை வேலை நீக்கம் செய்தன. இந்த அடக்குமுறையால் தொழிற்சங்க இயக்கத்தை நசுக்கிவிட்டதாக அவை நினைத்தன. ஆறு ஆண்டு காலத்தில், 1953-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த ஹர்த்தால் மூலம் இது எவ்வளவு தவறு என்பது நிரூபிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுதைக்குத் தொழிற்சங்க இயக்கம் மிகச் சோர்வான நிலைமையில் இருந்தது. தொழிற்சங்கக் காரியாலயங்கள் ஆட்களின்றிக் காலியாகக் கிடந்தன.

இந்தப் பொது வேலை நிறுத்தம் தோற்கடிக்கப்பட்டபோதும் அது தொழிலாளர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பிரமாண்டமான ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளை எழுப்பிவிட்டது என்பதில் சந்தேகமில்லை. அதே வேளையில் அரசாங்கமும் முதலாளிமாரும் நடத்திய இரக்கமற்ற அடக்குமுறையால் தொழிலாளர் மத்தியில் ஆழமான வர்க்கப் பகைமை ஏற்பட்டது. 1947-ல் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தல்களில் பெரும் தொகையான யூ. என். பி. விரோத அபேட்சகர்கள் வெற்றி பெறுவது இந்தப் போராட்ட உணர்வுகள் காரணமாய் இருந்தன. அதே ஆண்டில் டி. எஸ். சேனநாயகவும் ஒலிவர் குணதிலகாவும் மேலும் கூடுதலான சீர்திருத்தங்களுக்கான வெள்ளை மாளிகையிலான தமது பேச்சுவார்த்தைகளில் இந்த வேலை நிறுத்தத்தைப் பேரம் பேசும் பொருளாகப் பயன்படுத்தினார்கள். தாம் கேட்டும் சீர்திருத்தங்கள் கிடைக்காவிட்டால், தமக்கு அதிகாரத்தை மாற்றாவிட்டால், என்ன நடக்கும் சிவப்பு அதிகாரம் ஏற்படும் இதைத்தான் பொது வேலை நிறுத்தம் காட்டுகின்றன என்று கூறி அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளை அச்சுறுத்தினார்கள்.

இப்பொழுது நாம் சற்று பின்னோக்கிச் சென்று கம்யூனிஸ்ட் கட்சி லங்கா சம சமாஜக் கட்சி ஆகியவற்றுக்குள்ளே ஏற்பட்ட அரசியல் வளர்ச்சிகளைப் பார்ப்போம். நான் முன்னர் கூறியவாறு லங்கா சம சமாஜக் கட்சியின் இடதுசாரி குறுங்குழுவாதத்தை எதிர்க்கும் போக்கில் கம்யூனிஸ்ட் கட்சி வலதுசாரி சீர்திருத்தவாத நிலைப்பாடுகளை எடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதற்கு சற்றுப் பின்னரே இலங்கை தேசிய காங்கிரசில் தவறாகத் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தைக் கண்டுகொண்டு பிரித்தானிய ஏகாதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்தியத்துக்கு எதிராக சுதந்திரத்திற்காகப் போராடுவது என்ற பெயரில் அதில் தனித்தனியாக உறுப்பினராகச் சேர்வது என்று தீர்மானித்தது. மேலும் மேலும் சீர்திருத்தங்களுக்காக மனுச் செய்வதில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஒரு பாத்திரம் வகித்தது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அது அடிப்படையில் ஏகாதிபத்திய சார்பு, தரகு பூர்ஷ்வா வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்த ஸ்தாபனமாகும். இந்த வேளையில் டி. எஸ். சேனநாயக இலங்கைத் தேசிய காங்கிரசின் ஒரு தலைமை உறுப்பினராக இருந்தார். அவர் பின் கதவால் காங்கிரசிலிருந்து ராஜினாமாச் செய்த போது கம்யூனிஸ்டுகள் முன் கதவால் அதில் சேர்ந்தார்கள். பின்னர் தேசிய காங்கிரஸ் மிகவும் பிற்போக்கான பூர்ஷ்வா அரசியல்வாதியான டி. எஸ். சேனநாயகாவின் தலைமையிலான யூ என். பி. யுடன் சேர்ந்து கொண்டபோது கம்யூனிஸ்ட் கட்சி 1947 தேர்தலில் அதை ஆதரிக்கத் தீர்மானித்தது. ஒரு விசேஷ மாநாட்டில் கூடுதலாக ஒரேயொரு வாக்குப் பெற்றுச் செய்யப்பட்ட இந்தத் தீர்மானம் விரைவில் தேர்தலுக்கு முன்னரே எதிர்ப்பைச் சந்தித்து ரத்துச் செய்யப்பட்ட இத்தீர்மானம் அமுலாக்கப்படவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி இத்தகைய முட்டாள்தனமான தவறை எவ்வாறு புரிந்தது? இந்த முட்டாள்தனமான தத்துவத்தின் கர்த்தாக்கள் வைத்திலிங்கமும் (அப்பொழுது கட்சியின் தத்துவ வாதி) கெனமனும் ஆவர். அவர்கள் மார்க்சிய நூல்களில் காலனி நாடுகளில் உள்ள பூர்ஷ்வாக்கள் ஒன்று ஏகாதிபத்திய சார்புப் பகுதி மற்றொரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் பகுதி (ஆனால் ஊசலாட்டம் உடையது) ஆகிய இரண்டு பகுதிகள் பிரிவார்கள் என்று படித்திருக்கிறார்கள். வெளிநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் முற்போக்கான பகுதிகள் உட்பட ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சகல சக்திகளையும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஐக்கியப்படுத்துவது தொழிலாளி வர்க்கத்தின் சரியான தந்திரோபாயம் எனவும் அவர்கள் படித்திருக்கிறார்கள். இந்தப் பகுதி எங்கே என்று அவர்கள் தேடிப் பார்த்திருக்கிறார்கள். இலங்கையில் அதைக் காணவில்லை. நாற்பதாம் ஆண்டுகளில் இலங்கைப் பூர்ஷ்வாக்கள் மத்தியில் இந்தப் பிளவு இன்னும் ஏற்படாததே இதற்குக் காரணம். அது பின்னர் 1951-ல் ஏற்பட்டது.

ஆனால் யதார்த்தத்தைப் பொருட்படுத்தாமலும் சரியான பரிசீலனை செய்யாமலும் வைத்திலிங்கமும் கெனமனும் இலங்கை



தேசிய காங்கிரசிலும் பின்னர் யூ.என்.பி.யிலும் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தைக் கண்டுபிடித்தார்கள். இவை இரண்டும் ஏகாதிபத்திய சார்பு தரகு பூர்ஷ்வா வர்க்க ஸ்தாபனங்களாகும். இவ்வாறுதான் கம்யூனிஸ்ட் கட்சி முட்டாளாகியது. ஆரம்ப காலத்தில் அதன் பல பின்னடைவுகளுக்கு இந்தத் தீர்மானம் பொறுப்பாய் இருந்தது. இந்த யூ.என்.பி. சார்பு பட்டத்தைக் கழற்ற கம்யூனிஸ்ட் கட்சிக்கு நீண்டகாலம் பிடித்தது. பலர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சந்தேகித்தார்கள்.

இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு சில வெளிசக்திகளும் துணை புரிந்தன. தேசிய காங்கிரசில் சேர்வது என்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானம் ஒருவிதத்தில் இந்தியத் தேசியக் காங்கிரசில் சேர்வது என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலின் பாதிப்பும் உடையதாகும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை கண்மூடிப் பின்பற்றும் இந்தப் பழக்கம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் தொடர்ந்து இருந்து வந்தது. பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியினதும் அதன் தத்துவவாதியான பாம்டத்தினதும் செல்வாக்காகும் அது. 1946-ன் பிற்பகுதியில் அல்லது 1947-ன் முற்பகுதியில் பாம்டத் இந்தியாவிற்கு வந்திருந்தார். எஸ்.ஏ. விக்ரமசிங்காவும் பீட்டர் கெனமனும் பம்பாய்க்கு சென்று அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இதன் விளைவுதான் ஒரு கூடுதலான வாக்கால் நிறைவேறிய யூ. என். பி. சார்புத் தீர்மானம். எஸ்.ஏ.விக்ரமசிங்கா இந்தத் தீர்மானத்துக்கு எதிராக இருந்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும், ஆனால் தன்னுடைய கருத்தை வாதிட்டு மற்றவர்களுக்கு அறிவுறுத்தும் தத்துவத் திறமை அவரிடம் இல்லாதிருந்தது. அவர் அடிப்படையில் ஒரு செயல்வழிவாதி. தென் இலங்கையில் பெயர் பெற்ற டாக்டராக இருந்த அவர் மக்களின் நாடியைச் சரியாக உணர்ந்து கொண்டார். ஆகவே மக்களின் யூ.என்.பி. எதிர்ப்பு உணர்வுகளை அவர் புரிந்து கொண்டார். 1947 தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி இயன்ற அளவு கூடுதலான ஆசனங்களில் போட்டியிட வேண்டும், ஏனென்றால் யூ.என்.பி.-க்கு எதிரான எவரும் வெற்றி பெறுவார்கள் என்று அவர் கூறியது என் நினைவில் இருக்கின்றது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் இதர தலைவர்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லை.

யுத்தத்தின் இறுதியில் கம்யூனிஸ்ட் கட்சியைக் குலுக்கிய இன்னொரு தத்துவார்த்தப் பிரச்சினையையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். அது அமெரிக்காவில் இருந்து வந்த பிரௌடரிசம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ற தீயக்காற்று. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மூன்று பிரதான நேச அணி நாடுகளின் தலைவர்களான ஸ்டாலின், ரூஸ்வெல்ட்,சர்ச்சில் ஆகியோர் சோவியத் யூனியனில் கிரிமியாவில் சந்தித்து யுத்தத்தைத் துரிதமாக முடிவுக்குக் கொண்டு வருவது பற்றிய திட்டங்களை வகுத்தார்கள். அவர்கள் மீண்டும் ஈரானில் டெஹ்ரானில் சந்தித்தார்கள். அப்பொழுது காலமாகிய ரூஸ்வெல்டின் இடத்தை ஹரிட்ருமனும், தேர்தலில் தொழிற்கட்சி யால் தோற்கடிக்கப்பட்ட கொன்சர்வேடிவ் கட்சியின் சேர்ச்சிலின் இடத்தை அட்லியும் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் ஸ்டாலினுடன் சேர்ந்து உலகின் எதிர்காலம் பற்றி விவாதித்து பாசிசம் மீண்டும் தோன்றாமல் இருப்பதற்கான உத்தரவாதம் பற்றிய திட்டத்தை வகுத்தார்கள். பாசிசத்துக்கு எதிராகப் பல்வேறு நாடுகளின் மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என்ற அறைகூவலை ஒரு நாட்டிற்கு உள்ளே இருக்கும் வேறுபட்ட வர்க்கங்களும் ஐக்கியப்பட வேண்டும் என்ற அறைகூவலாக அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த ஏரள் பிரவுடர் தவறாக வியாக்கியானம் செய்து முற்றிலும் வர்க்க சமரச நிலைப்பாடு ஒன்றை எடுத்தார். பாசிசத்துக்கு எதிராக சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகியன ஐக்கியப் பட்டதைப் பின்பற்றி இந்த நாடுகளின் தொழிலாளி வர்க்கமும் இதே நோக்கத்துக்காக முதலாளிகளுடன் ஐக்கியப்பட வேண்டும் என்று அவர் கூறினார். அவர் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைத்து அதனைக் கம்யூனிஸ்டுகளின் லீக்காக அமைப்பதற் கானாக இருந்தார்.

இந்தப் பிரச்சினை பற்றிய சரியான கொள்கையை தோழர் மாசேதுங் முன்வைத்துள்ளார். 1946-ல் அவர் கூறினார்: ''அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான இந்த சமரசம் அமெரிககா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக உலகின் சகல ஜனநாயக சக்திகளும் உறுதியான தீர்க்க மான போராட்டங்கள் நடத்துவதன் மூலமே ஏற்பட முடியும். இந்த சமரசம் காரணமாக முதலாளித்துவ உலகின் நாடுகளிலுள்ள மக்கள் அதைப் போல நடந்து உள்நாட்டில் சமரசம் செய்ய வேண்டும் என்றில்லை. இந்த நாடுகளின் மக்கள் வேறுபட்ட நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபட்ட போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துவார்கள். இதுதான் சரியான மார்க்சிய—லெனினிய நிலைபாடு ஆகும்.''

அதிகமாக சோவியத் கட்சியின் தூண்டுதலில் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான தலைவர்களில் ஒருவரான



ஜாக்டுக்ளோ பிரவுடரையும் அவருடைய கருத்துக்களையும் பகிரங்கமாக விமர்சித்தார். இது ஒரு சர்வதேசிய விவாதத்தை ஆரம்பித்தது. அதன் போக்கில் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி பிரவுடரை நிராகரித்தது. அவரைக் கட்சியிலிருந்து வெளியேற் றியது. அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி பின்னர் புனரமைக்கப் பட்டது. ஆனால் தொடர்ந்து அது திரிபுவாதக் கட்சியாக இருந்தது. துரதிருஷ்டவசமாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பிரவுடரிசத்துக்கு பலியாகவில்லை. ஆனால் 1947-ல் யூ.என்.பி.-யை ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு பிரவுடரிசத்தின் செல்வாக்கு எவ்வளவுக்கு இருந்தது என்பது ஒரு போதும் விவாதிக்கப்படவில்லை.

1948-ல் நடைபெற்ற மூன்றாவது மாநாட்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் வலதுசாரி சீர்திருத்தவாத நிலைப் பாட்டிலிருந்து அரை ட்ரொஸ்கியவாத இடதுசாரி குறுங்குழுவாத நிலைப்பாட்டுக்குச் சென்றது. புதிய ஜனநாயகப் புரட்சியை சோஷலிசப் புரட்சியுடன் சமப்படுத்தும் முயற்சி ஒன்று மேற் கொள்ளப்பட்டது. துணிச்சல்வாத தந்திரோபாயங்கள் முயற்சிக் கப்பட்டன. 1948 முதல் 1950 வரை கட்சிக்குள்ளே இந்த மார்க்கத்துக்குத் தலைமை கொடுத்தவர் அப்பொழுது மாத்தறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கட்சியின் பொதுச் செய லாளரான ஹரி அபயகுணவர்த்தனா ஆவார். இதுவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பின்பற்றியே செய்யப்பட்டது. இந்த வேளையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பி.டி. ரணதிவேயின் இடதுசாரி குறுங்குழுவாதப் பாதிப்பில் இருந்தது. ரணதிவே மாசேதுங் எதிர்ப்பு மார்க்கம் ஒன்றினைப் பின்பற்றினார். இந்த குறுங்குழுவாத மார்க்கத்தை அமுல்படுத்த எடுத்த முயற்சிகளால் ஏற்பட்ட நாசங்கள் பல. அவற்றை இங்கே கூற நான் முற்பட வில்லை.

இந்தக் கடுமையான தவறு 1950-ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 4-வது மாநாட்டில் திருத்தப்பட்டது. எஸ்.ஏ.விக்ரமசிங்கா 1949-ன் ஆரம்பத்தில் பீகிங்கில் நடைபெற்ற உலகத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுசபையின் மாநாடொன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். அப்பொழுது சீனா இன்னும் முழுதாக விடுதலை பெறவில்லை. இந்த மாநாட்டில் சீனத் தோழர்கள் முன்வைத்த ஆய்வில், சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச்சென்ற ஆயுதப் போராட்ட பாதைதான் ஆசியாவின் தேசிய விடுதலை இயக்கங்களுக்கான பாதை என்று முன்வைத்தார்கள். புதிய ஜனநாயகப் புரட்சி,சோஷலிசப் புரட்சி ஆகிய புரட்சியின் இரண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டங்கள் பற்றிய தத்துவத்தையும் ஒவ்வொரு கட்டத்திலும் தொழிலாளி வர்க்கம் வென்றெடுக்க வேண்டிய வேறுபட்ட கூட்டணிகள் பற்றியும் அவர்கள் சரியாக எடுத்துக் கூறினார்கள். உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச்சபைக்குள்ளே உக்கிரமான, நீடித்த வாதப் பிரதிவாதம் ஏற்பட்டது. கூட்டங்களையும் பல தடவை பின்போட வேண்டி ஏற்பட்டது. மேற்கு அய்ரோப்பியப் பிரதிநிதிகள் சீன கருத்துக்களை எதிர்த்தார்கள். சோவியத் பிரதிநிதிகள் இக்கட்டான நிலையில் இருந்தார்கள். சோவியத் பிரதிநிதிகள் ஸ்டாலினுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதாகவும் சீனத் தோழர்கள் சொல்வதுதான் சரி என்று அவர் கூறியதாகவும் நான் அறிய வந்தேன்.

இந்த மாநாட்டில் சீனத் தோழர் பேசிய பேச்சின் முக்கியமான பகுதியை நான் மேற்கோள் காட்ட விரும்புகின்றேன்.

''ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் தோற்கடித்து சீன மக்கள் குடியரசை ஸ்தாபிக்க சீன மக்கள் மேற்கொண்ட பாதையைத்தான் தேசிய சுதந்திரத்துக்கும் மக்கள் ஜனநாயகத்துக்குமான அவர்களுடைய போராட்டத்தின் பல்வேறு காலனி, அரைக்காலனி நாடுகளின் மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

சீன மக்களை வெற்றிக்கு இட்டுச் சென்ற பாதையை பின்வரும் வடிவத்தில் தெரிவிக்கலாம்.

1. தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் அடக்குமுறையை எதிர்க்க பரந்துபட்ட தேசிய ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்கவும் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிராக உறுதியான போராட்டம் ஒன்றை நடத்தவும் விரும்பும் அனைத்து இதர வர்க்கங்களுடனும் கட்சிகளுடனும் குழுக்களுடனும் ஸ்தாபனங்களுடனும் தனி நபர்களுடனும் ஐக்கியப்பட வேண்டும்.

2. இந்தத் தேசம் தழுவிய ஐக்கிய முன்னணி ஏகாதிபத்தியத்தை மிக உறுதியாகவும், மிகத் துணிவாகவும் மிகவும் தன்னலமின்றியும் எதிர்க்கும். தொழிலாளி வர்க்கமும் அதன் அரசியல் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியும் தலைமை தாங்க வேண்டும். இவை இரண்டும் இந்த முன்னணியின் கேந்திரமாக அமைய வேண்டும். முன்னணிக்கு ஊசலாடுவதும் சமரசம் செய்வதுமான தேசிய பூர்ஷ்வா வர்க்கமோ குட்டி பூர்ஷ்வா வர்க்கமோ அவற்றின் அரசியல் கட்சிகளோ தலைமை தாங்க முடியாது.



3. தொழிலாளி வர்க்கமும் அதன் அரசியல் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியும் சகல ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஐக்கியப்படுத்தும் கேந்திரமாகி தேசிய ஐக்கிய முன்னணியை வெற்றிகரமாக வெற்றிக்கு இட்டுச் செல்லுமுகமாக மார்க்சிய — லெனினியத் தத்துவத்தால் ஆயுதபாணியாக்கப்பட்டதும், யுத்த தந்திரத்திலும் தந்திரோபாயங்களிலும் தேர்ச்சி பெற்றதும், சுய விமர்சனம் கண்டிப்பான கட்டுப்பாடு ஆகியவற்றைப் பயில்வதும் பொது மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதுமான கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றைப் பொறுமையான போராட்டத்தின் மூலம் கட்டி அமைக்க வேண்டும்.

4. எப்பொழுது எங்கே சாத்தியமோ அந்நேரங்களிலும் அந்த இடங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான மக்கள் விடுதலை சேனை ஒன்றை அமைக்க வேண்டும். இந்தப் படை எதிரிகளுக்கு எதிராகப் போராடுவதில் சக்தியுடையதாகவும் தேர்ச்சி உடையதாகவும் இருக்க வேண்டும். இந்தப் படை செயல்படுவதற்கான பலமான இடங்களையும் அமைக்க வேண்டும். எதிரியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலான பொதுமக்கள் போராட்டங்களை ஆயுதப் போராட்டத்துடன் இணைக்க வேண்டும். அத்துடன் பல காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஆயுதப் போராட்டமே தேசிய விடுதலைப் போராட்டத்தின் பிரதான வடிவமாகும்.

சீனாவும் சீன மக்களும் வெற்றி பெறுவதில் கடைப்பிடித்த பிரதானபாதை இதுவாகும். இந்தப்பாதை மாசேதுங் பாதையாகும்.

எப்படியிருப்பினும் 4-வது மாநாடு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலானதும், தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி பூர்ஷ்வாக்கள், தேசிய பூர்ஷ்வாக்கள் ஆகியோரைக் கொண்டதுமான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, யூ.என்.பி. எதிர்ப்பு ஐக்கிய முன்னணி ஒன்றின் உருவாக்கத்தின் அவசியத்தை ஏற்றுக்கொண்டது. தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துடனான கூட்டணி தற்காலிகமானது, ஊசலாட்டமானது எனவும் அது எச்சரித்தது. சரியானதோர் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் சகல இடதுகளினது சக்திகளினதும் ஐக்கியத்தை அமைப்பதற்கான இயக்கம் ஒன்றை நடத்துவதற்கான சரியான தந்திரோபாயங்களையும் மாநாடு வகுத்தது.

ஆனால் 4-வது மாநாடு ஆயுதப் போராட்ட பாதையை முன்வைத்த பிரதான சீன சிபாரிசைக் கருத்தில் கொள்ளத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவறியது. மாநாட்டைப் பொறுத்தவரையில் ஐக்கிய முன்னணி தேர்தலில் போட்டி போடுவது புரட்சிக்கோ ஆயுதப் போராட்டத்துக்கோ அல்ல. வேறு வார்த்தைகளில் கூறினால் பாராளுமன்ற நோக்கங்களிலிருந்து விலகி புரட்சிப் பாதையை ஏற்றுக்கொள்ள அது தவறியது. கிராமப்புறங்களிலான வேலையின் முக்கியத்துவம் பற்றி, குறிப்பாக விவசாயிகள் மத்தியிலான வேலை பற்றி அது கருத்தில் கொள்ளவில்லை. ஒரு புரட்சிகரக் கட்சியின் அமைப்பு, இரகசிய வேலை, ஆயுதப் புரட்சி இவை பற்றியும் இந்த மாநாடு எதையும் புரிந்து கொள்ளவில்லை.

இந்த வேளையில் லங்கா சம சமாஜக் கட்சியையும் போல்ஷ்விக் லெனினிசக் கட்சியையும் ஐக்கியப்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. ஒரு ஐக்கியம் ஏற்பட்டது. ஆனால் பிலிப் குணவர்த்தனா 1951-ல் மீண்டும் பிரிந்து விப்ளவகாள (புரட்சிகர) லங்கா சம சமாஜக் கட்சியை அமைத்தார். பழைய லங்கா சம சமாஜக் கட்சி நவலங்கா சம சமாஜக் கட்சி என அழைக்கப்பட்டது. என். எப். பெரேரா நவலங்கா சம சமாஜக் கட்சியுடன் இருந்தார். இந்தப் பிளவுக்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் டொறிக் டி சூஸா ஒரு உளவாளியா இல்லையா என்பதுடன் இது தொடர்புடையது என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.

1950-ல் புடாபெஸ்டில் நடைபெற்ற உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தியாவின் எஸ். ஏ. டாங்கே இந்தியா, இலங்கை இரண்டினதும் சார்பில் உறுப்பினராக இருந்தார். ஆனால் அப்பொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை நேரு தடை செய்திருந்தார். டாங்கே சிறையில் இருந்தார். இதனால் இலங்கையின் பதில்உறுப்பினராக எஸ்.ஏ.விக்ரமசிங்கா அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் தனிப்பட்ட காரணங்களால் அவரும் போக முடியவில்லை. சி.டி.யூ.எப். என்னைக் கலந்து கொள்ளுமாறு நியமித்தது. போகும் வழியில் நான் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் (ஏ.ஐ.டி.யூ.சி.) ஊழியர்களைப் பம்பாயில் சந்தித்தேன். நான் லண்டன் ஊடாகப் புடாபெஸ்ட் சென்றேன். லண்டனில் பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் பாம்டத்தை நான் சந்தித்தேன். அப்பொழுது பி. டி. ரணதிவேயின் தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடதுசாரி குறுங்குழுவாதக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்து தோழர் மாசேதுங்கிற்கு எதிராகப் பகிரங்கமாகச் செயற்பட்டது. டத் இந்த வளர்ச்சி பற்றிக் கவலைக் கொண்டிருந்தார்.



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே ட்ரொஸ்கிய ஊடுருவல் இருக்கலாம் என்று அஞ்சினார். திரும்பும் வழியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுக்கு வழங்கும்படி செய்தி ஒன்றை அவர் என்னிடம் தந்தார்.

புடாபெஸ்டில் நடைபெற்ற நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தின் பின்னர் லண்டன் வழியாக நான் நாடு திரும்பினேன். அப்பொழுது லண்டனில் ஊக்கமான கம்யூனிச மாணவர் குழு ஒன்று இருந்தது. இவர்களில் பலர் இலங்கை மாணவர்கள். நான் அவர்கள் அனைவரையும் சந்தித்தேன். ஆனால் இவர்களில் ஒருவர் தானும் நாடு திரும்பியதும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நீண்டகாலம் இருக்கவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டும். பிரித்தானியாவில் இருக்கும்போது கறுப்பர்கள் என்று அழைக்கப்பட்டு நிறத்துவேஷத்தால் பாதிக்கப்படும்போது ஆசிய மாணவர்கள் தீவிரமானவர்களாகி அவர்களுடைய ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் வெள்ளையருக்கு எதிரான உணர்வும் வளர்கின்றது போலும். இது இயற்கையாகவே அவர்களைக் கம்யூனிசத்தின் பால் திருப்பிவிடுகின்றது. ஆனால் நாட்டுக்குத் திரும்பியதும் வசதியான வாழ்க்கை, நல்ல சம்பளமுடைய தொழில் ஆகியவற்றைப் பெற்றதும் இவர்கள் சறுக்கி விடுகின்றார்கள். அப்பொழுது பிரித்தானியாவுக்குச் சென்ற மாணவர்கள் மிகவும் வசதியான குடும்பங்களிலிருந்து சென்றார்கள். அவர்களுடைய வர்க்க அடிப்படை அவர்கள் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பதை அனுமதிக்கவில்லை.

புடாபெஸ்ட் கூட்டம் பற்றி அறிக்கை ஒன்று நிகழ்த்துவதற்கு பம்பாய் மூலமாக இலங்கை திரும்பும்படி ஏ.ஐ.டி.யூ.சி தலைவர்கள் என்னைக் கேட்டிருந்தார்கள். நான் பம்பாய்க்கு எந்த விமானத்தில் வருகின்றேன் என்று அவர்களுக்குத் தந்தி அடித்து நான் ஒரு தவறை இழைத்தேன். பம்பாய் விமான நிலையத்தில் சி. ஐ. டி. யினர் என்னைச் சந்தித்தார்கள். இந்தியாவின் மிகச் சிறந்தவர்கள் எனக் கருதப்படும் மட்றாஸ் சி. ஐ. டி. ஒருவர் என்னை கவனிக்க நியமிக்கப்பட்டிருந்தார். அவர் என்னுடைய பெட்டிகளை நன்கு சோதித்தார். ஆனால் எதையும் காண முடியவில்லை. இரண்டு மணி நேரம் அவர் என்னைக் காத்திருக்க வைத்துவிட்டு இரண்டாவது ஏயர்இந்தியா பஸ் நகரத்துக்கு புறப்பட இருந்த வேளையில் அவர் என்னுடைய பெட்டிகளை எடுத்துக் கொண்டு அடுத்த நாள் பம்பாய் சி.ஐ.டி. அலுவலகத்துக்கு வந்து அவற்றை எடுத்துச் செல்லுமாறு கூறினார். அடுத்த நாள் முழுவதும் அவர் என்னை அங்கே வைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருந்தார். தலைமறைவாய் இருக்கும் சில கட்சித் தலைவர்களை சந்திக்க ஒழுங்கு செய்வதாக இந்தியத் தோழர்கள் எனக்கு அறிவித்திருந்தார்கள். அந்தச் சந்திப்பு அன்றிரவு நடைபெறுவ தாக இருந்தது.

இந்தச் சந்திப்பு கிட்டாது போய்விடுமோ என்று நான் அஞ்சினேன். என்னுடைய ஆவலில் முட்டாள்தனமாக, எனக்கு ஒரு சந்திப்பு உண்டு என்று கூறிவிட்டேன். சொன்னதும் என்னுடைய தவறு எனக்கு புரிந்தது. சி.ஐ.டி. அதிகாரி என்னு டைய பெட்டியை மூடிவிட்டுப் போகலாம் என்று கூறினார். சந்திப்பு சில தலைமறைவான தலைவர்களுடன் என்பதை அவர் சரியாக ஊகித்தார். என்னைத் தொடருவார்கள் என்பது பற்றி எனக்கு இப்பொழுது சந்தேகம் இல்லை. நான் ஏ. ஐ. டி. யு. சி. அலுவலகத்துக்கு மீண்டும் சென்ற போது அதன் தோழர்களுக்கு இந்த அச்சத்தைத் தெரிவித்தேன். எனக்குப் பொறுப்பாக இருந்த தோழர் கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். பின் தொடர் பவர்களைக் குழப்பியடிக்கும் விளையாட்டு நடத்தப்பட்டது. நாம் ஒரு திசையில் பஸ் மூலம் சென்று இன்னொரு திசையில் பின் புகை ரதத்தில் வந்தோம். நாம் இவ்வாறு போதியளவு எச்சரிக்கைகளில் பயணம் செய்தபின், இப்பொழுது எங்களை ஒருவரும் தொடர முடியாது என்று அந்தத் தோழர் கூறினார். அவர் என்னை ஒரு சந்திக்கு அழைத்துச் சென்றார். ஒரு கடையில் நின்ற ஒரு ஆளைக் காட்டி சந்திப்பு இடத்துக்கு அவர் என்னை அழைத்துச் செல்வார் என்று கூறினார். நான் அன்றிரவு தலைமறைவுத் தோழர்களுடன் இருந்தேன். டத்தின் விமர்சனத் தையும் ஆலோசனையையும் குறிப்பாக அவர்களிடம் எடுத்துச் சொன்னேன் அடுத்த நாள் நான் பகிரங்க வேலையில் ஈடுபட்ட சில கட்சித்தோழர்களுக்கு உரையாற்றி இதே செய்தியைக் கூறினேன்.

இந்தத் தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு, யூ என்.பி. எதிர்ப்பு ஐக்கிய முன்னணியிலும் தொழிலாளி வர்க்கத் தலைமையின் முக்கியத்துவத்தை 4-வது மாநாட்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியது என்பது நினைவில் இருக்கலாம். இந்தத் தலைமை அந்தஸ்தைப் பெறுவதற்காக சரியான வேலைத்திட்டத் தின் அடிப்படையில் இடதுசாரி சக்திகள் அனைத்தினதும் ஐக்கியத்தைக் கட்டியமைக்க இயக்கம் ஒன்றை நடத்த வேண்டும் என்றும் இந்த மாநாடு தீர்மானித்தது. இந்த வேளையில் சொந்தக் கட்சியை அமைத்த பிலிப் குணவர்தனா தனிமைப் பட்டிருந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வேண்டுகோள் விடுத்து



சோவியத் எதிர்ப்பையும், ட்ரொஸ்கியவாதத்தையும் நிராகரிப்பது என்ற அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க உடன்பட்டார். இவ்வாறுதான் இடதுசாரி ஐக்கியத்துக்கான விறுவிறுப்பான இயக்கம் ஒன்றை நடத்திய கம்யூனிஸ்ட் கட்சி — லங்கா சம சமாஜக் கட்சி ஐக்கிய முன்னணி தோன்றியது. இதனால் நவலங்கா சம சமாஜக் கட்சி என்று அழைக்கப்பட்ட லங்கா சம சமாஜக் கட்சி சிக்கலில் மாட்டித் தனிமைப்பட்டு அக்கட்சியில் இன்னொரு பிளவு' ஏற்பட்டது. திரும்பிப் பார்க்கும்போது, இதனால் பிலிப் குணவர்தனா தனிமைப் பாட்டிலிருந்தும் அரசியல் அழிவில் இருந்தும் தப்பினார் என்பது உண்மையே. தனது தனிமைப்பாட்டிலிருந்து தப்பவே அவர் சந்தர்ப்பவாத ரீதியாக இந்த ஐக்கிய முன்னணிக்கு உடன்பட்டார் போலவும் தோன்றுகிறது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி — லங்கா சம சமாஜக் கட்சி ஐக்கிய முன்னணி சோவியத் எதிர்ப்பையும் ட்ரொஸ்கியவாதத்தையும் நிராகரிப்பது என்ற அடிப்படையில் நடத்திய இயக்கம் நல்ல பல விளைவுகளை ஏற்படுத்தியது. பிலிப் குணவர்தனாதான் இலங்கையில் ட்ரொஸ்கியவாதத்தின் தந்தை என்பதையும் லங்கா சம சமாஜக் கட்சியின் உண்மையான சித்தாந்த தலைவர் என்பதையும் மறுத்தல் ஆகாது. பிலிப் காலமாகியபோது டெய்லி மிறரில் எழுதிய கட்டுரை ஒன்றில் எம். என். பெறேராயே இதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார். இத்தகைய பிலிப்பை சோவியத் எதிர்ப்பைக் கைவிட்டு ஐக்கிய முன்னணி உடன்பாட்டுக்கு வரச் செய்தது கம்யூனிஸ்ட கட்சியின் பெரிய வெற்றியாகும். ஆனால் இந்த ஐக்கிய முன்னணி சுமார் நாலு ஆண்டு காலமே நிலைத் திருந்தது.

இடதுசாரி ஐக்கியத்துக்கான இந்த இயக்கத்தால் லங்கா சம சமாஜக் கட்சி பாதிக்கப்பட்டு அதற்குள்ளே பிளவுகள் ஏற்பட்டன. லங்கா சம சமாஜக் கட்சியின் கடுமையான ட்ரொஸ்கியவாதத் தலைவர்கள் இடதுசாரி ஐக்கியத்துக்கான இயக்கத்தை எதிர்த்து அதனை விளக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். இந்தப் பிரச்சினையை விவாதிக்க இக்கட்சியின் விசேஷ மாநாடு ஒன்று 1954-ல் நடைபெற்றது. ஐக்கியத்துக்கான தீர்மானம் தோற்கடிக் கப்பட்டபோது டி. பி. சுபசிங்க, வில்லியம் டி சில்வா, ஸ்ரான்லி திலகரத்ன போன்ற தலைவர்களும் கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் லங்கா சம சமாஜக் கட்சியை விட்டு விலகினார்கள். இந்தக் கூட்டத்தினர் சற்றுக் காலம் பிலிப்புடன் சேர்ந்திருந்தார் கள். ஆனால் சுமார் ஓராண்டுக்குப் பின் சுபசிங்க, வில்லியம் டி சில்வா ஆகியோர் தவிர்த்த இவர்களில் அநேகர் கம்யூனிஸ்ட்

www.tamilarangam.net



கட்சியில் சேர்ந்தார்கள். இடதுசாரி ஐக்கியத்துக்கான இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் புகழ்மிக்க ஒரு இயக்கமாகும். மாஜி சம சமாஜிகள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தமை அதற்கு ஒரு வெற்றி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே வேளையிற் இது எதிரிகளைக் கோட்டைக்குள்ளே அனுமதிப்பதாகவும் அமைந்தது. இவர்களில் பலர் சந்தர்ப்பவாதிகள், அந்தரங்க நோக்கம் உடையவர்கள். கம்யூனிஸ்ட் கட்சி இவர்களை இருகரங்களாலும் வரவேற்றபோதும் இவர்களில் பலர் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே தொடர்ந்து ஒரு கோஷ்டியாகச் செயற்பட்டார்கள். வாழ்க்கை முழுவதும் ஸ்டாலின் எதிர்ப்பாளர்களாக இருந்த இவர்களுக்கு குருச்சேவின் ஸ்டாலின் எதிர்ப்பையும் அதற்குப் பின் ஏற்பட்ட திரிபுவாதத்தையும் ஏற்றுக்கொள்வது கஷ்டமாக இருக்கவில்லை.

இதே வேளையிற், ஓரளவு தொழிற்சங்க ஐக்கியத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1947 பொது வேலை நிறுத்தத்தின் தோல்வியினால் தொழிற்சங்க ஐக்கியத்தின் அவசியம் உணரப்பட்டது. தொழிற்சங்க இயக்கத்தில் ஐக்கியமின்மை இருப்பதால் ஏற்படும் ஆபத்தை சி. டி. யு. எப். எப்பொழுதும் உணர்ந்திருந்தது. ஐக்கியமின்மைமுதலாளிமாருக்கும் அரசாங்கத்துக்கும் பெரிதும் உதவியான விஷயமாகும். தொழிலாளர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதை சி.டி.யு.எப். ஏற்றுக் கொண்டது. ஒவ்வொரு வேலை நிறுத்தமும் முதலாளி வர்க்கத்தின் காவல்நாயான அரசு இயந்திரத்துடனான பலப்பரீட்சையாக அமைந்தபடியால் இந்த அரசியல் நடவடிக்கை தவிர்க்க முடியாதபடி ஏற்படுகின்றது. ஆனால் கட்சி அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் தொழிற்சங்க இயக்கத்தைப் பிரிப்பதை சி.டி.யு.எப். எதிர்த்தது. ஒரு தொழிற்சாலை, ஒரு தொழில் அல்லது ஒரு துறையில் உள்ள தொழிலாளர்கள் அனைவரும் அரசியல், இன, மத, பேதமின்றி தனியொரு சங்கத்தில் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அது ஆதரித்தது.

சி. டி. யு. எப். ன் சங்கங்களில் ஒன்றான இலங்கைத் தோட்ட உத்தியோகத்தார் சங்கத்தின் முன்முயற்சியில் பிரதான தொழிற்சங்க மத்திய ஸ்தாபனங்கள்மத்தியில் கலந்துரையாடல்கள் நடந்தன. இதன் விளைவாக தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியம் பற்றி விவாதிப்பதற்கான மாநாடு ஒன்று 1948-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி நடந்தது. ஒவ்வொரு சங்கத்துக்கும் ஒரு பிரதிநிதியும் இரண்டு ஆலோசகர்களும் என்ற அடிப்படையில் சகல தொழிற்சங்க மத்திய ஸ்தாபனங்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டன. ஏ. ஈ. குணசிங்கா அகில இலங்கைத்



தொழிற்சங்கக் காங்கிரஸ் மட்டும் கலந்து கொள்ளவில்லை. புதிய தொழிற்சங்க மத்தியஸ்தாபனம் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று சி.டி.யு.எப். இந்த மாநாட்டில் பிரேரித்தது. புதிய தொழிற்சங்க மத்தியஸ்தாபனத்தை அமைத்த பின்னர் தாம் இந்த பிரேரணையை ஆதரிப்பார்கள் என்ற வாக்குறுதியின் பேரில் சி.டி.யு.எப். இந்தப் பிரேரணையை வாபஸ் பெற்றது. மாநாடு தெரிவு செய்த வேலைக் குழுவில் சி.டி.யு.எப்., சி.எப்.எல்., இலங்கை-இந்திய காங்கிரஸ் தொழிற் சங்கம் ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் இருந்தார்கள். தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்தை ஏற்படுத்தும் பணிக்கு இந்தக் குழு பொறுப்பாக இருந்தது.

இந்தக் கமிட்டி பல, நீடித்த காலக் கலந்துரையாடல்களை நடத்திய போதும் தொழிற்சங்க ஐக்கியம் எந்த கோட்பாட்டில் அமைய வேண்டும் என்பது பற்றி உடன்பாடு ஏற்படவில்லை. முழு மாநாடு டிசம்பர் 19-ம் திகதி மீண்டும் கூட்டப்பட்டு உடன்பாடின்றிக் கலைந்தது. சி.டி.யு.எப். 1952 ஆகஸ்டில் இன்னொரு மாநாட்டைக் கூட்டி தொழிற்சங்க ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சித்தது. ஆனால் இந்த மாநாட்டிலும் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை.

6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 6. காலனிசத்திலிருந்து நவகாலனிசத்துக்கு

யுத்தத்துக்குப் பிந்திய காலம் காலனிசத்திலிருந்து நவ காலனிசத்துக்கு மாறும் காலமாகும். ஜெர்மனிய, இத்தாலி, யப்பானிய பாசிசத்தின் தோல்வியும் சோசலிச சோவியத் யூனியன் ஒரு பெரும் வல்லரசாக உருப்பெற்றதும் ஆசியாவிலுள்ள தேசிய விடுதலை இயக்கங்களுக்கு பெரும் ஊக்கம் அளித்தது. பெரிதும் பலவீனப்படுத்தப்பட்டு இரண்டாந்தர நாடு என்ற அந்தஸ்துக்குக் குறைந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம், நேரடிப் பலம் கொண்டு பழைய முறையில் தனது காலனிகளை இனிமேலும் ஆளமுடியாது என்பதை உணர்ந்து கொண்டது. காலனிகளில் உள்ள சுதேச முதலாளிகளுடன் சமரசம் ஒன்றைச் செய்துக் கொள்ள அது தீர்மானித்தது. தேசிய விடுதலை இயக்கங்கள் கூடுதலாகப் புரட்சிகரமான முறையில் வளர அனுமதிப்பது ஏகாதிபத்தியத்துடன் சேர்த்துத் தம்மையும் அவை அடித்துச் செல்லும் என்று சுதேச முதலாளிகள் பயந்தார்கள். இவ்வாறுதான் மக்களை கூட்டாகச் சுரண்டுவதற்காக ஏகாதிபத்தியத்துக்கும் சுதேச முதலாளித்துவத்துக்கும் இடையில் சமரசம் ஒன்று ஏற்பட்டது. சுதேச முதலாளிகள் ஏகாதிபத்தியத்தின் ஜூனியர் சகபாடிகள் ஆகினர். காலனிகளில் அதன் பொருளாதார முதலீடுகளுக்கு உத்தரவாதத்தைப் பெற்றுக் கொண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியம் அரசியல் அதிகாரத்தைக் கைமாற்ற உடன்பட்டது.



சிறிய திருத்தத்துடன் பழைய காலனிச சுரண்டல் தொடர்ந்து நடைபெற்றது. சில இடங்களில் அது மேலும் பலப்பட்டிருக்கிறது. காலனிசக் காலத்திலும் பார்க்க இன்று இலங்கையில் கூடுதலான வெளிநாட்டு முதலீடு இருக்கின்றது. ஆனால் இப்பொழுது ஏகாதிபத்தியவாதிகள் பின்னணியில் இருக்கிறார்கள். அவர்கள் பின் சீட்டில் இருக்க சுதேச முதலாளிகள் சாரதி ஆசனத்தில் இருக்கிறார்கள்.

தேசியக் கொடி, தேசிய கீதம், சற்றுக் காலத்துக்குப் பின்னர் கவர்னர் ஜெனரலாக ஒரு இலங்கையர் - சுதந்திரத்தின் வெளித் தோற்றம் அனைத்தும் இருந்தன. ஆனால் இந்தப் பொம்மைகளின் ஆடுகயிறுகள் லண்டனில் இருந்தும் வாஷிங்டனிலிருந்தும் இழுக்கப்பட்டன. லத்தீன் அமெரிக்காவில் இந்த முறையைத்தான் அமெரிக்க ஏகாதிபத்தியம் அழகாகக் கடைப்பிடித்து வருகிறது. லத்தீன் அமெரிக்க நாடுகள் பெயரளவில் சுதந்திர நாடுகள், ஐ. நா. உறுப்பினர்களும் கூட. ஆனால் இந்த நாடுகள் அனைத்தும் சர்வ வல்லமை பொருந்திய டாலரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. அதன் உத்தரவின்படி நடக்கின்றன. நவகாலனிசம் என்று அழைக்கப்படும் பொருளாதார ஆதிக்க வடிவம் இதுதான். இந்தப் போலிச் சரக்குதான் 1948-ல் இந்தியா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளுக்கு வழங்கப்பட்டது. 1948-ல் இலங்கையில் காலனிச ஆட்சி முடிந்து நவகாலனிச ஆட்சி ஏற்பட்டது.

இரண்டாவது அரச சபையின் இறுதி ஆண்டுகளில் (யுத்தம் காரணமாக இந்த அரச சபையின் காலம் நீடிக்கப்பட்டது) மேலும் கூடுதலான சுதந்திரத்தைக் கோரி சீர்திருத்தங்களுக்கான தீர்மானம் ஒன்றை திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக பிரேரித்தார். பிரித்தானியர் கூடுதல் சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளை ஆராய சோல்பரி கமிஷனை நியமித்தார்கள். பின்னர் வந்த சோல்பரி அரசியல் யாப்பு இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தையும் பாராளுமன்ற அரசாங்க முறையையும் வழங்கியது. இந்தப் பாராளுமன்ற முறையைச் செயல்படுத்த டி. எஸ். சேனநாயக தேசிய காங்கிரஸ், சிங்கள மகாசபை, முஸ்லீம் லீக் ஆகிய சகல பூர்ஷ்வாக் கட்சிகளையும் சேர்த்து (தமிழ்க் காங்கிரஸ் தவிர) 1947-ல் தமது தலைமையின் கீழ் ஐக்கய தேசிய கட்சி என்ற புதிய கட்சியை அமைத்தார்.

முதலாவது பாராளுமன்றத்துக்கான முதலாவது பொதுத் தேர்தல் 1947-ல் நடைப்பெற்றது. 1947 பொது வேலை

www.tamilarangam.net



திருத்தத்தால் தோன்றிய போராட்ட உணர்வுகளின் விளைவாக யூ.என்.பி.-க்கு எதிரான பல அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றி பெற்றார்கள். முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் டி.எஸ். சேனநாயகவும் அவருடைய யூ.என்.பி.-யும் பெரும்பான்மைப் பெறத் தவறினார்கள். பல அரசியல் விமர்சகர்கள் இந்த முக்கியமான விஷயத்தை அடிக்கடி மறந்து விடுகிறார்கள். ''மார்க்சியத் தீயிலிருந்து மதத்தைக் காப்பாற்றுங்கள்'' என்பன போன்ற வர்ணப் படச் சுவரொட்டிகளை ஒட்டி விஷத்தனமான மார்க்சிச எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தபோதும் இது நடைபெற்றது. 1947-ல் இலங்கை முதலாளிகள் இன்னும் அரசியல் ரீதியில் ஒரு வர்க்கமாக ஸ்தாபனப்படவில்லை என்ற உண்மையை நாம் எதிர்நோக்க வேண்டும். 1947 முதல் 1952 வரையான முதலாவது பாராளுமன்றத்தின் காலத்தில் இது நடைபெற்றது. அதனை டி.எஸ்.சேனநாயகவும் ஒலிவர் குணதிலகவும் ஒரு வர்க்கமாக இணைத்தார்கள்.

முதலாவது பாராளுமன்றத்தின் 100 ஆசனங்களில் யூ.என்.பி. 46 ஆசனங்களை வென்றது. தனித்தனியாகப் போட்டியிட்ட இடதுசாரிக் கட்சிகளும் 20 ஆசனங்களை வென்றன. (ல.ச.ச.க. 10, போல்ஷ்விக் லெனினிசக் கட்சி-5, கம்யூனிஸ்ட் கட்சி-5) தமிழ்க் காங்கிரசும் இலங்கை இந்தியக் காங்கிரசும் ஏழு ஏழு ஆசனங்களைப் பெற்றன. சுயேச்சை அபேட்சகர்கள் 20 ஆசனங்களை வென்றார்கள். சுயேச்சைகள் கையில் தலைவிதி தங்கி இருந்தது. இரண்டு தரப்பும் சுயேச்சைகளை தம்பக்கம் இழுத்தார்கள். திரு. எச். சிறீ. நிசங்கவின் இல்லத்தில் சகல யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகளினது பிரசித்தி பெற்ற ''யமுனா மாநாடு'' நடைப்பெற்றது. ஆனால் அவை உடன்பாடு காண முடியவில்லை. போல்ஷ்விக் லெனினிசக் கட்சியின் தலைவரான கொல்வின் ஆர்.டி. சில்வா சுயேச்சைகளை மூன்று தலைக் கழுதைகள் என்று அழைத்து அவர்களை ஆத்திரம் அடையச் செய்து யூ.என்.பி.-க்கு உதவி புரிந்தார். டி.எஸ். சேனநாயக போதிய சுயேச்சைகளைத் தன் பக்கம் இழுத்தெடுத்து தமது அமைச்சரவையை உருவாக்கினார். ஆனால் தேர்தலில் அவருடைய கட்சி சிறுபான்மையான வாக்குகளையே பெற்றிருந்தது.

1947-ம் ஆண்டுத் தேர்தல் இடதுசாரிக் கட்சிகள் நல்ல முடிவைப் பெற்ற ஒரு தேர்தல் என்பதைக் குறிப்பிட வேண்டும். மொத்தம் 100 ஆசனங்களில் இடதுசாரிக் கட்சிகள் மூன்றும் 20 ஆசனங்களைப் பெற்றன. ஐந்தில் ஒரு பகுதி ஆசனங்கள் 1952-ல்



ஆசனங்கள் 13 ஆகின. 1956-ல் 17 ஆகின. நாடாளுமன்றத்தில் 150 ஆசனங்களைக் கொண்ட 1960, 1965 தேர்தல்களில் இடதுசாரிக் கட்சிகள் வென்ற ஆசனங்களின் விகிதாசாரம் குறைந்தது. 1970-ல் தான் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட ஐக்கிய முன்னணி உடன்படிக்கை காரணமாக அவற்றின் ஆசனங்கள் அதிகரித்தன. ஆனால் 1947-ன் மட்டத்தை அவை எட்டிப் பிடிக்கவில்லை.

1948-ம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதல் என்ற கேலி நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்தப் போலி அதிகார மாற்றத்தின் அடிப்படையைப் பற்றி நான் முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இந்தப் போலியான மாற்றம் கூட டி.எஸ். சேனநாயக பாராளுமன்றத்தின் அனுமதியின்றிச் செய்துக் கொண்ட பிரிட்டனுடனான பாதுகாப்பு உடன்படிக்கையின் பின்னரே நடைபெற்றது என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த உடன்படிக்கை பின்னர் ஒருபோதும் ரத்துச் செய்யப்படவில்லை. இலங்கை ஒரு நவகாலனியாகி விட்டது.

பெரும்பான்மை மக்கள் தன்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை டி.எஸ். சேனநாயக நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே அவர் அடுத்த தேர்தலில் பெரும்பான்மையைப் பெற தன்னால் இயன்ற வழிகளில் எல்லாம் பாடுபட்டார். அவர் (தேர்தல் தொகுதி) மக்களுக்கு ஒழுங்காக லஞ்சம் வழங்க ஆரம்பித்தார். இலங்கை இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரிட்டனுக்கு ரப்பர் விற்ற காசை அப்பொழுது பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் லண்டனில் மீதமான ஸ்ரேர்லிங் இருந்தது. சேனநாயக உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து இந்த மீதம் பணத்தை வீணாக்கினார். இந்தப் பணத்தை தொழிற்துறை இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் முதலீடு செய்திருந்தால் நாட்டுக்குப் பெரும் பலன் கிடைத்திருக்கும். ஆனால் சேனநாயக தொழிற்துறை வளர்ச்சியில் நம்பிக்கை கொள்ளவில்லை. அவருடைய காலத்தில்தான் அரிசிக்கு மானியம் வழங்கும் கெட்ட பழக்கம் ஆரம்பித்தது. நாட்டின் பொருளாதார நாசத்துக்கு பெரிதும் வழிவகுத்த இந்த நடவடிக்கையை டி. எஸ். சேனநாயக அரசாங்கம் வேண்டுமென்றே செய்தது.

1948-ன் முடிவுக்கு முன் டி. எஸ். சேனநாயக தனது முன்னாள் எதிரியான ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை பதவி கொடுத்து தன் பக்கம் வென்றெடுத்தார். பொன்னம்பலம் 1947 தேர்தலில் சேனநாயகாவின் அபேட்சகரான ஏ. மகாதேவாவை (சேர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொன்னம்பலம் அருணாசலத்தின் மகன்)யாழ்ப்பாணம் ஆசனத்தில் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே டி.எஸ்.சும், ஜீ ஜீ.யும் ஒன்று சேர்ந்தது ஒரு சந்தர்ப்பவாதச் செயலேயாகும். இதனால் தமிழ்க் காங்கிரஸ் பிளவுபட்டது. எஸ்.ஜே. செல்வ நாயகம் சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்தார். வடக்கில் வகுப்புவாத அரசியலை அது தொடர்ந்து நடத்தியது. 1948-க்குப் பின் தமிழ்க் காங்கிரஸ் தமிழர் அரசியலிலும் இலங்கை அரசியலிலும் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கத் தவறியது. பொன்னம்பலம் ஒருவாறு 1970 வரை தனது ஆசனத்தைப் பிடித்துக் கொண்டார். பொன்னம்பலம் தமது 50-க்கு 50 கோரிக்கையைக் கை விட்டார். அது மட்டுமல்ல, இந்திய வம்சாவளியினரான பெருந் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்த டி. எஸ். சேனநாயகவின் நடவடிக்கைகளுக்கு அவர் ஆதரவளித்தார்.

1951-ல் யூ.என்.பி.-யில் நெருக்கடி ஏற்பட்டது. இலங்கையின் எதிர்கால வளர்ச்சிகளைப் பாதிக்கும் நிகழ்ச்சி அது. சபையின் தலைவராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக டி.எஸ். சேனநாயகவைச் சுற்றியிருந்தவர்களில் மிகவும் திறமையானவர் ஆவார். இலங்கையின் ஏகாதிபத்தியச் சார்பான நிலப் பிரபுத்துவக் குடும்பம் ஒன்றில் பிறந்த அவர் முக்கியமான கண்டி நிலப்பிரபுத்துவக் குடும்பம் ஒன்றில் திருமணம் செய்தார். அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தாராளவாதக் கல்வி பெற்றார். மிகச் சிறந்த நாவலரான அவர் டி.எஸ்.சுக்குப் பிறகு தான்தான் என்று நினைத்தார். ஆனால் 'கிழவன்' சேனநாயகாவுக்கு வேறு எண்ணங்கள் இருந்தது தெரிந்தது. அவர் எஸ் டபிள்யூ.ஆர்.டி.-க்கும் தனது மருமகரான சேர். ஜோன் கொத்தலாவலவிற்கும் இடையில் இருந்த போட்டியை மூட்டி விட்டார். தன்னுடைய இடத்தைத் தனது மகன் எடுக்க வேண்டும் என்று விரும்பினார். ஏமாற்றம் அடைந்த பண்டாரநாயக யூ.என்.பி.யை விட்டு விலகி எதிர்த் தரப்பில் சேர்ந்தார்.

அதே ஆண்டு பண்டாரநாயக சிறீலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்ததுடன் யூ.என்.பி.யை அவர் என்ன காரணத்தால் விட்டு விலகினாலும் சகல யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகளையும் ஐக்கியப் படுத்தி சாதாரண மக்களின் தேசியவாத, கலாச்சார அபிலாட்சைகளுக்குக் குரல் கொடுக்கும் வாய்ப்பை உணர்ந்து கொண்டார். அவர் ஒரு டொனமோர் புத்த மதத்தவர்; சோற்றுக் கிறிஸ்தவர்களின் மறுபக்கம். அவர் தேசிய உடை அணிந்தார்.



அவர் மேற்கத்தைய கலாச்சாரத்தில் மூழ்கியவராக இருந்த போதும் சிங்கள மொழிக்காக வாதாடினார். மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர் இவற்றைச் செய்தார். இது அவருக்குப் பெரிதும் உதவியது. இது மன்னிக்கக் கூடிய சந்தர்ப்பவாதம். ஆனால் தற்பொழுதைக்கு அவர் அரசியல் வனாந்தரத்தில் இருந்தார்.

1952-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி காலிமுகத் திடலில் டி.எஸ். சேனநாயக குதிரையில் இருந்து விழுந்து இறந்தார். உடனே யார் அவருடைய இடத்தை எடுப்பது என்ற போட்டி நடைபெற்றது. இதைப் போட்டியாளரில் ஒருவரான சேர். ஜோன் கோத்தலாவலவின் ஆதரவாளர் ஒருவர் மிகவும் பரிச்சயமான முறையில் பதிவு செய்துள்ளார். ''பிரதமர் போட்டி'' என்ற நூலில் அவர் இதுபற்றி எழுதினார். ஆனால் ''கிழவன்'' புதை குழியிலிருந்து யார் பிரதமர் என்பதைத் தீர்மானித்தார். தனக்கு ஏதேனும் அசம்பாவிதம் நிகழ்ந்தால் தனது மகன் டட்லியை அரசாங்கத்தை அமைக்க அழைக்கும்படி டி. எஸ். சேனநாயக (அப்பொழுது இங்கிலாந்தில் விடுமுறையில் இருந்த) கோல்பரிப் பிரபுக்குப் புத்திமதி கூறியிருந்தார். கோல்பரி அவசர அவசரமாக திரும்பி வந்து இதையே செய்தார்.கோல்பரி டி.எஸ்.இன் மிகவும் சிரேஷ்ட சகலபாடியான சேர். ஜோன் கொத்தலாவலவைப் புறக் கணித்து விட்டு டட்லியை அழைத்தார். சேர். ஜோன் சற்றுக் காலம் முணுமுணுத்து விட்டு இறுதியில் டட்லிக்குக் கீழ் பதவி வகிக்க இசைந்தார்.

## சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் பயணங்கள்

1952-ல் மக்கள் சீனாவுக்குச் செல்லும் முதல் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. 1952-ன் பிற்பகுதியில் பீக்கிங்கில் நடைபெற்ற ஆசியா, அவுஸ்திரலாசியா ஆகியவற்றுக்கான சமாதான மாநாட்டிற்கு நான் ஒரு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டேன். எல்லாமாகப் 10 பிரதிநிதிகள் இலங்கையிலிருந்து சென்றார்கள். எச்.ஜி.எஸ். ரத்னவீராவும் நானும் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், பிலிப் குணவர்தனாவும் துறைமுகத் தொழிலாளியாக இருந்து தலைவராகிய டி.ஏ. பியதாஸவும், விப்ளவகாறா லங்கா சம சமாஜக் கட்சியிலிருந்தும், எட்மண்ட் சமரக் கொடியும் டாக்டர் ஹெக்டர் பர்ணாண்டுவும் லங்கா சம சமாஜ கட்சியிலிருந்தும், எஸ். டி. பண்டாரநாயக சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் பிரதிநிதிகளாகச் சென்றோம். அத்துடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரு. கே. வைகுந்தவாசனும் அவருடைய மனைவியும் வண. நாரவில தர்மரத்னாவும் வந்தார்கள். வண. நாரவில தர்மரத்ன பிரதிநிதிக் கோஷ்டியின் தலைவராகவும் நான் செயலாளராகவும் பணியாற்றினோம். பிரதிநிதிக் கோஷ்டி உறுப்பினர்கள் அனை வரும் ஒன்றாகச் செல்லவில்லை.

நான் புதுடில்லிக்குச் சென்று பீக்கிங் மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்த இந்தியப் பிரதிநிதிக் கோஷ்டியின் சிலரைச் சந்தித்தேன். டில்லியிலிருந்த நான் இரவு பாங்கொக்கில் தங்கி ஹாங்ஹாங்கிற்குச் சென்றேன். அப்பொழுதுதான் நான் முதற் தடவையாக அந்தப் பளபளக்கும் சீனாவின் எல்லைத்தீவுக்குச் சென்றேன். அது இப்பொழுது பிரித்தானியர் வசம் இருக் கின்றது. ஹாங்ஹாங்கிலிருந்து சீன பயண சேவை அலுவலகம் எமது பிரயாண ஒழுங்குகளைக் கவனித்தது. கவுலூனில் அதற்கு ஒரு அலுவலகம் இருந்தது. ஒரு சீனத் தோழர் எங்கள் கூட வர ஒரு சில மணி நேரத்தில் புகைரதம் மூலம் சென்று நாம் சீன எல்லையை அடைந்தோம். ஹாங்ஹாங்கிற்கு எனக்கு விசா தேவையில்லை. சீனாவைப் பொறுத்தவரையில் அப்பொழுது இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் ராஜதந்திர உறவுகள் இருக்கவில்லை. எனது பாஸ்போட்டில் சீனாவுக்கான அனுமதி பொறிக்கப்படவில்லை. பிரித்தானிய நாட்டின் அதிகாரிகளைக் கொண்ட ஹாங்ஹாங் குடியரசுப் பகுதிக்கூடாக நாம் செல்ல வேண்டியிருந்தது. அவர்களில் ஒருவர் எனது பாஸ்போட்டைத் தட்டிப் பார்த்துவிட்டு, சீனாவில் பயணம் செய்ய அதில் அனுமதி பொறிக்கப்படவில்லை எனவும், போவதென்றால் அது என்னு டைய பொறுப்பு எனவும் அவர் கூறினார். எனக்கு அது நன்கு தெரியும் என்று நான் கூறினேன்.

பெரும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் நான் ஒரு சில நூறு கஜ பொது இடத்தை நடந்து கடந்து சீன மக்கள் குடியரசுக்குள் பிரவேசித்தேன்.

எமக்கு அங்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கைப் பிரதிநிதிகள் கோஷ்டியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களைத் தவிர வேறு பல நாடுகளின் பிரதிநிதிகளும் எங்களுடன் எல்லை யைக் கடந்து சீனாவுக்குள் வந்திருந்தார்கள். பல்வேறு பிரதிநிதி கோஷ்டிகளுக்கும் சீன மொழிப் பெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட் டிருந்தார்கள். இவர்களில் சிலர் அழகாக ஆங்கிலம் பேசினார்கள். அவர்கள் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் என நாம் அறிந்தோம். சீனாவுக்கு உள்ளேயிருந்த முதலாவது எல்லைப்



பட்டினமான சம் சுன்னிலிருந்து நாம் கன்ரனுக்குப் புகைரதம் மூலம் சென்றோம். அங்கிருந்து புகைரதம் மூலம் கன்ரனுக்கு செல்ல வேண்டி இருந்தது. அதற்கிடையில் எமக்கு சீன உணவும் அடிக்கடி பச்சை இலைத் தேநீரும் கிடைத்தன. இந்த பச்சை இலைத் தேநீர் வழங்குவது எமது நாட்டில் வெற்றிலை பாக்கு வழங்குவது போன்றது. அது ஒரு வரவேற்கும் முறை. இத் தேநீரை முதல் தந்துவிட்டுத்தான் சீனர் உரையாடத் தொடங்கு வார்கள். சிலருக்கு இதைக் குடிப்பது கஷ்டம். எனக்குக் கஷ்டம் எதுவும் இருக்கவில்லை. இதற்குப் பின்னர் இயன்ற போதெல் லாம் நான் அதைக் குடித்துள்ளேன். இத் தேநீருக்கு சீனி சேர்ப்ப தில்லை. கறுப்பு தேயிலையிலும் அதன் ருசி வித்தியாசமானது. சில மருத்துவத் தகைமைகள் அதற்குண்டு என்று கூறுவர்.

மாலையில் மதிய போசனத்தை முடித்துக் கொண்டு நாம் புகைரதத்தில் கன்ரன் புறப்பட்டோம். நவ சீன புகைரதங்கள் பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டும். வேறு எந்த நாட்டிலும் அவ்வளவு சுத்தமாக புகைரதங்களை நான் கண்ட தில்லை. ஹாங்ஹாங்கிலிருந்து நாம் சென்ற புகைரதத்துடன் ஒப்பிடும்போது அவை சுத்தத்தில் மலைக்கும் மடுவுக்கும் இடை வித்தியாசம் உள்ளவையாக இருந்தன. அடிக்கடி புகைரத ஊழியர்கள் வந்து புகைரதப் பெட்டிகளை ஈரமான துணித் தடிகளால் துடைத்தார்கள். சிகரெட் சாம்பல் கிண்ணங்களையும் கழிவுப் பொருள் கூடைகளையும் துப்பரவு செய்தார்கள். சீனாவில் கம்யூனிஸ்டுகளின் ஆட்சி ஏற்படுவதற்கு முன் சீனாவின் அநேகப் பகுதிகளுக்கு ஒழுங்கான புகைரத சேவை இருக்கவில்லை. சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர்தான் புகைரதங் கள் கன்ரனிலிருந்து பீக்கிங்கிற்கு ஒழுங்காகவும் நேரந் தவறா கலும் ஓடின. நாம் மூன்று மணிக்குச் சற்றுக் கூடுதலான நேரத்தில் கன்ரனை அடைந்தோம்.

நாம் அடுத்த நாள் கன்ரனிலிருந்து பீக்கிங்கிற்கான நீண்ட தூரப் புகைரதத்தில் சென்றோம். இரண்டு இரவுகளும் மூன்று பகல் வேளைகளும் நாம் பயணம் செய்தோம். அப்பொழுதுதான் நான் கன்ரனிலிருந்து பீக்கிங்கிற்குப் புகைரதம் மூலம் பயணம் செய்தேன். பின்னர் செய்த 10 பயணங்களும் விமானம் மூலம் நடைபெற்றன. அப்பொழுது உலகின் மிக அகலமான நதிகளில் ஒன்றும் சீனாவின் மிகப் பெரிய நதியுமான யாங்சி நதிக்கு மேலாக புகைரதப் பாலம் இன்னும் கட்டப்படவில்லை. புகை ரதம் பிரிக்கப்பட்டு படகுகள் மூலம் நதிக்கு மேலாக எடுத்துச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்லப்பட்டது. யாங்சி நதிப் பாலம் கட்டிய பின்னர் பயண நேரம் மிகுதியும் குறைந்தது. நாம் புகை ரதத்தில் பீக்கிங் செல்லும் மற்றப் பிரதிநிதிகளுடனும் சீன மொழிப்பெயர்ப்பாளர் களின் உதவியுடன் சீனப் பயணிகளுடனும் உரையாடினோம்.

பீக்கிங்கில் இன்னும் பெரிய வரவேற்பு எமக்கு நடந்தது. யுத்தத்திற்கு முந்தியக் காலச் சீனாவின் பீக்கிங் ஹோட்டலில் எமக்கு தங்க வசதி செய்தார்கள். அதற்கு முன்னால் தியென் அன்மென் வீதிச் சதுக்கம் இருந்தது. சமாதான ஹோட்டல் என்று அழைக்கப்படும் பல மாடி ஹோட்டல் அதிவேகத்தில் அமைக்கப் பட்டு சமாதான மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளுக்கெனத் திறந்து விடப்பட்டது. சமாதான மாநாடு பெரும் தடபுடலாக நடைப் பெற்றது. அது சீனாவின் முதலாவது சர்வதேசியப் பிரச்சார விஷயமாகும். அதை ஒட்டிப் பெரும் செலவு செய்யப்பட்டது. இந்த மாநாட்டின் பொழுதுதான் இலங்கை - சீனா ரப்பர் - அரிசி ஒப்பந்தம் செய்யப்பட்ட நற்செய்தியை நாம் கேட்டோம்.

இந்த ஒப்பந்தத்தின்படி சீனாவின் அரிசிக்குப் பண்டமாற்றாக ரப்பரைக் கொடுக்க இலங்கை இசைந்தது. ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான அமெரிக்க ஆதரவாளரின் கடும் எதிர்ப்பின் மத்தியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதனாலேயே 'யாங்கி டிக்கி' என்ற பட்டத்தை ஜே. ஆர். பெற்றார். ஒப்பந் தத்தைக் கைச்சாத்திடும் நடவடிக்கைக்கு ஆர். ஜி. சேனநாயக தலைமை தாங்கினார். அவர் 'சைனா டிக்கி' என்று பட்டம் பெற்றார். அது உண்மையில் நல்ல செய்திதான். அரசாங்கத்தின் உதவித் தலைவருள் ஒருவரும் பிரசித்தி பெற்ற கவிஞருமான கூ-மோ-ஜோ ஒப்பந்தத்தில் கைச்சாத்தீட்டைக் கொண்டாட விருந்து நடத்தினார். சீனாவில் இருப்பது உண்மையில் மகிழ்ச்சி நிறைந்த ஒரு நிகழ்ச்சியாகும். சீனா மிகப் பெரிய நாடுகளில் ஒன்று என்பது மட்டுமல்ல. உலகில் மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடும் கூட. இன்று அதன் மக்கள் தொகை நூறு கோடி யைத் தாண்டி விட்டது. உலக மக்கள் தொகையில் இது கால்வாசி ஆகும். சீனாவின் மக்கள் தொகை அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் அனைத்திலும் மொத்த மக்கள் தொகைக்குச் சமமானது. சீனா புராதன பண்பட்ட நாகரிகமுடைய ஒரு நாடும் ஆகும். அது 5,000-த்திற்கு மேலான ஆண்டுகால வரலாறுடைய நாடும் ஆகும். நூற்றாண்டுகளாகப் பிரபுத்துவ ஆட்சியின் கீழும் பின்னர் ஏற்பட்ட அரை - ஏகாதிபத்திய அடக்கு முறையின் கீழும் சீனா வறிய பண்ணை அடிமைகளும் அடிமை களும் உடையதோர் நாடாகியது. ''கூலி'' என்ற பதம் முதலில் சீனத் தொழிலாளரை குறிக்கப் பாவிக்கப்பட்டது. அரசியல் ரீதியில் சீனா ஆசியாவின் நோயாளியாக இருந்தது. 1949-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி தியென் அன்மென் சதுக்கத்தில் 5 நட்சத்திர தேசியக் கொடியை தலைவர் மாசேதுங் ஏற்றி வைத்த போது ''சீன மக்கள் எழுந்து விட்டார்கள்'' என்று பிரகடனம் செய்தவாறு முன்னைய அடிமைகள் அனைத்தும் முடிவுக்கு வந்தன.



மனித குலத்தின் வரலாற்றைத் தீவிரமாக மாற்றிய மூன்று மகத்தான கண்டுபிடிப்புகளை அச்சுக்கலை, வெடிமருந்து, திசையறிகருவி ஆகியவற்றை உலகிற்கு தந்த நாடு சீனா.

ஆனால், சீனா உலகிற்கு ஈந்த மிகப்பெரிய அன்பளிப்பு, எமது யுகத்தின் மாபெரும் மார்க்சிய - லெனினியவாதியாகிய தோழர் மாசேதுங்தான் என்று நான் கருதுகின்றேன். மனித குலத்தின் வரலாற்றில் தமது காலடியைப் பதித்துச் சென்ற அரிதான மேதைகளில் தோழர் மாசேதுங்கும் ஒருவர். கார்ல் மார்க்ஸ் எப்படி ஜெர்மானியர்களுக்கு மட்டும் உரித்தானவர் அல்ல என்பது போலவும், லெனின் ரஷ்யர்களுக்கு மட்டும் உரித் தானவர் அல்ல என்பது போலவும் மாசேதுங்கும் சீனருக்கு மட்டும் உரித்தானவர் அல்ல. இவர்கள் முழு உலகத்துக்கும் உரித்தானவர்கள்.

## கிழக்கு சிவக்கிறது, சூரியன் உதிக்கிறது சீனாவில் தோன்றுகிறார் மாசேதுங்

தலைவர் மாசேதுங்கையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் பாராட்டி ஒரு சாதாரண சீன விவசாயி எழுதிய பாடலின் ஆரம்ப வரிகள் இவை. ஒரு கட்டத்தில் இந்த பாடல் ஏறக்குறைய சீனாவின் தேசிய கீதமாகியது. இந்தச் சாதாரண வரிகளுக்குப் பின்னால் ஆழமான உண்மை இருப்பதுதான் இதற்கான காரண மாகும்.

மாசேதுங் இன்னும் பதினொரு தோழர்களுடன் சேர்ந்து 1921-ம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தார். கட்சியின் ஆரம்ப காலத்தில் சீனக் கம்யூனிஸ்டுகள் சீனாவை நிலப்பிரபுத்துவத்திலிருந்தும் ஏகாதிபத் தியத்திலிருந்தும் விடுதலை செய்வதற்காக பூர்ஷ்வாப் புரட்சிவாதி யான டாக்டர் சன் யாட் சென் தலைமை தாங்கிய கொமிங்தாங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடன் கூட்டணி சேர்ந்து கொண்டார்கள். சன் யாட் சென் ஒரு முற்போக்கான புத்திஜீவி. புதிதாகத் தோன்றிய சோவியத் யூனியனுடன் நட்புக்காக அவர் நின்றார். கம்யூனிஸ்ட் கட்சி, கொமிந்தாங் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளில் ஒழுங்கில் சோவியத் யூனியனின் உதவியுடன் கன்ரனில் வாம்போவா இராணுவக் கழகம் அமைக்கப்பட்டது. வடதிசைப் படையெடுப்பு ராணுவத்தில் கம்யூனிஸ்டுகள் கொமிந்தாங்குடன் ஊக்கமாகக் கலந்து கொண்டார்கள். இந்த இராணுவம் கன்ரனிலிருந்த வடக்கு நோக்கிய படை நடப்புச் செய்து ஷாங்காயை விடுதலை செய்தது. இதற்கிடையில் சன் யாட் சென் காலமாகினார். அவருடைய பதவிக்கு வந்த சியாங்கை ஷேக் ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தன்னை விற்று கூட்டணியை குழப்பியடித்து ஷாங்காயில் கம்யூனிஸ்டுகளைப் பெருமளவில் படுவதை செய்தார். கம்யூனிஸ்டுகளுக்கும் கொமிந்தாங்குக்கும் இடையிலான முதலாவது உள்நாட்டு யுத்தம் இவ்வாறுதான் ஆரம்பித்தது.

1927-ல் இலையுதிர் கால அறுவடை எழுச்சிக்குப் பின் மாசேதுங் முதலாவது சீன செஞ்சேனையை சிங்காங் மலைகளுக்கு இட்டுச் சென்றார். அவர் யுத்தப் பிரபுகளுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பாவித்துச் சீனாவிலான சோவியத்துக்களை அமைத்தார். இந்த சோவியத்துக்கள் இடைவிடாது எண்ணிக்கையிலும் அளவிலும் வளர்ந்தன. சியாங்கை ஷேக் கம்யூனிஸ்டுகளை நசுக்க ஐந்து சுற்றி வளைப்பு இயக்கங்களை நடத்தினார். ஆனால் நசுக்க முடியவில்லை. இந்தக் காலத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் மாசேதுங் முன்வைத்த நீடித்த காலக் கொரில்லா யுத்தத்தின் ராணுவ யுத்த தந்திரத்தை மேற்கொள்ளவில்லை. இதனால் இழப்புகள் ஏற்பட்டன. ஐந்தாவது சுற்றி வளைப்பு இயக்கத்தின்போது சீன செஞ்சேனை இன்று புகழ் பெற்றிருக்கும் நீண்ட படை நடப்பில் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டது. நீண்ட படை நடப்பு என்பது உண்மையில் ஒரு பின்வாங்கலே. முன்னர் மற்ற மனிதர் சென்றிராத பகையினப் பிரதேசத்துக் கூடாகவும் திபேத்தின் ஒரு பகுதிக் கூடாகவும் தெற்கிலிருந்து வடமேற்குக்கு செஞ்சேனை செய்த நீண்ட படை நடப்பின் கஷ்டங்களை அமெரிக்க நூலாசிரியரான எட்கார் ஸ்னோ ''சீனாவுக்கு மேல் சிவப்பு நட்சத்திரம்'' என்ற தமது நூலில் அற்புதமாக வர்ணித்துள்ளார்.

இந்த நீண்ட படை நடப்பின் போதுதான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1935-ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் சுன்யி என்ற பட்டினத்தில் மாநாடு ஒன்றை நடத்தி முதல் தடவையாக



மாசேதுங்கின் தலைமையை ஏற்றுக் கொண்டது. அங்கிருந்து செஞ்சேனை யெனானுக்குப் படை நடப்புச் செய்தது. யெனானில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி 13 ஆண்டு காலமாகத் தங்கியிருந்து யப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கியதுடன் சீனாவின் விடுதலைக்கும் தயார் செய்தது. இதனால்தான் யெனானை சீனப் புரட்சியின் தொட்டில் என்று அழைப்பார்கள்.

சீனாவிலும் உலகிலும் முக்கியமான சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய நாடுகளில் பாசிசம் அதிகாரத்துக்கு வந்திருந்தது. யப்பானிய ராணுவ வெறியர்கள் மஞ்சூரியாவை கைப்பற்றி சீனாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பை தொடங்கினார்கள். யப்பானியர்கள் இடைவிடாது மேற்கு நோக்கி முன்னேறினார்கள். கம்யூனிஸ்டுகளுடன் உள்நாட்டு யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த சியாங்கை ஷேக் சண்டை எதுவுமின்றிப் பின்வாங்கினார். இந்த வேளையில்தான் சீனக் கம்யூனிஸ்டுகள், உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தி கூட்டாக யப்பானை எதிர்க்கும்படி கொமிந்தாங்கிற்கு வேண்டுகோள் விடுத்து அரசியல் அரங்கை வெளிச்சப்படுத்தினார்கள். இந்த அறைகூவல் சகல பகுதி மக்கள் மத்தியிலும், குறிப்பாக தேசியவாதிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இதனால் 1937-ல் சியானில் சியாங்கை ஷேக்கின் இரண்டு ஜெனரல்கள் சியாங்கை ஷேக்கைக் கைது செய்தார்கள். கம்யூனிஸ்டுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அங்கு சென்ற சூயின்லாயின் புத்திமதியின் பேரில் யப்பானுக்கு எதிரான தேசியப் போராட்டத்துக்கு சியாங்கை ஷேக் தலைமை தாங்க வேண்டும் என்ற நிபந்தனையில் சியாங்கை ஜெனரல்கள் விடுதலை செய்தார்கள். இவ்வாறு கம்யூனிஸ்டுகளுக்கும் கொமிந்தாங்கிற்கும் இடையிலான இரண்டாவது ஐக்கிய முன்னணி ஆரம்பமாகியது.

உண்மையில் கம்யூனிஸ்டுகள்தான் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்துக்கு விவேகமான தலைமை கொடுத்தார்கள். சியாங்கை ஷேக் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் இது கம்யூனிஸ்டுகளுக்குப் பெரிதும் உதவியது. அவர்கள் மதிப்புள்ள ராணுவ அனுபவத்தைப் பெற்றது மாத்திரமல்ல, தேசிய ரீதியில் அரசியல் அங்கீகாரத்தையும் பெற்றார்கள். யப்பான் சரணடைந்த பின் கொமிந்தாங்கிற்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையில் கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சிகள் நடைபெற்றன. மாசேதுங்கே பேச்சு வார்த்தைகளுக்காக சுங்கிங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்று ஒரு மாத காலம் அங்கே தங்கியிருந்தார். பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறவில்லை. இரண்டு தரப்புகளும் இறுதியான உள்நாட்டு யுத்தத்துக்குத் தயாரிப்புச் செய்தன. கொமிந்தாங்கில் தான் ஆயுதங்களை சரண் செய்ய வேண்டும். ஒருபோதும் கம்யூனிஸ்டுகளுக்கு அல்ல என்று யப்பானியப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் கொமிந்தாங்கிற்கு உள்ளே பெருமளவு ஊழல் நிலவியபடியால் இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களில் பெரும் பகுதி கம்யூனிஸ்டுகளின் கரங்களை எட்டின. மாசேதுங்கின் விவேகமான தலைமையின் கீழான கம்யூனிஸ்டுகளின் விவேகமான யுத்த தந்திரமும் மேம்பாடான தந்திரோபாயங்களும் காரணமாக கடினமான இரண்டாவது உள்நாட்டு யுத்தத்தில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். சியாங்கை ஷேக் தைவானுக்குத் தப்பி ஓடிச் சென்றார். 1949-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. சீன மக்கள் எழுந்து விட்டார்கள்.

சமாதான மாநாட்டின் முடிவில் சீனாவின் பல்வேறு பாகங்களைச் சென்று பார்க்க பிரதிநிதிக் கோஷ்டிகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. சீனாவின் மிகப் பெரிய நகரமும் கடல் துறைமுகமான ஷாங்காய் உட்பட பல நகரங்களை எமது பிரதிநிதிக் கோஷ்டி சென்று பார்த்தது.

இப்பயணத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் தலைவர்களில் எவரையும் நான் சந்திக்கவில்லை. நாம் சீனாவில் இருந்தபோது அந்த ஆண்டின் டிசெம்பரில் அவுஸ்திரியாவின் வியென்னாவில் நடைபெறவிருந்த உலக சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள எமக்கு அழைப்புக் கிடைத்தது. வண. தர்மரத்ன, எட்மண்ட் சமரக் கொடி, டாக்டர் ஹெக்டர் பர்ணாண்டு, டி. ஏ. பியதாச ஆகிய நான்கு பிரதிநிதிகள் இலங்கை திரும்பினார்கள். மற்ற அறுவரும் உலக சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள ஐரோப்பா செல்லத் தீர்மானித்தோம். மாநாட்டுக்கு இன்னும் ஒரு மாத காலம் இருந்த படியால் அக்காலத்தில் சோவியத் யூனியனைச் சென்று பார்க்க நாம் தீர்மானித்தோம்.

சோவியத் அரசாங்கம் எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. நாம் பீக்கிங்கிலிருந்து மொங்கோலியாவின் தலைநகரான உலன்பத்தோரில் தரித்து நின்று, சோவியத் சைபீரியாவின் இர்க்குஸ்க் சென்றடைந்தோம். அப்பொழுது குளிர் காலம் ஆரம்பித்துவிட்டது, கடுமையான குளிராக இருந்தது. இர்க்குஸ்கில் நாம் விமானத்திலிருந்து இறங்கியபோது கடுமையான



உறைபனி செய்து கொண்டிருந்தது, நாம் விமான நிலையக் கட்டடத்துக்குள் ஓடிச் சென்றோம். வெப்பநிலை பூஜ்யத்துக்குக் கீழ் 24 டிகிறி சென்றிகிறேட்டாக இருந்தது. இது நான் எனது வாழ்வில் அனுபவித்த மிகக் குறைந்த வெப்ப நிலையாகும். சோவியத் தூர கிழக்கிலிருந்து மொஸ்கோவுக்குச் செல்லும் விமானம் ஒன்றில் செல்லலாம் என்ற நம்பிக்கையில் நாம் சில நாட்கள் இர்க்குற்கியில் தங்கி இருந்தோம், அதிருஷ்டவசமாக அடுத்த வாரம் மொஸ்கோவில் நடைபெறவிருந்த ஒக்டோபர் புரட்சி ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள தூர கிழக்கில் உள்ள செஞ்சேனை அதிகாரிகள் சிலர் சென்ற விமானம் எமக்குக் கிடைத்தது, அந்த விமானம் நேரடியாக மொஸ்கோ செல்லவில்லை. மோசமான கால நிலை காரணமாக இடைக்கிடை நின்று சென்றது.

இறுதியில் நவம்பர் மாதம் 6-ஆம் திகதி அதிகாலை நாம் மொஸ்கோவை அடைந்தோம். எமக்குக் கீழே நகரத்தின் ஒளி விளக்குகள் ஜெக ஜோதியாகத் தெரிந்தன. ஹோட்டல் மொஸ்கோவில் நாம் தங்கினோம். ஒக்டோபர் புரட்சியின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நவம்பர் மாதம் 6-ஆம் திகதி இரவில் புகழ்பெற்ற போல் ஷோயித் தியேட்டரில் கொண்டாட்டக் கூட்டம் ஒன்று நடைபெறுவது வழக்கம். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். அதைத் தொடர்ந்து ஒரு கலாச்சார நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு செல்லும் அழைப்பிதழுக்குப் பெரும் கிராக்கியாக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையில் ரத்னவீராவுக்கும் எனக்கும் இரண்டு அழைப்பிதழ்கள் கிடைத்தன. ரத்னவீராவுக்குக் கடும் காய்ச்சல் அடித்தபடியால் நான் மட்டும் சென்றேன்.

அது என்னுடைய வாழ்வில் ஏற்பட்ட ஒரு மகத்தான தருணம். அன்றுதான் ஸ்டாலின் கடைசித் தடவையாக இக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார். தமது அரசியற் குழுத் தோழர்களுடன் ஸ்டாலின் மேடையில் அமர்ந்திருந்தார். நான் அவருடன் பேச முடியவில்லை. ஆனால் அவரை முழுசாக பார்த்ததில் எனக்கு அளவில்லாத சந்தோஷம். அடுத்த நாள் செஞ்சதுக்கத்தில் உள்ள லெனின் கல்லறைக்குமேல் உள்ள மேடையில் அவர் நின்று ராணுவ, சிவிலியன் அணிவகுப்பைப் பார்வையிட்டபோது எமது பிரதிநிதிக் கோஷ்டியினர் தொலைவிலிருந்து அவரைப் பார்த்தார்கள். நவம்பர் மாதம் 7-ஆம் திகதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாம் செஞ்சதுக்கத்தில் ஆயுதப் படைகளினதும் சிவிலியன் களினதும் பிரமாண்ட அணிவகுப்பைப் பார்த்தோம். சோவியத் மார்ஷல் ஒருவர் சோவியத் ராணுவப் படையின் அணிகளை குதிரை மீது இருந்து பார்வையிட்டார். ஸ்டாலினுக்குப் பக்கத்தில் இருந்து உயர்மட்ட சோவியத் தலைவர் ஒருவர் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். இவை முடிந்ததும் மகோன்னதமான அணிவகுப்பு ஆரம்பித்து மணிக்கணக்காக உருண்டு சென்றது. அன்றுவரை நான் அப்படியான அற்புதக் காட்சியைக் கண்டதில்லை.

ஒக்டோபர் புரட்சியின் பூமி, முதலாவது தொழிலாளர், விவசாயிகள் அரசு தோன்றிய பூமி, லெனின், ஸ்டாலின் ஆகியோரின் பூமி, ஹிட்லரின் பிரமாண்ட ராணுவ இயந்திரத்தை அழித்தொழித்த மாபெரும் வீரர்களின் பூமி. — இத்தகைய சோவியத் யூனியனைச் சென்று பார்க்கவேண்டும் என்பது எனது வாழ்வின் ஒரு பேராவலாக இருந்து வந்தது. சோவியத் யூனியனின் வரலாறு சீனாவின் வரலாற்று அளவு பழமையான தல்ல. இருப்பினும் ரஷ்யாவின் கலாச்சாரமும் நாகரிகமும் எந்த ஐரோப்பிய நாட்டுக்கும் குறைவானதல்ல. ஒக்டோபர் புரட்சிக்கு முன்னர் ரஷ்யாவில் ஏற்பட்ட இலக்கியப் புதுவாழ்வில் உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்கள் சில தோன்றின. ஆனால் ரஷ்யாவைப் பொறுத்த எமது ஈடுபாடு போல்ஷ்விக் கட்சியின் நடவடிக்கைகளுடனும் 1917-ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மகத்தான ஒக்டோபர் புரட்சிக்குத் தலைமை தாங்கிய இக்கட்சியின் மாபெரும் தலைவரான லெனினுடனும் ஆரம்பமாகிறது.

ஒக்டோபர் புரட்சி இடிமுழக்கம் போல உலகம் பூராவிலும் எதிரொலித்தது. முதல் தடவையாக ஒருநாட்டின் சாதாரணமக்கள்-தொழிலாளர்களும் விவசாயிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் இன்றிதம்மால் சமுதாயத்தை ஆள முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தனர். அவர்களிலும் பார்க்கச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று நிரூபித்துக் கொண் டிருந்தனர். நூல்களில் மட்டும் காணப்பட்ட கற்பனாவாதிகளின் கனமான சோஷலிசம் உயிர் பெற்று எழுந்தது. அப்பொழுது இந்தப் புதிய போல்ஷ்விக் குடியரசு முழு ஏகாதிபத்திய உலகத்தாலும் தாக்கப்பட்டது. ஒன்றுக்கொன்று சண்டைபட்டுக் கொண்டிருந்த வல்லரசுகள் தமது பொதுவர்க்க எதிரியான முதலாவது சோஷலிச அரசுக்கு எதிராகப் சண்டைப்பட ஒன்று பட்டது. வின்ஸ்டன் சர்ச்சில் 1919-ஆம் ஆண்டில் பின்வருமாறு



ஜம்பமடித்தார்: ''பதினாலு படைகள் போல்ஷ்விக் அரசுக்கு எதிராகப் படையெடுக்கின்றன. பதினாலு நாட்களில் அந்த அரசு இல்லாது போகும்.'' அது வெறும் டம்பப் பேச்சாகவே அமைந்தது.

1919-க்கும் 1921-க்கும் இடையில் நடைபெற்ற தலையீட்டு யுத்தங்களில் புதிய சோவியத் செஞ்சேனை வெற்றிமேல் வெற்றி பெற்றதுடன் மேற்கு ஐரோப்பிய சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவையும் அது பெற்றுக் கொண்டது. இந்த ஆதரவினால் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிலிருந்து வாபஸ் பெற நிர்ப்பந்திக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தைப் புனரமைத்து வளர்க்கும்பணி மேற்கொள்ளப்பட்டது. அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக சோவியத் யூனியன் பலம் பெற்று வளர்ந்தது. ஆனால் மேற்கின் பூர்ஷ்வா வர்க்கப் புத்திஜீவிகள் ரஷ்யாவில் இருள் இறுதி அழிவு சூழ்ந்திருக்கின்றது என்று கூறினார்கள். முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் இன்றி சமுதாயத்தை நடத்தமுடியாது என்று அவர்கள் வாதிட்டார்கள். இதைச் செய்ய முடியுமா? என்ற சந்தேகக்காரர்கள் சோவியத் யூனியனிலேயே இருந்தார்கள். ட்ரொஸ்கிய வாதத்தினதும் மற்றும் சோவியத் எதிர்ப்புச் சக்திகளினதும் சமூக அடிப்படை இதுவே யாகும். ஆனால் போல்ஷ்விக் கட்சியினர் முதலில் லெனின் தலைமையிலும் பின் ஸ்டாலின் தலைமையிலும் விசேஷ வார்ப்பில் வார்த்தெடுக்கப்பட்டவர்கள். உலகின் வேறெந்தப் பகுதியிலும் முன்னர் முயற்சித்திருக்கப்படாத பல விஷயங்கள் பற்றித் துணிவான முடிவுகளை எடுத்த துணிவான மனிதர்கள் அவர்கள்.

அதிருஷ்டவசமாக சோவியத் யூனியன் உலோகப் பொருட் களும் ஆற்றல் வளங்களும் நிறைந்ததோர் நாடாகும். புரட்சி வெற்றி பெற்ற அந்த ஒரே ஒரு நாட்டில் சோஷலிசத்தைக் கட்டி அமைக்க அவர்கள் உறுதி பூண்டார்கள். அது உண்மையில் ஒரு சிருஷ்டிச் செயலாகும். 1929-31-ல் முழு உலகத்திலும் பொருளா தார நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் சோவியத் யூனியனில் ஏற்பட வில்லை. இதனினும் பெரிய சவால் 1933-ல் ஏற்பட்டது. ஹிட்லர் ஜெர்மனியில் அதிகாரத்துக்கு வந்து, சோவியத் யூனியனை அழித்தொழிக்கும் ஒரே நோக்கத்துடன் இத்தாலியுடனும், யப்பா னுடனும் கொமின்ரேனுக்கு (கம்யூனிச அகிலம்) எதிரான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டான். ஹிட்லருக்கு எதிரான நாடுகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னணி ஒன்றைஉருவாக்க சோவியத் யூனியன் சகல ராஜதந்திர முயற்சிகளையும் எடுத்தது. ஆனால் பிரித்தானிய, பிரெஞ்சு ஆளும் வர்க்கங்களின் துரோகத்தால் 1939-ல் யுத்தம் ஏற்பட்டது. ஜெர்மனியுடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து சோவியத் யூனியன் இரண்டு கால இடைவெளியைப் பெற்றது. ஹிட்லர் ஐரோப்பாவை வென்றடக்கி பின்னர் கிழக்கு நோக்கித் திரும்பி சோவியத் யூனியன் மீது வஞ்சகத்தனமான தாக்குதலைத் தொடுத்ததுடன் இதற்குப் பின்னர், வரலாற்றில் ஏற்பட்ட மிக மகத்தான மக்களின் எதிர்ப்பு யுத்தம் நடைபெற்றது. சோவியத் செஞ்சேனைத் துருப்புகள் ஆரம்பத்தில் யுத்த தந்திர ரீதியில் பின்வாங்கிவிட்டு ஜெர்மன் காட்டுமிராண்டிகளை அவர்களுடைய பெர்லின் குகை மட்டும் துரத்தி அடித்தன. அதே வேளையில் அமெரிக்க, ஆங்கில, பிரெஞ்சுத் துருப்புகள் ஐரோப்பாவின் மீதி பகுதியை விடுதலை செய்தன.

இந்த யுத்தத்தின் பின் சோவியத் யூனியன் பெரும் வல்லரசாக அமெரிக்கா ஒன்றுக்கு மட்டும் அடுத்தாக வளர்ந்தது. சோவியத் யூனியனின் துருப்புகள் கிழக்கு ஐரோப்பாவின் கணிசமான பகுதியை விடுதலை செய்தன. சோஷலிசம் தனியொரு நாட்டின் எல்லைகளைக் கடந்து ஒரு உலக அமைப்பாகிக் கொண்டிருத்தது. பாசிசத்துக்கு எதிரான இந்தப் பொது வெற்றிக்காக சோவியத் யூனியன் புரிந்த அளப்பரிய தியாகம் மற்றக் கூட்டணி நாடுகள் புரிந்த தியாகத்திலும் பார்க்க மிகவும் கூடுதலானது. யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் சோவியத் யூனியன் பிரமாண்ட புனர் நிர்மாண வேலைத் திட்டங்களை மேற்கொண்டது.

இந்த மகத்தான பூமியைத்தான் நாம் இப்பொழுது சென்று பார்த்தோம். எமக்கோ அளவில்லாத உற்சாகம், புதிய சோவியத் தொழிற்துறைச் சக்தியின் சின்னங்களான பல பிரமாண்ட தொழிற்துறை ஆலைகளை நாம் பார்த்தோம். அவற்றின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் வகிக்கும் பாத்திரத்தையும் ஓரளவு பார்த்தோம். அதுபோலவே பல விவசாயக் கூட்டுப் பண்ணைகளையும் நாம் சென்று பார்த்தோம். பண்ணைகள் சோவியத் யூனியனின் விவசாய காட்சிப் பரப்பை மாற்றிக் கொண்டிருந்தன. போல்ஷ்விக்குகளின் புரட்சிகர நடவடிக்கைகள் பற்றிய பதிவுகள் லெனின், ஸ்டாலின் மற்றும் தலைவர்களின் வரலாற்று ரீதியான படங்கள் ஆகியன கொண்ட பல நூதன கலைகளையும் நாம் பார்த்தோம்.

எமது பயணத்தின்போது நாம் லெனின் கல்லறைக்கு சென்று மாபெரும் புரட்சிவாதி லெனினுடைய உடல் கண்ணாடிப் பேழையில் இருப்பதைப் பார்த்தோம். நிரந்தரத் தூக்கத்தில் இருப்பது போன்ற காட்சி அது. விசாலமான செஞ்சதுக்கத்தில் அமைந்திருந்த லெனினுடைய சமாதியைப் பார்க்கத் தினமும் நீண்ட வரிசையான மக்கள் வந்து சென்றார்கள். சிறப்பு விருந்தினர் என்ற முறையில் எம்மை வரிசையில் நிற்க விடாது நேரடியாக அழைத்துச் சென்று காட்டினார்கள். நாம் மௌனமாகச் சென்று தூங்கிக் கொண்டிருந்த லெனினுக்கு எமது மதிப்பைத் தெரிவித்தோம்.



நாம் சோவியத் யூனியனின் ஜோர்ஜியா குடியரசுக்கும் கருங்கடல் கரையில் அமைந்துள்ள அழகான சொச்சி நகரத்துக்கும் சென்று பார்த்தோம். சொச்சியின் அழகு விபரிக்க முடியாதது. அங்கு அரசும் தொழிற்சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களும் நூற்றுக்கணக்கான விடுதிகளையும் ஹோட்டல்களையும் கட்டி அமைத்திருந்தன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது வருடாந்த விடுமுறையைக் கழிக்க அங்கு வந்தார்கள். அங்கு அவர்கள் தங்கியிருந்தபோது ஏற்பட்ட செலவு தமது வீடுகளில் தங்குவதிலும் பார்க்க குறைவானதாக இருந்தது.

சொச்சியில் இருந்தபோது ஒரு சுவையான சம்பவம் நடைபெற்றது. ஓர் ஜொனிக்கெட்ஜே என்ற புரட்சியின் சேவையில் மரணித்த ஒரு மகத்தான போல்ஷ்விக்கின் நூதன சாலையைப் பார்க்க நாம் சென்றிருந்தோம். நாம் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது நாலு வயதுக் குழந்தை ஒன்றைப் பாட்டியம்மாள் தூக்கிச் சென்றார். குழந்தைகளில் விருப்பமான என்னுடன் அவர் விரைவில் சேர்ந்து கொண்டார். நான் அப்பெண் குழந்தையைத் தூக்கிச் சென்றேன். அப்பயணத்தின் முழு நேரத்திலும் அவர் என்னுடனேயே இருந்தார். முடிவில் அவர் தயக்கத்துடன் பிரியா விடை பெற்றுச் சென்றார். சில நாட்களுக்குப் பின் எமது ஹோட்டலின் வெளி அறையில் இருந்தபோது அதே குழந்தை ஓடி வந்து எனது கரங்களைப் பிடித்தது. பாட்டியார் பின்னால் வந்து கதை கதையாய்ச் சொன்னார் தான் ஒரு ஆப்பிரிக்க மாமாவைச் சந்தித்ததாக இக்குழந்தை முன்னர் என்னைக் கண்டது பற்றி வீட்டில் போய்க் கூறினார். என்னை ஒரு ஆப்பிரிக்கர் என்று நினைத்ததை வீட்டுக்காரர் திருத்தி இலங்கையை பூகோளம் படத்திலும் காட்டிக் கொடுத்தார்கள். கறுப்புநிற மாமாக்களையும் நாம் நேசிக்க வேண்டும் வெள்ளைநிற மாமாக்களையும் நாம் நேசிக்க வேண்டும் என்று தோழர் ஸ்டாலின் தமக்குக் கற்றுக் கொடுத்ததாக இக்குழந்தை வீட்டுக்காரருக்கு எடுத்துக் கூறி இந்தக் கறுப்புநிற மாமாவை தான் மிகவும் விரும்புவதாக கூறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தார். கறுப்புநிற மக்களைப் பொறுத்து இத்தகைய சரியான கருத்துக்களை அக்குழந்தை கொண்டிருந்தது அதிசயமானது. நானும் மிகவும் தயக்கத்துடனேயே அக்குழந்தையிடம் பிரியா விடை பெற்றேன்.

அடுத்த மாதம் டிசெம்பரில் அவுஸ்திரியாவின் தலைநகரான வியென்னாவில் நடைபெறவிருந்த முதலாவது உலக சமாதான மாநாட்டில் எமது பிரதிநிதிக் கோஷ்டி கலந்துக்கொள்ள இருந்தது. எமது பிரதிநிதிக் கோஷ்டி மொஸ்கோவில் விமானம் ஏறி வியென்னாவில் இறங்கியது. அந்த நகரம் அழிக்கப்பட்டிருந்தது. யுத்தக் காயங்கள் நிறைந்து காணப்பட்டது. பெர்லினைப் போல வியென்னா நகரமும் சோவியத் பகுதி, அமெரிக்கப் பகுதி பிரித்தானிய பகுதி என பிரெஞ்சு பகுதி நாலு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாநாடு இயல்பாகவே சோவியத் பகுதியில் நடைபெற்றது. உலகின் அநேக நாடுகளின் பிரதிநிதிக் கோஷ்டிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டன. சோவியத் எழுத்தாளர் இலியா எஹ்ரன்பேர்க், பிரசித்தி பெற்ற கன்ரர்பேரி சிவப்பு மதகுரு டாக்டர் ஹிவ் லெற் ஜோன்சன் ஆகிய புகழ் படைத்த மனிதர்களை அங்கு நான் கண்டேன். இத்தகைய மாநாடுகளாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளாலும் பெரிய பயன் உண்டா என்று நான் திரும்பிப் பார்த்து யோசிக்கிறேன். ஆனால் இத்தகைய மாநாடுகள் உலக சமாதானத்துக்கான உணர்வுகளை பிரச்சாரம் செய்தன. இன்னொரு மோதலில் உலகத்தை இழக்க முயற்சித்த சக்திகளைக் கண்டித்தன.

புகழ்பெற்ற ஹப்ஸ்பேர்க் சக்கராதிபத்தியத்தின் தலைநகரும் கல்வி, மருத்துவம், இசை ஆகியவற்றின் பிரசித்தி பெற்ற நகரமுமான வியென்னாவுக்கு அதுவே என்னுடைய முதலாவது பயணமாகும். அது ஒரு அழகான நகரம். நான் பின்னர் பலதடவை அங்கு சென்றேன். உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமை அலுவலகம், பாரிசிலிருந்து வெளியேற்றப்பட்ட பின் வியென்னாவில் சோவியத் பகுதியில் அது அமைந்திருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின் அவுஸ்திரியா சுதந்திரம் பெறும்வரை தலைமை அலுவலகம் அங்கேயே இருந்தது. எமது பிரதிநிதிக் கோஷ்டி இப்பொழுது பிரிந்தது. நான் அமரத்துவ நகரமாகிய ரோமாபுரிக்கு ஊடாக திரும்பிவர தீர்மானித்தேன். ரோமாபுரியைப் பற்றி நான் நிறைய வாசித்திருந்தேன். இத்தாலிக் கம்யூனிஸ்ட் கட்சி நாட்டில் பெரிய சக்தியாக இருந்தது. முசோலினிக்கு எதிரான போராட்டத்தில் அது வகித்த தலைமைப் பாத்திரம் காரணமாகவே அது அந்த அந்தஸ்தைப் பெற்றது. கம்யூனிஸ்ட்



விடுதலைப் போராளிகள்தான் முசோலினியைக் கொன்று அவரைத் தலைகீழாகத் தொங்கவிட்டார்கள். இத்தாலிக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் ரோமாபுரியின் மிகப் பெரிய செம்மாடிக் கட்டிடம் ஒன்றில் அமைந்திருந்தது. விக்டர் எம்மானுவேல் மன்னரின் சிலைக்கு நேர் எதிரே அக்கட்டிடம் இருந்தது. நான் சுற்றுலாப் பஸ் ஒன்றில் சென்றபோது அறிவிப்பாளர் ஒருவர் ''இடது பக்கத்தில் திருவாளர் தொலியாட்டியின் செம்மாளிகையை நீங்கள் காணலாம்'' என்று கூறியதைக் கேட்டு நான் வியப்படைந்தேன். தொலியாட்டி அப்பொழுது கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். யுத்த காலத்தில் மொஸ்கோவில் இருந்தார். நாவன்மை படைத்த தொலியாட்டி பேசுவதைக் கேட்கத் திரளும் கூட்டத்தைக் கொள்ளக் கூடிய மைதானம் ரோமாபுரியில் இருக்கவில்லை என்று கூறுவார்கள். ஆனால் தொலியாட்டி புரட்சிவாதி அல்ல. அவர் ஒரு பாராளுமன்றவாத திரிபுவாதி. அவருடைய நாவன்மையையும், அவர் ஞாயிற்றுக்கிழமைகளில் சேர்ச்சுக்குச் செல்வதும் (மனிதரையும் கடவுளையும் ஏமாற்றும் முயற்சி) அவருக்கு அவ்வளவு உதவவில்லை. அவர் நிரந்தர எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

ரோம் ஒரு சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம். உலகில் வேறு எந்த நகரத்திலும் பார்ப்பதற்கு அவ்வளவு இடங்கள் இல்லை. சென்ற் போல் கதீட்ரல், மைக்கேல் அன்ஜெலோஸ்சின் மகத்தான ஓவியங்கள், பேர்ணி மியூசியம், மைக்கேல் அன்செலோஸ் மோசேஸ் முதலிய அத்தனை அழகுகளையும் நான் கண்டு களித்தேன். புத்தாண்டுக்கு முந்திய நாள் நான் ரோமில் இருந்தேன். நடுநிசியில் ரோமானியர்கள் பழைய போத்தல்களை யன்னல்களுக்கு வெளியே வீசியெறிவதைக் கண்டேன். இத்தாலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசியம் பகுதியின் தோழர்களுடனும் இத்தாலியில் மிகவும் பலம் வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இத்தாலித் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தினேன். ரோமாபுரியிலிருந்து நான் விமானம் மூலம் நாடு திரும்பினேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 7. ஹர்த்தால் முதல் 1956 வரை

1953-ம் ஆண்டு இலங்கை வரலாற்றில் புகழ்மிக்க ஹர்த்தாலின் ஆண்டாகப் பொறிக்கப்படும். வரலாற்று ரீதியான 1947 மே-யூன் பொது வேலைநிறுத்தம் தோற்கடிக்கப்பட்டது முதல் தொழிற்சங்க இயக்கத்தில் பொதுவான மந்தநிலை ஒன்று ஏற்பட்டிருந்தது. கடுமையான அடக்குமுறை காரணமாகவும் ஏறக்குறைய இந்தப் பொது வேலைநிறுத்தத்தின் தலைமைத் தொழிலாளர்கள் அனைவரும் வேலைநீக்கம் செய்யப்பட்டதாலும் தொழிலாளர்கள் சில காலம் ஊக்கமிழந்து இருந்தார்கள். ஒரு புதிய சந்ததி இளம் தொழிலாளர் தலைவர்களைப் பயிற்றவேண்டி இருந்தது. 1947 பொது வேலை நிறுத்தத்தை கடுமையாக அடக்கியபடியால் தொழிற்சங்க இயக்கத்துக்கு மரணஅடி கொடுத்துவிட்டார்கள் என்று அரசாங்கமும் பிற்போக்குவாத முதலாளிகளும் கருதியிருந்தார்கள் என்றால், அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. 1952 அளவில் தொழிற்சங்க இயக்கம் மீட்சி பெற்று, 1952-ன் பொருளாதார நெருக்கடிச் சுமையை அரசாங்கமும் முதலாளிமாரும் தொழிலாளி வர்க்கத்தின்பால் நகர்த்திவிட முயன்றபோது அந்த சவாலுக்கு முகங்கொடுக்க அது தயாராய் இருந்தது.



1952-ல் டட்லி சேனநாயக பிரதமராகிய போது கடுமையான பொருளாதார நெருக்கடி ஒன்று நாட்டில் ஏற்பட்டது. ஏகாதிபத்திய வல்லரசுகள் குறிப்பாக அமெரிக்கா எமது தேயிலை, ரப்பர் ஆகியவற்றுக்கு நியாயமான விலையைத் தர மறுத்த காரணத்தாலும் சர்வதேசிய சந்தையில் நிலவிய பற்றாக்குறையினால் அரிசியின் விலை அதிகரித்த காரணத்தாலும் இலங்கை கடுமையான நெருக்கடியில் சிக்கிக்கொண்டது. யூ.என்.பி-க்கு ஒரேயொரு வழிதான் இருந்தது. அது பிச்சைப் பாத்திரம் ஏந்தி ஏகாதிபத்திய வல்லரசுகளிடமும் அவற்றின் கடன் வழங்கும் ஸ்தாபனங்களிடமும் செல்வதாகும். உலக வங்கி உதவி செய்ய முன் வந்தது. ஆனால் கடன் வழங்குவதற்கு கடுமையான நிபந்தனைகளை விதித்தது. உலக வங்கியின் கடுமையான நிபந்தனைகளை மக்கள் மீது திணிப்பதற்கு முன் பொதுத்தேர்தல் ஒன்றின்மூலம் மீண்டும் தெரிவை நாடும்படி மத்திய வங்கியின் கவர்னராக இருந்த அமெரிக்கராகிய எக்செற்றல் டட்லி சேனநாயகவுக்கு ஆலோசனை கூறினார். இதனை டட்லி செய்தார். பெரிதும் தந்தை மீதிருந்த அனுதாபங் காரணமாக அவர் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்தார்.

1953 நாடாளுமன்றத்தில் பட்ஜெட் பிரேரணையை முன் வைத்த அப்பொழுதைய நிதி அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்தனா அரிசி மானியத்தை வெட்டி 25 சதமாக இருந்த ஒரு படி அரிசியின் விலையை 70 சதமாக அதிகரித்தார். தபால், புகைரதக் கட்டணங்களை அதிகரித்தார். பள்ளிப் பிள்ளைகள் மதிய நேர உணவை பறித்தெடுத்தார்.

ஆனால் மக்கள் இந்தச் சுமையை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. அப்பொழுது இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் பிந்திய ஆண்டுகளில் ஏற்பட்ட அளவிற்கு சீர்திருத்தவாதிகளாக இன்னும் மாறிவிடவில்லை. நெருக்கடியின் சுமைகளை மக்கள்பால் நகர்த்திவிடும் யூ.என்.பி. அரசாங்கத்தின் முயற்சியை எப்படி எதிர்ப்பது என்பது பற்றி ஆராய இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் (சிடியுஎப்) முக்கியமான தொழிற்சங்க கேந்திரங்களின் கூட்டம் ஒன்றை நடத்தியது. இந்த முதலாவது கூட்டம் அப்பொழுது சிடியுஎப் அமைந்திருந்த கொம்பெனித் தெரு குமரன்-ரத்னம் வீதியில் உள்ள 124ஆம் இலக்கத்தில் நடைபெற்றது. ஆட்சேபணை தெரிவிக்குமுகமாக ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தையும் ஹர்த்தாலையும் நடத்த வேண்டும் என்று சிடியுஎப் தான் பிரேரித்தது. பின்னர் இக் கூட்டத்தில் மூன்று இடதுசாரிக் கட்சிகளும் சேர்த்துக் கொள்ளப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் சேர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் வெற்றி பெறவில்லை. இந்திய ஹை கமிஷனின் செல்வாக்குக் காரணமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதிலிருந்து விலகி நின்றது. ஏ. அசீஸ் தலைமையிலான பகுதியின் முயற்சி வெற்றி பெறவில்லை. சிறீலங்கா சுதந்திரக் கட்சியை இந்தப் போராட்டத்தில் சேரச் செய்வதற்கு நானும் திரு. எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகவின் ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்துக்கு சென்றவர்களில் ஒருவனாக இருந்தேன். அவர் இயக்கத்துக்கு ஆதரவைத் தெரிவித்தார். ஆனால் கலந்து கொள்ள மறுத்தார்.

ஹர்த்தால் அறைகூவல் நாட்டில் பிரமாண்ட எதிரொலிப்பை எழுப்பியது. எங்கும் பேரணிகள் நடத்தப்பட்டன. தொழிற்சங்கங்களினதும் மூன்று இடதுசாரிக் கட்சிகளினதும் தலைவர்கள் இந்தப் பேரணிகளில் உரையாற்றினார்கள். ஹர்த்தாலுக்கான அறைகூவல் மூன்று இடதுசாரிக் கட்சிகளாலும் அவற்றின் தலைமையில் இருந்த தொழிற்சங்கங்களாலும் கூட்டாக விடப்பட்டதே அதற்கு இருந்த ஆதரவுக்கான காரணமாகும். ஹர்த்தால் ஆகஸ்ட் 12ஆம் திகதி நடைபெறவிருந்தது. அதனை அடக்க அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்தது. அத்தினத்தில் எல்லாம் சகஜமாக இருக்கும் என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் பொய்ப் பிரச்சாரம் செய்தன. ஏரிக்கரைப் பத்திரிகைகள் இதனை மிகவும் கச்சிதமாகச் செய்தன. 12ஆம் திகதி காலை ''வழக்கம் போல் வேலை'' என்ற பெரிய தலைப்புடன் இப்பத்திரிகைகள் வெளிவந்தன.

ஹர்த்தால் பெரும் வெற்றி ஈட்டியது. போக்குவரத்து முற்றிலும் ஸ்தம்பித்தது. தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. பாதைகளில் தடைகள் போடப்பட்டன. பொலிசாரால் கூட நகர முடியவில்லை. மேற்கு மாகாணத்திலும் தெற்கு மாகாணத்திலும் குறிப்பாக கொழும்பில், நடமாட்டம் நின்றிருந்தது. எங்கும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். அரசாங்கத்தால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியவில்லை. மத்தியானம் 12 மணிக்கு கலகச் சட்டம் பல இடங்களிலும் பிரகடனம் செய்யப்பட்டது. சுடப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலுடன் மக்கள் கலைக்கப்பட்டார்கள். சில இடங்களில் மக்கள் கலைய மறுத்தனர். பொலிசார் சுட்டனர். 12 பேர் யூ.என்.பி. பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.



யு.என்.பி. அரசு இயந்திரத்துக்கு எதிராக மக்கள் குறிப்பிடத்தக்க உறுதியையும் துணிவையும் காட்டி நின்றார்கள். பின்நேரம் இராணுவம் அழைக்கப்பட்டது. அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது. இரவில் ஊரடங்கு சட்டமும் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் மக்கள் அஞ்சவுமில்லை, சரணடையவுமில்லை. அரசு இயந்திரம் சமாளிக்க முடியாமல் திணறுவதை அவர்கள் உணர்ந்தார்கள்.

வெற்றியில் மக்களுக்கு நம்பிக்கை இருந்தது, ஆனால் மக்களிடமிருந்து இத்தகைய வரவேற்பு கிடைக்கும் என்பதை எதிர்பார்த்திராதவர்களும் இந்த இயக்கத்தை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்ல ஸ்தாபனரீதியான தயாரிப்புச் செய்யாதவர்களுமான இடதுசாரித் தலைவர்கள் 12-ம் திகதி மாலையே ஹர்த்தாலை வாபஸ் பெற்றனர். ஹர்த்தாலுக்கு மக்கள் அளித்த ஆதரவு அரசாங்கத்தை அச்சுறுத்தியது போலவே இடதுசாரிக் கட்சிகளின் சீர்திருத்தவாதத் தலைவர்களையும் அச்சுறுத்தியது. அன்று இரவு யூ.என்.பி. அமைச்சரவை சிறீலங்கா கடலுக்கு வெளியே அந்நியக் கப்பல் ஒன்றில் கூடியது என அறிவிக்கப்பட்டது.

அடுத்த நாள் பெரும் அடக்குமுறை சகல முனைகளிலும் ஆரம்பித்தது. சிறைச் சாலைகளில் தடைக் கைதிகள் நிரம்பி வழிந்தனர். தோழர்கள் தாக்கப்பட்டனர். இடதுசாரிக் கட்சிகளின் அலுவலகங்கள் தேடப்பட்டன. அவற்றின் அச்சகங்கள் மூடப்பட்டன. நான் தாக்குதலில் இருந்தும் தடைக்காவலில் இருந்தும் அருந்தப்பாகத் தப்பினேன். பொறளை பொலிசார் கொட்டரோட்டிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு வந்து எல்லோரையும் தாக்கி எல்லோரையும் கைது செய்தார்கள். அன்றுதான் நான் முதல் தடவையாக இரவில் தங்க எனது வசிப்பிடத்துக்கு சென்றிருந்தேன்.

1953 ஆகஸ்ட் 12-ம் திகதிய ஹர்த்தால் இலங்கையில் இது காலவரை நடந்த புரட்சிகர நடவடிக்கைகளின் உச்ச கட்டம் என்பதில் சந்தேகம் இல்லை. ஐக்கியப்பட்ட புரட்சிகரத் தலைமை அளித்தால் தொழிலாளி வர்க்கமும் முற்போக்கு இயக்கமும் எதனை எல்லாம் சாதிக்கலாம் என்பதை அது எடுத்துக் காட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக, தம்மிலும் தமது புரட்சிகர சக்தியிலும் சார்ந்திருந்து பாராளுமன்றவாதத்தை விடுத்து நேரடி நடவடிக்கையில் நம்பி இருக்கும்படி அது மக்களுக்கும் போதித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஹர்த்தாலால் மக்களுக்கு உடனடியாக நலன் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் பல அரசியல் எதிரொலிப்புகளை அது ஏற்படுத்தியது. யூ.என்.பி. அரசாங்கத்தின் அத்திவாரத்தை அது குலைத்து பிரதமர் டட்லி சேனநாயகவை தற்காலிகமாக அரசியலிலிருந்து பின்வாங்கச் செய்தது. 1956 தேர்தலில் யூ.என்.பி. பெற்ற படுதோல்விக்கு அது பிரதான காரணமாகும். அரிசியின் விலை முதலில் 55 சதமாகவும் பின்னர் 25 சதமாகவும் குறைக்கப்பட்டது. இவ்வாறு ஹர்த்தாலின் பிரதான நோக்கம் நிறைவேற ஐக்கியப்பட்ட யூ.என்.பி. விரோத சக்திகளின் புரட்சி நடவடிக்கையின் உச்சகட்டமாக ஹர்த்தால் அமைந்தது. இந்த வரலாற்று ரீதியான புகழ்மிக்க ஹர்த்தாலுடன் ஒரு தலைவராக தொடர்பு கொண்டிருந்ததில் நான் பெருமை அடைகின்றேன். நான் அப்பொழுது சி.டி.யு.எப்.-பின் பொதுச் செயலாளராக இருந்தேன்.

## தென்மேற்கு பஸ் கொம்பெனி வேலை நிறுத்தம்

1953 ஹர்த்தாலுக்கும் 1956 மகாஜன எக்சத் பெரமுன, வெற்றிக்கும் இடையிலான காலகட்டத்தில் நடைபெற்ற முக்கியமான தொழிலாள வர்க்கப் போராட்டங்களில் 1955 மார்ச்சில் நடைபெற்ற தென்மேற்கு பஸ் கொம்பெனி ஊழியர்களின் போராட்டமும் ஒன்றாகும். இரண்டாம் உலக யுத்தத்துக்குச் சற்று முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட நெல்சன் திட்டத்தின் கீழ் முன்னர் பல்வேறு பஸ் முதலாளிகளுக்கிடையே இருந்த பயங்கரமான கழுத்தறுப்புப் போட்டி கட்டுப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பாதையிலும் இருந்த சகல பஸ் கொம்பெனிகளையும் ஒன்று சேர்த்தும் ஒவ்வொரு பாதையிலும் ஏறக்குறைய ஏகபோகம் ஒன்றை அமைத்தும் இந்தக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. இந்தப் புதிய கொம்பெனிகளில் தென்மேற்கு பஸ் கொம்பெனி மிகப்பெரியதும் மிகப் பலம்வாய்ந்ததும் ஆகும். இக்கொம்பெனியின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்த சேர் சிறில் டி சொய்சா யூ.என்.பி.-யின் ஒரு தூணாக மட்டுமல்ல, அப்பொழுது பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலையின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார்.

ஆகவே ஆரம்பத்திலிருந்தே இந்த வேலை நிறுத்தம் கொம்பெனிக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான ஒரு போராட்டமாக அமைந்தது. தொழிற்துறைப் பிணக்குகளில் தொழில் திணைக்களம் மத்தியட்சம் செய்யும் வழக்கமான பழக்கம் இந்த வேலை நிறுத்தத்தில் மறுக்கப்பட்டது. ஒரு தலைமைத் தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டதை ஒட்டி எழுந்த இந்த வேலை நிறுத்தத்துக்கு சி. டி. யு. எப்.-பைச் சேர்ந்த ஒரு அங்கமான இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் தலைமை தாங்கியது. மார்ச் 10-ம் திகதி இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமாகியது. தொழிலாளர்களின் ஆதரவு பிரம்மாண்டமானதாக இருந்தது. பல நாட்களாக கொழும்புக்கும் காலிக்கும் இடையில் பஸ்கள் ஓடவில்லை. பின்னர் கொம்பெனி கருங்காலிகளின் உதவியுடன் சில பஸ்களை ஓட்டியது. ஆனால் மக்கள் அவற்றைப் பகிஷ்கரித்து வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு அளித்தனர். மற்ற பஸ் கொம்பெனிகளுக்கு வேலை நிறுத்தத்தைப் பரப்பும் முயற்சி வெற்றி பெறவில்லை. நான் இந்த வேலை நிறுத்தத்தில் ஆரம்பம் முதல் முடிவுரை வரை ஒரு தலைவராக ஊக்கத்துடன் செயலாற்றினேன்.



இந்த வேலை நிறுத்தத்தின் ஒரு அம்சத்தை நான் விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். லங்கா சம சமாஜக் கட்சி இந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்க முயற்சி செய்தது. இக்கொம்பெனியின் சில தொழிலாளர்கள் அவர்களுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் முயற்சி தோல்வி காணவே லங்கா சம சமாஜக் கட்சித் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி கருங்காலிகளாக வேலை செய்தார்கள். இதற்குக் காரணம் உண்டு. இந்த வேலை நிறுத்தத்துக்குச் சற்றுக் காலத்துக்கு முன்னர் லங்கா சம சமாஜக் கட்சித் தலைவரான டாக்டர் என். எம். பெறேரா 2½ லட்சம் ரூபாவுக்கு ஒக்பீல்ட் தோட்டத்தை வாங்கினார். இதில் கணிசமான தொகையை அவர் விவசாயக் கடன் கூட்டு ஸ்தாபனத்திலிருந்து பெற்றுக் கொண்டார். இந்தக் கூட்டுஸ்தாபனம் விவசாயிகளுக்குக் கடன் வழங்க ஸ்தாபிக்கப்பட்டது. இந்தக் கடனுக்கு உத்தரவாதம் செய்தவர் சேர் சிறில் டி. சொய்சா ஆவார். ஆகவே டாக்டர் என்.எம். பெறேராவுக்கு ஒரு கடமை இருந்தது. ஆகவே டாக்டர் என்.எம். பெறேரா தலைவராக இருந்த இலங்கை சம சமாஜக் கட்சித் தொழிற்சங்கம் வேலை நிறுத்தத்தைச் சீர்குலைக்க முயற்சித்ததில் ஆச்சரியமில்லை. நாம் இதனை தொழிலாளர் முன்னிலையில் அம்பலப்படுத்தினோம். ஆனால் இலங்கை சம சமாஜக் கட்சி எந்தப் பதிலையும் கூறாது மௌனமாக இருந்தது.

தொழிலாளர்கள் 13 நாட்களாக வீரத்துடன் போராடினார்கள். ஆனால் தொழில் திணைக்களம் தலையிட மறுத்தமை, முழு அரசு இயந்திரத்திற்கும் எதிராகப் போராட வேண்டி இருந்தமை (அவப்பெயர் பெற்ற சிட்றி டி. சொய்சா பொலிஸ் படைக்குத் தலைவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராக இருந்தார்), முதலாளி பேச்சு வார்த்தையில் ஈடுபடப் பிடிவாதமாக மறுத்தமை, லங்கா சம சமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பு ஆகியவற்றால் வேலை நிறுத்தத்தை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. தொழிலாளர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள் என்ற வழக்கமான உத்தரவாதத்தைக் கூட எம்மால் பெற முடிய வில்லை. ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் உறுதியுள்ள நிமிர்ந்த தலையுடனும் செங்கொடி பறக்க வேலைக்குத் திரும்பிச் சென்றார்கள். நூற்றுக்கு மேலான தொழி லாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். இந்த வேலை நிறுத்தம் பஸ் சேவையை தேசிய மயமாக்கத்துக்கு வழி வகுத்தது என்பது இந்த வேலை நிறுத்தத்தின் இன்னொரு முக்கியத்துவ மாகும். இந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக நகர மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக தான் அதிகாரத்துக்கு வந்தால் பஸ் சேவையைத் தேசியமயமாக்கு வேன் என்ற வரலாற்று ரீதியான வாக்குறுதியைச் செய்தார். 1957-ல் இந்த வாக்குறுதியை அவர் காப்பாற்றினார். தேசிய மயமாக்கத்துக்கு பின்னர் இந்த வேலை நிறுத்தத்தில் வேலை இழந்த தொழிலாளர்கள் அனைவரும் வெற்றிகரமாக மீண்டும் வேலை பெற்றார்கள்.

1953 ஹர்த்தாலின் விளைவாக தனது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்ய டட்லி சேனநாயக நிர்ப்பந்திக்கப்பட்ட பின் சேர். ஜோன் கொத்தலாவல பிரதம மந்திரியாகி உள் நாட்டில் சம்பூரணமாகப் பிற்போக்கான கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்த துடன் வெளிவிவகாரங்களில் முற்றிலும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு கீழ் பணிவான கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்து ஏகாதிபத்திய வாதிகளின் செல்லப் பிள்ளையாக விளங்கினார். அவர் புகழ்மிக்க பாண்டுங் மாநாட்டுக்குச் சென்று ஆத்திரமூட்டலான கம்யூனிச விரோதப் பேச்சு ஒன்றை நிகழ்த்தினார். சூஎன்லாயை மடக்கப் பார்த்தார். ஆனால் சூஎன்லாய் ''நான் இங்கு சண்டை போட வரவில்லை'' என்று கூறி சேர்ஜோனின் பேச்சை உதாசீனம் செய்தார். அவர் பிரதமராக இருந்த காலத்தில் சோவியத் உதை பந்தாட்டக் குழுவிற்கு இங்கு வர அனுமதி மறுக்கப்பட்டது. சூரிய கிரகணததை அவதானிக்க வரவிருந்த சோவியத் விஞ்ஞானி களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பார்பெக்கு சம்பவம் அவர் எமது மக்களின் மத, கலாச்சார உணர்வுகளை சற்றும் மதியா திருந்ததைக் காட்டியது. யூ.என்.பி.-க்கு நல்ல ஆதரவு இருக் கின்றது என்று கருதி முன்னதாகத் தேர்தலை நடத்த அவர்



எடுத்த முடிவு அவர் மக்களுடன் எந்தத் தொடர்பும் அற்று இருந் தார் என்பதைக் காட்டியது.

நாசம் அவரைத் தாக்குவதற்கு முன் மொழிப் பிரச்சினை சம்பந்தமான பிணக்கைக் கிளப்பிவிடுவதில் அவர் கருவியாக இருந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள தீவு ஒன்றில் தனக்குக் கிடைத்த வரவேற்பினால் மயங்கி சேர் ஜோன் சிங்களத்துக்கும் தமிழ் மக்கட்க்கும் சம அந்தஸ்து அளிப்பதாக வாக்குறுதி அளித் தார். இதனால் தெற்கில் உள்ள சிங்களர்கள் உக்கிரமாக எதிரொலித்தார்கள். தான் கிளப்பிவிட்ட புயல் கண்டு அதிர்ச்சி அடைந்த சேர் ஜோன் யூ.என்.பி.யின் களனியா மாநாட்டை நடத்தி சிங்களம் மட்டும் இலங்கையின் அரச கரும மொழியாக இருக்கும் என்ற முடிவை எடுத்தார்.

இந்த நேர்மையீனத்தை எவரும் கண்டு கொள்ள முடிந்தது. யூ.என்.பி.-க்குத் தமிழரின் ஆதரவை இந்த முடிவு இழக்கச் செய்த அதே வேளையில் சிங்களவர் ஏமாற்றப்படவில்லை. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரச கரும மொழியாக்குவேன் என்று கூறி எதிரடி கொடுத்ததில் ஆச்சரியமில்லை. இவ்வாறு 1956 ஏப்ரல் தேர்தலில் இரண்டு சிங்களக் கட்சிகளுக்கும் இடையே இருந்த பிரச்சினை சிங்களம் அரசு கரும மொழியாக முடியுமா என்பதல்ல, அதனை அமுல்படுத்த யாரை நம்ப முடியும் என்பதேயாகும். இந்தப் போட்டியில் சேர் ஜோன் இழப்பார் என்பதில் ஐயமில்லை. தேசத் துக்கு விரோதமான, மேற்கத்தைய விஷயங்களை சேர் ஜோன் பிரதிநிதித்துவம் செய்தார். அத்துடன் பண்டாரநாயக்கா என்ற அவருடைய எதிராளி சிறந்த பேச்சாளனாகவும் கிளர்ச்சியாள னாகவும் இருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 8. பண்டாரநாயக்கா சகாப்தம்

திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவும் அவரதுகதம்ப கூட்டணியான மகாஜன எக்சத் பெரமுனாவும் ஆட்சிக்கு வந்தது சிறீலங்காவின் சமீபத்திய வரலாற்றில் ஒரு எல்லைக் கோடாக அமைந்துவிட்டது. அவர் சிங்களம் மாத்திரம் என்ற மொழிக் கொள்கையைப் புகுத்தியதுடன் பெரிதும் தொடர்புபடுத்திக் கூறப்பட்ட 1956-ம் ஆண்டுத் தேர்தல் முடிவுகளுக்கு அதுதான் ஒரே காரணம் என்று கூறுவது தவறாகும் இந்தப் பிரச்சினை முழுத் தேர்தலிலும் செல்வாக்கை வகித்ததென்பதில் சந்தேக மில்லை. ஆனால் வேறு பிரச்சினைகளும் இருந்தன. பண்டார நாயக்கா தனது எஸ்.எல்.எப்.பி-யைச் சுற்றி அமைத்த அந்த தளர்ந்த ஐக்கிய முன்னணியில் இருந்த ஒரு அமைப்பு எக்ஸத் பிக்குப் பெரமுனா எனப்பட்டது. அதில் இளம் தீவிரவாதப் பௌத்த பிக்குகள் அங்கத்தவராய் இருந்தனர். இவர்கள் சங்கத்தில் செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களை குறிப்பாகக் கிராமப் பிரதேச மக்களை எம்.இ.பி. பக்கம் திருப்பத் தம்மால் ஆன மட்டும் பாடுபட்டனர். சமீபகாலத்தில் இதற்கு முன்னரோ இதற்கு பின்னரோ பௌத்த குருமார் இலங்கை அரசியலில் இப்படியொரு தீர்க்கமான பாத்திரம் வகித்ததில்லை. இந்த அமைப்பின் ஒரு முக்கிய புள்ளியாயிருந்த புத்தரகீத்தா, பண்டார



நாயக்கா கொலையில் உடந்தையாயிருந்தவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். (இவர் சிறையில் காலமானார்)

பண்டாரநாயக்கா யூ.என்.பி.-யின் தவறுகளிலிருந்து படிப்பினை பெற்று கால ஓட்டத்திற்கேற்ப நடந்து கொண்டிருப்பாரேயானால், அவரும் இடதுசாரி இயக்கம் பிரபலப்படுத்திய தீவிரவாதச் சுலோகங்கள் சிலவற்றுடன் நின்று பிடித்திருப்பார். ஏன், அந்நிய தோட்டங்களை தேசிய மயமாக்கும் அதிதீவிரவாத கோரிக்கை கூட அவரது தேர்தல் வேலைத் திட்டத்தில் இடம் பெற்றிருந்தது. ஆனால் அது ஒருபோதும் செயற்படுத்தப் படவில்லை. ஆட்சிக்கு வந்ததுதான் தாமதம் தோட்டங்களைத் தேசியமயப்படுத்தல் பத்து வருடங்களுக்கு ஒத்திப் போடப்பட் டுள்ளது என அறிவிப்பதன் மூலம் இந்தக் கோரிக்கையை பண்டாரநாயக்கா உண்மையில் கைவிட்டார். அந்தச் சுலோகம் நிறைவேற்றப்படவென முன் வைக்கப்பட்ட சுலோகம் அல்ல போலும். இதில் விஷயம் என்னவென்றால், இந்தக் கோரிக்கை இதற்குப் பின்வந்த எந்த தேர்தல் வேலைத் திட்டத்திலும் மீண்டும் முன்வைக்கப்படவில்லை ஏன் எல்.எஸ்.எஸ்.பி.-யுடனும் கொட்டாறே திரிபுவாதக் கும்பலுடனும் சேர்ந்து திட்டமிடப்பட்ட எஸ்.எல்.எப்.பி-யின் பொது வேலைத் திட்டத்திற்கூட இது இடம் பெறவில்லை.

பண்டார நாயக்கா லங்கா சம சமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று ஒரு குழுவுடன் ஐக்கிய முன்னணி அமைத்துக்கொள்வதன் மூலம் தான் இடதுசாரியாக மாறுவதை மேலும் வற்புறுத்திக் காட்டினார். இந்தக் குழு லங்கா சம சமாஜக் கட்சியின் ஸ்தாபனங்களுள் ஒருவரான பிலிப் குணவர்த்தனாவாற் தலைமை தாங்கப்பட்டது. அத்துடன் பண்டாரநாயக்கா லங்கா சமசமாஜக் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் எதிர்த்துப் போரிடுவ தில்லை என்ற உடன்பாட்டுக்கும் வந்திருந்தார் நான் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இந்தக் கலந்துரையாடலுக்குச் சென்ற பிரதிநிதிக் கோஷ்டியில் ஒருவனாய் இருந்தேன். இதன் விளைவு முதற் தடவையாக யூ.என்.பி. கிட்டத்தட்ட ஒருமித்த எதிர்ப்பினை சந்தித்துப் பூரண தோல்வியடைந்தது. பாராளுமன்றத்தில் அதற்கு முன்பிருந்த ஆசனங்களான 54 எட்டாகக் குறைந்தது. எம்.ஈ.பி. 51 ஆசனங்களையும் 40.7 வீதமான வாக்குகளையும் பெற்றது. இது ஒரு அமோக வெற்றியாகும்.

1956-ம் ஆண்டு எம்.ஈ.பி.யின் வெற்றி ஒரு சமாதானமான மக்கள் புரட்சி என்று கூடச் சிலர் கூறினர். இப்படிக் கூறியது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிகைப்படுத்திக் கூறல் மட்டுமல்ல, தவறுமாகும். இது நிச்சயமாக அதிகாரம் தரகு பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து தேசிய பூர்ஷ்வா வர்க்கத்திடம் கைமாறியதாகும். அதாவது, மேலைத் தேய அடிப்படையுடைய, ஆங்கிலம் பேசும், ஏகாதிபத்தியச் சார்புடைய பூர்ஷ்வாப் பகுதியிடமிருந்து தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பகுதிகளுக்கு அதிகாரம் கை மாறியதாகும். சமுதாயத்தின் வர்க்க அமைப்பு மாறாதவரை இதை எந்த வகையிலும் புரட்சியென்றே சொல்லமுடியாது. இவையிரண்டு பகுதிகளும் பூர்ஷ்வா வர்க்கத்துடையனவையாகவே இருந்தன. 1956-ல் தேர்தல் வெற்றியும் நாட்டின் பொருளாதாரத்தில் அந்நிய ஏகாதிபத்தியம் கொண்டிருந்த பிடியை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. அதே சரணடல் தொடர்ந்து நடந்தது.

எம்.ஈ.பி. ஆட்சியில் ஒருசில தீவிரவாத நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது உண்மைதான். பஸ் சேவையும் கொழும்புத் துறைமுகமும் தேசியமயமாக்கப்பட்டன. நெற்காணி மசோதாவும், ஒரு லேசான நிலச் சீர்த்திருத்தச் சட்டமும் கொண்டுவரப் பட்டன. திரிகோணமலையிலிருந்தும் கட்டு நாயக்காவிலிருந்தும் பிரித்தானியத் தளங்கள் அகற்றப்பட்டன. தொழிலாளருக்கு வேலைநிறுத்தம் செய்யக்கூடிய சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஊழியர் சேமநலநிதி மசோதா சட்டமாக்கப்பட்டது. முதற் தடவையாக சோஷலிச நாடுகளுடன் ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. அந்நியக் கொள்கையைப் பொறுத்தவரை இலங்கை அணிசேரா நிலை என்றதொரு பாத்திரத்தை வகித்தது. அதாவது நாம் பழைய மாதிரி ஏகாதிபத்தியவாதிகளின் வாலைப் பிடித்துக்கொண்டு அவற்றின் பின்னால் போய் நிற்கவில்லை என்று இது அர்த்தப்படுகிறது. ஆனால் இவையெல்லாம் சேர்ந்து சமாதானப் புரட்சியையோ வேறுவிதமான புரட்சியையோ ஏற்படுத்திவிட்டன என்று கூறமுடியாது. உண்மையில் பண்டாரநாயக்கா செய்தது என்னவென்றால், ஆக்கப்பூர்வமான ஆபத்தான யூ.என்.பி. எதிர்ப்பு ஓட்டத்தைத் தான் நடுப்பாதைக் கொள்கைகள் என்று கூறியவற்றுக்குட் கட்டுப்படுத்தி, அந்த ஓட்டத்து புரட்சிகர இயல்பைத் தணித்து, அதனைத் தீங்கற்ற பூர்ஷ்வாப் பாராளுமன்ற ஜனநாயகப் போக்காக மாற்றியதாகும். அவரது பெருஞ் செல்வாக்கு, இடதுசாரித் தலைமை மீதே இருந்தது. எம்.ஈ.பி.-யின் 1956 தேர்தல் வெற்றி லங்கா சம சமாஜக் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் இவற்றின் தலைமை கொண்டிருந்த எல்லாவிதமான புரட்சிகர பாசாங்குகளையும் ஒழித்துக்கட்டி பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயகக்



கருவூலங்களின் விசுவாசமான பக்தர்களாக ஆக்கிற்று. ஒரு காலத்திற் புரட்சியாளராய் இருந்தோர் பண்டாரநாயக்காவின் விதவையிடம் செல்லாக் காசாக்கப்பட்டனர்.

இந்த வகையிற் பார்த்தால், பண்டாரநாயக்கா பலாத்காரப் புரட்சியைத் தவிர்க்க உதவினார் எனச் சில விமர்சகர் கூறுவது மிகைப்படுத்துவது அல்ல. திருவாளர் பண்டாரநாயக்காவின் எம்.ஈ.பி. அரசு ஆட்சிக்கு வந்தபோது கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சம சமாஜக் கட்சியும் எதிர்த்தரப்பில் இருந்தன. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி உடனடியாகத் தன் நிலையை மாற்றிக் கொண்டது. இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வழங்கிய புத்திமதியினாலும் ஏற்பட்டது. டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவும், பீட்டர் கெனமனும், நானும் 1956 செப்டம்பரில் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரஸிற் கலந்து கொள்ள சென்றிருந்தோம். காங்கிரஸின் போது எமக்கு லியூசௌச்சியுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது, இவர் அப்போது கட்சிக்குள் மிகுந்த அதிகாரத்துடன் இருந்தார். ஆனால் அவர் பின்னால் முதலாளித்துவப் பாதையாளர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கலாச்சாரப் புரட்சியின் போது அதிகாரத்திலிருந்து வீழ்த்தப்பட்டார். நாம் பண்டாரநாயக்காவை எதிர்க்கக் கூடாதென்றும் அப்படி எதிர்க்காமல், அவருடைய கொள்கைகளை செயல்படுத்த அவருக்கு அவகாசம் கொடுக்கவேண்டும் என்றும் லியூசௌச்சி எமக்களித்த புத்திமதியில் அவரது திரிபுவாதக் கருத்து மிகத் தெளிவாகத் தெரிந்தன. எங்கள் பிரதிநிதிக் கோஷ்டியில் இந்தக் கருத்துக்கு அப்போது எதிர்ப்புத் தெரிவித்தவன் நான் ஒருவன்தான். ஆனால் அச்சமயத்தில் லியூசௌச்சியை எதிர்த்து வாதிடுமளவிற்கு நான் தத்துவார்த்த ரீதியில் அறிவுடையவனாய் இருக்கவில்லை. லியூசௌச்சியின் கருத்துக்களை நாம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களாகவே கொண்டோம்.

இந்தப் புத்திமதியைப் பின்பற்றி கம்யூனிஸ்ட் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் எதிர்த்தரப்பிலிருந்து விலகி அரசாங்கத்துடனும் சேராது எதிர்த்தரப்புடனும் சேராது சுதந்திரமான ஒரு குழுவாக இயங்கினர்.

இங்கு நான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரஸ் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவேண்டும். விடுதலைக்குப் பிறகான முதலாவது காங்கிரஸ் (ஏழாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காங்கிரஸ் யெனானில் நடைபெற்றது) ஆகையால் இது மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. இது சர்வதேச கம்யூனிச இயக்கம் பிளவுபடுவதற்குமுன் நடைபெற்றது. உலகிலுள்ள சகல கம்யூனிஸ்ட் கட்சிகளும் அழைக்கப்பட்டிருந்தன. அவையும் தமது பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. சட்டபூர்வமற்ற கட்சி களின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அது உண்மையிலேயே ஒரு காட்சிதான். பல்வேறு பிரதிநிதிக் கோஷ்டிகளினதும் கார்கள் ஒன்றன்பின் ஒன்றாய் கூட்ட மண்டபத்தை நோக்கி ஊர்ந்தபோது தெருவில் போக்குவரத்து முற்றும் நிறுத்தப்பட்டு இந்த நீண்ட கார் ஊர்வலம் செல்வதற்கு வழி விடப்பட்டது. பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிக் கோஷ்டிகள் இருதரப்பு விவாதங்களை நடத்தின. ஆனால் சகல கட்சிகளினதும் ஒன்று பட்ட கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

மாநாட்டில் கலந்துகொண்ட சகல கட்சிகளினதும் தலைவர் கள் அதில் உரையாற்றினார்கள். எமது கட்சியின் சார்பில் யார் பேசுவது என்ற பிரச்சினை எழுந்தது. டாக்டர் விக்கிரம சிங்க பேசவேண்டும் என்று நான் பிரேரித்தேன். மாநாட்டின் போது டாக்டர் விக்கிரமசிங்காவுக்கு முதலாவது மாரடைப்பு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். மாநாட்டில் முடிவில் கெளமனும் நானும் விமானம் மூலம் மொழி பெயர்ப்பாளர் களுடனும் மெய்க்காவலர்களுடனும் சீனாவின் சில முக்கிய மான நகரங்களுக்குப் பயணம் செய்தோம். வட துறைமுகமான டெரெய்ன், அழகான ஹாங்சோ நகரம், தொழிற்துறை நகரமான சாங்கை, தென் பகுதி நகரமான கன்ரன் ஆகியன நாங்கள் பயணம் செய்த சில நகரங்களாகும். கன்ரனிலிருந்து நாங்கள் நாடு திரும்பினோம்.

1956 தேர்தல் வெற்றி பொருளாதாரப் பிரச்சினை எதனையும் தீர்க்கவில்லை. எம்.ஈ.பி -யும் அதன் ஆதரவாளர்களும் மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கை வைத்திருக்க வகுப்புவாத, மொழி உணர்வுகளை எழுப்ப வேண்டியிருந்தது இதைக் காட்டியது. எம்.ஈ.பி. ஆட்சியின்போது இலங்கையில் அதுகாலவரை கண்டிராத படுமோசமான வகுப்புவாதக் கலவரம் ஏற்பட்டது. வகுப்புவாதப் பிரச்சினைப் பற்றிச் சற்றுப் பார்ப்போம்.

தமிழர்கள் அரசாங்க சேவையிலும் டாக்டர் முதலிய தொழில் களிலும் சிங்களவர்களினாலும் பார்க்கச் சிறப்பாக விளங்கியதற்கு காரணம் ஆங்கிலம் கற்பதில் அவர்களுக்கிருந்த ஆரம்ப சந்தர்ப்ப மாகும். தமிழர்கள் ஆங்கிலம் கற்கும் இந்த வாய்ப்பு திட்டமிட்டு



ஏற்படவில்லை. தற்செயலாக ஏற்பட்டது. அமெரிக்க மெதடிஸ்ட் மிஷன்மார் 1816-ம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் இலங்கை அமெரிக்க மிஷனை ஆரம்பித்தார்கள். ''டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் வகுப்புவாத அரசியல்'' என்ற தலைப்பில் ஜேன்றசல் அண்மையில் எழுதிய நூலில் இந்த மிஷனரிமார்கள் யாழ்ப்பாணத்தில் கல்விக்கு ஆற்றிய சேவையை நன்கு விவரிக்கின்றார். ''காலனிய அரசாங்கம் பிரித்தானிய மிஷன்களுடன் மோதலைத் தவிர்க்க விரும்பியபடியாலும் மிஷனின் பிரதான இலக்காகிய இந்தியாவிற்கு செல்வதற்கு முக்கியமான இடமாக யாழ்ப்பாணம் அமைந்தபடியாலும் மிஷன் யாழ்ப் பாணத்தை அதன் முக்கிய நடவடிக்கைத் தளமாககியது. மேற் கண்ட நூலில் இவ்வாறு கூறப்பட்டிருககிறது.

1822-ல் தமிழ் நன்கு அறிந்த அமெரிக்கர்களை ஆசிரியர் களாகக் கொண்ட 42 பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக் கப்பட்டன. 1823-ல் வட்டுக்கோட்டையில் பற்றிக்கோட்ட செமினறி அமைக்கப்பட்டது. இது ஆசியாவில் முதலாவது ஆங்கிலப் பாடசாலையாகும். இலவச விடுதிப் பாடசாலையாக இருந்த பற்றிக்கோட்ட செமினறி ஒரு பல்கலைக்கழகத்தின் தரம் உடையதாக இருந்தது. ஆங்கிலம், தமிழ், கணிதவியல், கிரேக்கம், லத்தீன், வரலாறு, புவியியல், தத்துவவியல் ஆகிய பாடங்கள் இங்கு போதிக்கப்பட்டன.

1833-ல் மருத்துவப் பேராசிரியர் ஒருவர் இங்கு வந்து சேர்ந் தார். பின்னர் மருத்துவ மாணவர்களுக்கும் அங்கு போதனை நடைபெற்றது. இலங்கை அமெரிக்க மிஷனின் வேலை முறைகள் இலங்கையின் மற்றப் பகுதிகளில் இருந்த பிரித்தானிய மிஷன் பாடசாலை பகுதிகளில் இருந்த பிரித்தானிய மிஷன் பாடசாலைகளிலும் பார்க்க முன்னேறியவையாக இருந்தன. மிஷனரிமாரும் கூடுதலான அர்ப்பணிப்பு உடையவர்களாக இருந் தார்கள். அமெரிக்கர்கள் தமிழை நன்கு கற்று ஆங்கிலப் பாடப் புத்தகங்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்கள். ஆங்கில - தமிழ் அகராதிகளைத் தொகுத்தார்கள். மற்ற மிஷன்களைப் போலல் லாது அமெரிக்கர்கள் ஆங்கிலப் போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்தபடியால் யாழ்ப்பாணத்தில் போதிக்கப்பட்ட ஆங்கிலத்தின் தரம் இலங்கையின் மற்றப் பாகங்களிலும் பார்க்க உயர்வாக இருந்தது என்று கோல்புருக் 1930-ல் சுட்டிக் காட்டினார்.

நிதி நெருக்கடி ஒன்றின் காரணமாக 1847-ன் இறுதியில் காலனி அரசாங்கம் கல்விச் செலவினங்களை அரைவாசியாகக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறைத்தது. இது இலங்கை அமெரிக்க மிஷனை பாதிக்க வில்லை. இதனால் தெற்கிலும் மேற்கிலும் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் தொகை குறைந்தது. 1929-ல் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 65 ஆங்கிலப் பாடசாலைகள் இருந்தன. அவற்றில் 10 முதல்தர கல்லூரிப் பாடசாலைகளும் 426 தமிழ்ப் பாடசாலை களும் இருந்தன. இந்த ஆண்டில் வட மாகாணத்தில் 7 பிள்ளை களில் 6 பிள்ளைகள் ஏதோ பாடசாலையில் படித்தார்கள்.

1913-ல் கே. பாலசிங்கம் ஒரு சொற்பொழிவில் கூறியவாறு, ''எமது மண் வறண்டதாக இருந்தபோது லயத்துடன் பண்படுத்தக் கூடிய ஒரு விஷயத்தை நாம் செய்துள்ளோம். நாம் மனிதரைப் பண்படுத்த முயற்சி எடுத்துள்ளோம்.''

அமெரிக்கரைத் தொடர்ந்து கத்தோலிக்க மிஷனரிமாரும் புரட்டஸ்தாந்து மிஷனரிமாரும் இங்கு வந்தார்கள். மதமாற்ற நோக்கத்துடன் இவர்கள் அனைவரும் பாடசாலைகளை ஸ்தாபித் தார்கள். இந்துப் புனரமைப்பு ஆரம்பித்தபோது இந்து வித்தியா அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. அதுவும் பாடசாலைகளை ஆரம்பித்தது. இவ்வாறு பல பாடசாலைகளை பெறும் வாய்ப்பை யாழ்ப்பாணம் பெற்றது. ஒரு கட்டத்தில் உலகில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு தலா சதுரமைலுக்குப் பாடசாலைகள் யாழ்ப் பாணத்தில் இருந்தன என்று கூறப்பட்டது. இதனால் பிரித்தானிய காலனிவாதிகளின் நிர்வாக மொழியான ஆங்கில மொழியின் படிப்பு பெருவேகம் பெற்றது. இயற்கையாகவே தமிழர்கள் அரசாங்க சேவையிலும், மருத்துவம், சட்டம் முதலிய தொழில் துறைகளிலும் தமது எண்ணிக்கையிலும் கூடுதலான விகிதாச் சாரத்தில் இடங்களைப் பெற்றனர். ஆனால் இந்த இடங்களைப் பின்கதவால் அவர்கள் பெறவில்லை. பகிரங்கப் போட்டியில் பெற் றார்கள். ஜேன் ரசலின்படி 1918-ல் நடைபெற்ற கல்வி பெற்றவர் களின் உறுப்பினர்களுக்கான ஆசன வாக்குரிமையில் தமிழர்கள் 40 சதங்களுக்கும் மேலானவர்களாக நதியோ மலையோ, காடோ அற்ற மிகவும் வறண்ட பகுதியில் வாழ்ந்ததுதான் தமிழர்கள் உயர் கல்வியை, குறிப்பாக ஆங்கிலக் கல்வியை நாடியதற்கான முக்கிய காரணமாகும். கல்விதான் நல்வாழ்வுக்கு உத்தரவாதமாக இருந்தது. ஆகவே தமிழர்கள் கஷ்டப்பட்டுப் படித்தார்கள்.

தெற்கிலுள்ள சிங்களவரைப் பொறுத்தவரையில் நிலைமை சற்று வித்தியாசமானது. அவர்களுடைய நிலம் செழிப்பானது, எதுவும் வளரக்கூடிய மண் அது. வாழ்க்கை அங்கு இலேசானது. ஆனால் அவர்களுடைய கல்வி வசதிகள் தமிழர்களிலும் பார்க்கக்



குறைவானவை. நிலச் செழிப்புக் காரணமாக 1929-1931 பொரு ளாதார நெருக்கடி ஏற்படும் வரை சிங்கள மத்தியத்தர வர்க்கத் தினர் அரசாங்க சேவையில் அல்லது தொழிலர் துறைகளில் சேர ஆர்வம் காட்டவில்லை. இரண்டாம் உலக யுத்தத்துக்கு முந்திய ஆண்டுகளிலும் பின்னரும்தான் சிங்கள, தமிழ் மத்திய வர்க்கத் தினருக்கிடையே வேலைக்கான போட்டி ஏற்பட்டது. கோல்பரி கமிஷன் அறிக்கையின் படி 1938-ல் 6002 ஓய்வூதியம் பெறக் கூடிய உத்தியோகத்தர்களில் 3236 பேர் சிங்களர்களாகவும் 1164 பேர் இலங்கைத் தமிழர்களாகவும் இருந்தனர். அரசாங்க சேவையின் சில திணைக் களங்களில் விகிதாசாரம் பற்றி இவர்களுக்கிடையே பெரும் பிணக்கு ஏற்பட்டது. வகுப்புவாதப் பிரச்சினை என்பது அடிப்படையில் அரசாங்க சேவையிலும் தொழிலர் துறைகளிலும் சேரவும் வர்த்தக வாய்ப்புகளுக்காகவும் சிங்கள தமிழ் மத்திய தர வர்க்கங்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியாகும்.

ஜேன் ரசலின் படி 1870 முதல் 1920 வரையான 50 ஆண்டு களை இலங்கைத் தமிழர்களின் ''பொற்காலம்'' என அழைக்க லாம். இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் நிலவிய ஆங்கிலப் பாடசாலை அமைப்பின் சிறப்புக் காரணமாக பெரும் எண்ணிக்கையான யாழ்ப்பாணத்தவர்கள் மலாயா, இந்தியா, இலங்கை ஆகியவற்றில் நல்ல சம்பளம் பெறும் சிவில், கிளெறிக்கல் உத்தியோகங்களைப் பெற்றார்கள். பொருளாதார ரீதியில் செல்வம் படைத்த யாழ்ப்பாண தமிழர்கள் அரசியல் ரீதியிலும் பலம் வாய்ந்தவர்கள் ஆகினார்கள். குமாரசாமி-பொன்னம்பலம் வம்சம் 19-ம் நூற்றாண்டு சட்டசபையில் இருந்த மற்ற வகுப்பு வாதப் பிரதிநிதிகள் மீது ஆதிக்கம் செலுத்தி இரண்டு இனங் களினதும் ஆங்கிலக் கல்வி பெற்றவர்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் ஆகினார்கள்.

பொன்னம்பலம் ராமநாதன் 1912-ல் சிங்களவரான மார்க்ஸ் பர்னாண்டுவை எதிர்த்து முதலாவது அகில இலங்கைப் பிரதிநிதி யாகத் தெரிவு செய்யப்பட்டபோது அவர் ஆங்கிலக் கல்வி பெற் றவர்களின் சட்டபூர்வமான பிரதிநிதியாகினார். 30 ஆண்டுகளாக அவர் உண்மையில் இந்த ஸ்தானத்தில் இருந்து வந்தார். 1916-ம் ஆண்டில் அவருடைய சகோதரரான பொன்னம்பலம் அருணாசலம் அரசியல் அரங்கில் இறங்கினார். தமது அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் இருந்தே அருணாசலம் மற்ற சிங்கள தமிழ் தலைவர்களிலும் பார்க்க உயர்ந்தவராக விளங்கினார். உடனே அவர் ஆங்கிலக் கல்வி பெற்றவர்களின் தலைவராக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அங்கீகரிக்கப்பட்டார். இலங்கைத் தேசிய காங்கிரஸ் மற்றும் பல தொழில் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் ஸ்தாபகரான அருணாசலம் 7 ஆண்டுகளாக இலங்கை அரசியலில் ஆதிக்கம் புரிந்தார். 1922-ல் காங்கிரசை விட்டு அவர் விலகிச் சென்றபோது இலங்கை அரசியலில் இலங்கைத் தமிழர்களின் ஏற்ற நிலை முடிவுக்கு வந்தது.

காலனிய ஆட்சியின் கீழ் சிங்கள தமிழ்த் தலைவர்கள் காலனிய ஆட்சியாளர்களிடமிருந்து மென்மேலும் கூடுதலான சீர்திருத்தங்களைப் பெற ஒற்றுமையாக உழைத்தார்கள். 1915-ல் ராணுவச் சட்டக் கலகம் ஏற்பட்டபின் சேர் பொன்னம்பலம் ராமநாதன்தான் நீர் மூழ்கிக் கப்பல்கள் நிறைந்த கடல்களில் பயணம் செய்து இங்கிலாந்துக்குச் சென்று டி. எஸ். சேனநாயக போன்ற தடைக்காவலில் வைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களுக்காக வாதாடினார். ராமநாதன் இலங்கைக்குத் திரும்பியபோது அப்பொழுது தொழிற்சங்கத் தலைவராக இருந்த ஏ.ஈ. குணசிங்கா உட்பட சிங்களத் தலைவர்கள் அவர் ஏறிவந்த ரதத்தின் குதிரைகளைக் கழற்றிவிட்டு தாமே ரதத்தை இழுத்துச் சென்றார்கள்.

1919-ல் இலங்கை தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டபோது சேர் பொன்னம்பலம் அருணாசலம் அதன் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். பழைய சட்டசபையில் கல்வி பெற்றவர்கள் உறுப்பினர்களுக்கான இரண்டு அடுத்தடுத்த தேர்தல்களில், பெரும்பாலான வாக்காளர் சிங்களவர்களாக இருந்தபோதும் சேர் பொன் ராமநாதன் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் பிரித்தானிய காலனியவாதிகள் மென்மேலும் கூடுதலான சீர்திருத்தங்களை வழங்கியபோது இதனை எப்படிப் பங்கு போடுவது என்பது பற்றி சிங்கள - தமிழ்த் தலைவர்களுக்கிடையே உடன்பாடின்மை ஏற்பட்டது. மேற்கு மாகாணத் தமிழர்களுக்கு இன ரீதியான ஆசனம் ஒன்று வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் நிராகரித்தபோது பிரிவு ஏற்பட்டது. சிங்களத் தலைவர்கள் அது தமக்குச் சாதகமானதெனக் கருதி பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்தைக் கோரினார்கள். தமிழ்த் தலைவர்கள் தமக்கு நன்மையானதெனக் கருதி இன ரீதியான பிரதிநிதித்துவம் கோரினார்கள். இந்தப் பிணக்கில்தான் பொன்னம்பலம் சகோதரர்கள் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து ராஜினாமாச் செய்தார்கள்.

டொனமூர் சீர்திருத்தங்களின் பின்னர் நிலைமை மேலும் மோசமாகியது. டொனமூர் அரசியல் திட்டத்தில் வகுப்புவாதப்



பிணக்கிற்கான விதைகள் இருந்தன. சர்வஜன வாக்குரிமையையும் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்தையும் வழங்கி பிரித்தானியக்காரர் சிங்களப் பெரும்பான்மையின் ஆட்சியை உத்தரவாதம் செய்தார்கள். இதனால்தான் பொன்னம்பலம் ராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் சர்வஜன வாக்குரிமையை வன்மையாக எதிர்த்தார்கள். அவர் இரண்டு காரணங்களுக்காக அதனை எதிர்த்தார். ஒன்று கல்வியறிவற்றவர்களுக்கு வாக்குரிமையை அளிப்பதன் மூலம் ''காடைக் கூட்டத்தின்'' ஆட்சி ஏற்படுவதை அவர் விரும்பவில்லை. மறுபுறத்தில் பெரும்பான்மை ஆட்சி என்றால் சிங்களவரின் ஆட்சி என்பது அவருக்குத் தெரியும். இந்த அச்சம் சரியானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் தமிழர்கள் இன ரீதியான பிரதிநிதித்துவத்தையும் சிறுபான்மையினருக்கு பாதுகாப்புகளையும் கோரினார்கள். கமிஷன் இவற்றை மறுத்தது.

ஒரே இன சமுதாயத்தில் சர்வஜன வாக்குரிமையும் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவமும் நல்ல விஷயங்கள். இன ரீதியான மத ரீதியான சிறுபான்மையினர் வாழும் சமுதாயத்தில் சர்வஜன வாக்குரிமை, பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் ஆகியவற்றினால் இறுதியில் பெரும்பான்மைக்குச் சிறுபான்மை அடிபணியும் நிலைமை ஏற்படும். இதுதான் இலங்கையில் நடைபெற்றது. இதற்கு மாற்றுவழி, இன,மொழி சாதித் தடைகளைத் தாண்டி நின்று எல்லோருக்கும் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தக்கூடிய ஆரோக்கியமான இடதுசாரி இயக்கமாகும்.

1931-ல் முதலாவது அரசு சபைக்குத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் வடக்கில் வாலிபர் காங்கிரஸ் என்ற முற்போக்கு ஸ்தாபனம் ஒன்று இருந்தது. வாலிபர் காங்கிரஸ் 1924-ல் தீவிரவாத இலங்கைத் தமிழ் வாலிபர்களால் அமைக்கப்பட்டது. எஸ். எச். பேரின்பநாயகம், சி. பாலசிங்கம், பி. கந்தையா, ஒறேற்றர் சுப்பிரமணியம், எம். பாலசுந்தரம், பி. நாகலிங்கம் முதலியோர் அதன் முக்கியத் தலைவர்களாக இருந்தார்கள். யாழ்ப்பாணக் கல்லூரியின் 2-ம் அதிபரான ஜே. சி. செல்லையா அதன் முதலாவது தலைவராக இருந்தார். 1926-க்கும் 1931-க்கும் இடையில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஒழுங்குபடுத்திய கூட்டங்களில் இந்தியச் சுதந்திர இயக்கத் தலைவர்களான நேரு, சத்தியமூர்த்தி, சரோஜினி நாயுடு, திருமதி கமலாதேவி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இதனால் இந்த இயக்கம் ஊக்கம் பெற்றது. அரசு சபைத் தேர்தல்களை யாழ்ப்பாணம்

www.tamilarangam.net



புறக்கணிப்பதற்கு இட்டுச் சென்ற தேர்தல்களுக்கான விண்ணப்பங்கள் 1931 மே 4 வரை கோரப்பட்டன. டொனமூர் அரசியல் திட்டம் முழு நாட்டுக்கும் பூரண சுதந்திரத்துக்காக வாலிபர் காங்கிரஸ் அரச சபைக்கான 4 வட மாகாண ஆசனங்களினதும் தேர்தல்களைப் பகிஷ்கரித்தது. இந்த பகிஷ்கரிப்பு தமிழர்களுக்கு விசேஷ உரிமைகள் கொடுக்கவில்லை என்பதற்காக நடத்தப்படவில்லை. துரதிருஷ்டவசமாக எந்த சிங்கள அபேட்சகரும் இந்த பகிஷ்கரிப்பில் கலந்து கொள்ளவும் இல்லை அதற்கு ஆதரவு தெரிவிக்கவும் இல்லை. வாலிபர் காங்கிரஸ் விரைவில் வகுப்புவாத அரசியல் என்ற சமுத்திரத்தில் மூழ்கியது.

தெற்கில் திரு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்கள மகாசபை என்ற பச்சை வகுப்புவாத இயக்கத்தை ஆரம்பித்தார். 1936 நவம்பரில் இந்த சபை அமைக்கப்பட்டது. அக்காலத்தில் பிரசித்தி பெற்ற இலக்கிய கர்த்தாவான பியதாஸ சிறீசேனா இந்தப் பெயரைப் பிரேரித்தார். சுவதேசிய மகாசபை என்று பெயரை மாற்றப் பண்டாரநாயக்கா முயற்சித்தார். இன்னொரு பிரசித்தி பெற்ற இலக்கிய கர்த்தாவான முனிதாச குமாரதுங்காவும் மற்றவர்களும் இதனை எதிர்த்துத் தோற்கடித்தார்கள். 30-ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பியதாஸ சிறீசேனாவும் முனிதாச குமாரதுங்காவும் மகாசபையை விட்டு விலகிச் செல்ல பண்டாரநாயக்கா அதனை ஒரு முற்றிலும் அரசியல்ரீதியான ஸ்தாபனமாக வளர்த்தார். வடக்கில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை அமைத்தார். தெற்கு வகுப்புவாதம் வடக்கு வகுப்புவாதத்தை வளர்த்தது. வடக்கு வகுப்புவாதம் தெற்கு வகுப்புவாதத்தை வளர்த்தது.

1936-ல் இரண்டாவது அரசு சபைத் தேர்தல் முடிந்தபின் வெள்ளை மாளிகைக்குத் தான் சமர்ப்பிக்கும் சீர்திருத்தப் பிரேரணைகளுக்கு அமைச்சரவையில் ஒற்றுமையை வேண்டி டி. எஸ். சேனநாயக்கா சிறுபான்மையினரின் பிரதிநிதிகளைத் தவிர்த்து சர்வ - சிங்கள அமைச்சரவை ஒன்றை அமைத்தபோது நிலைமை மேலும் மோசமாகியது. சர்வ - சிங்கள அமைச்சரவையின் உருவாக்கம் பெரும்பான்மை சிறுபான்மையினரைப் பாதிக்கும் முறையில் அதன் அதிகாரத்தைப் பாவிக்கும் ஒரு கொள்கையைக் காட்டியது என்று கோல்பரி கமிஷன் சுட்டிக்காட்டியது. ''சிங்களவர்கள் ஆதிக்கத்தை நாடுகின்றார்கள் என்று சிறுபான்மையினர் இதனால் மேலும் நம்பினார்கள்'' என்று கமிஷனர்களில் ஒருவரான எவ்-றீஸ் கூறினார். இரண்டாவது அரசு சபையின் நியமிக்கப்பட்ட நான்கு ஐரோப்பிய உறுப்பினர்களும் சர்வ-சிங்கள



அமைச்சரவைத் தேர்வு செய்யும் ரீதியில் சேனநாயக்காவுடன் சேர்ந்து கொண்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது. ஆனால் சேனநாயக்கா அவர்களில் ஒருவரை அமைச்சராக்குவது என்ற வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இதனால் இந்தக் கூட்டு முறிந்தது.

தமிழர்களின் சார்பில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மூலம் 50-க்கு 50 கோரிக்கையை வைத்தார். இந்தக் கோரிக்கையின்படி 100 உறுப்பினர்கள் கொண்ட ஒரு சபையில் 50 பேர் சிங்களவர்களாகவும் மீதம் 50 பேரில் 25 பேர் இலங்கைத் தமிழர்களாகவும் மிச்ச 25 பேர் மற்ற சிறுபான்மையினரையும் பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய முறையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்க வேண்டும். சிங்களத் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. 1947 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் டி. எஸ். சேனநாயக உள்நாட்டு அமைச்சராக இருந்த தனது கட்சியைச் சேர்ந்த ஏ. மகாதேவா மூலம் 60-க்கு 40 என்ற பிரேரணையை ஏற்றுக்கொள்ள உடன்பட்டார் என்று கூறப்படுகின்றது. ஆனால் ஜீ ஜீ. பொன்னம்பலம் இதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு அரசியல் ஞானியாக இருக்கவில்லை.

இந்த நிலைமையில் துக்கத்துக்குரியது என்னவென்றால் இரண்டு பிரதான இனங்களினதும் வேறுபட்ட கோரிக்கைகளைப் பாவித்த காலனிய ஆட்சி அதன் ஆதிக்கத்தைத் தொடர்ந்ததாகும். இது ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் தந்திரம் ஆகும்.

தமிழ்த் தலைவர்கள் சிங்கள சகோதரர்களுடன் சேர்ந்து ஏகாதிபத்திய எஜமான்களுக்குப் பொதுக்கோரிக்கையை முன்வைத்திருந்ததால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் இந்த அரசியல் ஞான அந்தஸ்தை சிங்களத் தலைவர்கள் சரி தமிழ்த் தலைவர்கள் சரி பூர்ஷ்வாத் தலைவர்கள் எவரும் கொண்டிருக்கவில்லை. பெருந்தன்மை உடையவர்களாக இருந்து தமிழ் மக்களின் நீதியான கோரிக்கைகளுக்கு ஆதரவளித்து பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க சிங்களத் தலைவர்களால் முடியவில்லை. அவர்கள் இலங்கைத் தேசம் என்றால் சிங்களவர்கள் என்று நினைத்தார்கள். இன, மொழி, சிறுபான்மையினரின் நியாயமான உரிமைகளைப் பற்றி அக்கறையே காட்டாதிருந்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறீலங்காவுக்குக் கூடுதலான சீர்திருத்தங்கள்வேண்டும் என்ற கோரிக்கையை விசாரிக்க பிரித்தானிய அரசாங்கம் கோல்பரி கமிஷனை நியமித்தது. கோல்பரி கமிஷன் இலங்கைக்கு வந்த போது வேறுபட்ட சமூகங்கள் வெவ்வேறாக கமிஷனுக்கு முறையீடுகளைச் செய்தன. டி.எஸ். சேனநாயக்காவும் சிங்களத் தலைவர்களும் கமிஷனுக்கு முன்னால் தோன்றவில்லை. தனியாக கோல்பரி பிரபுவிடம் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பிரித்தானிய ஏகாதிபத்தியம் அப்பொழுது நேரடி ஆட்சியிலிருந்து மறைமுக ஆட்சிக்கு காலனிசத்திலிருந்து நவ காலனிசத்துக்கு மாறிக்கொண்டிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் பிரிட்டன் ஒரு இரண்டாம் தர வல்லரசாகியது. முன்னர் போல் நேரடியான பலங்கொண்டு அதன் காலனிகளைத் தொடர்ந்து ஆளமுடியாது என்பது அதற்குத் தெரிந்தது. ஆதிக்கத்திலுள்ள உள்ளூர்ப் பூர்ஷ்வாக்களுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து அரசியல் அதிகாரத்தைக் கைமாற்றி தனது பொருளாதார நலன்களைப் பாதுகாக்கத் தீர்மானித்தது. பிரித்தானியக்காரர் தமிழ்ச் சிறுபான் மைக்கும் பல வாக்குறுதிகளை அளித்துவிட்டு இறுதியில் அவர் களைக் கைவிட்டு சிங்களப் பெரும்பான்மையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார்கள். ஒரு பிரதமருடனும் அமைச்சரவை யுடனும் கூடிய பாராளுமன்ற அரசாங்கமுறை இலங்கைக்கு வழங்கப்பட்டது. தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் ஒரு நிரந்தர சிறுபான்மை ஆகினார்கள்.

டி. எஸ். சேனநாயக்கா இந்தியத் தமிழர்களுக்கும் தீமை செய்தார். இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் அவர்களுடைய வர்க்க நிலைப்பாடு காரணமாக இடதுசாரி இயக்கத்துக்கு ஆதரவளித்தார்கள். முதலாவது பாராளுமன்றத்தில் தமது சொந்த ஸ்தாபனத்தின் மூலம் 7 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்ததுடன் குறைந்தது 14 தொகுதிகளில் யூ.என்.பி.க்கு எதிரான அபேட்சகர்களை வெற்றி பெறத் துணைபுரிந்தார்கள். டி. எஸ். சேனநாயக்கா வேகமாகச் செயற்பட்டு 1948-ல் பிரஜா உரிமை சட்டத்தை நிறைவேற்றி இவர்களின் பெரும்பான்மை யோரின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித் தெடுத்தார். இது இலங்கை இந்தியப் பிரச்சினை என்பதை மேலும் மோசமாக்கியது. 1964-ல் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமர் லால்பஹதூர் சாஸ்திரியுடன் உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டார். இதன்படி 3 லட்சம் இந்திய வம்சாவளியினருக்கு பிரஜா உரிமை வழங்க சிறிலங்கா உடன்பட்டிருந்தது. 5 லட்சத்து 45 ஆயிரம்



பேரைத் திரும்பி அழைக்க இந்தியா உடன்பட்டது. மீதம் பேரின் கதி பின்னர் தீர்மானிக்கப்பட இருந்தது. சிறீலங்கா இந்த எண்ணிக்கையை ஏற்றுக்கொண்டதே முந்திய பிரஜா உரிமைச் சட்டங்களின் அநியாயத்தை எடுத்துக்கூறியது. இந்த எண்ணிக்கை சுய விருப்பத்தின் அடிப்படையில் அமையப்படா விட்டால் என்ன செய்வது என்பது பற்றி எதுவும் இல்லாததே இந்த உடன் படிக்கையில் பெரிய குறையாகும். 5 லட்சத்து 45 ஆயிரம் பேர் இந்தியாவுக்குத் திரும்ப விரும்பாவிட்டால் என்ன செய்வது? பலவந்தப் படுத்துவதா- இந்தப் பிரச்சினை தெளிவற்ற நிலைமையில் விடப்பட்டது.

பின்னர், முன்பு தீர்மானிக்கப்படாதிருந்த 15 லட்சம் பேரை யும் அரை அரைவாசியாகப் பங்கீட்டுக் கொள்வது என இரண்டு அரசாங்கங்களும் ஒத்துக்கொண்டன. இன்றும் 5 லட்சம் பேர் நாடற்றவர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொரு வகுப்புவாத வன்முறைக்குப் பின்னரும் மென்மேலும் கூடுதலான இந்திய வம்சாவளி மக்கள் சிறீலங்காப் பிரஜா உரிமையைக் கைவிட்டு இந்தியாவுக்குத் திரும்ப விரும்புகின்றார்கள். 1983 வன்முறைக் குப் பின்னர் இந்த எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துள்ளது.

சிறீலங்காவில் வகுப்புவாத நிலைமை 1950-க்குப் பின் சிங்களம் மட்டும் என்ற மசோதா நிறைவேறியபின் மோசமாகியது. எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்காவின் வெகுஜனவாதக் கொள் கைகளால் முடுக்கி விடப்பட்ட சிங்களவர்களின் புதிய தேசியவாதம் துரதிருஷ்டவசமாக தமிழர்களுக்கு எதிராகச் செலுத்தப்பட்டது. வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக அல்ல; வெளி நாட்டு ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டைப் பொருளாதார ரீதியிலும் கலாச்சாரத்திலும் அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு எதிராக அல்ல.

உள்ளே குமைந்து கொண்டிருந்த வகுப்புவாதப் புற்றுநோய் மொழிப் பிரச்சினை என்ற வடிவத்தில் 1955-ல் வெடித்தது. அதுகாலவரை ஆங்கிலத்தின் இடத்தை சுய மொழிகளான சிங்களமும் தமிழும் எடுக்கும் என்று சகல அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருந்தன. 1943-ல் இரண்டாவது அரச சபையில் சீர்திருத்த மசோதாவைப் பிரேரித்தபோது திரு.பண்டாரநாயக்கா இப்படித்தான் பிரேரித்தார். அரச சபையில் இந்தப் பிரேரணையை எதிர்த்த மிகச் சிலரில் இன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜயவர்த்தனா ஒருவர் என்று குறிப்பிடத்தக்கது. அவர் அப்பொழுது களனி உறுப்பினராக இருந்தார். தற்போது அடுத்ததாக சிங்களம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டும் தான் அரசு கரும மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரச்சாரம் சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டது.

இங்கு ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். பல நாடுகளில் சிறுபான்மைதான் மொழி உரிமைகளை அல்லது மற்ற உரிமைகளைப் பெரும்பான்மையிலிருந்து பாதுகாக்கப் போராடுவது வழக்கம். ஆனால் சிறீலங்காவில் ஒரு சிறுபான்மை தன்னை ஆபத்துக்குள்ளாக்கும் என்று அஞ்சி ஒரு பெரும்பான்மை அதன் மொழியைப் பாதுகாக்கப் போராட்டம் நடத்தியது. இந்தச் சிக்கலான பிரச்சினையைப் புரிந்துகொள்ள நாம் சிங்கள பெரும் பான்மை ஏன் ஒரு சிறுபான்மை போல நடந்து கொண்டது என்பதற்கான பிரத்தியேகக் காரணங்களை ஆராயவேண்டும்.

இதற்கான காரணங்கள் பல. முதலாவதாக புராதன காலத்தில் தென் இந்தியாவிலிருந்து நடந்த தமிழ்ப் படையெடுப்புகள் பற்றிய நினைவு. சிங்களவர்கள் இதனை மறக்கவிடவில்லை. துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையிலே நடைபெற்ற யுத்தம் பற்றி எந்தப்பள்ளி மாணவன் அறிய மாட்டான்? அநுராதபுர பொலனறுவ இடிபாடுகளைப் பார்க்கச் செல்வோரின் மனதில் அடுத்தடுத்த தென் இந்தியப் படையெடுப்புகளால் சிங்கள நாகரிகத்தின் மகிமைகள் அனைத்தும் அழிக்கப்பட்டன என்ற எண்ணம் தவறாமல் ஏற்படும்.

இரண்டாவதாக பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் தமது பெருந் தோட்டங்களில் வேலை செய்ய கடந்த நூற்றாண்டில் தென் இந்தியாவிலிருந்து சுமார் 10 லட்சம் தமிழ் தொழிலாளர்களை இங்கே கூட்டிவந்து கண்டிப் பிரதேசத்தின் மத்தியில் அவர்களைக் கொட்டிக் குவித்தார்கள். இவ்வாறு அவர்கள் இலங்கை-இந்தியப் பிரச்சினையை உருவாக்கினார்கள். இது வகுப்புவாதச் சச்சரவுகளுக்கான இன்னொரு காரணமாகும்.

மூன்றாவதாக, மிஷனரி நடவடிக்கை காரணமாக வடக்கில் உள்ள தமிழர்களுக்குக் கிடைத்த கூடுதலான கல்வி வசதிகளால் அவர்கள் தமது மக்கள் தொகை விகிதாச்சாரத்திலும் பார்க்கக் கூடுதலாக அரசாங்க சேவையிலும் தொழிலர் துறைகளிலும் இடம் பெற்றார்கள்.

1929-1931 உலக பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் சிங்கள மத்திய தர வர்க்கத்தினர் மத்தியில் வேலையின்மை ஒரு கடுமையான பிரச்சினையாகி அவர்கள் பெரும் எண்ணிக்கையில் அரசாங்க சேவையில் சேர்ந்தபோது தமிழர்கள் அங்கு நன்கு அரண் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.



பொருளாதாரப் பிரச்சினைகள்தான் மொழி நெருக்கடியின் அடிப்படையாக இருந்தன. 1956-க்கு முன் ஆங்கில மொழியறிவு அரசாங்க சேவையில் சேருவதற்கு அனுமதிப் பத்திரமாக இருந்தது. இதனால் தமிழர்கள் சிங்களவர்களுடன் போட்டிபோட, திறமையாக போட்டிபோட முடிந்தது. வேலையின்மையால் நிர்ப்பந்திக்கப்பட்டு சிங்களவர்கள் சிங்களம் மட்டும் உத்தியோக பூர்வமான மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அப்பொழுது அரசாங்க சேவையில் அவர்களுடைய வாய்ப்புகள் பெரிதாகும். தொழிற்துறை மயமாகாத இலங்கை போன்ற நாட்டில் அரசாங்கம்தான் மிகப்பெரிய முதலாளி, அத்துடன் அரசாங்க சேவைதான் பலன் தரும் தொழிலுமாகும். மொழிச் சமர் என்பது உண்மையில் சிங்கள - தமிழ் மத்திய தர வர்க்கங்களின் அரசாங்க வேலைகளுக்கான சமராகும். இதனால்தான் பொருளாதாரப் பரிகாரம் தவிர வேறு எந்தப் பரிகாரமும் இதனைத் தீர்க்க முடியாது.

நான்காவதாக, தமிழ், பாக் ஜலசந்திக்கு அப்பால் வாழும் 5 கோடியே 30 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் மொழி. இந்த பிராந்தியத்தில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை (தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள மொத்த மக்களையும் சேர்த்தால்) சிங்களம் பேசுவோருடன் ஒப்பிட்டால் அது 5:1 ஆகும். ஆகவே கலாச்சாரத்தில் தமிழர் தங்களை விழுங்கி விடுவார்கள் என்ற பயம் சிங்களவர்கள் மத்தியில் இருக்கின்றது.

ஐந்தாவதாக, சிங்களத்திலும் பார்க்க தமிழ் பழைய மொழி. உலகின் வேறு பல பாகங்களிலும் தமிழ் மொழி பேசுவோர் உண்டு. இதனால் சிங்களவர் மத்தியில் ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுள்ளது.

இந்த வரலாற்று உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் இலங்கையில் மொழிப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியாது. எம்.ஈ.பி. வெற்றிக்குப் பின் திரு. பண்டாரநாயக்கா தமிழ்த் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சித்தார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவுதான் புகழ்படைத்த பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தமாகும். முழு இலங்கையிலும் சிங்களத்தை உத்தியோகப் பூர்வ மொழியாக ஏற்றுக்கொள்ளும் பொது நிலைமையில் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மொழிக்கு சில பாதுகாப்புகளை வழங்க அது ஏற்றுக்கொண்டது.

www.tamilarangam.net



தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றம் என்ற சிக்கலான பிரச்சினை யிலும் அது சில சமரசங்களைக் கண்டது.

வகுப்புவாதப் பிரச்சினைக்கும் குடியேற்றத்துக்கும் இடையில் உள்ள உறவு பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியம். நிலம் அல்லது பிரதேசப் பிரச்சினை தேசிய இன அல்லது சிறுபான்மை இனப் பிரச்சினையுடன் நெருங்கிய தொடர்புடையது. வசிப்பதற்கு ஒரு தொடர்ச்சியான பிரதேசம் இன்றி எந்தத் தேசிய இனக் குழுவும் தேசிய இனமாக வளர முடியாது. இதனால்தான் இலங்கையில் அரசுத் திட்டங்கள் மூலம் பலவந்தக் குடியேற்றங் களைச் செய்து இப்பிரதேசங்களின் இன அமைவு இயல்பை மாற்றும் முயற்சியை எதிர்த்து தமது தாயகத்தைப் பாதுகாக்கத் தமிழர்கள் விரும்புகிறார்கள். மறுபுறத்தில் டி.எஸ். சேனநாயக்கா முதலான சிங்களத் தலைவர்கள் குடியேற்றத் திட்டங்கள் மூலம் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களை சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களாக மாற்றும் நோக்கத் தைக் கொண்டிருந்தனர்.

1935-ம் ஆண்டின் காணிக் கமிஷன் அறிக்கையின்படி இலங்கையில் விவசாயி வர்க்கம் ஒரு வர்க்கம் என்ற முறையில் இரண்டுபட்டுக் கொண்டிருந்தது. இதற்குப் பின் டி.எஸ். சேன நாயக்கா தனது குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்தார். இந்தக் குடியேற்றத் திட்டங்களில் அநேகமானவை வறண்ட பிரதேசத்தில் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இவை வட மத்திய மாகாணத்தில் இருந்தன. ஆனால் சில குடியேற்ற திட்டங்கள் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்று கருதப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை வரலாற்றின் பெரும்பகுதியில் சிங்களவர்கள்தான் அதை ஆட்சி புரிந்தார்கள். ஆனால் சோழர்கள் அடிக்கடி படையெடுத்து இலங்கையின் பெரும் பகுதியை ஆண்டார்கள். அவர்களை அடிபணியச் செய்ய சிங்களவர்கள் முயற்சித்தபோதும் தமிழ் ராஜ்யங்கள் மீண்டும் மீண்டும் வடக்கில் தோன்றின. 1505-ல் போர்த்துகேயர் இலங்கையை வந்தடைந்தபோது இத்தகைய தொரு தமிழ் ராஜ்யம் வடக்கில் இருந்தது. அதுபோர்த்துக் கேயரால் தோற்கடிக்கப்பட்டது. ஆகவே கடந்த நாலு நூற்றாண்டுகளை எடுத்துப் பார்த்தால் தமிழர்கள் பரம்பரையாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது மிகையான கூற்றல்ல.



டி.எஸ். சேனநாயக்கா ஒரு முற்றுமுழுதான பிற்போக்குவாதி மாத்திரமல்ல விவேகமான சிங்களத் தலைவரும் ஆவார். 1935-ல் ஏற்பட்ட சர்வ - சிங்கள அமைச்சரவை அவர் பொறுப்பு என்ற போதிலும் அவர் ஒருபோதும் வகுப்புவாதத்தைப் பகிரங்க மாகப் பிரச்சாரம் செய்யவில்லை. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்கள மயமாக்கும் வேலையை அவர் விடாப்பிடியாகச் செய்தார். டி. எஸ். சேனநாயக்கா இறந்தபின் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் அவருடைய நெருங்கிய சகாவான வீ. ரத்னநாயக்கா இதனை அம்பலமாக்கினார்.

இந்த நிலைமையில் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் சாத்தியமான மிகச் சிறந்த சமரசமாகும். ஆனால் அதைப் பரிட்சித்துப் பார்க்கவில்லை. யூ.என்.பி. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சித்து இந்த உடன்படிக்கைக்கு எதிராகக் கண்டி யாத்திரை ஒன்றை ஒழுங்குபடுத்தியது. பின்னர் ஜனாதிபதியாகிய ஜே. ஆர். ஜயவர்த்தனா இதற்குத் தலைமை தாங்கினார். கம்பஹா சிறீலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இம்புலகொடவில் தனது ஆதரவாளர்களுடன் சேர்ந்து வீதியில் படுத்துக் கிடந்து இந்த யாத்திரையைக் குழப்பியடித் தார்.

இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவாக இருந்தபோது பண்டார நாயக்கா அரசியல் ஞானி என்ற முறையில் உச்சக்கட்டத்துக்குச் சென்றார் என்று கூற முடியும். போகம்பர மைதானத்தில் அவர் நிகழ்த்திய புகழ் பெற்ற உரை அவருடைய சிறப்புகள் அனைத் தையும் உள்ளடக்கிய உரை என்று கூறலாம். அந்தப் பேச்சு பதிவு செய்யப்பட்டு இலங்கை வானொலியில் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பப்பட்டது. முற்றிலும் தனியாருக்குச் சொந்தமான பகை மையான பத்திரிகைகளுக்கு முன்னிலையில் திரு பண்டாரநாயக்கா ஒரு நாவலர் என்ற முறையில் தமது திறமையைப் பயன்படுத்தி அரசு வானொலியைப் பயன்படுத்தி தனது கருத்துக்களைப் பிரச் சாரம் செய்தார்.

ஆனால் அவருடைய முகாமில் இருந்த இனவெறிப் பிரகிருதி களும் கிளர்ச்சி செய்தார்கள். சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் அவருக்கு உதவி செய்வதற்குப் பதிலாக முட்டாள்தனமான சிறீ எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தார்கள். தமிழ்ப் பிரச்சினைக்கு பரிகாரம் ஒன்றை அமுல்படுத்தக் கூடியளவிற்கு போதிய தேசிய அந்தஸ்தும் மக்கள் ஆதரவும் உடைய ஒரேயொரு சிங்களத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைவராக திரு. பண்டாரநாயக்கா ஒருவரே இருந்தார் என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியளவிற்கு அவர்களிடம் அரசியல் ஞானம் இருக்கவில்லை. ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. சமஷ்டிக் கட்சியின் சிறீ எதிர்ப்பு இயக்கத்துக்குப் பதிலாக தெற்கில் சிங்களப் 'போராளி' கே.எம்.பி. ராஜரத்னாவின் தார் பூசும் இயக்கம் நடத்தப்பட்டது. பொது இடங்களில் உள்ள தமிழ் எழுத்துக்கள் தார் பூசி அழிக்கப்பட்டன.

## 1958 இன ரீதியான வன்முறை

இரண்டு பக்கங்களிலும் பதற்ற நிலை கடுமையாகி இறுதியில் இலங்கை வரலாற்றில் மிக மோசமான இன ரீதியான வன்முறை ஏற்பட்டது. 1983-ல் இதிலும் மோசமான வன்முறை ஏற்பட்டது. தமிழருக்கு எதிரான 1958-ன் இன ரீதியான வன்முறையை ஒட்டி நேர்மையுள்ளம் படைத்த இலங்கையர் அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும். அது எமது நாட்டின் வரலாற்றில் ஒரு நிரந்தரக் கறையாக அமையும் இரவோடிரவாக மனிதர்கள் மிருகங்கள் ஆனார்கள். சக மனிதர்களுக்கு பெற்றோல் ஊற்றி எரித்துக் கொல்லும் அளவிற்கு சென்றார்கள். இந்த மனிதர்கள் வேறு மொழி பேசியது தவிர வேறு எந்தக் குற்றத்தையும் புரியவில்லை.

இந்த இன ரீதியான வன்முறை கொழும்பு வீதிகளில் ஆரம்பிப்பதை நான் ஹாங்ஹாங் ஷாங்காய் வங்கிக் கட்டிடத்தின் உச்சி மாடியிலிருந்த ஜுலியஸ் கிறீசி கொம்பெனியின் அலுவலகத்திலிருந்து பார்த்தேன். அப்பொழுது நான் இந்த கொம்பெனியின் சிரேஷ்ட பாட்னர் ஒருவருடன் தொழிற்துறைப் பிணக்கொன்றின் தீர்வுக்கான நிபந்தனைகளை விவாதித்துக் கொண்டிருந்தேன். உடனே திரும்பி வரும்படி எனக்கு அப்போது என்னுடைய கந்தோரிலிருந்து தொலைபேசிச் செய்தி ஒன்று வந்தது. கொழும்பு கொழுந்து விட்டெரிகின்றது. தமிழர்கள் வீதிகளில் இருப்பது அவர்களுக்கு ஆபத்தானது. நான் அப்பொழுது பிற்றக் கோட்டையிலுள்ள சிங்களக் குடும்பம் ஒன்றில் வசித்து வந்தேன். ஒரு இரவு அங்கு தங்கியிருந்துவிட்டு என்னுடைய நண்பரின் முழுக் குடும்பத்துடனும் கெற்றகெட்டவுக்கு அருகாமையிலுள்ள எனது நண்பரின் உறவினர் ஒருவரின் தோட்டத்துக்கு கார் மூலம் நான் சென்றேன். நாங்கள் அங்கு ஒரு வார காலம் தங்கி இருந்தோம். கொழும்பில் நிலைமை சகஜமாகியதும் திரும்பி வந்தோம்.



தமிழருக்கு எதிரான வன்முறை எம்.ஈ.பி. சமஷ்டிக் கட்சி இரண்டினதும் அரசியல் வங்கரோத்தின் பிரதிபலிப்பாகும். தெற்கில் அந்தரத்தில் நின்ற தமிழர்களைக் கப்பல் மூலம் வடக்கிற்குக் கொண்டு வர வேண்டியிருந்தமை சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான இன உறவுகள் மிக மோசமான மட்டத்தை அடைந்ததைக் காட்டியது.

கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சம சமாஜக் கட்சியும் மொழிப் பிரச்சினையில் கோட்பாட்டு ரீதியான நிலைப்பாட்டை எடுத்தன. இவை இரண்டினதும் பெரும்பான்மை உறுப்பினர்கள் சிங்களவர். இந்த இரண்டு கட்சிகளும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டும் என்று நின்றன. அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்களம் மட்டும் என்ற சட்டத்துக்கு எதிராக வாக்களித்தார்கள். சிங்கள இனவாதிகள் அவற்றைத் தாக்கினார்கள். அவற்றின் சட்டங்கள் முறியடிக்கப்பட்டன. இறுதியில் இந்தக் கட்சிகள் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் காரணமாக சிங்கள இன வெறிக்கு அடிபணிந்து சிங்களம் மட்டும் உத்தியோகப்பூர்வமான மொழி என்பதற்கு தமது ஆதரவைத் தெரிவித்தன. திரிபுவாதம், சீர்திருத்தவாதம் ஆகிய நாசம் அவற்றை ஆட்கொண்டு விட்டது.

தேசிய இனப் பிரச்சினையைத் தொடர்ந்து கவனிப்போம். 1957-ல் சிங்களம் மட்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான உறவில் ஒரு எல்லைக் கோடாகும். சமஷ்டிக் கட்சி ஒரு அரசியல் நெருக்கடியை எதிர் நோக்கியது என்பது தெளிவு. இன ரீதியான வன்முறையைத் தொடர்ந்து பிரகடனம் செய்யப்பட்ட அவசர கால நிலைமையின் ஆரம்ப நாட்களில் தடைக்காவலில் வைக்கப்பட்ட அதன் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள தமிழர்களைப் பாதுகாக்க சக்தி அற்றவர்கள் ஆகினார்கள். ஆனால் இந்தக் கட்சி அதன் மலட்டுக் கொள்கையை தொடர்ந்து கடைப்பிடித்தது. வடக்கில் இனவாதத்தைப் பிரச்சாரம் செய்தது. இரண்டு பண்டாரநாயக்கா அரசாங்கங்களும் கொண்டு வந்த சகல தீவிரவாத நடவடிக்கைகளையும் எதிர்த்து முற்போக்கான சிங்கள மக்களைக் கூடப் பகைவர்கள் ஆக்கியது. பஸ் தேசிய மயமாக்கம், நெற்காணி மசோதா பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தல் முதலியவற்றை இக்கட்சி எதிர்த்தது. இரண்டு சிங்களக் கட்சிகளான யூ.என்.பி.-க்கும், எஸ்.எல்.எப்.பி-ற்கும் இடையில் சிங்கள வாக்காளர்கள் சரி சமமாகப் பிளவுபட தமிழர்களுக்குக் கூடுதலான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சலுகை வழங்கும் கட்சியுடன் தாம் சந்தர்ப்பவாதப் பேரம் ஒன்றை நடத்தலாம் என்று இந்தக் கட்சி எதிர்பார்த்தது. இரண்டு சிங்களக் கட்சிகளில் ஒரு கட்சியின் முன்னால் தமிழர்களின் உரிமைகளை வர்த்தகம் செய்யும் முயற்சியே தவிர இது வேறெதுவும் அல்ல. இத்தகைய சந்தர்ப்பம் சமஷ்டிக் கட்சிக்கு 1965-ம் ஆண்டில் ஏற்பட்டது. இது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

1956 பொதுத் தேர்தலில் சிங்கள பிரதேசங்களில் உள்ள தமிழர்கள் யூ.என்.பி.-க்கு எதிராக சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்தது ஒரு உண்மை. சிங்களம்மட்டும் என்ற சட்டம் இந்த ஆதரவை நிரந்தரமாக இழக்கச் செய்தது என்பதையும் பண்டார நாயக்கா உணர்ந்தார். ஆகவே அவர் தமிழின் நியாயமான பாவிப்புக்கான மசோதா ஒன்றைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தார். ஆனால் அவருடைய முகாமில் இருந்த பிடிவாதிகளின் எதிர்ப்பினால் சட்ட விதிகள் எதுவும் அதன் கீழ் வகுக்கப்படவில்லை. மசோதா செயலற்றதாக இருந்தது. பின்னர் வந்த யூ.என்.பி. அரசாங்கம் ஒன்று இந்தச் சட்ட விதிகளை வகுக்க முற்பட்டபோது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்மையான எதிர்ப்பை அது சந்தித்தது. தமிழருக்கும் இந்த மசோதா ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை.

இதற்கிடையில் எம்.ஈ.பி.-க்குள்ளே உள்சச்சரவு ஏற்பட்டது. எம்.ஈ.பி. என்பது உண்மையில் வேறுபட்ட கருத்துகள் உடையவர்களும் திரு. பண்டாரநாயக்கா என்ற தலைவரின் கீழ் ஐக்கியப்பட்டவர்களும் யூ.என்.பி.-க்கு எதிர்ப்பு என்ற ஒரு பொது அபசத்தைக் கொண்டவர்களுமான ஆட்களின் சந்தர்ப்பவாதக் கூட்டேயாகும். இத்தகைய சக்திகளை ஒன்றாக வைத்திருப்பது மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. விவசாயக் கூட்டுறவு வங்கி, நெல்லின் உத்தரவாத விலையை உயர்த்துதல் ஆகிய பிரச்சினைகளையொட்டி 1959-ல் பிளவு ஏற்பட்டது. இந்த இரண்டு விஷயங்களுக்கும் இடதுசாரியான குணவர்த்தனாவே கர்த்தாவாக இருந்தார். பிலிப் குணவர்த்தனாவும் அவருடைய சகாவான வில்லியம் சில்வாவும் அமைச்சரவையை விட்டு விலகினார்கள். இதற்குப் பின் நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் குருனாகல மாநாட்டில் பண்டாரநாயக்கா தமது முதலாவது கம்யூனிச விரோதச் சொற்பொழிவை நிகழ்த்த வேண்டியேற்பட்டது.

திரு. பண்டாரநாயக்கா அமைச்சரவையின் பிற்போக்குப் பிரகிருதிகளின் கைதியாகினார். இவர்களின் பிரதிநிதிகள் சிலர் திட்டமிட்டு 1950-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் திகதி அவரைப் படுகொலை செய்தார்கள். தமது விருந்தையில் அமர்ந்திருந்த புத்த மதகுரு ஒருவருக்கு வணக்கம் தெரிவிக்கக் குனிந்தபோது அவர் தனது அங்கியிலிருந்து பிஸ்ரல் ஒன்றை எடுத்து பிரதமரை சுட்டார். அதற்கு அடுத்த நாள் பிரதமர் ஐ நா. சபைக்குப் போக இருந்தார். 26-ம் திகதி பிரதமர் சூட்டுக் காயத்தால் மரணம் அடைந்தார்.



அவர் மரணமடைந்த சூழ்நிலை தன்னைச் சுட்டவருக்கு அவர் காட்டிய மன்னிப்பு இவற்றால் பண்டாரநாயக்காவின் நாமத்தைச் சூழ ஒரு புனிதத் தன்மை எழுந்துள்ளது. அவரை ஒரு தெய்வமாக்கவும் முயற்சி நடைபெற்றது. இந்த நிலைமையில் இலங்கை அரசியலில் அவருடைய இடத்தைப் பற்றி நிதானமான கணிப்பீடு எதுவும் செய்யப்படவில்லை. அவர் பின்பற்றியதாக கூறப்படும் பண்டாரநாயக்கா கொள்கைகள் என்ற கட்டுக்கதை தோன்றியுள்ளது. ஆனால் பண்டாரநாயக்கா கொள்கைகள் என்றால் என்ன என்று எவரையும் கேட்டால் திருப்திகரமான பதிலைப் பெற முடியாது. ஒருவேளை அவற்றின் தெளிவற்ற காரணத்தால் அவற்றை எவரும் விரும்பியவாறு வியாக்கியானம் செய்து தாம் பண்டாரநாயக்கா கொள்கைகளின் ஆதரவாளர்கள் என்று கூறிக் கொள்ள முடிகின்றது.

பண்டாரநாயக்கா கடைப்பிடித்த கொள்கைகளை பிரயத்தனப்பட்டு இனங் கண்டுகொள்ள முயற்சிக்கும் ஒருவர் இரண்டு உலகங்களுக்கு இடையிலான இன்னும் இறக்காத உலகத்துக்கும் இன்னும் பிறக்காத உலகத்துக்கும் இடையிலான ஒரு பாலமாக அமைகின்றார். இதனால்தான் இலங்கையின் இன்றைய கட்டத்தை ஒரு மாற்று காலகட்டம் என்று அவர் அடிக்கடி குறிப்பிட்டார் அவர் நடுப்பாதை ஒன்றைக் காண முற்பட்டார். முதலாளித்துவம், கம்யூனிசம் இரண்டினதும் கடும் போக்குகளைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் கருதினார். ஆனால் இது தர்க்க முரணானது. அறிவியலுக்கும் பொருந்தாதது. இலங்கையைப் பொறுத்தவரை முதலாளித்துவமோ கம்யூனிசமோ என்பதல்ல பிரச்சினை. எப்படியிருப்பினும் இரண்டுக்கும் இடையில் நடுப்பாதை கிடையாது. இலங்கையின் பிரச்சினை நவகாலனிய அடிமைத்தனமா அல்லது உண்மையான தேசிய சுதந்திரமா என்பதாகும். பண்டாரநாயக்காவுக்கு இது புரியவில்லை. அவர் இறந்த போது இலங்கையின் மீதான நவகாலனியச் சங்கிலிகள் அவர் அதிகாரம் ஏற்ற போதிலும் பார்க்க இறுகியிருந்தன. பொது மக்களைச் சுரண்டுவது மேலும் மோசமாகியது. எந்த ஒரு பொருளாதாரப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. இன்றைய

www.tamilarangam.net



நிலைமை தொடர்ந்து இருப்பதை அழகுபடுத்தி தீவிரமாற்றத்தை
பின்போடுவதற்கான சாக்குப் போக்காகவே இந்த நடுப்பாதைக்
கருத்து முன்வைக்கப்பட்டது.

வெளிவிவகாரத்துறையில் பண்டாரநாயக்காவின் கோஷ்டிச்
சேராக் கொள்கை என்பதன் அர்த்தம் ஏகாதிபத்திய வல்லரசுகள்
அசல் அடிவருடி என்ற நிலையிலிருந்து அது அப்பால் நகர்ந்த
தாகும். ஆனால் கோஷ்டி - சேராமை என்பது ஒரு ஆற்றல்
வாய்ந்த கொள்கை அல்ல. அது அநேகமாக இரண்டு உலகத்
தையும் பயன்படுத்துவதும்,ஒரு உலகத்துக்கு எதிராக இன்னொரு
உலகத்தைத் தூண்டிவிடுவதும் ஆகும். ஒரு காலகட்டம் வரை
அது செயற்படலாம். அதற்கு மேல் சகல நாடுகளும் எந்தப்
பக்கம் என்று தேர்வு செய்யத்தான் வேண்டும். மிகவும் வன்மை
யாகக் கோஷ்டி சேராதவையாக் இருந்த சில நாடுகள் இப்பொழுது
மிகுதியும் கோஷ்டி சேர்ந்தவையாகியுள்ளன. எப்படி என்றாலும்
பண்டாரநாயக்காவின் கோஷ்டி சேராக் கொள்கையால் சர்வ
தேசிய ரீதியில் இலங்கைக்குக் கூடுதலான நண்பர்கள் கிடைத்
தனர்.

முந்திய யூ.என்.பி. அரசாங்கங்களின் மேற்கத்தைய சார்பு
மனோபாவத்திலிருந்து திரு.பண்டாரநாயக்கா விலகிச் சென்றதன்
விளைவாக இலங்கைக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையில்
ராஜதந்திர உறவுகள் ஏற்பட்டன.சோவியத்யூனியன் கொழும்பில்
ஒரு தூதரகத்தை அமைத்த முதலாவது சோஷலிச நாடாகும்.
பின்னர் மக்கள் சீனக் குடியரசும் கிழக்கு ஐரோப்பிய சோஷலிச
நாடுகளும் தூதரகங்களை அமைத்தன. சேர். ஜோன் கொத்தலா
வலையின் ஆட்சியின் போது சூரிய கிரகணத்தைப் பார்க்க
இலங்கை வரவிரும்பிய சோவியத் விஞ்ஞானிகளின் குழு
ஒன்றுக்கும் சோவியத் உதைபந்தாட்டக் குழு ஒன்றுக்குக் கூட
அனுமதி மறுக்கப்பட்டது. இவற்றைப் பார்த்தால்தான் ஏற்பட்ட
மாற்றத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.
1956 தேர்தலில் வெற்றி பெற்றதும், உலகக் கம்யூனிசத்தின்
அச்சுறுத்தல் பற்றிய திரு. பண்டாரநாயக்காவின் கருத்துக்களைக்
கேட்டார்கள். ''உலகம் கம்யூனிச மயமாக விரும்பினால் அதைத்
தடுப்பதற்கு நான் யார்?'' என்று தனக்கே உரித்தான முறையில்
அவர் பதிலளித்தார். அப்பொழுது இந்தியாவின் பிரதமராக
இருந்த பண்டிட் நேருவிலும் பார்க்க திரு. பண்டாரநாயக்கா
இடதுசாரி சார்புடையவராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்ட
வேண்டும். பண்டிட் நேரு அப்பொழுது வலதுசாரி சக்திகளின்
கைதியாக இருந்தார். திரு. பண்டாரநாயக்கா முற்போக்கு சக்தி



களின் தலைவராக அதிகாரத்துக்கு வந்ததும் யூ.என்.பி. பிரதிநிதித்துவம் செய்த வலதுசாரி பிற்போக்கு சக்திகளைத் தோற்கடித்து அதிகாரத்துக்கு வந்ததும் இதற்கான காரணமாகும். ஆனால் நேருவோ ஆரம்பத்திலிருந்தே தனக்குப் பின்னால் வலதையும் இடதையும் ஐக்கியப்படுத்தி வைத்திருந்தார்.உண்மையில் பண்டாரநாயக்கா ஆட்சியின் வெளிவிவகாரங்களிலான முற்போக்குத் தன்மையை கண்டு நேரு மிகவும் கவலைப்பட்டு பண்டாரநாயக்காவுக்கு மிதமான கொள்கையைக் கடைப்பிடிக்க ஆலோசனைக் கூறும்படி கிருஷ்ணமேனனை இலங்கைக்கு அனுப்பினார். பண்டாரநாயக்கா அவருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டார் என்று தெரிகிறது.

திரு. பண்டாரநாயக்கா கடைப்பிடித்த சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையின் விளைவாக சீனப் பிரதமர் சூஎன்லாய் முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்தார். திருமதி பண்டாரநாயக்காவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் போது அவர் இரண்டாவது தடவை இலங்கைக்கு விஜயம் செய்தார். சூஎன்லாயின் இலங்கை விஜயம் பெரிதும் மக்கள் ஆதரவைப் பெற்றது. அவர் சென்ற இடமெங்கும் பெருந்திரளான மக்கள் கூடினார்கள். சூஎன்லாய் விஜயத்தின்போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடவேண்டும். சீனப் பிரதமர் பெப்ரவரி 4-ம் திகதி சுதந்திரச் சதுக்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தார். பேராசிரியர் ஜி. பி. மலலசேகர சிங்களத்தில் அவருக்கு மொழியாக்கம் செய்தார். சொற்பொழிவின்போது மழை பெய்யத் தொடங்கியது. பேராசிரியர் மலலசேகர மழையைத் தவிர்க்க மண்டபத்துக்குள் செல்ல முயற்சித்தார். ஆனால் சூஎன்லாய் மலலசேகரவின் கைகளைப் பிடித்தவாறே மழையில் நின்று பேசினார். மலலசேகர மொழி பெயர்த்தார் அப்பொழுது மக்கள் அனைவரும் குடை பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சூஎன்லாய் செயலைக் கண்டதும் குடைகளை மடித்துவிட்டு மழையில் நின்று சொற்பொழிவைக் கேட்டார்கள். ஒரு தலைவருக்கு இத்தகைய அற்புதமான மௌனமான பாராட்டுக் கிடைத்ததை நான் பார்த்ததில்லை.

உள் விவகாரங்களில் எம்.ஈ.பி. அரசாங்கத்தின் ஆட்சி புத்தம் புதிய காற்று வீசுவது போலிருந்தது. கடுமையான யூ.என்.பி.-யின் அடக்குமுறைக்குப் பின்னர் சுதந்திர உணர்வு ஒன்று பரவியிருந்தது. பாராளுமன்றத்தின் அங்குரார்ப்பண

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தினத்த ூ திரளான மக்கள் காவலைத் தாண்டி பிரதிநிதிகள் சபைக்குள் புகுத்து தமது பிரதிநிதிகள் இருக்கும் ஆசனங்களை எல்லாம் தொட்டுப் பார்த்தார்கள். புதிய அரசாங்கத்தில் மக்களுக்கு இருந்த நம்பிக்கையையும் இந்த அரசாங்கத்திடம் அவர்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்புகளையும் இது காட்டியது.

தொழிலாளர் முன்னணியிலும் புதிய அரசாங்கம் முந்திய யூ.என்.பி. அரசாங்கங்களிலும் வித்தியாசமான கொள்கைகளைப் கடைப்பிடித்தது. யூ.என்.பி. அரசாங்கங்கள் முதலாளிகளுக்குச் சார்பாக இருந்தன. தமது கோரிக்கைகளை முன்வைக்க மாத்திரமல்ல அவற்றுக்கு ஆதரவாக வேலை நிறுத்தம் செய்யவும் தொழிலாளர்கள் சுதந்திரம் பெற்றார்கள். இதனால் பல வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இவற்றுக்கு இடதுசாரி இயக்கம் தலைமை கொடுத்தது. இதற்காகச் சிலர் இடதுசாரி இயக்கத்தின்மீது குற்றம் சுமத்தினார்கள். மக்களுக்குச் சுதந்திரத்தை வழங்கி விட்டு, தமது கோரிக்கைகளைப் பெற அதனைப் பயன்படுத்தக் கூடாது என்று எதிர்பார்க்க முடியாது என்பதை இவர்கள் உணர்வதில்லை. 1947 மே-ஜூன் பொது வேலை நிறுத்தத்தில் அரசாங்க சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட அனைவருக்கும் திரும்ப வேலை வழங்கியது எம். ஈ. பி. அரசாங்கம். இது தொழிலாளி வர்க்கத்துக்குக் கிடைத்த உடனடி வெற்றியாகும்.

1956-ல் எமது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனமும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஏனென்றால் கம்யூனிஸ்ட் கட்சி இந்த சம்மேளனத்துக்குத் தலைமை தாங்கியது. எமது கடிதங்களுக்கு அவர்கள் பதில் எழுதுவதில்லை. தொழிற் தினைக் களத்தில் நடந்த மாநாடுகளில் அவர்கள் கலந்து கொள்வதில்லை. இது பெரும் தடையாக இருந்தது. லங்கா சம சமாஜக் கட்சி தலைமையிலான தொழிற்சங்கங்களுக்கு இந்தக் கஷ்டம் இருக்கவில்லை. பல்வேறு வேலைத் தலங்களில் தொழிற்சாலைக் கமிட்டிகள் மூலம் நாம் செயற்பட வேண்டியிருந்தது. எம்.ஈ.பி. அரசாங்கம் அமைக்கப் பட்டதற்கு சற்றுப் பின் இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதியாளரான புறுக்பொன்ட் கொம்பெனியில் நாம் ஒரு வேலை நிறுத்தத்தை நடத்தினோம். தேயிலை ஏற்றுமதியால் வரும் வருமானம் அரசாங்கத்தின் பிரதான வருமானம் என்ற காரணத்தால் தேயிலை ஏற்றுமதித் தொழிற் துறையில் நீடித்தகால வேலைநிறுத்தம் ஒன்றை ஒரு அரசாங்கத்தால் சகித்துக் கொள்ள முடியாது. திரு. பண்டாரநாயக்கா



உடனே இரண்டு தரப்புகளினதும் மாநாடு ஒன்றை பிரதமர் அலுவலகத்தில் நடத்தினார். நான் வேலை நிறுத்தத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்தேன். முதலாளிமாருடன் பேசி ஏன் ஒரு தீர்வைக் காணமுடியாது என்று திரு. பண்டாரநாயக்கா என்னிடம் கேட்டார். முதலாளிமார் எங்களை அங்கீகரிக்காதபடியால் நாம் பேசித் தீர்க்க முடியவில்லை என்று நான் கூறினேன். திரு.பண்டாரநாயக்கா தமது அதிருப்தியை தெரிவித்தார். எம்மை அங்கீகரிக்காமல் இருந்ததற்கும் பிரதான காரணமாக இருந்த முதலாளிமார் சம்மேளனத்தின் வெள்ளைக்காரத் துணைத் தலைவர் அப்பொழுது விடுமுறையில் இங்கிலாந்து சென்றிருந்தார். இந்த மாநாட்டில் முதலாளிமார் சம்மேளனத்தின் நியாயவாதிகளான ஜூலியஸ் அண்ட் கிறீசி கொம்பெனியின் சிரேஷ்ட பாட்னரான திரு. றோவன் முதலாளிகளைப் பிரதிநிதித்துவம் செய்தார். அவர் என்னை ஒரு பக்கத்துக்கு அழைத்து தான் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். இதன்பின் வேலை நிறுத்தத்தைத் தீர்ப்பது கஷ்டமாக இருக்கவில்லை. திரு. பண்டாரநாயக்காவின் சுதந்திரமான கொள்கைகளாவும் தொழிலாளர் ஸ்தாபனங்களை அனுமதிக்க அவர் விரும்பியதனாலும் தொழிலாளர்களின் பேரம் பேசும் சக்தி அதிகரித்தது என்பதைக் காட்டவே இதைக் குறிப்பிடுகின்றேன். ஒரு வேலை நிறுத்தத்தின் போது பேச்சு வார்த்தை நடத்த மறுக்கும் கொள்கையை திரு. பண்டாரநாயக்கா ஒருபோதும் முன்வைத்ததில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும். பிந்திய சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தான் இந்தப் பிற்போக்கான கொள்கையை முன்வைத்தார்.

இந்தக் காலத்தில் இரண்டு பொது வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1957-ல் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்துக்கு லங்கா சம சமாஜக் கட்சி தலைமை தாங்கியது. 1958-ல் நடந்த பொது வேலைநிறுத்தத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கியது. முதலாவது பொது வேலை நிறுத்தத்தால் அரசாங்க ஊழியருக்கான வாழ்க்கைச் செலவுப்படி அதிகரித்தது. இரண்டாவது வேலை நிறுத்தத்தால் தனியார் துறையினருக்கு இந்த அதிகரிப்புகள் ஏற்பட்டன. இந்தக்காலத்தில் தொழிற் சங்க இயக்கத்தின் தலைமையைப் பெற லங்கா சம சமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் பெரும் போட்டி போட்டன. இதனால் தொழிலாளர்களின் பேரம் பேசும் திறன் குறைவாகியது. ஆனால் தொழிற்சங்க அங்கத்துவம் பலமடங்கு அதிகரித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தக் காலத்தில் முதல் தடவையாக அரசாங்கக் கட்சியின் தொழிற் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இவை அரசாங்கத்தின் ஆதரவை பெற்று 'கொம்பெனிச் சங்கம்' போல இருந்தன. இது ஒரு துரதிருஷ்டவசமான வளர்ச்சி. இதனால் பின்னர் தொழிலாளர்கள் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் ஆளும் கட்சியின் தொழிற்சங்கங்களுக்கு மாறிச் செல்லும் நிலைமை ஏற்பட்டது. அரசாங்கப் பகுதியிலும் கூட்டுத் ஸ்தாபனங்களிலும் இது குறிப்பாக ஏற்பட்டது.

1957-ல் நான் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டேன். இன்று வரை அந்தப் பதவியில் இருக்கின்றேன். முந்திய ஆண்டுகளில் நான் பிரதான மாக கட்சி முன்னணியில் வேலை செய்தேன். 1963—1964-ல் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவில் இந்தத் தற்செயலான சம்பவம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தனியார்துறைத் தொழிலாளர்களுக்கும் அரசாங்களவு பஞ்சப் படி வழங்கப்பட வேண்டும் என்ற பிரதான கோரிக்கையையொட்டி 1958-ல் நடைபெற்ற தனியார் துறைப் பொது வேலை நிறுத்தத்தின் போது நான் சி.டி.யு.எப்.-பின் பொதுச் செயலாள ராக இருந்தேன். தேயிலை ரப்பர் ஏற்றுமதித் துறையில் இந்த வேலை நிறுத்தம் பூரண வெற்றியாக அமைந்தது. பல என்ஜினியரிங் தொழிற் சாலைகளிலும் தொழிலாளர்கள் ஆதரவு அளித்தார்கள். துறைமுக தொழிலாளர்களில் ஒரு பகுதியினரும் வேலைநிறுத்தம் செய்தார்கள். தேயிலை ரப்பர், ஏற்றுமதி வர்த்தகத் துறையில் ஏற்பட்ட ஏறக்குறையப் பூரணமான வேலை நிறுத்தத்தால் கொழும்பிலான தேயிலை ஏலம் ரத்து செய்யப் பட்டது. மூன்று நாலு வாரங்களுக்கு அப்பாலும் அரசாங்கத்தால் வேலை நிறுத்தத்தை உதாசீனம் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அரசாங்கத்தின் பிரதான வருமானம் தேயிலை ஏற்றுமதியில் இருந்து வந்தது.

திரு. பண்டாரநாயக்கா சி.டி.யு.எப்.யை ஒரு மாநாட்டுக்கு அழைத்தார். எம்.ஜி.மென்டிஸ் அப்பொழுது சி.டி.யு.எப்.-பின் தலைவராக இருந்தார். ஏதோ காரணத்தால் நான் அதை இப்பொழுது மறந்துவிட்டேன். அப்பொழுது தொழிற் கமிஷன ராக இருந்த திரு. சி. பி. குமாரசிங்காவுக்கு அவரைப் பிடிக்காது. சி.டி.யு.எப்.-பின் பிரதிநிதியாக நானே இருக்கவேண்டும் என்று அவர் என்னைத் தொலைபேசி மூலம் கேட்டார். மென்டிசைப் பேச்சுவார்த்தையிலிருந்து தவிர்க்கவே அவர் இவ்வாறு கேட்டார்.



இந்த நிபந்தனை எனக்கு சந்தோஷமானதாக அமையவில்லை. ஆனால் மென்டிசும் நிர்வாகக் கமிட்டியும் என்னை மாத்திரம் போகச் சொன்னார்கள். பிரதம மந்திரிக்கு எங்களுடைய நிலைப்பாட்டைச் சொல்லும் வாய்ப்பை இழக்கக்கூடாது என்பதே அவர்களுடைய கருத்து.

மாநாடு பிரதமரின் செனேட் அலுவலகத்தில் ஒருநாள் 10 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. தொழில்மந்திரி டி. பி. இலங்கரத்ன என்னுடன் பிரதமருக்காகக் காத்திருந்தார். பிரதமர் இறுதியாக பிற்பகல் 2 மணிக்கு வந்து சேர்ந்தார். எந்தவித மன்னிப்பு வார்த்தையும் கிடையாது. திரு. பண்டார நாயக்கா 'நேரந் தவறாமையில்' அவ்வளவு நம்பிக்கையில்லாதவர் போலும்!

பேச்சு வார்த்தைகள் எந்த பயனும் ஏற்படவில்லை. வேறு வார்த்தைகளிலும் பயன் ஏற்படவில்லை. முதலாளிமார் பிரதமரைத் தனியாக சந்தித்தார்கள். இனக் கலவரம் தோன்றி அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட படியால் இந்த வேலை நிறுத்தம் இறுதியில்கைவிடப்பட்டது. வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறும்படி மகாதேசாதிபதி கூறியதாக தொழில் கமிஷனர் எனக்கு தொலைபேசி மூலம் கூறியது நினைவில் இருக்கின்றது. அப்பொழுது நாட்டில் நிலவிய பதற்றமான சூழ்நிலையில் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தும் சாத்தியப்பாடு இருக்க வில்லை. ஆனால் நாம் ஒரு நிபந்தனை காரணமாக தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தோம், ஒரு குறிப்பிட்ட திகதியில் வேலைக்கு வராத வேலை நிறுத்தக்காரர்கள் அனைவரும் வேலையை விட்டு விலகியதாகக் கருதப்படுவார்கள் என்று முதலாளிமார்கள் பிரகடனம் செய்தார்கள். உண்மையில் சில முதலாளிமார் புதிய தொழிலாளர்களையும் சேர்த்திருந் தார்கள். வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் சேர்க்கப்பட்டால் நாம் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவோம் என்று மகா தேசாதிபதிக்கு அறிவிக்குமாறு நாம் தொழில் கமிஷனருக்குத் தெரிவித்தோம். எங்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாம் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றோம். வேலை நிறுத்தக்காரர் எவரும் வேலையை இழக்க வில்லை. இன்னொரு ஆண்டுக்குள் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்த கூட்டு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் இந்த வேலை நிறுத்தத்தின் பெரும்பாலான கோரிக்கைகளை நாம் வென்றெடுத்தோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறு துறைகளிலும் திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் முற்போக்கான நடவடிக்கைகளை எடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கிய 1955-ம் ஆண்டின் தென்மேற்கு பஸ் வேலை நிறுத்தத்தின்போது தான் செய்த வாக்குறுதியை நிறைவேற்ற அவர் பஸ் சேவையைத் தேசிய மயமாக்கினார். இது பொது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அத்துடன் தனியார் துறையிலும் அரை - அரசாங்கத் துறையிலும் ஊழியர் சேமலாப நிதியை அவர் ஸ்தாபித்தார். இது தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரு பெரும் முன்னேற்ற அடியாகும். முதல் தடவையாகத் தொழிலாளர்கள் தமது கடந்த கால சேவைக்கு ஈடுபெற்றார்கள். திரு. பண்டாரநாயக்கா தமது ஆதரவாளர்களின் இன ரீதியான ஆட்சேபணைகளை புறக்கணித்து இந்திய வம்சாவளிப் பெருந் தோட்டத் தொழிலாளர்களையும் இந்த சேமலாப நிதி திட்டத்தில் சேர்த்துக் கொண்டார்.

1956-ல் தேர்தல் நடைபெற்றது. முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் தமிழ்ப் பிரதேசத்திலிருந்து ஒரு இடதுசாரி அபேட்சகர் தேர்வு செய்யப்பட்டார். பி.கந்தையா கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு பருத்தித்துறைத் தொகுதியில் பாராளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டார். கேம்பிறிட்சிலும், ஒக்ஸ்போர்ட்டிலும் கல்வி கற்று விட்டுத் திரும்பிய மூவரில் ஒருவர் எனக் கந்தையா பற்றி நான் முன்னர் குறிப்பிட்டுள்ளேன். பல்கலைக் கழகத்தில் நான் இரண்டாம் ஆண்டில் இருந்தபோது அவர் இலங்கைக்குத் திரும்பி வந்தார். என்னைக் கம்யூனிசத்தின் பக்கம் இழுத்துச் செல்வதில் அவர் முக்கியப் பாத்திரம் வகித்தார். அவர் மூன்று தடவை பருத்தித்துறையில் போட்டியிட்டு மூன்றாம் தடவை வெற்றி பெற்றார். நான் பருத்தித்துறைக்குச் சென்று அவருடைய தேர்தல் வேலையில் கலந்து கொண்டு கூட்டங்களில் சொற்பொழிவாற்றினேன். கந்தையாவின் வெற்றியை முற்றிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றியாகக் கொள்ள முடியாது. அவருடைய வெற்றிக்குத் தனிப்பட்ட காரணங்களும் உண்டு. கந்தையா மிகவும் மதிக்கப்பட்ட ஒரு அறிவுஜீவி ஆவார். அவருடைய குணாம்சங்களுக்காக மக்கள் அவரை நேசித்தார்கள். அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் என்ற முறையில் கணிசமான எண்ணிக்கையினரான தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளும் அவருக்குக் கிடைத்தன.

கந்தையா பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கை அதிகரித்தது. தமிழர் மத்தியில்



கட்சியின் செல்வாக்கு பெருகியது. கந்தையா ஒரு திறமையான பாராளுமன்றவாதி. விவாதங்களில் அவர் சுடர் விட்டு பிரகாசித்தார். தனது தேர்தல் தொகுதியிலும் அவர் நல்ல பல வேலைகளைச் செய்தார். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவப் பாடுபட்டார். உதாரணத்துக்கு அவர்களுக்குத் தனியான பாடசாலைகளை அமைத்தார். ஆனால் இது சாதி அமைப்பு முறையை அழித்தொழித்து விடவில்லை. நீடித்தது. எப்படியாயினும் எதிர்காலத்தில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் எவரும் அவருடைய வேலையின் பயனைப் பெற முடியவில்லை.

www.tamilarangam.net

# 9. பண்டாரநாயக்காவுக்குப் பிறகு

பண்டாரநாயக்காவின் இடத்தை ஒருவர் எடுப்பதற்கும் ஏதோவிதமான ஒரு அரசியல் நிதானப்பாடு தோன்றுவதற்கும் கிட்டத்தட்ட ஓராண்டு எடுத்தது. பண்டாரநாயக்கா மரணம் அடைந்ததுமே அப்பொழுது சபையின் தலைவராக இருந்த சி.பி.டி. சில்வாவைத்தான் பிரதமராகத் தெரிந்தெடுக்க வேண்டும். ஆனால் அவருடைய சாதி சரியானதாக இருக்கவில்லை. கொய்கம சாதியைச் சேர்ந்தவர்கள்தான் இதுகால வரையும் இலங்கையின் பிரதமராக இருந்திருக்கிறார்கள். (பிரேமதாச ஒரு மதிப்பிறக்கம் செய்யப்பட்ட பிரதமரே, ஜனாதிபதி ஜே ஆர். ஒரு கொய்கம சாதியினர்.) பண்டாரநாயக்கா இறந்தபோது நோயுற்றிருந்த சி.பி.டி. சில்வா லண்டனில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தார். அமைச்சரவை தகநாயக்காவைப் பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்தது. அது ஒரு மிகவும் முட்டாள்தனமான தெரிவு. அது எப்படி நடந்தது என்பதை யாரும் விளக்கவில்லை. நீண்டகாலம் அது நிலைக்கவில்லை. தகநாயக்கா அரைவாசி அமைச்சர்களை வெளியேற்றி தமது ஆட்களை நியமித்தார். பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அவர் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்தினார். தகநாயக்கா புதிய ஒரு கட்சியை அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டார். தகநாயக்கா உட்பட அவருடைய



அபேட்சகர்கள் அனைவரும் தோல்வியடைந்தனர். அநேகர் கட்டுப்பணத்தையும் இழந்தனர்.

1960 மார்ச் தேர்தல் எந்த உறுதியான முடிவையும் ஏற்படுத்தவில்லை. எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. யூ.என்.பி. மிகப் பெரிய கட்சியாகவும் சி.பி.டி. சில்வா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாவது பெரிய கட்சியாகவும் தெரிவு செய்யப்பட்டன. இடதுசாரிக் கட்சிகளின் நிலைமை மிகவும் மோசமானதாக இருந்தது. மூன்று இடதுசாரிக் கட்சிகளும் தனித் 'தனியாகப் போட்டி போட்டுப் படுமோசமாகத் தோற்றன. கம்யூனிஸ்டு கட்சி மட்டும் யூ.என்.பி.-க்கு எதிரான தேர்தல் முன்னணி என்ற கருத்தை முன்வைத்தது ஆனால் அதை யாரும் பொருட்படுத்தவில்லை. இந்தத் தேர்தலில் என். எம். பெரேராவும் பிலிப் குணவர்தனாவும் தனித்தனியாகப் போட்டியிட்டுப் பிரதமராக முயற்சித்தார்கள். இதைவிட மோசமான யதார்த்த நிலைமையைப் புரிந்து கொள்ளாமையைக் காண முடியாது. ''என்.எம்.மைப் பிரதமராக்குங்கள்' என்ற கோஷத்துடன் லங்கா சம சமாஜக் கட்சி இத்தேர்தலில் போட்டியிட்டது என்பதை இப்பொழுது நம்பமுடியாது.

யூ.என்.பி. அரசாங்கம் ஒன்றை அமைக்க டட்லி சேனநாயக முயற்சித்தார். ஆனால் முதலாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலேயே அவர் தோற்கடிக்கப்பட்டார். அப்பொழுது சமஷ்டிக் கட்சி யூ.என்.பி.யை ஆதரிக்க மறுத்தது. 1960 யூலையில் புதிய தேர்தல்கள் நடைபெற்றன. இத் தேர்தலில் யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகள் மத்தியில் முன்னரிலும் பார்க்க நிதானமான அறிவு விளங்கியது. அப்பொழுதைக்கு திருமதி பண்டாரநாயக்கா சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஆனார். அடிபெற்ற லங்கா சம சமாஜக் கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்யத் தயாராய் இருந்தது. ஆனால் பொதுவான யூ.என்.பி. எதிர்ப்புத் தேர்தல் முன்னணி என்ற கருத்தை முன்வைத்த கம்யூனிஸ்ட் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயங்கியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியுடன் போட்டி தவிர்ப்புஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி - கம்யூனிஸ்ட் கட்சிபேச்சு வார்த்தைகளில் நானும் கலந்து கொண்டேன். இரத்னபுரி ஆசனத்துக்கான பேச்சு வார்த்தையில் திருமதி பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டார். இந்தப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தினால் யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகள் தெளிவான வெற்றி பெற்றன. ஆனால் எதிர்பாராத விதமாக இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவின்றித் தனியாகவே அரசாங்கம் அமைக்கக்கூடியளவிற்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களை வென்றெடுத்தது. இது குறிப்பாக லங்கா சம சமாஜக் கட்சிக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. தன்னுடைய ஆதரவுடன் தான் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்கும் நிலைமையில் இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். புதிய அரசாங்கம் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமாகும்; இரண்டாவது பண்டாரநாயக்கா அரசாங்கம். திருமதி பண்டார நாயக்கா பிரதமராகினார். அவர் எந்தத் தேர்தல் தொகுதியிலும் போட்டியிடவில்லை. சம்பிரதாயங்களை ஒதுக்கிவிட்டு செனட்டிற்கு அவர் நியமிக்கப்பட்டார். இவ்வாறு உலகின் முதலாவது பெண் பிரதமர் தோன்றினார்.

ஆனால் திருமதி பண்டாரநாயக்காவை கஷ்டங்கள் எதிர் நோக்கின. அவருடைய முதலாவது பிரதம மந்திரிக் காலம் மிகவும் கொந்தளிப்பானதாக இருந்தது. பெருகிய பொருளாதார நெருக்கடி, சமஷ்டிக் கட்சியின் சத்தியாக்கிரக இயக்கம், உயர் மட்ட ராணுவ, பொலிஸ் அதிகாரிகளின் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி, ஐக்கிய இடதுசாரி முன்னணியினதும் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியினதும் தோற்றமும் வீழ்ச்சியும், கூட்டரசாங்கத்தின் ஸ்தாபகம், சிறீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கைச்சாத்தீடு, இடதுசாரி இயக்கத்தில் மேலும் பிளவுகள், பிரச்சினைக்குரிய பத்திரிகை மசோதாவை ஒட்டி அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆகியன அப்போது ஏற்பட்டன.

புதிய சிறீமாவோ அரசாங்கத்தின் ஆரம்ப காலத்திலேயே அதன் நிதி அமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா அரசு மானியத்தில் ஒரு பகுதியை நிறுத்தி பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பும் மார்க்கம் ஒன்றைக் காண முயற்சித்தார். ஆனால் அரசாங்கப் பாராளுமன்றக் குழு அதனை எதிர்த்தது. பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயக சம்பிரதாயங்களின்படி அவர் நிதி அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஐந்து ஆண்டுகளில் ஐந்து தடவை அதன் நிதி அமைச்சரை மாற்ற வேண்டியிருந்தது. இது இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் கடுமையைக் காட்டியது. ஒரு நவகாலனிசப் பொருளாதாரத்தில் இந்த நெருக்கடிக்குத் தீர்வு கிடையாது.



மொழிப் பிரச்சினையில் பெற்ற தோல்வியால் சமஷ்டிக் கட்சி தலைவர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு குறைந்தது. இனவாத வன்முறைகளின் போதும் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருந்தார்கள். மக்களின் ஆதரவை மீண்டும் பெற அவர்கள் ஏதேனும் செய்ய வேண்டியிருந்தது. இழந்த மொழி உரிமைகளுக்காக யாழ்ப்பாணத்தில் சத்தியாக் கிரக இயக்கம் ஒன்றை ஒழுங்குபடுத்த அவர்கள் தீர்மானித் தார்கள். இது 1961-ல் நடைபெற்றது. எதிர்பார்த்தவாறு, பெரும் ஆதரவு கிடைத்தது. தொடர்ந்து கூட்டம் கூட்டமாக சத்தியாக்கிரகிகள் கச்சேரி வாசலை முற்றுகை இட்டார்கள். இந்த இயக்கத்தின் வெற்றியைக் கண்டு சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் இறுமாப்பு அடைந்தார்கள். ஒரு கிளர்ச்சி, தனி நாடு ஒன்றை அமைக்கும் முயற்சி என்ற கட்டத்துக்கு அவர்கள் இயக்கத்தைக் கொண்டு சென்றார்கள். சொந்தத் தபால்தலை களை அவர்கள் வெளியிட்டார்கள். அரசாங்கம் செயல்பட முடிவு எடுத்து சத்தியாக்கிரகிகளைக் குழப்பி அடிக்கும்படி படைகளுக்கு உத்தரவிட்டது. எந்த எதிர்ப்பும் இன்றி அவர்கள் இதனைச் செய்ய முடிந்தது. இத்தகைய நிலைமைக்கு முகங் கொடுக்க சமஷ்டிக் கட்சிக்குத் திட்டம் எதுவும் இருக்கவில்லை. இயக்கம் தோல்வி கண்டது. தமிழர்கள் பாராளுமன்றத்துக்குப் புறம்பான போராட்டத்தில் ஈடுபட அப்பொழுது தயாராக இருக்க வில்லை. எழுபதாம் ஆண்டுகளில் பிற்பகுதியிலும் எண்பதாம் ஆண்டு களின் முற்பகுதியிலும் இத்தகைய போராட்டம் தோன்றியது.

1962-ல் உயர்மட்டப் பொலிஸ் ராணுவ உத்தியோகத்தர் களின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஏற்பட்டது. இலங்கைத் தொண்டர் படையின் கப்ரின், கடற்படையின் கமாண்டர், பொலிஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள், சிவில் சேவை உத்தியோகத்தர்கள், பிரசித்தி பெற்ற வர்த்தகர்கள் இந்த கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்களின் அரசியல் துணையாட்களைக் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் ஒன்று. இவர்கள் அனைவரும் யூ.என்.பி.-க்கு ஆதரவானவர்கள். ஆட்சிக்கவிழ்ப்பு நன்கு திட்டமிட்டப்பட்டது. ஆனால் ஒரு பொலிஸ் அதிகாரி (அவர் பின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் பொலிஸ் ஆகினார்—ஸ்ரான்லி சேனநாயக) கடைசியில் நடுக்கம் எடுத்து சதியைத் தமது மனைவி யிடம் கூற அவர் தமது தந்தையரான பி. டி. எஸ்.குலரத்னவிடம் கூறியபடியால் இந்த ஆட்சிக் கவிழ்ப்புத் தோல்வி கண்டது. குலரத்ன மூலம் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் பொலிசுக்குச் சரியான நேரத்தில் செய்தி எட்டியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சதிகாரர்களில் ஒருவர் தற்கொலை செய்தார். மீதப் பேர் விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சுப்ரீம் கோர்ட்டால் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் சட்டவியாக்கியானத்தின் பேரில் பிரிவு கவுன்சிலால் விடுதலை செய்யப்பட்டார்கள். இந்தச் சதிகாரர்களில் பலருக்கு 1965-ல் டட்லி சேனநாயகவால் அமைக்கப்பட்ட யூ.என்.பி. அரசாங்கத்தின்போது உயர்பதவிகள் கொடுக்கப்பட்டன. இது இச்சதிகாரர்கள் யூ. என். பி. யின் ஆதரவை பெற்றவர்கள் என்பதை நிரூபித்தது. இப்பொழுது தான் இலங்கையில் முதல் தடவையாக ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி பற்றிய ஒன்று பரிசீலனைகளில் ஏற்பட்ட சந்தேகங்களின் பேரில் மகாதேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகவை ராஜினாமாச் செய்யும்படி அரசாங்கம் நிர்ப்பந்தித்தது. தத்துவரீதியில் அவர் ராணியின் பிரதிநிதி. அவரை நீக்குவதற்கு ராணியின் அனுமதி தேவை. மிகவும் கவனமான பேச்சுவார்த்தைகள் மூலம் இந்த அனுமதி பெறப்பட்டது. ஆனால் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரதமருக்கு பின்னும் திரைக்குப்பின் ஆலோசகராக இருந்தவரும் தீய மேதை என்று அழைக்கப்பட்டவருமான ஒலிவருக்கு இது ஒரு அவமான முடிவு. திருமதி. பண்டாரநாயக்காவின் உறவினரான வில்லியம் கோபல்லவ மகா தேசாதிபதி ஆகினார். இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியால் அரசாங்கத்துக்கு அனுதாபம் பெருகியது. ஏனென்றால் சகல சதிகாரர்களும் பெயர் பெற்ற பிற்போக்குவாதிகள். அவர்களுக்கு மக்கள் ஆதரவோ அனுதாபமோ கிடையாது.

பொருளாதார நெருக்கடி மோசமடைய மோசமடைய வேலை நிறுத்தங்கள் அடிக்கடி ஏற்பட்டன. திரு பண்டாரநாயக்காவின் ஆட்சியில் நடந்ததுபோல் அல்லாது, சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நிதி அமைச்சர் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் தூண்டுதலில் வேலை நிறுத்தங்களின் போது பேச்சு வார்த்தைகளை நடத்துவதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. இதனால் துறைமுக வேலைநிறுத்தம், வங்கி வேலைநிறுத்தம், வெள்ளவத்தை ஆலை வேலைநிறுத்தம் ஆகிய மிக நீண்டகால வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றன. வெள்ளவத்தை ஆலை நிறுத்தத்துக்கு சி.டி.யு.எப். தலைமை தாங்கியது. நாலு மாத காலம் இந்த வேலைநிறுத்தம் நடைப்பெற்றது. நான் இந்த வேலைநிறுத்தத்தில் பெரிதும் பங்கு பற்றினேன். பிணக்கு தொழில் கோர்ட்டுக்கு சமர்ப்பிக்கப்பட்டபின் இந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. சங்கத்தின்



தொழிற்சங்கங்களின் கூட்டுப் பேரணியில் உரையாற்றும் போது... ஹைட் பார்க், கொழும்பு - 27.12.1977.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச் சாத்திடப்பட்டது. இதனால் ஆலைத் தொழிலாளர்கள், பிரதானமாகப் பெண் தொழிலாளர்கள் பெரும் சம்பள உயர்வைப் பெற்றார்கள்.

இங்கே வரலாற்று ரீதியான ஒரு வேலைநிறுத்தம் பற்றிக் குறிப்பிடவேண்டும். இதற்கு நான் நேரடியாகத் தலைமை தாங்கினேன். கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றில் பின்னர் ஏற்பட்ட பிளவை இந்த வேலைநிறுத்தம் முன்னறிவித்தது. 1962 டிசம்பர் 1963 ஜனவரியில் நடைபெற்ற இலங்கைப் போக்குவரத்து சபைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைப் பற்றித்தான் நான் இங்கு குறிப்பிடுகின்றேன். இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கமாகிய எமது சங்கம் அப்பொழுது இ.போ.ச. தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் பலம்வாய்ந்த சங்கமாக விளங்கியது. சில காலமாக இருந்துவந்த பல கோரிக்கைகளை ஒட்டி இ.போ.ச. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். முன்னர் இவர்களுக்குத் துணிகரமான தலைமை கிடைக்கவில்லை. இந்தக் காலத்தில் எமது சங்கத்தின் தலைவரான எம். ஜி. மென்டிஸ் புலமைப் பரிசில் பெற்று 6 மாத காலத்துக்கு மொஸ்கோ சென்றிருந்தார். தொழிற்சங்க வேலை பற்றிப் படிப்பதற்காம்! பொதுச் செயலாளர் விபத்து ஒன்றில் கால் முறிந்து ஆஸ்பத்திரியில் இருந்தார். தலைமையை ஏற்று பொதுச் செயலாளராகச் செயற்படவேண்டும் என்று தொழிலாளர்கள் என்னைக் கோரினார்கள்.

இவ்வாறுதான் இந்த நாட்டில் நடைபெற்ற மிக முக்கியமான, வரலாற்று ரீதியான வேலை நிறுத்தத்துக்கு நான் தலைமை கொடுக்க நேர்ந்தது. நான் மறக்கமுடியாத அனுபவம் இது. வேலை நிறுத்தத்துக்கான தயாரிப்பு முழுதாகவும் கவனமாகவும் செய்யப்பட்டது. பத்திரிகைகள் தொழிலாளர்களின் கோரிக்கைளுக்குப் போதிய பிரச்சாரம் அளித்தன. கட்சித் தலைமையின் சார்பில் பீட்டர் கெனமனும் ஸ்ரான்லி திலகரத்னவும் வேலை நிறுத்தத்தின் தயாரிப்புக் கட்டத்தில் தமது ஆதரவைத் தெரிவித்த போதும் வேலைநிறுத்தம் நடைபெறுவதை விரும்பவில்லை. லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் எதிர்காலத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேருவது பற்றி ஆசைக் கனவுகள் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் தொழிலாளர்களின் எண்ணமோ வேறு. வேலை நிறுத்தம் நடத்தவேண்டும் என்ற முன்னர் காணாத புரட்சிகர உணர்வுடன் தொழிலாளர்கள் இருந்தார்கள். கட்சித் தலைவர்களில் நாம் சந்தேகம் கொண்டபடியால் நாம் சங்கக் கமிட்டிக் கூட்டம், வேலை நிறுத்தக் கமிட்டிக் கூட்டம் ஆகியவற்றை சி.டி.யு.எப். அலுவலகத்தில் அல்லாது எனது வீட்டில் நடத்தினோம். ஒவ்வொரு நாள் இரவிலும் உறுதிமிக்க மோட்டார்த் தொழிலாளர்கள் எனது வீட்டில் கூடினார்கள். இரவு வெகுநேரம் வரை விவாதங்கள் நடைபெறும். முக்கியமான இ.போ.ச. டிப்போக்களில் எல்லாம் சக தொழிலாளர்களின் மதிப்பைப் பெற்ற தலைசிறந்த தொழிலாளர்கள் எம்மிடம் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் என்று நின்றார்கள். வேலை நிறுத்தம் செய்வதென்ற முடிவு சகல சங்கங்களினதும் கூட்டு முடிவாக இருக்கும் என்று நாம் நம்பினோம். மற்றச் சங்கங்களின் தலைவர்கள் இழுத்தடித்தார்கள். நாம் வேலை நிறுத்தத்தை நடத்தத் தீர்மானித்தோம். எங்களுடைய சங்கம் பலமானது என்றபடியால் மற்றச் சங்கங்கள் பின்னர் சேரும் என்று நாம் நம்பினோம். அப்படியே நடந்தது.

இ.போ.ச. தொழிலாளர்களில் 90 சதவீதத்தினர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்க உறுப்பினர்களும் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள். அரசாங்கம் உடனே தணிக்கையை விதித்து வேலை நிறுத்தம் பற்றிய செய்திகள் வெளியிடுவதைத் தடை செய்தது. வேலைநிறுத்தம் அவ்வளவுக்கு வெற்றிகரமானதாக அமைந்தது. நான் டிப்போ டிப்போவாகச் சென்று உற்சாகமான வேலைநிறுத்தக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினேன். ஊவா தவிர இலங்கையின் சகல பாகங்களுக்கும் நான் சென்றேன். தொழிலாளர்களின் உற்சாகம் உச்ச நிலையில் இருந்தது.

ஆனால் இடதுசாரித் தலைவர்கள் உற்சாகம் எதுவும் காட்டவில்லை. ஆரம்பத்தில் இருந்தே எனது நடவடிக்கைகளைத் தடுக்க இயன்றளவு முயன்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு எதிராக நான் பின்னணியில் போராட வேண்டியிருந்தது. முடிவேயற்ற மத்தியக் கமிட்டி கூட்டங்களை நடத்துவது அவர்களுடைய ஒரு தந்திரமாகும். நான் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டி இருந்தது. வேலை நிறுத்தக் கூட்டங்களில் எந்த ஒரு முக்கியமான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றவில்லை. அவர்களால் பகிரங்கமாக வேலை நிறுத்தத்தை எதிர்க்க முடியவில்லை. ஆனால் அவர்கள் வேலை நிறுத்தத்துக்குப் போதிய நஷ்டத்தை உண்டு பண்ணினார்கள். சில நாட்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைவர்களும் லங்கா சமசமாஜக் கட்சியின் ட்ரொஸ்கியவாதத் தலைவாகளும் பிலிப் குணவர்த்தனாவின் கட்சியும் தாம் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை என்று அரசாங்கத்துக்கு இரகசியமாகத் தெரிய வைத்தார்கள். இந்த நிலைமையில் வெற்றி முடியாத ஒன்று ஆகியது. தொழிலாளர்கள் 17 நாட்களாக வீரதீரத்துடன் போராடினார்கள்.



இந்த இ.போ.ச. வேலைநிறுத்தம் கோழைத்தனமான இடதுசாரித் தலைவர்களால் முறியடிக்கப்பட்ட வேலை நிறுத்தமாகும். வரவிருந்த விஷயங்களை அது முன்னறிவித்தது. இருண்ட இரவில் ஒளியூட்டி இருட் குழிகளைக் காட்டும் மின்னலாக அது அமைந்தது. நவீன திரிபுவாதிகளும் ட்ரொஸ்கியவாதிகளும் அப்பட்டமான துரோகிகள் என்பதைக் காட்டிவிட்டார்கள். எதிர் காலத்தில் தாம் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு சரணடைவதன் முன்னறிவித்தலாக அவர்கள் தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்தார்கள். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்குள்ளே இ.போ.ச. வேலைநிறுத்தத்தை ஆதரித்தவர்கள் மார்க்சிய - லெனினிய நிலைப்பாட்டை எடுத்ததும் வேலைநிறுத்தத்தை எதிர்த்துக் காட்டிக் கொடுத்தவர்கள் திரிபுவாத நிலைப்பாட்டை எடுத்ததும் தற்செயலானது அல்ல.

எவ்வளவுதான் போராட்ட உறுதி படைத்தவை என்றாலும், நீடித்த காலத்தவை என்றாலும் தனிப்பட்ட வேலைநிறுத்தங்கள் அரசாங்கத்தின் வேலை நிறுத்தத்தின்போது பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்ற கொள்கையால் தோல்வி கண்டன. இதனால் தொழிலாளி வர்க்கம் வேறொரு மாற்றுக் கொள்கையை வகுக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் பிற்போக்கான தொழிற் சங்கத்துக்கு எதிரான கொள்கைக்கு மாற்றாக அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் உள்ள முழுத் தொழிற்சங்க இயக்கத்தினதும் கூட்டு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தவேண்டும் என்று சி.டி.யு.எப். பிரேரித்தது. இந்த நோக்கத்துடன் சி.டி.யு.எப். 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அதன் அலுவலகத்தில் சகல பிரதான தொழிற்சங்க சம்மேளங்களினதும் முதலாவது மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டில் தான் முழுத் தொழிற்சங்க இயக்கத்தினதும் ஐக்கியம், பொதுக் கோரிக்கைகளின் பின்னால் ஐக்கியப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை ஆகியவற்றுக்கான பிரேரணை முன்வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறுதான் முழுத் தொழிற்சங்க இயக்கத்தினதும் சார்பில்
புகழ்பெற்ற 21 கோரிக்கைகளைத் தயாரித்த கூட்டுத் தொழிற்
சங்கக் கமிட்டி உருவாகியது. இலங்கையில் அடையப்பெற்ற மிக
உயர்ந்த மட்ட தொழிற்சங்க ஐக்கியம் இதுவேயாகும். தனியார்
துறை ஊழியர்களும், அரசுதுறை ஊழியர்களும், எழுதுவினைஞர்
களும் எழுதுவினைஞர் அல்லாதவர்களும், தோட்டத் தொழிலாளர்
களும், நகரத் தொழிலாளர்களும், ஆசிரியர்களும், தொழில்நுட்ப
ஊழியர்களும் முதல் தடவையாக ஒரு பொது முன்னணியில்
சேர்க்கப்பட்டார்கள். இடதுசாரிக் கட்சிகளால் தலைமை தாங்கப்
பட்ட தொழிற்சங்கங்கள் மாத்திரமல்ல, தொண்டமான் தலைமை
யிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், அசீஸ் தலைமையி
லான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும் கூட்டுக் கமிட்டியில்
அங்கம் வகித்தன. லங்கா சம சமாஜக் கட்சி தலைமையிலான
இலங்கைத் தொழிற் சம்மேளனத்தின் சார்பில் பிரின்ஸ்ராஜ
சூரியாவும் சி.டி.யு.எப்.-பின் சார்பில் நானும் கூட்டுத் தொழிற்
சங்கக் கமிட்டியின் இணைக் காரியதரிசிகளாகத் தெரிவு செய்யப்
பட்டோம். இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் 21 கோரிக்கை
களுக்கு ஆதரவாகப் பெரும் பிரச்சாரம் செய்யப்பட்டது. கூட்டுத்
தொழிற்சங்கக் கமிட்டியின் முதலாவது அகில இலங்கை மாநாடு
1963-ம் ஆண்டு சிலிங்கேர் ஹோட்டலில் நடைபெற்றது. அது
தொழிற்சங்க இயக்கத்தின் பலத்தை நன்கு காட்டியது.
தொழிலாளி வர்க்கம் போராட்டத்துக்குத் தயாராகிக் கொண்
டிருந்தது.

இதேபோல இடதுசாரி இயக்கத்தை ஐக்கியப்படுத்தும்
இயக்கம் ஒன்றும் ஆரம்பித்தது. இடதுசாரி இயக்கத்தைப்
பொறுத்தவரை, அதன் ஆரம்பத்தில் நாலு ஆண்டுகள் தவிர,
மிகுதிக் காலம் முழுவதும் ஒற்றுமையீனமே அதன் இலட்சண
மாக இருந்துள்ளது. லங்கா சமசமாஜக் கட்சி பிரிந்து பின்னர்
மீண்டும் பிரிந்தது. ஒரு பிரிவின் விளைவு கம்யூனிஸ்ட் கட்சி,
இன்னொரு பிரிவின் விளைவு பிலிப் குணவர்தனாவின் குழு.
இப்பொழுது மூன்று இடதுசாரிக் கட்சிகள் இருந்தன. கம்யூனிஸ்ட்
கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, எம்.ஈ.பி. (பண்டாரநாயக்கா
இறந்தபின் பிலிப் குணவர்தனா எம்.ஈ.பி. என்ற பெயரை
எடுத்துக்கொண்டார்) இந்தக் கட்சிகளைப் பிரித்த தத்துவ
வேற்றுமைகளை பொதுமக்கள் புரிந்து கொள்ளவில்லை. எல்லா
இடதுசாரி சக்திகளும் ஐக்கியப்பட்டு பிற்போக்கிற்கு எதிராகப்
போராடி சுரண்டலுக்கு முடிவு கட்டவேண்டும் என்றே அவர்கள்
விரும்பினார்கள். 1950-ல் நடைபெற்ற 4-வது மாநாட்டை அடுத்து
இடதுசாரி இயக்கத்தை ஐக்கியப்படுத்த கம்யூனிஸ்ட் கட்சி



எடுத்த முயற்சிகளைப் பற்றி நான் முன்னர் எடுத்துக் கூறியுள்ளேன். இதனால் லங்கா சம சமாஜக் கட்சியில் கடுமையான பிளவு ஏற்பட்டு அது பெரிதும் பலவீனமாகியபோதும் இடதுசாரி ஐக்கியம் இன்னும் ஏற்படவில்லை. 1963-ல் இடதுசாரி ஐக்கியத்துக்கான இயக்கம் பெரு வேகம் பெற்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளாலும் படுமோசமான பிற்போக்கு மீண்டும் அதிகாரத்துக்கு வரும் ஆபத்து இருந்ததாலும் இது ஏற்பட்டது. 1963 மே தினம் நெருங்கிய வேளையில் குறிப்பிட்டபடி தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. இடதுசாரிக் கட்சிகள் ஐக்கிய மே தின அணி ஒன்றை ஒழுங்குபடுத்தின. மே தினத்தில் அன்று பிரமாண்ட ஊர்வலமும் பேரணியும் இடம்பெற்றன. இடதுசாரி ஐக்கியத்தின் மீது பொதுமக்கள் கொண்டிருந்த விருப்பத்தை அவை காட்டின. முன்னர் இலங்கையில் இப்படி ஒரு ஊர்வலம் நடைபெறவில்லை. ஆயிரக்கணக்கானோர் ஊர்வலத்தில் செல்ல மேலும் ஆயிரக் கணக்கானோர் வீதிகளில் நின்று அதைப் பார்வையிட்டனர். காலிமுகத்திடலில் ஒரே மனிதத் தலைகளாக காட்சியளித்தது. இதற்கு முன்னால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் யு.என்.பி.யும் நடத்திய ஊர்வலங்கள் அற்பமானவையாகத் தெரிந்தன. இத்தகைய காட்சிகளை சோஷலிச நாடுகளில்தான் மேதினத்தில் அல்லது தேசிய தினத்தில் காணமுடியும்.

இந்தப் பிரமாண்ட ஊர்வலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அணியின் ஒரு பகுதியாகச் சென்ற சி.டி.யு.எப்.-பின் பகுதிதான் மிகப் பெரியதாக இருந்தது என்பதை பெருமையுடன் குறிப்பிட வேண்டும். வியட்நாம் பற்றிய உலகத் தொழிற்சங்க மாநாடு ஒன்றை இலங்கையில் நடத்தும் சாத்தியப்பாட்டைப் பற்றி ஆராய அகில சீன தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் அப்பொழுது இங்கே இருந்தார். உலகத் தொழிற்சங்க சம்மேளனம் இவ்வாறு யோசித்தது. இலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து அவற்றின் ஆதரவைப் பெற அதன் ஆசியப் பிராந்தியச் செயலாளரை அனுப்பியிருந்தது. நான் சகல தொழிற்சங்கங்களினதும் தலைவர்களை இரண்டு கோஷ்டிகளாக அவரை எனது இல்லத்தில் சந்திக்க ஏற்பாடு செய்தேன். அவர்கள் அனைவரும் இந்த யோசனையை வரவேற்று இந்த மாநாடு இலங்கையில் நடைபெறுவதற்கு அனுமதி வழங்கும்படி பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு கூட்டு மனு ஒன்றைச் செய்தார்கள். ஆனால், சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களில் சிலர் எவ்வளவுதான் அமெரிக்க எதிர்ப்புப் பாவனை செய்தபோதும், மாநாடு நடத்துவதற்கான அனுமதி கிடைக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வில்லை. அந்த மே தினத்தில் சீனத் தொழிற்சங்கத் தலைவர் சி.டி.யு.எப்.-பின் பதாகையின் கீழ் என்னுடன் ஊர்வலத்தில் சென்றார். அந்த வரலாற்று ரீதியான பேரணியில் நானும் ஒரு பேச்சாளனாக இருந்தேன். நான் தமிழில் அல்லாது சிங்களத்தில் பேசியதைக் கண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாத தலைவர்கள் பட்ட அவஸ்தையை நான் இன்னும் நினைவு கூறுகின்றேன். கட்சியில் பிளவு இன்னும் ஏற்படவில்லை. சிங்களப் பொது மக்களிலிருந்து என்னைப் பிரித்து வைக்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

வியட்நாமுக்கு ஒருமைப்பாடு தெரிவிக்கும் மாநாடு இறுதியில் வியட்நாம் தலைநகரான ஹனோயில் நடைபெற்றது. சி.டி.யு.எப்.-பிற்கு வந்த அழைப்பின் பேரில் நான் இந்த மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடிய ஆக்கிரமிப்புக்கு எதிரான வியட்நாம் மக்களின் ஆதரவை வியட்நாம் மக்களின் வீரமிக்க போராட்டத்துக்கு உலகம் பூராவும் உள்ள உழைப்பாளி மக்களின் ஆதரவை இந்த மாநாடு காட்டியது. சீன-சோவியத் பிளவு அம்பலத்துக்கு வந்தது. ஆனால் இன்னும் உத்தியோகப்பூர்வமாகவில்லை. சோவியத் யூனியனும் சீனாவும் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. விரைவில் பகிரங்கப் பிளவாக வரவிருந்த கடுமையான தத்துவார்த்த வேறுபாடுகளை அவர்களுடைய பேச்சுகள் பிரதிபலித்தன.

அப்பொழுது ஹோ-சி-மின் தலைமையிலான வியட்நாம் கட்சி மார்க்சிய — லெனினியம் பக்கத்தின் இருந்தது. ஆகவே நான் மதிப்புக்குரிய விருந்தினராக இருந்தேன். ஒரு விருந்துபசாரம் ஒன்றில் ஹோ-சி-மினை நேரில் சந்தித்து வாழ்த்தும் வாய்ப்பைப் பெற்றேன். இந்த மாநாட்டில் வியட்நாமியர்கள் சீனாவின் மார்க்சிய—லெனினிய நிலைப்பாடுகளைப் பூரணமாக ஆதரித்தார்கள். ஆனால் சோவியத் யூனியனைப் பகைக்காமல் அதைச் செய்தார்கள். நான் சீனாவின் தெற்கு நகரமான கன்ரன் வழியாக ஹனோய்க்குச் சென்றேன். நான் அங்கு இடதுசாரி அமெரிக்க எழுத்தாளரும் பத்திரிகையாளருமான அன்னா லுயிஸ் ஸ்றோங்கைச் சந்தித்தேன். அவரும் மாநாட்டுக்கு வந்தார். திரும்பிவரும் வழியில் நான் பீக்கிங் சென்று சீன கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினேன். போராடிக் கொண்டிருந்த வியட்நாமுக்கான எனது பயணமும் அங்கு நிலவிய தேசாபிமான, ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் நான் வாழ்வில் மறக்கமுடியாத அனுபவங்கள் ஆகும்.



அடுத்த ஆண்டு கூட்டரசாங்கம் அமைத்துச் செய்யப்பட்ட துரோகத்தை அளவிட 1963 மே தினத்தில் காணப்பட்ட இடதுசாரிச் சக்திகளின் பிரமாண்ட அணிதிரளை நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும். டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா ஆகிய மூன்று தலைவர்களும் மே தின ஊர்வலத்தின் முன்னணியில் ஜீப்பில் சவாரி செய்த அதே வேளையில், மக்கள் தம்மீது வைத்த இந்த நம்பிக்கையைத் தாம் எதற்குப் பயன்படுத்துவது என்பது பற்றி அவர்களுடைய தலைகளில் வேறு யோசனை இருந்தது.

1963-ம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் திகதி ஐக்கிய இடதுசாரி முன்னணி ஒப்பந்தம் உத்தியோகப்பூர்வமாக சுதந்திர சதுக்கத்தில் கைச்சாத்திடப்பட்டது. மே தினத்தில் அன்று ஏற்பட்ட உணர்வு அதில் காணப்படவில்லை. தலைவர்களின் நேர்மை பற்றிச் சந்தேகம் எழத் தொடங்கிவிட்டது. ஒரு கால் நூற்றாண்டுக்கு மேலான காலம் சண்டைப்பட்டுக் கொண்டிருந்த மூன்று கட்சிகள் சடுதியாக ஒற்றுமைப்படத் தீர்மானித்ததாகத் தலைவர்கள் அறிவித்தார்கள். யார் தவறு, எங்கே தவறு இருந்தது என்பது பற்றி எந்தச் சுயவிமர்சனமும் செய்யப்படவில்லை. இவ்வளவு காலமும் இடதுசாரி ஒற்றுமையீனத்துக்கு என்ன காரணம் என்று மக்களுக்குக் கூறப்படவில்லை. பாராளுமன்றத்தில் இயன்றளவு கூடுதலான ஆசனங்களை வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பவாதக் கூட்டணியாகவும் கொள்கைகளற்ற கூட்டணியாகவும் அது அமைந்தது. இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒரு ஆண்டு காலம் கூட நின்று பிடியாதது, இந்த முடிவு சரியானது என்பதைக் காட்டியது.

நான் இப்பொழுது எனது வாழ்வில் ஒரு மிகவும் முக்கியமான, தீர்க்கமான சம்பவத்துக்கு வருகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு. ஆனால் அதன் முக்கியத்துவம் கருதி தனியாகவும் விவரமாகவும் அதைப் பற்றி எழுத வேண்டும். அதைப் பற்றிப் பின்னர் பார்ப்போம். இப்பொழுது கூட்டரசாங்கத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிப் பார்ப்போம்.

1964-ல் அரசாங்கத்தை பெரும் பொருளாதார நெருக்கடி எதிர்நோக்கியது. இடதுசாரி ஐக்கிய முன்னணி, தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகியவற்றின் தோற்றம் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் உருவாகிக் கொண்டிருந்த அதிருப்திப் பேரலையையே பிரதிபலித்தது. திருமதி. பண்டாரநாயக்கா பீதி கொண்டார். 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி கூட்டுத் தொழிற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சங்கக் கமிட்டி 21 கோரிக்கைகளுக்கு ஆதரவாக காலிமுகத்திடலில் பிரமாண்டக் கூட்டம் ஒன்றை நடத்தியது. அது பெரிய கூட்டம். ஆனால் முந்திய ஆண்டின் மே தினக் கூட்டம் அளவு பெரியதல்ல. டாக்டர் என்.எம். பெரேரா தலைமை வகித்தார். சகல பிரதான தொழிற்சங்கங்களினதும் தலைவர்கள் இக்கூட்டத்தில் பேசினார்கள். இப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவு அம்பலத்துக்கு வந்து விட்டது 1963 டிசெம்பரில் நடைபெற்ற சி.டி.யு.எப். பின் 13-வது மாநாட்டில் அதனைப் பிளவுபடுத்த நவீன திரிபுவாதிகள் முயற்சித்தார்கள். முடியவில்லை. போட்டித் தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றை அமைத்தார்கள். இந்தப் போட்டிச் சங்கத்தின் சார்பில் பீட்டர் கெனமன் பேசினார். நான் சி.டி.யு.எப். பின் சார்பில் பேசினேன். தொழிலாளி வர்க்கம் அவர்களில் வைத்த நம்பிக்கையை தனிப்பட்ட நோக்கங்களுக்காக நாசப்படுத்த வேண்டாம் என்று நான் மேடையில் இருந்த தலைவர்களைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அது வீண் போயிற்று.

இந்தக் கூட்டம் நடைபெற்ற தினத்தில் திருமதி. பண்டாரநாயக்கா கொழும்புக்கு வெளியே கூட்டம் ஒன்றுக்குச் செல்ல விருந்ததை ரத்துச் செய்து அவரது மாளிகையில் தங்கியிருந்தார். கூட்டத்துக்கு லொறி லொறியாகத் தொழிலாளர்கள் சகல பாகங்களில் இருந்தும் வருவதாக அவர் அறிந்தார். விரைவாகச் செயல்பட அவர் தீர்மானித்தார். பகிரங்கமாக அடக்குவது முடியாத காரியம். எதிரியின் கோட்டையை உள்ளேயிருந்து கைப்பற்றும் தந்திரத்தை அவர் கடைப்பிடித்தார். லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர்களுடன் தான் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என்று தெரிவித்தார். அவர் விரலைக் காட்டி மடிப்பதற்கு முன் என். எம். பெரேராவும் பிலிப் குணவர்த்தனாவும் மோதி அடித்துக் கொண்டு அலறி மாளிகைக்குள் நின்றார்கள். பீட்டர் கெனமன் அனுமதி கோரி வாசலில் காத்திருந்தார்.

இடதுசாரி ஐக்கிய முன்னணி முடிந்தது. சில மாதங்களுக்கு முன் இந்த முன்னணியை உருவாக்கியவர்களே அதை அழித்தொழித்தார்கள். அது திருமதி பண்டாரநாயக்காவின் விவேகமான நடவடிக்கை. ஒரேயடியில் அவர் இடதுசாரித் தலைவர்களைச் சரணடையச் செய்தார். கணவன் பண்டாரநாயக்காவால் அதைச் செய்ய முடியவில்லை. திறமையான கணவனுக்குத் துணையாட்களாக (லெப்டினன்டுகளாக) இருக்க மறுத்தவர்கள் இப்பொழுது மனைவியின் காலடியில் விழுந்து கிடந்தனர். தொழிலாளி வர்க்கமும் இடதுசாரி இயக்கமும் படுமோசமாகக் காட்டிக் கொடுக்கப்பட்டன. என். எம். பெரேராவும் அவருடைய



கட்சியின் இன்னும் இருவரும் மந்திரிப் பதவிப் பெற்றனர். கூட்டரசாங்கம் தோன்றியது. ''பூர்ஷ்வாக்கள் சோசலிசத்தின் துரோகிகளுடன் சேர்ந்து நடத்தும் அரசாங்கமே கூட்டரசாங்கம்'' என்ற லெனினுடைய வரைவிலக்கணம் நினைவுக்கு வருகின்றது. 1964-ம் ஆண்டின் இலங்கைக்கு அவருடைய கூற்று முற்றிலும் பொருத்தமானது.

சி.பி.டி. சில்வா இருக்கும்வரை தான் சேரமுடியாது என்று பிலிப் குணவர்த்தனா கூட்டரசாங்கத்தில் சேர மறுத்து விட்டார். ஆனால் அடுத்த ஆண்டு டட்லி சேனநாயக்காவால் கூறப்படும் தேசிய அரசாங்கத்தில் சி.பி.டி. சில்வாவுடன் சேர்ந்து அதில் பிலிப் குணவர்த்தனா அமைச்சராக்கினார். பீட்டர் கெனமனும் அவருடைய திரிபுவாதக் கும்பலும் வெளியே காத்திருந்தது. தம்மைக் கூட்டரசாங்கத்தில் சேர்க்குமாறு அவர்கள் சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 10. கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு

கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே பிளவு சில காலமாக ஏற்பட்டுக் கொண்டிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட மார்க்சிய — லெனினிய சக்திகளுக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியைப் பிரதான மையமாகக் கொண்ட நவீன திரிபுவாத சக்திகளுக்கும் இடையில் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்துக்குள்ளே ஏற்பட்ட தத்துவார்த்த மோதல்தான் இந்தப் பிளவை துரிதப்படுத்தி அம்பலத்துக்கு கொண்டு வந்தது.

அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றின் மூலம் குருச்சேவ் அதிகாரத்தை அபகரித்து 1956-ல் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்ப் புரட்சிகர 20-வது மாநாட்டில் தனது அந்தஸ்தை ஸ்திரப்படுத்திய பின் சோவியத் கட்சியின் மாநாடுகளுக்கு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒழுங்கான அழைப்புகள் வந்தன. பொதுச் செயலாளர் பீட்டர் கெனமன் 1962-ல் சோவியத் கட்சியின் 22-வது மாநாட்டில் கலந்து கொண்டார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியில் சோவியத் கட்சியின் 20-ம் 22-ம் மாநாட்டுத் தீர்மானங்களுக்கு ஆதரவான தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்ற ''உத்தரவுடன்'' அவர் திரும்பினார். பீட்டர் கெனமன் மத்தியக் கமிட்டியினதோ கட்சியினதோ அனுமதியின்றி 22-வது மாநாட்டில்



குருச்சேவையும் அவருடைய திரிபுவாதத்தையும் எதிர்த்த அல்பேனியாவைத் தாக்கி சோவியத் யூனியனின் ஆணைப்படி நடந்தார்.

ஆனால் கட்சிக்குள்ளே கெனமனின் வேலை இலேசாக இருக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலின் என்ற நாமத்தை உச்சரித்துக் கொண்டு பிறந்தது. ட்ரொஸ்கியவாதத்துடனான கடுமையான தத்துவார்த்த மோதலின் போக்கில் இக் கட்சி தோன்றியது. ஆகவே அது கடுமையான ஸ்டாலின் சார்பானதாக இருந்தது. இதனால்தான் சோவியத் கட்சியின் 0-வது காங்கிரஸ் முன்வைத்த பிரச்சினைகளை எமது கட்சி உத்தியோக பூர்வமாக விவாதிக்கவில்லை. மழுப்பல் முயற்சிதான் நடந்தது.

விவாதம் ஆரம்பித்தபோது ஸ்டாலினின் பாத்திரம் விவாதிக்கப்பட்ட ஒரு பிரச்சினையாகும். கெனமன் தலைமையிலான திரிபுவாதிகள் ஸ்டாலின் பற்றிய குருச்சேவின் அவதூறுகளைக் கிளிப்பிள்ளைகளைப் போல ஒப்புவித்து 22-வது மாநாட்டுக்குச் சென்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் குருச்சேவ் பரப்பிய அசிங்கமான குசுகுசுப் பேச்சுகள் அனைத்தையும் பரப்பினார்கள். மார்க்சிய — லெனினியவாதிகள் இவற்றை எதிர்த்து நிராகரித்தார்கள்.

ஸ்டாலின் ஒரு மாபெரும் மார்க்சிய — லெனினியவாதி, புரட்சிவாதி. அவர் ஒக்டோபர் புரட்சியின் தலைவர்களில் ஒருவர். அவர் லெனினுடைய பணியைத் தொடர்ந்து செய்து ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் என்ற கடலால் சூழப்பட்ட தனியொரு நாட்டில் சோசலிசத்தை வெற்றிகரமாகக் கட்டியமைத்தார். முன்னர் ஒருபோதும் செய்யப்படாத பணியை அவர் நிறைவேற்றினார். அவர் பின்பற்ற முன்னுதாரணம் இருக்கவில்லை. கடைப்பிடிக்க முன் அனுபவம் இருக்கவில்லை. வரலாற்றில் முதல் தடவையாகத்தான் அந்தப் பணி செய்யப்பட்டது. அவர் சில தவறுகளை இழைத்தது அல்ல, சோவியத் யூனியனில் நன்கு சோசலிசத்தைக் கட்டி அமைத்ததும் பின்னர் அதை ஹிட்லர் பாசிசத்துக்கு எதிராகப் பாதுகாத்ததும்தான் ஸ்டாலின் புரிந்த அற்புதங்கள் ஆகும். ஸ்டாலின் தனது வேலையை நன்கு செய்திருக்காவிட்டால் உலகத்தின் வரலாறு வித்தியாசமானதாக இருந்திருக்கும். பாசிசம் வெற்றி பெற்றிருக்கலாம். ஸ்டாலின், கட்சிக்குள் நுழைந்து கொண்ட ட்ரொஸ்கி, சியானேவ், கமெனவே, றாடெக், புக்காரின் போன்ற பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி பிரதிநிதிகள் பலரை வெளியேற்றினார். அவர் அப்படிச் செய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருக்காவிட்டால் ஹிட்லருக்கு உள்ளேயிருந்து கதவு திறக்கப்பட்டிருக்கும்.

இந்த ஆக்கப்பூர்வமான சாதனைகளைப் பார்க்காமல் ஸ்டாலினின் பாத்திரத்தை சரியாக கணிப்பிட முடியாது. ரோஜாப் பூங்கா ஒன்றைப் பார்ப்பவர் அங்குள்ள சாணிக் குவியலை மட்டும் காணக்கூடாது. சீனக் கட்சி இந்தக் கருத்தை வருமாறு கூறி உள்ளது: ''எல்லோருக்கும் தெரிந்தவாறு ஸ்டாலின் தமது கடைசிக் காலத்தில் சில பாரிய தவறுகளை இழைத்தபோதும் அவருடைய வாழ்க்கை ஒரு மாபெரும் மார்க்சிய — லெனினியப் புரட்சிவாதியின் வாழ்க்கை ஆகும். இளமையில் ஸ்டாலின் ஜார் மன்னராட்சிக்கு எதிராகவும் மார்சிய — லெனினியத்தைப் பிரச்சாரம் செய்வதற்காகவும் பாடுபட்டார். அவர் கட்சியின் தலைமை நிறுவனத்தைச் சேர்ந்த பின்னர் 1917 புரட்சிக்கு வழிகோலிய போராட்டத்தில் அவர் கலந்து கொண்டார். ஒக்டோபர் புரட்சிக்கு பின் அதன் கனிகளைப் பாதுகாக்க அவர் பாடுபட்டார். லெனின் மறைவுக்குப் பிந்திய ஏறக்குறைய 30 ஆண்டுகளில் அவர் சோசலிசத்தைக் கட்டியமைக்கவும், சோசலிசத் தாய்நாட்டைப் பாதுகாக்கவும், உலகக் கம்யூனிச இயக்கத்தை முன்னேற்றவும் பாடுபட்டார். முழுதாகப் பார்த்தால் ஸ்டாலின் எப்பொழுதும் வரலாற்று வளர்ச்சியின் முன்னணியில் நின்று போராட்டத்துக்கு வழிகாட்டினார். அவர் ஏகாதிபத்தியத்தின் அசைக்க முடியாத எதிரி. ஸ்டாலின் தவறுகளை விட்டபோது எதிரிகளிடமிருந்து உழைப்பாளி மக்களின் நலன்களைப் பாதுகாக்க தமது நடவடிக்கைகள் அவசியமானவை என்று கருதியதுதான் அவருடைய தவறு ஆகும். ஸ்டாலினுடைய தவறுகள் சோவியத் யூனியனுக்கு தீங்கு இழைத்தன. இவற்றைத் தவிர்த்திருக்கலாம். இருப்பினும் ஸ்டாலினின் தலைமைக் காலத்தில் சோசலிச சோவியத் யூனியன் பெரும் முன்னேற்றத்தைக் கண்டது. இது மறுக்க முடியாத உண்மை. சோசலிச அமைப்பின் பலத்தை இது காட்டுகின்றது. அத்துடன் ஸ்டாலின் ஒரு உறுதியான கம்யூனிஸ்ட் என்பதையும் காட்டுகின்றது. ஆகவே ஸ்டாலினின் சிந்தனையையும் செயலையும் தொகுக்கும்போது நாம் அவருடைய ஆக்கபூர்வமான பக்கத்தையும் எதிர்மறையான பககத்தையும் அவருடைய சாதனைகளையும் தவறுகளையும் பார்க்க வேண்டும். ஒரு பன்முகமான முறையில் இந்த விஷயத்தை நாம் பார்க்கும்போது இப்படித்தான் வரும்; முதலாவதாக, கம்யூனிசமும் மார்க்சியம் — லெனினியமும் இது பிரதான அம்சம். இரண்டாவதாக சில மிகவும் கடுமையான தவறுகள். இவை மார்க்சிய—லெனினியத்துக்கு விரோதமானவை.



இவற்றைத் திருத்த வேண்டும். திருத்துவதற்காக இந்தத் தவறுகளை வலியுறுத்த வேண்டும் என்றபோதும் சரியான கணிப்பீட்டை செய்வதற்காகவும் மக்களைத் திசை திருப்பாமல் இருப்பதற்காகவும் இத்தவறுகளைச் சரியான இடத்தில் வைத்துப் பார்க்க வேண்டும். எமது அபிப்ராயத்தில் ஸ்டாலினுடைய தவறுகள் அவருடைய சாதனைகளுடன் பார்க்குப்போது இரண்டாம் இடத்தில் இருக்கின்றன.''

குருச்சேவ் செய்தது என்னவென்றால், ஸ்டாலினுடைய ஆக்கபூர்வமான சாதனைகள் அனைத்தையும் மறுதலித்து அவரை ஒரு ''எதேச்சதிகாரி''யாகக் ''கொலைகாரனாக'' காட்டியதாகும். ''சோவியத் யூனியனில் சோசலிசத்தைக் கட்டியமைத்த புகழ் பூத்த காலத்தை இருட்டாகக் காட்டி, சோவியத் யூனியனின் புகழை உலக மக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியதாகும். சோவியத் யூனியனை பயங்கரமும் கொலையும் ஆட்சி புரிந்த நாடாகக் காட்டியதாகும். முழுப் பிற்போக்கு முதலாளித்துவ செய்தி நிறுவனங்களும் இதைத்தான் செய்தன, செய்து கொண்டிருக்கின்றன.''

நவீன திரிபுவாதத்தின் நச்சுத் தத்துவங்களை சோவியத் மக்கள் மீது திணிப்பதற்கு குருச்சேவ், ஸ்டாலினின் புரட்சிகர உருவத்தை மழுங்கடிக்க வேண்டியிருந்தது. ஸ்டாலின் சோவியத் மக்களினதும் கட்சியினதும் தலைவர் மாத்திரமல்ல, சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் தலைவரும் ஆவார் என்பதை குருச்சேவ் மறந்து விட்டார். 20-வது மாநாட்டில் குருச்சேவ் நிகழ்த்திய அவமானச் சொற்பொழிவு ஒரபட்சமாகக் செய்யப்பட்டது. சகோதரக் கட்சிகளுடன் எந்தவித கலந்தாலோசனையும் செய்யப்படவில்லை. இதனால் இக்கட்சிகளுக்கு என்ன தீங்கு விளையும் என்பது பற்றி அவர் சிந்திக்கவேயில்லை. இச்சொற்பொழிவை அவர் இரகசியமாக ஏகாதிபத்தியப் பத்திரிகைகளுக்கு வழங்கினார்.

குருச்சேவ் ஸ்டாலினைத் தாக்கிச் செய்ததுபோல் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் எவரும் இவ்வளவுக்கு ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்கினதும் நலனுக்குத் துணை புரிந்ததில்லை. குருச்சேவ் அவர்களுடைய செல்லப்பிள்ளை ஆகியதில் ஆச்சரியம் இல்லை. குருச்சேவ் பதவி ஏற்றபோது ஸ்டாலின் உலகின் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கியஒரு உறுதியான ஐக்கியப்பட்ட சோசலிச முகாம் ஒன்றை விட்டுச் சென்றார். எத்தனையோ கோடி மக்கள் இணைந்த ஐக்கியப்பட்ட சர்வதேசிய கம்யூனிச தொழிலாளர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கம் ஒன்றை விட்டுச் சென்றார். குருச்சேவ் இன்னொரு அரண்மனைச் சதியில் பதவி நீக்கம் செய்யப்பட்டபோது ஏகாதிபத்தியவாதிகள் கண்டு அஞ்சிய இந்த ஐக்கியம் உடைத்து நொறுக்கப்பட்டது. இதுதான் குருச்சேவின் திரிபுவாதம் ஏகாதிபத்திய பிற்போக்கு முகாமுக்குச் செய்த சேவையாகும்.

ஸ்டாலினின் பாத்திரம் என்ற பிரச்சினை மாத்திரம், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிக்குள்ளே வாதப் பிரதிவாதத்துக்குரிய விஷயமாக இருக்கவில்லை. இக்காலத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்சிய — லெனினிய மார்க்கத்துக்கும் சோவியத் கட்சியின் நவீன திரிபுவாத மார்க்கத்துக்கும் இடையிலான வேற்றுமைகள் வெளிக்கு வந்தன. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிக்குள்ளே நடைபெற்ற விவாதம் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட இந்த மோதலைப் பிரதிபலித்தது.

இந்தத் தத்துவார்த்த விவாதத்தை ஆழமாகப் பார்க்க வேண்டும் இது சர்வதேசிய கம்யூனிச தொழிலாளர் இயக்கத்தில் ஏற்பட்ட மூன்றாவது மாபெரும் விவாதமாகும். முதலாவது விவாதத்தை லெனின் தமதுகாலத் திரிபுவாதிகளுக்கு எதிராக நடத்தினார். இரண்டாவது விவாதத்தை ஸ்டாலின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ட்ரொஸ்கியவாதத்துக்கு எதிராக நடத்தியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் சர்வதேசிய கம்யூனிச தொழிலாளி வர்க்க இயக்கம் மாபெரும் வெற்றிகளைப் பெற்ற அதே வேளையில் அதற்குள்ளே தீங்கான ஓட்டம் ஒன்றும் ஏற்பட்டது. இதனை முதலில் பிரவுடர் பிரபு பிரதிநிதித்துவம் செய்தார். இவர் அப்பொழுது அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். இவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவான முறையில் வர்க்க சமரசக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தார். ஆனால் சகோதரக் கட்சிகளின் உதவியுடன் இது முறியடிக்கப்பட்டது. பின்னர் டிட்டோ திரிபுவாதக் கருத்துக்களுடன் முன்வந்தார். டிட்டோ நீண்டகாலமாக கம்யூனிச இயக்கத்துக்குள்ளே மறைந்திருந்த ஒரு ஏகாதிபத்திய, பூர்ஷ்வா ஏஜண்டு ஆவார். ஆனால் தோழர் ஸ்டாலினின் திறமையான தலைமையிலிருந்த சர்வதேசிய கம்யூனிச இயக்கம் அவரை வெளியேற்றியது.

ஸ்டாலின் மறைவுக்குப் பின் அதிகாரத்தை அபகரித்துவிட்டு குருச்சேவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின்



20, 22-ம் மாநாடுகளில் முந்திய திரிபுவாதத் தத்துவங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி ஒரு முழுத் தத்துவமாக உலகத்தின் முன்னிலையில் வைத்தார். ஹிட்லர் பாசிசத்துக்கு எதிரான புகழ்மிக்க அருஞ்செயல்களால் சோவியத் யூனியன் பெற்றிருந்த பிரமாண்ட செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்தியும் லெனின், ஸ்டாலின் ஆகியோரின் பூமியும் அக்டோபர் புரட்சியின் பூமியும் முதலாவது தொழிலாளர் அரசு தோன்றிய பூமியுமான சோவியத் யூனியனின் புகழைப் பயன்படுத்தியும் குருச்சேவ் சோவியத் ஆணைக்கோலை அசைத்து பல கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தனது நவீன திரிபுவாதத் தத்துவத்தைத் திணித்தார். இப்படிச் செய்ய முடியாதிருந்த இடங்களில் அவர் பிளவுகளை உண்டுபண்ணி சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் ஐக்கியத்தைச் சீர்குலைத்தார்.

பெரும்சந்தடி செய்யும் ஏகாதிபத்திய பூர்ஷ்வா பத்திரிகைகளின் ஆதரவுடனும் அவர் ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வு, முதலாளித்துவத்துடன் சமாதானப் போட்டி, பாராளுமன்றத்தின் மூலம் சோசலிசத்துக்கு சமாதான மாற்றம் ஆகிய தத்துவங்களைப் பிரச்சாரம் செய்தார். அவர் அமெரிக்காவுககுப் பயணம் செய்து அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேரும் சகாப்தத்தைத் தொடக்கிவைத்து சகல தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் துரோகம் செய்தார். உள்நாட்டில் பொருளாதாரத் துறையில் சோவியத் யூனியனிலும் நவீன திரிபுவாதிகளால் ஆளப்படும் மற்ற நாடுகளிலும் முதலாளித்துவத்தின் மீட்சிக்கு வழிகோலிய கொள்கைகளை அவர் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நாடுகள் இனிமேலும் சோசலிச நாடுகள் அல்ல. அவற்றில் முதலாளித்துவம் மீட்கப்பட்டுள்ளது; புதிய பூர்ஷ்வா வர்க்கம் ஒன்று தோன்றியுள்ளது. பண்ணை விவசாயிகளின் தனியார் நிலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் கிராமப் புறத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப் பட்டுள்ளது. தொழிற் துறையில் லாப நோக்கு, பொருளாயதத் தூண்டுதல்கள் ஆகிய முதலாளித்துவக் கோட்பாடு புகுத்தப் பட்டுள்ளது.

சோவியத் மக்களை அந்நிய ஏகபோக முதலாளித்துவம் சுரண்டுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்திய வங்கிகளின் ஆதரவுடைய இத்தாலி பியாட் கொம்பெனி போன்ற ராட்சத சர்வதேச ஏகபோகக் கொம்பெனிகள் சோவியத் யூனியனில் தொழிற்சாலைகளைத் திறந்து சோவியத் உழைப்பாளி மக்களைச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுரண்ட அனுமதிக்கப்பட்டன. யப்பானிய ஏகபோக தலன்கள் சைபீரியாவைச் சுரண்ட அனுமதிக்கப்பட்டன.

முழு மக்களினதும் சர்வாதிகாரம் என்ற பெயர்ப் பலகையின் கீழ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் புதிய பூர்ஷ்வா வர்க்கத்தின் சர்வாதிகரமாக மாற்றப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரம் கைவிடப்பட்டது.பாராளுமன்றம், பல கட்சிகள் ஆகியன உடைய பூர்ஷ்வா ஜனநாயக முறை ஒன்றைப் புகுத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

கலாச்சாரத் துறையில் மேற்கத்தைய பூர்ஷ்வா கலாச்சாரத்தின் உளுத்துப்போன உக்கிப் போன விஷயங்கள் அனைத்தும் ரஷ்யாவுக்குள் அனுமதிக்கப்பட்டன. ஜாஸ், ட்விஸ்ட் போன்ற கோணங்கி நடனங்கள், முற்றிலும் உளுத்த திரைப்படங்கள், இலக்கியங்கள், மோஸ்தர் அணிவகுப்புகள், அழகுராணிப் போட்டிகள் இவை அனைத்தும் அத்துபடியாகின. விபச்சாரம் மீண்டும் தோன்றியது. இது முதலாளித்துவ மீட்சியின் நிச்சய அடையாளமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் மற்றும் பிற்போக்குச் சக்திகளுடனும் கூட்டுச் சேரும் கொள்கையும் சகல புரட்சிகர இயக்கங்களுக்கும் துரோகம் செய்வதும் சகல துறைகளிலும் உள்நாட்டில் முதலாளித்துவம் மீட்கப்பட்டதன் அடிப்படையில் அதன் விளைவாக ஏற்பட்டன.

குருச்சேவின் காட்டிக் கொடுப்புக்கும் துரோகத்துக்கும் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் எதிர்ப்பு இருக்காமல் இருக்கவில்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழமும் தெளிவான சிந்தனையும் உடைய பல விவேகமான வாதப்பிரதிவாதக் கட்டுரைகளை வெளியிட்டு குருச்சேவும் மேற்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் சில தலைவர்களும் மேற்கொண்ட நவீன திரிபுவாத நிலைப்பாடுகளை மறுத்துரைத்தார்கள்.

இந்த விவாதம் இப்பொழுது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிக்குள்ளே உக்கிரமான தத்துவார்த்த மோதலாக உருவெடுத்தது. எமது காலத்தில் நடைபெற்ற இந்த மாபெரும் விவாதத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைச் சற்று ஆழமாகப் பார்த்தால்தான் இந்தத் தத்துவார்த்த மோதலைப் புரிந்துகொள்ள முடியும். சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் மாபெரும் தலைவர்களான மார்க்ஸ், எங்கெல்ஸ்,லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் போதனைகளை தொகுத்து நாம் பின்வருமாறு கூறலாம்:



நாம் ஒரு வர்க்க சமுதாயத்தில் வாழ்கின்றோம். இங்கு ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை அடக்கி சுரண்டுகிறது. மற்ற வர்க்கங்களை அடக்கி, சுரண்டும் வர்க்கம் பெரும்பாடுபட்டு இந்த அடக்கலுக்கும் சுரண்டலுக்கும் ஒரு இயந்திரத்தை அமைத்திருக்கிறது. இந்த இயந்திரத்தை நாம் அரசு இயந்திரம் என்று அழைக்கிறோம் இதன் பிரதானவடிவம் ஆயுதப் படைகளாகும். மார்க்ஸ் சுட்டிக்காட்டியவாறு அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கும் கருவியாகும். அரசின் பிரதான பணி சுரண்டலைப் பாதுகாப்பதும் அடக்கப்பட்ட வர்க்கங்கள் சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக எழுவதைத் தடுப்பதும் ஆகும். சுரண்டும் வர்க்கங்களின் காவல் நாய்களான ஆயுதப் படைகளின் கரங்களில் துப்பாக்கி இல்லாவிட்டால் சுரண்டல் ஒரு கணமேனும் நீடித்திருக்க முடியாது. ஆகவே மக்கள் தம்மை விடுதலை செய்யவேண்டும் என்றால் தம்மை ஒடுக்கி வைத்திருக்கும் அடக்குமுறையான அரசு இயந்திரத்தை ஆயுதப் பலம்கொண்டு உடைத்தெறியவேண்டும். அதாவது அவர்கள் புரட்சியை நடத்தி அடக்குமுறையான பூர்ஷ்வா அரசு இயந்திரத்தின் இடத்தில் தொழிலாளி வர்க்கத்தின் அரசு இயந்திரத்தை அமைக்கவேண்டும். இதனை மார்க்ஸ் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்று அழைத்தார்.

பாராளுமன்றத்தின் மூலம் சமாதான மாற்றத்தால் இதைச் செய்ய முடியாது. புரட்சியின் மூலம் தான் செய்யமுடியும். பாராளுமன்றம் என்பது மூலதனத்தின் நிர்வாணமான சர்வாதிகாரத்தை அலங்கரிக்கவும், தொழிலாளர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிக்கவும், அவர்களைக் குழப்பியடித்து முட்டாளாக்கவும் ஆயுதப் படைகள் என்ற உண்மையான அதிகார ஆசனத்திலிருந்த அவர்களைத் திசைதிருப்பி விடவும் பிற்போக்குவாதிகள் கண்டுபிடித்த ஒரு கருவியாகும். இது ஆயுதப் போராட்டத்துக்குப் பதிலாக வார்த்தைப் போராட்டத்தை வைக்கும் ஒரு முயற்சியாகும். ஆகவே பாராளுமன்றப் பிரமைகளால் நாம் மயங்கக் கூடாது. நாம் பாராளுமன்றப் பாதையை உறுதியாக நிராகரித்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரேயொரு விமோசனப் பாதையாக புரட்சிப் பாதையை மேற்கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்துக்களை மேற்கொள்பவர்கள் புரட்சிவாதிகள். இவற்றை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது எதிர்ப்பவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீர்திருத்தவாதிகள் அல்லது திரிபுவாதிகள். மார்க்சிய - லெனினிய வாதிகளுக்கும் நவீன திரிபுவாதிகளுக்கும் இடையிலும் புரட்சிவாதி களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் இடையிலும் உள்ள அடிப்படை வித்தியாசம் இதுவாகும்.

உலக ஏகாதிபத்தியம் தான் அழிந்து வரும் இந்த இறுதிக் கட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கு உள்ளேயிருந்து தனக்கு முண்டு கொடுக்க நவீன திரிபுவாதம் என்ற இந்த இறுதிச் சக்தியை இழுத்து விட்டிருக்கிறது. உளுத்த மரத்துக்கு முண்டு தேவையாய் இருப்பது அதன் பலத்தை அல்ல, பலவீனத்தைத் தான் காட்டுகின்றது. முண்டை வெட்டுவது மரத்தை வெட்டும் முயற்சியின் ஒரு பகுதியாகும். ஆகவேதான் உலக ஏகாதிபத்தியத் துக்கும் நவீன திரிபுவாதத்துக்கும் எதிரான போராட்டம் பிரிக்க முடியாதது. நவீன திரிபுவாதத்தை எதிர்த்து போராடுவதை நிறுத்துபவர், விரைவில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடு வதையும் நிறுத்துவார். இதுபற்றி எந்தப் பிரமையும் இருக்கக் கூடாது. திரிபுவாதம் என்பது தொழிலாளி வர்க்க இயக்கத்துக் குள்ளே பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்கு என்று லெனின் வரைவிலக்கணம் செய்தார்.

1962-1963 ஆண்டுகளில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி அணிகளில் ஏற்பட்ட மாபெரும் தத்துவ விவாதம் இதுதான். இதில் நான் மார்க்சிய-லெனினியவாதிகளின் தலைவ னாக இருந்தேன். விவாதம் ஆரம்பித்தபோது பெரும்பான்மை யோர் சரியான மார்க்சிய—லெனினிய நிலைப்பாடுகளை ஆதரித் தார்கள். ஆனால் மாதக் கணக்காக இந்த விவாதம் இழுபட்ட போது கபடத்தனமான முரட்டுத்தனமான அழுக்கங்கள் திணிக்கப் பட்டு பல உறுப்பினர்கள் தவறான நவீன திரிபுவாத நிலைப் பாட்டுக்கு இழுத்தெடுக்கப்பட்டார்கள்.

1963 மே மாதத்தில் நான் புடாபெஸ்டுக்கும் பிராங்குக்கும் சென்று இந்த இரு நாடுகளினதும் தேசிய தொழிற்சங்க மாநாடு களில் கலந்து கொண்டேன். நான் இந்த வாய்ப்பைப் பயன் படுத்தி நாடு திரும்பும் வழியில் மொஸ்கோ வழியாகப் பீகிங் செல்லத் தீர்மானித்தேன். நான் பீக்கிங் செல்வதாக அதுவும் மொஸ்கோ வழியாக என்று அறிந்தபோது சோவியத் கட்சி என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு செக்கோஸ்லாவாக்கியத் தொழிற்சங்க மாநாட்டில் கலந்துகொண்ட சோவியத் பிரதிநிதிக் கோஷ்டியின் தலைவருக்கு உத்தரவிட்டது. நான் நாடு திரும்பும் வழியில் மொஸ்கோவில் இரண்டு வாரம் கழித்துச் செல்லலாம்



என்று அவர் எனக்கு ஒரு அழைப்பை விடுத்தார். நான் மரியாதை யாக மறுத்தேன். அவர்கள் இலேசாக என்னை விட்டுவிடவில்லை. நான் மொஸ்கோ விமான நிலையத்தில் இறங்கியபோது ஒரு ரஷ்ய நண்பர் எனக்காகக் காத்திருந்தார். அவரும் என்னை மொஸ்கோவில் தங்கிச் செல்லுமாறு அழைத்தார். நான் மீண்டும் மறுத்துவிட்டு நேரே விமான மூலம் பீக்கிங் சென்றேன்.

சர்வதேசிய விவாதம் ஆரம்பித்தபின் நான் முதல் தடவை யாகச் சீனாவுக்குச் சென்றேன். அப்பொழுது சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் அடிபட்டுக் கொண்டிருந்த விவகாரங்கள் பற்றி சீனத் தலைவர்களுடன் மதிப்புள்ள பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். இங்கு நான் ஒரு விஷயத்தைத் தெளிவாக்க வேண்டும். நாம் கட்சியிலிருந்து பிரிந்து ஒரு தனியான மார்க்சிய—லெனினியக் கட்சியை அமைக்கவேண்டும் என்று சீனக் கட்சியின் தலைவர்கள் எவரும் எந்தத் தருணத்திலும் ஆலோசனை முன்வைத்ததில்லை. ஆனால் சோவியத் கட்சியின் நடத்தை முற்றிலும் வித்தியாசமானது. மத்தியக் கமிட்டி இந்தப் பிரச்சினையை ஒட்டி இறுதி வாக்களிப்பதற்கு முந்திய இரவு மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் அவருடைய மனைவியாரும் சோவியத் தூதரகத்தில் இராப் போஜனத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

1963 செப்டம்பரில் மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மை யோர் குருச்சேவ் திரிபுவாதத்துக்கு ஆதரவாகத் தீர்மானித்தார் கள். இத்தகைய அடிப்படையான ஒரு விவகாரம் பற்றி கட்சிச் சட்டதிட்டத்தின் கால எல்லையை மீறிய ஒரு மத்தியக் கமிட்டிக்கு முடிவு எடுக்கும் உரிமை கிடையாது என்று மார்க்சிய-லெனினிய வாதிகள் ஆட்சேபித்திருந்தார்கள். கட்சியின் 6-வது மாநாடு தெட்டத் தெளிவாக வகுத்திருந்தபடி இரண்டு ஆண்டுகளுக்குள் அதாவது 1962 டிசெம்பருக்கு முன் 7-வது மாநாட்டைக் கூட்ட கட்சி மத்தியக் கமிட்டி தவறிவிட்டது. விஷயத்தைக் கட்சி அங்கத்தவர் மத்தியில் எடுத்துச் செல்வோம் என்று மார்க்சிய—லெனினியவாதிகள் கோரிக்கை வைத்தார்கள். ஆனால் திரிபு வாதத் தலைவர்கள் இத்தகைய நடவடிக்கையை எடுக்கத் துணியவில்லை. ஏனென்றால் பதில் என்னவாயிருக்கும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

மாறாக அவர்கள் தீர்மானங்களைப் பூர்ஷ்வாப் பத்திரிகை களுக்கு அறிவித்தார்கள். மார்க்சிய — லெனினியவாதிகளை வேட்டையாடினார்கள். நான் அதில் பாதிக்கப்பட்ட முக்கியமான

www.tamilarangam.net



ஆள். என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்றினார்கள். அதனுடன் பிளவு உத்தியோகபூர்வமாகியது. ஆனால் உண்மையில் நான் ஏற்கனவே இரண்டு தனியான தலைமை அகங்களாக இயங்கி னோம். சி.டி.யு.எப்.-ம் பல தொழிற்சாலைகளின் தலைமைத் தொழிலாளர்களும் தீவிரமான மார்க்சிய — லெனினிய மார்க் கத்தை உறுதியாகக் கடைப்பிடித்தார்கள். பல நாடுகளில் கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்கள்தான் முதலில் திரிபுவாதிகள் ஆகினார் கள். இலங்கையில் தொழிற்சங்கத் தலைவர்கள்தான் மார்க்சிய — லெனினிய மார்க்கத்துக்குத் தலைமை தாங்கினார்கள். இது எப்படி என்று எனது நண்பர்கள் பலர், குறிப்பாக வெளிநாட்டு நண்பர்கள் கேட்டுள்ளார்கள். இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்வது கஷ்டம். தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர் களுக்கு நெருக்கமாக இருந்தபடியால் நாம் அவர்களின் தீவிர மான போராட்ட மார்க்கத்தைப் பிரதிபலித்தோம் என்று நினைக் கின்றேன். ஒரு நவ காலனிய நாட்டில் தொழிலாளர் துரைத்தனம் ஒன்று இல்லாதிருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்தத் தொழிலாளர் துரைத்தனம் இப்பொழுது இலங்கையில் தோன்றியுள்ளது. எப்படியிருந்தாலும், இலங்கையில் கட்சியின் தொழிற்சங்கங்களின் தலைவர்கள்தான் சரியான மார்க்சிய — லெனினியக் கோட்பாட்டுக்கான போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார்கள் என்பது உண்மை.

இந்தக் காலத்தில் சி.டி.யு.எப். சிங்களத்திலும் தமிழிலும் ''தொழிலாளி'' என்ற தத்துவ ஏட்டைப் பிரசுரித்தது. நாம் மார்க்சிய — லெனினியக் கோட்பாடுகளுக்கு ஆதரவாக தத்துவார்த்த விவாதம் ஒன்றை நடத்தினோம். இந்த ஏட்டின் விற்பனை திரிபுவாத மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்த கட்சி ஏடு களின் விற்பனையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தது. தமிழ், சிங்கள கட்சி வாரப் பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர்கள் எமது பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆகினார்கள்.

1963 டிசம்பரில் நடந்த சி.டி.யு.எப்.-ன் 13-வது மாநாட்டில் சி.டி.யு.எப்.-க்குள்ளே மார்க்சிய — லெனினியவாதிகளுக்கும் திரிபுவாதிகளுக்கும் இடையிலான முதலாவது பலப்பரிட்சை நடந்தது. இந்த மாநாட்டுக்குத் தயாரிப்பாக, இணைந்த சங்கங் களின் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கூட்டம் ஒவ்வொன்றிலும் மெண்டிஸ் தனது திரிபுவாத மார்க்கத்தை முன்வைத்துத் தோற்கடிக்கப்பட்டார். கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடந்த மாநாட்டில் இறுதி மோதல் நடைபெற்றது. அரசியல் குழு உறுப்பினர் என்ற முறையில் நான் நவீன திரிபு



வாதத்துக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கியபடி யால் கட்சியின் திரிபுவாதத் தலைவர்கள் சி.டி.யு.எப்.-ல் எனது தலைமைப் பதவியைப் பிரித்தெடுக்க முயற்சித்தார்கள். ஒரு பிடிவாத மான திரிபுவாதியாக மாறிய சி.டி.யு எப். தலைவர் மெண்டிசைப் பாவித்து அவருடைய தலைமை உரையில் அவர்கள் என்னைத் தாக்கினார்கள். மாநாடு சரியாகக் கூட்டப்படவில்லை என்று அவர் பொய்யாக கூறி தனது சொற்பொழிவின் பின் மாநாட்டில் இருந்து வெளிநடப்புச் செய்தார். பெரும்பாலான பிரதிநிதிகள் தன்னுடன் செல்வார்கள் என்று அவர் முற்றிலும் நம்பியிருந்தார். ஆனால் அவரும் மற்றும் திரிபுவாதிகளும் கவலை அடையும் முறையில் அங்கிருந்த 600 பிரதிநிதிகளில் 50 பேர் கூட மண்ட பத்தை அவருடன் விட்டு வெளியேறவில்லை. ஒரு வெற்றிகரமான ஊர்வலத்திற்கு தலைமை தாங்கி செல்ல வெளியே காத்திருந்த கெனமன் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்.

மெண்டிசுடன் சென்ற 50 பிளவுக்காரர்களும் கட்சி அலுவல கத்துக்குச் சென்று போட்டி தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றை அமைத்து சிலோன் பெடரேஷன் ஒப் ட்ரேட் யூனியன்ஸ் என்று அதற்குப் பெயர் வைத்தார்கள். இலங்கைத் தொழிற்சங்க சட்டங் களின்படி ஏற்கனவே பதியப்பட்டுள்ள ஒரு தொழிற்சங்கத்தின் பெயரை அல்லது குழப்பம் ஏற்படுத்தக்கூடிய ஒத்த தன்மையைக் கொண்ட பெயரை ஒரு தொழிற்சங்கம் பதிவு செய்ய முடியாது. ஆகவே சிலோன் பெடரேசன் ஆப் ட்ரேட் யூனியன்ஸ் என்ற பெயரைப் பதிவு செய்ய முடியாது. ஆனால் அப்பொழுது தொழில் அமைச்சராக இருந்த திரு. குணசேகரன் திரிபுவாதத் தலைவர் எஸ்.ஏ. விக்ரமசிங்காவின் உறவினராக இருந்தார். திரிபுவாதிகள் இந்தத் தொடர்பைப் பயன்படுத்தினார்கள். சி.எப்.டி.யு.-வைப் பதிவு செய்யுமாறு தொழிற்சங்கங்களின் பதிவாளருக்கு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் மார்க்சிய — லெனினியவாதிகள் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி கூட்டத் தவறிய கட்சியின் 7-வது மாநாட்டை கூட்டும் நோக்கத்துடன் கமிட்டி ஒன்றை அமைத் தார்கள். மார்க்சிய — லெனினியவாதிகளின் முதலாவது மாநாடான இந்த மாநாடு 1964 ஜனவரியில் நடைபெற்றது. அது கட்சியிலிருந்து திரிபுவாதிகளை வெளியேற்றியது. உரிய கம்யூனிஸ்ட் கட்சி எனத் தன்னைப் பிரகடனம் செய்து புதிய தலைமை உறுப்புகளைத் தேர்ந்தெடுத்தது. இந்த மாநாட்டில் இரண்டு முக்கிய தீர்மானங்கள் பிரதிநிதிகளின் பலத்த கரகோஷத் தின் மத்தியில் நிறைவேற்றப்பட்டன. ஒரு தீர்மானம் ஸ்டாலின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீதான குருச்சேவின் தாக்குதலை நிராகரித்தது மற்றத் தீர்மானம், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது மாநாட்டு மேடையில் கெனமன், சகோதர அல்பேனியத் தொழிற்கட்சி மீது தொடுத்த தாக்குதலை மறுத்துரைத்தது.

7-வது மாநாடு சந்தேகத்துக்கு இடமின்றி சரியான திசையிலான ஒரு நடவடிக்கையாகும். ஆனால் பல தவறுகள் இழைக்கப்பட்டன. மாநாட்டைப் பகிரங்கமாக நடத்தியதும், தலைவர்களையும் ஊழியர்களையும் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வெளிக்காட்டியது முதல் தவறாகும். இரகசியக் கட்சியின் அவசியம் பற்றியும் நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. இது எமது திரிபுவாதக் கடந்த காலம் விட்டுச் சென்ற சொத்தாகும். எம்மைத் திரிபுவாதக் கட்சியுடன் இணைத்த கர்ப்பக் கறுயிகளை அறுக்க எமக்குப் பல்லாண்டுகள் பிடித்தது. புதிய கட்சியில் ஊடுருவலுக்கு எதிராக நாம் போதிய விழிப்புடன் இருக்கவில்லை. குருச்சேவுக்கும் கெனமனுக்கும் எதிரி என்று கூறியவர்கள் அனைவரும் கட்சியில் சேர்க்கப்பட்டார்கள். சந்தர்ப்பவாதிகளும் உறுதியான அரசியல் நிலைப்பாடு அற்றவர்களும் மத்தியக் கமிட்டிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இது பின்னர் தொல்லையை ஏற்படுத்தியது. ஆனால் முக்கியமான விஷயம் என்னவென்றால் நவீன திரிபுவாதம் நிராகரிக்கப்பட்டது. மார்க்சிய — லெனினியக் கட்சி அமைக்கப்பட்டது. இது அப்பொழுது ஒரு பெரிய முன்னேற்ற நடவடிக்கையாகும்.

அதே ஆண்டில் லங்கா சம சமாஜக் கட்சியிலும் ஒரு பிளவு ஏற்பட்டது. இக்கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி சேர எடுத்த தீர்மானத்தால் இப்பிளவு ஏற்பட்டது. கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் சிறப்பு மாநாட்டில் 4-வது சர்வதேசியத்தின் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டார். எட்மண்ட் சமரக்கொடி, மெரில் பர்னாண்டு ஆகிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளர் பாலா தம்புவும் அவர்களுடைய ஆதரவாளர்களும் கட்சியிலிருந்து வெளியேறி லங்கா சம சமாஜக் கட்சி (பு)வை ஆரம்பித்தார்கள். 'பு' என்றால் புரட்சிகர என்பதைக் குறித்தது. சற்றுக் காலத்துக்குப் பின் லங்கா சம சமாஜக் கட்சி 4-வது சர்வதேசியத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. இலங்கையிலோ வேறு இடத்திலோ இது எந்த எதிரொலிப்பையும் ஏற்படுத்தவில்லை.



பின்னர் சமரக்கொடிக்கும் தம்புவுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டது. சமரக்கொடியின் தலைமையில் இன்னொரு லங்கா சம சமாஜக் கட்சி தோன்றியது. இப்பொழுது 'பு' முன்னுக்கு வந்தது. இவர்கள் இருவரும் யார் இலங்கையில் ட்ரொஸ்கிய வாதத்தினதும் 4-வது சர்வதேசியத்தினதும் பிரதிநிதி என்பது பற்றி 4-வது சர்வதேசிய மாநாடு ஒன்றில் மோதிக் கொண்டார்கள். தம்பு தான் வெற்றி பெற்றதாக கூறி புரட்சிகர மார்க்சிய கட்சி என்று தனது கட்சியை அமைத்துக் கொண்டார். இந்தக் கட்சியிலும் பிளவு ஒன்று ஏற்பட்டது. உபாலி கடரேயும் அவருடைய குழுவினரும் இக்கட்சியைக் கைப்பற்றினார்கள். தம்பு வெகுஜன தொழிலாளர் கட்சிக்கான ''நிரந்தரக்'' கமிட்டியை அமைத்தார். அது இப்பொழுது இலங்கைத் தொழிலாளர் கட்சியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டரசாங்கம் நீண்டகாலம் வாழவில்லை. அது பல பொருளாதார கஷ்டங்களைக் கண்டது. பகைமையான பூர்ஷ்வாப் பத்திரிகைகள் அதை எதிர்த்தன. அது தனது வாக்குறுதி எதையும் நிறைவேற்ற முடியவில்லை. பெரிய ஏமாற்றம் ட்ரொஸ்கிய நிதி அமைச்சர் என். எம். பெறேரா 21 கோரிக்கைகளை வகுத்தவர்களில் ஒருவராக இருந்தும் ஒரு கோரிக்கையைத் தானும் பொருளாதாரம் சம்பந்தப்படாத கோரிக்கையை கூடத் அவரால் வழங்க முடியவில்லை.

குறுகிய காலக் கூட்டரசாங்க காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான நிகழ்ச்சி, இலங்கையின் மிகப் பெரிய பூர்ஷ்வாப் பத்திரிகைக் கம்பெனியான ஏரிக்கரை நிறுவனத்தை அது எடுக்க முயற்சித்ததாகும். 1945லிருந்து இலங்கையில் நிலவிவரும் இலவசக் கல்வி முறையால் இந்நாட்டின் உயர்மட்டக் கல்வி அறிவு காரணமாக செய்தித்தாள்கள் ஆட்களின் மனங்களில் முக்கிய செல்வாக்கு வகித்தன. அசோசியட் நியூஸ் பேப்பர்ஸ் ஆப் சிலோன் கொம்பெனி அதாவது ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஆதிக்க அந்தஸ்தில் இருந்தன. இந்தக் கொம்பெனி மூன்று மொழிகளிலும் பல தினசரிப் பத்திரிகைகளை நடத்தியது. விஜயவர்த்தனா மற்றப் பத்திரிகைகளை வாங்கித் தனது கொம்பெனியை ஒரு ஏகபோகக் கம்பெனி ஆக்கினார். டைம்ஸ் ஆப் சிலோன் ஒரேயொரு எதிரான பத்திரிகையாகும். அது முன்னர் பிரித்தானியருக்கு சொந்தமாக இருந்தது. தமிழ்த் தினசரி வீரகேசரி இன்னொரு பத்திரிகையாகும்.

ஒரு சீர்திருத்தத் தலைவர் என்றும் டி.ஆர்.விஜயவர்த்தனா போற்றப்படுகின்றார். அவர் சுதந்திர இயக்கத்துக்குப் பங்காற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தினார் என்றும் கூறப்படுகின்றது. பத்திரிகைகள் மூலம் அவர் சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவளித்தார். ஆனால் பத்திரிகைத் துறையில் அவருடைய முயற்சிகளைக் கொண்டு பார்க்கும்போது இலங்கையில் மிகப் பெரிய பொய் உற்பத்தித் தொழிற் சாலையை, மிகப்பெரிய பிற்போக்குக் கோட்டையை அவர் உருவாக்கினார். இலங்கையில் பிற்போக்கான அனைத்தையும் ஏரிக்கரை பிரதிபலித்தது. அது எந்த அரசாங்கமும் கொண்டு வந்த எந்த முற்போக்கு நடவடிக்கையையும் எதிர்த்தது. வெளி நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகளைத் திட்டமிட்டு மீறி வெளிநாட்டு வங்கிகளில் அதன் மூன்று டிரெக்டர்களின் தனியார் கணக்குகளில் ஏறக்குறைய 20 லட்சம் ரூபாயைச் சேர்த்து வைத்திருந்தது பற்றிய றோயல் கமிஷனின் அறிக்கை அதனை முற்றிலும் அவமானப்படுத்தியது. இது நடந்தது என்னவோ விஜயவர்த்தனாவின் மறைவுக்குப் பின்னர்தான்.

இடதுசாரி இயக்கத்துக்கு எதிராக அது ஆரம்பத்திலிருந்து போராடியது. அவதூறு, அரை உண்மை, அப்பட்டமான பொய் ஆகிய எல்லா ஆயுதங்களையும் அது பாவித்தது. இடதுசாரிகளைத் தாக்க அது எதனையும் பாவித்தது. பண்டாரநாயக்காவும் அதன் பூரண எதிர்ப்புக்கு முன்னிலையில்தான் வெற்றிபெற்றார். நாவல ரான அவர் வானொலியைப் பூர்ஷ்வாப் பத்திரிகைகளுக்கு எதிராகப் பயன்படுத்தினார். ஆனால் அவருடைய பின்னோடி களுக்கு இந்தத் திறமை இருக்கவில்லை. ஏரிக்கரையை கட்டுப் படுத்த அவர்கள் தீர்மானித்தார்கள். ஏரிக்கரையை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று ஏற்கனவே ஒரு கோஷம் எழுந்திருந்தது. கூட்டரசாங்கம் ஏரிக்கரையை தேசியமயமாக்க ஒரு மசோதாவை முன்வைத்தது. ஆனால் இங்கேதான் அது தவறு இழைத்தது. அது முதலில் அதிகாரத்தைப் பாவித்து (அவசியமென்றால் அவசரகால நிலைமையைக் கூடப் பிரகடனம் செய்து) ஏரிக்கரையை எடுத்துவிட்டு பின்னர் பேசியிருக்க வேண்டும். இப்படிச் செய்யாதது பயங்கரத் தவறாகியது.

ஏரிக்கரை அதன் பெருந்தாக்குதலைத் தொடுத்தது. றோயல் கமிஷனின் அறிக்கை ஏரிக்கரை எடுத்த நடவடிக்கைகளை விவர மாகக் கூறுகின்றது. ஓரிரு டிரெக்டர்கள் விரும்பியபோதில் பாவிக்கப் பல லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. 1964-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4-ம் திகதி பாராளுமன்றத்தில் எதிர்தரப்புக்குத் தாவி அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏரிக்கரை லஞ்சம் கொடுத்தது என்று பாராளு மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டை



நிரூபிக்க சாட்சியம் தமக்கே கிடைக்கவில்லை என்று றோயல் கமிஷன் கூறியது. ஆனால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பெரும் தொகை பணம் எவ்வாறு செலவழிக்கப்பட்டது என்பது பற்றி ஏரிக்கரை டிரெக்டர்கள் தக்க விளக்கம் தரவில்லை எனவும் அது கூறியது. நாம்தான் யோசித்து முடிவு ஒன்றை எடுக்க வேண்டும்.

ஏரிக்கரைக்கு எதிரான இயக்கம் இலங்கையில் நடைபெற்ற மிகப் பெரிய இயக்கங்களில் ஒன்றாகும். ஏரிக்கரையை எடுக்க வேண்டும் என்று எமது கட்சியும் மிகப்பெரிய ஊர்வலம் ஒன்றை ஒழுங்குபடுத்தியது. ஆனால் அரசாங்கத்தின் பலவீனமான நடைமுறை காரணமாக ஏரிக்கரை வென்றது. லங்கா சமசமாஜக் கட்சியின் 'தங்க மூளைகள்' பத்திரிகை மசோதாவைத் தயாரித்து பாராளுமன்றத்தில் அதை நிறைவேற்றுவதை பெரும் குழப்ப மாக்கின. ஏரிக்கரை எடுப்பது பற்றி இன்னொரு மசோதாவை விவாதிக்கும் நோக்கத்துடனே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1964 டிசெம்பர் 4-ம் திகதி நடைபெற்ற சிம்மாசனச் சொற் பொழிவு மீதான வாக்களிப்பின்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் போதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த் தரப்புக்கும் சென்று வாக்களித்தனர். அரசாங்கம் ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. லங்கா சம சமாஜக் கட்சி(பு)யின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான சமரக் கொடியும் மெரில் பர்ணான்டோவும் யூ.என்.பி.-யுடனும் பிற்போக்குவாதிகளுடனும் சேர்ந்து வாக்களித்து 1965-ல் யூ.என்.பி. மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு வழி வகுத்தார்கள்.

திருமதி பண்டாரநாயக்காவின் முதலாவது அரசாங்கத்தின் போது பல முற்போக்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதை நாம் கவனிக்க வேண்டும். பாடசாலைகளைத் தேசிய மயமாக்கல், இலங்கை வங்கியையும் காப்புறுதியையும் தேசிய மயமாக்கல், வெளிநாட்டு எண்ணெய்க் கொம்பெனிகளைத் தேசிய மயமாக்கல் ஆகியன முக்கியமானவையாகும். அந்நிய எண்ணெய் கொம்பெனிகளைப் பொறுத்து எவ்வளவு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது பற்றி ஒரு பிணக்கு ஏற்பட்டது. அமெரிக்க அரசாங்கம் அதன் உதவித் திட்டத்தை நிறுத்தியது. அரசாங்கம் இறுதியில் அமெரிக்கர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தொகையை வழங்க உடன்பட்டது. அத்துடன் முதலாவது கட்டம் அமெரிக்க சமாதானப் படை ஆட்கள் இந்த அரசாங்கத்தின் போதுதான் இலங்கை வந்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இந்தோனேசியாவுக்குச் சென்றேன்

1964-ன் நடுப்பகுதியில் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான பலம் வாய்ந்த தொழிற்சங்க ஸ்தாபனமாகிய கொப்சியின் மாநாட்டில் கலந்துகொள்ள பிரதிநிதிகளை அனுப்பும்படியான அழைப்பிதழ் ஒன்றை சி.டி.யு.எப். பெற்றுக் கொண்டது. நான் இந்த மாநாட்டில் துணைச் செயலாளர் எம்.சி.எப். சாபியுடன் கலந்து கொண்டேன். இது இன்னொரு நினைவில் நிற்கும் அனுபவம். இது எதிர்ப்புரட்சி இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியை முறியடிப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர் நடைபெற்றது. அப்பொழுது இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி பலம் வாய்ந்த ஸ்தாபனமாக இருந்தது. அதன் மூன்று உறுப்பினர்கள் அமைச்சரவையில் இருந்தார்கள். இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி கால்வாசி வாக்குகளைப் பெற்றிருந்தது.

இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி கொந்தளிப்பான வரலாறு உடைய 1927-ல் அது ஒல்லடந்தக் காலனிவாதிகளுக்கு எதிராகக் கிளர்ச்சி ஒன்றை நடத்தியது. ஆனால் நசுக்கப்பட்டது. கட்சி தலைமறைவாகியது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஓரளவு வெளியே வந்தது. மொஸ்கோவிலிருந்து திரும்பிய முஸோ என்பவர் அதற்குத் தலைமை தாங்கினார். ஜனாதிபதி ஹட்டா தலைமையிலான பிற்போக்குவாதிகள் ஆத்திரமூட்டல் ஒன்றை நடத்தி முஸோவைக் கொன்றார்கள். கட்சி மீண்டும் நசுக்கப்பட்டது. இப்பொழுது ஏ. என். ஐடிற்றின் தலைமையில் கட்சி மீண்டும் பலம் வாய்ந்த சக்தியாகியது. தொழிலாளி வர்க்க இயக்கத்தில் அது மிகப் பலமான செல்வாக்கை வகித்தது. ஜனாதிபதி சுகர்னோவின் மதிப்பை அது பெற்றிருந்தது எனக் கூறப்பட்டது. சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட தத்துவார்த்த விவாதத்தின் பேரில் இக்கட்சி மார்க்சிய—லெனினியத்தின் பக்கத்தில் உறுதியாக நின்றது. அது ஏறக்குறைய 15 ஆண்டு காலம் சட்டரீதியாக இயங்கியது. பல உள்ளூர் சபைகளின் நிர்வாகம் அதன் கைகளில் இருந்தது. தேசிய தேர்தலில் அது பெருவாரியான வாக்குகளைப் பெற்றது. அதன் உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றார்கள். இவற்றால், மார்க்சிய - லெனினியத்தைப் பகிரங்கமாக ஆதரித்த இக்கட்சியில் திரிபுவாத சிந்தனையும் ஸ்தாபன முறையும் ஏற்பட்டன போலும். இதனை நான் அடுத்த ஆண்டில் ஏற்பட்ட எதிர்ப்புரட்சி என்ற வேதனையான அனுபவத்துக்குப் பிறகுதான் உணர்ந்தேன். இந்த எதிர்ப்புரட்சியில் ஐடிற் உட்பட 60 லட்சம் இந்தோனேசியக் கம்யூனிஸ்டுகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் கொல்லப்பட்டார்கள்.



''கொப்சியின்'' மாநாடு ஒரு பிரமாண்ட விவகாரம். இந்தோனேசியாவில் 'கொப்சி' தான் பெரிய வெகுஜன ஸ்தாபனம். இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் அடுத்து உலகில் மிகப் பெரிய கம்யூனிஸ்ட் கட்சியாகும். முழு சோசலிச முகாமினதும் சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீதப் பகுதியிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இயல்பாகவே இம்மாநாட்டில் மார்க்சிய — லெனினியத்துக்கும் நவீன திரிபுவாதத்துக்கும் இடையிலான பகிரங்க விவாதம் நடைபெற்றது. பெருந்தொகையான இந்தோனேசியப் பிரதிநிதிகள் ஒவ்வொரு மார்க்சிய — லெனினியவாதியின் பேச்சையும் கைதட்டிப் பாராட்டினார்கள். திரிபுவாதிகளின் சொற்பொழிவுகளின் போது பேசாமல் இருந்தார்கள். மார்க்சிய — லெனினிய மார்க்கத்துக்கு ஆதரவான எனது சொற்பொழிவுக்கு எழுந்து நின்று கரகோஷம் செய்தார்கள்.

இந்த மாநாட்டின் போது தோழர் ஐடிற் என்னைக் கட்சித் தலைமை அலுவலகத்தில் சந்தித்தார். அவர் பெரும் நம்பிக்கையுடன் காணப்பட்டார். அவருடன் நான் மிகவும் பயனுள்ளதோர் கலந்துரையாடலை நடத்தினேன். இந்தக் கலந்துரையாடலின் போது திரிபுவாதத் தொனியில் தோழர் ஐடிற் பல விஷயங்களைப் பேசினார். அப்பொழுது எனக்கு அவை தெரியவில்லை. அது என்னுடைய பலவீனம்.

கட்சித் தலைமை அலுவலகத்துக்குள் நான் பிரவேசித்த போது முன்னறையில் ஒரு கட்டிடத்தின் மாதிரியை நான் கண்டேன். கலந்துரையாடலின் போது தோழர் ஐடிற் என்னைக் கூட்டிச் சென்று அந்த மாதிரியை காட்டி அது தாம் அதே இடத்தில் அமைக்க இருக்கும் ஐந்து மாடிக் கட்சித் தலைமை அலுவலகத்தின் மாதிரி என்று கூறினார். அப்பொழுது ஜனாதிபதி சுகர்னோ 2 மாடிக்கு மேல் கட்டக்கூடாது என்று கூறியுள்ளபடியால் தாம் அந்த விதிக்கு இணங்க இரண்டு மாடியைக் கட்டிவிட்டு பின்னர் 5 மாடிக் கட்டிடத்தை அமைப்பார்கள் என்று அவர் கூறினார். ஆனால் ஒரு ஆண்டில் கட்டிடமும் இல்லை, கம்யூனிஸ்ட் கட்சியும் இல்லை, ஐடிற்றும் இல்லை. எதிர்ப்புரட்சி எல்லாரையும் அழித்து விட்டது.

புரட்சிவாதிகள் இந்த நிகழ்ச்சியிலிருந்து ஒரு முக்கியமான படிப்பினையைக் கற்றுக் கொள்ள வேண்டும். சமுதாயத்தை மாற்றும் நோக்கமுடைய புரட்சிவாதிகள் அவர்கள் இப்பணியை சமாதான நிலைமைகளில் செய்ய ஆளும் வர்க்கங்கள் அனுமதிக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். முதலாளித்துவ சமுதாயத்தில் புரட்சிகர ஸ்தாபனம் ஒன்றிற்கு நிரந்தரத் தலைமை அலுவலகம் அமைப்பது அடிப்படையில் ஒரு திரிபுவாதப் பிரமை யாகும். சமாதானப் பாராளுமன்ற பாதையின் மூலம் முதலாளித் துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்லலாம் என்ற பிரமையின் ஒரு பகுதியாகும் அது. அவர்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமையாமல் அவர்களுடன் சேர்ந்து சமாதானப் பாராளுமன்ற விளையாட்டை விளையாடும் பல ஆளும் வர்க்கங் கள் சட்டரீதியான வாழ்வு, தலைமை அலுவலகம், பத்திரிகைகள் முதலியவற்றை அனுமதிக்கலாம். ஆனால் ஒரு உண்மையான புரட்சிகரக் கட்சி அல்லது இயக்கம் ஆளும் வர்க்கத்தின் வாழ்வுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு வளரும்போது அது பூர்ஷ்வா ஜனநாயக முகமூடியைக் கழற்றிவிட்டு நிர்வாணமான பாசிச சர்வாதிகாரத்தில் ஈடுபடும். இதுதான் இந்தோனேசியாவில் நடந்த முதலாளித்துவ சமுதாயத்தில் நிரந்தர தலைமை அலுவலகத்தை அமைக்கும் அல்லது அமைக்கக் கனவு காணும் எந்தக் கட்சியும் புரட்சி பற்றிப் பாரதூரமாக இருப்பதாகக் கூற முடியாது.

தோழர் ஐடிற்றுடன் நான் நடத்திய கலந்துரையாடலில் நான் மறக்க முடியாத ஒரு கூற்றை அவர் கூறினார். இந்தோனேசியா சமாதானப் பாதையில் செல்லுமா புரட்சிகரப் பாதையில் செல்லுமா என்பது இந்தோனேசிய ஆளும் வர்க்கத் தைப் பொறுத்தது என்று அவர் என்னிடம் கூறினார். சமாதானப் பாதை வேண்டும் என்றால், கம்யூனிஸ்ட் கட்சி அதற்குத் தயார். மறுபுறத்தில் வன்முறைப் பாதை வேண்டும் என்றால் கம்யூனிஸ்ட் கட்சி அதற்கும் தயார். இது அடிப்படையில் ஒரு திரிபுவாதக் கருத்தாகும். இது முன்முயற்சியைத் தீர்க்கமான தருணத்தில் எதிரியின் கரங்களில் விட்டு வைப்பதாகும். ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில் பிற்போக்குவாதிகளினதும் புரட்சிவாதிகளினதும் பலம் ஏறக்குறைய சமமாகும் பொழுது அதற்குப் பின்னர் யார் யாருடைய தலையை முதலில் வெட்டுவார் என்பதே பிரச்சினை யாகின்றது. முதலாளி வர்க்கத்தின் தலையை தொழிலாளி வர்க்கம் முதலில் வெட்டாவிட்டால் முதலாளி வர்க்கம் நிச்சயமாக தொழிலாளி வர்க்கத்தின் தலையை வெட்டும். இதுதான் சரியாக இந்தோனேசியாவில் நடந்தது.

அதே வேளையில் பிற்போக்குவாதிகள் தமது தலையை வெட்டும் சாத்தியப்பாட்டை இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி முழுதாகக் குறைத்து மதிப்பிடவில்லை என்பதையும் நான்



கண்டேன். உதாரணத்துக்கு சீன ஹோட்டல் ஒன்றில் விருந்து ஒன்றுக்கு தோழர் ஐடிற் என்னை அழைத்திருந்த போது பக்கத் திலுள்ள மேசை ஒன்றில் சாதாரணமாக இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த நாலு இந்தோனேசியர்களும் அவருடைய மெய்க் காவலர்கள் என்பதை நான் பின்னர் அறிந்தேன். தோழர் ஐடிற் ஒரு பாதையால் வந்து வேறு பாதையில் செல்வாராம். அவர் ஒரே காரைப் பாவிப்பதில்லை. ஆனால் அவர்கள் புரட்சிக்குத் தயாராகவில்லை.

இதையே பீக்கிங்கில் தோழர் மாசேதுங் நகைச்சுவையாக தோழர் ஐடிற்றுக்குக் கூறியதாக நான் பின்னர் அறிந்தேன். மாவோ — ஐடிற் கலந்துரையாடலின்போது பிரசன்னமாகியிருந்த இந்தோனேசியக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் ஒருவர் அல்பேனியாவில் அகதியாக இருந்தபோது இதை என்னிடம் கூறினார். 1966-ல் தோழர் ஐடிற் ருமேனியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் (புக்காரெஸ்டில்) கலந்து கொண்டு விட்டு பீக்கிங் வழியாகத் திரும்பினார். ருமேனியக் கட்சி மாநாட்டில் தான் குருச்சேவ் முதல் தடவையாக சீனக் கட்சியைப் பகிரங்க மாகத் தாக்கினார். தோழர் ஐடிற், தவிர்க்காமல் எல்லா சகோ தரக் கட்சிகளினதும் மாநாடுகளில் கலந்து கொண்டார். தோழர் மாவோ இதைத் தவறு என்று கருதினார். கூடுதலான காலம் இந்தோனேசியாவுக்குள்ளே கழிக்க வேண்டும் என்றும் அங்கே தான் அவர் தேவை என்றும் ஐடிற்றிடம் மாவோ கூறினார். ''ஐடிற் உலகில் உள்ள எல்லா நாடுகளினதும் புரட்சிக்காக இருக்கின்றார் —இந்தோனேசியா தவிர'' என்று மாவோ இந்தோனேசியத் தோழர்களிடம் நகைச்சுவையாகக் கூறினாராம். கூர்மையான கருத்து இது.

ஓராண்டுக்கள் இந்தோனிசியாவில் நடந்த சம்பவம் உலகம் கண்ட மிகக் குரூரமான எதிர்ப்புரட்சியாகும். சர்வதேசிய மார்க்சிய-லெனினிய இயக்கத்துக்கு அது பெரும் அடியாகும். இந்தோனேசிய சம்பவத்தின் படிப்பினைகளை உதாசீனம் செய்தால் அது சர்வ தேசிய புரட்சிகர இயக்கத்துக்குத் தீங்காகும். முதலாளித்துவ சமுதாயத்தைத் தூக்கி எறிய முயலும் எந்தக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதைப் பகிரங்கமாகச் செய்ய முடியாது என்பது முதலாவது படிப் பினையாகும். ஆளும் வர்க்கம் அதனை அனுமதிக்க மாட்டாது. ஆகவே முதலாளித்துவ சமுதாயத்தில் செயல்படும் எந்தக் கம்யூ னிஸ்ட் கட்சியும் அடிப்படையில் இரகசியமானதாகவும் தலைமறை வானதாகவும் இருக்க வேண்டும் என்பது ஒரு நிச்சயமான விதி யாகும். இக்கட்சி அதன் வேலைகள் அனைத்தையும் பகிரங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாகச் செய்யக் கூடாது; அதன் தலைவர்களையும் ஊழியர்களை யும் எதிரிகளால் தாக்கப்படுவதற்கு அம்பலப்படுத்தக்கூடாது. இது ஒரு அடிப்படைக் கோட்பாடு. சோசலிசத்துக்கு சமாதான மான பாராளுமன்றப் பாதை என்ற திரிபுவாதப் பிரமையை நிரா கரித்தவர்கள் தான் இதனை அமுல் படுத்த முடியும். கட்சி எந்த வித பகிரங்க வேலையிலும் ஈடுபடக்கூடாது என்று இது அர்த்த மாகாது. நிலவும் நிலைமைக்கு ஏற்ப அது ஒரு பத்திரிகையை வெளியிடலாம் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடலாம். ஆனால் அது இரகசிய வேலைக்கு-தலைமறைவு வேலைக்கு கூடுதல் அழுத் தம் கொடுக்க வேண்டும். எதிரி தாக்கலாம் என்ற முதல் அறிகுறி யிலேயே அதன் வெளிப்படையான தலைவர்களையும் ஊழியர் களையும் வாபஸ் பெறக்கூடியதாக அது எப்பொழுதும் இருக்க வேண்டும் வெளிப்படையாக செயல்பட்டு, பொலிசுக்கு அறிவித்தல் கொடுத்து புரட்சி நடத்தலாம் என்று நினைப்பது கேலிக்கிட மானது. முதலாளித்துவத்தின் கீழ் நாம் பெறும் பூர்ஷ்வா ஜன நாயக சுதந்திரம் அனைத்தும் புரட்சிவாதிகளை வீழ்த்துவதற் கான பொறி என்பதை நாம் உணர வேண்டும். புரட்சிவாதிகளின் இயக்கங்களைக் கண்காணிப்பதற்காகவே வெளிப்படையாகச் செயல்படும்படி அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஒரு ஒலி பெருக்கியைப் பாவிக்க எமக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என் றால் பொலிஸ் நாம் பேசுவதைப் பதிவு செய்யலாம் என்பதா லேயே; அதுபோலவே பத்திரிகைகளும். இந்தோனேசியாவிலான எதிர்ப்புரட்சி என்ற சோக நிகழ்ச்சியிலிருந்து நாம் இந்த வேதனையான படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

# 11. கொந்தளிப்பான அறுபதாம் ஆண்டுகள்

1969-ம் ஆண்டு டிசம்பர் 4-ம் திகதி சிம்மாசனப் பிரசங்கத்தின் போது அளிக்கப்பட்ட வாக்களிப்பில் கூட்டரசாங்கம் ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. அரசாங்கம் ராஜினாமா செய்தது. உடனடியாகத் தேர்தலை நடத்த உத்தரவிடப்பட்டது. 1965 தேர்தலில் அறுதியான வெற்றியை யாரும் பெறவில்லை. எந்தத் தனியொரு கட்சியும் பூரண பெரும்பான்மையைப் பெற வில்லை. யூ.என்.பி. தனித்த பெரும்பான்மைக் கட்சியாக வெற்றி பெற்றது. யூ.என்.பி. சிறீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுமே சமஷ்டிக் கட்சியை தம் பக்கம் இழுக்க முயற்சித்தன. சமஷ்டிக் கட்சியின் உதவியுடன் அவற்றில் ஒன்று அரசாங்கத்தை அமைக்க முடியும். சிறீலங்கா சுதந்திரக் கட்சி பின்னர் யூ.என்.பி. சமஷ்டிக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததைக் கடுமையாகக் கண்டித்தபோதும் அது அப்பொழுது சமஷ்டிக் கட்சியுடன் உடன் பாடு காணப் பெரிதும் முயற்சித்தது. ஆனால் அதனால் வெற்றி பெற முடியவில்லை. டட்லி சேனநாயக்காவுக்கும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்றின் அடிப் படையில் யூ. என். பி. கூறப்படும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தது. பிலிப் குணவர்த்தனாவும் டபிள்யூ. தகநாயக்காவும் அதில் சேர்ந்து கொண்டனர். அத்துடன் யூ.என்.பி. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரான செல்வந்த பெருந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோட்டச் சொந்தக்காரனான தொண்டமானையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டது.

தேர்தலில் நிராகரிக்கப்பட்ட கூட்டணிக் கட்சிகள் மிகவும் அருவருப்பான வகுப்புவாதப் பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்தன. இந்தப் பிரச்சாரத்தில் தமிழ் மக்களின் உணவு முறைகள் பற்றி கீழ்த்தரமான அவதூறுகள் பொழியப்பட்டன. இதுதான் ''மசால வடை'' மார்க்கம் பரவிய காலம். லங்கா சம சமாஜக் கட்சியும் கெனமன் திரிபுவாதக் கும்பலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் போட்டி போட்டுக் கொண்டு வகுப்புவாதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. நவீன திரிபுவாதிகள் வகுப்புவாதிகளாகச் சீரழிந்தமை அவர்கள் மார்க்சிய — லெனினியத்துக்கு எவ்வளவு துரோகம் செய்தார்கள் என்பதைக் காட்டியது.

இந்தக் காலத்தில்தான் மார்க்சிய — லெனினியவாதிகளுக்கும் நவீன திரிபுவாதிகளுக்கும் இடையிலான தத்துவார்த்த மோதல் உச்சக்கட்டத்தை அடைந்தது. நான் நாடு பூராவிலும் பல கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்டேன். புதிய மார்க்சிய — லெனினியக் கட்சி சிங்களத்தில் கம்கறுவா என்ற வாரப் பத்திரிகையையும் வெளியிட்டு மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்து நவீன திரிபுவாதத்தின் நச்சுக் கருத்துக்களை அம்பலப்படுத்தியது. வெகுஜனங்களின் மார்க்சிய — லெனினியக் கல்வி உச்சக்கட்டத்தில் நடைபெற்றது. வெகுஜன முன்னணியில் நாம் இரண்டு பகுதிகளில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் கண்டோம். ஒன்று பெருந்தோட்டப் பகுதி. அதில் நாம் செங்கொடிச் சங்கம் என்று அழைக்கப்படும் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தை நாட்டிலுள்ள மிகவும் தீவிர மான தொழிற்சங்கமாக வளர்த்தெடுத்தோம். இரண்டாவதாக வடக்கில் நாம் சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான இயக்கத்தை புதிய கட்டத்துக்கு வளர்த்தோம். நாம் சி.டி.யு.எப். என்ற இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தையும் நாட்டிலுள்ள மிகவும் பலம் வாய்ந்த தொழிற் சங்க சம்மேளன மாக விருத்தி செய்தோம். நாம் இவைப் பற்றித் தனித்தனியாகப் பின்னர் பேசுவோம்.

1966-ன் ஆரம்ப காலத்தில் தமிழ் மொழியின் நியாயமான பாவிப்பு மசோதாக்களின் சட்ட விதிகளை நிறைவேற்ற டட்லி சேனநாயக்கா முயற்சித்தார். எதிர் கட்சிகள் இதனைக் கடுமை யாக எதிர்த்து 1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி வகுப்பு வாத வேலை நிறுத்தம் ஒன்றுக்கு அறைகூவல் விடுத்தன.



என்.சண்முகதாசன், அவரது துணைவியார் மற்றும் மகள் ஆகியோர் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான தோழர் கெங் - ஷாங் மற்றும் அவரது துணை வியாரால் பீகிங் விமான நிலையத்தில் வரவேற்கப்படுகின்ற னர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி திரிபுவாதக் கும்பல் ஆகியோரின் ஆதரவாளர்கள் விஜய மகாதேவி பூங்காவில் ஒன்று கூடி புதிய சட்ட விதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக பாராளுமன்றத்துக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் செல்ல முயற்சித்தார்கள். இந்த ஊர்வலம் கொற்றாப் பட்டி சந்தியில் நிறுத்தப்பட்டது. இதில் பொலிசார் சுட்டதில் புத்தமத குரு ஒருவர் கொல்லப்பட்டார், இதைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த வகுப்புவாத வேலை நிறுத்தத்தில் தவறாக கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அரசாங்கத்தாலும் அரச கூட்டுஸ்தாபனங்களாலும் பழிவாங்கப்பட்டனர்.

டட்லி சேனநாயக, சமஷ்டிக் கட்சியுடன் தான் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின்படி மாவட்டங்களுக்கு ஓரளவு சுயாட்சியை வழங்குமுகமாக மாவட்ட சபை மசோதாவை முன்வைத்தார். இது ஏறக்குறைய முந்திய பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஒத்தது. ஆனால் வரலாறு மீண்டும் திரும்பியது. 1958-ல் பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை யூ.என்.பி. எதிர்த்தது போலவே எதிர்த்தரப்பில் இருந்த கூட்டணிக் கட்சிகள் மாவட்டங்கள் மசோதாவுக்கு எதிராக நாடு முழுவதிலும் கூச்சல் போட்டன. யூ.என்.பி உறுப்பினர்களும் கிளர்ச்சி செய்து அதனை எதிர்த்தார்கள். டட்லி மசோதாவைக் கைவிட வேண்டி ஏற்பட்டது, அமைச்சரவையில் இருந்த சமஷ்டிக் கட்சிப் பிரதிநிதிகள் ராஜினாமாச் செய்தார்கள். தேசிய அரசாங்கம் என்ற மாயை மறைந்தது.

இதுதவிர, 1965-1970 டட்லி சேனநாயக அரசாங்கத்தின் போது பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாகியது. உலக வங்கியின் தூண்டுதலின் பேரில் ரூபா 20 சதவீதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது, இந்த மதிப்பிறக்க விகிதத்தினால் உலக வங்கி திருப்தி அடையாததைக் கண்டு வெளிநாட்டுச் செலாவணி உரித்துப் பத்திரத் திட்டம் என்ற பெயரில் இன்னொரு மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. அரிசிப் பங்கீடு அரைவாசியாகக் குறைக்கப்பட்டது. ஆனால் முதலாவது படி அரிசி இலவசமாகக் கொடுக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்தது. வேலையின்மை பெருகியது. 1967-ல் தனியார் துறையிலும் 1968-ல் அரசாங்கத் துறையிலும் பொதுவேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. உலகவங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களிட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிருந்து பெரிதும் கடன் பெற்றதன்மூலம் அரசாங்கம் நாட்டின் பொருளாதார இடர்களை மேலும் அதிகமாக்கியது. அது முந்திய எந்த அரசாங்கத்திலும் பார்க்கக் கூடுதலாகக் கடன் பெற்றது. இவ்வாறு அது வெளிநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு இலங்கையைக் கட்டிப் போட்டிருந்த சங்கிலிகளை மேலும் இறுக்கமாக்கியது.

## சாதிக்கு எதிரான போராட்டம்

இலங்கையின் வடக்கிலுள்ள இந்து சமுதாயத்தின் சாபக்கேடாக சாதி முறையும் தீண்டாமையும் எப்பொழுதும் இருந்து வருகின்றன. இது இந்தியாவிலிருந்து அவர்கள் பெற்ற பாரம்பரியச் சொத்து. சாதி அமைப்பு என்பது இலங்கை முழுவதிலும் சிங்களவர் தமிழர் இரு சாரார் மத்தியிலும் இருந்து வருகின்றது. ஆனால் வடக்கில் உள்ள தமிழர்களைப் பொறுத்தவரையில் இதனுடன் தீண்டாமை என்ற நாசமும் சேர்ந்திருக்கிறது. பள்ளர், நளவர், பறையர் போன்ற சில சாதிகள் தீண்டத்தகாத சாதிகளாகக் கருதப்படுகின்றன. அவர்கள் மனிதர்களாகவே கருதப்படவில்லை. சமுதாயத்தின் கீழ்த்தட்டில் அவர்கள் கிடந்து நசிகின்றார்கள். அவர்கள் கூறப்படும் உயர் சாதியினரின் வீடுகளுக்குள் செல்ல முடியாது. அவர்களுடன் ஒன்றாகக் கலந்து பழக முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களுடன் திருமணம் செய்து கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் கிணறுகளிலிருந்து, பொது கிணறுகளிலிருந்து கூடத் தண்ணீர் அள்ள முடியாது. அவர்கள் தேநீர்க் கடைகளுக்குள் செல்ல முடியாது. ஒரே கிண்ணத்தில் தேநீர் அருந்த முடியாது. மிகவும் மோசமானது என்னவென்றால் கடவுளைக் கும்பிடக் கூட கோயிலுக்குள் அவர்கள் செல்ல முடியாது. தீண்டாமை என்பது மனிதன் மனிதனுக்குச் செய்யும் மிக மோசமான கொடுமை என்று உண்மையில் கூற முடியும்.

ஒரு விஷயத்தில் வடக்கு இலங்கையின் சாதிமுறை இந்திய சாதிமுறையிலும் பார்க்க வித்தியாசமானது. இந்தியாவில் தீண்டத்தகாத மக்கள் மிகப் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். பிராமணர் உச்சியில் இருக்கும் குறுகிச் செல்லும் அமைப்பின் அடித்தளமாக அவர்கள் அமைகின்றார்கள். அது ஒரு முக்கோணத்தைப் போன்றது. பிராமணர் உச்சியிலும் தீண்டத்தகாதவர்கள் கீழேயும் இருக்கின்றார்கள். வடக்கு இலங்கையில் நிலைமை இதற்கு எதிர்மாறானது. கூறப்படும் உயர் சாதியினர் பெரும்பான்மையினராக இருக்கின்றார்கள். கூறப்படும் தீண்டத்தகாத



சாதியினர் மக்கள் தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினராகவே இருக்கின்றனர். இதனால் கூறப்படும் தீண்டத்தகாத சாதியினரை கூறப்படும் உயர் சாதியினர் சுரண்டுவது கடுமையாகிவுள்ளது. கூறப்படும் தீண்டத்தகாதவர்கள் பல கிளர்ச்சிகளைச் செய்தார்கள். குறிப்பாக பொது மயானத்தில் உடலைத் தகனம் செய்யப் போராட்டம் நடத்தினார்கள் ஆனால் இவை கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டன சாதி அடக்குமுறைகள் சிலவற்றின் காட்டுமிராண்டித்தனத்தை உண்மையில் நம்பமுடியாது. கிளர்ச்சி செய்யத் துணிந்த தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் உடனே தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களுடைய கிணறுகளில் நஞ்சு ஊற்றப்பட்டது. காணிகளிலிருந்து அவர்கள் துரத்தி அடிக்கப்பட்டார்கள். (தீண்டத்தகாதவர்களுக்கு சொந்தமாகக் காணி இருக்கவில்லை) மார்புக்கு மேல் மறைக்கத் துணிந்த தாழ்த்தப்பட்ட பெண்களின் சட்டைகள் கத்தியால் கிழித்தெறியப்பட்டன. ஆண்கள் தோளில் சால்வை போட அனுமதிக்கப்படவில்லை. சால்வை போட்டால் உயர் சாதியினரைக் கண்டதும் அவர்கள் அதனை அகற்ற வேண்டும்.

இடதுசாரிக் கட்சிகளின் திரிபுவாதம் சீர்திருத்தவாதம் ஆகியவற்றால் தான் இந்த மிருகத்தனமான சமூக ஒழுங்கிற்கு எதிரான போராட்டம் சரியாக நடத்தப் படவில்லை. கூறப்படும் உயர் சாதியினர் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருக்கின்றபடியால் எந்தப் பாராளுமன்றக் கட்சியும் அவர்களைப் புண்படுத்த விரும்பவில்லை, கூறப்படும் கீழ்ச்சாதிகள் வடக்கில் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியாக இருந்த போதிலும் அவர்கள் எந்தத் தேர்தல் தொகுதியிலும் பெரும்பான்மையைப் பெற முடியாத விதத்தில் தேர்தல் தொகுதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல் தொகுதி நிர்ணயிப்புக் கமிஷனினதும் அதிகார வர்க்கத்தினதும் உறுப்பினர்கள் அனைவரும் உயர் சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால் இதைச் செய்ய முடிந்தது, இதன் விளைவாக கூறப்படும் உயர்சாதியினரின் அரசியல் கட்சியால் நியமிக்கப்பட்டால் ஒழிய தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்த எவரும் தேர்தலில் வெல்ல முடியாத நிலைமை இருந்தது, 1977ல் தான் இப்படி ஒருவர் வென்றார்.

இந்த நிலைமை எமது மார்க்சிய-லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்துடன் மாறியது, எமது கட்சி பாராளுமன்றத்தின் மூலம் சோசலிசத்தை அடையலாம் என்ற கருத்தை நிராகரித்தது. பாராளுமன்ற திரிபுவாதம் என்ற சகதியில் அதன் தலை புதைந்திருக்கும் வரை ஒரு கட்சி எந்த வெகுஜனப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டத்துக்கும் தலைமைதாங்க முடியாது என்பதை எவரும் இலேசாகப் புரிந்து கொள்வார்கள், பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் என்ற திரிபுவாதத் தளையிலிருந்து விடுபட்ட நாம் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களுக்குத் துணிவான தலைமை கொடுக்க முடிந்தது. 1966-ல் இப் போராட்டங்கள் வெடித்தன.

1966-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி சாதி அடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜன இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கன்ரகத்திலிருந்து யாழ்ப் பாணம் முற்றவெளிக்கு வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஒழுங்குபடுத்தியது. முற்றவெளியில் இந்த இயக்கத்தின் நோக்கங் களுக்கு ஆதரவாக ஒரு பொதுக் கூட்டம் நடைபெற இருந்தது. பொலிசார் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினார்கள். பொலிசார் எப்பொழுதும் தாழ்த்தப் பட்ட மக்களின் எந்த இயக்கத்தையும் நசுக்கினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இதற்குக் காரணம் பொலிசாரும் உயர் சாதியினர் என்பதே. ஆனால் ஊர்வலக் காரர்கள் கலைய மறுத்தார்கள். இறுதியில் ஒரு வரிசையில் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல பொலிசார் அவர்களை அனுமதிக்க வேண்டியதாயிற்று. முற்றவெளியில் மிகுதியும் வெற்றி கரமான கூட்டம் ஒன்றை நாம் நடத்தினோம். இக்கூட்டத்தில்தான் புகழ்பெற்ற அமெரிக்க நீக்ரோ பாடகர் போல் போப்சனுக்கு அவருடைய தமையனார் கூறிய புத்திமதியை நான் மேற்கோள் காட்டினேன். "ஒருபோதும் அடிபணிந்துபோகாதே. எதிர்த்துநின்று அவர்கள் அடிப்பதிலும் பார்க்க கடுமையாக அடி. அவர்கள் படிப் பினையைப் பெற்றதும் விஷயங்கள் வித்தியாசமாக இருக்கும்."

இதுதான் சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்தின் ஆரம்பம். இந்தப் போராட்டத்தின் போக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து நூற்றுக்கணக்கான போராளிகள் தோன்றினார்கள். சத்தியாக்கிரகம், அகிம்சையின் நாட்கள் மலையேறிவிட்டன. புதிய உணர்வு கொண்ட இந்தப் போராளிகள் அடிக்குஅடி கொடுத்தார்கள். இந்த இயக்கம் பிரதானமாக ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம், பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளுதல் ஆகியவற்றைச் சுற்றி நடைபெற்றது. ஆனால் இன்னும் வேறு வடிவங்களிலும் இப் போராட்டம் நடைபெற்றது. சில போராட்டங்கள் வன்முறையான வடிவத்தில் நடைபெற்றன.

இந்தப் போராட்டத்தில் பொலிசார், நீதிமன்றங்கள், அதிகாரிகள் ஆகிய முழு அரசு இயந்திரமும் கூறப்படும் உயர்



சாதியினர் பக்கத்தில் இருந்தன. அத்துடன் மாஜி பேராசிரியரும் மாஜி பாராளுமன்ற உறுப்பினரும் மாஜி மந்திரியுமான சி. சுந்தரலிங்கம் போன்ற தலைவர்கள் எனப்படுவோர் கூறப் படும் உயர் சாதியினரின் பக்கத்தில் நின்று, அவர்களுடைய அதி உயர் ஆலோசகர்களாகப் பணிபுரிந்தார்கள்.

சங்கங்களைக் கிராமத்தில் கூறப்படும் உயர் சாதியினர் ஒருவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரின் மயான ஊர்வலத்தின் பாதையை மறித்து அந்த ஊர்வலத்தின் மீது துப்பாக்கியால் சுட்டார். தாழ்த்தப்பட்டவர் ஒருவர் அதற்குப் பலியானார். இலேசாக இனங்கண்டு கொள்ளக்கூடிய சுட்டவரை கைது செய்ய வேண்டும். ஆனால் அவரை நீதிபதி 250 ரூபா பிணையில் விடுதலை செய்தார். முன்னர் கேள்விப்பட்டிராத விஷயம் இது நீதிபதியும் வழக்குப் போட்ட பொலிஸ் அதிகாரியும் உயர் சாதியினர். மக்களின் அபிப்பிராயத்துக்கு அஞ்சி அவரை மீண்டும் கைது செய்தார்கள். ஆனால் பொலிசார் வழக்கைச் சரி யாக நடத்தாதபடியால் நீதிபதி அந்தக் குற்றவாளியை விடுதலை செய்தார். அதே நாள் மாலை அவர் விடுதலை அடைந்த வீறாப்புடன் சந்தைக்கு வந்தபோது தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் அவரைச் சுட்டுக் கொன்றார். துப்பாக்கி கை மாறி மறைந்து விட்டது. பின்னர் துப்பாக்கியையும் கண்டுபிடிக்க வில்லை யார் சுட்டது என்பதையும் கண்டுபிடிக்கவில்லை. இது தான் சாதிப் போராட்டத்தின் இயல்பு. சில வேளை வன்முறை யானது. சில வேளை வன்முறையற்றது. ஆனால் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் கன்னத்தில் அறை விழுந்தபோது மறுகன்னத்தைக் கொடுக்காமல் அடிக்கு அடி கொடுக்கக் கற்றுக் கொண்டார்கள். இந்த மாற்றத்திற்குக் காரணம் எமது கட்சி அளித்த புரட்சிகரத் தலைமையேயாகும்.

அதே வேளையில் கட்சி இப்போராட்டத்தை ஆதரிக்க கூறப்படும் உயர்சாதி மக்களின் முற்போக்கான பகுதிகளை அணிதிரட்டியது. எமது கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் தலைமைத் தோழர்களில் சிலர் உயர் சாதிகளைச் சேர்ந்தவர்கள். இந்தப் போராட்டத்துக்கு அவர்கள் அளித்த தலைமையினால் இந்த இயக்கத்தின் நோக்கங்கள் சகல பகுதி மக்கள் மத்தியிலும் பரவலாயின. சிங்கள மக்கள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளை அறிமுகம் செய்ய கட்சி பெரும் நடவடிக்கை எடுத்தது. பல தேசிய தின நாளிதழ்கள் இப்போராட்டத்தைப் பற்றிய பல செய்திகளை வெளியிட்டன. பீக்கிங் வானொலி இதற்கு அதன் ஆதரவைத் தெரிவித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த இயக்கம் சில வெற்றிகளைப் பெற்றது. பல ஆலயங்கள் திறக்கப்பட்டன. பல இடங்களில் தேநீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி கிடைத்தது. மாவிட்டபுரடர் கோயிலுக்குள் பிரவேசிப்பதற்கான போராட்டம் இவற்றில் முக்கிய மானது.யாழ்ப்பாணத்திலுள்ள இந்த பிரசித்திபெற்ற கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதைத் தடுக்க உயர் சாதியினர் அழுங்குப் பிடியாக நின்றார்கள். அவர்கள் இந்த ஆலயத்தில் உள் மண்டபத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கம்பிகள் போட்டு உயர் சாதியினரையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் தடுத்து நிறுத்தும் அளவுக்குச் சென்றார்கள். கொஞ்சக் காலம் அவர்கள் ஆலயத்தை மூடியிருந்தார்கள் ஆனால் உயர் வருமானம் பெறும் இந்த ஆலயத்தை அவர்கள் நீண்ட காலம் பூட்டிவைக்க முடியவில்லை. இறுதியில் மக்களின் நெருக்கத்தினாலும் நேரடிப் போராட்டத் தினாலும் இந்த ஆலயத்தின் கதவுகள் திறக்கப்பட்டன.

தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதர வாகப் பல வடிவக் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன என் பதைக் குறிப்பிட வேண்டும். அற்புதமான பாடல்கள் பல தோன்றின. நூற்றுக்கு மேலான தடவை அரங்கேற்றப்பட்ட கந்தன் கருணை என்ற சிறப்பான நாடகம் ஒன்றை எமது தோழர்கள் தயாரித்தளித்தார்கள்.

இந்து மதத்தின்படி கந்தப்பெருமானுக்கு இரண்டு மனைவிகள். இரண்டாவது மனைவி வள்ளி உயர் சாதியைச் சேர்ந்தவர் அல்ல. குறத்தி. கதிர்காமக் கோயில் வள்ளி நினைவால் அமைக்கப் பட்டது நாடகம் கலகமுனி நாரதர் கந்தப்பெருமானுக்கு முறை யிடுவதுடன் ஆரம்பிக்கிறது கந்தனின் இரண்டாவது மனைவி யைப் போன்ற சாதியினர் வடக்கு இலங்கையில் இம்சிக்கப்படுவ தாக நாரதர் முறையிடுகின்றார். கோபங்கொண்ட கந்தன் இதற்குத் தண்டனை வழங்க பூமிக்கு வருகின்றார். இந்த மேடையில் ஒரு சிறந்த அரசியல் நையாண்டியை நான் கேட் டேன். கந்தனின் முதல் மனைவியான உயர் சாதியைச் சேர்ந்த தெய்வானை கந்தனிடம் கூறுகின்றார்: ''போகாதீங்கோ, பிரபுவே. உங்களைப் பொலிஸ் ஸ்டேஷனில் அடைத்து விடுவார்கள்.''

மிகுதிக் கதையில் கந்தன் யாழ்ப்பாணம் சென்று அங்கு நிலவும் கொடுமையான சாதி முறைமையை பார்க்கின்றார். அவரையே தாழ்த்தப்பட்டவன என்று கூறும்போது அவர் கோபம் அடைகின்றார். கந்தன் என்ற அவருடைய பெயரை பல தாழ்த் தப்பட்டவர்களின் பெயரை ஒத்ததாக இருக்கின்றது. கந்தன் ஆலயம் ஒன்றுக்குள் அவரைச் செல்ல அனுமதிக்கவில்லை. ஆத்திரம் கொண்ட கந்தன் உயர் சாதியினர் மீது எறிய தனது வேலை உயர்த்துகின்றார். நாரதர் தலையிட்டு, ''வேலை மக்களிடம் கொடுங்கள். அவர்கள் பாவிக்கட்டும்'' என்று கூறு கின்றார். இந்த மாவோயிச அரசியல் தத்துவத்துடன் நாடகம் முடிவடைகின்றது.



இயல்பாகவே கூறப்படும் உயர்சாதியினர் இந்த நாடகத்தை எதிர்த்தார்கள். கந்தனின் பாத்திரத்தில் நடித்தவர் இரும்பு வேலைச் செய்ய வேண்டியிருந்தது.இந்த நாடகம் பெரும் வெற்றி ஆகியது.கொழும்பில் கூட அது பல தடவை அரங்கேற்றப்பட்டது. புரட்சிகரக் கலை எப்படி புரட்சிகர இயக்கத்தை முன்தள்ளிவிட முடியும் என்பதற்கு அது நல்லதோர் உதாரணம் ஆகும். புரட்சிகர நடைமுறையின்றி புரட்சிகரக் கலை பிறக்காது என் பதையும் அது தெளிவாக்கியது. நடைமுறைதான் பிரதானமானது. ஆனால் புரட்சிகர நடைமுறையிலிருந்து தோன்றும் புரட்சிகரக் கலை புரட்சிகர இயக்கத்தை மேலும் முன்தள்ளிவிட உதவு கின்றது. சூன்யத்தில் நாம் புரட்சிகரக் கலையை உருவாக்க முடியாது.புரட்சிகர இயக்கத்தின் அங்கமாக அது உருவாகின்றது.

சாதி அமைப்பு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான எமது கட்சியின் இயக்கம் அதன் மாபெரும் சாதனைகளில் ஒன்றாகும். அதனை ஒட்டி நாம் என்றும் பெருமைப்படுவோம். அது வடக்கு இலங்கையில் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப மார்க்சிய — லெனினியத்தைப் பிரயோகம் செய்ததாகும். இதனால் ஆயிரக் கணக்கானோர் புரட்சிப் பாதைக்கு வந்தார்கள். சகல பகுதி மக்கள் மத்தியிலும் (வடக்கிலும் தெற்கிலும்) இதனால் கட்சியின் செல்வாக்கு பரவியது. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட சாதியில் கணிசமான தொகையினர் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந் தவர்கள் என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய விஷயமாகும். உழவர்களும் உழைப்பாளிகளும் அவர்கள்தான். அவர்கள் உடல் ரீதியிலும் பலமானவர்கள். இதனால்தான் யாழ்ப்பாணத்தில் எமது கட்சி ஒழுங்குபடுத்திய கூட்டத்தை எவராலும் குழப்ப முடிய வில்லை. இந்த நம்பிக்கையில்தான் நான் பின்னர் 1975-ல் சுன்னாகம் சந்தைக்கு முன்னால் பொது மேடையில் மாணிப்பாள் சமஷ்டிக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கத்துடன் பகிரங்க விவாதம் நடத்தினேன். சமஷ்டிக் கட்சி ஆதரவாளர்கள் தொகையில் கூடுதலானவர். ஆனால், எம்மை யாரும் தொட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட முடியாது. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பலர் எம்முடன் இருந்ததுதான் எமக்கு கிடைத்த பாதுகாப்பாகும்.

சாதி அமைப்பு என்பது நிலப்பிரபுத்துவத்தின் ஒரு மிச்ச சொச்சமாகும். எமது நாட்டில் முதலாளித்துவம் ஒழுங்காக இல்லாமல் ஏற்ற இறக்கமாக வளர்ந்துள்ளபடியால்தான் சாதி அமைப்பு இங்கே நின்று பிடிக்கின்றது. ஆளும் வர்க்கத்தின் அரசு இயந்திரம் அது அழியாமல் இருப்பதற்குத் துணை புரிகின்றது. இந்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியபோது நாம் முழு அரசு இயந்திரத்துடனும் உள்ளூர்ப் பிற்போக்குவாதிகளுடனும் மோதினோம். எமது போராட்டம் பிற்போக்கு ஏகாதிபத்திய சார்பு சக்திகளுக்கு எதிரான தேசிய போராட்டத்தின் ஒரு பகுதியாகும். இதனை முற்போக்கு இயக்கத்தின் பிற பகுதிகள் பார்க்கவோ புரிந்து கொள்ளவோ மறுத்தன. வேறு எந்த அரசியல் கட்சியும் எமக்கு ஆதரவு தரவில்லை.

## செங்கொடிச் சங்கம்

இந்தக் காலத்தில் கட்சியின் இன்னொரு பெரிய சாதனை மலை நாட்டில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் செங்கொடிச் சங்கத்தைக் கட்டியமைத்ததாகும். 1949 முதல் பெயரளவில் ஒரு தோட்டத் தொழிலாளர் சங்கம் எம்மிடம் இருந்து வந்தது. ஆனால் அது சிங்களப் பெரும்பான்மையிலிருந்து எம்மைப் பிரித்துவிடும் என்று அஞ்சிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திரிபுவாத பாராளுமன்றக் கருத்துக் காரணமாக தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் பகிரங்கமாகத் தலைமை தாங்குவதற்கு கட்சித் தயங்கியது. நான் கட்சியில் சேர்ந்த ஆரம்ப நாட்கள் முதல் புரட்சிகர இயக்கத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்று கருதி வந்தேன். தோட்டத் தொழிலாளர்கள் தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பெரிய பகுதி ஆவர். அவர்கள் மோசமான நிலைமைகளில் உழைத்தார்கள். நெருக்கடியான 'லயன்' வீடுகளில் வசித்தார்கள். அவர்களுக்கு வாஸ்தவத்தில் மருத்துவ வசதிகளோ கல்வி வசதிகளோ எதுவும் இருக்கவில்லை. என்னுடைய தந்தையார் உட்பட என்னுடைய உறவினர் பலர் பெருந்தோட்டங்களில் பிரதம லிகிதர்களாகவும், ரீமேக்கர்களாகவும், ரப்பர் மேக்கர்களாகவும் பெருந்தோட்ட உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய படியால் அவை அனைத்தையும் நான் நேரடியாக அறிவேன். எனது



விடுதலைக் காலம் அனைத்தையும் களு கங்கைக்கரையிலுள்ள பெருந்தோட்டம் ஒன்றில் கழித்தேன். தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் மிகுதியும் சுரண்டப்படும் பகுதி என்பதை நான் அறிவேன். அத்துடன் தேசிய சிறுபான்மை என்ற முறையிலும் அவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப் பட்டது.

இந்தத் தொழிலாளர்களை புரட்சிகரத் தலைமையின் கீழ் சரியாக ஸ்தாபனப்படுத்த வேண்டும் என்பது எப்பொழுதும் எனது இலட்சியமாக இருந்தது. ஆனால் எமது கட்சி திரிபுவாதப் பாதையில் செல்லும் கட்சியாக இருக்கும் வரை இதனைச் செய்ய முடியவில்லை. திரிபுவாதக்கட்சியின் மத்தியக் கமிட்டிக்குள்ளே நான் நடத்திய வாதங்கள் எனது நினைவுக்கு வருகின்றன. எமது கட்சியில் நாலு தமிழ்ப்பட்டதாரிகள் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாக இருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய பாடசாலைகள் சிலவற்றில் ஆசிரியர்களாக இருந்த இவர்கள் யாழ்ப்பாணத்தில் கட்சி வேலைக்குப் பொறுப்பாக இருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் கட்சியைக் கட்டி அமைப்பதென்றால் சமுதாயத்தின் மிகுதியும் சுரண்டப்படும் பகுதியினரான தாழ்த்தப்பட்ட சாதியினரை நாம் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டேன். ஆனால் எமது தோழர்கள் உயர்சாதியினரைப் புண்படுத்தி விடுவார்கள் என்று அஞ்சினால் இந்த ஆசிரியத் தோழர்கள் மலை நாட்டுக்கு மாற்றம் பெற்று தமிழ்த் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் வேலை செய்ய வேண்டும் என்று நான் கூறினேன். அவர்கள் இரண்டில் எதனையும் செய்யவில்லை.

நாம் திரிபுரவாதத்திலிருந்து விலகி மார்க்சிய - லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்த போதுதான் நாம் விடுதலையாகச் செயல்பட முடிந்தது. தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர வேலை செய்வதற்கு நாம் முன்னுரிமை கொடுத்தோம். திரிபுவாதிகளிடமிருந்து நாம் பிரிந்தபோது பெரும்பாலான செங்கொடிச் சங்க ஊழியர்களும் உறுப்பினர்களும் எம்முடன் இருந்தார்கள். இதனை அடிப்படையாக கொண்டு நாம் இச்சங்கத்தை விரிவாக்கத் தொடங்கினோம். தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் போதனைக்கு நாம் முதலிடம் கொடுத்தோம். சிறப்பாக மாசேதுங் சிந்தனையை அவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தோம். இந்த வேலைக்குப் பொறுப்பாக ஒரு தோழரை நியமித்தோம். விரைவில் பல தோட்டங்களில் மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை வகுப்புகள் நடத்தப்பட்டன. பள்ளிக்கல்வி அற்ற தோட்டத் தொழிலாளர்கள் மாசேதுங் சிந்தனையை ஆர்வத்துடன் கற்கத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடங்கினார்கள். அதனுடன் சேர்த்து சிறப்பான தொழிற் சங்க வேலையும் செய்யப்பட்டது.

செங்கொடிசங்கத்தின் வளர்ச்சிஅதிசயிக்கத்தக்கதாக இருந்தது. ஒன்றின் பின் ஒன்றாக பல தோட்டங்களின் தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தின் புரட்சிப் பதாகையின் கீழ் அணி திரண்டார்கள். மாசேதுங் சிந்தனை காட்டுத் தீ போலப் பரவியது. மாவோ படங்கள் லயன் வீடுகளை அலங்கரித்தன. ஒவ்வொரு ஊர்வலத்திலும் மாவோ படங்கள் முன்னணியில் கொண்டு செல்லப்பட்டன. தொழிலாளர்கள் மாசேதுங் சிந்தனையைப் பிரதிபலிக்கும் அற்புதமான புரட்சிப் பாடல்களை இயற்றினார்கள். கல்வியறிவற்ற இந்த தொழிலாளர்களின் பாடல்கள் வடிவத்தைப் பொறுத்தவரை உயர்ந்த தரமுடையவை என்று கூற முடியாவிட்டாலும் அவற்றின் உள்ளடக்கம் மிகவும் சிறப்பாக அமைந்தது. சினிமா மெட்டுகளில் அவர்கள் இந்தப் பாட்டுகளை எழுதினார்கள். தொழிலாளர்கள் மாசேதுங் சிந்தனையைக் கிரகித்துக் கொண்டார்கள் என்பதையும், எளிய மொழியில் அதனை அவர்களால் வெளிப்படுத்த முடிந்தது என்பதையும் இப்பாடல்கள் காட்டின. பின் தொழிலாளர் கூட்டங்களில் புரட்சிப் பாடல்களைப் பாடும் வழக்கம் ஏற்பட்டது.

அடக்கப்பட்டவர்களிலும் அடக்கப்பட்டவர்களான இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் வடக்கில் தாழ்த்தப்பட்ட மக்களைப்போல மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை சுலபமாகப் புரிந்து கொண்டார்கள். பொலிசார் என்பவர்கள் தோட்டச் சொந்தக்காரரின் காவல் நாய்கள் எனவும், சொந்தக்காரரையும் அவர்களுடைய சொத்துக்களையும் பாதுகாப்பதுதான் பொலிசாரின் கடமை எனவும், ஆகவே தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்குவது அவர்களின் பணி எனவும் சகல கூட்டங்களிலும் நாம் பிரச்சாரம் செய்தோம். தொழிலாளர்கள் தினமும் தோட்டங்களில் காணும் அனுபவங்களுடன் இது ஒத்துப் போனபடியால் அவர்கள் இதனை நன்கு புரிந்து கொண்டார்கள். பொலிசாரை அவர்கள் மிகுதியும் வெறுத்தார்கள். பொலிசார் காவல் நாய்கள் என்ற தத்துவத்தை தொழிலாளர்கள், தமக்கே உரிய முறையில் இலகுவாகப் புரிந்து கொண்டு ''யார் நாய்? பொலிஸ் நாய்'' என்று கூட்டங்களில் கோஷமிட்டார்கள். இது அவ்வளவு அழகற்ற வடிவம் என்ற போதிலும் அதில் கருத்து இருக்கின்றது. இதனை நாம் உருவாக்கவில்லை. ஆனால் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் வந்த பொலிசாரை இது ஆத்திரம் அடையச் செய்தது. பட்டினங்களிலிருந்து பல மைல்



தூரத்தில் நடைபெறும் இக்கூட்டங்களில் ஒரு சில பொலிசாரே கலந்து கொள்ள முடிந்த படியால் பெருந்தொகையான தொழிலாளர்கள் இந்த கோஷங்களை முழங்கியபோது அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆத்திரம் அடைந்த பொலிசார் எம்மீது தீராப் பழி கொண்டிருந்தார்கள்.

இங்கு ஒரு முக்கியமான விஷயம் கவனிக்க வேண்டியுள்ளது. பொலிசாருக்கு எதிராக இந்தக் கோஷங்களை முழங்குவதை ஒட்டி எமது தோழர்கள் சிலரே அவ்வளவு சந்தோஷம் அடையவில்லை. எமது தலைவர்களில் சிலர் தமது அன்றாட வேலையில் அடிக்கடி பொலிஸ் ஸ்டேசனுக்கு செல்ல வேண்டியிருந்தது. அப்பொழுது பொலிசார் அவர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். தொழிலாளர்கள் பொலிசாருடன் போரிட வேண்டும் என்று நாம் விரும்பினால் (இது இறுதியில் கட்டாயம் நடந்தே தீரவேண்டும்) பொலிசாருக்கு அஞ்சாத தன்மையை நாம் தொழிலாளர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். தொழிலாளர்களின் பார்வையில் அவர்களைத் தூக்கி எறிந்து அவர்கள் முதலாளிகளினுடையதும் பிற்போக்கினதும் ஏஜண்டுகள் என்பதை நாம் அம்பலப்படுத்த வேண்டும் எனவும் நான் விளக்கினேன். இவ்வாறுதான் நாம் தொழிலாளர் மத்தியில் பொலிசார் பற்றிய அச்சத்தை நீக்கினோம். இதனால் இக்காலத்தில் தோட்டங்களில் ஏற்பட்ட தொந்தரவுகளின்போது சில இடங்களில் தொழிலாளர்கள் பொலிசாரின் ஆயுதங்களைப் பறித்தனர். சில இடங்களில் பொலிசாரின் ஜீப்புகள் வரமுடியாமல் மதகுகளை உடைத்து விட்டனர்.

பொலிசாரிடமும் இராணுவத்திடமும் இருக்கும் துப்பாக்கிகள் மூலம் முதலாளிகளுக்குக் கிடைக்கும் பாதுகாப்பினால்தான் இத்தகைய சுரண்டல் நடைபெறுகின்றது எனவும் எதிரியின் ஏஜண்டுகளிடம் இருக்கும் இந்த துப்பாக்கிகளைப் பறித்தெடுப்பதன் மூலம்தான் தொழிலாளிவர்க்கம் அதன் விடுதலையைப் பெற முடியும் எனவும் நாம் கூறியபோது தொழிலாளர்கள் அதனைப் புரிந்துக் கொண்டார்கள். நான் ஒரு நாள் எமது ஹட்டன் அலுவலகத்தில் நடந்த தோட்டக் கமிட்டித் தலைவர்களின் கூட்டம் ஒன்றில் இவை அனைத்தையும் தத்துவ ரீதியில் விளங்கப்படுத்தினேன். இக்கூட்டம் நடந்த சில நாட்களுக்குப் பின்னர் ஒரு தொழிலாளி எமது ஹட்டன் அலுவலகத்துக்கு துப்பாக்கி ஒன்றுடன் வந்து சேர்ந்தார். இந்தத் துப்பாக்கி தோட்ட சுப்பிரண்டெண்டுக்கு சொந்தமானது எனவும் எதிரியின் துப்பாக்கியைப் பறித்தெடுக்கும்படி தோழர் தலைவர் கேட்டுக் கொண்டபடியால் தான் அப்படிச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்ததாகவும் எமது தோழர்களிடம் அவர் கூறினார். துப்பாக்கி மறைக்கப்பட்டது. ஆனால் தோட்டத்துரை பீதி அடைந்தார். துப்பாக்கியைக் களவாடியது யார், எந்தப் பக்கத்திலிருந்து சூடு விழும் என்பது அவருக்குத் தெரியாது. பீதி அடைந்த தோட்டத் துரை 35 தலைமைத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தார். பின்னர் இந்தப் பிணக்கு தொழில் கோர்ட்டுக்கு வந்தது. இதற்காக துரை நகரத்துக்கு வந்திருந்தபோது அவர் எமது கிளைத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு துப்பாக்கித் தரப்பட்டால் தான் நீக்கிய தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதாய் கூறினார். தொழிலாளர்களை வினவியபோது அவர்களுக்கே உரித்தான பதிலை அளித்தார்கள். ''சரி துப்பாக்கியைத் திருப்பிக் கொடுங்கள். எங்களுக்குத் தேவையான நேரம் அதைப் பெற்றுக் கொள்ள முடியும்'' அடுத்த நாள் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது. சகல தொழிலாளர்களும் மீண்டும் வேலை பெற்றார்கள்.

எம்மிடமும் பார்க்க பெரிய தொழிற்சங்கங்களோடு அல்லது தொழிலாளர் மத்தியில் செல்வாக்கு உடையதாக இருந்தது திரு. தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகும். காங்கிரசுக்கு எதிராக நாம் கடுமையான போராட்டத்தை நடத்தினோம். அதன் பிற்போக்கான இயல்பையும் முதலாளிக்கு சார்பான மனோபாவத்தையும் அம்பலப்படுத்தினோம். தோட்டச் சொந்தக்காரர்களுக்கு சார்பான காங்கிரசின் நிலைப்பாட்டையும் தொழிலாளர் பொருளாதார அரசியல் கோரிக்கைகளுக்காகப் போராட அது தலைமை தாங்க மறுப்பதையும் அம்பலப்படுத்தி நாம் லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம். பொருளாதாரப் போராட்டங்களில் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கவும் இப்போராட்டங்களில் தொழிலாளர்கள் ஐக்கியப்பட வேண்டும் என்று கோருவதன் மூலமும் தான் நாம் உண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் அதன் தலைவர்களையும் அம்பலப்படுத்தினோம்.

1970-ல் தோட்டத் தொழிலாளர்களின் முப்பெரும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. முதலாவது, ஹட்டன் மேபீல்ட் தோட்டத்தில் நடைபெற்றது. ஐக்கியப்பட்ட செயல்பாட்டின் உதாரணமாக இந்த வேலை நிறுத்தம் அமைந்தது. இத்தோட்டத்தில் ஓராயிரத்து நானூறு (1,400) தொழிலாளர்கள் இருந்தனர். அரைவாசிப் பேர் எமது சங்கத்திலும், மற்ற அரைவாசிப் பேர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலும் இருந்தனர். பொதுவான பொருளாதார கோரிக்கைகளை வைத்து



கூட்டு வேலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று எமது சங்கத்தின் கிளைக் கமிட்டி காங்கிரஸ் கிளைக் கமிட்டிக்கு பிரேரித்தது. அதுவும் இந்தப் பிரேரணையை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டது. இரண்டு கிளைக் கமிட்டிகளும் பின்னர் தமது சங்கங்களிடம் அனுமதி கோரின. நாங்கள் தயக்கமின்றி அனுமதித்து ஆதரித்தோம். பின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களை அவர்கள் அணுகினார்கள். அவர்கள் இக்கட்டான நிலைமையில் இருந்தார்கள். வேலை நிறுத்தங்களை அவர்கள் விரும்பாத போதும் 'இல்லை' என்று மறுத்துச் சொல்ல முடியவில்லை. அப்படிச் செய்தால் அவர்கள் தமது உறுப்பினர்களுக்கு முன்னால் அம்பலப்படுவார்கள். இவ்வாறுதான் செங்கொடிச் சங்கமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் சேர்ந்து நடத்திய முதலாவது வேலை நிறுத்தம் இடம் பெற்றது. இந்த வேலை நிறுத்தம் பூரண வெற்றி பெற்றது. வேலைக்கு யாரும் செல்லவில்லை.

முதலாளிகள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டு வாரங்களின் பின்னர் 14 கருங்காலிகளுக்கு வேலை வழங்க முன்வந்தார்கள் அவர்களுக்கு ஏறக்குறைய 20 ஆயுதப் பொலிசார் பாதுகாப்பளித்தார்கள். மோதல் ஏற்பட்டது. தொழிலாளர்கள் பொலிசாருடன் துணிவுடன் போராடினார்கள். இதில் பெண் தொழிலாளர்கள் முன்னணியில் இருந்தார்கள். அவர்கள் பொலிஸ் ஜீப்புகளை புரட்டினார்கள். பொலிசாரைத்தாக்கினார்கள். துப்பாக்கி ஒன்றைக் கூடப் பறித்தெடுத்தார்கள். (அது பின்னர் மீண்டும் பறித்தெடுக்கப்பட்டு விட்டது) பொலிஸ் பின்வாங்கினார்கள். ஆனால் பின்னர் 100 பொலிசார் அளவில்வந்து வெறியாட்டம் ஆடி சகலவிதமான அட்டூழியங்களையும் இழைத்தார்கள்.

ஆனால் தொழிலாளர்களின் உறுதி குன்றி விடவில்லை. 9 பெண்கள் உட்பட 21 தொழிலாளர்கள், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள்; பொலிசார் பெண்களை நிர்வாணமாக்கி எழுத முடியாதளவில் அவர்களை அவமானப் படுத்தினார்கள். எமது முயற்சியால் இந்தப் பொலிசாரில் ஐவர் பின்னர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

அடுத்தநாள் மேபீல்ட் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக நாம் ஹட்டன் மாவட்டத்தில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தினோம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் சேர நிர்ப்பந்திக்கப்பட்டது. 25,000-க்கும் மேலான தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்பொழுது யூ.என்.பி. ஆட்சியில் இருந்தது, எம். எச். மொகமத் தொழில் அமைச்சராக இருந்தார். திரு. தொண்டமான் பெரிதும் அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தார். இந்த வேலை நிறுத்தத்தைத் தீர்க்க தொழில் அமைச்சர் உயர்மட்ட மாநாடு ஒன்றை நடத்தினார். மாநாட்டில் தொண்டமானும் நானும் கலந்துகொண்டோம். ஆரம்பத்தில் எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. மிகவும் சிக்கலாக இருந்த நிலைமை எமகது சாதகமாக இருந்தது. தொண்டமான் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டபடியால் அரசாங்கத்தால் அதை அடக்கமுடியாது. வேலை நிறுத்தத்தில் நாம் கலந்து கொண்டபடியால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் அது விரும்பினால்கூட— வேலை நிறுத்தத்தைக் காட்டிக்கொடுக்க முடியாது காட்டிக் கொடுத்திருந் தால் அவர்களுடைய உறுப்பினர்கள் எங்களுடைய சங்கத்தில் சேர்ந்திருப்பார்கள். ஆகவே பல பேச்சு வார்த்தைகளின் பின்னர் நிர்வாகம் பிரதான கோரிக்கைகள் சிலவற்றை வழங்கியது. மகிழ்ச்சிப் பெருக்கின் மத்தியில் தொழிலாளர்கள். வேலை நிறுத்தத்தைக் கைவிட்டார்கள். போராட்ட ஐக்கியத்தின் வெற்றி அது.

தோட்டத்தில் ஒரு கூட்டுக் கூட்டத்தில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு தொழிலாளர்கள் ஊர்வலமாகத் தோட்டத்துக்குள் செல்வார்கள் என்பது தீர்வின் ஒரு நிபந்தனையாகும். அந்த ஊர்வலம் எத்தகைய பிரமாதமான ஊர்வலம். தொழிலாளர்கள் உற்சாகத்தின் உச்சியில் இருந்தார்கள்.

ஊர்வலப் பாதையின் ஒரு பகுதி கொழும்பிலிருந்து நுவர எலியாவுக்குச் செல்லும் பிரதான பாதையில் இருந்தது. மூன்று தோட்டத்துரைமார் ஊர்வலத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். எமது தலைமைத் தோழர்கள் தலையிட்டிருக்காவிட்டால் அவர் களைத் தொழிலாளர்கள் பந்தாடியிருப்பார்கள். 100க்கு மேலான பொலிசார் எந்தப் பாதுகாப்பையும் வழங்க முடியவில்லை.

தோட்டத்துக்குள்ளே தொழிலாளர்களின் அன்றாடத் தேவை பொருட்களை விற்கும் கடை ஒன்று இருந்தது. இந்தக் கடைகள் பொதுவாக தொழிலாளர்களுடன் நல்லபடி நடந்து கொள்ளும். ஏனென்றால் கடையின் வாழ்வு அதில்தான் தங்கி இருக்கின்றது. வழக்கமாக வேலை நிறுத்தங்களின் பொழுது அவை தொழிலாளர் களுக்குக் கடன் வழங்கும். வேலை நிறுத்தம் முடிந்ததும் பணம் கிடைக்கும் என்று கடைகளுக்கு நன்கு தெரியும்.



இந்தக் கடைக்காரன் கடன்கொடுக்க மறுத்திருக்கிறான், தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தார்கள். இப்பொழுது ஊர்வல மாகத் தோட்டத்துக்குள் சென்று கொண்டிருந்தபோது அவர்கள் கடையை உடைத்தெறிந்தார்கள். கடைக்காரன் சகலத்தையும் இழந்தான். மூன்று பொலிசார் அங்கிருந்தனர். ஆனால் அவர் களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ''ஆனால் ஒருவரும் எங்களுக்கு முறையிடவில்லை'' என்று ஒரு பொலிசார் மற்ற இருவருக்கும் சொன்னார்களாம்.

மற்றத் தொழிலாளர்கள் இதிலிருந்து படிப்பினையைக் கற்றுக் கொண்டார்கள். தலவாக்கலைக்கு அருகில் உள்ள வதத கொட் மட்டெ கொம்பர தோட்டத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இத்தோட்டத்தில் சுமார் 3,500 தொழிலாளர்கள் இருந்தார்கள். இங்கும் அவர்கள் எமக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிர சுக்கும் இடையில் அரை அரைவாசியாகப் பிரிந்து இருந்தார்கள். தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் வேலை நாட்கள் போதாத காரணத்தால் இங்கு வேலை நிறுத்தம் ஆரம்பித்தது. தோட்டத் துரை நடத்திய தனியார் பெரிய பண்ணையில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு மாதத்தின் சகல நாட்களும் வேலை கிடைத்து வந்தது தொழிலாளர்களின் அதிருப்தியை மேலும் அதிகரித்தது. மேபீல்ட் தோட்டத்தின் அதே ஐக்கிய முன்னணி முறை இங்கேயும் செயல்பட்டது. ஐக்கியப்பட்ட வேலைநிறுத்தம் பூரண வெற்றி கண்டது. தொழிலாளர்கள் தனியார் பண்ணையைத் தகர்த்தெறிந்து தமது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டார்கள், கோழி வாத்துகளும் பன்றிகளும் கலைத்து விடப்பட்டன. அவற்றை பக்கத்துக் கிராமங்களிலுள்ள மக்கள் பிடித்துக் கொண்டார்கள். இப்படி ஒரு வாய்ப்பு அவர்களுக்கு முன்பு எப்பொழுதும் கிடைத்தது இல்லை. மீண்டும் உயர்மட்ட மாநாடு நடைபெற்றது. இறுதியில் நிர்வாகம் விட்டுக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

அந்த ஆண்டின் மூன்றாவது பெரிய வேலை நிறுத்தம் பதுளை மாவட்டத்தில் உள்ள கீனாகல் தோட்டத்தில் ஏற்பட்டது. இங்கே மற்ற இடங்களைப் போன்ற ஐக்கியத்தைப் பெற முடிய வில்லை இத்தோட்டத்தில் வேறு சங்கங்களும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. ஆனால் இது போராட்ட உறுதிமிக்க வேலை நிறுத்தமாக நடைபெற்றது. தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர் களும் தொழிற்சாலையையும் அது அமைந்திருக்கும் டிவிஷனையும் கைப்பற்றினார்கள். ஒரு மாத காலமாக அவர்கள் அவ்வாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைப்பற்றி இருந்தார்கள். தோட்டத்துரை கூட அவர்களின் அனுமதியுடனேயே அங்கே உட் செல்ல முடிந்தது. இந்த வேலை நிறுத்தத்துக்கு சுற்றியுள்ள கிராமவாசிகளின் ஆதரவும் கிடைத்தது. தொழிற்சாலை வளைவுக்குள் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றில் பேசியது எனக்கு நினைவில் இருக்கின்றது. இக்கூட்டத்தில் உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினரும் உரையாற்றினார்

ஆனால் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்த முடிய வில்லை. இந்த வேளையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய வற்றின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் அது அரசு அதிகாரத்தின் இயல்பை மாற்றவில்லை. துவக்குகள் இன்னும் பிற்போக்கின் காவல் நாய்களின் கைகளில் இருந்தன. இரண்டு தொழிலாளர்கள் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார்கள். காட்டுமிராண்டித்தனமான அடக்கு முறையின் மூலம் வேலை நிறுத்தம் நசுக்கப்பட்டது. ஆனால் சீனாகல வேலை நிறுத்தம் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஒரு வரலாற்றுக் காவியமாகியது. இந்த மூன்று வேலை நிறுத்தங் களின் பின்னர் ஒரு பொதுவான விஷயம் நடைபெற்றது. பிரித்தானியராக இருந்த மூன்று தோட்டத் துரைமாரும் நிர்வாகத்தினால் நீக்கப்பட்டார்கள். வேலை நிறுத்தத்துக்கு முன்னரும் பின்னரும் அவர்களுடைய நடத்தைத்தான் இதற்கு காரணம். இத்தகைய சம்பவம் முன்னர் நடைபெறவில்லை.

சீனாகல் சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னர் தோட்டத் தொழி லாளர்கள், பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் அதிகரித்தன. இவர்களில் அநேகர் இ.தொ.கா. உறுப்பினர்கள். தோட்டத் தொழிலாளர்கள் சங்கங்கள் கூட்டுக் கமிட்டி ஒன்றைப் பற்றிப் பரிசீலித்தன. இ. தொ. கா., ஐ. தொ. கா, செங்கொடிச் சங்கம் ஆகியன உள்பட்ட கூட்டுக் கமிட்டி அமைக்கப்பட்டது. பொலிஸ் சூட்டை நிற்பாட்ட சகல தோட்டங்களிலும் கூட்டுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. முதல் கூட்டம் இ.தொ.கா. பிரதேசமான மாத்தளையில் நடைபெற்றது. நான் இக்கூட்டத்தில் உரையாற்றினேன். ஆனால் அது ஒரு வெற்றியானது கூட அல்ல. அடுத்த கூட்டம் திப்புல மாவட்டத்தில் உள்ள ஹட்டனில் நடை பெற்றது. இங்கு எமக்கு அமோக செல்வாக்கு இருந்தது.

1971-ம் ஆண்டு மார்ச் 2-ம் திகதி நடந்த இக்கூட்டத்தை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். ஹட்டன் செங்கோலம் பூண்டது. அது சகல சங்கங்களும் கலந்து கொண்ட கூட்டுக்



தோட்டத் தொழிலாளர்கள் பேரணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டம் என்ற போதிலும் இ.தொ.கா. அல்லது ஜ.தொ.கா. 500-க்கு மேலானோரைத் திரட்ட முடியவில்லை. செங்கொடிச் சங்கத்தில் 5,000-த்துக்கு மேலான தொழிலாளர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். ஆண்களும் பெண்களும் சிவப்புச் சட்டைகள் அணிந்து செங்கொடிகளையும் மாசேதுங் படங்களையும் தாங்கிச் சென்றார்கள். ஹட்டன் இத்தகைய காட்சியை முன்னரும் பின்னரும் கண்டதில்லை. போதிய பஸ்கள் இல்லாத காரணத்தால் தொழிலாளர்கள் கால்நடையாக வரவேண்டியிருந்தது. இதனால் அன்று காலை திம்புல முழுவதிலும் மினி ஊர்வலங்கள் காணப் பட்டன. அரசாங்கமும் அரசு இயந்திரங்களும் எமது பலத்தைக் கண்டு பீதி அடைந்தால் ஆச்சரியம் இல்லை. இதற்கு ஒரு மாதத் திற்குப் பின்னர் நடைபெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சியை சாதக மாகப் பயன்படுத்தி செங்கொடிச் சங்கத்தின் தலைவர்கள் அனைவரும் சிறையில் தடைக்காவலில் வைக்கப்பட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 12. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி

ரஷ்ய ஒக்டோபர் புரட்சிக்குப் பின்னரும் சீனப் புரட்சிக்குப் பின்னரும் உலகில் ஏற்பட்ட மிகவும் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சியாக சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைக் கொள்ளலாம். 1966-ல் இப்புரட்சி ஏற்பட்டது. சோஷலிசத்தின் வெற்றிக்குப் பின்னரும் கூட வர்க்கங்கள் நிலவும் என்பது பற்றியும், ஆகவே வர்க்கப் போராட்டங்கள் நிலவும் என்பது பற்றியும் தோழர் மாசேதுங் முன்வைத்த தத்துவம் மார்க்சிய — லெனினியத்தின் வளர்ச்சிக்குச் செய்த முக்கியமான தத்துவப் பங்காற்றல்களில் ஒன்றாகும். தோழர் மாசேதுங் சீனாவிலும் மற்ற நாடுகளிலுமான புரட்சியின் அனுபவங்களைத் தொகுத்து சோசஷலிசத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு செல்லும் முழு வரலாற்றுக் கால கட்டத்திலும் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் நிலவும் எனவும் முதலாளித்துவ மீட்சியின் ஆபத்து நிலவும் எனவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இழக்கப்பட்டு கவிழ்க்கப்படும் ஆபத்து நிலவும் எனவும் சுட்டிக் காட்டினார்.

தோற்கடிக்கப்பட்ட எந்த வர்க்கமும் அதிகார ஆசனங்களிலிருந்து அது விலக்கப்பட்டதை இலேசாக எடுத்துக் கொள்ளாது. மீண்டும் அதிகாரத்துக்கு வர அது சதி செய்து திட்டமிடும். இந்த



முயற்சியில் அதன் பிரதான கூட்டணிகளில் ஒன்று பழைய பழக்க வழக்கங்களும் சிந்தனைகளும் மனிதர் மனங்களில் உறைந்திருப்பதாகும். மனிதரின் சிந்தனையைப் புனருருவாக்கி பழைய பூர்ஷ்வா கருப்புச் சித்தாந்தத்தின் மிச்ச சொச்சம் அனைத்தையும் துடைத்தொழிக்க பாரதூரமான வெற்றிகரமான முயற்சி எடுக்கப்படாவிட்டால் பூர்ஷ்வா வர்க்கம் மீண்டும் அதிகாரத்துக்கு வரும் முயற்சியில் ஈடுபட சாதகமான நிலைமைகள் உருவாக்கப்படும்.

ஒக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு இரண்டு ஆண்டுகளின் பின்னர் லெனின் வருமாறு கூறினார்: பூர்ஷ்வா வர்க்கத்தைத் தூக்கியெறிந்த பின் அதன் எதிர்ப்பு பத்து மடங்காக அதிகரிக்கிறது. அதன் பலம் அதனைத் தூக்கியெறிந்த பாட்டாளி வர்க்கத்திலும் பார்க்கப் பெரிதாக இருக்கிறது. ஏனென்றால் பூர்ஷ்வா வர்க்கத்திடம் இன்னும் பணமும் அறிவும் அதிகார நிர்வாகப் பழக்கமும் வெளிநாட்டு மூலதனத்துடனான தொடர்பும் இருக்கின்றன. மக்கள் மனங்களில் இருக்கும் பழக்கத்தின் சக்தியும் (பூர்ஷ்வா வர்க்கத்துக்கு சாதகமாக) இருக்கின்றது. இது ஒரு உண்மையான சக்தி என்று லெனின் கூறினார். மக்களின் பழக்க வழக்கங்களில் மாற்றம் ஏற்படும்வரை புரட்சி உத்தரவாதமாகி விட்டது என்று கூற முடியாது.

லெனினுடைய வார்த்தைகள் வருமாறு: ''தூக்கியெறியப்பட்டபடியால் (ஒரு நாட்டில் என்றாலும் கூட) பத்து மடங்காக அதிகரித்த எதிர்ப்புடையதும் சர்வதேசிய மூலதனத்தின் பலம், பூர்ஷ்வா வர்க்கத்தின் சர்வதேசியத் தொடர்புகளின் பலம், உறுதி ஆகியவற்றில் மாத்திரமல்லாது பழக்க சக்தி சிறிய உற்பத்தி ஆகியவற்றின் பலத்திலும் தங்கி இருக்கிறது. துரதிருஷ்டவசமாக சிறிய உற்பத்தி இன்னும் உலகில் மிக மிகப் பரவலாக இருக்கின்றது. சிறிய உற்பத்தி முதலாளித்துவத்தையும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் இடைவிடாது தினசரி மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் தன்னிச்சையாக பெருமளவில் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது.''

தோற்கடிக்கப்பட்ட வர்க்கங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த உதாரணங்கள் பல வரலாற்றில் உண்டு. அமெரிக்கப் பத்திரிகையாளரான அன்னா லூயிஸ் ஸ்டிராங் தெளிவாக இதைக் கூறினார். ''கடந்த காலத்தில் சகல புரட்சிகளுக்கும் பின்னரும் பின்னடைவு ஒன்று ஏற்பட்டு இப்புரட்சிகளின் கனிகள் பறிக்கப்பட்டதை சீனர்கள் கவனித்தார்கள். பிரித்தானியாவில் கிராம்வெல் முதலாம் சார்லசின் தலையை வெட்டினார். மன்னர்கள் முடிந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டார்கள் என்று தோன்றியது.ஆனால் இருபது ஆண்டுகளுக்கு
பின்னர் இரண்டாம் சார்லஸ் எதிர்ப்புரட்சிப் படையின் உதவி
கூட இன்றி ஆட்சிக்கு வந்தார். பிரித்தானியாவில் இன்றுவரை
பல நிலப்பிரபுத்துவ மனோபாவங்கள் மிஞ்சி இருக்கின்றன.
பிரான்சில் புரட்சிக்குப் பின் போனபார்ட் (நெப்போலியன்)
சக்கராதிபத்தியம் உருவாகியது. பல ஏற்றமும் இறக்கமும் ஏற்
பட்டன. அமெரிக்காவில் மக்களின் கரங்களில் ஆட்சி அனைத்
தையும் வைப்பதாகக் கூறிய சுதந்திரப் பிரகடனத்தின் அழகான
வார்த்தைகளுக்குப் பின் அரசியல் சட்ட திட்ட சம்பிரதாயம் முன்
வைக்கப்பட்டது. அது ''குண்டர்கள் ஆட்சிக்கு எதிராகத் தடை
களை'' முன்வைத்தது. பின்னர் அமெரிக்க உள்நாட்டு யுத்தத்
தால் நீக்ரோ அடிமைகள் விடுதலை பெற்றார்கள்.அரசாங்கத்தில்
கூட அவர்களுக்கு ஒரு பங்கு கிடைத்தது. ஆனால் பத்தாண்டு
காலத்தில் அவர்கள் புதியதோர் வடிவத்தில் அடிமைப்படுத்தப்பட்
டார்கள்.''

அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒரு விஷயம். அந்த
அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவது இன்னொரு விஷயம், மேலும்
கஷ்டமான விஷயம்.சீன விடுதலைச்சேனை தினசரி சுட்டியதாவது :
''ஒவ்வொரு புரட்சியிலும் அடிப்படைப் பிரச்சினை அரசு அதிகாரப்
பிரச்சினை என்பதை பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வரலாற்று
அனுபவத்திலிருந்து நாம் அறியலாம்.நாம் நாட்டிலுள்ள எதிரியை
சென்றடக்கி துப்பாக்கி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினோம்.
ஏகாதிபத்தியம் சரி, நிலப்பிரபுத்துவம் சரி, அதிகார முதலாளித்
துவம் சரி, லட்சாதிபதிகள் சரி, கோடிஸ்வரர்கள் சரி, கோடானு
கோடீஸ்வரர்கள் சரி, இவர்கள் அனைவரையும் தூக்கியெறிய
முடியும். இவர்களுடைய சொத்தைப் பறித்தெடுக்க முடியும்.
ஆனால் சொத்தைப் பறித்தெடுத்தால் அவர்களுடைய மனங்களில்
இருக்கின்ற சிந்தனையை பறித்தெடுத்தது ஆகாது. தினம் தினம்,
மணிக்கு மணி மீண்டும் அதிகாரத்துக்கு வர அவர்கள் கனவு
காண்கின்றார்கள்; தாம் இழந்த ''சொர்க்கத்தை'' மீண்டும் பெறக்
கனவு காண்கின்றார்கள். அவர்கள் மக்கள் தொகையில் ஒரு
குறிப்பிட்ட சதவீதத்தினரே என்ற போதும் அவர்களுடைய
அரசியல் உள்ளார்ந்த சக்தி கணிசமானது. அவர்களுடைய
எதிர்ப்பு சக்தி அவர்களுடைய எண்ணிக்கையிலும் பார்க்க விகிதாச்
சாரம் கூடியது.

சோஷலிச சமுதாயம் பழைய சமுதாயத்தின் கருப்பையிலிருந்து
தோன்றுகிறது. வர்க்க சமுதாயத்தின் ஆயிரக்கணக்கான ஆண்டு
களில் உருவாகிய தனிநபர் சொத்துரிமைச் சிந்தனையையும் தனி



நபர் சொத்துரிமையுடன் தொடர்புடைய சுரண்டும் வர்க்கங்களின்
பழக்க சக்தி, சித்தாந்த, கலாச்சார பாதிப்பு ஆகியவற்றையும்
இல்லாது செய்வது அவ்வளவு இலேசானதல்ல. நகரத்திலும்
கிராமத்திலும் உள்ள குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தின் தன்னிச்சை
யான சக்திகள் புதிய பூர்ஷ்வா வர்க்க பிரகிருதிகளைத் தோற்று
விக்கின்றன. தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அளவும் பெரி
தாகப் பெரிதாக அவர்கள் மத்தியில் சிக்கலான பின்னணி உடைய
ஆட்கள் சேர்கின்றார்கள். கட்சி, அரசு ஸ்தாபனங்களில் உள்ள
ஒரு எண்ணிக்கையான ஆட்கள் அரசு அதிகாரத்தைப் பெற்ற
பின்னரும் சமாதான சூழ்நிலையில் வாழ்ந்த பின்னரும் சீரழிகின்
றார்கள்.''

இது மிகவும் நன்கு கூறப்பட்டுள்ளது. எதிரி எப்பொழுதும்
எமக்கு எதிராக இரட்டைத் தந்திரத்தைப் பாவிக்கின்றார்.
பூர்ஷ்வா வர்க்கமும் பிற்போக்குவாதிகளும் ராணுவம், பொலிசார்
போன்ற தமது அடக்குமுறை இயந்திரத்தின் மூலம் தொழிலாளி
வர்க்கத்தைப் பயங்கரமாகவும் நேரடியாகவும் தாக்குகின்றார்கள்.
அதே வேளை தொழிலாளி வர்க்கத்தை உள்ளிருந்து சீர்குலைக்
கவும் பலவீனப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள். அவர்கள் தம்மிடம்
பணம் பெறுபவர்களும் பணம் பெறாதவர்களுமான ஏஜெண்டு
களை தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குள் அனுப்புகிறார்கள்
இது ஐந்தாவது படைத் தந்திரம். உங்கள் முன்னாலிருந்து
இனங்காணக் கூடிய எதிரியை எதிர்த்துப் போராடுவது
இலேசானது. தன்னை கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு உங்கள்
மத்தியில் இருக்கும் எதிரியை எதிர்த்துப் போராடுவது கஷ்ட
மானது.

*சீனக்* கம்யூனிஸ்டுகள் தமது மகத்தான தலைவர் தோழர்
மாசேதுங்கின் வழிகாட்டலில் தம்மை எதிர் நோக்கிய ஆபத்தை
உணர்ந்திருந்தார்கள். விசேஷமாக அறிந்த ஒரு சுடுவாலைச்
சுடாமல் முதலாளித்துவ மீட்சியை சமாதான முறையில் அமுல்
படுத்திய சோவியத் யூனியனின் சோக நிகழ்ச்சியிலிருந்து எச்சரிக்
கைப் பெற்றார்கள். சோவியத்துக்களின் பூமியில், ஒக்டோபர்
புரட்சியின் பூமியில், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் பூமியில்,
ஹிட்லரைத் தோற்கடித்த வீரர்களை உற்பத்தி செய்த பூமியில்
இது நடைபெற்றிருக்க முடியும் என்றால் சீனாவில் இது நடை
பெற முடியாதா? தோழர் மாசேதுங் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில்
மத்தியக் கமிட்டியில் இந்தக் கேள்வியை முன்வைத்தார். அது
நடைபெற முடியும் என்பதே பதில். இதைத் தடுப்பதற்கு ஒரே
வழி மக்கள் இதை எதிர்த்துப் போராட அவர்களுக்கு ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயுதத்தை அளிப்பதாகும். தம் மத்தியிலிருந்து ஒரு குருச்சேவ் தோன்றுவதைத் தடுக்க சீனர்கள் உணர்வுபூர்வமான நடவடிக்கை எடுத்தார்கள். 70 கோடி சீன மக்களையும் மார்க்சிய - லெனினிய மாசேதுங் சிந்தனையால் ஆயுதபாணியாக்க அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அப்பொழுது சோவியத் யூனியனில் நடந்ததுபோல லியூசோஷியைத் தலைவராகக் கொண்ட ஒரு சிறு துரோகிகள் கும்பல் சீனாவை முதலாளித்துவப் பாதையில் எடுத்துச் செல்வதை மக்களே எதிர்த்துப் போராட முடியும். இவ்வாறுதான் சோஷலிசக் கல்வி இயக்கமும் பிரசித்திபெற்ற தலைவர் மாசேதுங் மேற்கோள் புத்தகங்களும் தோன்றின.

இந்தப் புரட்சி ஏன் முதலில் கலாச்சாரத்துறையில் தோன்றியது? ஒரு அரசியல் எதிர்ப் புரட்சிக்கு முன்னர் சித்தாந்த எதிர்ப் புரட்சி ஏற்படுவதால்தான் இப்படி நடந்தது. ஆளும் வர்க்கத்தைத் தூக்கியெறிந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் வர்க்கங்கள் அனைத்தும் முதலில் மனிதரின் சிந்தனையை பின்னடையச் செய்து சித்தாந்தத் துறையில் தயாரிப்புச் செய்து பின்னர் இதனைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்கின்றனர். 1956-ல் ஹங்கேரியில் எதிர்ப் புரட்சியை நடத்த முயற்சித்த பெட்றோளி கழகத்தைச் சேர்ந்த இலக்கியவாதிகள் இதைத்தான் செய்தார்கள். சோவியத் யூனியனில் குருச்சேவ் திரிபுவாதிகள் ஆட்சியை அபகரித்த வரலாறும் இத்தகையதே ஆகும்.

சீனாவில் திரிபுவாதிகளாகி முதலாளித்துவ மீட்சிப் பாதையை மேற்கொண்டவர்களும் இதே பாதையைத்தான் கடைப்பிடித்தார்கள். இவர்களில் சிலர் கட்சி அரசு அதிகாரங்களைக் கைப்பற்றியிருந்தார்கள். முன்னாள் பீக்கிங் மாநகர கட்சிக்கமிட்டி அவர்களுடைய தலைமைக் கேந்திரமாக இருந்தது. பீக்கிங் மாநகர துணைமேயரான வுஹான் பல கட்டுரைகளையும் நாடகங்களையும் எழுதி இந்தக் கலாச்சார எதிர்ப் புரட்சிக்கான அத்திவாரத்தை அமைத்தார். இவற்றின் பிரசித்தி பெற்றது ''ஹாய் ஜுயி பதவியிலிருந்து நீக்கப்பட்டார்'' என்ற நாடகமாகும். 400 ஆண்டுகளுக்கு முன்னர் வேலை நீக்கம் செய்யப்பட்ட மிங் வம்ச நிலப்பிரபுத்துவ அதிகாரியைப் பற்றியது இந்த நாடகத்தின் கதை. வுஹான் இந்தக் கதையைப் பாவித்து தற்காலத்தை நையாண்டி செய்தார். 1959-ல் ஒரு சில வலதுசாரிகளை நீக்கம் செய்தது தவறு என்று மக்களுக்குக் கூற அவர் முற்பட்டார். அந்த முடிவை மாற்ற அவர் விரும்பினார். வுஹானின் பிற்போக்கு இயல்பை அம்பலப்படுத்த கட்சித் தலைமை உறுப்புகள் தீர்மானித்தன.



ஆனால் முன்னாள் பீக்கிங் கட்சிக் கமிட்டி இதுபற்றி எதுவும் செய்யாமல் இருந்தது. ஏனென்றால் அது திரிபுவாதத்தின் கோட்டையாக மாறியிருந்தது. பின்னர் 1965-ம் ஆண்டு நவம்பர் 10-ம் திகதி ஷாங்காய்த் தினசரியான வென்ஹூயே பாவ் ''ஹாய் ஜுயி பதவியிலிருந்து நீக்கப்பட்டார்'' என்ற புதிய வரலாற்று நாடகம் பற்றி யாவென் யுவாஷ் எழுதிய கட்டுரை ஒன்றைப் பிரசுரித்தது. இந்தக் கட்டுரையை உண்மையில் தோழர் மாசேதுங்கே எழுதினார் என்று பலரும் கருதுகின்றார்கள். வுஹானின் கட்சி எதிர்ப்பு சோஷலிச எதிர்ப்பு இயல்பை இக்கட்டுரை அம்பலப்படுத்தியது. பீக்கிங் பத்திரிகை எதுவும் இக்கட்டுரையை மறுபிரசுரம் செய்யவில்லை. பீக்கிங்கில் அவ்வளவுக்குத் திரிபுவாதிகள் அரண் கொண்டிருந்தார்கள். பின்னர் அழுத்தம் பெருகியபோது முன்னர் பிரசுரிக்கப்படாத இக்கட்டுரையும் வேறு கட்டுரைகளும் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் பிணக்கை வெறும் கலா இயல் விவாதமாக்கி வுஹானின் கட்சி எதிர்ப்பு, சோஷலிச எதிர்ப்பு இயல்பு அம்பலப்படுவதைத் தடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. போராட்டம் தொடங்கியது.

1965 டிசெம்பர் இறுதியில் நான் சீனாவுக்குச் சென்று சீனத் தலைவர்கள் பலரைச் சந்தித்தேன். ஆனால் இன்னும் சில மாதங்களில் சீனாவில் ஏற்படவிருந்த பெரும் கொந்தளிப்பைப் பற்றி உணரவில்லை. அப்பொழுது நான் சீனப் புரட்சியின் தொட்டிலான யெனானுக்குச் சென்று, சீனாவின் விடுதலையைத் திட்டமிட்டு அதற்கு வழிகாட்டியபோது மாவோவும் அவருடைய தோழர்களும் 13 ஆண்டு காலமாக வாழ்ந்த சாதாரண மலைக் குகைகளைப் பார்த்தேன். அத்தருணம் நான் சீனக் கட்சி அளித்த புத்தாண்டுக்கு முந்திய தின விருந்திலும் கலந்து கொண்டேன். அது அத்தகைய முதலாவதும் கடைசியுமான கொண்டாட்டம் ஆகும். அப்பொழுது பீக்கிங்கில் இருந்த முக்கியமான வெளிநாட்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைக் கட்சி அழைத்திருந்தது. மாசேதுங், லியூசோஷி ஆகியோரைத் தவிர சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழுவின் முக்கியமான தலைவர்கள் அனைவரும் அங்கிருந்தார்கள்.

1966-ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி விடுதலை சேனைத் தினசரியும் ஷாங்காய்த் தினசரி வென்குயேபாவும், அரசியல், சித்தாந்த கலாச்சாரத் துறைகளில் மகத்தான கலாச்சாரப் புரட்சி ஒன்றை நடத்தும் பிரச்சினையை எழுப்பின. கட்சித் தலைவர்கள் இந்த விஷயத்தைப் பாரதூரமாக விவாதித்தார்கள். மே 25-ம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திகதி பிற்போக்கான பூர்ஷ்வா வர்க்க கல்வி இயல் அதிகாரிகளை விமர்சிக்கும் முதலாவது சுவரொட்டி பீக்கிங் பல்கலைக் கழகத்தில் தோன்றியது. பீக்கிங் பல்கலைக்கழகத்தின் தலைவர் ஒரு திரிபுவாதி என அம்பலப்படுத்தப்பட்டார். ஜுன் 2-ம் திகதி பீக்கிங் வானொலி இந்தச் சுவரொட்டியை ஒலிபரப்பியது. மக்கள் தினசரியும் செங் கொடியும் ஆசிரியர் தலையங்கங்களை எழுதி அதைப் பாராட்டின.

இது சமருக்கான சங்கநாதம். மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி ஆரம்பித்து விட்டது. முதலாளித்துவப் பாதையை எடுக்க விரும்பும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராகப் போராடி அவர்களைத் தூக்கி எறியும்படியும், பூதங்கள் பிசாசுகள் அனைத்தையும் துடைத்தொழிக்கும்படியும் பூர்ஷ்வா வர்க்க பிற்போக்கான கல்வி இயல் அதிகாரிகளை விமர்சித்து நிராகரிக்கும்படியும், சோஷலிச பொருளாதார அடிப்படைக்குப் பொருந்தாத மேலமைப்பில் உள்ள அனைத்து விஷயங்களையும் விமர்சிக்கும்படியும், சுரண்டும் வர்க்கங்களின் பழைய சிந்தனைகள் பழைய கலாச்சாரம், பழைய பழக்கங்கள், பழைய வழக்கங்கள் ஆகிய நான்கு பழையவற்றையும் அழித்தொழிக்கும்படியும் பாட்டாளி வர்க்கங்களின் புதிய கலாச்சாரம், புதிய சிந்தனைகள், புதிய பழக்கங்கள், புதிய வழக்கங்கள் ஆகியவற்றை ஸ்தாபிக்கும் படியும் மக்களுக்கு அறைகூவல் விடப்பட்டது.

1966-ம் ஆண்டு ஆகஸ்டில் கட்சி மத்தியக் கமிட்டி பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் 16 அம்ச அறிக்கையை வெளி யிட்டது. அப்பொழுது சில கல்லூரிகளில் செங்காவலர்கள் தன்னிச் சையாக தோன்றியிருந்தார்கள். மேதமை தன்மையுடன் மாவோ இந்த செங்காவலர் ஸ்தாபனம் மூலம் கலாச்சாரப் புரட்சியைக் கொண்டு நடத்த முடியும் என்று கண்டுபிடித்தார். ஆகஸ்ட் 18-ம் திகதி தோழர் மாவோ பீக்கிங்கில் புரட்சிகர மாணவர்களையும் ஆசிரியர்களையும் பார்வையிட்டதுடன் செங்காவலர்களின் கை நாடாவை தாமும் அணிந்து செங்காவலர்கள் உருவாக்கத்திற்கு பகிரங்க அங்கீகாரம் வழங்கினார். அப்பொழுதுமுதல் கலாச் சாரப் புரட்சி காட்டாற்று போலத் தளைகளை எல்லாம் தாண்டிச் பாய்ந்தது.

எமது காலத்தில் சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி போல் அவதூறு பொழியப்பட்ட வேறெதுவும் நடைபெறவில்லை என்றே நான் கருதுகின்றேன். மாபெரும் தலைவரும் கலாச்சாரப் புரட்சியைத் தொடக்கி வைத்தவருமான



தோழர் மாசேதுங்கை எல்லா விதத்திலும் திட்டினார்கள். மேற் கத்தைய ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கப் பத்திரிகைகளும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியைப் பிரதான மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதிகளும் சகல நாட்டுப் பிற்போக்குவாதிகளும் மக்கள் சீனத்தின் மீதும் அதன் மாபெரும் தலைவர் மீதும் அவதூறு பொழிந்து உலகளாவிய சீன எதிர்ப்புப் பல்லவி ஒன்றைப் பாடினார்கள். அதே போல மறுபுறத்தில் உலகத் தொழிலாளி வர்க்கமும் புரட்சிகர சக்திகளும் சீனாவில் நடை பெற்றுக் கொண்டிருந்த மகத்தான நிகழ்ச்சிகளைக் கண்டு ஊக்கம் பெற்றார்கள். நான் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச் சாரப் புரட்சியின்போது இரண்டு தடவை சீனாவுக்குப் பயணம் செய்தேன். ஆகவே உலகில் நண்பர்களினதும் எதிரிகளினதும் கவனத்தை இழுத்த இந்த மாபெரும் சம்பவத்தை உள்ளிருந்து பார்த்தேன். கன்ரனில் டாக்டர் சன்யாட் சென் மருத்துவக் கல்லூரியில் நான் செங்காவலர்களைச் சந்தித்தேன். புதிய பீக்கிங் பல்கலைக் கழகத்தை தத்துவவியல் துறையின் பெண் விரிவுரை யாளர் ஒருவர் எனக்குக் காட்டினார். நியே யுவான் என்ற இந்தப் பெண் முன் குறிப்பிட்ட 1966 மே 25-ம் திகதிய முதலாவது பெரும் எழுத்துச் சுவரொட்டியை எழுதிய ஏழு பேரில் ஒருவர்.

இரண்டாவது பயணத்தின்போது நான் பீக்கிங் நிலவியல் கழகத்தின் கிழக்கு சிவப்பு கம்யூனைச் சேர்ந்த 5,000 செங்காவலர் கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் சொற்பொழிவாற்றும் சிறந்த வாய்ப்பைப் பெற்றேன். நான் மறக்க முடியாத அனுபவம் இது. செங்காவலர்கள் தியென் அன் மென் சதுக்கத்தில் ஊர்வலம் சென்றதை நான் கண்டேன். லட்சோபலட்சம் சீன மக்களின் அணி வகுப்பு தலைவர் மாவோவை கடந்து சென்றதைக் கண்டேன். ஒரு மொழிப் பெயர்ப்பாளரின் உதவியுடன் நூற்றுக்கணக்கான சுவரொட்டிகளை வாசித்தேன். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டித் தலைவர்களுடனும் அதன் கீழிருந்த கலாச்சாரப் புரட்சிக் குழுவின் உறுப்பினர்களுடனும் நான் நீண்ட நேரம் பேச்சு வார்த் தைகளை நடத்தினேன். இறுதியாக தோழர் மாசேதுங்கை சந்தித்து கலாச்சாரப் புரட்சி பற்றியும் ஒத்த விவகாரங்கள் பற்றியும் கலந்துரையாடும் பாக்கியத்தைப் பெற்றேன். என்னு டைய மனப்பதிவுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது என்னுடைய கடமையாகும்.

சில பத்து ஆண்டுகளில் செய்ய முடியாதவற்றை செங் காவலர்கள் சில நாட்களில் செய்து முடித்தார்கள். கலாச்சாரப் புரட்சியில் முன்னணிப் படையின் பாத்திரத்தை அவர்கள் வகித்

www.tamilarangam.net



தார்கள். முதலில் அவர்கள் தமது பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் போராட்டங்களையும் சீர்திருத்தங்களையும் நடத்தினார்கள். இந்த நிறுவனங்களில் பூர்ஷ்வா வர்க்க கல்வி இயல் அதிகாரிகள் அரண் கொண்டிருந்தார்கள். தொழிலாளிகள் விவசாயிகள் மத்தியிலிருந்து வந்த மாணவர்களை அவர்கள் வெறுத்தார்கள். சீமாட்டிகள் போலப் பேசி சீமாட்டிகளை போல நடக்க முடியாத மாணவர்கள் வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இந்த அதிகாரிகள் பரிட்சைகளை வழிபட்டார்கள். மாவோ இதனை ஒரு கொடிய முறை என்று வர்ணித்தார். இந்த முறையின் சாராம்சம் என்னவென்றால் ஆசிரியர் மாணவருக்குத் தெரியாத முறையில் திடீர்த் தாக்குதல் தொடுப்பதாகும் என்று மாவோ கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கலாச்சாரப் புரட்சியின் போது பரிட்சை முறைகளில் பெரும் புதுமைகள் செய்யப்பட்டன. சில விஷயங்களில் பரிட்சைகள் ரத்துச் செய்யப்பட்டன.

செங்காவலர்கள் பாடசாலைகள் — கல்லூரிகளில் தொடங்கிய போராட்டத்தை சமுதாயத்துக்கு வீதிகளுக்கு பெரிய அளவில் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகால பழைய சமுதாயம்விட்டுச் சென்ற குப்பைகளையும் ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற கெட்ட விஷயங்களையும் துடைத்தொழித்தார்கள்.

பந்தோபஸ்து நிறுவனங்களால் கண்டுபிடிக்கப்படாத மறைந்திருந்த எதிர்ப்புரட்சிவாதிகளையும் அவர்கள் கண்டுபிடித்தார்கள். இவர்களில் அநேகர் முன்னாள் நிலப்பிரபுக்கள். இவர்கள் நகரங்களுக்கு தப்பியோடி அங்கு மறைந்து வாழ்ந்தார்கள். இவர்கள் எதிர்ப்புரட்சியின் வெற்றிக்காகவும் சியாங்கைஷேக் மீள வருவதற்காகவும் காத்திருந்தார்கள். இவர்கள் சியாங்கை ஷேக்கின் மீட்சி நாளை எதிர்பார்த்து தமது நிலப்பட்டாக்களை இரகசியமாகப் பாதுகாத்து வைத்திருந்தார்கள். செங்காவலர்கள் இந்த பட்டாக்களை மாத்திரம் அல்ல தங்கக் கட்டிகள், வெள்ளிக் கட்டிகள், துப்பாக்கிகள், கத்திகள் பழைய நாணயங்கள் முதலியவற்றையும் கைப்பற்றினார்கள். நான் இவற்றை கன்ரனிலும் பீக்கிங்கிலும் இரண்டு கண்காட்சிகளில் கண்டேன். தமது ஏஜண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதை ஓட்டி ஏகாதிபத்தியவாதிகளும் திரிபுவாதிகளும் கூச்சல் போட்டதைப் புரிந்துக் கொள்வது கஷ்டமில்லை.

ஆரம்ப நாட்களில் செங்காவலர்கள் பாட்டாளி வர்க்க தரத்திற்கு ஒத்துவராத வகையில் தலைமயிரையும் உடைகளையும் அழகுபடுத்துகின்றவர்களுக்கு எதிராக நிர்ப்பந்திப்பதைப் பாவித்



தார்கள். ஆனால் இது நீண்டகாலம் நீடிக்கவில்லை. மக்கள் விடுதலைச் சேனையின் பாணியில் செயல்படும்படி கட்சி அவர்களை வேண்டிக் கொண்டது. நிர்ப்பந்தத்துக்குப் பதிலாக அறிவுறுத்தும் முறையைப் பாவிக்கும்படி அவர்களுக்கு புத்திமதி கூறப்பட்டது. நிர்பந்தம் தோலைத்தான் தொடும் அறிவுறுத்தல் ஆத்மாவைத் தொடும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது.

செங்காவலர் ஈடுபட்டதிலும் கூடுதலான வன்முறை அவர்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். செங்காவலர்கள் எவரையும் கொல்லவில்லை. எதிர்ப்புரட்சிவாதிகள் பல செங்காவலர்களைக் கொன்றார்கள்.

செங்காவலர்கள் பழையது அனைத்தையும் அழித்து விட்டார்கள், சிவப்பு என்பது இனிமேல் வாகனத்தை நிறுத்த மட்டும் பயன்படாது, மதரீதியான இம்சை அங்கு நடைபெற்றது, முஸ்லீம்கள் பன்றி இறைச்சி சாப்பிட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்றெல்லாம் முட்டாள்தனமான கட்டுக்கதைகளை அப்பொழுது முதலாளித்துவவாதிகளின் திரிபுவாதிகளின் பத்திரிகைகளில் பரப்பினார்கள். போக்குவரத்து வெளிச்ச முறையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. மதத்தைப் பொறுத்த மனோபாவம் தெட்டத் தெளிவாக இருந்தது. எவரும் விரும்பும் மதத்தை நம்பும் அரசியல் சட்டதிட்ட உரிமை இல்லாது செய்யப்படவில்லை. ஆனால் எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகளுக்கு மதத்தை மூடு திரையாகப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படவில்லை. இப்படிப் பயன்படுத்துவோருக்கு எதிராகச் செங்காவலர் செயல்பட்டனர்.

சீனாவில் நடைபெற்றது 'பைத்தியக்காரத் தனத்தை அண்மிய கேலி நாடகம்' என்று இலங்கைப் பூர்ஷ்வா வர்க்கத்தினசரி ஒன்று ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியது. சீனாவில் நடைபெற்றது உலகில் நடைபெற்ற மகத்தான அறிவுஜீவிகளின் கொந்தளிப்பு என்று மற்றவர்கள் கருதினார்கள். இந்தக் கருத்துக்கள் ஒருவருடைய வர்க்க நோக்கைப் பொறுத்து ஏற்படுகின்றன. ஏனென்றால் சீனாவில் நடைபெற்றது ஒரு வர்க்கப் போராட்டம். வர்க்கப் போராட்டத்தில் எதிரெதிர் நிற்கும் கருத்தைக் கொண்டிருக்க முடியாது. இது இயல்பானது.

இந்தக் கலாச்சாரப் புரட்சியால் சீனா தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கின்றது என்று பூர்ஷ்வாப் பத்திரிகைகளும் திரிபுவாதப் பத்திரிகைகளும் எழுதும்போது அதன் அர்த்தம் சீனா ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்குவாதிகள், நவீன திரிபுவாதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகியோரிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கின்றது என்றுதான் அர்த்தப்படும். ஆனால் இந்த மகத்தான புரட்சிகரக் கொந்தளிப்பின் மூலம் சீனா முழு உலகத்தினதும் பொது மக்களின் இதயங்களைப் பிடித்துள்ளது. இந்தப் பொது மக்கள் தான் உலக மக்கள் தொகையில் 90 சதவீதத்துக்கு மேலானவர்கள்.

சீனக் கலாச்சாரப் புரட்சி ஏன் அழகு சாதனங்கள், ஆடை அணிகள், சிகை அலங்காரங்கள், வீதிப்பெயர்கள் முதலியன பற்றிக் கவலைப்பட்டது என்பதைச் சிலர் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். அவுஸ்திரேலியா பத்திரிகை ஒன்று சுட்டிக் காட்டியவாறு ''அழகு சாதனங்கள், ஆடம்பர ஆடையணிகள், பாஷன்கள், மிகுதியும் புறம்பான சிகை அலங்காரம் ஆகியவற்றை முதலாளிகள் பெரிதும் ஊக்குவிக்கின்றார்கள். இவை லாபத்தின் மூலங்களாக இருப்பதோடு மக்களை பாரதூரமாக சிந்திக்கவிடாமல் தடுத்து வாழ்க்கையின் அற்பமானவைகளுக்கு கவர்ந்திழுக்கும் பெரும் வழிமுறைகளாக இருக்கின்றன. மக்களை பெருமளவில் பிடிப்பில் வைத்துள்ளன. மக்களை முதலாளித்துவத்தின்பால் இழுக்க உதவுகின்றன. அவை முதலாளித்துவத்தின் உளுத்த தன்மையின் பிரதிபலிப்பு ஆகும். அதே வேளையில் முதலாளித்துவத்தையும் அதன் செல்வாக்கையும் பராமரிக்க உதவுகின்றன.'' இந்தச் செல்வாக்குகளுக்கு எதிராக சீனர்கள் போராடியது சரியானதே. ''எளிய வாழ்க்கை உயரிய நோக்கம்'' என்ற பழைய கூற்று இதைத்தான் குறிக்கின்றது.

கலாச்சாரப் புரட்சியால் கல்வித்துறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. புரட்சியின் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட போதியளவு தொழிலாளர்கள், விவசாயிகளின் பிள்ளைகள் பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் உயர் கல்வி நிலையங்களுக்கும் பிரவேசம் பெறாமல் இருப்பதை சீனர்கள் உணர்ந்தார்கள். வசதியுள்ள முன்னாள் முதலாளிகளினதும் நிலப்பிரபுக்களினதும் பிள்ளைகள்தான் இன்னும் சாதகமான நிலையில் இருந்தார்கள். ஆகவே தொழிலாளர் விவசாயிகளின் பிள்ளைகள் கூடுதலாகப் பிரவேசம் பெறும் பொருட்டு இந்தக் கல்வி நிலையங்களின் பிரவேச முறையைச் சீர்திருத்துவதற்காக பாடசாலைகளையும் பல்கலைக் கழகங்களையும் ஒரு குறிப்பிட்ட காலம் மூடி வைத்தார்கள்.

பகுதி நேரப் படிப்பு, பகுதி நேர வேலை என்ற முறையைச் சீனர்கள் பரிசோதனை செய்து பார்த்தார்கள். இதன்படி



மாணவர்கள் பகுதி நேரம் படித்தார்கள். பகுதி நேரம் வேலை செய்தார்கள். படிப்பு நேரம் பெரிதும் குறைக்கப்பட்டது. கல்வி உற்பத்தியுடன் இணைந்ததாக அமைந்தது. தொழிற்சாலைகளுக்கும் கம்யூன்களுக்கும் பாடசாலைகளை நடத்த ஊக்கம் அளிக்கப்பட்டது. ஒரு தொழிற்சாலையின் தொழிலாளர்களை ஒரு குறிப்பிட்ட காலம் (உதாரணத்துக்கு 6 மாத காலம்) விவசாயக் கம்யூனின் வேலை செய்ய ஒழுங்கு செய்வதும் அதே அளவு விவசாயிகளை அதே காலம் தொழிற்சாலையில் வேலை செய்ய ஒழுங்கு செய்வதுமான பரிசோதனை ஒன்று கூட நடத்தப் பட்டது. இவை பரந்த அளவிலான சீர்திருத்தங்களாகும். இவை உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறுக்கும் நோக்கம் கொண்ட சீர்திருத்தங்கள். அறிவுஜீவிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறுக்கும் நோக்கமுடைய சீர்திருத்தங்கள். நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வித்தியாசங்களை குறுக்கும் நோக்கம் கொண்ட சீர்திருத்தங்கள்.

கலாச்சாரப் புரட்சியின் போது பழையவை அனைத்தும் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்பது உண்மை இல்லை. பழையவை விமர்சன ரீதியாக ஆராயப்பட்டு பரிசீலிக்கப்பட்டன. பழையவற்றில் நல்லவை நின்று பிடிக்கக் கூடிய முறையில் இது செய்யப்பட்டது. ''அறிவை ஏகபோகமாக்கி ஆதிக்கம் புரியும் பண்டிதர்கள் ஒழிக, தொன்நூல்களைப் படியுங்கள் ஆனால் அவற்றை காப்பியடிக்காதீர்கள், அவற்றிலிருந்து நீங்கள் நிகழ் காலம் தோன்றியுள்ள கடந்த காலத்தைக் கற்றுக் கொள்ளலாம். உங்களுடைய வேலை இன்றைய யுகத்துடன் சம்பந்தப்பட்டது. அடித்தளத்துக்குச் சென்று அதனை உருவாக்கும் விவசாயிகள், படையினரிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். இன்றைய மக்களுக்கு பீதோவனால் ஏதேனும் வழங்க முடியும் என்றால் அவர் அழியாமல் இருந்து வரவேற்கப்படுவார். ஆனால் உங்கள் பணி பீதோவனையோ அல்லது ஜார் மன்னர்களின் பாலே நடனங் களையோ கொப்பி அடிப்பதல்ல உங்கள் பணி உங்களைச் சுற்றி உள்ள வாழ்வுக்குப் புதிய ராகங்களை அளிப்பதாகும்'' கலாச்சாரப் புரட்சி இதைத்தான் கூறியது.

''விவசாயிகள் மேல் உள்ள சேறு சகதியால் உங்களை போர்த்திக் கொள்ளுங்கள்'' என்று கூறுவது பொதுமக்கள் மத்தியில் சென்று அவர்களுடன் ஒருவராக இருந்து அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்பதை வலியுறுத்துவதாகும். இந்த உலகில் வெகுமதியுள்ள எந்தப் பொரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளையும் தொழிலாளர்களும் விவசாயிகளும்தான் உருவாக்கியுள்ளார்கள். ஆகவே கலையும் இலக்கியமும் அவர்களுக்குச் சேவை புரிய வேண்டும். அவர்களுக்குச் சேவை புரிவதற்காக கலைஞர்களும் இலக்கியவாதிகளும் அவர்கள் மத்தியில் சென்று அவர்களுடைய வாழ்க்கையைப் புரிந்து கொள்ள வேண்டும். விவசாயிகளின் சேறு சகதியைப் பூசித்தான் இதனை அவர்கள் செய்ய முடியும். விவசாயிகளின் கால்களில் படிந்திருக்கும் சேறுசகதியைக் கழுவிவிடமுடியும். ஆனால் பூர்ஷ்வா அறிவுஜீவிகளின் மனங்களில் படிந்திருக்கும் சேறு சகதியைத் துப்புரவு செய்யப் பெரிதும் பாடுபட வேண்டும். சிலரைப் பொறுத்தவரை துப்புரவு செய்யவே முடியாது.

சீனாவில் விடுதலைக்கு முன்னர் நடைபெற்ற கதை ஒன்று உள்ளது. பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சில கம்யூனிஸ்டுகள் விவசாயிகள் மத்தியில் வேலை செய்ய அனுப்பப்பட்டார்கள். அவர்கள் வறிய விவசாயிகளுடன் தங்கியிருக்க வேண்டும் என்று கட்சி எப்பொழுதும் வலியுறுத்தியது. இந்த அறிவுஜீவிகள் தம்மால் நித்திரை கொள்ள முடியவில்லை. ஏனென்றால் விவசாயிகளின் குடிசைகளில் மூட்டைப் பூச்சிகளும் பேன்களும் ஏராளம் என்று கூறினார்கள். அவர்கள் திரும்பிச் சென்று மூட்டைப் பூச்சி, பேனின் கடியை அனுபவிக்க வேண்டும் என்று மாவோ கூறினார். அப்பொழுதுதான் விவசாயிகளின் உண்மை வாழ்க்கையை அவர்கள் புரிந்து கொள்வார்கள். இவ்வாறு தோழர் மாசேதுங் விவசாயிகளின் சகதியில் தனது கால்களை நன்கு பதித்திருந்தார். இதனால்தான் அவர் வேறு எந்தத் தலைவரிலும் பார்க்க விவசாயிகளை நன்கு புரிந்திருந்தார். இதனால்தான் விவசாயிகள் புரியக் கூடிய மொழியில் அவர் பேசினார்.

கலாச்சாரபுரட்சி உண்மையில் மனிதர்களின் மனங்களை வெற்றி கொள்வதற்கானதாகும். ஏகாதிபத்தியவாதிகளும் பூர்ஷ்வாக்களும் மக்களின் மனங்களை கைப்பற்ற ஒவ்வொரு மணி நேரமும் ஒவ்வொரு நாளும் மிகுந்த பணச் செலவில் ஒழுங்கான இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றார்கள். பத்திரிகைகளும், தொலைக்காட்சியும், வானொலியும், சினிமாவும், நாடகமும், பாடசாலைகளும் இலக்கியமும் அனைத்தும் ஒவ்வொரு நிமிட நேரமும் பூர்ஷ்வாப் பிரச்சாரத்தை நடத்தி எம்மை தாக்கிக் கொண்டிருக்கின்றன. எமது மூளையில் சூனியம் இருக்க முடியாது. ஒன்று பூர்ஷ்வா சிந்தனை இருக்க வேண்டும் அல்லது பாட்டாளி வர்க்க சிந்தனை இருக்க வேண்டும். தோழர் மாசேதுங் நமது மூளையில் இந்த இரண்டு சிந்தனைகளுக்கும் இடையில் நீண்ட காலம் சமாதான சமஜீவனம் நிலவ முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.



இரண்டில் ஒன்று வெற்றி பெற வேண்டும். சீன மக்களின் மனங்களில் பாட்டாளிவர்க்க சிந்தனையை வெற்றி பெறச் செய்வதற்கான முயற்சியாகவே மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி அமைந்தது.

ஆகவே மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி என்பது தோழர் மாசேதுங் அவர்களின் பாட்டாளி வர்க்கத் தலைமையகத்தால் தலைமை தாங்கப்பட்ட புரட்சி சக்திகளுக்கும் லியூசோஷியால் தலைமை தாங்கப்பட்ட கருங்காலிகள், துரோகிகள் ஆகியோருக்கும் இடையிலான மகத்தான வர்க்கப் போராட்டமாகும். லியூசோஷியும் அவருடைய கூட்டத்தினரும் ஏகாதிபத்தியம், நவீன திரிபுவாதம், சியாங்கை ஷேக் கும்பல் ஆகியவற்றுக்குத் தம்மை விற்று சோவியத் யூனியனிலும் நவீன திரிபுவாதத்தால் ஆளப்படும் மற்ற நாடுகளிலும் நடந்தது போல் சீனாவை முதலாளித்துவ மீட்சிப் பாதையில் எடுத்துச் செல்ல விரும்பினார்கள்.

நான் முன்னரே சுட்டிக்காட்டியவாறு சோஷலிசப் புரட்சியின் பின்னரும் கூட வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் தொடர்ந்து நிலவுகின்றன என்பதை மாசேதுங் மகத்தான மேதாவிலாசத்துடன் எடுத்து விளக்கினார். சோஷலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் நடத்துவதன் அவசியத்தை அவர் சுட்டிக் காட்டினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகார நிலைமையின் கீழ் இத்தகைய வர்க்கப் போராட்டத்தை எப்படி நடத்துவது என்பதைக் காட்டியதுதான் அவருடைய பிரத்தியேகமான மகத்தான பங்காற்றலாகும். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை அவர் தாமே தொடக்கி, அதற்குத் தாமே தலைமை தாங்கினார். இந்தப் புரட்சி உலகில் சோஷலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் நடத்திய முதலாவது உதாரணமாகும். இந்த உக்கிரமான வர்க்கப் போராட்டம் உண்மையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் புரட்சியை நடத்தியதாகும். பல கட்டங்களில் அது வன்முறையான வடிவங்களை எடுத்தது. ஏகாதிபத்தியவாதிகளும் திரிபுவாதிகளும் பல்வகைப் பிற்போக்குவாதிகளும் சீனாவில் இருந்த அவர்களுடைய ஏஜெண்டுகளும் சீனாவைப் புரட்சிப் பாதையிலிருந்து திசை திருப்பி விடச் சதி செய்தபடியாலும் அதற்காக அவர்கள் எந்த வழிமுறையிலும் தஞ்சமடைய தயாராக இருந்தபடியாலும் இது புரிந்து கொள்ளக் கூடியதே.

புரட்சிச் சக்திகளுக்கும் எதிர்ப் புரட்சி சக்திகளுக்கும் இடையிலான இந்த மகத்தான போராட்டத்தில் தோழர் மாசேதுங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமது மகத்தான மேதாவிலாசத்துடன் வகுத்த தவறற்ற கொள்கைகளாலும் தந்திரங்களாலும்தான் புரட்சி சக்திகள் வெற்றி பெற்றன. மேலே இருந்து வரும் அதிகார வர்க்க முறைகள் மூலம் இந்தச் சித்தாந்தப் போராட்டத்தைத் தீர்க்க அவர் முயற்சிக்கவில்லை. பொது மக்களைக் கலந்து கொள்ளும்படி அவர் அழைத்தார். கலாச்சாரப் புரட்சி உலகம் கண்ட மாபெரும் வெகுஜனப் போராட்டமாகும். இதன் மூலம் அவர் தம் மக்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் விசுவாசத்தையும் காட்டினார். ''மக்கள், மக்கள் மாத்திரமே உலக வரலாற்றின் உந்து சக்தி ஆவர்'' என்ற தமது கோட்பாட்டுக்கு இணங்க அவர் வாழ்ந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலேயே முதலாளித்துவப் பாதையாளர்கள் அரண் கொண்டிருந்ததைக் கண்டபோது அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழும்படி மக்களை அறைகூவி அழைக்க அவர் தயங்கவில்லை. இந்த நிலைமையில்தான் அவர் ''தலைமையை தகர்த்தெறியுங்கள்'' ''கிளர்ச்சி செய்வது நியாயமானது'' ஆகிய பிரசித்தி பெற்ற கோஷங்களை முன்வைத்தார்.

ஒரு சில முதலாளித்துவப் பாதையாளர்களைத் தனிமைப் படுத்துவதற்காக மாவோ மிகப் பெரும்பான்மையான உண்மை புரட்சிச் சக்திகளுடன் ஐக்கியப்படும் தந்திரத்தை வகுத்தார். புரட்சிகர முத்தரப்புச் சேர்க்கையை அவர் முன்வைத்தார். புரட்சிகர ஊழியர்கள், மக்கள் விடுதலைச் சேனையினர், புரட்சிகர பொது மக்கள் ஆகியோரின் சேர்க்கையே இது. சரியான தருணத்தில் அவர் பரந்துபட்ட இடதுசாரிகளுக்கு ஆதரவு அளிக்கும்படி மக்கள் விடுதலைச் சேனையினருக்கு அறைகூவல் விடுத்தார். மக்கள் விடுதலைச் சேனை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பலமான தூணாக உண்மையில் விளங்கியது. தொழிலாளி வர்க்கத்தைச் சகல துறையிலும் தலைமை தாங்கும்படி அவர் சரியான தருணத்தில் அறைகூவல் விடுத்தார். இந்த உத்தரவின்படிதான் தொழிலாளர்களும் வறிய, கீழ் மத்திய விவசாயிகளும் பாடசாலைகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் சென்று புரட்சிகர ஐக்கியத்தை ஏற்படுத்தி போராட்டம், விமர்சனம், மாற்றம் என்ற பணிகளை நிறைவேற்றினார்கள்.

சுயநலத்துக்கு எதிரான போராட்டத்துக்கும் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்துக்கும் இடையில் உள்ள உறவையும் தோழர் மாசேதுங் புரிந்து கொண்டார். கூட்டுக்கு மேலாக தனி நபரின் நலனை முன் வைப்பது சுயநலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தனிப்பட்ட புகழ், பெருமையை நாடி ஓடுவதையும்



ஏனானில் உள்ள குகை முன்பாக. இங்குதான் மாவோ 13 ஆண்டு காலம் வாழ்ந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருளாதார நலன்களையும் சுகமான மென்மையான வாழ்க்கையையும் தேடுவது ஆகியவற்றை சோஷலிச சமுதாயம் முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து பெற்றுக் கொண்டது திரிபு வாதம் தோன்றுவதற்கு ஒரு காரணமாகும். இந்த சுயநலனை எதிர்த்துப் போரிடாமல் திரிபுவாதத்தை எதிர்த்துப் போராடுவது சாத்தியமில்லை. இதனால்தான் மாவோ கலாச்சாரப் புரட்சியின் இரண்டாம் ஆண்டில்''சுயநலத்தை எதிருங்கள்'' ''திரிபுவாதத்தை விமர்சியுங்கள்'' என்ற இரட்டை சுலோகத்தை முன்வைத்தார். உண்மையில் இந்த இரண்டு சோஷங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. தனிநபரின் நலனுக்கு மேலான கூட்டின் நலனை முன்வைக்காமல், சுயநலன்களை வென்று அடக்காமல், குறுகிய நலன்களுக்கு மேலாக சீனாவின் நலன்களை முன்வைக்காமல், சீனாவின் நலன்களுக்கு மேலாக முழு உலகத்தினதும் நலன்களை முன்வைக்காமல் திரிபுவாதத்தைத் தோற்கடிப்பது சாத்தியம் இல்லை.

உலகின் மதங்கள் அனைத்தும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சுயநலத்தை எதிர்த்துப் போராடும்படி அறிவுறுத்தி வருகின்றன. சிறிய முக்கியமற்ற ஒழுங்குகளைத் தவிர, அவை ஒருபோதும் வெற்றி பெறவில்லை. கலாச்சாரப் புரட்சியின்போது மாசேதுங் சிந்தனையின் வழி காட்டலில் முதல் தடவையாக சீனாவில் சுயநலனை எதிர்க்க கற்றுக் கொண்ட, தனிநபரின் நலனுக்கு மேலாக கூட்டு நலனை முன்வைக்கக் கற்றுக் கொண்ட, மற்றவர்களுக்கு இலேசான பணியை விட்டுப் பளுவான பணியைத் தாமே ஏற்றுக்கொள்ளக் கற்றுக் கொண்ட, தனிப்பட்ட புகழ், பெருமை, பொருளாதார நலன்கள், இலேசான மென்மையான வாழ்க்கை ஆகியவற்றை நாடி ஓடாமல் கூட்டு நலனுக்காக வேலை செய்யக் கற்றுக்கொண்ட, தன்னுடைய ஊர், மாகாணம் பற்றி மட்டும் சிந்திக்காமல் முழு சீனாவையும் பற்றிச் சிந்திக்கக் கற்றுக்கொண்ட புதிய சந்ததி மக்கள் தோன்றினார்கள். இது உலகின் இந்தப் பெரும்பகுதியில் மனிதனின் சிந்தனையில் ஏற்பட்ட மாபெரும் புரட்சியாகும்.

சீனப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தினால் மாத்திரம் போதாது. சீன மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேற்குடன் ஒப்பிட்டு உயர்த்தினால் மாத்திரம் போதாது. சீன மக்கள் கலாச்சாரப் புரட்சியின்போது இந்தத் தெளிவான உணர்வையும் அறிவையும் பெற்றிருந்தார்கள். இது சீனாவில் நடைபெற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த மகத்தான கொந்தளிப்பின் முக்கியமானதோர் விளைவு என நான் கருதுகின்றேன். உலகப் புரட்சியையும் வெற்றியாக்க வேண்டும் என்று அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இன்னும் விடுதலை பெறாத மக்களின் தலைவிதியை தம் மனதில் கொண்டு அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்று அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். 1968-ல் மாவோ சுட்டிக்காட்டியவாறு ''லெனினிய கண்ணோட்டத்தின்படி ஒரு சோஷலிச நாட்டின் இறுதி வெற்றிக்கு உள்நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தினதும் பரந்துபட்ட மக்களினதும் முயற்சிகள் தேவை என்பது மாத்திரமல்ல. உலகப் புரட்சியின் வெற்றி, முழுப் பூகோளத்திலும் மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பு அழித்தொழிக்கப்படுதல் ஆகியவற்றிலும் அது தங்கி இருக்கின்றது. அப்பொழுதுதான் முழு மனித குலமும் விமோசனம் பெற முடியும்''— இதனை சீன மக்கள் உறுதியாக உணர்ந்து கொண்டார்கள். உலகின் இன்னும் விடுதலை பெறாத பகுதிகளின் மக்கள் இந்தக் குரல் தெளிவாகவும் உணர்வுபூர்வமாகவும் வெளி வருவதற்காக எவ்வளவோ காலம் காத்திருந்தார்கள்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பத்தாண்டு காலம் சீனாவில் முதலாளித்துவத்தின் மீட்சியைத் தடுத்து நிறுத்தியது.

சீனாவில் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி இறுதியில் 1976-ல் தோழர் மாசேதுங் இறந்த பின்னர் தோல்வி கண்டது. ஆனால் இதனால் இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவம் குறைந்துவிட வில்லை. அதன் படிப்பினைகளும் குறைந்து விடவில்லை. எதிர்ப்புரட்சியின் அச்சுறுத்தல் பற்றித் தோழர் மாசேதுங்கே அறிந்திருந்தார். ஒரு கலாச்சாரப் புரட்சி போதாது, கம்யூனிச சமுதாயம் தோன்றுவதற்கு முன்னர் இன்னும் பல ஏன் நூற்றுக்கணக்கான கலாச்சாரப் புரட்சிகள் தேவையாயிருக்கும் என்று அவர் கூறி இருக்கிறார். அவர் சொன்னது தீர்க்க தரிசனமாக அமைந்து விட்டது.

சீனாவில் எதிர்ப்புரட்சி வெற்றி பெற்றதற்குக் காரணம் முதலாளித்துவ மீட்சிச் சக்திகள் இறுதியில் பலமானவையாக அமைந்ததாகும். மாவோ வாழும் வரை அவர்களால் முன்னுக்கு வர முடியவில்லை. நீடித்த கால சீனப் புரட்சியையும் பின்னர் சீனாவில் சோஷலிச நிர்மாணத்தையும் வெற்றிக்கு இட்டுச் சென்றதில் தோழர் மாசேதுங் வகித்த தனிப்பட்ட பாத்திரம் காரணமாக அவருடைய தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு மிகவும் பிரமாண்டமானதாக இருந்தது. அவரை எதிர்க்கத் துணிந்தவர்கள்



வெற்றி பெற முடியவில்லை. முயற்சித்தவர்கள் தரையில் வீழ்த்தப்பட்டார்கள். தெங்-சியாங்-பிங் கூடக் கலாச்சாரப் புரட்சியின் போது இரண்டு தடவை கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். சீன வரலாற்றில் மிகவும் நெருக்கடியான தருணத்தில் துரதிருஷ்ட வசமாக மாவோ இறந்தபடியால்தான் எதிர்ப்புரட்சிவாதிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் அதை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். இது பற்றி நான் பின்னர் குறிப்பிடுவேன்.

## நான் மாவோவைச் சந்தித்தேன்

சீனாவிலான மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்போது என்னுடைய வாழ்வில் ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. நான் தலைவர் மாசேதுங்கைச் சந்தித்தேன். எனக்கு மாசேதுங் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாத்திரமல்ல; மகத்தான சீனப் புரட்சி வெற்றிக்கு இட்டுச் சென்ற மாமனிதர் மாத்திரமல்ல; குழப்பங்கள் சூழ்ந்த நிலைமையிலிருந்து இன்றைய சீனாவை உருவாக்கிய மகத்தான தலைவர் மாத்திரமல்ல. அவர் எமது யுகத்தின் மாபெரும் மார்க்சிய—லெனினியவாதி. மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் பணியின் வாரிசு. அதைத் தொடர்ந்து நடத்தியவர். உலகில் இத்தகைய மகோன்னதமானவர் வேறு யாரும் இல்லை. வேறு எவரும் தனது வாழ்க்கை காலத்தில் இத்தகைய உலகளாவிய அன்பையும் ஆதரவையும் விசுவாசத்தையும் பெற்றிருக்கவில்லை. அவரை எழுபது கோடி சீன மக்கள் ஏறக்குறைய தெய்வமாக நேசித்தது மாத்திரமல்ல. உலகம் பூராவும் உள்ள கோடிக்கணக்கான அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் நேசித்தார்கள். ஆகவே இத்தகைய தலைவரைச் சந்திக்கவும் உரையாடவும் நான் ஏன் மிகுதியும் விரும்பினேன் என்பதை புரிந்து கொள்ள முடியும். சில உணர்வுகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. உண்மையில் பெரியவர்கள் முன்னிலையில் நிற்கும்போது ஏற்படும் உணர்வும் அத்தகையது.

சீன மக்கள் காங்கிரஸ் (பாராளுமன்றம்) கூடும் மக்கள் மகா மண்டபத்தின் வரவேற்பு அறை ஒன்றில் அவர் என்னை வரவேற்றார். 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி பிற்பகல் 5 மணிக்கு அது நிகழ்ந்தது. உலகப் பூர்ஷ்வாப் பத்திரிகைகள் அப்பொழுது தோழர் மாசேதுங் மிகுதியும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்று செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. அவர் பல மாதங்களாக ஒரு பேனாவைப் பிடித்து எழுத முடியாதிருக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றார். அவரை எப்பொழுதும் ஒரு தாதி தாங்கிப்பிடித்துச் செல்கின்றார். நடுக்கத்தை மறைக்க கோட்டுப் பொக்கெற்றுக்குள் அவர் தமது கைகளை வைத்திருக்கின்றார் இத்தியாதி செய்திகள் பரவலாக வெளியிடப்பட்டன. ஆனால் நான் அவரைச் சந்தித்த போது எந்தச் சுகவீனத்தையும் காண முடியவில்லை. ஒரு தாதியோ உதவியாளோ அங்கிருக்கவில்லை.

அவர் எவருடைய உதவியும் இன்றி முன்னுக்கு வந்து என்னை வரவேற்று சுமார் ஒரு மணி நேரம் என்னுடன் உரையாடினார். தோழர் மாசேதுங் இடைவிடாது புகை பிடிப்பவர். இது அவருடைய கெட்ட பழக்கம். அவருடைய டாக்டர்களால் புகை பிடிப்பதை விடும்படியோ குறைக்கவோ அவருக்கு அறிவுறுத்த முடியவில்லை. ஆனால் சிகரெட்டுக்குப் பதிலாக சுருட்டுப் புகைத்தார். சிகரெட்டிலும் பார்க்க சுருட்டுப் புகைப்பதன் தீமை குறைவு என்று கருதப்படுகின்றது. அவர் ஆசனத்தில் அமர்ந்தபோது அவருக்குப் பக்கத்தில் ஒரு பக்கெற் சுருட்டும் ஒரு சிகரெட்டும் இருந்தன. அவர் முதலில் சிகரெட்டைப் புகைத்து விட்டு தொடர்ந்து சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தார்.

எமது உரையாடலின்போது, அரசியல் குழு நிரந்தரக் கமிட்டியின் உறுப்பினரான தோழர் காங் ஷெங்கும் இன்னொரு மத்தியக் கமிட்டி உறுப்பினரும் இருந்தார்கள். அரபு நாடுகள் மீது இஸ்ரேல் ஆக்கிரமிப்பு இழைத்த 24 மணி நேரத்துக்குள் எமது சந்திப்பு நடந்தது. இன்னொரு உலக யுத்தம் வருமா என்ற கேள்வியுடன் உரையாடலை ஆரம்பித்த தோழர் மாசேதுங் மத்திய கிழக்கு நெருக்கடி பற்றி ஆழமான ஆய்வு ஒன்றை நடத்தினார். இஸ்ரேல் என்பது அமெரிக்கா பிரிட்டன், யூதர்கள் ஆகியோரின் ஏகபோகக் கும்பல்களின் கூட்டு சிருஷ்டி என்று அவர் ஆரம்பித்தார். இஸ்ரேலை உருவாக்குவதற்காக அரேபியர்கள் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். பாலஸ்தீனத்திலிருந்து சுமார் 20 லட்சம் அரபு அகதிகள் அண்டை அரபு நாடுகளில் வாழ்கின்றார்கள். இந்த யுத்தம் எண்ணெய்க்கான யுத்தம் என்று அவர் சுட்டிக்காட்டினார். எண்ணெய்க்கான யுத்தம் காரணமாக மத்திய கிழக்கு எப்பொழுதும் யுத்தத்தின் உஷ்ணப் படுக்கையாக இருந்து வருகிறது.

அரபு உலகில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று அவர் கூறினார். ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வின் எழுச்சி அரபு உலகத்தின் விசேஷ நிலைமையாகும். அத்திலாந்திக் சமுத்திரத்திற்கும் பாரசீகக் குடாவுக்கும் இடையில் 10 கோடி அரேபியர்கள்



வாழ்வதாலும் சீனாவில் 3 கோடி உட்பட உலகில் 70 முதல் 80 கோடி முஸ்லீம்கள் வாழ்வதாலும் இது முக்கியமானது. இந்த மக்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான, பிரிட்டனுக்கு எதிரான உணர்வின் தோற்றம் முக்கியமானது. சீனாவில் யூதர்களும் இல்லை. அரேபியர்களும் இல்லை. ஆனால் சீனா பாலஸ்தீனத்தின் விடுதலைக்கான நியாயமான இலட்சியத்தைப் பொறுத்தவரை அரேபியர்களின் பக்கத்தில் உறுதியாக நின்றது. சீனா ஒருபோதும் இஸ்ரேலை அங்கீகரித்ததில்லை. தொடர்ந்து நடைபெற்ற சம்பாஷனையில் மற்ற சீனத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். தாக்கினால் தவிர தாக்கக் கூடாது என்ற சோவியத் திரிபுவாதிகளின் புத்திமதி காரணமாக அரேபியர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்று அவர்கள் கருதினார்கள்.

மாவோ பின்னர் சீனா பற்றிப் பேசினார். சீனா மாபெரும் மாற்றங்களுக்கு ஊடாகச் சென்று கொண்டிருக்கிறது என்று அவர் கூறினார். இந்த மாற்றங்கள் முடிவு பெறவில்லை. தொடர்ந்து நடைபெறுகின்றன. ஏற்கனவே ஓராண்டாகி விட்டது. அதிகமாக இன்னொரு ஆண்டு நடைபெறலாம். இரண்டு ஆண்டுகள் இத்தகைய மகத்தான மாற்றங்களுக்கு ஒரு நீண்டகாலம் அல்ல.

இன்றும் சில உள்ளூர் ஆயுதக் கலவரங்கள் நடைபெறுகின்றன. பெருமளவு கைகலப்பு நடைபெறுகின்றது. வாய்ச் சண்டை, ஒலி பெருக்கிச் சண்டை, துண்டுப் பிரசுரச் சண்டை, சஞ்சிகைச் சண்டை முதலியன ஏராளம் நடைபெறுகின்றன. இது மிகப் பெரிய அளவிலான ஜனநாயகம், சீனாவில் இன்று வெளியாகும் புதியப் பத்திரிகைகளைக் கடைந்தெடுத்தால் (புதிய பத்திரிகைகளைப் பதிவு செய்யத் தேவையில்லை) அவற்றின் முழு முதலாளித்துவ உலகத்திலும் வெளியாகும் பத்திரிகைகளிலும் பார்க்கக் கூடுதலானவை என்று நான் சுட்டிக்காட்டினேன். மாவோ அது சரி என்று கூறி தனக்கே ஒவ்வொரு நாளும் 200 பத்திரிகைகள் வருகின்றன. அவற்றை எல்லாம் வாசிக்க தனக்கு நேரம் இருப்பதில்லை என்று கூறினார். அநேக பாடசாலைகளும் கல்லூரிகளும் குறைந்தது இரண்டு பத்திரிகைகளை வெளியிடுகின்றன என்று அவர் கூறினார்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் தொழிலாளர்களும், விவசாயிகளும், புரட்சிகர அறிவுஜீவிகளும்தான் பிரதான சக்தி என்று மாவோ சுட்டிக்காட்டினார். இவர்கள் அனைவரும் பாட்டாளி வர்க்க ஆட்கள் என்று கூறுவதற்கில்லை. சில கெட்டவர்களும் நுழைந்திருக்கிறார்கள். தாம் கடந்த காலத்தில் பயன்படுத்திய தலைமை முறைகளை இப்போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாவிக்க முடியாது என்று அவர் கூறினார். அந்த முறைகள் அதிகாரத்துவமானவை, பொது மக்களிடமிருந்து விலகியவை, தற்போது சகல நிறுவனங்களிலும் ஊழியர்களின் வேலையைக் கண்காணிக்க வெகுஜன ஸ்தாபனங்கள் இருக்கின்றன. வெளி நாட்டு அமைச்சில் கூட இருக்கின்றன.

மாவோ இச்சந்திப்பின் முடிவில் சீனாவின் எதிர்காலம் பற்றியும் உலகப் புரட்சிகர இயக்கம் பற்றியும் பெரும் நம்பிக்கை தெரிவித்தார். நான் அவரிடம் பிரியாவிடை பெற்றபோது உலகப் புரட்சிகர இயக்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல அவர் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்தினேன். மாவோ நான் சென்ற கார் வரை வந்து எனக்குப் பிரியாவிடை தந்தார். பின் கார்ச் சாரதி எனக்குப் பெரிதும் நன்றி சொன்னார். மாவோவை மிகவும் அண்மையில் நின்று பார்க்கும் பாக்கியத்தை அவர் பெற்றார். நான் விருந்தினர் மாளிகைக்குச் சென்றபோது எனது மகள் மாவோவின் கரங்களைக் குலுக்கிய எனது கரங்களைக் குலுக்கினார். மாவோ ஏற்படுத்தும் மதிப்பு அத்தகையது.

## பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயகத்தை நிராகரிக்க அறைகூவல்

அறுபதாம் ஆண்டுகளில் எமது புனரமைக்கப்பட்ட மார்க்சிய-லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சி உக்கிரமான சித்தாந்த இயக்கம் ஒன்றை நடத்தி மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் புரட்சிகரக் கோட்பாடுகளைப் பரப்பியது. அது உறுதியாகவும் இடைவிடாமலும் நவீன திரிபுவாதம் ட்ரொஸ்கியவாதம் ஆகிய வற்றின் தத்துவங்களை அம்பலப்படுத்தியது. நவீனதிரிபுவாதத்தின் தவறான தத்துவங்களையும் சோவியத் யூனியனிலும் நவீன திரிபு வாதிகளால் ஆளப்படும் மற்ற நாடுகளிலும் முதலாளித்துவம் மீட்கப்பட்டதையும் அது அம்பலப்படுத்தியது. சீனாவில் சோஷலிச நிர்மாணத்தில் ஏற்பட்ட சாதனைகளை அது பிரச்சாரம் செய்தது. அது குறிப்பாக சீனாவிலான மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் இயல்பையும் அர்த்தத்தையும் இந்தப் புரட்சி முழு சர்வதேசிய கம்யூனிச இயக்கத்திலும் ஏற்படுத்த இருந்த செல்வாக்கையும் பிரச்சாரம் செய்தது.

மாசேதுங் சிந்தனையை இன்றைய கால மார்க்சியம் — லெனினியம் என ஏற்றுக்கொள்ள வேண்டும். தோழர் மாசேதுங்கை எமது யுகத்தின் மாபெரும் மார்க்சிய — லெனினியவாதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதன் முக்கியத்தை மார்க்சிய — லெனினியவாதிகள் வலியுறுத்தினார்கள். லெனின் மார்க்சியத்தை லெனினியம் என்ற கட்டத்துக்கு சிருஷ்டிகரமாக வளர்த்ததுபோல தோழர் மாசேதுங் மார்க்சியம்—லெனினியத்தை மேலும் உயர்த்த முற்றிலும் புதியதோர் கட்டத்துக்கு வளர்த்தார். இதையே இன்று மாசேதுங் சிந்தனை என்று அழைக்கின்றோம். மாசேதுங் சிந்தனை என்பது மார்க்சியத்தின் இன்னொரு வளர்ச்சியாகும்.



லெனின் காலத்தில் லெனினியத்தை எதிர்த்தவர்கள் உண்மையில் மார்க்சியத்தை எதிர்த்தார்கள். அதுபோலவே இன்று மாசேதுங் சிந்தனையை எதிர்ப்பவர்கள் மார்க்சிய — லெனினியத்தை எதிர்க்கின்றார்கள். இன்று மார்க்சிய — லெனினியத்துக்கு ஆதரவு என்பது மாசேதுங் சிந்தனைக்கு ஆதரவு என்பதாகா விட்டால் அதில் அர்த்தம் இல்லை. மாசேதுங் சிந்தனை விருத்தியாகிய மார்க்சியம் ஆகும். அது உலகில் உள்ள மிகவும் முன்னேறிய புரட்சிகர சிந்தனையாகும். அது சகல அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் புரட்சிகர இயக்கத்தின் ஒரேயொரு சரியான வழிகாட்டியாகும். இவற்றை நாம் சுட்டிக் காட்டினோம்.

அரசு பற்றிய மார்க்சியத் தத்துவத்தை நாம் பிரச்சாரம் செய்தோம். சுரண்டலின் காவல் நாயாகப் பணிபுரியும் அடக்கு முறையான பூர்ஷ்வா வர்க்க அரசு இயந்திரத்தை வன்முறை மூலம் உடைத்து நொறுக்காமல் சோஷலிசத்தை நோக்கி எவ்விதத்திலும் முன்னேற முடியாது என்பதை நாம் பிரச்சாரம் செய்தோம். இந்த மேற்கோளினதும் மாசேதுங்கின் போதனைகளினதும் அடிப்படையில் நாம் நீடித்த கால மக்கள் யுத்தம், கிராமிய புரட்சித் தளப்பிரதேசங்களை அமைப்பதன் முக்கியத்துவம், இறுதியாக எதிரியைத் தூக்கியெறிய மக்கள் படை ஒன்றைக் கட்டி அமைத்தல் ஆகியவற்றையும் பிரச்சாரம் செய்தோம். இந்த மார்க்சிய—லெனினியக் கருத்துக்கள் 1969-ல் நடைபெற்ற எமது 9-வது மாநாட்டில் கட்சியால் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. முதல் தடவையாக நாம் தெளிவாக ஆயுதப் போராட்டம்தான் பூர்ஷ்வா வர்க்க பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு மாற்று வழி என்பதை முன்வைத்தோம். இது எமது கட்சியின் மிக முக்கியமான மாநாடாகும்.

## தொழிற்சங்க சீர்திருத்தவாதம்

சீனக் கலாச்சாரப் புரட்சியின் படிப்பினைகளிலிருந்தும் வந்ததான எமது கட்சியின் உயர்ந்த மார்க்சிய — லெனினிய உணர்வின் பயனாக நாம் இடதுசாரி இயக்கத்தில் நிலவத் தொடங்கிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிற்சங்கங்களில் செயற்படும் சீர்திருத்தவாத முறையின் சரி பிழை பற்றிப் பாரதூரமாகச் சிந்திக்கத் தொடங்கினோம். இது 1969 ஆகஸ்ட் 5-ம் திகதி புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் விசேட மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டது. அச்சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி என்ற முறையில் நான் இந்த மாநாட்டிற்கு சமர்பித்த அறிக்கையில் பிரேரணைகளை முன்வைத்தேன். இப்பிரேரணைகள் மூலம் தொழிற்சங்க இயக்கம் பொருளாதாரவாதம், சீர்திருத்த வாதம், அரசாங்கமும் முதலாளிகளும் திரிபுவர்த ட்ரொஸ்கியவாத தொழிற்சங்கத் தலைவர்களும் உழைக்கும் வர்க்கத்தை தள்ளிவிட நினைக்கும் தொழிற்சங்க அரசியல் ஆகிய சகதிகளுள் புதைந்து விடாமற் காப்பாற்ற நினைத்தேன்.

உழைக்கும் வர்க்கத்தின் அடிப்படை உணர்வுகளுள் ஒன்று தமது பொருளாதார கோரிக்கைகளுக்காகப் போரிடுவதாகும். இது முதலாளித்துவ அமைப்புக்குள்ளே தானாக தலைதூக்கும் ஒரு விஷயமாகும். இது தமது உழைப்புச் சக்தியை ஒரு பண்டமாக விற்க வேண்டி ஏற்படும் நிலைமையில் தமது உழைப்புச் சக்தியின் விலை குறித்து முதலாளிகளுடன் தொழிலாளர் பேரம் பேச வேண்டிய தேவையிலிருந்து ஏற்படுகிறது. ஆகவே கம்யூனிஸ்டுகள் தொழிலாளரின் பொருளாதாரப் போராட்டங்களினின்றும் விலகித் தூர நிற்க முடியாது. இந்தப் போராட்டங்களில்தான் ஒரு தொழிலாளியின் உடனடி நலனே தங்கியுள்ளது.

ஆனால் அதே நேரம் எல்லாத் தொழிற்சங்க வேலைகளிலும் சீர்திருத்தவாதம் என்ற அம்சம் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கப் போராட்டங்களிலும் ஈடுபடும் போது நாம் மார்க்ஸ் கூறியது போல் விளைவுகளை எதிர்த்துப் போராடுகிறோமேயொழிய காரணங்களை எதிர்த்துப் போராட வில்லை. இந்தப் போராட்டங்கள் அனைத்தும் இருக்கின்ற முதலாளித்துவ கட்டுக்கோப்புக்குள் உள்ள தொழிலாளியின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான முயற்சிகளேயாம். நாம் பொருளாதாரப் போராட்டங்களில் மட்டுமே ஈடுபடுவோமே யானால் எமது செயற்பாடுகள் எளிதில் முற்றுமுழுதான சீர்திருத்த வாதமாக கெட்டழிவதுடன் தொழிலாளருக்குச் சிறிய சலுகை களைப் பெற்றுத்தரக்கூடிய இப்போதிருக்கின்ற முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்க உதவுவதாகவே அமையும்.

தொழிற்சங்கங்கள் உழைக்கும் வர்க்கத்தின் போராட்ட உறுப்புகளாகவே தோற்றம் பெற்றன. ஆனால் காலப்போக்கில் முதலாளித்துவ அமைப்பின் ஒரு பகுதியாக்குவதும் தொழிற்



சங்கத்தின் அதிகார முதலாளித்துவத் தலைமையை விலைக்கு வாங்கி அத்தலைமையின் நலன்களை முதலாளித்துவ அமைப்பின் வாழ்வுடன் இணைப்பதும் தனக்கு நன்மையே தரும் என்று உணர்ந்து கொண்டது.

இந்த எண்ணத்தை மனதிற் கொண்டு புத்திசாலிகளான முதலாளிகள் தொழிலாளர் ஸ்தாபனம் அமைக்கவும் வேலை நிறுத்தம் செய்யவும் தொழிலாளரை அனுமதித்தது மாத்திரமல்ல அதற்கு மேலாகவும் சென்றனர். தொழிற்துறை நீதிமன்றங்கள், தொழிற்துறை மன்றங்கள், சம்பளச்சபைகள் போன்ற பல மத்தியட்ச முறைகள் அவர்கள் புகுத்தினர். இதனால் தொழி லாளர் சட்டத்தரணிகளிலும் திறமையான தொழிற்சங்கத் தலைவர்களிடம் நம்பிக்கை வைத்தார்கள். இவர்கள் இந்த நிறுவனங்களில் தொழிலாளரை பிரதிநிதித்துவம் செய்தார்கள். தொழிலாளர் தமது போரிடும் சக்தியிலும் பார்க்க இந்த முறை களில் அதிக நம்பிக்கை வைக்கும் நிலைமை ஏற்பட்டது. இந்த முறையினால் தொழிற்சங்க அதிகாரி தோன்றுகின்றார். இவருக்கு தொழிலாளர் நிதிகளிலிருந்து பெரிய சம்பளம் கொடுக்கப்படு கிறது. இவருக்கு இந்தத் தொழிற்சங்க வேலை ஒரு பாதுகாக் கப்பட வேண்டிய நலனாகிறது. இவர் பல ஊழியர்களைக் கொண்ட பெரிய அலுவல்களிலிருந்து செயற்படுகின்றார். சட்டத் தரணிகளைக் கூட வைத்திருக்கின்றார். சில சமயங்களில் இந்தத் தொழிற்சங்க அதிகாரி அவருக்கு எதிரே இருக்கும் முதலாளி யிலும் பார்க்க நிதி வசதி கூடியவராக இருக்கின்றார். இத்தகைய ஆட்கள் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதில் நாட்டங்கொண்டவர்கள். ஏனென்றால் அவருடைய வாழ்வும் வசதியும் அதனுடன் இணைந்துள்ளது. இவருக்கு புரட்சியில் அக்கறை இருக்க முடியாது இதனால்தான் பல நாடுகளில் கம்யூனிச கட்சித் தொழிற்சங்கத் தலைவர்கள் முதலில் நவீன திரிபுவாத நிலைப்பாட்டை எடுத்தவர்கள் ஆகினார்கள்.

இத்தகைய தொழிற்சங்கச் சீர்திருத்தவாதம் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மாத்திர மல்ல இலங்கை போன்ற நாடுகளிலும் ஏற்பட்டது. இத்தகைய சீர்திருத்தவாதத் தொழிற்சங்க வேலையினாலும் தொழிலாளர் போராட்டத்தை வெறும் பொருளாதாரப் போராட்டமாகக் கருது வதனாலும் தொழிலாளர்கள் நியாயமான முறையில் வெறுப் படைந்தனர். சில நேரங்களில் சகல தொழிற்சங்க வேலையும் பிற்போக்கானது சீர்திருத்தவாதமானது. ஆகவே தொழிற்சங்க வேலையைச் செய்யாது விடவேண்டுமென்று கருதினார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாம் தொழிற்சங்கப் போராட்டங்களின் முக்கியத்துவத்தைக் கூடுதலாக மதிப்பிடக்கூடாது. அவற்றுடன் மட்டும் நின்று விடவும் கூடாது. முதலாளிக்கெதிரான பொருளாதாரப் போராட்டங்களில் தொழிலாளருக்கு அரசியல் ரீதியில் போதனையளிப்பது எமது கடமையாகும். இது வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவமாகும். இதிலிருந்து இந்தப் பொருளாதாரப் போராட்டங்களை ஏதோ ஒரு கட்டத்தில் தொழிலாளர்கள் அபரிமிதப் பெறுமதியை உருவாக்க முதலாளிகளுக்குத் தமது உழைப்புச் சக்தியை விற்க நிர்ப்பந்திக்கும் அந்தச் சுரண்டல் அமைப்பு முறையை ஒழிப்பதற்கான அரசியற் போராட்டமாக மாற்றும் அவசியத்தைத் தொழிலாளருக்குப் போதிக்க வேண்டும்.

மார்க்ஸ் தமது ''பெறுமதி, விலை லாபம்'' என்ற நூலில் இதனை மிகவும் அழகாகக் கூறியுள்ளார். ''இந்தச் சம்பள அமைப்பு முறையில் அடங்கியுள்ள பொதுவான அடிமைத்தனத்தை தவிர தொழிலாளி வர்க்கம் இந்த அன்றாடப் போராட்டங்களில் இறுதி முடிவுகள் பற்றி அவ்வளவுக்குத் தலையை உடைத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் விளைவுகளுடன்தான் போராடுகிறார்கள் இந்த விளைவுகளுக்கான காரணங்களுடன் அல்ல என்பதையும் அவர்கள் கீழ்நோக்கிச் செல்வதைத் தடுக்கிறார்களே தவிர திசைப்போக்கி மாற்றவில்லை என்பதையும் அவர்கள் தணிப்பு மருந்துகளைப் போடுகிறார்களே தவிர நோயைத் தீர்க்கவில்லை என்பதையும் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.''

தொழிலாளர்களின் அரசியல் உணர்வை உணர்த்துவதற்கும் பொருளாதார சித்தாந்தப் போராட்டங்கள் மூலம் அவர்களுடைய வர்க்க உணர்வை ஆழமாக்குவதற்கும் மாத்திரம் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம் என்ற நோக்கம் எமது உள்ளங்களில் தெளிவாக இருக்கும்வரை, தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டத்தை அரசியல் போராட்டமாக மாற்றும் அவசியத்தை அதாவது முதலாளித்துவ அமைப்புக்குள் தமது நிலைமையைச் சீராக்குவதற்கான போராட்டத்தை முழுதாக முதலாளித்துவச் சுரண்டலை அழிப்பதற்கான போராட்டமாக மாற்றுவதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்யும்வரை, தொழிற்சங்க நடவடிக்கையில் எமது நேரத்தையும் ஊழியர்களையும் விரயமாக்காமல் இருக்கும்வரை, தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தேவைக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்காதவரை, அதாவது எமது நடவடிக்கைகள் அனைத்திலும் அரசியலை ஆணையில் வைக்கும்வரை நாம் அப்பொழுது புரட்சிகரத் தொழிற்சங்க வேலை செய்பவர்கள் ஆவோம். பொருளாதாரப் போராட்டங்கள் அப்பொழுது உயர்ந்த அரசியல் போராட்டத்திற்கு அஸ்திவாரத்தை அமைக்கும்.



கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் தொழிற் சங்க சம்மேளனத்திற்குள்ளும் இந்தக் கலந்துரையாடல்கள் நடந்தபோதும் அதைச் சுற்றி அமைந்த காலத்தின் போதுதான் நான் தொழிற்சங்கத் துறையில் செய்த வேலை குறித்து ஒரு பாரதூரமானதும் விமர்சன ரீதியானதுமான மீளாய்வு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. விளைவு ஐம்பமடித்துக் கொள்ளுமளவுக்கு அமையவில்லை. நான் எனது அரசியல் வாழ்க்கையில் கணிசமானளவு பகுதியை தொழிற்சங்கத்துறையில் செலவிட்டுள்ளேன். நான் மற்றெந்தத் தொழிற்சங்கத் தலைவரையும் விடத் தனிப்பட்ட முறையில் சம்பளச் சபைகள், கைத்தொழிற் கோடுகள், தொழில் மன்றங்கள் ஆகியன மூலம் பல பொருளாதார வெற்றிகளையும் தொழிலாளரை மீண்டும் வேலைக்கு அமரச் செய்வதையும் செய்தேன் என்று கூறினால் மிகையாகாது. இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனமும் இலங்கையின் மிகப்பெரிய தொழிற்சங்க நிலையங்களில் ஒன்றாகியதோடு அது தொழிலாளரால் பெரிதும் மதிக்கப்பட்டும் முதலாளிகளால் பெரிதும் அஞ்சப்பட்டும் வந்தது. இது தொழிலாளர் மத்தியில் புரட்சிகர உணர்வை வளர்க்க உதவி செய்ததா அல்லது இது சீர்திருத்தவாதத்திற்கே இட்டுச் சென்றதா என்று என்னையே நான் கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். எந்த ஒரு பகுதித் தொழிலாளரனதும் பொருளாதார மட்டத்தை நாம் உயர்த்தும்போதும் அந்த வசதி பெற்ற தொழிலாளர் புரட்சி அரசியலில் ஈடுபடுவதையோ அல்லது சீர்திருத்தவாதத் தொழிற் சங்கங்களின் பக்கம் போவதையோ நான் பல தடவை பார்த்திருக்கிறேன். ஒரு தெளிவான புரட்சிகர தொலை நோக்கின்றி நான் தொழிற்சங்க வேலை செய்து வந்துள்ளேன் எனத் தெளிவாகத் தெரிகிறது.

நாம் தொழிலாளரின் தொழிற்சங்க போராட்டங்களுக்குத் தலைமை தாங்கத்தான் வேண்டுமென்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. காரணம் நாம் தொழிலாளரின் அன்றாடப் பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து எம்மை விலக்கிக் கொள்வது புரட்சியின் வாகனமாய் உள்ள தொழிலாளரிலிருந்து எம்மைப் பிரித்துக் கொள்வதாகும். இத்தகைய தொழிற்சங்க வேலைகளுக்கு நாம் கொடுத்த அழுத்தத்திலும் அதை அரசியல் மயப்படுத்த தவறியதிலும் அதனைப் புரட்சிகரப் பாதையில் இட்டுச் செல்லாததிலும்தான் தவறியிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிற்சங்க வேலைக்கும் புரட்சிகர வேலைக்கும் இடையில் இன்னொரு அடிப்படை முரண்பாடு இருக்கிறது. அடிப்படையில் சகல தொழிற்சங்க வேலையும் பகிரங்கமானது சட்டரீதியுள்ளது. புரட்சிகர வேலை அனைத்தும் இரகசியமாக செய்யப்படவேண்டும். மறைத்து வைத்திருக்க வேண்டும். இலங்கையில் சகல தொழிற் சங்கங்களையும் அரசாங்கத்திடம் பதிவு செய்ய வேண்டும். தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் அனைவரினதும் பெயர்களை நாம் சமர்பிக்க வேண்டும். தொழிற்சங்க வேலை என்றால் நாம் அரசாங்க அதிகாரிகளுடனும் முதலாளிகளுடனும் தொடர்பு கொள்கின்றோம். அவர்கள் எம்மை எப்பொழுதும் சட்டங்கள் விதிகள் உடன்படிக்கைகள் ஆகியவற்றில் சிக்க வைத்து விடுகின்றார்கள். உதாரணத்திற்கு கூட்டு ஒப்பந்தம் இருக்கும்பொழுது வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்பது போன்ற விதிகளில் மாட்டி வைத்திருக்கிறார்கள். இது பாராளுமன்ற அரசியல் வேலைக்கு இசைவானது, புரட்சிகர வேலைக்கு அல்ல. இதில் இருந்து தப்ப வழி என்ன? ஒரு கம்யூனிஸ்ட் ஒரு தொழிற் சங்கச் செயலாளராக அல்ல மக்களின் மன்றமாக விளங்க வேண்டும் என்று லெனின் ஒரு தடவை கூறினார். கூடுதலான கம்யூனிஸ்ட் ஊழியர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகக்கூடாது. தமது நேரத்தில் கூடுதலான பகுதியைத் தொழிற்சங்க வேலையில் செலவழிக்கக் கூடாது. மாறாக தொழிற்சாலை மட்டத்திலுள்ள தலைவர்களை வளர்த்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். கம்யூனிஸ்ட் தலைவர்கள் அவர்களுக்குப் பின்னாலிருந்து ஆலோசனை வழங்கலாம். மிகவும் முக்கியமானது என்னவென்றால் தொழிற்சங்க உறுப்பினர்களை அரசியல் மயமாக்குதல் அரசியல் வகுப்புகளையும் விரிவுரைகளையும் நடத்துதல், அரசியல் ரீதியில் மிகவும் வளர்ந்த தொழிலாளர்களை தொழிற்சாலைக் குழுக்களில் அல்லது சிறு குழுக்களில் ஸ்தாபன ரீதியாகச் சேர்த்தல், அவர்களைப் புரட்சிகரக் கட்சி ஒன்றில் சேர்த்தல், புரட்சி என்ற நோக்கத்தை தொழிலாளர் முன்னிலையில் எப்பொழுதும் வைத்திருத்தல், புரட்சியின் வெற்றிக்காக ரகசியத் தயாரிப்புச் செய்தல் — இவையாகும்.

முன்னர் தொழிற்சாலைகளில் கட்சிக் குழுக்களும் சிறுகுழுக்களும் அமைக்கப்பட்டன. இப்பொழுது பிரதேசரீதியாக குழுக்கள் அல்லது சிறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. தொழிற்சாலைக் குழுக்கள் இருக்கும் இடங்களில் கூட அவை பொருளாதாரப் போராட்டங்களை பற்றி விவாதிக்கும் கருத்தரங்குகள் ஆகின்றது. அரசியல் (அதாவது பாராளுமன்ற அரசியல்) பிரதேசரீதியான



குழுவினாற் கையாளப்படுகின்றது. அழுத்தம் வர்க்கப் போராட்டத்திலிருந்து பாராளுமன்றப் போராட்டத்திற்கு மாறியுள்ளதையே காட்டுகின்றது. தொழிலாளி ஒரு தேர்தலின் வாக்காளனாகவே கருதப்படுகிறான். ஒரு புரட்சியின் போராளியாக அல்ல.

தொழிலாளியின் சம்பளம் அவன் கைக்குப்போகு முன்னரே தொழிற்சங்க சந்தாவை கழிக்கும் முறை தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட இன்னொரு தீய பழக்கமாகும். இதனால் சீர்திருத்தவாதம் ஊக்குவிக்கப்படுகிறது, தொழிற்சங்க இயக்கம் முதலாளித்துவத்தின் திசையிற் திருப்பப்படுகின்றது. முதலாளித்துவ அரசியல் நடைமுறை வழக்காகின்றது. 1970-ல் ஐக்கிய முன்னணி அரசாங்க அதிகாரத்திற்கு வந்ததற்குப் பின்னர் இது உத்தியோகபூர்வமான கொள்கை ஆகியுள்ளது. இது முதலாளிகளைப் பொறுத்தவரை ஒரு கெட்டித்தனமான நடவடிக்கையாகும். இதனால் முதலாளிக்குத் தொழிற்சங்கத்திற் சேர்ந்த அனைவரையும் யாரெனத் தெரியவருகின்றது. அத்துடன் தொழிற் சங்கத் தலைவர்களையும் கட்டிப் போடுகிறது. இன்றைய தொழிற்சங்க அதிகாரிகள் மிக சொற்ப தொகையுடன் கஷ்டப்பட்ட முந்திய காலத் தொழிற்சங்கத் தலைவர்களுடன் ஒப்பிடும் போது மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உடையவராய் இருக்கிறார்கள். இதற்குக் காரனம் முதலாளிகள் சந்தாவைக் கழித்து தொழிற்சங்கங்களுக்கு அனுப்புவதாகும். இப்பொழுது இந்தத் தொழிற்சங்கத் தலைவர் முதலாளியையும் அவருடைய சட்டங்களின் விதிகளையும் மீற முடியாது. தொழிற்சங்கம் இசைவாக இயங்காவிட்டால் சம்பளம் கழிக்கப்படுவது நிறுத்தப் படும் என முதலாளி எப்பொழுதும் அச்சுறுத்துகின்றதை தொழிற் சங்க அதிகாரி ஒருபோதும் விரும்பமாட்டார். ஏனென்றால் முதலாளியிடமிருந்து சந்தாக் காசோலைகள் வராவிட்டால் இவருடைய உயர்ந்த வாழ்க்கைத்தரம் மறைந்துவிடும். முன்னிலும் பார்க்க வேலைநிறுத்தங்கள் குறைந்ததற்கு இது தான் பிரதான காரணம்.

இந்தத் தீயபழக்கத்தினால் தலைவர்கள் தொழிலாளரிடம் இருந்து தனிமைப்படுத்தப்படுகிறார்கள். முன்னர் தொழிலாளரிடம் தனியத் தனியச் சென்று சந்தாப் பணம் சேர்த்தபோது தலைவர்கள் சாதாரண உறுப்பினருடன் தொடர்பு வைத்திருந்தார்கள். தொழிலாளியின் பிரச்சினை அல்லது அவருடைய வேலைத் தளத்திலுள்ள பிரச்சினை தலைவர்களால் திருப்திகரமான முறையில் கவனிக்கப் படாவிட்டால் தொழிலாளி சந்தா கொடுப்பதை மறுக்க முடியும். இந்தத் தொடர்பு நேரடியானது. சந்தா கொடுப்பதில்லை என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அச்சுறுத்தித் தொழிலாளர் தலைவர்கள் மீது அமுக்கத்தைத் திணிக்க முடியும். தலைவர்களும் சந்தாவை இழந்து விடுவோம் என்ற அச்சத்தில் உறுப்பினர்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டி ஏற்படுகின்றது. இன்று முதலாளி காசோலை மூலம் தொழிற்சங்கத்திற்கு சந்தாப் பணத்தை அனுப்புகின்றபடியால் தொழிலாளி தலைவர்கள் மீது அமுக்கத்தைத் திணிக்கும் ஒரு வழி முறையை இழந்துள்ளார். இன்று நாட்டிலுள்ள முழுத் தொழிற் சங்க இயக்கமும் இதில் மூழ்கியிருக்கின்றது. நாம் இதிலிருந்து மீள்வோமா என்பது சந்தேகம். பிரித்தானியத் தொழிற்சங்க இயக் கத்தில் தொழிலாளி பியர் அருந்தச் செல்வதற்கு முன் தவறாமல் தனது சந்தாவைச் செலுத்துகின்றார் என்று கூறப்படுகின்றது. இது நல்ல விஷயம். ஆனால் இதனால் அந்தத் தொழிற்சாலை இயக்கம் சீர்திருத்தவாதம் குறைந்ததாகி விடவில்லை.

இன்று இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் சீர்திருத்தவாதச் சகதியில் மூழ்கியிருக்கின்றது. அதனை வெளியே இழுத்துப் புரட்சிகரப் பாதையில் இட்டுச் செல்வது மிகக் கஷ்டமானதோர் பணியாகும்.

பூர்ஷ்வாப் பாராளுமன்ற ஜனநாயகத்தை எமது கட்சிதான் இலங்கையில் முதலாவதாகக் கண்டித்து எதிர்த்தது. இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக 1970 ஏப்ரல் பாராளுமன்றத் தேர்தலின் போது பூர்ஷ்வா வர்க்கப் பாராளுமன்றம் என்ற மோசடியை நிராகரிக்கும்படி மக்களுக்கு அறைகூவல் விடுத்ததும் எமது கட்சிதான். இந்தத் தேர்தலில் எந்த விதத்திலும் ஈடுபட வேண்டாமென்று அது கூறியது. பூர்ஷ்வா வர்க்கப் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது நிர்வாணமான மூலதனத்தின் சர்வாதிகாரத்தை மூடி மறைப்பதற்கான ஒரு அலங்காரம் ஒரு முக்காடு என்று நாம் பிரகடனம் செய்தோம். மக்களைக் குழப்பி அடித்து அவர்களுடைய வர்க்க உணர்வை மழுங்கடித்து ஆயுதப் படைகளென்ற அதிகாரத்தின் உண்மையான ஆசனங்ளிலிருந்து அவர்களின் பார்வையை திசை திருப்பிவிடும் முயற்சியே இந்தப் பூர்ஷ்வா வர்க்கப் பாராளுமன்ற ஜனநாயகமாகும். ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் பூர்ஷ்வா வர்க்கப் பொருளாதார அமைப்பு முறியடிக்கப்படாதிருக்கும்வரை, அதனைப் பாதுகாக்கும் அடக்குமுறையான அரசு எந்திரம் வன்முறை மூலம் நொறுக்கப் படாதிருக்கும்வரை எத்தகைய அரசாங்கம் தானும் பூர்ஷ்வா வர்க்கப் பாராளுமன்றத் தேர்தல் மூலம் பதவிக்கு வந்தாலும் அதனால் மக்களின் அடிப்படை பிரச்சினை எதனையும் தீர்க்க முடியாது என்று நாம் பிரகடனம் செய்தோம்.



ஒரு சிலரே எமது அறைகூவலை ஏற்றுக்கொண்டார்கள் (சில நூறு தொழிலாளர்கள் மட்டும் தேர்தற் சாவடிக்குச் சென்று அரிவாள் சம்மட்டி இலச்சினையை வாக்குச் சீட்டில் பொறித் தார்கள்) எமது எச்சரிக்கை ஒரு வருடத்திற்குள் உண்மையாகிறது.

சற்றுப் பின்னோக்கிச் செல்வோம். ஐந்தாண்டு காலம் நீடித்த டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தின்போது கடுமை யான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டன. இதனால் உலக வங்கியின் உத்தரவுக்கிணங்கி, அரசாங்கம் ரூபாயின் மதிப்பை 25% குறைத்தது. மேலும் அந்நிய செலாவணி உரிமைப் பத்திர திட்டமொன்றைப் புகுத்தி உண்மையில் நாணய மதிப்பிறக்கம் செய்தது. அரிசிப் பங்கீடும் அரைவாசியாகக் குறைக்கப்பட்டதும் கூட்டுச் சக்திகள் இந்தப் பிரச்சினைகள் ஒட்டி யூ.என்.பி.-க்கு எதிராகப் போராட உறுதி பூணவில்லை. 1967-லும் 1968-லும் நடந்ததுபோல் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டபோது அவை வேலை நிறுத்தல்களில் ஈடுபட்ட சகல சக்திகளுடனும் ஒத்துழைக்க மறுத்து வெற்றியை சீர்குலைத்தன. 1953-ல் நடைபெற்றது போன்ற ஹர்த்தால் வகையான புரட்சிகர சம்பவம் ஏதும் நடந்து விட்டால் யூ.என்.பி. தேர்தலைப் பின்போட்டுவிடும் எனவும் பாராளுமன்றத்தின் மூலம் தாம் அதிகாரத்திற்கு வரும் வாய்ப்பு இழக்கப்பட்டுவிடும் எனவும் அஞ்சினார்கள். 1968-ல் லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி கெனமன் திரிபுவாதக் கும்பல் ஆகியன பொது வேலை திட்டம் ஒன்றின் அடிப்படையில் ஐக்கிய முன்னணியொன்றை அமைக்க உடன்பாடு கண்டனர். இந்த வேலைத் திட்டத்தை கூறப்படும் இடதுசாரிக் கட்சிகளும் சேர்ந்து தயாரித்த போதிலும் திரு. பண்டாரநாயக்காவின் 1956 எம்.ஈ.பி. தேர்தல் வேலைத் திட்டத்திலும் பார்க்க மிதமானதாக இருந்தது. இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அந்நிய மூலதன நலன்களை தேசிய மயமாக்குவது பற்றி அதில் ஒரு வார்த்தைதானும் காணப்படவில்லை.

1968-ல் செக்கோஸ்லோவாக்கியாவுக்கு எதிரான சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு நடந்தது. சோவியத் நவீன திரிபுவாதம் சோவியத் சமூக ஏகாதிபத்தியமாக வளர்ந்ததை அது காட்டியது. சொல்லில் சோஷலிசம் செயலில் ஏகாதிபத்தியம் என்ற ரீதியான நாடுகளைக் குறிக்க லெனின் உருவாக்கிய வார்த்தைதான் சமூக ஏகாதிபத்தியம் என்பது. எமது கட்சி இந்த ஆக்கிரமிப்பைக் கண்டித்து சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் அசிங்க ரூபத்தை அம்பலப்படுத்தியது. அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் நான் பேர்லினில் உலகத் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் பொதுச்சபைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டமொன்றில் பங்கு பற்றி விட்டுத் திரும்பியபோது பிராக் மூலம் வந்தேன். நான் கடைசியாகக் கலந்து கொண்ட உலகத் தொழிற்சங்க சம்மேளனக் கூட்டம் இதுதான். இக்கூட்டத்தில் நான் ஒருவன்தான் மார்க்சிய — லெனினியவாதி. சீனா, அல்பேனியா, இந்தோனேஷியா, கொரியா, ஜப்பான் ஆகிய வற்றிலிருந்து எந்தப் பிரதிநிதியும் கலந்து கொள்ளவில்லை. வியட்நாம் ஏற்கனவே ஊசலாடத் தொடங்கிவிட்டது. செக்கோஸ் லோவாக்கியாவுக்கு எதிரான சோவியத் ஆக்கிரமிப்பு என்ற பிரச் சினையை எழுப்ப இக்கூட்டத்தில் நானெடுத்த முயற்சிகளை உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் திரிபுவாதத் தலைவர்கள் தடுத்து விட்டார்கள். இக்கூட்டத்திற்குப் பின்னர்தான் திரிபுவாதி களின் ஆதிக்கத்திலுள்ள இந்தச் சம்மேளனத்தில் இருப்பதால் எந்தப் பயனுமில்லையென்று கருதி சி.டி.யு.எப். அதிலிருந்து விலகிக் கொண்டது.

## பிரெஞ்சுக் குட்டிப் புரட்சி

1968-ல் பிரசித்தி பெற்ற பிரெஞ்சுக் குட்டிப் புரட்சி ஏற்பட்டது. இதனால் பிரான்ஸ் உண்மையில் ஸ்தம்பிதமாகியது. மாணவர்களின் ஆட்சேபனை இயக்கமாக ஆரம்பித்த இப்புரட்சியில் படிப்படியாக பிரான்ஸ் நாட்டின் முழுத் தொழிலாளி வர்க்கமும் கலந்து கொண்டது. லட்சோப லட்சம் பிரெஞ்சுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து உலகில் மிகவும் அற்புதமான புரட்சிகர நடவடிக்கையொன்றை மேற்கொண்டார்கள். அது டிகோலின் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்து மண்டியிட வைத்தது. ஆனால் இந்த இயக்கத்திற்கு சரியான புரட்சிகர தலைவர்கள் இருக்கவில்லை. ‘டிகோல்’ படுமோசமான அரசுப் பயங்கரத்தை பயன்படுத்தி தொழிலாளரையும் மாணவரையும் அடிப்பணிய வைத்து பிரெஞ்சுத் திரிபுவாதிகளுடன் சேர்ந்து தேர்தல் மோசடி ஒன்றை நடத்தினார். தேர்தலில் டிகோல் வெற்றி பெற்றார். புரட்சி நசுக்கப்பட்டது. அந்த வேளையில் இந்தப் புரட்சி எமக்கு பெரும் உற்சாகத்தை அளித்தது. நாம் இப்புரட்சியின் நிகழ்ச்சி களை மிகவும் ஆர்வத்துடன் கவனித்து வந்தோம்.

## வியட்நாம்

இதே காலத்தில் அமெரிக்காவில் வியட்நாம் யுத்தத்துக்கெதி ரான மாபெரும் இயக்கமொன்று நடைபெற்றது. வியட்நாம்




யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிற்சங்கக் கூட்டத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுத்தத்தில் அமெரிக்கா வெற்றி பெற முடியாத யுத்தமொன்றில் வியட்நாம் நெல்வயல்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் சங்கட நிலைமை, அநீதி, வீரமிக்க வியட்நாம் கொரில்லாக்களின் துணிவுமிக்க எதிர்ப்பு ஆகியன அமெரிக்க மக்கள் மத்தியிற் பெரும் எதிரொலிப்பை ஏற்படுத்தின. மாணவர்கள் மத்தியிலும் இந்த யுத்தத்திற்கெதிரான இயக்கம் மிகப் பலமானதாய் இருந்தது. இவர்களில் பலர் படையில் சேர மறுத்தார்கள் அல்லது படையைவிட்டு விலகி ஓடினார்கள் அல்லது வியட்நாம் கொரில்லாக்களின் பக்கம் சேர்ந்தார்கள். முகமத் அலி போல இவர்களில் பலர் தமக்கும் வியநாமியருக்கும் இடையில் எந்தச் சண்டையும் இல்லையென்று மிகப் பகிரங்கமாக பிரகடனம் செய்தார்கள். அமெரிக்கப் பல்கலைக்கழக வளைவுகளில் யுத்த எதிர்ப்புக் கருத்தரங்குகளும் உள்ளிருப்புகளும் இடம் பெற்றன. இந்த யுத்த எதிர்ப்பு உணர்வும் இயக்கமும் மிகவும் பலம் வாய்ந் தனவாக அமைந்தன. இதனால் இறுதியில் அமெரிக்கா அதன் வரலாற்றில் முதற்தடவையாக ராணுவத் தோல்வியொன்றை சந்திக்க நேர்ந்தது.

www.tamilarangam.net

# 13. ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அதன் பின்னரும்

1970 பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, திரிபுவாதிகள் ஆகியோரின் ஐக்கிய முன்னணி அதிகாரத்துக்கு ைந்தது. சிறீமாவோ மீண்டும் பிரதமராகினார். பிற்போக்கு யூ.என்.பி.-க்கு எதிரான மக்களின் வெறுப்பு, ஐக்கியப் பட்ட எதிர்க் கட்சிகள் ஒவ்வொரு தொகுதியிலும் யூ.என்.பி.-க்கு எதிராக ஒரு அபேட்சகரை நிறுத்தியமை, திடீர் சோஷலிசத்தை அமைப்பதாக ஐக்கிய முன்னணி வாக்குரிமை அளித்தமை,வகுப்பு வாத உணர்வுகளைத் திறமையாக பயன்படுத்தியமை இவற்றால் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது. வெற்றியின் அளவு மிகப் பெரிதாகவும் முற்றிலும் எதிர்பாராததாகவும் இருந்தது. மற்றக் கட்சிகளுடன் கூட்டணி தேவையில்லாத அளவிற்கு சம்பூரண பெரும்பான்மையை தரும்படி ஐக்கிய முன்னணி மக்களைக் கேட்டுக் கொண்டது. மக்கள் அவர்களை மூன்றில் இரண்டுக்கு மேலான பெரும்பான்மையுடன் அனுப்பினார்கள்.ஆனால் இந்த வெற்றியின் அளவில் அதன் அழிவுக்கான வித்துகளும் அடங்கியிருந்தன. இத்தகைய பெரும்பான்மையை அளித்து மக்கள் பின்னர் எந்தச் சாக்குபோக்கையும் ஏற்றுக்கொள்ள போவதில்லை என்று கூறினர்.

அரசாங்கத்தின் மீதான விரக்தி விரைவில் தோன்றியது. சந்திரனையே கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்த



அரசாங்கம் செயல்படத் தயங்கி பின்னர் பழைய யூ.என்.பி. பாதையில் ஓட ஆரம்பித்தது. நாட்டை உலக வங்கிக்கு ஈடு வைத்துள்ளதாக யூ.என்.பி.யை கர்ண கடூரமாக விமர்சித்த ட்ரொஸ்கிய நிதி அமைச்சர் என்.எம்.பெரேராவின் முதல் செயல் அதே உலக வங்கிக்கு கடன் வாங்கச் சென்றதாகும். ஓராண்டு முடிவதற்கு முன்னரே அரசாங்கம் மக்கள் வயிறுகளில் அடித்து, கடன் வழங்குவதற்கு உலக வங்கி வகுத்த சகல நிபந்தனை களையும் நிறைவேற்றியது.

லெனின் சரியாக சுட்டிக்காட்டினார்:''பழைய முதலாளித்துவ, அதிகாரத்துவ அரசு இயந்திரம் தொடப்படாமல் இருக்கும் வரை...... சோஷலிஸ்டுகளை உள்ளடக்கும் சகல வகை கூட்டணி அமைச்சரவைகளிலும்... இந்த சோஷலிஸ்டுகள்... வாஸ்தவத்தில் ஒன்றில் முதலாளித்துவ அரசாங்கத்தின் பயனற்ற ஆபரணம் ஆகின்றார்கள் அல்லது ஒரு திரையாகின்றார்கள்.அரசாங்கத்தின் மீதான மக்களின் ஆத்திரத்தைத் திருப்பி விடும் இடிதாங்கிகள் ஆகின்றார்கள். மக்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கத்தின் கருவி ஆகின்றார்கள்.''

பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாகியது. இந்த நெருக்கடிகளின் சுமைகளை மக்களின் பால் நகர்த்திவிடுவதில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் யூ.என்.பி.-யிலும் பார்க்க மோச மாக செயற்பட்டது. 1971 ஏப்ரலில் நடந்த ஜே.வி.பி. கிளர்ச்சி அரசாங்கத்துக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. அவசரகால நிலைமையின் கீழும் இராணுவத்தின் துப்பாக்கி முனையிலும் இந்த அரசாங்கம் கடுமையான, மக்கள் எதிர்ப்பு பொருளாதார நடவடிக்கைகளை எடுத்தது. இந்த நடவடிக்கைகளை முந்திய யூ.என்.பி. அரசாங்கம் எடுக்க விரும்பியது. ஆனால் உண்மைப் புரட்சி ஒன்று ஏற்படும் என்று அஞ்சித் தயங்கியது.

புகை ரத பஸ் கட்டணங்கள், தபால் கட்டணங்கள், பெட்ரோல்,பால் மற்றும் பல பாவனைப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டன. மற்றும் பல பாவனைப் பொருட்கள் கிடைக்க வில்லை அல்லது பற்றாக்குறையாக இருந்தன அல்லது கறுப்புச் சந்தையில்தான் கிடைத்தன. வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்தது. வேலையின்மை மோசமாகியது. மக்களின் எதிர் பார்ப்புகள் சிதறடிக்கப்பட்டன. யூ.என்.பி.-யிலும் பார்க்கச் சிறப் பாக முதலாளித்துவத்தை நடத்தும் முயற்சி தோல்வி கண்டது. பாராளுமன்ற ஜனநாயகம் ஒரு மோசடி என்பது அம்பலமாகியது. ட்ரொஸ்கியவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் துரோகிகளாகவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் சந்தர்ப்பவாதிகளாகவும் அம்பலமாகி நின்றார்கள். சிறீலங்காவின் வரலாற்றில் 1971 ஏப்ரலில் ஏற்பட்ட பிற்போக்கான இரத்தக் களறியை ஆட்சேபித்து அவர்கள் ஒரு வார்த்தைதானும் பேசவில்லை. ஆனால் தாம் உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து யூ.என்.பி. மூலம் சுவீகரித்துக் கொண்ட அடக்குமுறைப் படைகளுடனான பொலிசையும் ராணுவத்தையும் வலியப் பாராட்டினார்கள். ஏப்ரல் சம்பவங்களின் போது இறந்த பொலிசாருக்கு நினைவுச் சின்னங்களை நிறுவினார்கள். அரசியல் கைதிகளை— குற்றமறியாதவர்களைக் கூட— விடுதலை செய்யும்படி அவர்கள் ஒரு வார்த்தைதானும் கூறவில்லை. இதிலும் பார்க்க மோசமான சீரழிவு ஏற்படமுடியாது.

## ஜே. வி. பி. கிளர்ச்சி

மார்க்சிய — லெனினியத்தின் புரட்சிகரக் கோட்பாடுகளை இவர்கள் பூரணமாகக் காட்டிக் கொடுத்த வேளையில்தான் ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன) கிளர்ச்சியின் அலை ஒலி கேட்டது. இக்கட்சியின் தலைவர்கள் சேகுவேராவின் தொடர்புடைய தத்துவங்களைப் பின்பற்றுவோர் என்று கூறிக் கொண்டார்கள். சிறீலங்காவில் மாசேதுங் சிந்தனையின் செல்வாக்கு வளர்வதை எதிர்க்கவும் சோவியத் திரிபுவாதிகளும் மற்றப் பிற்போக்குவாதிகளின் உதவியுடன் சிறீலங்காவிலுள்ள அவர்களுடைய ஏஜெண்டுகளும் இந்த இயக்கத்தை உருவாக்கினார்கள் எனபதில் சந்தேகமில்லை. காலாவதியான ட்ரொஸ்கியவாதத் தத்துவங்களைக் கொண்டோ சமாதான சகவாழ்வு பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிசத்துக்கு சமாதான மாற்றம் ஆகிய 'பச்சைத் தண்ணி' திரிபுவாதத் தத்துவங்களை கொண்டோ புரட்சிகர மாசேதுங் சிந்தனைத் தத்துவத்தை அவர்களால் எதிர்க்க முடியவில்லை. ஆகவே அவர்கள் சேகுவேரா என்ற நாமத்துடன் தொடர்புடைய மார்க்சிய — லெனினிய விரோத, போலிப் புரட்சித் தத்துவங்களை தமது சேவைக்கு அமர்த்தினார்கள். இத்தத்துவம் மார்க்சிய — லெனினிய — மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் அமைந்த புரட்சிகரக் கட்சி ஒன்றின் அவசியத்தையும் லட்சோபலட்சமாக வெகுஜனங்கள் கலந்து கொள்வதன் அவசியத்தையும் மறுதலித்தது.

ஒப்பீட்டளவில் சிறிய தொகை ஆயுதந்தாங்கிய போராளிகள் அல்லது கொரில்லாக்கள் அரசு இயந்திரத்தைக் கைப்பற்றிவிட்டு பின்னர் மக்களைக் கவர்ந்திழுக்க முடியும் என்பதும் குறிப்பிட்ட



தோர் நாட்டில் புரட்சிகர நிலைமை பக்குவமடைந்து விட்டதா இல்லையா என்பதைப் பாராமல் இதனைச் செய்ய முடியும். அதாவது மக்கள் புரட்சி நடத்தத் தயாராயிருக்கின்றார்களா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமலும் மக்களுக்குத் தலைமை தாங்க ஒரு புரட்சிகரக் கட்சி இன்றியும் இதனைச் செய்யமுடியும் என்பதுமாக சேகுவேராத் தத்துவத்தை ஜே.வி.பி. பிரச்சாரம் செய்தது.

ஒரு சில நபர்கள் நடத்தி முடிக்கக் கூடிய நடவடிக்கைகளை இத்தத்துவம் முன்வைத்தது. அதற்கு மக்கள் ஆதரவு தேவை இல்லை. பாட்டாளிவர்க்க மக்களின் ஆதரவைப் பெறாமல் எதிரிக்கு இழப்புகளை ஏற்படுத்த முடியும். இந்தத் தவறான தத்துவம் அடிப்படையில் கற்பனாவாத குட்டி முதலாளித்துவ சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் இயல்பு வெகுஜனங்களில் நம்பிக்கையின்மையாகும். துணிகரமான போராளிகளை அது பிரதானமாகச் சார்ந்திருக்கிறது. இந்தப் போராளிகள் பயங்கரமான எதிர் நிலைமைகளுக்கு எதிராக அற்புதங்களைப் புரிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ''தனிநபர்வாதப் போக்கையும் பாட்டாளி வர்க்கத்துடன் சேர்வதில் சந்தேகத்தையும் பிரதிபலிக்கும் குட்டி முதலாளி வர்க்கம் மிகுதியும் விரும்பும் போராட்டம் இது''. 1929-லேயே தோழர் மாசேதுங் ''சுற்றி அலையும் கிளர்ச்சிக்காரர் குழுவின் சித்தாந்தம்'' என்று அழைத்த குட்டி முதலாளி வர்க்க சித்தாந்தமே இது.

பொதுமக்களை முற்றிலும் சார்ந்திருப்பதை அடிப்படையாகக் கொண்ட தோழர் மாசேதுங்கின் மக்கள் யுத்தத் தத்துவத்துக்கும் இதற்கும் எந்தவித தொடர்புமில்லை. ''புரட்சிகர யுத்தம் என்பது பொது மக்களின் யுத்தம். பொது மக்களை அணிதிரட்டி அவர்களை சார்ந்திருப்பதன் மூலந்தான் அதனை நடத்த முடியும்'' என்று தோழர் மாசேதுங் எமக்குப் போதித்துள்ளார். ஏறக்குறைய பொது மக்கள் முற்றிலும் ஆதரிக்காமல் விட்டதும் ஸ்தாபன ரீதியாகத் திரண்ட தொழிலாளி வர்க்கத்திலிருந்து முற்றிலும் தனிமைப்பட்டிருந்ததும் ஜே.வி.பி. கிளர்ச்சியின் குறிப்பிடத்தக்க இயல்புகளில் ஒன்றாகும்.

ஜே.வி.பி.-யின் இராணுவத் தந்திரங்களும் ஒருநாள் புரட்சியில் திடீர் வெற்றி பெறுவது பற்றிய துணிச்சல்வாதத் தத்துவங்களிலிருந்து தோன்றியவை. எதிரியின் உண்மை பலத்தையும் தோழர் மாசேதுங் முன்வைத்த பிரசித்தி பெற்ற நீடித்த கால மக்கள் யுத்தத் தத்துவங்களையும் முற்றிலும் புரிந்து கொள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாததினாற்தான் இது ஏற்பட்டது. எதிரியின் பல கேந்திரங்களான பொலிஸ் நிலையங்களை ஏக காலத்தில் தாக்குவது என்ற ஜே.வி.பி.யின் தந்திரம் குழந்தை பிள்ளைத்தனமானது. இதனால் பெருந்தொகையான படு வதைதான் ஏற்படும். அப்படித்தான் ஏற்பட்டது.

இந்த இயக்கத்தின் தலைவரான றோகன விஜயவீரா மொஸ்கோ லுமும்பாப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவன். இலங்கையிலுள்ள மார்க்சிய — லெனினியவாதிகளின் அணிகளில் சேர்ந்து கொள்ளத் துணைபுரியும் முகமாக சீனச் சார்புக் கருத்துக்கள் உடையவன் என்று கூறும் சோவியத் எதிர்ப்பு சேர்ட்டிபிகேட் அவருக்குக் கொடுக்கப்பட்டது. நாம் ஏமாற்றப்பட்டோம் என்பதில் சந்தேகமில்லை. திரும்பியதும் அவர் முதலிற் தொடர்பு வைத்தவர்களில் நானும் ஒருவன். சோவியத் தூதரகம் அவர் ரஷ்யா திரும்பிச் செல்வதற்கு விசா வழங்க மறுத்தபடியால் தன்னால் பாவிக்க முடியாதிருந்த நிற்றேன் டிக்கெட்டை அவர் என்னிடம் காட்டினார். சீனாவில் தனது படிப்பை முடிக்கும் சாத்தியப்பாடு பற்றிக்கூட அவர் என்னுடன் உரையாடினார். ஆனால் பிந்திய உரையாடல்களில் அவர் இதனை ஒருபோதும் நெருக்கிக் கேட்டதில்லை. அவரைக் கட்சியில் சேர்க்காமல் இருக்கக் காரணம் இருக்கவில்லை. படிப்படியாக அவர் எமது கட்சியின் வாலிபர் பிரிவின் தலைவரானார். இந்தப் பதவியைப் பயன்படுத்தி கட்சியின் இளம் உறுப்பினர்களை வென்றெடுத்து கட்சியின் தலைமையைக் கைப்பற்ற அவர் முயற்சித்தார் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால் அவர் வெற்றி காணவில்லை. பின்னர் கட்சிக்குள்ளே போதிய சீர்குலைவு வேலையைச் செய்த பின்னர் கட்சியை விட்டு விலகிப் புதிய கட்சி ஒன்றை அமைத்தார்.

எமக்குத் தெரிந்த எந்த அரசியற் கட்சியையும் போன்றதல்ல இந்தக் கட்சி. விஜயவீர தன்னைத் தலைவராக நியமித்துக் கொண்டு மத்தியக் கமிட்டியை நியமித்தார். இரகசியமாகவோ பகிரங்கமாகவோ மாநாடு எதுவும் நடைபெறவில்லை. ஜாரிசப் பயங்கர நிலைமைகளிலும் கூட போல்ஷ்விக்குகள் மாநாடுகளை நடத்தினார்கள். மிகவும் கேலிக்குரிய தனிநபர் வழிபாடு ஜே.வி.பி. தலைவரைச் சுற்றி நடத்தப்பட்டது. ஜனநாயக மத்தியத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆத்திரமூட்டல் செய்யும் ஒற்றர்களும் இரகசியப் பிற்போக்குவாதிகளும் உடன் செயற்பட்டு பிற்போக்கு நோக்கங்களுக்காக இயக்கத்தை முன்னடத்திச் செல்வதற்கு இது அற்புதமான நிலைமை.



ஜே.வி.பி. தலைவர்கள் சந்தேகத்துக்குரியவர்களாக இருந்த போதும் அதன் உறுப்பினர்கள் நேர்மையான புரட்சிகர எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள். வியந்து பாராட்டக்கூடிய அர்ப்பணிப்பு உணர்வும் தமது உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயங்காத நிலைமையும் அவர்கள் மத்தியில் இருந்தன. இலங்கையில் இது முன்னர் கேட்டறியாத ஒன்று. இந்தத் தியாகம் வீணாகியதுதான் பரிதாபத்துக்குரியது.

ஐந்து விரிவுரைகள்தான் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட சித்தாந்த போதனையாகும். அதற்கு வெளியே செல்ல அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான பச்சை பச்சையான வகுப்புவாதம் புரட்சிகர வார்த்தை ஜாலத்தால் அலங்கரிக்கப்பட்டு மார்க்சிய—லெனினியம் என வழங்கப்பட்டது. ஜே.வி.பி. நடத்திய வகுப்புவாதப் பிரச்சாரம் பற்றி சந்தேகத்துக்கு இடமில்லை. இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்புவாதிகளின் பகடைக் காய்கள் என்று அவர்களுடைய ஐந்தாவது விரிவுரை கூறியது. டி. எஸ். சேனநாயக, ஆர். ஜி. சேனநாயக, ஹேமா பசநாயக, கே. எம். பி. ராஜரத்ன முதலிய வகுப்புவாத அரசியல்வாதிகள் பிற்போக்குடன் வகுப்புவாதத்தை இறக்க முயற்சித்தார்கள். ஜே.வி.பி. புதியதோர் கவலையைச் செய்தது. அது வகுப்புவாதத்துடன் புரட்சிகர வார்த்தைகளைக் கலந்தது. தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நிகழாததற்கும் கட்சித் தலைவர்களில் தமிழர்கள் இல்லாததற்கும் இது ஒரு காரணமாகும்.

உறுப்பினர்களின் குறைவான அரசியல் மட்டத்தினாலும் அவர்கள் கண்டபடி சேர்க்கப்பட்டிருந்ததாலும் தான் கைது செய்யப்பட்டவர்களில் அநேகர் (முக்கிய தலைவர்கள் உட்பட) தகவல் கொடுப்போராக மாறி சி.ஐ.டிக்குத் தகவல் கொடுத்தார்கள்.

புரட்சியின் கட்டம் பற்றியும் ஜே.வி.பி.க்குத் தெளிவான கருத்து இருக்கவில்லை. எமது எதிரி யார் எமது நண்பர்கள் யார் என்ற கேள்விக்கு அவர்களிடம் செறிவான பதில் இருக்கவில்லை. உடனடிப் பணிகளின் இயல்பு பற்றித் தவறான விளக்கத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள். ஏப்ரல் சம்பவத்தின்போது ஒரு ஏகாதிபத்தியவாதிதானும் உயிர் இழக்காததும் ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ சொத்துக்கு எந்தச் சேதமும் ஏற்படாததும் இந்தத் தெளிவான நிருபணமாகும். பெரும் முதலாளிகளோ பெரும் நிலப்பிரபுக்களோ உயிர் இழக்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சகல புரட்சிகளினதும் ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியமைக்கவும் முயற்சி எடுக்கப்படவில்லை. அத்துடன் அவர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரண்ட தொழிலாளி வர்க்கத்திலிருந்து முற்றிலும் தனிமைப்பட்டிருந்தார்கள்.

அதேவேளையில் நாம் புறநிலை ரீதியாகப் பார்த்து இந்த இயக்கத்தின் ஆக்கப்பூர்வமான அம்சங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஜே.வி.பி. புரட்சிச் செய்தியை பிரச்சாரம் செய்தது. ஆனால் இதில் அவர்கள் எங்களைப் போலத் தெளிவாக இருக்கவில்லை. 1970 தேர்தலில் அவர்கள் ஐக்கிய முன்னணி அபேட்சகர்களுக்கு ஆதரவளித்தார்கள். அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரும் கூட அரசாங்கம் சோசலிசத்தைக் கட்டியமைக்கும் என்றால் தம்மைக் கலைத்துக் கொள்ளக்கூடத் தயார் என்று பிரகடனம் செய்தனர். இவ்வாறு பாராளுமன்ற சோசலிசத்திலான பிரமை வளர்க்கப்பட்டது. இருப்பினும் அவர்கள் புரட்சியைப் பிரதானமாக வலியுறுத்தினார்கள்.

அவர்கள் சரியாகவே கிராமப்புற மாணவர்களிலும், இளைஞர்களிலும் கவனம் செலுத்தினார்கள். இளைஞர் மத்தியில் அவர்கள் ஏற்படுத்திய அக்கறை உணர்வு குறிப்பிடத்தக்கது. தமது நடவடிக்கைகள் அனைத்தையும் இரகசியமாக நடத்தும் அவர்களுடைய முந்திய தந்திரம் சரியானது. ஆனால் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அவர்கள் இதனை மறுதலித்து பகிரங்கமாக வேலை செய்ய ஆரம்பித்தார்கள். கவர்ச்சிகரமான பொதுக்கூட்டங்களை நடத்துவதில் கவனம் செலுத்தினார்கள். இதனால் அவர்கள் தமது ஊழியர்களை வெளிக்காட்டி தமது இயக்கத்துக்குள் ஊடுருவலை அனுமதித்தார்கள்.

ஜே.வி.பி.யைப் பற்றிய பல விஷயங்கள் ஒருபோதும் தெளிவாகாமல் போகலாம். முந்திய டட்லி சேனநாயகாவின் யூ.என்.பி. ஆட்சியின்போது ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளைப் பற்றி இரண்டு விசேஷ அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஒரு முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலான அரசாங்கத்தின் விசேஷ பந்தோபஸ்து ஆலோசகரால் அவை தயாரிக்கப்பட்டன. பின்னர் அப்பொழுதைய பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரின் நிரந்தர காரியதரிசியால் இந்த அறிக்கைகளின் அடிப்படையில் இன்னொரு பூரணமான அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கைகள் அனைத்தும் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கைகளில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த முக்கிய இடங்கள் பற்றியும் அவர்களுடைய



முக்கியமான ஆட்களின் பட்டியலும் அவர்கள் பெற்ற பயிற்சி உட்பட அவர்கள் ஈடுபட்ட நடவடிக்கைகள் பற்றியும் சரியான தகவல் உள்ளடக்கியிருந்ததாக அறியப்படுகின்றது. பிரதமர் இந்த அறிக்கைகளை பந்தோபஸ்து சபைக்கும் சமர்ப்பிக்கவில்லை. பொலிசார் தலைவர் உட்பட சில நபர்களைக் கைது செய்துவிட்டு பின்னர் அவர்களை விடுதலை செய்தனர். இவ்வாறு ஜே.வி.பி.க்கும் அரசியல் பிரச்சாரம் செய்யப்பட்டது.

பின்னர் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது பிரதமர் டட்லி சேனநாயக தனது செயலின்மைக்கு சரியான பதிலளிக்கவில்லை. புதிய ஐக்கிய முன்னணி அரசாங்கமும் செயல்படத் தவறியது. இந்த அறிக்கைகள் சிஐடியின் விசேஷ பகுதி அலுவலகத்தில் இருந்தன. ஏன் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? எங்களுக்கு ஒருபோதும் தெரியவராது போனாலும் முதலாளித்துவப் பத்திரிகைகள் ஜே.வி.பி.க்கு அளித்த ஆதரவும் புரிந்துகொள்ள முடியாதது. தினமும் முதலாளித்துவப் பத்திரிகைகள் ஜே.வி.பி.யைப் பற்றிய செய்திகளைத் தாங்கி வந்தன. இலங்கையில் வேறு எந்த இயக்கமும் இத்தகைய பிரச்சார ஆதரவைப் பெறவில்லை. டி.எஸ்.சேனநாயக, எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக ஆகியோருக்கு அடுத்தபடியாக விஜேவீரா என்று கூறும் கட்டுரை ஒன்றை சிலோன் டெயிலி நியூஸ் அதன் நடுப்பக்கத்தில் வெளியிட்டது. இவை அனைத்தும் தற்செயல் சம்பவங்களாக இருக்க முடியாது.

இந்த இயக்கம் வளர்வதற்கான குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் வளர்வதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டும். அவையாவன :

1. இளைஞர் மத்தியில் காணப்பட்ட புரட்சிகர மாற்றத்துக்கான உண்மை விருப்பம்.
2. ட்ரொஸ்கியவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் இழைத்த துரோகம். இதனால் இளைஞர்கள் அவர்கள் பால் கொண்ட வெறுப்பு.
3. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை இன்மை.
4. ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதன் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை.
5. முதலாளித்துவப் பத்திரிகைகள் ஜே.வி.பி.க்கு அளித்த ஆதரவு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. ஏதோ மர்மமான இடங்களிலிருந்து எல்லையற்ற நிதி உதவி கிடைத்தமை.

7. மார்க்சிய — லெனினியவாதிகளின் குறைபாடுகள்.

நாம் மேற்குறிப்பிட்ட நல்ல அம்சங்கள் இருந்தபோதும் அடிப்படையில் இந்த இயக்கம் எதிர்ப்புரட்சிகரமானது என்பதிற் சந்தேகமில்லை. தலைமையின் பிரதான பகுதி பிற்போக்கினால் பயன்படுத்தப்பட்டது என்றுதான் நாம் கூற வேண்டும்.

ஜே.வி.பி. தலைமையினதும் கொள்கைகளினதும் எதிர்ப் புரட்சிகர இயல்பை சரியாக ஆராய்ந்து அவர்களுடன் அகில இலங்கை ரீதியில் சித்தாந்த விவாதத்தை நடத்திய ஒரேயொரு அரசியல் சக்தி எமது கட்சியேயாகும். 1970 ஆகஸ்டில் கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெற்ற ஜே.வி.பி.யின் முதலாவது பொதுக் கூட்டத்தின்போது எமது கட்சி ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங் களை விநியோகித்து ஜே. வி. பி.யை அம்பலப்படுத்தியது. இத்துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கச் சென்ற எமது பத்துத் தோழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொம்பெனித் தெரு பொலிஸ் ஸ்டேசனில் கூட்டம் முடியும் வரை தடுத்து வைக் கப்பட்டிருந்தனர். இது நம்ப முடியாதது. ஆனால் உண்மை. இதன் விளைவாக நாம் ஜே.வி.பி. தலைவர்களின் மிகவும் மோச மான விஷமத்தனமான தாக்குதலுக்கு ஆளாகினோம்.

1971 ஏப்ரல் 5-ம் தேதி வெள்ளவாய பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதலுடன் ஆரம்பித்த ஜே.வி.பி. கிளர்ச்சிக்குப் பதிலாக அரசாங்கம் அதன் பிற்போக்கு அரசு இயந்திரத்தால் பிரதானமாகப் பொலிசாராலும் இராணுவத்தினராலும் பெருமள விலான அடக்குமுறையை நடத்தியது. கடுமையான அவசரகால நிலைமையின் கீழும் பூரணமான செய்தித் தணிக்கையுடனும் நாடு உண்மையில் இராணுவ ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டது. இலங்கை அதன் வரலாற்றில் கனவே கண்டிராத ஒரு இரத்தக் களறிக்கு ஊடாகச் சென்றது.

அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் அப்பொழுது இலங்கைக்கு வந்திருந்த பேராசிரியர் றெனே டுமாண்ட் பாரிசிலிருந்து வெளி வரும் 'ல நொவெல் ஒப்சேர்வேற்றர்' என்ற பத்திரிகையில் பின் வருமாறு எழுதினார்: ''தலைநகரத்திலிருந்து வடக்கு நோக்கிப் பாய்ந்தோடும் நதியில் பிரேதங்கள் மிதந்து செல்வதை நான் விக்டோரியாப் பாலத்திலிருந்து கண்டேன். நூற்றுக்கணக்கானோர் ஆடாது அசையாது அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது ஏப்ரல் 13-ம் திகதி நடந்தது. இந்த ஆட்களைக் கொன் பொலிசார் மக்களைப் பயமுறுத்த இந்தப் பிரேதங்களை நதியில் மிதக்க விட்டார்கள்.''



அரசாங்கம் ஆபத்தை வேண்டுமென்றே மிகைப்படுத்திக் கூறி உள்ளூர்ப் பிற்போக்கு ஆயுத சக்திகளை மாத்திரமல்ல. அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் முதல் சோவியத் சமூக ஏகாதி பத்தியவாதிகள் வரையான சகல வெளிநாட்டுப் பிற்போக்குவாதி களின் உதவியையும் பெற்று மக்களின் மீது அடக்குமுறையை நடத்தியது. இந்திய கடற்படையும் ஹெலிகாப்டர்களும் ரஷ்ய மிக் ஜெட் விமானங்களும் பிரித்தானிய அமெரிக்க ஆயுதங்களும் குண்டுவெடி மருந்துகளும் தாராளமாகப் பாவிக்கப்பட்டு மக்கள் பயமுறுத்தப்பட்டார்கள். வேட்டையாடப்பட்டார்கள். ஒரு கட்டத்தில் அமெரிக்க கடற்படையைக் கூப்பிட விரும்புவதாகவும் பேசப்பட்டது. கொரியாவுக்கு எதிராகவும் சீனாவுக்கு எதிராகவும் அவதூறுகள் பரப்பப்பட்டன. எந்த வெளிநாட்டு சக்தியும் ஈடுபட வில்லை என்று பின்னர் கூறப்பட்டபோதிலும் வட கொரியத் தூதரகத்தின் ஊழியர்கள் வெளியே அனுப்பப்பட்டனர். சீனச் செய்தி நிறுவன அலுவலகமும் சீனப் பொறியியலாளர்களும் தொழிலாளர்களும் 3½ கோடி ரூபாய் செலவில் கட்டிக்கொண் டிருந்த பண்டாரநாயக்கா நினைவு மண்டபத் தலைவரும் பொலிசாரால் தேடப்பட்டனர்.

மாசேதுங்கின் நூற்றுக்கணக்கான புத்தகங்களும் படங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. குறைந்தபட்சம் ஒரு இடத்தில் பொலிசார் சகல சீனப் புத்தகங்களையும் எரித்தனர்.

சீனர்களின் சரியான ராஜதந்திர நடத்தை அவர்கள் வழங்கிய தாராள உதவி (உண்மையில் கிளர்ச்சிக்கு முன் வழங்கப்பட்டது) ஆகியவற்றின் காரணமாகத்தான் அரசாங்கம் முழுதாக ஏகாதி பத்திய முகாமுக்குள் விழுந்து விடவில்லை. ஆனால் சீனாவின் 15 கோடி ரூபா வட்டியில்லாக் கடனை அறிவிக்க அரசாங்கத்துக்கு ஒரு மாதம் எடுத்தது என்பது கவனிக்கத்தக்கது.

கிளர்ச்சிக் காலத்தில் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்து சீன அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையை எமது கட்சி ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். குறிப்பாக சிறீமாவுக்கு சூஎன்லாய் எழுதிய கடிதத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது எமது கட்சிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான கடுமையான கருத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேற்றுமைகளின் ஆரம்பமாகும். இதைப் பற்றி நான் பின்னர் குறிப்பிடுவேன். இதே காலத்தில் சீனா கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த உள்நாட்டு யுத்தம் பற்றியும் சிலியில் நடந்த எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு பற்றியும் கொண்டிருந்த மனோபாவத்தை ஒட்டியும் உலக முற்போக்கு அபிப்ராயம் குறை கண்டது.

ஏகாதிபத்தியவாதிகளும் மற்றும் பிற்போக்கு அரசாங்கங்களும் தனக்கு இராணுவ உதவி அளித்தது அதன் கோஷ்டி சேராக் கொள்கையின் பெரும் வெற்றி என்று காட்ட அரசாங்கம் முயற்சித்தது. உண்மையில் இது இன்னொரு நாட்டின் உள் விவகாரங்களிலான அப்பட்டமான தலையீடாகும். குறிப்பாக, இலங்கையைச் சுற்றி இந்தியக் கடற்படை ''பாதுகாப்பு வளையம்'' ஒன்றை உருவாக்கியது. எதிர்கால ஆபத்தை காட்டிய அறிகுறியாகும். வெளிநாட்டு இராணுவ உதவியால் தான் அரசாங்கம் தப்பியது என்றால் மக்கள் எங்கே இருந்தார்கள்? தாம் தெரிவு செய்த அரசாங்கத்துக்கு ஆதரவாக அவர்கள் ஏன் எழவில்லை? மக்கள் அக்கறை காட்டாமல் இருந்ததற்கு ஒரு காரணம், குற்றம் புரிந்தவர்களுக்கும் குற்றமறியாதவர்களுக்கும் எல்லோருக்கும் பொலிசாரும் இராணுவத்தினரும் இழைத்த அட்டூழியங்களாகும். சந்தேகத்தின் பேரில் அல்லது பொய்க் குற்றச்சாட்டின் பேரில் மக்கள் நூற்றுக்கணக்கில் கண்ட இடத்தில் சுடப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர். இளைஞர்கள் சொல்ல முடியாத சித்திரவதைகளுக்கு உள்ளாகினர் பலர் நிரந்தரமாக முடமாக்கப்பட்டனர்.

பல விஷயங்களில் அரசாங்கத்துக்கு உள்ளேயும் பின்னாலும் இருந்த பிற்போக்குச் சக்திகளுக்கும் இந்தக் கிளர்ச்சி ஒரு வரப் பிரசாதமாக அமைந்தது. அரசாங்கத்தை விமர்சித்தவர்கள் அல்லது நூறு வீதம் ஆதரிக்காதவர்கள் அனைவரையும் அவர்கள் கைது செய்தார்கள். அவர்கள் கிளர்ச்சியுடன் தொடர்புடையவர்களா இல்லையா என்பதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. குறிப்பாக புரட்சிகரச் சக்திகளும் புரட்சிகர சக்திகளாக வரக்கூடியவர்களும் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாகினார்கள். கிளர்ச்சிக்கு முன்னதாகவே ஜே.வி.பி.யின் எதிர்ப் புரட்சிகர இயல்பை முதலில் அம்பலப்படுத்திய ஒரேயொரு அரசியல் ஸ்தாபனம் எமது கட்சியேயாகும். இருப்பினும் எமது கட்சியினதும் எமது கட்சி தலைமையிலான தொழிற்சங்கங்களினதும் பல தலைவர்கள் ஏறக்குறைய ஓராண்டுக் காலம் தடைக்காவலில் வைக்கப்பட்டனர். அவர்களுள் நானும் ஒருவன். கட்சியின் தலைமையகம் பொலிசாரால் தேடப்பட்டது. கட்சியின் அச்சகம்



கடுமையாக சேதப்படுத்தப்பட்டது. தோழர் மாசேதுங்கின் பல நூறு சிங்கள தமிழ் நூல்களும் மற்ற நூல்களும் எடுத்துச் செல்லப் பட்டன. அவை திருப்பித் தரப்படவே இல்லை. இவ்வாறு புரட்சிகர இயக்கங்களை மெளனியாக்க பிற்போக்குச் சக்திகள் உதவி புரிந்தன. சீன சார்பானவர்கள் என்று அறியப்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலரும் கைது செய்யப்பட்டு தடைக்காவலில் வைக்கப்பட்டனர். லங்கா சம சமாஜக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அதன் வாலிபர் சங்கத்தின் தலைவருமான வாசுதேவ நாணயக்காரவும் ஜே.வி.பி. உறுப்பினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டார். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இரண்டாவது பெரிய பங்காளியான லங்கா சம சமாஜக் கட்சி அவரை விடுதலை செய் விக்கத் தவறியது அக்கட்சியின் வரலாற்றில் மிக வெட்கக்கேடாக நிகழ்ச்சியாக அமையும். இதற்கு நேர்மாறாக, இதே குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட தனது மகனை ஜே. ஆர். ஒரு சில மணி நேரத்தில் விடுதலை செய்வித்தார். அரசாங்கத்தை பொறுத்தவரையில் இது ஒரு கெட்டிக்காரத்தனமான நடவடிக்கையாகும். இதனால் அவசரகால நிலைமையை ஒட்டியும் தடைக் காவற் கைதிகளை ஒட்டியும் ஏற்பட்ட சகல அடிப்படைப் பிரச் சினைகளிலும் எதிர்க்கட்சித் தலைவரான ஜே. ஆர். ஜெய வர்த்தனாவின் வாய் மூடப்பட்டிருந்தது.

இது தவிர, 15 ஆயிரத்துக்கு மேலானோர் பிரதானமாக இளைஞர்கள், ஜே.வி.பி.யுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணையுமின்றி தடைக்காவலில் வைக்கப்பட்டனர். பிரதமர் அளித்த மன்னிப்பு வாக்குறுதியின் பேரில் பல்லாயிரம் பேர் சரணடைந்தார்கள். அவர்களும் தொடர்ந்து தடைக்காவலில் வைக்கப்பட்டனர்.

இந்தக் கைதுகளில் ஒரு விஷயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையில் பல ட்ரொஸ்கியவாதக் குழுக்கள் இருந்தபோதும் அவற்றின் தலைவர்கள் எவரும் (வாசுதேவவைத் தவிர) கைது செய்யப்படவில்லை. பாலாதம்புவைப் போன்ற ட்ரொஸ்கியவாதத் தலைவர்கள் ஜே.வி.பி.க்கு நெருக்கமாக இருந்து அவர்களின் மேடைகளில் கலந்து கொண்டபோதும் அவர்கள் கைது செய்யப்படவில்லை.

## தடுப்புக் காவல் வாழ்க்கை

நான் இப்பொழுது அரசாங்கம் என்னைக் கைது செய்து தடைக்காவலில் வைத்தது பற்றி எழுத வேண்டும். நான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னரே குறிப்பிட்டவாறு எமது கட்சிதான் முதலாவதாக ஜே.வி.பி.யையும் அதன் கொள்கைகளையும் விமர்சித்து நாடு பூராவிலும் அதனுடன் உக்கிரமான விவாதம் ஒன்றை நடத்திய ஒரேயொரு அரசியல் கட்சியாகும். இதனால் அரசாங்கம் எம்மை சந்தேகிக்கும் என்று நாம் கருதவில்லை. ஆனால் ஜே.வி.பி.யின் கிளர்ச்சி முயற்சியால் உருவாக்கப்பட்ட அரசியல் நிலைமையைப் பயன்படுத்தி, அவை ஜே.வி.பி.யுடன் தொடர்புடையனவோ இல்லையோ சகல புரட்சிகரக் குழுக்களையும் மௌனமாக்க அரசாங்கம் முயற்சிக்கும் என்று நாம் கருதினோம். இதுதான் நடந்தது.

1971 ஏப்ரல் 12 கிளர்ச்சியில் முதல் சுற்று சுடப்பட்டதற்கு ஒரு வாரத்துக்குப் பின் நான் வீட்டில் காலை 9 மணியளவில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஒரு பொலிஸ் அதிகாரி எனது வீட்டுக்குள் நுழைந்தார். அப்பொழுது பொலிசார் எனது வீட்டையும் நாம் வாடகைக்கு கொடுத்திருந்த மேல் வீட்டைச் சுற்றியும் வளைத்திருந்தார்கள் என்பதை நான் பின்னர் அறிந்தேன். அந்தப் பொலிஸ் அதிகாரி போதியளவு மரியாதை யுடன்தான் என்னைக் கைது செய்ய வந்திருப்பதாகவும் வீட்டைச் சோதனையிட விரும்புவதாகவும் கூறினார். என்னை கைது செய் வதற்கான வாரண்ட் அவரிடம் அப்போது இருக்கவில்லை. அது வந்து கொண்டிருந்தது. வாரண்ட் வரும் வரை ஒன்றரை மணி நேரம் என்னைக் கைது செய்வதை அவர் தாமதப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் வீட்டைச் சோதனையிட்டு எதனையும் கண்டுபிடிக்கவில்லை.

ஒரு விந்தையான சம்பவம் நடந்தது. எனது மகள் 4 மாதங் களுக்கு முன்தான் சீனாவில் படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருந்தார். அவர் சீன மொழியை நன்கு பேசவும் வாசிக் கவும் எழுதவும் கற்றுக்கொண்டிருந்தார். எனக்கு நீரிழிவு நோய் இருந்தது. ஒரு சில வாரங்களுக்கு முன் எனது சீனி மட்டத்தையும் தினமும் எனக்கு அளிக்கப்படும் இன்சுலினையும் குறிப்புகளுடன் பதிவு செய்ய அவர் ஆரம்பித்திருந்தார். நான் அதை வாசித்துக் கவலைப்படாதிருக்குமுகமாக இந்தப் பதிவை அவர் சீன மொழியில் எழுதியிருந்தார். எனது மேசையில் இருந்த இந்தப் பதிவு பொலிஸ் அதிகாரியின் கண்களில் பட்டது. அவரால் அதை வாசிக்க முடியவில்லை. அவர் அந்த சீன எழுத்துக்களைக் கண்டு அவை எனக்கு அளிக்கப்பட்ட உத்தரவுகள் என்று கருதினார். இதை அவருக்கு விளங்கப்படுத்த எனக்கு அரை மணி நேரம் எடுத்தது.



நான் மதிய உணவு சாப்பிட்ட பின்னர் ஒருவார காலம் வெளியே தங்க நேரிடும் என்று சொல்லி என்னைத் தயாராகு மாறு கூறினார்கள். இப்படி நடக்கலாம் என்று நான் எனது மனைவிக்கும் மகளுக்கும் கூறிவைக்காதபடியால் இதனைக் கேட்டு அவர்கள் ஏமாந்தார்களோ எனக்குத் தெரியாது ஆனால் இதை அவர்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

பொலிஸ் வானுக்குள் ஏறியதும் நான் பெருவிரல் உயர்த்திக் காட்டினேன். அதுவரை எனது மனைவியும் மகளும் அமைதி யாகவே இருந்தார்கள். ஆனால் வான் போன பின்னர் இருவரும் கண்ணீர் பெருக ஒருவரை ஒருவர் அரவணைத்தார்கள் என்று நான் அறிந்தேன். என்னை வெலிக்கடை சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றார்கள். வழியில் பொலிசாருடன் வந்திருந்த சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் ஒருவர் ''சேர், நீங்கள் ஜே.வி.பி.-க்கு எதிரானவர் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டார். நான் பெரிதும் ஆத்திரம் அடைந்தேன். ''என்னைக் கைது செய் யாமல் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் அதில் அர்த்தம் இருக்கும். என்னைக் கைது செய்த பின்னர் கேட்பது அடாவடித் தனம்'' என்று நான் அவரிடம் கூறினேன். அதன்பின் அவர் பேசவே இல்லை.

சிறைச்சாலையில் வழக்கம் போலவே என்னை அளந்தார்கள். நிறுத்தினார்கள். எனது விரல் அடையாளத்தை எடுத்தார்கள். நான் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஆள் இல்லை என்ற காரணத்தால் சொந்த உடைகளை வைத்திருக்க என்னை அனுமதித்தார்கள். தடைக்காவல் கைதிகளாகிய எம்மை விளக்க மறியல் கைதிகள் போல நடத்த வேண்டும். ஆனால் அரசாங்கம் விசேஷ கசெட் அறிவித்தல்கள் மூலம் விளக்க மறியல் கைதிகளுக்கு வழக்கமாக வழங்கப்படட சலுகைகளை எல்லாம் ரத்துச் செய் திருந்தது. ஆகவே நாம் வெளியிலிருந்து உணவைப் பெற முடியாது. ஒருவரும் எம்மை வந்து பார்க்க முடியாது. நாம் உலகத்திலிருந்து முற்றிலும் தனிமைப்பட்டிருக்க வேண்டும்.

எனது அறைக்குள் விட்டு என்னை பூட்டியபோது இந்தச் சம்பூரண தன்மை உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது. எனது அறை 'ஏ' மண்டபம் என்று அழைக்கப்படுவதில் இருந்தது. இது சிறப்புக் கைதிகளுக்கானது. ஆகவே சிறைச்சாலையில் உள்ள அறைகளிலும் பார்க்க நல்லதாக இருந்தது. கதவு இரும்புக் கம்பி களால் ஆனது என்றபடியால் வெளியே பார்க்க முடியும். இதனால்

www.tamilarangam.net



அவ்வழியே செல்பவர்களை பார்க்க முடிந்தது. எதிர் அறையில் உள்ள தடைக்காவல் கைதியுடனும் பேச முடிந்தது. எதிர் அறைக்கும் எனது அறைக்கும் ரொம்ப தூரம் இருக்கவில்லை. எனது அறையில் கட்டிலோ கதிரையோ எதுவும் இருக்கவில்லை. நான் முறையிட்டபோது வாங்கு ஒன்று எனக்குத் தரப்பட்டது. நான் அதில் தூங்க முடியாது என்று அவர்களிடம் கூறினேன். பின்னர் ஏதோ ஒரு கட்டில் எனக்குத் தரப்பட்டது. முழு முதுகெலும்பிலும் காணக்கிருந்த நோய் காரணமாக என்னால் கடுமையான இடத்தில் படுக்க முடியாது. பின்னர் எனக்கு பஞ்சு மெத்தை ஒன்று தரப்பட்டது. நான் இதை வீட்டிலிருந்து பெற்று கொண்டேன்.

எனக்கு இன்னொரு பிரச்சினை இருந்தது. முதுகெலும்புப் பிரச்சினை காரணமாக குந்தி இருக்கும் கக்கூசை என்னால் பாவிக்க முடியாது. இருக்கும் கக்கூஸ் ஒன்று அங்கு இருந்தது. ஆனால் அது மிகவும் அழுக்காக இருந்தபடியால் என்னால் அதை பாவிக்க முடியவில்லை. இந்தக் காலத்தில் நான் எப்படி மலம் கழித்தேன் என்பதை நினைத்துப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கின்றது. ஒரு மாதத்துக்குப் பின்னர் என்னுடைய மனைவியின் விவேகமான செயலால் இந்த நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டது. ஒரு ஸ்ரூலில் துவாரம் ஒன்றைச் செய்து அவர் அனுப்பியிருந்தார். இது எனக்கு பெரும் உதவியாக இருந்தது. எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாளி தரப்பட்டு இருந்தது. நான் அதில் சிறுநீர் கழித்துவிட்டு கதவு திறந்தபோது அதைச் சுத்தம் செய்தேன். காலையில் அனைவரும் கக்கூசுக்குப் போக முயற்சிக்கும் நேரம்தான் சிறைச்சாலையில் மிகவும் வேதனையான நேரமாகும். ஆனால் கக்கூசுகள் குறைவாக இருந்தன. காவல் கைதிகள் இரண்டு பேராக அல்லது நாலு பேராக வெளியே அனுமதிக்கப்பட்டனர். காலைக்கடன் கழிக்க அவசரப்படுவோர் கதவுகளை அடித்து தம்மை வெளியே விடும்படி கத்துவதைத் தினமும் கேட்க முடிந்தது. ஒரு மாதத்துக்குப் பின் காவல் கைதிகள் அதிகரித்தபடியால் 300 பேரைக் கொள்ளக் கூடிய இன்னொரு மண்டபத்துக்கு நான் நகர்த்தப்பட்டேன். 'எச்' மண்டபம் என்று அழைக்கப்பட்ட அது ஒரு மூன்று மாடிக் கட்டடமாகும். நான் முன்னர் தாங்கியதிலும் பார்க்க இது மோசமான கட்டடமாகும். ஆனால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. இந்த மண்டப அறைகளின் கதவுகள் மரத்தால் செய்யப்பட்டவை. ஒரு சிறிய கண்பார்வைத் துவாரத்தின் மூலம்தான் வெளியே பார்க்க முடியும். ஒரு சிறிய தூரம்தான் பார்க்க முடியும்.



1971-72-ல் தடுப்புக் காவலின்போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒவ்வொரு நாளும் 22 மணி நேரத்துக்கு மேலாக நான் தனியாக அறையில் அடைக்கப்பட்டிருந்தேன். காலையில் மலசல கூடத்துக்குப் போகவும் முகம் கழுவவும் அரை மணி நேரம் அனுமதிக்கப்பட்டது. திறந்த மண்டபத்தில் அப்பியாசம் செய்யவும் அரை மணி நேரம் அனுமதிக்கப்பட்டது. எம்மில் அநேகர் சுற்றிச் சுற்றி நடந்தோம். குளிக்க எமக்கு அரை மணி நேரம் தரப் பட்டது. மிகுதி நேரம் முழுவதும் காற்றோட்டம் இல்லாத இருண்ட அறையில் நாம் அடைபட்டிருக்க வேண்டியிருந்தது. எமது கதவுகளின் வலது பக்கக் கீழ் மூலையில் இடைவெளி ஒன்று வெட்டப்பட்டிருந்தது. இதன் மூலம்தான் எமது உணவுக்கோப்பை தள்ளப்பட்டது. இது நாய்களுக்கு உணவளிப்பதுபோன்றது. ஆனால் நான் இதிலிருந்து தப்பினேன். நான் ஒரு நீரிழிவு நோயாளி என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். நீரிழிவு நோயாளிகளுக்கு தேநீர் வழங்க வேண்டும் என்று யாரோ உத்தரவிட்டிருந்தார்கள் போலும். சிறைச்சாலையில் தேநீர்க் கோப்பைகள் இருக்க வில்லை. எனக்குத் தேநீர் பால் போத்தல்களில் தரப்பட்டது. காரணம் எனக்குத் தெரியாது. இந்த போத்தல்களைக் கதவில் உள்ள துவாரம் மூலம் தள்ள முடியாது. எனவே ஒவ்வொரு உணவு நேரத்திலும் கதவு திறக்கப்பட்டு எனக்கு உணவு தரப் பட்டது. இன்னொரு நீரிழிவு தடைக்காவல் கைதியான ஒரு புத்தபிக்குவுக்கும் தேநீர் இவ்வாறு வழங்கப்பட்டது. சிறைச்சாலை உணவைப் பற்றிப் பேசத் தேவையில்லை. ஆயிரக்கணக்கான கைதிகளுக்கு அவிக்கப்படும் இந்த உணவு சப்பென்றிருக்கும். ஆனால் நீரிழிவு நோயாளியான எனக்கு தினசரி இரண்டு முட்டைகள், சற்று நல்ல மரக்கறி, ஒரு அவுன்ஸ் பட்டர் ஆகியன தரப்பட்டன. பக்க அறைகளிலுள்ள கைதிகளுக்கும் கொடுத்து தான் இந்த உணவை உண்டேன்.

எமக்குக் கலாச்சார வசதிகள் எதுவும் இருக்கவில்லை. கூடுத லான கைதிகளை வைத்திருப்பதற்காக இருந்த நூல் நிலையமும் நகர்த்தப்பட்டது. சில புத்தகங்களை எமக்குத் தந்தார்கள். ஆனால் பலவகையானவை இல்லை. இருப்பினும் நான் ஒரு நாளைக்கு ஒரு புத்தகம் என்று வாசித்தேன். செய்வதற்கு வேறு எதுவும் இருக்கவில்லை. தனியான சிறையில் இருக்கும்போது ஏற்படும் தனிமை உணர்வை விவரிக்க முடியாது. குற்றம் நிரூபிக் கப்பட்ட கைதிகள் முற்றத்தில் சுதந்திரமாக நடந்து செல்ல முடியும். ஒருவருடன் ஒருவர் பேச முடியும். ஆனால் சிறையில் தனியாக வாழும் எமக்கு ஒரே இருள்தான். ஆனால் அதிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நல்லம்சம் உண்டு. வெளியே ஒருபோதும் பெறமுடியாத அளவிற்கு எமது மனம் குழப்பப்படாமல் இருக்கின்றது. எதுவுமே எம்மைக் குழப்பாது குழப்ப முடியாது என்பது எமக்குத் தெரியும். உறவினர் இல்லை, நண்பர்கள் இல்லை, கடிதங்கள் இல்லை, தொலைபேசி இல்லை, பூரண அமைதி உண்டு. எழுதுவதற்கு இது நல்ல சூழ்நிலை. அரசியல் பொருளாதாரம், அரசு பற்றிய தத்துவம், இயங்கியல் பொருள் முதல்வாதம் ஆகியன பற்றிய மூன்று மார்க்சியக் கட்டுரைகளை நான் முதலில் எழுத முயற்சித்தேன். முதல் இரண்டு கட்டுரைகளையும் புத்தகம் எதனையும் பார்க்காமல் எழுதினேன். விடுதலையாவதற்கு முன் நான் ''ஒரு மார்க்சியவாதியின் பார்வையில் இலங்கை வரலாறு'' ''இலங்கை இடதுசாரி இயக்கத்தின் ஒரு சுருக்கமான வரலாறு'' ஆகியவற்றை எழுதினேன். கடைசி நூல் நான் விடுதலை செய்யப்பட்ட பின் பூர்த்தியாக்கப்பட்டது.

சில மாதங்களுக்குப் பின்னர் அறைகளுக்கு வெளியே கூடுதலான நேரம் நிற்கவும் சக கைதிகளுடன் பேசவும் நான் அனுமதிக்கப்பட்டேன். தமிழ் படிக்க ஆவலான சுமார் பத்து ஜே.வி.பி. கைதிகளுக்கு நான் தமிழ் மொழி கற்றுக் கொடுத்தேன். அவர்களில் ஒருவர் எனக்குச் சிங்களம் கற்றுக் தந்தார். நான் கேட்டுக்கொண்டதன் பேரில் சிறை அதிகாரி ஒருவர் தனது பிள்ளையின் சிங்களப் பாடப் புத்தகங்களை எனக்குக் கொண்டு வந்து தந்தார். அவற்றின் உதவியுடன் நான் சிங்களம் படித்தேன். வீட்டிலிருந்து புத்தகம் பெறவோ யாரும் வந்து எம்மைப் பார்க்கவோ இன்னும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் எனது குடும்பத்தினர் சிறை அதிகாரிகளிடம் வைப்புச் செய்த பணத்தைக் கொண்டு அப்பியாசப் புத்தகங்கள் பேனைகள், சோப்புகள் ஆகியவற்றையும் பேரிச்சம் பழம் போன்ற சில உணவுப் பொருள்களையும் நான் வாங்க முடியும். இந்தப் பொருள்கள் எனக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் தரப்பட்டன. எனக்கு இது மகிழ்ச்சியாக இருந்தது. தோழர் மாசேதுங்கின் முழுப் படைப்புகளையும் வீட்டிலிருந்து பெற அனுமதிக்கும்படி சிறைச்சாலை கமிஷனருக்கு நான் எழுதினேன். நீண்ட காலமாக இந்த வேண்டுகோள் கவனிக்கப்படவில்லை. அப்பொழுது நிதி அமைச்சின் நிரந்தர செயலாளராக இருந்த திரு. நிஹால் ஜயவிக்ரம ஒரு நாள் என்னைப் பார்க்க வந்திருந்தார். எனக்கு அவரை ஓரளவு தெரியும். அவர் எனது அறைக்கு வெளியே என்னுடன் சற்றுநேரம் உரையாடினார். நான் அப்பொழுது மாசேதுங் படைப்புகளை ஏன் அனுமதிக்க முடியாது என்று கேட்டேன். அவர் கமிஷனரிடம் அந்தக் கேள்வியைக் கேட்டார். அவர் தலையை ஆட்டிக் காரணம் இல்லை



என்று கூறினார். ஆனாலும் இன்னும் சில நாட்கள் அந்தப் புத்தகங்கள் எனக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பின் வெளியில் இருந்து சில குறிப்பிட்ட தொகையான புத்தகங்களைப் பெற நான் அனுமதிக்கப்பட்டேன்.

பின்னர் பார்வையாளர்கள் வரலாம் என்ற நற்செய்தி எமக்குக் கிடைத்தது. வாசுதேவ நானயக்காராவுக்கு முதற் பார்வையாளர் அனுமதிக்கப்பட்டது. இரண்டாவதாக எனக்கு எனது பிறந்த தினமான யூலை 3-ம் திகதி ஒரு பார்வையாளர் என்னைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். எனது மனைவியா மகளா என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். எனது மனைவி கடும் நோய்வாய்ப்பட்டிருந்தார் என்று நான் அறிந்தேன். ஆகவே எனது மகள் பாய்ந்து வந்து என்னைக் கட்டித் தழுவிய போது மனைவி பற்றிய எனது அச்சம் ஊர்ஜிதமாகியது. மகள் என்னை விட்டுப் பிரியாமல் கண்ணீர் பெருகிய வண்ணம் நின்றார். முழு நேரமும் அவர் எனது கரங்களைப் பிடித்த வண்ணம் நின்றார். என்னுடைய தோற்றம் அவருக்கு வியப்பானதாக இருந்திருக்க வேண்டும். அப்பொழுது நான் ஆட்சேபிக்கும் முறையில் சவரம் செய்யாமல் இருந்தேன். முழுதாகத் தாடி வளர்ந்திருந்தது. எனது மனைவி நோயுற்று ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் தான் வரவேண்டும் என்று பிடிவாதமாக இருந்த போதும் ஒரு சில அடிகூட எடுத்து வைக்க முடியாதளவிற்குப் பலவீனமாக இருந்ததாகவும் எனது மகள் என்னிடம் கூறினார். நான் மகளுக்கு இயன்றளவு ஆறுதல் கூறினேன்.

இதன் பின்னர் மாதத்துக்கு ஒரு தடவை பார்வையாளர் அனுமதிக்கப்பட்டனர். பார்வையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. இதனால் அடுத்த தடவை மனைவியையும் மகளையும் நான் சந்திக்க முடிந்தது. நான் தடைக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஆரம்ப வாரங்களில் என்னை எங்கே வைத்திருக்கின்றார்கள் என்பது பற்றி எந்தத் தகவலையும் அவர்கள் பெற முடியவில்லை. வேறு வழியின்றி எனது மனைவி என்னைத் தெரிந்திருந்த நிதி அமைச்சர் பிலிக்ஸ் டயல் பண்டாரநாயக்காவுக்கு நான் எங்கே இருக்கிறேன் என்பதை அறிய மகளைக் கொண்டு தொலைபேசி மூலம் பேச வைத்தார். தனக்குத் தெரியாது என்ற முரட்டுப் பதில் வந்தது. எப்படி அதை அறிய முடியும் என்று கேட்டபோது வேறு யாரிடமும் கேட்கும்படி அவர் ஆலோசனை கூறினார்.

நாட்டில் பதற்றம் தணிந்தபோது எமக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன. கூடுதலான நேரம் அறைக்கு வெளியே இருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிந்தது. வெளியே இருந்து சாப்பிடவும் முடிந்தது. ஒருவருடன்
ஒருவர் பேச முடிந்தது. எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்
பற்றிய எந்த விசாரணையும் நடைபெறும் எனத் தெரியவில்லை.
வாசுதேவ நானயக்காரா உட்பட எனது சக கைதிகளில் அநேகர்
சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் பொலிசா
ரால் பூரணமாக விசாரிக்கப்பட்டனர். நான் அப்படி விசாரிக்கப்
படவில்லை. நான் ஏன் தடைக்காவலில் வைக்கப்பட்டேன்
எனவும் எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை
நடத்தும்படியும் கேட்டு நான் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம்
எழுதினேன். இயற்கையாகவே பதில் எதுவும் கிடைக்கவில்லை.
ஆனால் ஒரு ஆலோசனைக் கமிட்டிக்கு முன்னால் சென்று எனது
நிலையை விளக்க அனுமதிக்கப்பட்டேன். ஆனால் இந்தக்
கமிட்டிக்கு சிபாரிசு செய்வதைத் தவிர வேறு எந்த அதிகாரமும்
இருக்கவில்லை. அது சற்று நல்ல உணவைச் சிபாரிசு செய்தது
தான் இதனால் எனக்குக் கிடைத்த நன்மையாகும். ஒரு மருத்துவ
ஊழியர் தினமும் வந்து எனக்கு இன்சலின் ஊசியேற்றினார்.
ஆனால் நான் அந்தச் சப்பென்ற சிறை உணவைக் குறையச்
சாப்பிட்டபடியால் எனக்கு இன்சுலின் தேவையாக இருக்க
வில்லை. உணவின் மூலமே எனது நீரிழிவு நோயை நான் கட்டுப்
படுத்த முடிந்தது.

காவல் கைதிகளில் ஒரு பகுதியினர் களனியில் உள்ள
வித்தியாலங்கள் மனைக்கு ஆண்டின் பிற்பகுதியில் நகர்த்தப்படு
வார்கள் என்று என்னிடம் கூறினார்கள். எமது கூட்டம் இரண்
டாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதி வெலிக்கடையில் தங்கி
இருந்தது. மற்றப் பகுதி களனிக்கு மாற்றப்பட்டது. நான்
களனிக்கு மாற்றப்பட்டேன். ஒரு நாள் அதிகாலை பலத்த
காவலுடன் பஸ்களில் நான் களனிக்குக் கூட்டிச் செல்லப்பட்டேன்.
வித்தியாலங்கள் பல்கலைக்கழகத்தில் லெனின் மண்டபத்தில்
நாம் அமர்த்தப்பட்டோம். அது ஒரு திறந்த மண்டபம். எனக்குக்
கட்டில்கள் தரப்பட்டன. பாடசாலை விடுதிகளில் போல் அங்கு
நான் தூங்குகிறேன். அங்கு நான் அறைகளில் அடைத்து வைக்
கப்படவில்லை என்று பெரிய ஆறுதலாக இருந்தது. மண்டபத்தை
சுற்றி முட்கம்பி வேலி இருந்தது. ராணுவம் எம்மைக் காத்து
நின்றது. அண்மையில் இருந்த பல்கலைக்கழக வளவில் நூற்றுக்
கணக்கான ஜே.வி.பி. சந்தேக நபர்கள் சிறை வைக்கப்பட்டிருந்
தார்கள். அவர்கள் பேசுவது எமக்கு கேட்டது. ஆனால் அவர்
களை நாம் பார்க்க முடியவில்லை. எமது நிலைமைகள் இப்பொழுது
சற்று நல்லவையாக இருந்தன. இந்த மண்டபத்தில் பல கூரை



றிகள் இரவும் பகலும் சுழன்றன. சிறை அதிகார வட்டாரங்கள்
று மலசல கூடங்களையும் குளிப்பதற்கான மேலிருந்து தண்ணீர்
ழும் அமைப்புகளையும் அமைத்திருந்தன. கூடுதலான நீர்க்
ழாய்களும் அமைக்கப்பட்டன. இந்த வகையில் எமது வாழ்க்கை
லதாக இருந்தது. ஆனால் உணவு பழையபடிதான். ஒரு
ரத்துக்கு ஒரு தடவை பார்வையாளர்கள் இப்பொழுது
ம்மைப் பார்க்க முடியும். எனது மனைவியும் மகளும் சில கட்சித்
தாழர்களும் ஒழுங்காக வந்து என்னைப் பார்த்தார்கள். அவர்கள்
ட்டிலிருந்து புத்தகங்களையும் கொண்டு வந்து தந்தார்கள்.
றிச் சுற்றி நடப்பதுதான் ஒரே அப்பியாசம். ஒரு வைத்தியர்
டைக்கிடை எம்மை வந்து பார்த்தபோதும் மருத்துவ வசதிகள்
ாசமானவையாக இருந்தன. வருட இறுதியில் நான் நோய்
ய்ப்பட்டேன். எனது மலவாயில் புண் ஒன்று வளர்ந்திருந்தது.
து மிகவும் வேதனையாக இருந்தது. சிறை வைத்தியசாலையில்
ன்னைச் சேர்த்தார்கள். நான் இதை ஆட்சேபித்து என்னை
ரியாஸ்பத்திரிக்கு அனுப்புமாறு கேட்டேன். ஆனால் நேரடி
க அங்கு அனுப்ப முடியாது என்று கூறும் ஏதோ நிர்வாக
தி இருந்திருக்க வேண்டும். சிறைவைத்தியசாலையின் நிலைமை
ர்ணிக்க முடியாதளவில் மோசமானது. அங்கு அளவுக்கு மீறிய
நாயாளிகள் கூட்டம். கைது செய்யப்பட்டபின் ஊனப்படுத்தப்
ட்ட, சித்திரவதை செய்யப்பட்ட ஜே.வி.பி.-யினர் அனைவரும்
றிந்த உறுப்புகளுடனும் பச்சைக் காயங்களுடனும் அங்கு இருந்
ர்கள். ஒவ்வொரு கட்டிலிலும் ஆயிரக்கணக்கான ஈக்கள் மொய்த்
ருந்தன. நான் எந்தக் கட்டிலிலும் படுக்க மறுத்து ஒரு கதிரையில்
ருந்து கொண்டு என்னைப் பெரியாஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும்
ன்று கோரினேன். எனது மனைவியும் மகளும் சிறைவைத்திய
லையில் என்னைப் பார்க்க வந்தார்கள். திரு. நிஹால் ஜயவிக்ரமா
வச் சந்தித்து பெரியாஸ்பத்திரியில் உடனடியாக என்னை சேர்க்க
வண்டுகோள் விடுக்கும்படி நான் அவர்களிடம் கூறினேன். இது
யன் தந்தது. எனக்குப் பெரியாஸ்பத்திரியில் அறுவைச் சிகிச்சை
டைபெற்றது.

இதற்குப் பின்னர் வாரக்கணக்காக நான் ஆஸ்பத்திரியில்
ருந்தேன். தொடக்கத்தில் எனது கட்டிலுக்குப் பக்கத்தில்
வலர்கள் நின்றார்கள். ஒருவரும் என்னை வந்து பார்க்க
னுமதிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் சிறை அதிகாரிகள் இரவில்
ட்டிலுடன் என்னை சங்கிலி போட்டுக் கட்ட விரும்பினார்கள்.
ண்டனை பெற்ற குற்றவாளிகள் ஆஸ்பத்திரியில் மருத்துவ
சிச்சை பெற்றபோது இது வழக்கமான நடைமுறையாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தது. நான் ஒரு தண்டனை பெற்ற குற்றவாளியும் அல்ல விளக்கமறியல் கைதியும் கூட அல்ல என்று நான் வாதிட்டேன். நான் ஒரு அரசியல் தடைக்காவற் கைதி அவ்வளவுதான். இரவில் என்னைச் சங்கிலியால் கட்டுவதை ஆட்சேபித்தேன். எனது குடும்பத்தினர் மூலம் நிஹால் ஜயவிக்ரமாவுக்கு இந்த ஆட்சேபனையைத் தெரிவித்தேன். என்னைச் சங்கிலியால் கட்டத் தேவையில்லை என்று அவர் உத்தரவிட்டார்.

ஆஸ்பத்திரியில் வாழ்க்கை ஒருவிதத்தில் நல்லதாக அமைந்தது. தினமும் எனது குடும்பத்தினரை நான் சந்தித்தேன். எனது புண் ஆறியதும் நான் வித்தியாலங்கள் மனைக்கு அனுப் பப்பட்டேன். ஆனால் எனது அறுவை சிகிச்சை பூரண வெற்றி யாக அமையவில்லை. புண்ணின் இன்னொரு நாடியை வைத்தியர் கண்டுபிடிக்கத் தவறினார். இது தொற்றாகி எனக்குப் பெரும் வேதனையைத் தந்தது. நான் மீண்டும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டு இரண்டாவது அறுவை சிகிச்சை ஒன்று செய்யப்பட்டது. பெரியாஸ்பத்திரியில் 33-ம் இலக்க வார்டில் நான் குணமடைந்து கொண்டிருந்தபோது எனது உணவைக் கொண்டு வந்து தர அனுமதிக்க வேண்டும் என்று எனது மனைவி மனுச் செய்தார். இது அனுமதிக்கப்பட்டது. வீட்டுச் சாப்பாடு எனக்குக் கிடைத்தது. எனது குடும்பத்தினரையும் ஒரு நாளைக்கு மூன்று தடவை சந்தித் தேன். ஆனால் எனது காயம் நன்கு குணப்படவில்லை. இரண்டு மாதத்துக்கு மேல் சென்று விட்டது. ஆஸ்பத்திரியில் தங்கியிருப் பதும் அவ்வளவு சுகமானதாக இருக்கவில்லை. பிரச்சினை என்ன வென்றால் நான் அறுவைச் சிகிச்சை வார்ட் ஒன்றில் இருந்தேன். இங்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நோயாளி தமது உறுப்பு களை நன்கு பாவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். மலசல கூடத்துக்குச் செல்லும் வழி பாவிக்க முடியாமல் இருந்தது. ஏனென்றால் நோயாளிகள் எல்லா இடமும் அசுத்தப்படுத்தியிருந் தார்கள். இரண்டாம்தர பணங்கட்டும் வார்ட் ஒன்றுக்கு என்னை மாற்றும்படி நான் கோரினேன். சிறை இலாகாவின் அதிகாரத்துவ விதிகளைக் காட்டி சிறைக் கைதிகள் பணங்கட்டும் வார்டுக்கு செல்ல முடியாது என்று என்னிடம் கூறினார்கள். நான் ஒரு சிறைக் கைதி இல்லை என்று அவர்களிடம் கூறினேன். மீண்டும் விஷயம் நிஹால் ஜயவிக்ரமாவிடம் சென்றது. என்னை இரண்டாம் தர பணம் கட்டும் வார்டில் சேர்க்குமாறு அவர் உத்தரவிட்டார். ஆஸ்பத்திரியை விட்டு தடைக்காவல் முகாமுக்குச் சென்று அதற்கு பின்னரே ஆஸ்பத்திரியின் பணங்கட்டும் வார்டில் சேர்க்கப்பட லாம் என்று அவர்கள் கூறினார்கள். மீண்டும் விஷயம் நிஹால்



ஜயவிக்ரமாவிடம் சென்றது. சிறைத் துணைக் கமிஷனர் ஆஸ்பத் திரியில் என்னைப் பணம் கட்டும் வார்டில் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அப்படியே நடந்தது.

இந்த வார்டில் வாழ்க்கை எவ்வளவோ நல்லதாக இருந்தது. வார்ட் சுத்தமாக இருந்தது. எனது வார்டில் மூன்று நோயாளி கள்தான் இருந்தார்கள். முக்கியமாக இந்த வார்டில் மலசல கூடமும் குளிக்கும் 'ஷவரும்' இருந்தன. சிறைக் காவலாளி அங்கு இருந்தார். ஆனால் எங்கும் நிற்கவில்லை. எனது குடும் பத்தினரும் சில நண்பர்களும் என்னை வந்து பார்த்துச் சென் றார்கள். உணவு அனைத்தும் வீட்டிலிருந்தே வந்தன. சக நோயாளிகளுடன் நான் நட்புக் கொண்டேன். ஒவ்வொரு நாள் இரவும் நாங்கள் 'கடகாசி' விளையாடினோம். நேரம் சற்றுச் சந்தோஷமாக கழிந்தது. போதிய நூல்களும் எனக்குக் கிடைத்தன ஆனால் சிறை அதிகாரிகளின் தொல்லை குறையவில்லை. ஒரு நாள் பிற்பகலில் கடமையில் இருந்த காவலர் எனக்கு இனிமேல் வீட்டிலிருந்து சாப்பாடு வரமுடியாது என்று சிறை சுப்பிரின் டென்ற் கூறியதாக என்னிடம் கூறினார். காரணத்தைக் கூறவில்லை. நான் பெரும் ஆத்திரம் அடைந்தேன். மகள் வந்த போது இதை நிஹால் ஜயவிக்ரமாவுக்குக் கூறும்படி நான் கேட் டேன். அவர் அன்புடன் தனது காரியத்தரிசியை அழைத்து கடிதம் ஒன்றை அடிப்பித்து வீட்டிலிருந்து உணவு பெறுவதை அனுமதித்தார். எனது மகள் இக்கடிதத்துடன் வந்தபோது சுப்பிரின்டென்ற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இந்த வார்டில் இருந்தபோதுதான் நான் 1971 ஏப்ரல் நிகழ்ச்சிகள் பற்றிய எனது ஆய்வை எழுதினேன். இது ''ஒரு மார்க்சியவாதியின் பார்வையில் இலங்கை வரலாறு'' என்ற எனது நூலின் இறுதி அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனது காயம் பெருமளவு குணமாகிய பின் நான் மீண்டும் வித்தி யாலங்கள் மனைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். எனது உணவு வீட்டிலிருந்து தொடர்ந்து வந்தது. ஒரு விந்தையான சம்பவம் நடந்தது. எனது மனைவியோ அல்லது மகளோ எனது காரில் கொழும்பிலிருந்து களனிக்கு வந்து எனது மூன்று வேளை சாப் பாட்டையும் தந்து சென்றார்கள். முகாமுக்குள் வரும்போது அவர்கள் ராணுவ சென்றியைக் கடக்க வேண்டியிருந்தது. எனது சாப்பாட்டை எனது மனைவி ஒழுங்காக கொண்டு வருவதை சென்றிகளில் ஒருவர் அவதனித்திருக்க வேண்டும். ஆனால் அவருக்கு ஆங்கிலம் அவ்வளவு தெரியாது போலிருந்தது. ஒரு நாள் எனது மனைவி உணவைக் கொண்டு வந்தபோது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நீ நரகத்துக்குப் (HELL) போவாய்'' என்று அவர் கூறினார். எனது மனைவி திகைத்துப் போய் நின்றார். ''இல்லை (HEAVEN) சொர்க்கத்துக்குப் போவாய்'' என்று அவர் உடனே திருத்தினார். சிறைச்சாலையின் சூப்பிரின்டென்ரென்றும் நான் வீட்டிலிருந்து உணவு பெற அனுமதி கேட்டபோது பலர் ஆரம்பத்தில் ஒரு சில நாட்கள் கொண்டு வருவார்கள். பின் கைவிட்டுவிடுவார்கள் என்று கூறினார். ஆனால் எனது மனைவியும் மகளும் எனது விடுதலை வரை எனக்கு உணவு கொண்டு வந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

தடைக்காவல் முகாமில் கண்டிப்புக் கொஞ்சம் குறைவாகியது. 1971 முடிந்து கொண்டிருந்தது. குறைந்தபட்சம் ஜே.வி.பி.யினர் அல்லாத தடைக்காவல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற பேச்சு அடிபட்டது. என்னைத் தவிர, பல சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும், யூ.என்.பி. உறுப்பினர்களும் அங்கிருந்தார்கள். கார் ஒன்று வரும்போதெல்லாம் ஏதோ ஒரு கைதிக்கு விடுதலை உத்தரவுடன் அதிகாரி ஒருவர் வருகின்றார் என்று நாம் ஆசையுடன் எதிர்பார்த்தோம்.

ஒருவரைத் தவிர மற்ற யூ.என்.பி. கட்சியினர்தான் முதலில் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் சிறைக்காவலர் ஒருவர் மூலம் டட்லி சேனநாயக்காவுக்கு செய்தி அனுப்பினார்கள் என்பதை நான் அறிவேன். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் தடைக்காவலில் இருக்க யூ.என்.பி. அதன் உறுப்பினர்களை விடுதலை செய்விக்க முடிந்தது. இதுதான் அன்றைய நிலைமை.

எனக்குச் சில சலுகைகள் கிடைத்தபோதும் சிறைச்சாலை வாழ்க்கை மந்தமானதாகவும் சலிப்புத் தட்டுவதாகவும் இருந்தது. எதுவும் நடைபெறவில்லை. தினமும் விடுதலை செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையில் நான் வாழ்ந்தேன். விடுதலை பற்றிய எந்த அறிகுறியும் இன்றி மாதங்கள் கழிந்தபோது எனது தீராத முதுகெலும்பு நோய்க்கு சிகிச்சை பெறப் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கும்படி நான் கேட்டேன். இத்தடவை அனுமதி பெறுவது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. நான் முன்னர் இருந்த அதே பணம் கட்டும் வார்டில்தான் சேர்ந்தேன். இங்கும் இன்னொரு அதிகாரத்துவச் சட்டம் எனக்கு முன்னால் நின்றது. இத்தடவை முறிவு, தறிவு விசேஷ வைத்தியர் என்னைச் சோதிப்பதை நான் விரும்புவதாகக் கூறியபோது நான் ஆஸ்பத்திரியில் சேர்வதற்கு முன் அவரைக் கலந்தாலோசிக்காத படியால் அவர் என்னைப் பார்க்க முடியாது என்று கூறினார்கள். இது



அந்த விசேஷ வைத்தியரின் முடிவு அல்ல என்பதை நான் பின்னர் அறிந்தேன். ஆஸ்பத்திரி மருத்துவ சூப்பிரின்டென்ரென்றுதான் அவருக்கு அப்படிச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் விரதுங்க என்னுடைய நல்ல நண்பராக இருந்தார். அவர் நான் பல்கலைக் கழகத்தில் இருந்த காலத்தில் அங்கே படித்தவர். எனது மகள் அவரைச் சந்தித்து எனது பிரச்சினையை விளங்கப்படுத்தினார்.

என்னைப் பார்க்க விசேஷ வைத்தியரை உடனே அனுப்பும்படி அவர் உத்தரவிட்டார். ஆஸ்பத்திரி சுப்பிரின்டென்ற் இந்த முடிவை அவருக்கு அறிவித்தபோது இப்படி அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக உத்தரவிடப்படுவதை தான் விரும்பவில்லை என்று அவர் கூறினார். பின்னர் இன்னொரு விசேஷ வைத்தியர் தான் என்னை வந்து பார்த்தார். இந்த உத்தரவுகள் மறு-உத்தரவுகளுக்குப் பின்னால் என்ன இருக்கின்றது என்று தனக்குப் புரியவில்லை என்று அவர் கூறினார். எல்லா வேலையையும் விட்டுவிட்டு வந்து என்னைப் பார்க்கும்படி தனக்கு உத்தரவிடப்பட்டதாகவும் அவர் கூறினார். அவர் பல எக்ஸ்-ரே படங்களை எடுத்துவிட்டு என்னைப் பின்னர் வந்து பார்ப்பதாகக் கூறினார். ஆனால் பெரியாஸ்பத்திரியில் எடுக்கப்பட்ட எந்த எக்ஸ்-ரே படமும் நல்லதாகவோ தெளிவாகவோ இருக்கவில்லை. நானும் அவற்றைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஏனென்றால் 1972-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் திகதி என்னை விடுதலை செய்வது பற்றிய கடிதம் எனக்குக் கிடைத்தது. எனக்கேற்பட்ட சந்தோஷத்தை வருணிக்க முடியாது. நான் விடுதலையானேன். வீட்டுக்குப் போக முடியும். நான் வீட்டுக்கு தொலைபேசி மூலம் பேசினேன். எனது மனைவியும் மகளும் அரைமணி நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார்கள். அருகில் உள்ள வார்டு ஒன்றுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த வாசுதேவ நாணயக்காராவிடம் நான் பிரியாவிடை பெற்றேன்.

வீட்டிற்கு வந்ததும் எண்ணற்ற தோழர்களும் நண்பர்களும் என்னைப் பார்க்க வந்தார்கள். என்னுடைய பழைய வாழ்க்கைக்கு மீண்டும் பழக்கமாகினேன். ஆனால் விஷயங்கள் ரொம்பவும் மாறி இருந்தன. அடக்குமுறை நாட்டில் பெரிதும் இடம் பெற்றிருந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பொலிசாராலும் இராணுவத்தினராலும் கொல்லப்பட்டனர். மேலும் பல்லாயிரம் பேர் தடைக்காவலில் இருந்தார்கள். அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. அது பல்லாண்டு காலம் அந்த அரசாங்கத்தின் முடிவுவரை நீடித்திருந்தது. மக்கள் அச்சத்துடன் வாழ்ந்தார்கள். இலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னர் ஒரு போதும் கண்டிராத ரத்தக் களரிக் காடாகவும் அடக்குமுறைக் காடாகவும் சென்றிருந்தது. இந்தியாவில் அப்படி இல்லை. பெருமளவிலான அடக்குமுறையும் லட்சக்கணக்கான மக்கள் சுடப்பட்டு சிறை வைக்கப்படுவதும் அங்கு சர்வசாதாரணம். இலங்கையில் இதற்கு முன்னர் ஒரு போராட்டத்தில் ஆகக் கூடியது பனிரெண்டு பேர்தான் சுடப்பட்டு இறந்தார்கள். அது 1953 ஹர்த்தாலின் போது நடந்தது. 1971 ஏப்ரலுக்கு முன் எவரும் பொதுமேடையில் புரட்சி பற்றி முழங்கிவிட்டு வீட்டுக்குப் போய் நல்ல உணவு உண்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கலாம். கைது அல்லது சுடப்படுவது பற்றிய அச்சம் இருக்கவில்லை. நிலைமை மாறிவிட்டது. பேச்சளவில் புரட்சிவாதிகளாக இருந்த அனைவரும் நிறம் மாறி தமது பழைய காலத்தை மறைக்க முயற்சித்தார்கள். பலர் நேர் எதிராக மாறி திரிபுவாதிகளாகவும் துரோகிகளாகவும் மாறினார்கள்.

கவலைக்குரியது என்னவென்றால் எமது கட்சியில் ஒரு பகுதியினர் மத்தியிலும் இந்த நிலைமை ஏற்பட்டது. நான் தடைக்காவலில் இருந்தபோது வெளியே இருந்த கட்சித் தலைவர்கள் சிறை வைக்கப்பட்ட தலைவர்களின் விடுதலைக்காக இயக்கம் எதையும் நடத்தவில்லை. எங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி ஒரு கடிதத்தை தானும் அவர்கள் அரசாங்கத்துக்கு எழுதவில்லை. இது நம்ப முடியாதது. ஆனால் நடந்தது. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் தாமும் தடைக்காவலில் வைக்கப்படுவார்கள் என்று அஞ்சியே அவர்கள் இதைச் செய்யவில்லை. இவ்வாறு அவர்கள் எந்தக் கம்யூனிஸ்டும் செய்யக் கூடாத முறையில் நடந்து கொண்டார்கள். நான் விடுதலையானதும் எமது கட்சி மத்தியக் கமிட்டியின் கூட்டம் ஒன்றைக் கூட்டி நான் தடைக்காவலில் இருந்தபோது எழுதிய 1971 ஏப்ரல் நிகழ்ச்சிகள் பற்றிய எனது ஆய்வை முன்வைத்தேன். இந்தக் கிளர்ச்சி தவறாக வழிகாட்டப்பட்டது. எதிர்ப்புரட்சிகரமானது. ஆனால் அரசாங்கம் இளைஞர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட பெரும் அடக்குமுறையை நியாயப்படுத்த முடியாது என்று நான் கூறினேன். சாதாரண உறுப்பினர்கள் மத்தியில் நேர்மையாக, ஆனால் தவறாக வழிநடத்தப்பட்ட புரட்சிவாதிகள் இருந்தார்கள். அவர்களை இயக்கத்துக்கு வழி திருப்ப வேண்டும். ஆகவே அரசியல் கைதிகள் அனைவரையும் விசாரணை செய்வதற்கு அல்லது விடுதலை செய்வதற்கு நாம் ஒரு இயக்கத்தை நடத்த வேண்டும் என்று நான் பிரேரித்தேன். அரசியல் கைதிகள் அப்பொழுது பத்தாயிரத்துக்கு மேலானோராக இருந்தார்கள்.



எமது மத்தியக் கமிட்டிக்குள்ளே எனக்குக் கணிசமான எதிர்ப்பு இருந்தது. என்னை எதிர்த்தவர்கள் இயற்கையாகவே அரசாங்கத்துக்குப் பின்னால் ஜே.வி.பி.-க்கு எதிராக கட்சி இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இதற்கு சீன அரசாங்கம் சிறீலங்காவைப் பொறுத்துக் கொண்டிருந்த மனோபாவமும் சூஎன்லாய் திருமதி பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிய கடிதமும் பெரும் காரணங்களாக இருந்தன. ஆனால் கோட்பாடுகளில் சமரசம் செய்ய நான் மறுத்தேன். இறுதியில் எனக்கு ஆதரவாகப் பெரும்பான்மை கிடைத்தது. ஆனால் சிறிய பெரும்பான்மை அத்துடன் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும்படி கோரி கொழும்பு நகர மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்யவும் நான் மத்தியக் கமிட்டியை இசைய வைத்தேன். இது கிளர்ச்சிக்குப் பின் நடைபெற்ற முதலாவது அரசியல் கூட்டமாக அமைந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

பிப்ரவரி 17ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கூட்டம் பெரும் வெற்றியாக அமைந்தது. நகர மண்டபம் நிரம்பி வழிந்தது. ஏப்ரல் நிகழ்ச்சிகள் பற்றிய எனது ஆய்வை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியது பற்றிச் சந்தோஷம் அடையாதவர்களுமான எனது தோழர்கள் சிலர் என்னை மீண்டும் கைது செய்து தடைக் காவலில் வைப்பதைக் காண அங்கு வந்திருந்தார்கள். ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை. மாறாக அந்தப் பிரமாண்டமான உற்சாகமான மக்கள் கூட்டம் சகல அரசியல் கைதிகளும் உடனடியாக விசாரிக்கப்படவேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற எனது கோரிக்கையை அங்கீகரித்தது. அவர்கள் அரசியல் நிலைமை பற்றிய எனது ஆய்வை ஆவலுடன் கேட்டு மனமாரக் கரகோஷம் செய்தார்கள்.

## அல்பேனியாவுக்கும் சீனாவுக்கும்

அல்பேனியத் தொழிற்சங்க சம்மேளனம் 1972ஆம் ஆண்டின் மே தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வரும்படி 1972 ஏப்ரலில் எனக்கு அழைப்பு ஒன்றை அனுப்பியிருந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வெளிநாடு சென்று சகோதரக் கட்சிகளின் குறிப்பாக அல்பேனியக் கட்சியினதும் முடியுமென்றால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் கருத்தை அறியவேண்டும் என்று கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல்குழு தீர்மானித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாட்டு அமைச்சில் ஒரு சிநேகபூர்வமான அதிகாரியின் உதவியுடன் நான் பாஸ்போர்ட் பெற்றேன். நான்தான் இலங்கையைவிட்டு வெளியே சென்ற முதலாவது தடைக்காவல் கைதி.

டிறானாவில் அல்பேனியத் தோழர்கள் என்னை மனமாற வரவேற்றார்கள். அவர்கள் இலங்கையில் அப்பொழுது நிலவிய அரசியல் நிலைமை பற்றி என்னுடன் விவாதித்தார்கள். ஏப்ரல் நிகழ்ச்சிகள் பற்றி எனது ஆய்வை நான் சமர்ப்பித்தேன். நான் அல்பேனியாவை விட்டுப் புறப்படுவதற்கு முன் இந்த ஆய்வு அல்பேனிய தொழில் கட்சி மத்தியக் கமிட்டியின் தத்துவ ஏட்டில் பிரசுரிக்கப்பட்டதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். அது எமது கொள்கைக்கு அவர்கள் அளித்த அங்கீகாரமாகும். டிறானாவில் இருந்தபோது நான் அல்பேனியாவில் உள்ள சீனத் தூதரிடம் பல தடவை சென்றேன். எமது கட்சியின் வேண்டுகோளின் பேரில் சீனாவுக்குச் சென்று சீனக் கட்சித் தலைவர்களைச் சந்திக்க முடியுமா என்று நான் அவரிடம் கேட்டேன். இலங்கைக்குத் திரும்பினால் சீனாவுக்குச் செல்ல என்னை அனுமதிக்கமாட்டார்கள் என்று அஞ்சிதான் நான் இந்த வேண்டுகோளை முன்வைத்தேன். நான் சீனாவுக்குச் செல்வதை வரவேற்பதாக இரண்டு வாரங்களில் தூதர் தெரிவித்தார். நான் டிறானாவிலிருந்து லண்டனுக்குச் சென்று அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்து உரையாடிவிட்டு லண்டனிலிருந்து பீக்கிங்கிற்கு செல்லத் தீர்மானித்தேன். இதற்கேற்ப ஒழுங்குகளும் செய்யப்பட்டன.

லண்டனில் உள்ள சீனத் தூதரகம் தமது தலைவர்கள் மும்முரமாக இருப்பதாகவும் என்னுடைய பயணத்தை சில வார காலம் பின்போடும் படியும் கேட்டுக் கொண்டது. அடுத்த நாளே இது உண்மையான காரணம் இல்லை என்பதை நான் அறிந்து கொண்டேன். உண்மையான காரணம் என்னவென்றால் திருமதி பண்டாரநாயக்கா சீன விஜயம் மேற்கொண்டிருந்தார். எனது பயணம் அதே நேரத்தில் நடைபெறுவதை சீனத் தலைவர்கள் விரும்பவில்லை. அப்பொழுது லண்டனில் இருந்த திருமதி பண்டாரநாயக்காவின் குடும்பத்தினர் அவருடைய பயணம் பற்றி என்னிடம் கூறினார்கள். சீனர்கள் என்னுடன் நேர்மையாக நடந்திருக்க வேண்டும். எமது கட்சிக்கும் சீனக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட முதலாவது இருள்மேகம் இதுவாகும். இதனால் நான் லண்டனில் மூன்று வார காலம் கழித்தேன். இந்தக் காலத்தில் நான் பல கூட்டமான இலங்கையர்களைச் சந்தித்தேன். சில பொதுக்கூட்டங்களில் பேசினேன். அக்காலத்தில் மார்க்சிய-லெனினியவாதிகள்



என்று அழைத்துக்கொண்டு ஒரு பெரும் கூட்ட இலங்கையர்கள் அங்கு இருந்தார்கள். அவர்களுடன் நான் பல கலந்துரையாடல்களை நடத்தினேன். ஐம்பதாம் ஆண்டுகளில் லண்டனில் இருந்த கம்யூனிஸ்ட் குழுவின் உறுப்பினர்களைப் போலவே இவர்களில் பலர் வசதியான குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். ஆகவே இவர்களில் ஒருவர் தானும் இலங்கை திரும்பியபோது புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்து கொள்ளவில்லை என்பது ஆச்சரியத்துக்கு உரியதல்ல. உண்மையில் இவர்களில் சிலர் இலங்கை திரும்பிய போது தனிப்பட்ட ரீதியில் கூட என்னுடன் தொடர்பு வைக்கவில்லை. நான் லண்டனை விட்டுப் புறப்பட்டபின் இவர்களில் பலருக்கு எழுதினேன், அவர்கள் மார்க்சிய-லெனினியவாதிகள் ஆகியதை ஒட்டி எனது மகிழ்ச்சியை நான் தெரிவித்தேன். வெளிநாட்டில் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருப்பது இலேசானது. ஆனால் ஒருவர் நாடு திரும்பி குடும்பத்தினதும் அரசினதும் பிற்போக்கு செல்வாக்குக்கு ஆளாகும்போது தான் உண்மையான சோதனை ஏற்படுகின்றது. இந்த சோதனையில் அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்றும் நான் குறிப்பிட்டேன். ஆனால் அவர்கள் அனைவரும் சோதனையில் தேறவில்லை என்பதை மனவருத்தத்துடன் குறிப்பிடுகின்றேன். இது பொதுவாக வெளிநாட்டில் உள்ள கம்யூனிஸ்டுகள் அநேகருக்குப் பொருந்தும்.

லண்டனிலிருந்து கராச்சி மூலமாக நான் சிங்கப்பூர் சென்றேன் என்னுடைய மனைவி அப்போது தனது உறவினர் சிலருடன் அங்கு விடுமுறை கழித்துக் கொண்டிருந்தார். சிங்கப்பூரில் ஒருவார காலம் தங்கி இருந்துவிட்டு நான் ஹொங்ஹொங் சென்றேன். அங்கு என்னை வரவேற்ற சீனத் தோழர்கள் நான் அங்கு ஒருவார காலம் தங்கி இருக்கவேண்டும் என்று என்னிடம் கூறினார்கள். திருமதி .பண்டாரநாயக்கா இன்னும் சீனாவில் இருந்ததுதான் காரணம். திருமதி பண்டாரநாயக்கா சீனாவை விட்டுச் செல்லு மட்டும் நான் பீக்கிங் போகாமல் தென் சீனாவில் தங்கியிருக்க ஒழுங்கு செய்யுமாறு நான் அவர்களிடம் கேட்டேன். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஹொங் ஹொங்கில் இருந்த காலத்தில் நான் முதல்தர ஹோட்டல் ஒன்றில் இருந்தேன். என்னை நன்கு உபசரித்து பொழுதுபோக்குப் பயணங்களில் அழைத்துச் சென்றபோதும் இந்த வாரம் எனக்கு சந்தோஷமானதாக அமையவில்லை.

சீனாவுக்குள் சென்றதும் எனக்கு முன்னர் இருந்த மனமார்ந்த விருந்துபசாரம் குறைந்திருந்ததை அவதானித்தேன். எனக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மருத்துவ சிகிச்சை என்ற பெயரில் என்னைக் கன்ரனில் தாமதிக்கச் செய்ய முயற்சித்தார்கள். நான் தெளிவாக மறுத்து உடனே பீக்கிங் செல்லவேண்டும் என்று கேட்டேன். நான் பீக்கிங்கில் இறங்கியபோது சீனக் கட்சி மத்தியக் கமிட்டியின் தொடர்பு இலாகாத்தலைவரால் வரவேற்கப்பட்டேன். முந்திய தடவைகளில் அரசியல் குழுவின் தலைவர் ஒருவர் என்னை வரவேற்பதுண்டு. இப்பொழுது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எமது கட்சியைப் பொறுத்த அதன் மனோபாவத்தை மாற்றிக்கொண்டது என்பதை நான் உணர்ந்தேன். 1971 ஏப்ரல் நிகழ்ச்சிகள், திருமதி பண்டார நாயக்காவின் சீன விஜயம் ஆகியவற்றால் இது ஏற்பட்டது. இதுபற்றிச் சந்தேகமில்லாதமுறையில் விஷயங்கள் நடைபெற்றன.

தொடர்பு இலாகாவின் தோழர்கள் என்னுடன் கலந்துரையாடினார்கள். எமது இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பல விஷயங்களில் பல கருத்துவேற்றுமைகள் இருந்தன. தொடர்பு இலாகாவின் தலைவர் ஒரு முதலாளித்துவப் பாதையாளர். அவர் பின்னர் மாவோவின் மறைவுக்குப் பின் சீன வெளிநாட்டு அமைச்சரானார். 1972-ல் மாவோ இன்னும் உயிருடன் இருந்தாலும் முதலாளித்துவப் பாதையாளர்கள் குறிப்பாக வெளிநாட்டமைச்சிலும் சகோதரக் கட்சிகளுடன் உறவுகளுக்குப் பொறுப்பான தொடர்பு இலாகாவிலும் பல முக்கியமான பதவிகளைக் கைப்பற்றியிருந்தார்கள். ஆகவே நான் மார்க்சிய—லெனினியத்தின் துரோகிகளுடனும் மாவோவின் கருத்துகளுக்கு முற்றிலும் எதிரானவர்களுடனும் கலந்துரையாடல் நடத்தினேன். கட்சியின் சில உயர் தலைவர்களைச் சந்திக்க முடியுமா என்று நான் கேட்டேன். அவர்கள் வேலை மும்முரமாக இருக்கிறார்கள் என்றபதில் தான் வந்தது. இந்தச் சாக்குப் போக்கு ஏற்றுக்கொள்ள முடியாதது. ஏனென்றால் அல்பேனியாவை விட்டுப் புறப்பட்ட எனது நாலு வார காலத்தை சீனத் தலைவர்கள் வேலை மும்முரமாக இருக்கின்றார்கள் என்று கூறி அவர்கள் வீணடித்தார்கள்.

ஏப்ரல் நிகழ்ச்சிகள் பற்றிய எனது ஆய்வையும் சிறீலங்கா அரசு பற்றிய எனது ஆய்வையும் சீனத் தோழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த வேளையில் நவசீன செய்தி நிறுவனம் இலங்கை பற்றியும் அதன் சில நிறுவனங்கள் பற்றியும் தவறான பொய்யான தகவல்களை வெளியிட்டது. சிறீலங்கா அமெரிக்காவிலும் இஸ்ரேலிலும் ராணுவத்தின் உயர் அதிகாரிகளைப் பயிற்றும் முறையைக் கைவிட்டு ஆயுதப் படைகளைத் தேசிய



முறையில் ஸ்தாபனப்படுத்துகிறது என்ற பொய்யான செய்தியை இந்தச் செய்தி நிறுவனம் பிரசுரித்தது. உண்மை என்னவென்றால் இன்றும் இந்த அதிகாரிகள் இங்கிலாந்திலுள்ள நியூ ஸ்காட்லாந்து யார்டுக்கும், சர்ட் ஹோர்ங்குக்கும் அனுப்பப் படுகின்றார்கள். அரசாங்கம் சில பிரித்தானிய தேயிலைத் தோட்டங்களை எடுத்துள்ளது என்று இன்னொரு பொய்ச் செய்தி பிரசுரிக்கப்பட்டது. உண்மை என்னவென்றால் அவை விற்கப்பட்டன. அரசாங்கம் அரசு விமானக் கொம்பெனி ஒன்றை ஆரம்பித்துள்ளது என்று இன்னொரு தவறான கட்டுரை கூறியது. இது ஏயர் சிலோன் சம்பந்தமானது. அப்பொழுது அது அதன் 25 ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருந்தது. இவற்றைக் கேட்டபோது அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. அல்பேனிய தொழில் கட்சி மத்தியக் கமிட்டி எமது கட்சியின் அரசியல் மார்க்கத்தை அங்கீகரித்தமை சீனரைக் கவரவில்லை. எமக்கிடையில் எந்த உடன்பாட்டையும் காணும் சாத்தியப்பாடு இருக்கவில்லை.

பீக்கிங்கில் நான் இருந்தபோது இலங்கையில் எமது கட்சியில் ஏற்பட்ட பிளவு பற்றி சீனர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். நான் இலங்கையில் இல்லாத காலத்தில் மத்தியக் கமிட்டியின் ஒரு பகுதியினர் முழு மத்தியக் கமிட்டியாக நடித்து நான் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். பூர்ஷ்வாப் பத்திரிகைகள் இயற்கையாகவே இதைப் பெரிதுபடுத்தி பிரச்சாரம் செய்தன. கட்சியின் துணைச் செயலாளரான எம்.சி.எம். சாவ்பி இத்தகைய மத்தியக் கமிட்டி கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்று மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். ஆனால் சீர்குலைவாளர்களுக்குத் தேவை ஒரு பிளவு. அது நடந்து முடிந்தது. எமது கட்சிக்குப் பகைமையான சீன — சார்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் சிலர் அவர்களைத் தூண்டிவிட்டனர். என்னை வெளியேற்றினால் சீனக் கட்சியின் உத்தியோகப் பூர்வமான அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைக்கும் என்று இந்தப் பகுதியினரிடம் அவர்கள் கூறியிருந்தார்கள். கொழும்பிலுள்ள சீன தூதரகத்தின் ஒரு பகுதியினரும் இதில் கலந்து கொண்டார்கள் என்று நம்ப இடம் இருக்கின்றது என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. வெளிநாட்டமைச்சில் உள்ள மாவோ எதிர்ப்புக் கோஷ்டியினருக்கு ஆதரவான பகுதியினர் இவர்கள். இச்செய்தி எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. நான் விரைவில் இலங்கை திரும்பத் தீர்மானித்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னொரு விஷயம் பற்றி நான் குறிப்பிட வேண்டும். இக்காலத்தில்தான் சீனர் லின்பியாவோ விலகிச் சென்று மரணமடைந்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த நிகழ்ச்சி சீனாவில் மாத்திரமல்ல. முழு சர்வதேசிய கம்யூனிச இயக்கத்திலும் பயங்கர விளைவை ஏற்படுத்தியது. இது பற்றிச் சில விளக்கம் அவசியம்.

சீனாவில் நடைபெற்ற மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி மெதுவாக ஓடும் நதியைப் போல் அமைதியாக நடைபெறவில்லை. எதிரி கடும் எதிர்ப்பைக் காட்டியபடியால் பல கொந்தளிப்புகள் புயல்களும் ஏற்பட்டன. மாவோ எதிர்த்துப் போராடிய சீனாவிலான திரிபுவாதிகளின் முகாம் ஒருமைப்பட்டதாகவோ ஒன்றானதாகவோ இருக்கவில்லை. அதில் பல கோஷ்டிகள் இருந்தன.

லியூசோஷி - தெங்சியாவ்பிங் தலைமையிலான கோஷ்டியினர் சோவியத் பாணி திரிபுவாதிகள். அவர்கள் குருச்சேவையும் சோவியத் யூனியனையும் சோஷலிசத்தின் மாதிரியாகக் கொண்டனர். எதிர்ப்பக்கத்தில் சூ-என்-லாய், அவர் சோவியத் ஆதிக்கத்தையும் அமெரிக்காவுக்கும் மேற்குக்கும் சரணடைவதையும் எதிர்த்தார். இவர்களுக்கிடையில் லின்பியாவோ — இவர் ஒரு பதவி வேட்டைக்காரர். கலாச்சாரப் புரட்சியின் ஆரம்ப காலத்தில் இவர் முக்கிய பாத்திரம் வகித்தார். லியூசோஷியை விழுத்தி அதிகாரத்தைத் தனதாக்க இவர் பாடுபட்டார்.

மிக ஆபத்தான எதிரிகளைத் தனிமைப்படுத்தி மற்றவர்களை விட்டு வைத்து தாக்குதல் இலக்கைக் குறைப்பது எப்பொழுதும் மாவோவின் தந்திரமாகும். லியூசோஷியும், தெங்சியாவ் பிங்கும் சீனாவில் சோஷலிசத்துக்கு மிகப் பெரிய ஆபத்தாக அமைகின்றார்கள் என்பதை உணர்ந்து கொண்டு அவர் லின்பியாவுடனும் சூ-என்-லாயுடனும் சேர்ந்து லியூ சோஷியையும் தெங்சியாவ் பிங்கையும் வெற்றிகரமாகத் தாக்கினார்.

லியூசோஷியின் பூர்ஷ்வா தலைமைப் பகுதி தோற்கடிக்கப்பட்ட பின் லின்பியாவோவின் அதிகாரம் உச்ச கட்டத்தை அடைந்தது. அவர் மாவோவின் இரண்டாவது ஆணைத் தளபதி ஆகினார். ஆனால் அவருடைய பதவி வேட்டைக்கு எல்லை இருக்கவில்லை. 1971-ல் அவர் தனக்கே அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்தார். இந்த முயற்சியில் அவர் மாவோவைப் படுகொலை செய்யவும் திட்டமிட்டார். ஆனால் அவர் அம்பலமாகியபோது விரக்தி அடைந்து சோவியத் யூனியனுக்கு



விமானம் மூலம் செல்ல முயற்சித்தார். வழியில் விமானம் நொறுங்கி 1971 செப்டம்பரில் இறந்தார்.

லின்பியௌவின் விலகல் வலதுசாரிகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அவர்கள் லின்பியௌவின் அதீத இடதுசாரிக் கருத்துக்களை எதிர்ப்பது என்ற சாக்குப் போக்கில் கலாச்சாரப் புரட்சி மீதும் மாவோவின் மார்க்கத்தின் மீதும் தாக்குதல் தொடுத்தார்கள்.

லின்பியௌவின் விலகலால் சூஎன்லாய் மிக உயர்ந்த அதிகாரப் பதவிக்கு வந்தார். சூஎன்லாயின் பாதுகாப்பில் வலதுசாரிகள் கலாச்சாரப் புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் வீழ்த்தப்பட்ட பலரைத் திரும்பச் சேர்த்தார்கள். இப்படி திரும்பச் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவர்தான் தெங் சியாவ் பிங். இவர் வலதுசாரிகளின் ஈட்டி முனையாகினார். சூஎன்லாய் அவர்களுடைய போஷகர் ஆகினார்.

கலாச்சாரப் புரட்சியின் இறுதிக் கட்டங்கள் சூஎன்லாய்க்கும் தெங்சியாவ் பிங்கிற்கும் எதிராக அமைந்தன. சூஎன்லாய் மாவோவுக்குப் பின்னர் வாழ்வார் என்று திரிபுவாதிகள் நம்பினார்கள். ஆனால் சூஎன்லாய் மாவோவுக்குமுன் மரணமானார். ஆனால் மாவோ மரணம் அடைந்தபோது மறைந்திருந்த திரிபுவாதிகள் அனைவரும் வெளியே வந்து ஆட்சிக்கவிழ்ப்பு ஒன்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 14. 1971-க்குப் பின்

உள்நாட்டில், எமது கட்சியில் ஒரு உண்மையான பிளவு என்ற கடுமையான பிரச்சினையை நான் எதிர்நோக்கினேன். சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு சாத்தியப்பாடு இருக்கவில்லை. ஏனென்றால் சீர்குலைவாளர்கள் அந்தச் சமயத்தில் இன்னொரு கட்சியின் ஸ்தாபனத்தை அறிவித்து எந்தக் கலந்துரையாடலையும் மறுத்திருந்தார்கள். 1971 ஏப்ரல் சம்பவம் பற்றிய எமது ஆய்வும் திருமதி பண்டார நாயக்காவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பற்றிய எமது மனோபாவமுமே இதில் அடிப்படைப் பிரச்சினைகளாக இருந்தன. இந்தச் சீர்குலைவாளர்களில் அநேகர் முன்னாள் இந்தியாவின் நக்சல்வாதிகளின் நிலைப்பாட்டை ஆதரித்தனர். இப்பொழுது நேர்எதிர்மாறான நிலைப்பாட்டை எடுத்து சிறிமாவோ பண்டார நாயக்காவின் அரசாங்கத்துக்கு உண்மையில் ஆதரவளிக்கும் நிலை ஒன்றை எடுக்க விரும்பினார்கள். இலங்கையில் சீனா பின்பற்றிய மிகுதியும் நாசகரமான தவறான கொள்கையினால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. 1972-ன் நடுப்பகுதியில் திருமதி பண்டாரநாயக்காவுக்கு சீனாவில் அளிக்கப்பட்ட மகோன்னத வரவேற்பும் அவருடைய அரசாங்கத்துக்குராணுவ ஆதரவைக் கூட வழங்க வாக்குறுதி அளித்ததும் பல நேர்மையான உள்ளங்களைக் கூட குழப்பியடித்தன. சீனா,



சிறிமாவை ஆதரிக்க முடியுமென்றால் நாம் ஏன் ஆதரிக்கக் கூடாது? இப்படி வாதம் செய்தார்கள். கடந்த காலத்தில் சீனாவின் மீது அவ்வளவுக்குப் பாராட்டு இருந்தது. இப்பொழுது அது தவறுகளை இழைக்கும்போது சுதந்திரமாகச் சிந்திப்பதைப் பலர் நிறுத்தி விட்டார்கள்.

இயன்றளவு, கட்சி உறுப்பினர்களைத் திரட்டி தீவிரமான சித்தாந்தக் கலந்துரையாடல்களை நடத்தியபின் நாம் கட்சி மாநாடொன்றை நடத்தி தலைமை உறுப்புகளுக்குப் புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தோம். ஆனால் கடுமையான பிளவு ஏற்பட்டிருந்த காரணத்தால் முன்னைய பலத்தை நாம் மீண்டும் பெற முடியவில்லை. சீர்குலைவாதிகள் கட்சி ஒன்றை அமைத்து சில காலம் அதனை நடத்தினார்கள். வருத்தத்துக்குரியது என்னவென்றால் சீனக் கட்சி இந்தச் சீர்குலைளாளர்களுக்கு அங்கீகாரம் அளித்து, ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட மார்க்சிய—லெனினியக் கட்சி இருக்க முடியும் என்ற தத்துவத்தை முன்வைத்தது. சீனக் கட்சியின் இந்த மனோபாவம் பிளவை நிரந்தரமாக்கியது. அதனைக் குறைப்படுத்தத் துணைபுரியவில்லை. சீர்குலைவாளர்களால் தமது கட்சியை நடத்த முடியவில்லை. அவர்கள் பல குழுக்களாகப் பிரிந்தனர். இப்பொழுது அவை நிலவவில்லை. இங்கேதான் சோகம் இருக்கின்றது. ஒரு கட்சி தவறான பாதையில் செல்கின்றது என்ற அடிப்படையில் அதனை விட்டு விலகிச் செல்லும் ஆட்கள் குறைந்தபட்சம் சரியான மார்க்கங்களில் இன்னொரு கட்சியை நடத்த வேண்டும். ஆனால் இலங்கையில் நடந்தது என்னவென்றால் சீர்குலைவாளர்கள் மார்க்சிய — லெனினியக் கட்சியைப் பிளவுபடுத்தினார்களே தவிர தாமாக எதனையும் செய்ய முடியவில்லை. சீர்குலைப்பது எப்பொழுதும் அமைப்பதிலும் பார்க்க இலகுவானது.

இந்த வேளையில் அரசாங்கம் மோசமான பொருளாதார நெருக்கடி ஒன்றில் சிக்கியிருந்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் இடதுசாரி நண்பர்களும் முதலாளித்துவத்தை யூ.என்.பி.யிலும் பார்க்க சிறப்பாக நிர்வகிக்க எடுத்த முயற்சி தோல்வி கண்டது. கிளர்ச்சி முயற்சி காட்டுமிராண்டித்தனமான வன்முறையால் நசுக்கப்பட்டபோதும் அது அரசாங்கத்தை முற்றிலும் உலுக்கியது. மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியிலும் தமக்கு இருந்ததாகத் தலைவர்கள் கருதிய ஆதரவு இருக்கவில்லை. 1971 ஏப்ரலுக்குப்பின்னர் மக்கள் ஆதரவைப் பெறக்கூடிய நடவடிக்கைகளை முன்வைப்பதே அவர்களுடைய உடனடிப் பணியாக இருந்தது. தேயிலை, ரப்பர் தோட்டங்களைத் தேசிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மயமாக்குவது இந்த நடவடிக்கைகளில் ஒன்றாகும். 1968-ல்
வகுக்கப்பட்ட ஐக்கிய முன்னணிக் கட்சிகளின் பொது வேலைத்
திட்டத்தில் தோட்டங்களின் தேசிய மயமாக்கம் இடம் பெற
வில்லை. ஆனால் அரசாங்கம் இப்பொழுது தன்னை முற்போக்
கானதாகக் காட்டிக் கொள்ள முனைந்தது. இந்த நடவடிக்கை
இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. 1972-ல் கொம்பெனி
களுக்குச் சொந்தமில்லாத தோட்டங்கள் அனைத்தும் எடுக்கப்
பட்டன. சொந்தக்காரர் 50 ஏக்கர் தோட்டத்தை வைத்திருக்க
அனுமதிக்கப்பட்டனர். இலங்கையர்களுக்குச் சொந்தமான தோட்
டங்கள்தான் தேசிய மயமாக்கப்பட்டன என்று இது அர்த்தப்படும்.
ஏனென்றால் அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்கள்
அனைத்தும் கொம்பெனிகளின் வடிவத்திலேயே நடைபெற்றன.
கொம்பெனி தோட்டங்கள் 1973-ல்தான் தேசிய மயமாக்கப்
பட்டன.

பெரும் பகுதியாக இருந்த அந்நியருக்குச் சொந்தமான
தோட்டங்களைத் தேசிய மயமாக்குவதற்கு முன் இலங்கையருக்குச்
சொந்தமான தோட்டங்களைத் தேசியமயமாக்கிய இந்தக் கொள்
கையால் உள்ளூர்த் தோட்டச் சொந்தக்காரர்கள் பெரிதும் ஆத்திர
முற்று யூ.என்.பி.முகாமுக்குள் பெருந் தொகையாகச் சென்றனர்.
இது அசல் ட்ரொஸ்கியவாதக் கொள்கையாகும். முன்னர்
எம்.ஈ.பி. அரசாங்கத்தின்போது பிலிப் குணவர்த்தனாவும்
இவ்வாறே செய்தார். அவர் 25 ஏக்கர் நெற் காணியை அரசுக்
கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தார். வெளிநாட்டு ஏகாதி
பத்தியக் கொம்பெனிகளுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான்
ஏக்கர் தோட்டங்களை விட்டு வைத்தார்.

இந்த தேசிய மயமாக்கம் தொழிலாளர்களினதும், சம்பந்தப்
பட்ட ஊழியர்களினதும் ஒத்துழைப்பின்றி மேலேயிருந்து
அதிகாரத்துவ முறையில் செய்யப்பட்டது. தொழிலாளர்களினதும்
விவசாயிகளினதும் வாழ்க்கையிலும், சம்பளம், வேலை நிலைமை
ஆகியவற்றிலும் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்க முடிய
வில்லை. தோட்டங்கள் தற்போது அரசு பெருந்தோட்டக்
கார்ப்பரேஷனான ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை
யாலும் அரசு பெருந்தோட்டச் கார்ப்பரேஷனாலும் நிர்வகிக்கப்
பட்டன. நாட்டின் மிகப் பெரிய உழைப்புச் சக்தியை வேலைக்கு
அமர்த்தியுள்ள இந்தக் கார்ப்பரேஷன்கள் கட்டுப்படுத்தி நடத்த
முடியாதளவிற்கு பெரிதாகியுள்ளன. அவை தாம் நினைத்தபடி
நடந்தன. தொழிலாளர்களின் நிலைமைகளை விருத்தி செய்வதற்
கான தோட்டத் தொழிலாளர் சங்கங்களின் வேண்டுகோள்கள்



இந்தக் கார்ப்பரேஷன்களாலும் அரசாங்கத்தாலும் செவி மடுக்கப்படுவதில்லை. அரசாங்கம் சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியும் பெருந்தோட்டங்கள் மத்தியில் சிங்கள விவசாயிகளுக்கு நிலத்தை வழங்கியும் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் செறித்திருப்பதைக் குழப்பியடிக்க தோட்டங்கள் அரசுக்குச் சொந்தமாக இருப்பதைப் பயன்படுத்த முயற்சித்தது. பிரதமரின் மகனான அனுரா பண்டாரநாயக்கா பத்தாயிரம் ஏக்கர் பரப்பான பெருந்தோட்டங்களை ஒதுக்கி அங்கே சிங்கள விவசாயிகளைக் குடியேற்ற வேண்டும் என்று கூறுமளவிற்குச் சென்றார். இது ஆயிரக்கணக்கான இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் வேலைக்கு நேரடி அச்சுறுத்தலாகும். இதனுடன் மாதச் சம்பளம், ஆண் பெண் பேதமின்றி சம வேலைக்குச் சம சம்பளம் மற்றும் பொருளாதாரக் கோரிக்கைகளை அரசாங்கம் வழங்க மறுத்தமை, ஏறக்குறைய ஐந்து லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்களாக இருந்த நிலைமை ஆகியவற்றால் 1975-ல் மிகப்பெரிய தோட்ட வேலை நிறுத்தம் இடம் பெற்றது. அரசாங்க சார்பான சிறிய தொழிற்சங்கங்களைத் தவிர அனைத்துத் தொழிற் சங்கங்களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டன.

இந்தக் காலத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளிகள் மத்தியில் குறிப்பாக, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் லங்கா சம சமாஜக் கட்சிக்கும் இடையில் விரிசல் பெரிதாகியது. இறுதியில் லங்கா சம சமாஜக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சி ஓராண்டு காலம் அரசாங்கத்தில் தங்கியிருந்தது. அதுவும் பின்னர் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது. ஐக்கிய முன்னணி முடிவுக்கு வந்தது. ஐக்கிய முன்னணியில் பிளவை ஏற்படுத்திய அரசியல் காரணங்கள் யாவை என்பதை ஒருபோதும் தெளிவாக்கப்படவில்லை. யூ.என்.பி.-யிலும் பார்க்கத் திறமாக முதலாளித்துவத்தை நடத்த எடுத்த முயற்சி தோல்வி கண்டபோது ஒவ்வொரு பகுதியும் மற்ற பகுதியின் மீது பழியைப் போட எத்தனித்தது என்பது தெளிவு. ஐக்கிய முன்னணி மட்டும் பிளவுபடவில்லை. அரசாங்கமும் விரைவில் முடிவுக்கு வந்தது.

இதற்கிடையில் பல்வேறு பிரச்சினைகளில் அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சிகள் நாடு பூராவும் நடைபெற்றன. பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் வீரசூரிய பொலிசாரால் கொல்லப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். குறிப்பாக பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் சுவர்களில் பெரும் அளவில் அரசாங்க எதிர்ப்புக் கோஷங்கள் எழுதப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1976-ல் நடைபெற்ற புகைரத வேலை நிறுத்தம் இந்த ஆட்சேபனை இயக்கத்தின் உச்சகட்டமாகும். இறுதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்பட்டது. யூ.என்.பி தலைமையிலான காவலர், சாரதிகள் சங்கம் கலந்து கொண்டதனால் தான் புகைரத வேலை நிறுத்தம் வெற்றி பெற்றது. அதனால் முழுப் புகைரத சேவையும் ஸ்தம்பிதமாகியது. அதுபோலவே ஜே.வி.பி.விளக்கமறியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற இயக்கமும் நடைபெற்றது. இந்தக் கைதிகள் விசாரிக்கப்படவுமில்லை. அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவுமில்லை. றோகன விஜயவீர உட்பட்ட ஜே.வி.பி.யின் பல தலைவர்கள் விசாரிக்கப்பட்டு நீண்டகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டார்கள்.

## யூ.என்.பி.யின் மீட்சி

புதிய தேர்தல் 1977 யூலையில் நடந்தது. யூ.என்.பி. அல்லாத கட்சிகள் அனைத்தும் குழப்பத்தில் இருந்தன. டட்லி சேனநாயக்காவின் மறைவுக்குப் பின் ஜே.ஆர். ஜயவர்த்தனா யூ.என்.பி.யின் தன்னிரகற்ற தலைவராகினார். ஜே. ஆரின் தலைமையில் தேர்தலுக்கு யூ.என்.பி.முற்றிலும் தயாராயிருந்தது. ஒரு பாராளுமன்றத் தேர்தலில் யூ.என்.பி.யைத் தோற்கடிப்பதற்கு ஒரே வழி மற்றக் கட்சிகள் ஐக்கியப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலும் தனியொரு அபேட்சகரை நிறுத்துவதேயாகும் என்று நான் முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன். 1956-லும் 1960 யூலையிலும் 1970-லும் இதுதான் நடைபெற்றது. 1977 தேர்தலில் இது நடைபெறவில்லை. யூ.என்.பி. எதிர்ப்புக் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் நிலவவில்லை. இதனால் யூ.என்.பி.-க்கு இலேசான வெற்றி நிச்சயமாகியது. தனியாகப் போட்டியிட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களையே பெற்றது. லங்கா சம சமாஜக் கட்சியும் திரிபுவாதக் கட்சியும் சில முன்னாள் சிறீலங்கா கட்சியினருடன் சேர்ந்து போட்டியிட்டு முழுதாகத் தோற்கடிக்கப்பட்டனர். சிறீலங்காவின் பாராளுமன்றத் தேர்தல் வரலாற்றில் தனியொரு இடதுசாரியும் தெரிவு செய்யப்படாதது இதுவே முதல் தடவையாகும். என்.எம். பெறேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி, குணவர்த்தனா, எஸ். ஏ. விக்ரமசிங்க, பீட்டர் கெனமன் ஆகிய பெரும் புள்ளிகள் அனைவரும் தோல்வி கண்டார்கள். அவர்களுடைய துரோகத்துக்கு மக்கள் அளித்த தீர்ப்பு இதுவாகும். அவர்கள் சோஷலிசத்துக்கு மக்களை அழைத்துச் செல்வதாக வாக்களித்தார்கள், ஆனால் முதலாளித்துவ



சகதியில் புரண்டார்கள். அவர்கள் தமது கொள்கையை நிறைவேற்றவில்லை. ஆகவே தண்டிக்கப்பட்டார்கள்.

யூ. என். பி.-யின் வெற்றி அது எதிர்பார்க்கப்பட்டாலும் பெரியது. அது பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்றது. எந்தக் கட்சியும் இத்தகைய வெற்றியை முன்னர் பெற்றதில்லை. அந்த நிலைமை நிரந்தரமாகத் தொடர முடியாது என்பதை உணர்ந்து கொண்ட கட்சித் தலைவர் இந்தப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி தன்னையே நிர்வாக ஜனாதிபதியாக நியமித்து ஏதேச்சதிகார ஆட்சி ஒன்றை அமைக்கும் மாற்றத்தை ஏற்படுத்தும் அரசியல் சட்ட திட்டத்தை உருவாக்கினார். உப தேர்தல்கள் தடை செய்யப்பட்டன. 1977-ல் சிறீலங்கா சுதந்திர கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வி இன்னொரு தேர்தலில் யூ.என்.பி.-க்கு ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில் விகிதாசார பிரதிநிதித்துவம் புகுத்தப்பட்டிருக்கிறது.

யூ.என்.பி. ஆட்சிக்கு வந்ததும் முந்திய அரசாங்கங்கள் கடைப்பிடித்த சில கொள்கைகளை மாற்றத் தொடங்கியது. அது போலியான சோஷலிசப் பெயர்ப் பலகையை போட்டுக் கொண்டு அந்நிய ஏகாதிபத்தியக் கொம்பெனிகள் குறிப்பாக தேசங்கடந்த கொம்பெனிகள் எமது பொருளாதாரத்துக்குள் நுழைந்து சுரண்டுவதற்கு வழி திறந்து விட்டுள்ளது. இந்த அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கை ஒன்றைப் பிரகடனம் செய்து பெருந்தொகையான அனாவசிய ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதியை அனுமதித்தது. ''இப்பொழுது எமது நாட்டில் இப்பொருட்கள் கொட்டிக் குவிக்கப்பட்டுள்ளன. முந்திய அரசாங்கம் கடைப்பிடித்த இறக்குமதிக் கொள்கையை இது மாற்றியது. முந்திய அரசாங்கத்தின் கொள்கையின் கீழ் பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்ய உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. இறக்குமதிகளை முற்றாகத் தடை செய்தும் தடை ரீதியான வரி விதித்தும் வெளிநாட்டுப் போட்டியிலிருந்து இந்த உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் பாதுகாக்கப்பட்டன, யூ.என்.பி. அதன் கொள்கையால் கொஞ்சநஞ்சமிருந்த தொழிற்துறைகளுக்கு சாவு மணி அடித்தது. விவசாயத்திலும் இப்படியே முந்திய அரசாங்கத்தின் கீழ் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்தது. உள்ளூர் விவசாயிகள், குறிப்பாக வடக்கில் விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டுக்குத் தேவையான உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தார்கள். ஆனால் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்ததும் இந்த உணவுப் பொருட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை மீண்டும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதித்தது. இதனால் முந்திய ஆட்சியின்போது செல்வந்த ராகிய உள்ளூர் விவசாயிகள் மீண்டும் ஏழைகள் ஆகினார்கள்.

சுதந்திர வர்த்தக வலயம் போன்ற நிறுவனங்களின் கீழ் எமது மலிவான கூலியும் வளங்களும் பகிரங்கமாகவும் ஈவிரக்க மின்றியும் சுரண்டப்படுகின்றன. ஜனாதிபதியே இவற்றை ‘‘தொழிற்துறைப் புரட்சிக்கு முந்திய அமெரிக்காவிலும் ஜப்பானிலும் பிரிட்டனிலும் நிலவிய கொள்ளைக்காரப் பிரபுக் களின் பிரதேசங்களை ஒத்தவை என்று குறிப்பிட்டிருக்கிறார். சுதந்திர வர்த்தக வலயம் பிரச்சாரம் செய்யப்பட்டளவிற்கு ஒரு வெற்றியல்ல. வெளிநாட்டுச் செலாவணியைப் பொறுத்த வரையில் அதனால் நிகர லாபம் ஏற்படவில்லை. குறைவான தொழில் வாய்ப்புகளைத்தான் அது உருவாக்கியது. தொழி லாளரின் மாற்றம் என்பது ஒரு கேலிக்குரிய விஷயமாகியது. ஏனென்றால் சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள பெரும்பாலான வாணிக நிலையங்கள் ஆடைத்தொழிற்சாலைகளாக இருக்கின்றன. அவற்றின் சொந்தக்காரர்கள் ஹொங்ஹொங், அமெரிக்கா மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் இறக்குமதி ஆடைகளுக்கான தமது கோட்டாக்களை முடித்துக் கொண்டபின் சிறீலங்கா கோட்டாவையும் மலிவுக் கூலியையும் பயன்படுத்தக் கட்டுநாயக்க விற்கு வந்துள்ளார்கள். இந்தியக் கூலி விலை சிறீலங்காக் கூலி விலையிலும் பார்க்க இரண்டு மடங்காகும். சிங்கப்பூர்க் கூலி விலையிலும் பார்க்க ஐந்து மடங்காகும். இதனால் சிறீலங்காவின் மலிவுக் கூலியைக் கொண்டு விரைவில் பணம் புரட்ட வெளிநாட்டுக் கம்பெனிகள் சிறீலங்காவிற்கு படையெடுத்து வந்தன.

அதே வேளையில் கொஞ்சம் கொஞ்சமாக சகல தேசியமய மாக்கப்பட்ட சேவைகளும் குலைக்கப்பட்டு தனியார் மயமாக்கப் பட்டன. யூ. என். பி. அதிகாரத்துக்கு வந்தபோது சிறீலங்காவின் ஏறக்குறைய அறுபது சதவீதமான பொருளாதாரம் தேசிய மயமாக்கப்பட்டிருந்தது. அரசுக்கு சொந்தமாயிருந்தது அல்லது அரசுக் கட்டுப்பாட்டின் கீழிருந்தது. ஆனால் இது சோஷலிச மாகாது. ஏனென்றால் அரசு அதிகாரம் யாருடைய கையில் என்பதுதான் முக்கிய கேள்வியாகும். நிச்சயமாக அரசு அதிகாரம் ஏகாதிபத்திய சார்பு, பெரும் முதலாளி வர்க்கத்தின் கரங்களில் இருக்கின்றது. ஆகவே முதலாளித்துவத்துக்கும் சுரண்டலுக்கும் சாதகமாகவே அரசுஅதிகாரம் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட அளவு திட்டமிடுதலும் கட்டற்று சுரண்டலைக் கட்டுப்படுத்துவதும் சாத்தியம். இப்பொழுது இது எல்லாம்



அற்றுப்போயின. பஸ் சேவை முதல் அரசுக்குச் சொந்த மான நெசவாலை வரை எங்கும் தனியார் துறை நுழைந்தது. தந்தித் தொடர்பு சேவை தனியார் துறைக்கு கையளிக்கப்படவிருக்கிறது என்று இப்பொழுது ஒரு வதந்தி அடிபடுகின்றது. தேசிய மயமாக்கப்பட்ட தோட்டங்கள் இதுவரை தனியார் மயமாக்கப்படாதிருந்தால் அதற்குக் காரணம் அவற்றைப் பொறுப்பேற்பதற்கு யாரும் இல்லை என்பதேயாகும். ஆனால் பல தோட்டங்கள் தனியாருக்கு விற்கப் பட்டுள்ளன. மகாவலி வேலைத் திட்டத்தின் கீழ் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் ஏற்கனவே தேசங்கடந்த கொம்பெனி களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

1977 முதல் வேலையின்மை பெரிதும் அதிகரித்திருக்கிறது. மத்திய கிழக்கிற்கு தேர்ச்சி பெற்றவர்களும் தேர்ச்சி பெறாதவர் களுமான தொழிலாளர்கள் பெருந்தொகையிற் சென்றதனாலேயே அது இன்னும் மோசமான தொகையை அடையவில்லை. இன்று மத்திய கிழக்கிற்குச் சென்ற தொழிலாளர்களினாற் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி தேயிலைக்கு அடுத்தபடியாக இரண் டாவது இடத்தில் இருக்கின்றது. ஆனால் இதனை ஒட்டி அரசாங்கம் பெருமைப்பட முடியாது. வாழ்க்கைச் செலவு முன் காணாத உயரத்தை அடைந்துள்ளது. யூ. என். பி. அதிகாரத் துக்கு வந்தபோது 75 சதமாக இருந்த ஒரு இருத்தல் பாணின் தற்போதைய விலை ரூபாய் 3.10, சாதாரண தபால் தலையின் விலை 15 சதத்திலிருந்து 75 சதத்துக்கு உயர்ந்துள்ளது. இரண்டும் 4 மடங்கு அதிகரிப்பு. இது போலவே மற்ற பாவனைப் பொருட்களினதும் புகைரதம், பஸ், மின்சாரம், தொலைபேசி, தந்தி ஆகிய சேவைகளினதும் விலை அதிகரித்திருக்கிறது. ரூபாவின் மதிப்பு பொருளாதாரத்தின் நிலைமையை நன்கு காட்டுவதாகும். 1977-ல் யூ. என். பி. ஆட்சிக்கு வந்தபோது 1 அமெரிக்க டாலர் 8 ரூபாவுக்கு சமமாக இருந்தது. இன்று 72 ரூபாவைத் தாண்டி விட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய ரூபாவும் இலங்கை ரூபாவும் சமமாக இருந்தன. ஆனால் இன்று ஒரு அமெரிக்கா டாலர் 27 இலங்கை ரூபாவுக்குச் சமமாக இருக்கும் அதே வேளையில் ஒன்பதரை இந்திய ரூபாக் களுக்கு சமமாக இருக்கின்றது.

சர்வதேசிய நாணய நிதிபோன்ற அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களிலிருந்து பெருந்தொகையான கடன்களைப் பெற்று யூ. என். பி. எமது பொருளாதாரத்தை ஓட்டுகின்றது. இன்னும் பிறவாத எமது எதிர்கால சந்ததி மக்களை அதுஅந்நிய ஏகாதிபத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யத்துக்கு ஈடுவைத்துள்ளது. எமது நாட்டின் நவ காலனிச மயமாக்கத்தை அது மேலும் அதிகரித்து அந்நிய ஏகாதிபத்திய ரதத்துடன் எமது பொருளாதாரத்தை மேலும் இறுக்கமாகப் பிணைத்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதங்களும் தேசங்கடந்த கொம்பெனிகளுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளும் வெளிநாட்டவர்களுக்கு சிறீலங்காவை ஒரு பாதுகாப்பான இடமாக்கியுள்ளது.

அரசியல் ரீதியில் யூ. என். பி. தலைவரான ஜே. ஆர். ஜயவர்த்தனபாராளுமன்றத்தில் மிகப்பெரியபெரும்பான்மையைக் கொண்டிருந்த போதும் அரசியல், தொழிற்சங்கத் துறைகளில் தனக்கு இருந்த எதிர்ப்பு அனைத்தையும் அழித்தொழிக்க ஆரம்பித்தார். பாராளுமன்ற ரீதியில் பார்த்தால் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனக்கும் பெரிய அச்சுறுத்தல் என்பதை அவர் சரியாகப் புரிந்து கொண்டு அரசியல் ரீதியில் அவரைச் சீரழிக்க ஆரம்பித்தார். அவர் ஜனாதிபதி கமிஷன் ஒன்றை அமைத்து முன்னால் பிரதமர் தேவையில்லாதவிடத்தும் அவசரகால நிலைமையின் கீழ் ஆட்சி புரிந்தும் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டை விசாரித்தார். இது ஒரு விஷமத்தனமான குற்றச்சாட்டு. சிறிமாவோ அரசாங்கத்தின் போது அவசர கால நிலைமை தொடர்ந்து நிலவியதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதல்ல. அது அவருடைய தனிப்பட்ட முடிவல்ல அமைச்சரவையின் முடிவு. இந்த முடிவுக்கான காரணங்களை எதிர்காலத்தில் ஒரு கமிஷன் ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவது சாத்தியமில்லை. இது தவிர சிறிமாவோ தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். தவறான அரசியல் தீர்ப்புகளுக்கு அவர் கொடுத்த விலை அது. மேலும் தண்டனை வழங்குவது நியாயமற்றது மட்டுமல்ல, ஒழுக்க முரணானதுமாகும். முன்னொருபோதும் இப்படிச் செய்யப்படவில்லை. ஆனால் ஜனாதிபதி கமிஷன் எதிர்பார்த்தவாறே அவரைக் குற்றவாளியாகக் கண்டது. பாராளுமன்றத்திலுமாக யூ,என்.பி. அவருடைய பாராளுமன்ற ஆசனத்தை இல்லாமற் செய்தது. அத்துடன் 7 ஆண்டுக் காலத்துக்கு அவருடைய குடியியல், அரசியல் உரிமைகளை இல்லாமற் செய்தது.

1980 அக்டோபரில் இந்த நியாயமற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது மக்கள் நியாயமான முறையில் ஆத்திரப்பட்டார்கள். தமது தலைவருக்கு வழங்கப்பட்ட இந்த அநியாயமான தண்டனையை எதிர்த்து பாராளுமன்றத்துக்கு வெளியிலான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று சிறீலங்கா சுதந்திரக்



கட்சியின் கணிசமான பகுதியினர் கோரினார்கள். பாராளுமன்றத்தின் மீது சமாதான ஊர்வலம் நடத்துவது என்று கூடப் பேசப்பட்டது. அரசாங்கம் எந்த நிலைமையையும் எதிர்நோக்க பத்தாயிரம் பொலிசாரை கொழும்பில் அணி திரட்டியது. ஆனால் நோஞ்சல் இதயங்கள் வெற்றி கண்டன. எதுவுமே நடைபெறவில்லை. பின்னர் அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு வெளி, அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுக்க முயற்சித்ததாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதித் தலைமையின் மீது குற்றஞ்சாட்டியது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு முயற்சி வெற்றி பெறவில்லை.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு எதிரான நடவடிக்கை விவேகமான ஒன்று. அதனால் யூ.என்.பி.யினதும் ஜே.ஆரினதும் மிகப் பலமானஎதிரி பாராளுமன்ற அரங்கிலிருந்து அகற்றப்பட்டார். அது மட்டுமல்ல சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே பிளவையும் அது ஏற்படுத்தியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பது பற்றியும் ராஜ்ய சபைக் காலம் முதல் பண்டாரநாயக்காக்களை (கணவனும், மனைவியும்) தொடர்ந்து ஆதரித்து வந்த அத்தகைய ஆசனம் சிறீமாவோவின் இடத்தில் யாருக்குச் செல்வது என்பது பற்றியும் உட்கட்சி சச்சரவுகள் ஏற்பட்டன. சிறிமாவோ தொடர்ந்து கட்சியின் தலைவராக இருந்தார். ஆனால் மைத்திரிபால சேனநாயக, கலுகல ஆகியோரும் அவருடைய மகன் அனுராவும் கூடக் கட்சியை விட்டு விலகிப் போட்டிக் கட்சி ஒன்று ஆரம்பித்தார்கள். மைத்திரிபால, அனுரா கூட்டத்தினர் மீண்டும் கட்சிக்கு வந்தார்கள். கலுகலையும் இன்னும் சிலரும் யூ.என்.பி.யில் சேர்ந்து கொண்டார்கள்.

அத்தகைய ஆசனம் சம்மந்தமான சச்சரவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. பண்டாரநாயக்கா குடும்பத்தின் ஆசனம் என்று அது கருதப்பட்டபடியால் இளைய புத்திரி சந்திரிகாவும் ஏற்கனவே நுவரஎலியா பாராளுமன்ற உறுப்பினரான அனுராவும் அந்த ஆசனத்தை கேட்டார்கள். இந்தச் சண்டை போடும் சகோதரர்களைத் தாயாரால் இணங்க வைக்க முடியவில்லை. இறுதியில் அத்தகைய ஆசனம் சிறிமாவோவின் வெளிநாட்டு அமைச்சில் துணை அமைச்சராக இருந்த லக்ஸ்மன் ஜயக்கொடிக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் சந்திரிகாவுக்கும் அனுராவுக்கும் இடையிலான விரிசல் குணமாகவில்லை. பின்னர் கட்சியில் பிளவு ஏற்பட்டு சந்திரிகாவின் கணவரான விஜய குமாரணதுங்காவின் தலைமையில் சிறீலங்கா மக்கள் கட்சியின் ஸ்தாபிதத்துக்கு அது வழிகோலியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுபோலவே ஜே.ஆர். திட்டமிட்ட முறையில் தொழிலாளி
வர்க்க இயக்கத்தைப் பலவீனப்படுத்தவும் அழித்தொழிக்கவு
ஆரம்பித்தார். 1977-க்குப் பின் முன்னர் ஐக்கிய முன்னணி
அரசாங்கத்தை ஆதரித்தவர்களும் ஆதரிக்காதவர்களும் என்று
பிளவுபட்டிருந்த இடதுசாரி, தொழிலாளி வர்க்கச் தொழிற்
சங்க இயக்கத்தில் பொதுவான யூ. என். பி ஆபத்துக்கு எதிரான
ஐக்கியத்தின் அறிகுறிகள் தோன்றின. 1977 டிசெம்பரில் சகல
யூ. என் .பி. எதிர்ப்பு தொழிற் சங்கங்களும் கூட்டுத் தொழிற்
சங்கக் கமிட்டியாக ஒன்றிணைந்தன. அதன் முதலாவது பேரணி
1977 டிசெம்பர் 27-ம் தேதி கொழும்பு ஹன்ட் பார்க்கில் நடை
பெற்றது. எமது சி.டி.யு.எப். இந்தக் கூட்டுக் கமிட்டியில் அதி
ஆரம்பத்திலிருந்தே கலந்து கொண்டது. ஹன்ட் பார்க்
பேரணியில் நான் உரையாற்றினேன். பல மாத காலம் நடை
பெற்றதும், கடுமையான வேறுபட்ட கருத்துக்களையும் வழிமுறை
களையும் வெளிக்காட்டியதுமான நீடித்த காலப் பேச்சுவார்த்தை
களின் பின் சில பொதுக் கோரிக்கைகள் வகுக்கப்பட்டன. 1980
மார்ச்சில் கொழும்பு சுகதாச ஸ்ரேடியத்தில் நடைபெற்ற தொழிற்
சங்கங்களின் மாநாட்டில் இந்தக் கோரிக்கைகள் தொழிலாளர்
களின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டன. பின்னர்
தொழிற்சங்கங்கள் இந்தப் பொதுக் கோரிக்கைகளுக்கு ஆதரவாகச்
செயலில் ஈடுபடத் தயாராகின. அரசாங்கம் எதிர் நடவடிக்கை
களை எடுக்க ஆரம்பித்தது.

ஏற்கனவே அரசாங்கம் மே தின ஆர்ப்பாட்டம் தவிர மற்ற
ஆர்ப்பாட்டம் அனைத்தையும் தடை செய்திருந்தது. தொழிற்
சங்கங்கள் அடைப்பில் (பிக்கெற்றில்) ஈடுபட்டது. தொழிலாளர்கள்
தமது தொழிற்சாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் முன்னால்
தமது கோரிக்கைகள் அடங்கிய பலகைகளைத் தாங்கிக் கொண்டு
நின்றனர். 1980 யூன் 5-ம் திகதி கூட்டுக் கமிட்டி பெருமளவிலான
அடைப்பை ஒழுங்குப்படுத்தியது. இத்தகையதோர் அடைப்பின்
போது அரசாங்க ஸ்ரோர்சுக்கு முன்னால் சோமபால என்ற
தொழிலாளி யூ.என்.பி. காவலர்களால் கொல்லப்பட்டார். இதே
தினத்தில் 33 ஆண்டுகளுக்கு முன்னர் 1947 மே, யூன் பொது
வேலை நிறுத்தத்தின்போது ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றில்
சென்று கொண்டிருந்தபோது கந்தசாமி என்ற அரசாங்க லிகிதர்
பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சோமபாலாவின் மரணத்
தையொட்டி மக்கள் மத்தியில் பெரும் ஆத்திரம் எழுந்தது.
கோட்டையில் இருந்த அவருடைய தொழிற்சங்கக் காரியாலயத்
திலிருந்து கனத்தை மயானத்துக்கு சென்ற அவருடைய பிரேத



ஊர்வலத்தில் முன் காணாத ஜனத்திரள் கலந்து கொண்டது.
சகல யூ.என்.பி. எதிர்ப்பு இயக்கத்தினரும் சோமபாலாவின் ஈமக்
கிரியைகளில் கலந்து கொண்டனர்.

அடுத்த மாதம் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின்
பீடிகையாக இது அமைந்தது. வேலை நிறுத்தத்துக்கான
தயாரிப்புகள் நன்கு செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள
வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலுள்ள அரசியற்
பிளவுகள்தான் இதற்குப் பிரதான காரணமாகும். சிறீலங்கா
சுதந்திரக் கட்சி,லங்கா சம சமாஜக் கட்சி,திரிபுவாத கம்யூனிஸ்ட்
கட்சி ஆகியவற்றின் தலைமையிலான தொழிற்சங்கங்கள் இவ்
வேளையில் பொது வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகக் குரல்
கொடுத்தபோதும் இக்கட்சிகளின் தலைவர்கள் ஐக்கிய முன்னணி
அரசாங்கத்தின் போது வகித்த துரோக பாத்திரத்தைத் தொழி
லாளர்கள் மறந்து விடவில்லை. குறிப்பாக 1972-ல் அரசு ஈட்டு
வங்கியில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை சீர்குலைத்ததையும்
(டாக்டர் என். எம். பெரேராவும் அவருடைய லங்கா சம சமாஜ
கட்சி சகபாடிகளும்) வேலை நிறுத்தம் செய்த அனைவரையும்
வேலை நீக்கம் செய்ததையும் தொழிற்சங்கவாதிகள் மறந்து
விடவும் இல்லை. மன்னித்து விடவும் இல்லை. கடந்த காலத்
திலான தமது துரோகப் பாத்திரம் பற்றி எந்தப் பாரதூரமான
சுயவிமர்சனமும் செய்தறியாத இந்தத் தலைவர்களில் தொழி
லாளர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அவர்களின் நேர்மை
யைப் பற்றி தொழிலாளர்கள் சந்தேகம் கொண்டார்கள். கூட்டுத்
தொழிற்சங்கக் கமிட்டிக்கு வெளியே இருந்த பெருந்தொழிலாளர்
களையும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளச் செய்ய முடிய
வில்லை.

ரத்மலான றன்னிங் செட்டில் நடைபெற்ற வேலை நிறுத்தம்
ஒறின்ன் தலைவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடத்திய அடக்கு
முறையின் விளைவாக 1980 யூலை 17-ம் திகதி வேலை நிறுத்தம்
முன்னதாக ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் அவசர கால
முலைமையை பிரகடனம் செய்து அதன் விசேஷ அதிகாரங்களைப்
பயன்படுத்தி வேலை நிறுத்தத்தைச் சட்ட விரோதமானதாகப்
பிரகடனம் செய்து அதில் கலந்துகொண்ட அனைவரையும் வேலை
நீக்கம் செய்தது. வேலை நிறுத்தம் வெற்றி பெறவில்லை.
மூலாதம்பு தலைமையிலான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம்
முதலிய தொழிற்சங்கங்கள் கடைசி நேரத்தில் அதில் கலந்து
கொள்ளவில்லை. அரசாங்க துறையிலும் தனியார் துறையிலும்
ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டனர். பல்வேறு நிபந்தனைகளிற் இவர்களில் சிலர் வேலைக்குத் திரும்பச் சேர்க்கப்பட்டனர். ஆனால் இதில் ஒரு ஒத்தமுறை நிலவவில்லை. ஒவ்வொரு அமைச்சும் வித்தியாசமான விதிகளைப் பின்பற்றியது. வாழ்க்கையைச் சமாளிக்க முடியாத, பல வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். தூரதிருஷ்டி இன்மையாலும் தலைவர்களில் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இல்லாதிருந்த காரணத்தாலும் வேலை நிறுத்தம் தோல்வி கண்டது.

## மீண்டும் தமிழர் பிரச்சினை

யூ.என்.பி. 1978 பொதுத் தேர்தலின் போது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வ கட்சி மாநாடு ஒன்றை நடத்தும் என்று வாக்குறுதி அளித்திருந்த போதும் அதிகாரத்துக்கு வந்ததும் எதனையும் செய்யவில்லை. இதற்கிடையில் தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் வட்டுக்கோட்டை மாநாட்டில் தனியான ஈழ அரசு என்ற கோரிக்கையை முன்வைத்தது. நான் முன்னர் குறிப்பிட்டது போல் இது விரக்தியிலும் ஏமாற்றத்திலும் ஏற்பட்ட கோஷமாகும். இத்தகைய அரசை உருவாக்கும் சாத்தியப்பாடு இந்திய விஸ்தரிப்புவாதத்துக்கு இரையாகாமல் அதனைக் காப்பாற்றுதல் ஆகியன பற்றித் திட்டமிடப்படவில்லை. இந்தக் கோரிக்கையின் வளர்ச்சியிலும் பார்க்க முக்கியமானதோர் விஷயம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டது. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் வங்கரோத்தை அவர்கள் அறிந்து கொண்டு ஆயுதப் போராட்டம்தான் ஒரே விடிவு வழி என்று உணர்ந்து கொண்டார்கள். மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளாகிய நாம் சிறீலங்கா இளைஞர்கள் மத்தியில் இரண்டு விஷயங்களை விளக்கப்படுத்தி வந்துள்ளோம். குறிப்பாக எமது யாழ்பாணக் கிளை இவை பற்றி உக்கிரமான இயக்கம் ஒன்றை குடாநாட்டில் நடத்தியது. இந்த இயக்கத்தின் போது பெரியதும் சிறியதுமான பல நூறு கூட்டங்களில் நான் உரையாற்றினேன். அப்பொழுது தமிழ் இளைஞர்கள் எமது கொடியின் கீழ் ஸ்தாபன ரீதியாக ஒன்று திரளாதபோதிலும் எமது செய்தி ஆழமாக சென்றது என்பதில் ஐயமில்லை. தமிழ் இளைஞர்கள் பாராளுமன்ற பாதையை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டதும் தற்போதைய ஆயுதப் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் பெருந்தொகையான ஸ்தாபனங்கள் மார்க்சிய—லெனினியத்தை தமது சித்தாந்தமாக ஏற்றுக் கொண்டுள்ளதும் இதனை நிரூபிக்கிறது. இதனை ஒட்டி நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.



1977-க்குப் பின் தீவிரவாத தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிரான கொரில்லா ஆயுதப் போராட்டத்தை தீவிரப்படுத்தி பல பொலிஸ் அதிகாரிகளைக் கொன்று பல அரசு வங்கிகளில் இலட்சக்கணக்கான ரூபாக்கள் கொள்ளையடித்தனர். 1980-ல் பின்னர் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்துக்கான தயாரிப்பின்போது சி.டி.யு.எப். உட்பட்ட சில தொழிற்சங்கங்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தொழிலாளி வர்க்கத்தின் பொதுக் கோரிக்கைகளை வரிசைப்படுத்த முயற்சி எடுத்தன. லங்கா சம சமாகஜ கட்சி சிறீலங்கா சுதந்திர கட்சி ஆகியவற்றின் தொழிற்சங்கங்கள் எதிர்த்தபடியால் இது கைவிடப்பட்டது. ஆனால் 1980 யூலை பொது வேலை நிறுத்தம் தோற்ற பின்னரும் எதிர்ச் சக்திகளுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறை அதிகரித்த பின்னரும் யூ.என்.பி எதிர்ப்புச் சக்திகளின் ஐக்கியத்துக்கான புதியதோர் நடவடிக்கை நனவாகியது. லங்கா சம சமாஜக் கட்சியின் ஆரம்பத் தூண்டுதலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி லங்கா சம சமாஜக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, மகாஜன எக்சத் பெரமுன எமது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய ஐந்து அரசியற் கட்சிகள் தற்காலிக யூ.என்.பி. எதிர்ப்பு முன்னணி ஒன்றை உருவாக்க உடன்பட்டன. திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சி, நவலங்கா சம சமாஜக் கட்சி, ஜே.வி.பி. ஆகியன இந்த முன்னணியில் சேர மறுத்தன. இந்த முன்னணியின் காலம் குறுகியதாக இருந்தபோதும் சிறப்பான யூ.என்.பி. எதிர்ப்புப் பிரச்சாரத்தை அது மேற்கொண்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த முன்னணியில் இருந்த காரணத்தினால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், லங்கா சம சமாஜக் கட்சியும் சில முக்கியமான தமிழர் கோரிக்கைகளை பிரச்சாரக் கோரிக்கைகளாக முன்வைக்க உடன்பட்டன.

கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை ஆகிய இடங்களில் மூன்று முக்கியமான கூட்டங்களை இந்த முன்னணி நடத்தியது. யாழ்ப்பாணக் கூட்டம் மிகவும் பெரிதாக நடைபெற்றது. அது உண்மையில் சிறீலங்காவில் நடைபெற்ற மிகப்பெரிய கூட்டங்களில் ஒன்றாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சிறீலங்கா சுதந்திர கட்சித் தலைவர் திருமதி. பண்டாரநாயக்கா, லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர் கெல்வின் ஆர்.டி. சில்வா, மகாஜன எக்சத் பெரமுனத் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஆகியோரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நானும் கலந்து கொண்டோம். அது எமது நாடு கண்ட மிகப் பெரிய யூ. என். பி. எதிர்ப்பு ஐக்கியமாகும். அதற்குப் பெருந்திரளான மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்ததில் ஆச்சரியமில்லை. மக்கள் கூட்டத்தினராலும் மேடையில் பிரதான யூ.என்.பி. எதிர்ப்பு அரசியற் தலைவர்கள் இருந்ததி னாலும் ஊக்கம் பெற்று எனது அரசியல் வாழ்வில் மிகச் சிறந்த சொற்பொழிவை நான் அதில் நிகழ்த்தினேன் என்று நினைவு கின்றேன் இரண்டு செய்திகளை நான் கூறினேன். முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் வங்லோட்டுப் பற்றியது ஒன்று எதிர்ப்புரட்சி வன்முறைக்கு எதிராக புரட்சிகர வன்முறையைப் பயன்படுத்த வேண்டும் என்பது இன்னொன்று. மக்கள் ஒரே கரகோஷம் செய்தார்கள்.

கூட்டத்தின் முடிவில் முன்னுக்கு நின்ற மக்கள் கூட்டத்தினர் மேடைக்கு முன்னேறினர். அதிருஷ்டவசமாக கொந்தளிந்தெழும் ஜனத்திரளைக் கட்டுப்படுத்த தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் ஊழியர்களை ஒழுங்குபடுத்தியிருந்தது. இந்த ஊழியர்கள் மேடையிலிருந்து தலைவர்களை அவரவர் கார்களுக்கு அழைத்துச் சென்றனர். திருமதி பண்டாரநாயக்காவை அழைத்துச் சென்ற சிலர் அவருடைய ஆட்சியின்போது தாம் சிறைவைக்கப்பட்டதை நினைவூட்டினார்கள். அவர்கள் குறைந்தது கொல்லப்படவில்லை என்று அவர் சாதுரியமாக பதிலளித்தார். இரவுச் சாப்பாட்டின் போது திருமதி பண்டாரநாயக்கா இதனை என்னிடம் கூறினார்.

1981-ன் ஆரம்ப காலத்தில் ஒரு அதிகாரப் பரவலாக்க நடவடிக்கையாக நாட்டின் சகல பகுதிகளினதும் மாவட்ட சபை களை ஸ்தாபிப்பது பற்றிய பிரேரணைகளை ஜனாதிபதி முன்வைத் தார். ஆனால் இந்தச் சபைகளுக்கு அதிகாரம் அற்பமாகவும் நிதி ஒதுக்கீடு இல்லாமலும் இருந்தபடியால் தமிழர் விடுதலைக் விடுதலைக் கூட்டணி ஜே.வி.பி. ஆகியன தவிர யூ.என்.பி அல்லாத கட்சிகளை அனைத்தும் நிராகரித்தன. இந்த சபைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரிய தோர் தவறை இழைத்தது. இதனால் அதில் பிளவு ஒன்று ஏற் பட்டது. டாக்டர் எஸ்.ஏ. தர்மலிங்கம், கோவை மகேசன் ஆகியோர் தலைமையிலான ஒரு பகுதியினர் பிரிந்து தமிழ் ஈழம் விடுதலை முன்னணியை அமைத்தார்கள். 1981 யூனில் மாவட்ட சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. வட, கிழக்கு மாகாணங் களில் தமிழர் விடுதலைக் கூட்டணி யூ.என்.பி.-யைத் தோற்கடித் ததுதான் இதில் சுவையான நிகழ்ச்சியாகும்.

திரிகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றிக்கு அங்கு வாழும் கணிசமான தொகை சிங்கள மக்களும் துணை புரிந்தார்கள். சிறீலங்க



சுதந்திரக் கட்சி நாட்டின் இதர பாகங்களில் தேர்தல்களைப் பகிஷ்கரித்தபோதும் இப்பிரதேசங்களில் யூ.என்.பி.-க்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களை ஆதரித்தது. வரலாற்றில் முதல் தடவையாக இத்தகைய விஷயம் நடந்தது. எதிர்கால சிங்களவர் — தமிழர் உறவுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி யால் இதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசியல் அறிவு இருந்திருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த வாய்ப்பை இறுகப் பற்றி யூ.என்.பி.எதிர்ப்புச் சக்திகளின் புதிய ஐக்கியத்தைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். அதனை ஒரு ஐக்கிய முன்னணியின் திட்டங்களில் ஒன்றாக அமைத்திருக்க வேண்டும். 1983 யூலையில் நடைபெற்ற பயங்கரச் சம்பவங்களைத் தவிர்ப் பதற்கு ஒரு வாய்ப்பு இருந்திருந்தால் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் முற்போக்கான யூ.என்.பி. எதிர்ப்புப் பகுதியினருடன் நேச அணி அமைப்பதன் மூலமே அதனைச் செய்திருக்கமுடியும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தவில்லை. அது தமிழரைப் பொறுத்தவரையில் நாச கரமான தவறாகும்.

யாழ்பாணத்தில் நடைபெற்ற தேர்தலில் தேர்தல் மோசடிகள் அனைத்தும் இடம் பெற்றன. பின்னர் நடந்த ஜனாதிபதியின் தேர்தலிலும் சர்வஜன வாக்கெடுப்பிலும் இவை சகஜமாயின. தேர்தல் காலத்தில் தமிழருக்கு எதிரான வன்முறையும் அடக்கு முறையும் அதிகரித்தன. மதிப்பிடற்கரிய 95 ஆயிரம் நூல்கள் உடைய யாழ்ப்பாணம் பொது நூலகம், யாழ்பாணப் பாராளு மன்ற உறுப்பினரின் வீடு, யாழ்பாணப் சந்தையின் ஒரு பகுதி, பல வீடுகள், கடைகள் ஆகியன ஹிட்லர் பாணியில் எரிக்கப் பட்டமை இந்த வன்முறையின் உச்சகட்டமாகும். இவை அனைத்தும் நிகழ்ந்த வேளையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு அமைச்சர்கள் இருந்து இவற்றை மேற்பார்வை செய்தார்கள். யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது பொலிசாரால் என்பது ஒரு பகிரங்க இரகசியம். இந்த அட்டூழியங்களைப் பொறுத்து எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதே வேளையில் நாட்டிலுள்ள சகல யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகளினதும் ஐக்கியத்தைக் கண்டு, குறிப்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் மற்றும் யூ.என்.பி. எதிர்ப்புக் கட்சிக் கிடையிலான ஐக்கியத்தைக் கண்டு யூ.என்.பி-யும் ஜனாதிபதி

18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயவர்த்தனாவும் பீதி கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆசை காட்டி இந்த ஐக்கியத்தைச் சீர்குலைக்க ஜனாதிபதி தீர்மானித்தார். அவர் அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் முட்டாள்தனமாக அதை ஏற்றுக் கொண்டார்கள். பேச்சு வார்த்தைகள் மாதக்கணக்காக எந்தவித முடிவுமின்றி நடைபெற்றன. 1983 யூலைக்குப் பின்னர் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமே இவ்வாறு கூறினார். உடன்பட்ட விஷயங்களைக் கூட அமுல்படுத்தப்படவில்லை.

## ஜனாதிபதி தேர்தலும் சர்வஜன வாக்கெடுப்பும்

1982ல் இரண்டு முக்கிய சம்பவங்கள் இடம் பெற்றன. அவை ஜனாதிபதித் தேர்தலும் சர்வஜன வாக்கெடுப்புமாகும். ஜே. ஆர். 1978 முதல் ஆறாண்டு காலம் ஜனாதிபதியாக இருந்தார். இன்னும் இரண்டு ஆண்டுகள் அவர் பதவியில் கடத்தி இருக்க முடியும். ஆனால் தனது பதவி காலத்தின் அரசியல் வங்கரோத்து காரணமாக எதிர்வரும் ஆண்டும் தன்னுடையதும் யூ.என்.பி.யுடையதுமான அரசியல் வாய்ப்புகளை ஒட்டி அவர் அச்சமடைய தொடங்கினார். அதனால் உரிய காலத்துக்கு இரண்டு ஆண்டுகள் முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தி இன்னொரு ஆறாண்டு காலத்துக்குத் தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்த அவர் திட்டமிட்டார். 1984-லும் பார்க்க 1982-ல் தனக்கு நல்ல வாய்ப்புண்டு என்று அவர் கணித்தார். இன்னொரு காரணமும் இருந்தது. ஜனாதிபதி பதவிக்கு அவருடன் போட்டி போடக்கூடிய பலம் வாய்ந்த அபேட்சகர் சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சிறீமாவோ என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஆனால் பழிவாங்கும் யூ.என்.பி. சிறீமாவோவின் அரசியல் உரிமைகளைப் பறித்திருந்தபடியால் அவரால் போட்டி போட முடியாது. சிறீமாவோ போட்டி போட முடியாத நிலைமையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த ஜே.ஆர். தீர்மானித்தார் என்பது தெளிவு.

யூ.என்.பி. எதிர்ப்புச் சக்திகள் மத்தியிலிருந்த ஐக்கியமின்மை யூ.என்.பி-க்குச் சாதகமாக இருந்தது. கூறப்படும் இடது சாரிக் கட்சிகள் உட்பட பாராளுமன்ற எதிர்க் கட்சிகள் மத்தியிலிருந்து மோசமான அரசியல் சந்தர்ப்பவாதத்தை ஜனாதிபதித் தேர்தல் காட்டியது. ஒவ்வொரு அரசியல் கட்சியும் அதன் தலைவரைப்



பிரதமராக்க முயன்ற 1960 மார்ச் தேர்தலை ஒத்தது அது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி முழுக் குழப்பத்தில் இருந்தது. அக் கட்சி அப்பொழுது இரண்டாகப் பிரிந்திருந்தது. அனுரா பண்டாரநாயக்காவின் தலைமையில் விலகியவர்கள் சிலர் திரும்பி வந்திருந்தபோதிலும் வேறு சிலர் நேராக யூ.என்.பி-க்குச் சென்று ஜே.ஆரின் மேடைகளிற் தோன்றினார்கள்.

ஜனாதிபதி அபேட்சகரைத் தெரிவதிலும் அக்கட்சிக்குள்ளே கடுமையான நெருக்கடி நிலவியது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் ஒரு அமைச்சராகவிருந்த திரு. ஹெக்டர் கொப்பெகடுவ இறுதியில் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் ஏகோபித்த தேர்வல்ல. சிறீமாவோவும் மகன் அனுராவும் அதனை ஆதரிக்கவில்லை. அவர்களுடைய நோக்கம் பகிரங்கமாகவுமில்லை. தெளிவாகவுமில்லை. ஜனாதிபதி பதவிக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அபேட்சகராக ஒரு பண்டாரநாயக்காவைத் தவிர வேறொருவரும் இருக்கமுடியாது என்று அவர்கள் கருதியதாகவே கொள்ள வேண்டும். இது பெரிய சோக நிலைமை. ஜனாதிபதி அபேட்சகரை பிரகடனம் செய்ய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தாமதித்ததும் பண்டாரநாயக்கா குடும்பம் கொப்பெகடுவவை ஆதரிக்கவில்லை என்பதை அனைவரும் அறிந்திருந்ததும் ஜே.ஆருக்குச் சாதகமான அம்சங்களாயின. அனுரா தேர்தல் இயக்கத்தில் சிரத்தையுடன் கலந்து கொள்ளவில்லை. அவருடைய சில தேர்தல் பேச்சுக்கள் கொடுப்பெகடுவைப் பாதிக்கவும் செய்தன. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிதி உதவி அவருக்குக் கிடைக்கவில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே.

ஜே. ஆருக்கு எதிரான பொதுவான அபேட்சகர் ஒருவரை நிறுத்த சில முயற்சிகள் ஆரம்பத்தில் எடுக்கப்பட்டன. ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. லங்கா சமசமாஜக் கட்சி, நவலங்கா சமசமாஜக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய மூன்று கட்சிகளுமே ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்தின. இதைவிட மோசமான நிலைமையைக் கற்பனை செய்ய முடியாது. லங்கா சமசமஜாக் கட்சியின் அபேட்சகரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா யூ.என்.பி.யைத் தாக்குவதிலும் பார்க்கக் கூடுதலாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரைத் தாக்கி பெரிய நாசம் இழைத்தார். அவர் திறமையான நியாயவாதி என்ற தனது புகழைப் பயன்படுத்தி சிறீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரின் தெரிவு சட்ட ரீதியானதாக இருக்காது, ஏனென்றால் கட்சியின் தலைவருக்கு அரசியல் உரிமைகள் கிடையாது என்று வாதிட்டார். ஆகவே திரு.கொப்பெகடுவவுக்குப் போட்டு ஒரு வாக்கை வீணாக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டார். அவரை விட்டுத் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். இது சட்ட ரீதியான ஆதரவில்லாத முட்டாள்தனமான வாதம். ஆனால் யூ.என்.பி.யும் முதலாளித்துவ பத்திரிகைகளும் இதனைப் பயன் படுத்தி குழப்பத்தை உண்டு பண்ணின. இரண்டாவது தவனை ஜனாதிபதியாக வருவதற்காக தனது பள்ளி கால நண்பனான ஜே.ஆரின் முயற்சிக்கு கொல்வின் துணைபுரிந்தார்.

தேர்தல் பிரச்சாரக் காலத்திலேயே பல மோசடிகள் இடம் பெற்றன. கொப்பெகடுவ ஜனாதிபதியாகலாம் என்று ஒரு கட்டத்தில் மக்கள் நம்பினார்கள். இத்தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணி அதனைப் பகிஷ்கரித்திருந்த போதிலும் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் கொப்பெகடுவவுக்கு வாக்களித்தது ஒரு விசேஷ அம்சமாகும். ஒரு தமிழ் அபேட்சகராக அகில இந்திய தமிழ்க் காங்கிரசின் தலைவரான குமார் பொன்னம்பலம் போட்டியிட்டபோது அவர்கள் இவ்வாறு வாக்களித்தார்கள். யூ. என். பி. எதிர்ப்புச் சக்திகளின் ஐக்கியமின்மை, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே குழப்பம் ஆகியன தவிர இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமையின் கீழ் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் அளித்த பேராதரவும் ஜே.ஆரின் வெற்றிக்கானதோர் பிரதான காரணமாகும். இடதுசாரிக் கட்சிகள் இத்தேர்தலில் படுமோசமான நிலைமையில் இருந்தன. அவற்றின் மூன்று அபேட்சகர்களும் கட்டுப் பணத்தை இழந்தனர்.

1982ல் பாராளுமன்றக் காலத்தின் முடிவில் பொதுத்தேர்தலை நடத்துவதாக ஜே. ஆர். முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார். இப்பொழுது ஜனாதிபதியாகியபின் இந்த முடிவை அவர் மாற்றினார். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே ஒரு கூட்டம் ''நக்சல் வாதிகளை'' அவர் கண்டுபிடித்தார். திரு. கொப்பெகடுவவுக்கு ஆதரவாக ஊக்கத்துடன் செயற்பட்ட விஜயகுமாரணதுங்க தலைமையிலான குழுவையே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த வேளையில் பாராளுமன்றத் தேர்தல்களை நடத்தினால் நக்சல் வாதிகள் பாராளுமன்றத்துக்கும் வரும் வாய்ப்பு இருக்கின்றது எனவும், ஆகவே இன்னொரு ஆறு வருடத்துக்குப் பாராளுமன்றத் தேர்தலைப் பின்போட தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தப் போவதாகவும் அவர் பிரகடனம் செய்தார். ஊழலான, திறமையற்ற மக்கள் விரும்பாத அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராகத் தான் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் வாக்குறுதி அளித்தார். இதற்காக



அவர் சகல யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் திகதியிடாத ராஜினாமாக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டார். திரு. தொண்டமான் ஒருவர் மாத்திரமே அரசாங்க பாராளுமன்றக் கட்சியில் ராஜினாமாக் கடிதம் கொடுக்காதவர் ஆவார். தான் யூ.என்.பி. உறுப்பினர் அல்ல என்று கூறி அவர் இவ்வாறு செய்தார். இந்த ஜே.ஆரின் சந்தேகத்துக்குரிய நடவடிக்கையால் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினரே பதவியிழந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பார்க்க சர்வஜன வாக்கெடுப்பின் போது யூ. என். பி. அதன் கரங்களை எங்கும் நீட்டியது. முதலாளித்துவ ஜனநாயகத்தை முற்றிலும் நிராகரித்த நிலைமையில் தான் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்றது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஒவ்வொரு கோட்பாடும் அத்துமீறப்பட்டது. சிறீலங்காவில் முதல் தடவையாக அவசர கால நிலைமையின் கீழ் தேர்தல் ஒன்று நடைபெற்றது. இந்த நிலைமையில் ராணுவத்துக்கும் பொலிசாருக்கும் எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டது. பொலிசார் மற்றப்பக்கம் பார்த்துக் கொண்டு நிற்க யூ.என்.பி. காடையர்களும் குண்டர்களும் மக்கள் மீது பயங்கர ஆட்சி ஒன்றை நடத்தினார்கள். அவசர கால சட்டங்களின் கீழ் நூற்றுக்கணக்கான யூ.என்.பி. எதிர்ப்பாளர்கள் அநேகமாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தன்னிச்சையாக கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்கள். யூ.என்.பி-க்கு எதிரானவர்களின் வீடுகள் தேடப்பட்டு அங்கிருந்தவர்கள் தாக்கப்பட்டார்கள். வேலைத் தளங்களிலுள்ள யூ. என். பி. எதிர்ப்புத் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள். 'அத்தா', 'சுதந்திரன்' போன்ற யூ.என்.பி. எதிர்ப்பு பத்திரிகைகளும் அச்சகங்களும் அவசரகாலச் சட்டங்களின் கீழ் மூடப்பட்டன.

செனட்டர் மக்கார்தி காலத்தை நினைவூட்டி கம்யூனிச எதிர்ப்பு வேட்டை ஒன்று நடத்தப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி கவிழ்ப்பு ஒன்றை நடத்த திட்டமிட்ட நக்சல்வாதி குழு ஒன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே இருக்கின்றது என்ற திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தை ஜனாதிபதியும் பிரதமரும் பரப்பினார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக எந்த ஆதாரத்தையும் முன் வைக்காத போதிலும் தேவ வாக்காக இதை வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பரப்பின. அரசுக்குச் சொந்தமான பத்திரிகைகள் பொய்ச் செய்திகளை வெளியிட்டு சிங்களவர் மத்தியில் வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டிவிட முயற்சித்தன. யூ. என். பி. பிரச்சாரத்துக்கு ஆதரவாக அரசு இயந்திரம் வெட்கமற்ற முறையில் பாவிக்கப்பட்டது. தேர்தல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கமிஷனரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் அப்படி செய்யக் கூடாது அது சட்ட விரோதமானது என்று உத்தரவிட்டபோதும் யூ.என்.பி. அதன் விளக்கு சுவரொட்டிகளை எங்கும் ஒட்டியது இதற்கு நல்ல உதாரணமாகும். இந்த சட்ட விரோதமான சுவரொட்டிகளை தனது பொலிசாரால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அகற்றிவிக்க முடியவில்லை.

தேர்தலில் முன்காணாதளவு ஆள்மாறாட்டமும் அச்சுறுத்தலும் வன்முறையும் இடம் பெற்றன. யூ.என்.பி. எதிர்ப்புத் தேர்தல் ஏஜெண்டுகள் தேர்தல் சாவடியிலிருந்து இழுத்து எடுக்கப்பட்டு தாக்கப்பட்டார்கள். வாக்களிப்பு அதிகாரிகள் கத்தி காட்டி அச்சுறுத்தப்பட்டார்கள், யூ.என்.பி. தலைவர்கள் பகிரங்கமாக றிவோல்வர்களுடன் வலம் வந்தார்கள். முன்னாள் ஜனாதிபதி அபேட்சகரான கொப்பெகடுவவையே ஆள்மாறாட்டம் செய்யுமளவிற்கு ஆள்மாறாட்டம் நடைபெற்றது.

ஆனால் இத்தடவையும் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களின் வாக்கே சர்வஜன வாக்கெடுப்பில் யூ.என்.பி. வெற்றி பெறத் துணைபுரிந்தது. தொழிலாளர்கள் பெருந்தொகையாக வாழும் பதுளை, நுவர எலிய, கண்டி ஆகிய இடங்களிலேயே தேர்தலை பின்போடுவதற்கு ஆதரவாகக் கூடுதலான வாக்குகள் கிடைத்தன. அவர்களின் ஆதரவு இல்லாதிருந்தால் யூ.என்.பி. சர்வஜன வாக்கெடுப்பில் தோற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு சிறீலங்கா சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் அதன் சொந்த ஜனநாயக உரிமைகளை தன்னிச்சையாகக் கட்டுப்படுத்திய ஒரு நாடாகியது. மற்ற நாடுகளில் ராணுவத் தலைவர்கள் அல்லது ராணுவ ஆட்சிகள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டன. ஆனால் சிறீலங்காவில் அது ஜனநாயகத்தின் பெயரில் செய்யப்பட்டது.

இதே வேளையில் இன்னொரு முனையில் நிகழ்ச்சிகள் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தில் தமிழ் இளைஞர்கள் அதிருப்தி அடைந்தது பற்றியும் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான ஒரேவழி ஆயுதப்போராட்டம் என்று அவர்கள் உணர்ந்துகொண்டதுபற்றியும் நான் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆயுதப் போராட்டம் இக்காலத்தில் உக்கிரமாகியது. தாக்கிவிட்டு ஓடும் தந்திரத்தைப் பாவிக்கும் ஒரு வகைக் கொரில்லாப் போராட்டத்தை அவர்கள் நடத்தினார்கள். பந்தோபஸ்து படைகள், வங்கிகள், தபால்



அலுவலகங்கள் ஆகிய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் போக்குவரத்து பஸ்கள் ஆகியன அவர்களுடைய தாக்குதல் இலக்குகளாயின. தமிழ் இளைஞர்கள் எங்கே ராணுவப் பயிற்சி பெற்றார்கள் என்பது முக்கியமில்லை. ஆனால் அவர்கள் நல்ல ராணுவப்பயிற்சி பெற்றார்கள். சிறீலங்காவில் முன்னர் கண்டிராத அளவு நவீனமான சில ஆயுதங்கள் உட்பட ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் பெற்றார்கள் என்பது உண்மை. அரசுக்குச் சொந்தமான வங்கிகளில் துணிகரமாகக் கொள்ளையிடப்பட்ட இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு அவர்கள் பயிற்சி முகாம்களை நடத்தினார்கள். 20 மைல்களுக்கு அப்பால் சிறீலங்காத் தமிழர்களின் இலட்சியத்துக்கு அனுதாபமான ஐந்து கோடியே முப்பது லட்சம் தமிழர்கள் வாழும் தமிழ்நாடு சிநேகபூர்வமான தளப் பிரதேசமாக இருப்பது சிறீலங்கா அரசாங்கத்துக்கு எதிராக போராடும் தமிழ்த் தீவிரவாத இளைஞர்களுக்கு மிகுதி முக்கியத்துவம் வாய்ந்தது.

தமிழ்த் தீவிரவாத இளைஞர்களின் நடவடிக்கைகளைக் கண்டு யூ.என்.பி. அரசாங்கம் அடக்குமுறையை மேலும் கூட்டியது. பெரிதும் சிங்களவர்களைக் கொண்ட ராணுவத்தை மக்களைப் பயங்கரத்தில் ஆழ்த்த அது ஏவிவிட்டது. இந்த இராணுவம் (அரசாங்கத்தால் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்பட்ட) கொரில்லா போராளிகளுக்கும் போராளிகள் அல்லாத தமிழ் மக்களுக்கும் இடையில் வித்தியாசம் காட்டவில்லை. இடங்கொள்ளப்பட்ட பிரதேசமாக யாழ்ப்பாணம் நடத்தப்பட்டது. பயங்கரவாதிகளைத் தேடுவது என்ற சாக்குப்போக்கில் மக்கள் அவமானப்படுத்தப்பட்டு தாக்கப்பட்டார்கள். சித்திரவதையும் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் பந்தோபஸ்துப் படைகளுக்கு எந்தவித ஆதரவும் கிடைக்கவில்லை. அவையும் அவற்றின் அரசாங்கமும் யாழ்ப்பாண மக்களால் மிகுதியும் வெறுக்கப்பட்டன. இந்த நிலைமைகளின் காரணமாகத்தான் தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் தமது ஆயுதப் போராட்டத்தில் அத்தகைய வெற்றிகளைப் பெற முடிந்தது. சைக்கிள்களில் வந்த கொரில்லாக்கள் படையினரைச் சுட்டுவிட்டு பாதுகாப்பாக மறைவதைப் பற்றி முதற் தடவையாக உலகம் அறிந்து கொண்டது. கொரில்லாக்களுக்கு மக்களின் முழு ஆதரவு இருந்தபடியால்தான் இதனைச் செய்ய முடிந்தது.

1983 யூலை மோதலுக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் விவரமாகக் கூற நான் முற்படவில்லை.

www.tamilarangam.net



இன்னொரு புத்தகத்தில் செய்துள்ளேன். ஏதோ காலத்தில் அது வெளிவரும் என்று நம்புகிறேன். அரசு ஆயுதப் படைகளுக்கும் தமிழ்த்தீவிரவாத இளைஞர்களுக்கிடையிலான மோதல் அதிகரித்து 1983 யூலை 23-ம் திகதி 13 படையினர் இளைஞர்களால் சுற்றி வளைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இது, அரசாங்கத்துக்கும் பின்னாலுள்ள சக்திகளால் நாடு பூராவிலும் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட வன்முறைச் சம்பவங்களை நடத்துவதற் கான வாய்ப்பை அளித்தது. இந்த வன்முறை தெளிவாகத் திட்ட மிடப்பட்டது. அரசாங்கத்தின் ஆதரவு பெற்றது. தொலைக் காட்சியில் தோன்ற ஜனாதிபதிக்கு நாலு நாட்கள் எடுத்தது இதனைக் காட்டுகின்றது.அவர் தோன்றியபோது கூட வன்முறை யைக் கண்டித்தோ அல்லது தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தோ ஒரு வார்த்தை தானும் கூறவில்லை. மாறாக ஈழ கோரிக்கைக்கு எதிரான இயற்கையான எதிரொலிப்பாக அவர் சிங்களக் காடையர் கூட்டத்தின் செயலை நியாயப்படுத்தினார். பிரிவினையைக் கோரும் கட்சிகள் அனைத்தையும் தடை செய்வதாக வாக்குறுதி அளித்து சிங்களக் காடையர்களைத் தாஜா பண்ணினார்.

1983 யூலை சிறீலங்காவின் வரலாற்றில் ஒரு எல்லைக்கோடு எதுவும் மீண்டும் முன்னரை போல இருக்க மாட்டாது. குறிப்பாக சிங்கள தமிழ் மக்களுக்கிடையே உறவுகள் அப்படி இருக்க மாட்டா. வன்முறையின் அளவிலும் பார்க்க, அது நடைபெற்ற எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி இருக்கின்றது.இரண்டாயிரம் பேர் அளவில் இதில் கொல்லப்பட்டார்கள் எனக் கணக்கிடப்படு கின்றது. சொத்து சேதத்தைக் கணிப்பிட முடியாது. ஒரு இலட்சம் பேர் அகதி முகாம்களில் இருந்தார்கள். ஏறக்குறைய நாற்பதி னாயிரம் பேர் தமிழ்நாட்டுக்கு ஓடினார்கள். பின்னர் இத்தொகை ஒன்றேகால் இலட்சமாகியது. தமிழர்கள் மேற்கு ஐரோப்பியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கும் ஓடினார்கள். பழைய யூதர் களைப் போலத் தமிழர்கள் உலகெங்கும் அலைகின்றார்கள்.

தென் இந்தியாவுக்குள் அகதிகள் ஓடியபடியால் இந்திய அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் அக்கறைப்படவேண்டி ஏற் பட்டது. நேரடி ஆராய்ச்சியில் ஈடுபட இந்திராகாந்தி தனது வெளிநாட்டமைச்சர் நரசிம்மராவை அனுப்பினார். பின்னர் அவர் விபரமான பேச்சுவார்த்தைக்காக பார்த்தசாரதியை அனுப்பினார். இந்தப் பேச்சு வார்த்தைகளின்போதுதான் தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றை வகுக்க சர்வகட்சி மாநாடு என்ற கருத்துத் தோன்றியது.ஜனாதிபதி ஜெயவர்த்தனா காமன்வெல்த் தலைவர்களின் கூட்டமொன்றில் கலந்து கொள்ள புதுடெல்லி



சென்றிருந்தபோது 1983 நவம்பரில் சில பிரேரணைகளை அவர் ஏற்றுக்கொண்டார். இதுவே இணைப்பு 'சி' எனப்படுவது. வடக்கிற்கும் கிழக்கிற்கும் சுயாட்சியை இந்தப் பிரேரணைகள் முன்வைத்தன. இந்தப் பிரேரணைகள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருந்தன. ஆனால் சிறீலங்கா திரும்பியதும் ஜெயவர்த்தனா அரசாங்கத்தின் கூடுதலான வகுப்புவாத பிரிவினைகள் அமுக் கத்தின் கீழ் இந்தப் பிரேரணைகளை மீறியதுடன் சர்வகட்சி மாநாட்டில் அவற்றை முன்வைக்கவும் மறுத்தார். பின்னர் சர்வ கட்சி மாநாடு தோல்வி கண்டது. இன்னொரு ஆண்டின் முடிவில் பிரச்சினை மேலும் மோசமாகியது.

## புத்த மதத்தின் பாத்திரம்

சிங்களவர் மத்தியில் நிலவும் சிந்தனைக் குழப்பம், செயல் குழப்பம் ஆகியவற்றுக்கு சிங்கள 'புத்தமத சிந்தனையில் ஒழுக்க நியாய பாரம்பரியம் ஒன்று இல்லாமை ஒரு காரணமாகும். புத்தர் தனது வாழ்க்கைக் காலத்தில் மூன்று தடவை இலங்கைக்கு வந்து சென்றார். இவற்றில் ஒரு தடவை சிவனொளி பாதக மலையில் தமது கால் பாதத்தைப் பொறித்துச் சென்றார் முதலியன போன்ற கட்டுக்கதைகள் இன்னும் வழக்கில் இருக்கின்றன. இலங்கையின் மிகவும் பிரசித்திப் பெற்ற தொல்லியலாளரான டாக்டர் பரணவித்தான தான் போதிய அறிவியல் நோக்குடனும் துணிவுடனும் இந்தத் தத்துவத்தை மறுத்துரைத்த வரலாற்று ஆசிரியர் ஆவார்.

புத்தர் தமது மறைவுக்கு முன் இலங்கையின் பாதுகாப்பை சக்ராவுக்கு ஒப்படைத்தார்.புத்தருக்கு தமது தத்துவம் இறுதியில் இந்தத் தீவில் ஸ்தாபிக்கப்படும் என்பது தெரிந்திருந்தது.புத்தரின் ஆணையை ஏற்றுக்கொண்டதும் சக்ரா விஷ்ணுவை அழைத்து தீவின் பாதுகாப்பை அவரிடம் ஒப்படைத்தார். இது இன்னொரு கட்டுக்கதை. இந்தக் கட்டுக்கதைகள் வரலாற்று உண்மைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு மதகுரு வரலாற்றாசிரியராகும் போது இதுதான் நடக்கின்றது. இலங்கையின் மாபெரும் வரலாற்றுப் பதிவேடான மஹாவம்ச ஒரு மத குருவால் எழுதப் யட்டது. மகாநாம என்ற இந்த மதகுரு கி.பி.6-ம் நூற்றாண்டில் மஹாவம்சத்தை எழுதினார். மகாவீரசங்க அவருடைய மூல ஆதாரங்களை சேமித்து வைத்தது. மகாவம்ச நூலின் பிரதிகள் அனைத்தையும் எரித்துக் கொளுத்த வேண்டும். ஏனென்றால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களப் பௌத்தர்களின் இனரீதியான சிந்தனைக்கு அவைதான் பெரிதும் பொறுப்பானவை என்று மதிப்பிற்குரிய ஒரு கல்விமானான டாக்டர் ஈ.டபிள்யு. அதிகாரம் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இக்கட்டுரை சிங்கள ஞாயிறு இதழான திவிரசவில் 1983-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் திகதி வெளி வந்தது. இது ஒரு சுத்த மான் காற்று வீசுவது போல் அமைந்தது.

இலங்கையில் புத்தமதத்தை புரிந்து கொள்ள அதன் வரலாற்றில் ஆரம்பத்தில் ஏற்பட்ட பிளவுகளை அறிந்து கொள்வது அவசியம். தத்துவ, கட்டுப்பாட்டு விஷயங்களில் இலங்கை புத்த மத குருமார் அனைவரும் மகாவீராவின் அதிகாரத்தை அங்கீ கரிக்கப்பட்ட புத்தமதக் கோயிலாக ஆரம்பத்திலிருந்து ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் முற்பகுதியில் அபயகிரி பிரிவு என்று அழைக்கப்படும் புதிய பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது பின்னர் இதிலிருந்து இன்னொரு கோஷ்டி பிரிந்து ஜீத்தாவன மடாலயத்தை அதன் தலைமையக மாகக் கொண்டிருந்தது.

வாசகத்திலும் வியாக்கியானத்திலும் சில வேற்றுமைகள் இருந்தபோதும் இந்த மூன்று பிரிவுகளும் புத்தமதத்தின் தேரவாதப் பிரிவு அல்லது பாரம்பரியப் பிரிவு என்பதைச் சேர்ந்தவையாக இருந்தன. ஆனால் இந்தியாவில் புத்த மதத்தவர்கள் மத்தியில் புதியதொரு பிரிவு தோன்றியது. ஒருவர் சொந்த விமோசனத் திற்குப் பாடுபடுவதற்கும் முழுமனித குலத்தின் விமோசனத்திற்கு பாடுபடுவதற்கும் இடையில் இந்தப் பிரிவு வித்தியாசம் கண்டது என்று பரணவித்தான குறிப்பிடுகின்றார். இந்தப் பிரிவின் ஆதர வாளர்கள் முழு மனித குலத்தினதும் விமோசனத்திற்காகப் பாடு படுவதை பெரிய பிரயத்தனம் — மகாயான என்று அழைத்தார்கள். ஒருவருடைய விமோசனத்திற்காகப் பாடுபடுவதை தாழ்வான பிரயத்தனம் — ஹீனயான என்று அழைத்தார்கள்.

புத்த மதத்தில் ஏற்பட்ட இந்தப் பிரிவுக்கும் சீர்திருத்தத் தினால் ரோமன் கத்தோலிக்க மதத்தில் ஏற்பட்ட பிரிவுக்கும் இடையில் ஒரு ஒத்த தன்மை இருப்பதைக் காண முடியும். சீர்திருத்தவாதிகளைப் போல புத்த மதத்தின் மகாயான பிரிவினர் கூடுதலான சுதந்திரமானவர்களாகவும் ஆகவே முற்போக்கான களாகவும் இருந்தார்கள். துணிவான தத்துவஞானிகள் அவர்களால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். மகாயான தத்துவத்துக்கு அபயகிரி மடாலயத்தில் ஆதரவாளர்கள் இருந்தார்கள். மகாவிகாரை அதை வன்மையாக எதிர்த்தது. மகாவிகாரை தேராவாத புத்தமதப்



பாரம்பரியப் பிரிவின் கோட்டையாகியது. இவ்வாறு மகாவிகாரை சிறீலங்கா, பர்மா, சீயெம், கம்போடியா ஆகிய நாடுகளைச் சார்ந்த தெற்கு புத்திஸ்டுகளின் போதனைகளை போதித்தது. அபயகிரி மடாலயம் காஷ்மீர், திபெத், சீனா ஆகிய நாடுகளைச் சார்ந்த தெற்கு புத்திஸ்டுகளின் போதனைகளை இந்திய வைத்துல்யவிடமிருந்து கற்றுக்கொண்டு போதித்தது.

மகாவிகாரை மடாலயத்துக்கும் அபயகிரி மடாலயத்துக்கும் இடையில் உக்கிரமான வாதவிவாதம் ஒன்று ஏற்பட்டது. கி.பி. 215-237ஆம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்த வொஹறக்க திஸ்ஸவின் காலம் தொடக்கம் எதிர்த்தரப்பை எரித்தொழிக்கும் செயல்களும் இடம் பெற்றன. அபயகிரி மடாலயம் வைத்திருந்த பதிவேடுகள் எரித்து அழிக்கப்பட்டன. ஒரு புத்தமத விரோதச் செயல் இவ்வாறு மகாவிகாரை அதாவது பாரம்பரியப் பிரிவு புத்த மதத்தில் அபயகிரிப் பிரிவை அழித்தொழித்தது ஹீனயான புத்த மதப் பிரிவுதான் துரதிருஷ்டவசமாக வெற்றி கண்டது. இலங்கையில் புத்தமத சிந்தனையிலான அறிவு ரீதியான தேக்கம் இதனால்தான் ஏற்பட்டது. ஸ்பெயினில் சீர்திருத்தவாதிகளுக்கு ஏற்பட்ட அநியாயங்களை மனதில் கொண்டு சீர்திருத்தம் நசுக்கப் பட்டிருந்தால் ஐரோப்பாவில் அறிவுக்கு என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இலங்கையில் இதுதான் நடந்தது, சீர்திருத்தம் நசுக்கப்பட்டது.

இலங்கை அரசியலில் புத்தமத குருக்களின் பாத்திரம் அநேக மாக எதிர் மறையானதாகவும் பிற்போக்கானதாகவும் இருந்தது. அவர்கள் ஆக்கப்பூர்வமான பாத்திரம் வகித்த காலமும் இடைக் கிடை இருந்தது. சில குறிப்பிடத்தக்க புறநடைகள் இருந்த போதும் புத்தமத குருமார் கல்வி அறிவற்றவர்களாகவும், அறியாமையானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தமிழைக் கூடக் கற்றுக் கொள்வதில்லை. அவர்கள் குறுகிய மனப்பான்மை உடையவர்களாகவும் ஒற்றைப்போக்கு உடையவர்களாகவும் வெளி உலகைத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். புத்த மதம் என்றால் அது சிங்களவர்களுக்கே உரியது என்று அவர்கள் கருதுகின்றார்கள். மஞ்சள் அங்கி அணிந்த ஒரு புத்தமத குரு மக்கள் மிகுதியும் விரும்பிய ஒரு பிரதமரைச் சுட்டுக்கொன்றதும் இன்னொரு புத்த மதகுரு இக்கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைத் தண்டனை பெற்றதும் (அவர் அங்கேயே இறந்தார்) எது விதத்திலும் தற்செயலானதல்ல.

அண்மைக் காலக் கலவரங்களின்போது சில புத்தகுருமார் அங்கிகளை உயர்த்திப் பிடித்த வண்ணம் வெறிப்பிடித்த மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றார்கள். இந்தக் கலவரங்களின்போது ஜனாதிபதி ஜெயவர்த்தனா இன வெறியர்களைச் சாந்தப்படுத்த மிகவும் தமிழர் எதிர்ப்புணர்வுடைய எல்லாகுணவம்ச என்ற புத்தமதகுருவின் உதவியைப் பெற வேண்டியிருந்தது. அமைச்சர் காமினி திசநாயக்காதான் அவரை ஜனாதிபதியிடம் கூட்டிச் சென்றார்.

கொழும்பு வஜிரராம கோவில் பிரதான மதகுருவான வரை மடிகெபன்னசீக போன்ற மதகுருக்கள் மற்றக் குருமாரின் அப்பட்டமான இனவெறியை மூடிமறைக்கும் மிக மெல்லிய அறிவு காவி மூடு திரையை அணிகின்றார்கள். தமிழர்கள் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள 261 புத்தமத கோயில்களை அழித்துள்ளதாக அவர் கூறியுள்ளாரென 1983 செப்டம்பர் 15-ம் திகதிய இண்டியா டுடே சஞ்சிகை கூறுகின்றது. எமது விருந்தோம்பல் காரணமாக தென் இந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்களை தங்கி இருக்க நாம் அனுமதித்தோம். தமிழர்களை நாட்டில் எங்கும் வாழ அனுமதித்தோம். எங்களுடன் திருமணம் செய்யவும் அனுமதித்தோம். 1977-ல் ஒரு இலட்சத்துக்கு மேலான தமிழர்கள் கொழும்பில் வாழ்ந்தார்கள். ஒரு சில ஆயிரம் சிங்களப் படையினர்தான் வடக்கில் இருக்கின்றார்கள்.'' இப்படி கூறுகிறார் பன்னசீக. ஆயிரம் பேரைக் கொண்ட சிங்களப்படை ஒன்றை வடக்கிற்கு அனுப்ப வேண்டும் என்று முதலில் பிரேரித்தவர்களில் பன்னசீகவும் ஒருவர். இதுதான் புத்தமத பக்தியும் கருணையும்.

இலங்கையிலுள்ள புத்த மதகுருமார் புத்தர் போதித்தவாறு உலோகயதப் பொருட்கள் அற்ற எளிய வாழ்க்கையை வாழவில்லை. கிராமங்களில் உள்ள ஏழைப் புத்தகுருமார்தான் இதற்கு புறநடையாக இருந்தார்கள். ஆனால் பல புத்தகுருமார் சுரண்டல்கார செல்வர்களாக இருக்கின்றார்கள். இலங்கையின் புத்த மதத்தின் வரலாற்றில் ஆரம்பத்துடனேயே இது தொடங்கி விட்டது. வாலகம்பாகு காலந்தொட்டே (கி.மு. 103-102 கி.மு. 89-77) சிங்கள மன்னர்கள் மடாலயங்களுக்கு நிலத்தைத் தானம் செய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இது புத்த மதக் கோட்பாட்டுக்கு நேர் விரோதமானது. வாலகம்பாகு தான் நாடு கடந்திருந்தபோது தனக்கு உதவி செய்த மதகுருமாருக்கு வெகுமதி வழங்க இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். சங்கவின் ஆதரவைப் பெற மற்ற மன்னர்கள் இந்தப் பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். பொருளாதார நலன்களை சங்கவுக்கு அளித்ததால் அதன் எண்ணிக்கை பெருகியது. சங்க



உறுப்பினர்களுக்கு நல்ல வாழ்க்கை உத்தரவாதம் ஆகியது. புத்தரின் போதனைகளுக்கும் இதற்கும் தொலை தூரம். இவ்வாறு இந்த மதகுருமார் சமுதாயத்தின் புல்லுருவிகள் ஆகினார்கள். எந்தவிதமான ஆக்கபூர்வமான வேலையும் செய்யாமல் தமக்குத் தேவையானது எல்லாவற்றையும் பெற்றார்கள். மகாயான பிரிவைச் சேர்ந்தவர்கள் இப்படி இல்லை. அவர்கள் ஒருவகை உற்பத்தி உழைப்பில் ஈடுபட்டார்கள்.

ஆகவே இலங்கையில் புத்தமத சங்கம் அநேகமாக எதிர்மறைப் பாத்திரத்தையே வகித்திருக்கிறது. சிங்களவர்கள் அதாவது புத்தமதத்தவர்கள் சங்கவின் ஆதிக்கம் — அடிமைத்தனத்திலிருந்து விடுபடாமல் இருந்தால் எதிர்காலம் இருண்டதாக இருக்கும். சிங்கள பௌத்தர் என்ற கருத்தே புத்தமதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு விரோதமானது. புத்தர் ஒரு இலங்கையர் அல்ல ஒரு இந்தியர் என்பதை எத்தனை சிங்களப் பௌத்தர்கள் அறிந்திருப்பார்கள் அல்லது ஏற்றுக் கொள்வார்கள் என்பது சந்தேகமே. மதத்தை அரசியலில் இருந்து பிரிக்காவிட்டால் இலங்கைக்கு எதிர்காலம் கிடையாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 15. மாசேதுங் சிந்தனைக்கு ஆதரவாக

நான் இப்பொழுது 1976-ல் நடைபெற்ற சில முக்கியமான சர்வதேசிய நிகழ்ச்சிகள் பற்றிக் கூற விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சிகள் வரலாற்றின் போக்கை மாற்றின. அத்துடன் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தையும் எனது கட்சியையும் என்னையும் பெரிதும் பாதித்தன. 1976ஆம் ஆண்டின் செப்டம்பர் 9-ம் திகதி எமது யுகத்தின் மாபெரும் மார்க்சிய—லெனினியவாதியும் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் பெரிய மனிதர்களில் ஒருவருமான தோழர் மாசேதுங் மரணமடைந்தார். அவருடைய மரணச் செய்தி மின்னதிர்ச்சி போல உலகின் பல்வேறு பாகங்களில் பல்வேறு வழிகளில் பாதித்தது. மாவோவைப் போன்ற மாமனிதனின் மரணம் சர்வதேசிய ரீதியில் எதிரொலிப்புகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம். இலட்சோப இலட்சம் அடக்கிஒடுக்கப்பட்ட மக்களும் தொழிலாளர்களும் கம்யூனிஸ்டுகளும் எல்லையற்ற துக்கத்தில் ஆழ்ந்தார்கள். ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடைய அடிவருடிகளும் திரிபுவாதிகளும் ஆனந்த எக்களிப்புக் கொண்டார்கள். சர்வதேசிய கம்யூனிச இயக்கத்துக்கும் புரட்சிகர இயக்கத்துக்கும் ஒளியூட்டி வழிகாட்டிய கலங்கரை விளக்கு சடுதியாக மறைந்துவிட்டது.

சீனாவில் மக்கள் துக்கம் கொண்டாடி கொண்டிருந்த அதே வேளையில் தலைமறைவாய் இருந்தவர்களும் கலாச்சாரப்



புரட்சியில் தப்பிப் பிழைத்தவர்களுமான திரிபுவாதிகளும் முதலாளித்துவப் பாதையாளர்களும் தமது மறைவிடங்களிலிருந்து வெளியே வர ஆரம்பித்தார்கள். 20ஆம் நூற்றாண்டின் 20ஆம் ஆண்டுகளில் இந்த உலகைக் குலுக்கும் இயக்கத்தை ஆரம்பித்த முதலாவது சந்ததி கம்யூனிஸ்டுகளில் ஒருவரும் இப்பொழுது மிஞ்சி இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள் அல்லது துரோகிகளாகி கலாச்சார புரட்சியின்போது அம்பலப் படுத்தப்பட்டு விட்டார்கள். திரிபுவாத அங்கி இப்போது முன்னொரு காலத்தில் கட்சியின் பொதுக் காரியதரிசியாகவிருந்த தெங்சியாவ்-பிங்கிற்குக் கிடைத்தது. கலாச்சாரப் புரட்சியின் போது அவர் இரண்டு தடவை அவமானப்படுத்தப்பட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இதனால்தான் அவர் உடனடியாக முதலாளித்துவப் பாதையாளர்களை அதிகாரத்துக்கு கொண்டுவர முடியவில்லை. ஒரு தற்காலிக தலைவரைக் கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று. மாவோ இயற்கையாக மரணமடைந்த பின், முதலாளித்துவத்துக்கான மாற்றத்துக்கும் மாவோவின் புரட்சிகரக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதற்கும் சூ-என்-லாய் தலைமை வகிக்கமுடியும் என்று திரிபுவாதிகளும் முதலாளித்துவப் பாதையாளர்களும் நம்பியிருந்தார்கள். கலாச்சாரப் புரட்சியின் உச்சகட்டத்தில் சூஎன்லாய் பல முதலாளித்துவப் பாதையாளர்களை காப்பாற்றி பின்னர் அவர்களுக்குப் புனர் வாழ்வு அளித்தார் என்பதில் சந்தேகமில்லை. தெங்சியாவ்-பிங் இவ்வாறு பாகாக்கப்பட்டவர்களில் ஒருவர். மரணமடைவதற்கு முன் சூ-என்-லாய் மாவோவுடன் முரண்பாடுகளைக் கொண்டிருந்தார் என்பதும் சூஎன்லாயின் ஈமக்கிரியை வைபவத்தில் மாவோ கலந்து கொள்ளாததற்கு இதுவே காரணம் என்று கூறப்பட்டது என்பதும் உண்மை.

தெங்-சியாவ்-பிங்கிற்கு முழுதாகப் புனர்வாழ்வு அளிக்கும் வரை அந்த இடத்தை நிரப்புவதற்கு குவா கோ பெங் தேர்ந்தெடுக்கப்பட்டார். குவா கோ பெங் தெரிவு செய்யப்பட்டதற்கு மாவோவின் உடன்பாடு இருந்தது என்று கூறப்பட்டது. ஆனால் இதற்கான ஆதாரம் இல்லை. மாவோ இறந்து சில மாதங்களுக்குள் அவர் மனைவியான சியாங்சிங் உட்பட மாவோவின் நெருங்கிய தோழர்கள் அனைவரும் எந்தவித நியாயமுமின்றி, விசாரணையுமின்றி மத்தியக் கமிட்டியினதோ அரசியல் குழுவினதோ அங்கீகாரமுமின்றி கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்கள். இந்தத் தலைவர்களுக்கு எதிராகப் பெரும் அவதூறு இயக்கம் ஒன்று அவிழ்த்துவிடப்பட்டது. ''நாலு பேர் கும்பல்'' என அவர்கள் அழைக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டார்கள். இது உண்மையில் மாவோவின் புரட்சிகரக் கொள்கைகளை நிராகரிப்பதன் ஆரம்பமேயாகும். சிறை வைக்கப்பட்ட தலைவர்கள் மாவோவின் புரட்சிகரக் கொள்கையின் மிக நெருங்கிய, ஆட்டமசைவற்ற ஆதரவாளர்களே தவிர வேறெவரும் அல்ல. ஆகவே அவர்களைச் சிறையிலிட்டது மாசேதுங்கை நிராகரிப்பதேயாகும். ஆனால் இந்த வேளையில் மாசேதுங் விமர்சிக்கப்படவில்லை. மாவோ கடவுளைப் போல மேலே உயர்த்தப்பட்டிருந்தார். மாசேதுங்கைப் பகிரங்கமாக கண்டிப்பது நடைபெறவில்லை. ஆனால் புதிய ஆளும்வர்க்கத்தின் தேவைகளுக்கேற்ப அவருடைய கொள்கைகள் நிராகரிக்கப்பட்டன, திரித்து வளைக்கப்பட்டன.

இவற்றில் புதிய மூன்று உலகத் தத்துவத்தை முன்வைத்தது மிகவும் கேவலமான ஒன்றாகும். இத் தத்துவத்தை ஆரம்பத்தில் ஐ.நா. பொதுசபையின் கூட்டம் ஒன்றில் தெங் சியாவ் பிங் முன்வைத்தார். சீன வெளிநாட்டமைச்சு மாவோ வாழ்ந்தபோது முதலாளித்துவப் பாதையாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி அவர்களின் வழிகாட்டலில் செயற்பட்ட ஒரு ஸ்தாபனம் என்பதையும் நான் முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன். லெனின் தமது காலத்தில் செய்ததுபோல மாவோவும் உலகம் மூன்று உலகங்களாகப் பிரிந்திருப்பதைச் சுட்டிக்காட்டினார். முதலாவது உலகம் மேல்நிலை வல்லரசுகளின் ஏகாதிபத்திய உகலம், இரண்டாவது உலகம் மேல்நிலை வல்லரசுகளின் ஏகாதிபத்திய வல்லரசுகளின் சுரண்டலுக்கு உட்பட்டளவும் காலனிகளையும் நவகாலனிகளையும் சுரண்டுவனவுமான மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் உலகம், மூன்றாவது உலகத்தில் புதிய விடுதலை பெற்ற நாடுகளும் இன்னும் விடுதலை பெறாத நாடுகளும் உள்ளடங்குகின்றன. இவை முதலாம் உலகத்தினதும் இரண்டாம் உலகத்தினதும் ஏகாதிபத்திய நாடுகளால் சுரண்டப்படுகின்றன. தெங் சியாவ் பிங் என்ன செய்தார் என்றால் முதல் தடவையாக மூன்றாவது உலகமும் இரண்டாவது உலகமும் தான் பிரதான எதிரி எனக் கருதிய சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தைத் தனிமைப்படுத்துவதற்காக மேல்நிலை அரசுகளில் ஒன்றுடன் அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஐக்கியப்படவேண்டும் என்று முன்வைத்தார். மாவோ ஒருபோதும் இந்த முறையைத் தெளிவாக முன்வைக்கவில்லை. சீன வெளிநாட்டு கொள்கையின் படி பார்த்து சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை சீனாவின் பிரதான எதிரியாகக் கொள்வது புரிந்துகொள்ளக் கூடியது. ஆனால் இதனை சர்வதேசிய கம்யூனிச இயக்கத்துக்கான



கோஷமாக முன்வைப்பது கேலிக்கூத்து. இந்தக் கேவலமான தத்துவத்தைக் கொண்டுதான் சீனாவின் புதிய ஆட்சியாளர்கள் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தைச் சீர்குலைக்க முயற்சித்தார்கள். ஆனால் சர்வதேசிய மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் எந்தக் கணிசமான பகுதியினரையும் இந்தத் தவறான தத்துவங்களுக்குப் பின்னால் இழுத்துச் செல்ல அவர்களால் முடியவில்லை.

தோழர் மாசேதுங்கின் நேரடித் தலைமையின்கீழ் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனைப் போதனை பெற்ற, மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை நடத்திய சீன நாட்டில் திரிபுவாத முதலாளித்துவப் பாதையாளர்கள் எவ்வாறு வெற்றி பெற்றார்கள் என்பதுதான் நாம் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினையாகும். பதில் இலேசானதல்ல. நாம் வெற்றி பெறுவதற்கு முன்னர் இன்னும் எத்தனையோ கலாச்சாரப் புரட்சிகளை நடத்த வேண்டியிருக்கும் என்று கலாச்சாரப் புரட்சியின் போது மாவோ வெளியிட்ட கூற்றில் இதற்கான பதிலின் ஒரு பகுதி இருக்கின்றது. மனிதரின் மனங்களில் முதலாளித்துவ சித்தாந்தமும் பழக்க வழக்கமும் கொண்டுள்ள பெரும் செல்வாக்கையே அவர் இவ்வாறு வற்புறுத்திக் கூறினார். மனிதர்கள் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சித்தாந்தத்தின் கீழ் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துள்ள படியால் அவர்களின் மனங்களில் அவை பயங்கரமாக படிந்துள்ளன. கால் நூற்றாண்டு காலப் பாட்டாளி வர்க்கச் சித்தாந்தத்தால் கூட அதன் பிடிப்பை அகற்ற முடியவில்லை. சீனாவில் முதலாளித்துவப் பாதையாளர்கள் மிக வேகமாக அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற முடிந்ததும், சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பாவிலும் நவீன திரிபுவாதத்தின் வெற்றியும் உலகில் முதலாளித்துவ சித்தாந்தம் கொண்டுள்ள பலத்தைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. இப்படிக் கூறும்போது முதலாளித்துவ சித்தாந்தத்தைத் தோற்கடித்து முறியடிக்க முடியாது என்பதல்ல இதன் அர்த்தம். இதுவரை செய்யப்பட்டதிலும் பார்க்க பெரிய முயற்சி அதற்கு எடுக்கப்பட வேண்டும். இந்த முயற்சிகள் முன்னரிலும் பார்க்க இசைவு படுத்தப்பட்டு செய்யப்பட வேண்டும் என்பதேயாகும். உலகின் பல்வேறு நாடுகளிலான சோஷலிசப் புரட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட இடைவேளைக் காலம் சோஷலிச இலட்சியத்துக்குப் பெரும் தீங்கு விளைவித்திருக்கிறது. சோஷலிசத்தில் வெற்றி கண்ட ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கம் விரைவில் பிற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவாக முன் வந்து உலகின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரும் பகுதியில் புரட்சி நடத்தியதில் வெற்றி கண்டால்தான் ஒரு நாட்டில் சோஷலிசம் என்பது பயனுள்ளதாக இருக்கும். உலகின் ஒரு பகுதியில் தானும் தப்பிப் பிழைத்திருக்க ஏகாதி பத்தியத்தை அனுமதித்தால் தான் இழந்த பகுதிகளை மீண்டும் வென்றெடுக்க அது சகல சக்திகளையும் வளங்களையும் ஒன்று திரட்டும் என்பதிற் சந்தேகமில்லை.

குவா குவா பெங் ஒரு தற்காலிகத் தலைவரே. விரைவில் உண்மையான திரிபுவாதத் தலைவரான தெங்சியாவ் பிங் பதவிக்கு வந்தார். அவர் திட்டமிட்ட முறையில் மாவோவின் புரட்சிகரக் கொள்கைகள் அனைத்தையும் மாற்றியமைத்து சோவியத் யூனி யனில் நடந்ததிலும் பார்க்க விரைவாக சீனாவை முதலாளித்துவ பாதையில் இழுத்துச் சென்றார். ஒன்றன் பின் ஒன்றாக சோஷலிச நிர்மாணத் தூண்கள் வீழ்த்தப்பட்டன. மக்கள் கம்யூன்கள் கலைக் கப்பட்டன. அந்நிய ஏகாதிபத்திய முதலீட்டுக்கு ஊக்கமளிக்கப் பட்டது. இலாபமும் தனியாருக்கான தூண்டுதலும் உற்பத்தியில் ஆதிக்க அம்சமாகின. சோஷலிசக் கல்வி முறை முழுதாக மாற்றப் பட்டது. மோசமான மேற்கு நாட்டுக் கலாச்சாரம் அனைத்தும் சீனாவுக்குள் ஊடுருவ அனுமதிக்கப்பட்டது. படிப்படியாக, மாக்சியம்—லெனினியம் காலாவதியானது. இன்றைய சீனாவின் தேவைக்குப் போதாதது என்று பிரகடனம் செய்யப்பட்டது. சர்வ தேசிய ரீதியில் சீனா அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் அமெரிக்காவுடன் நெருக்கமாகியது. இது முற்போக்கு உலகில் அதிர்ச்சி அலை ஒன்றைப் பரப்பியது.

மாவோவின் மறைவும் பின்னர் தெங்சியாவ் பிங்கின் தலைமையில் எதிர்ப் புரட்சி ஆட்சி கவிழ்ப்பு வெற்றி பெற்றதும், இதுவரை சீனா சித்தாந்தத் தலைவராக இருந்த சர்வதேசிய மார்க்சிய-லெனினிய இயக்கத்தில் பிரமாண்ட எதிரொலிப்புகளை ஏற்படுத்தியது. அல்பேனிய தொழிற்கட்சி உள்பட பல மார்க்சிய— லெனினியக் கட்சிகளுடன் சேர்ந்து சீனத்திரிபுவாதிகள் முன்வைத்த மூன்றுலகத் தத்துவத்தை எதிர்ப்புரட்சிகரமானது எனவும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது எனவும் கண்டித்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக சர்வதேசிய இயக்கத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு மிகவும் பெரிதாக இருந்த காரணத்தால் சீனா முன்வைக்கும் தத்துவம் தவறாக இருக்க முடியாது என்று நம்பி பல கட்சிகளும் குழுக்களும் அதற்கு பின்னால் நின்றன. ஆனால் இவற்றில் அநேகம் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டன அலலது சீரழிந்து போயின. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சர்வ தேசியத்துவத்தில் அவ்வளவு அக்கறை காட்ட



வில்லை. யூகோஸ்லாவியா இத்தாலி, இந்தியா முதலிய திரிபுவாதக் கட்சிகளுடன் உறவு கொள்வதில் மட்டும் அக்கறை காட்டியது. அதே வேளையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பர்மா, மலேயா ஆகிய நாடுகளின் தலைமறைவுப் புரட்சிகர இயக்கங்களுக்கு ஆதரவு வழங்குவதைப் பகிரங்கமாக நிறுத்திக் கொண்டது.

எமது கட்சி மூன்று உலகத் தத்துவத்தை கண்டித்ததாலும் சீனாவில் ஏற்பட்ட எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பை நியாயமானது என ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், நாம் பெரிதும் உயர்வாக மதிப்பிட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனான எமது சகோதரத்துவ உறவுகள் அற்றுப் போயின. அதுமுதல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் எமக்குத் தொடர்பு கிடையாது. சீனாவின் திரிபுவாத தலைவர்கள் தோழர் சியாங்சிங்கையும் புரட்சிகரத் தோழர்களையும் இம்சிக்கத் தீர்மானித்த போது எமது கட்சி சியாங்சிங்கிற்கும் அவருடைய தோழர்களுக்கும் எமது ஆதரவைத் தெரிவித்தது. சியாங்சிங் விசாரணை செய்யப்பட்டபோது சிறீலங் காவில் உள்ள சீனத் தூதரகத்துக்கு எதிராக எமது கட்சி ஒழுங்கு படுத்திய ஆர்ப்பாட்டம் தேசிய, சர்வதேசிய பிரசித்தி பெற்றது.

திரிபுவாத மூன்று உலகத் தத்துவத்தைக் கண்டிக்கும் சரியான நடவடிக்கையை அல்பேனியா மேற்கொண்டது. சர்வதேசிய மார்க்சிய - லெனினிய இயக்கத்தை அதன் தலைமையில் ஐக்கியப் படுத்தும் வாய்ப்பு அதற்குக் கிட்டியது. ஆனால் அல்பேனியத் தொழிற்கட்சி இவ்வாறு செய்து சோவியத் திரிபுவாதிகளுக்கும் சீனத் திரிபுவாதிகளுக்கும் எதிராய் பலமானதோர் அணியை நிறுவுவதற்குப் பதிலாக சீனத் திரிபுவாதிகள் சகதியில் வீசி எறிந்த மாசேதுங் சிந்தனை கொடியை மேலும் சகதியில் ஆழ்த்தி புரட்சிகர சக்திகளை சின்னாபின்னப்படுத்தி அவர்கள் தமது அரசு அதிகாரச் செல்வாக்கைப் பயன்படுத்தி சர்வதேசிய அரங்கில் இருந்த பல சந்தேகத்துக்கிடமற்ற புரட்சிகர சக்திகளை மாசேதுங் சிந்தனையை எதிர்க்கும் தவறான நிலைப்பாட்டுக்குத் தள்ளி வீழ்த்த அரசியல் இடுகாட்டுக்கு அவற்றை இட்டுச் சென்றார்கள்.

அல்பேனியா ஏன் இப்படி நடந்து கொண்டது என்பது தெளிவாகப் புரியவில்லை. 1977-ல் நிலவிய குறிப்பிடத்தக்க உள்ளார்ந்த சக்தியை உணர்ந்து கொண்டால் அல்பேனியத் துரோகத்தின் அளவைப் புரிந்து கொள்ள முடியும். அல்பேனியக் கட்சி ஏற்படுத்திய சீர்குலைவினால்தான் அந்த சக்தியைப் பயன் படுத்த முடியவில்லை. 1976-ல் மாவோவின் மறைவுக்குப் பின் எமது கட்சியின் பிரதிநிதியாக நான் அல்பேனியத் தொழிற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சியின் 7-வது மாநாட்டில் கலந்து கொண்டேன். இந்த மாநாட்டில் அல்பேனிய தலைவரான என்வர் ஹோக்ஷா மாவோவை மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியாக மாத்திரமல்ல, அல்பேனிய மக்களின் மாபெரும் நண்பனாகவும் குறிப்பிட்டார். மாவோவைப் பற்றி எந்த விமர்சனமும் செய்யப்படவில்லை. நான் அந்த மாநாட்டில் இருந்தேன். நான் அதை அத்தாட்சிப் படுத்துகிறேன். ஆனால் 1977-ல் என்வர் ஹோக்ஷா ''சீனாவைப் பற்றிய பிரதிபலிப்புகள்'' என்ற தனது நூலில் 7-வது மாநாடு ''சீனத்திரிபுவாதத் தலைமையின் மார்க்சிய எதிர்ப்பு நிலைப்பாட்டையும் எதிர்ப்புரட்சிகர நடவடிக்கையும் பூரணமாக ஆராய்ந்தது. இதில் மாவோவின் பொறுப்பையும் தவிர்க்கவில்லை'' என்று கூறினார். இது பச்சைப் பொய். 1977-ல் அழைப்பின் பேரில் நான் எனது மனைவியுடன் அல்பேனியாவில் விடுமுறை கழித்தேன். எனது ஆரோக்கியம் மோசமாயிருந்த காரணத்தால் நான் ஒரு மாத காலம் அங்கே தங்கியிருக்க நேரிட்டது. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அல்பேனியத் தலைவர்களுடன் விவரமான கலந்துரையாடல்களை நடத்தினேன். எந்தப் பேச்சு வார்த்தையிலும் அவர்கள் மாசேதுங் சிந்தனையை விமர்சிக்கவில்லை.

அடுத்த ஆண்டு அல்பேனியக் கட்சி மாவோவை விமர்சிக்க ஆரம்பித்தது. கலந்துரையாடலுக்காக ஒரு பிரதிநிதிக் கோஷ்டியை அனுப்பும்படி அழைத்தது. அரசியற் குழுவின் இன்னொரு தோழருடன் நான் சென்றேன். மாசேதுங் சிந்தனையை திரிபுவாதமானது என்று எம்மை நம்ப வைக்கப் பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. இக்காலத்தில் என்வர் ஹோக்ஷா தனது ''ஏகாதிபத்தியமும் புரட்சியும்'' என்ற நூலை எழுதி முடித்திருந்தார். இந்நூலின் இரண்டாம் பாகம் சீனாவையும் மாவோவையும் தாக்குகின்றது. எமது கட்சிக்கும் அல்பேனியக் கட்சிக்கும் இடையிலுள்ள வேற்றுமை சீனாவைப் பற்றியது மட்டுமல்ல. அல்பேனிய கட்சி கம்பூச்சியாவுக்கு எதிரான வியட்நாமின் ஆக்கிரமிப்பை நியாயமானது என்று கூறுகிறது. நாம் வியட்நாமுக்கு எதிரான சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தது போலவே அதனையும் கண்டித்தோம். எமக்கிடையில் உடன்பாடு ஏற்படும் சாத்தியப்பாடு இருக்கவில்லை. அது என்னுடைய கடைசி அல்பேனியப் பயணமாகியது. அல்பேனியா மாசேதுங் சிந்தனையைக் கண்டித்ததுடன் எமது கட்சிகளுக்கிடையிலான உறவு அற்றுப் போனது.

இவ்வாறு சர்வதேசிய புரட்சிகர இயக்கத்தில் உருவாகிய நிலைமை மிகுதியும் சோகமானதாகும். இப்பொழுது எமக்கு உலகின் எந்தப் பாகத்திலும் தளப் பிரதேசம் அதாவது பாட்டாளி



வர்க்கம் ஆட்சி புரியும் அரசு கிடையாது. 1917 அக்டோபர் புரட்சி நடைபெற்றதற்குப் பின்னர் சர்வதேசிய புரட்சிகர இயக்கம் இப்பொழுதுதான் முதற்தடவையாக இந்த நிலைமையை எதிர்நோக்கியது. உலகின் எந்தப் பாகத்திலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இருப்பது புரட்சி செய்ய முயற்சிக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஊக்கமும் சித்தாந்த பொருளாதார உதவியும் அளிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இந்த அம்சம் இல்லாதிருப்பது இன்று இயற்கையாகவே பல புரட்சிவாதிகளின் உற்சாகத்தை மழுங்கடித்திருக்கிறது. என்ன தவறு நேர்ந்தது? ரஷ்யாவில் செய்ய முடியாவிட்டால் சீனாவில் செய்ய முடியாவிட்டால் நாம் வெற்றி பெற முடியுமா? இத்தகைய வேதனையான கேள்விகள் எழுந்துள்ளன.

ஆனால் இந்தச் சோர்வு நீடித்திருக்கவில்லை. சர்வதேசிய புரட்சிகர இயக்கத்தின் ஐக்கியத்தைப் புனரமைக்கும் வேதனையான பணியை எங்குமுள்ள புரட்சிவாதிகள் மேற்கொண்டனர். ஆனால் இதனைச் செய்வதற்கு சீனாவின் மூன்று உலகத் தத்துவம் அல்பேனியா மாவோவைக் கண்டித்தது ஆகியவற்றின் எதிர்ப்புரட்சிகர இயல்பை அம்பலப்படுத்துவது அவசியமாகியது. நான் எழுதிய ''என்வர் ஹோக்ஷாவை நிராகரித்தல்'' என்ற தலைப்பிலான கட்டுரை ''வெல்வதற்கோர் உலகம்'' என்ற சர்வதேச மார்க்சிய-லெனினிய சஞ்சிகையின் 1981 மே இதழில் வெளியாகியது.

அல்பேனியர்களுடன் நாம் மேற்கொண்ட சித்தாந்த விவாதத்தை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். மாசேதுங் சிந்தனைக்கு எதிரான அல்பேனிய தொழிற்கட்சியின் விமர்சனத்தின் பெரும்பகுதி என்வர் ஹோக்ஷா எழுதிய ''புரட்சியும் ஏகாதிபத்தியமும்'', ''சீனாவைப் பற்றிய பிரதிபலிப்புகள்'' ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. இன்றைத் சீனத் தலைவர்களின் திரிபுவாதத்தின் ஊற்றுக்கண்ணை மாவோவுக்குக் கொண்டு செல்லும் மடத்தனமான வேலையை என்வர் ஹோக்ஷா செய்துள்ளார். தெங்சியாவ்பிங் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளை எல்லாம் மாற்றி சீனக் கட்சியிலான மாவோவின் தலைமைக் காலம் முழுவதையும் ஒரு கெட்ட கனவாக அழித்தொழிக்க முயற்சிப்பதை என்வர் ஹோக்ஷா கவனத்தில் எடுக்கவில்லை. தெங்சியாவ் பிங்கின் திரிபுவாதம் மாவோவிலிருந்து தோன்றியது என்றால் தெங் எல்லா விதத்திலும் மாவோவை மூர்க்கத்தனமாக எதிர்த்திருக்க மாட்டார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதை சற்றுத் தானும் அறிவுள்ள எவரும் நிச்சயம் புரிந்து கொண்டிருப்பார்கள்.

மாவோ ஒரு கற்பனாவாதி, நிலையியல்வாதி (Metaphyscit) என்று என்வர் ஹோக்ஷா குற்றஞ்சாட்டினார். உலகத்தில் நடை பெற்ற மிகப்பெரிய புரட்சிகர இயக்கங்களில் ஒன்றான மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி என்ற விஷயத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை. இந்த மாபெரும் சம்பவத்தை அவர் மகத்தானதும் அல்ல, பாட்டாளி வர்க்கமானதும் அல்ல, கலாச் சாரமானதுமல்ல, புரட்சிகரமானதும் அல்ல என்று அழைத்தார். அவர் உண்மையில் தனது இயந்திர ரீதியான நிலையியல் பார்வையைத்தான் வெளிக்காட்டினார். அவருடைய பார்வையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் சட்ட திட்டத்துடனும் தெரிவு செய்யப்பட்ட மத்தியக் கமிட்டியுடனும் சகலத்தையும் தீர்மானித்து தலைமை தாங்க வேண்டும். கொந்தளிப்புக்கோ அல்லது அவர் கூறியவாறு 'குழப்பத்துக்கோ' இடமிருக்கக்கூடாது. லியூ சோஷியும் இவ்வாறுதான் பிரச்சினையை அணுகினார். மத்தியக் கமிட்டிக் குள்ளே பெரும்பான்மையைத் தான் கொண்டிருந்தபடியால் தான் பாதுகாப்பாக இருப்பதாக அவர் நினைத்தார். நல்ல கம்யூனிஸ்ட் என்ற முறையில் மாவோ, லியூ சோஷி தனது வெற்றியில் நம்பிக் கையுடைய மத்தியக் கமிட்டியில்தான் கருத்து வேற்றுமைகளை முதலில் எழுப்புவார் என்றும் அவர் எதிர்பார்த்தார். மாவோ மத்தியக் கமிட்டியைத் தாண்டிச் சென்று "தலையையைத் தகர்த் தெறியுங்கள்" என்ற தமது பிரசித்திப் பெற்ற கோஷத்துடன் வெளியேயுள்ள வெகுஜனங்களுக்கு வேண்டுகோள் விடுப்பார் என்று லியூ சோஷி ஒருபோதும் நினைக்கவில்லை. கட்சியின் தலைமையை அல்லது திரிபுவாதமாகிய அந்தப்பகுதி தலைமையை தூக்கி எறியும்படி வெகுஜனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் ஒரு கம்யூனிஸ்டைப் பற்றி இதற்கு முன் யாரும் கேள்விப்பட்ட துண்டா?

ஆனால் இதனைத்தான் மாவோ செய்தார். இயந்திர ரீதியான சட்டங்களுக்கோ நிலையியல் சிந்தனைக்கோ அவர் கட்டுப்பட்டவரல்ல. அவர் இயங்கியல் ரீதியாகச் சிந்தித்து, மேலமைப்பின் பகுதிகளில் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த முதலாளித்துவப் பாதையாளர்களிடமிருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாக்க செயற்பட்டார். சட்டங்களின்படி நடப்பதென்றால் தோல்வி நிச்சயம். இது தவிர மாவோவுக்குப் பொது மக்களின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பொது மக்கள் தவறு இழைக்க முடியும் ஆனால் சரியான



புரட்சிகரத் தலைமையின்கீழ் அவர்கள் அடிப்படையில் சரியாக செயற்படுவார்கள் என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். இதனால்தான் தொல்லைகளைக் 'கிளப்பிவிட' அவர் அஞ்சிய தில்லை.

ஆனால் என்வர் ஹோக்ஷாவால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால்தான் கோடிக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட மகத்தான புரட்சியை அனைத்து சீன மட்டத்தில் நடைபெற்ற அரண்மனைச் சதி என்று அவர் அழைத்தார். சீனாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார நிலைமைகளின் கீழ் வர்க்கப் போராட்டத்தை எப்படி நடத்துவது என்பதற்கு மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி ஒரு உதாரண மாகும். சீனா நிறம் மாறி முதலாளித்துவ மீட்சிப் பாதையில் செல்வதைத் தடுக்கவும் உலகப் புரட்சியின் ஒரு தளமாகச் சீனாவை வைத்திருக்கவும் இந்தப் புரட்சி நடத்தப்பட்டது.

கலாச்சாரப் புரட்சி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை இல்லா தொழித்து பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை மறுதலித்தது என்று என்வர் ஹோக்ஷா வாதிடுகின்றார். அது அப்படிச் செய்யவில்லை. சீனக் கட்சியின் முதலாளித்துவத் தலைமை அலுவலகத்தை, தலைமையில் திரிபுவாதமாகப் போன அந்தப் பகுதியைத்தான் அது அழித்தொழித்தது. அதனிடத்தில் புதிய இரத்தம் சேர்க்கப்பட்டது. குழப்பங்கள் ஏற்பட்டது உண்மையே. ஒவ்வொரு புரட்சியிலும் குறிப்பிட்டளவு குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. அது தவிர்க்க முடியாதது. இதனால்தான் மாவோ ஒரு தடவை புரட்சி என்பது ஒரு மாலை நேர விருந்தல்ல என்று கூறினார்.

பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கலாச்சாரப் புரட்சியில் முன்னணியில் இருந்தபோதும் தொழிலாளி வர்க்க, விவசாயி வர்க்க இளைஞர்கள்தான் செங்காவலர்களில் பெருந் தொகையினராக இருந்தனர். மாவோ புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமை என்ற மார்க்சியக் கருத்தை நிராகரித்து அந்த பாத்திரத்தை விவசாயிகளுககு வழங்கினார்என்ற என்வர்ஹோக்ஷா வின் குற்றச்சாட்டு முற்றிலும் விழல் பேச்சாகும். மாவோ தமது தத்துவப் படைப்புகளிலும் நடைமுறையிலும் எப்பொழுதும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை வற்புறுத்தியுள் ளார். விவசாயிகளைப் பிரதான சக்தியாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலைப்பாட்டிலிருந்து அவர் எப்பொழுதுமே விலகிய தில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் என்வர் ஹோக்ஷா மாவோவின் பிரசித்தி பெற்ற ''ஹுனான் விவசாயி இயக்கத்தின் பரிசீலனை பற்றிய அறிக்கை'' என்ற நூலிலிருந்து ஒரு மேற்கோளைப் பாவித்து தனது நிலைப் பாட்டிற்கு ஆதரவு தேட முயற்சிக்கின்றார். இதர சகல அரசியற் கட்சிகளும் சக்திகளும் விவசாயிகளுக்கும் அவர்களுடைய கருத்துக் களுக்கும் அடிபணிய வேண்டும் என்று மாவோ கூறியதாக நிரூபிக்க அவர் இவ்வாறு செய்துள்ளார். அந்தப் புகழ்பெற்ற அறிக்கையில் மாவோ பின்வருமாறுதான் கூறினார் : ''லட்சோப லட்சம் விவசாயிகள் பெரும் புயலாக எழுவார்கள். எந்த சக்தியும் அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் வேகமும் உக்கிரமும் நிறைந்த இந்த சக்தியை தடுத்து நிறுத்த முடியாது. ஒவ்வொரு புரட்சிகரக் கட்சியையும் குழுவையும் ஒவ்வொரு புரட்சிவாதி யையும் அவர்கள் சோதனைக்குள்ளாக்குவார்கள். இவர்கள் ஒன்று அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும்.''

சீனப் புரட்சியில் விவசாயிகளின் ஆதிக்கப் பாத்திரத்தைக் கோரியல்ல கிராமப்புறத்தில் ஏற்கனவே தோன்றியுள்ள விவசாயி இயக்கத்துக்கு தலைமை கொடுக்கும்படி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையைக் கோரித்தான் மாவோ இக்கட்டுரையை எழுதினார். அப்பொழுதைய கட்சித் தலைமை தேசிய முதலாளி களுடன் கூட்டாளி என்பதில்தான் அக்கறையாயிருந்தது. தொழி லாளர் — விவசாயிகள் கூட்டணியை உருவாக்கும் பணியை உதாசீனம் செய்தது. இந்தக் கொள்கை மாற வேண்டும் என்று மாவோ சரியாகவே விரும்பினார். புரட்சியில் விவசாயிகள் ஆதிக்கப் பாத்திரம் வகிக்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் கோரவில்லை.

''புரட்சிகரக் கிராமங்கள்'' பற்றியதும் ''நகரத்தை நாட்டுப் புறத்திலிருந்து சுற்றிவளைக்க வேண்டும்'' என்பது பற்றியதுமான ஆய்வுரையை மாவோ விவசாயிகளைத் தலைமைப் பாத்திரத்துக்கு உயர்த்தி விட்டார் என்று கூறுவதற்கு ஆதாரமாக என்வர் ஹோக்ஷா கொள்கின்றார். ஆனால் மாவோ போதித்தது என்ன? இன்றைய காலத்தில் அரைக் காலனிச நாடுகளில் எதிரியின் சக்திகள் ஆரம்பத்தில் பலவீனமாக மக்கள் சக்தியிலும் பார்க்க மேம்பாடானவையாக இருக்கின்றது என்றும் எதிரியின் சக்திகள் நகரங்களில் குவிந்திருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இத்தகைய நிலைமையில் எதிரியின் மேம்பாடான பலம் என்ற கற்சுவருக்கு எதிராக எமது தலைகளைக் கொண்டே அடிப்பது முட்டாள்தனம் என்று அவர் கூறினார். மாறாக மக்கள் எதிரியின்



சக்திக் கேந்திரங்களிலிருந்து இயன்றளவு தூரத்துக்கு நகர வேண்டும் என்று அவர் கூறினார். பெரும்பான்மையான மக்கள் நகரங்களுக்கு வெளியே வாழும் சீனா போன்ற நாடுகளில் மக்கள் மத்தியில் செல்லுதல் அவர்களை ஸ்தாபனப்படுத்துதல் புரட்சிகர தளங்களை அமைத்தல் அவற்றில் ஒரு மக்கள் படையை அமைத்து அதற்குப் பயிற்சி அளித்தல் என்று இது அர்த்தப்படும். இதனால் ஒரு சாதகமற்ற நிலைமை சாதகமான நிலைமையாக மாற்றப் படும். இது மக்கள் சக்திகளைத் தேட அதன் சக்திகளை அனுப்பும் படி எதிரியை நிர்ப்பந்திக்கும். அப்பொழுது எதிரியை மக்கள் மத்தியில் நன்றாக உள்ளே இழுத்து ஒருவருக்கு எதிராகப் பத்து பேர் என்ற முறையைப் பாவித்து அவர்களை அழித்தொழிக்க முடியும். மக்கள் படைகள் எதிரி சக்திகளிலும் பார்க்க மேம்பாடான வையாக மாறும் குணாம்சரீதியானதோர் மாற்றம் ஏற்படும்வரை அப்பொழுது நகரங்களை நாட்டுப்புறங்களிலிருந்து சுற்றிவளைத்து இறுதியாக அவற்றை விடுதலை செய்ய முடியும்.

சீனப்புரட்சியை வழி நடத்திய போக்கில் மாவோ வகுத்த மதி நுட்பமான இராணுவ யுத்தத் தந்திரங்களும் தந்திரோபாயங் களும் இவையாகும். அதில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் மறுக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு அந்தப் பாத்திரம் வழங்கப் படவில்லை. மார்க்சியம் — லெனினியம் என்ற பாட்டாளி வர்க்கச் சித்தாந்தத்தின் மூலமும் கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் பெறப்படுகின்றது.

புரட்சியின் இரண்டு கட்டங்களான ஜனநாயகப் புரட்சி, சோஷலிசப் புரட்சி ஆகியன பற்றி மாவோ மார்க்சியம் அல்லாத கருத்துக்களைக் கொண்டிருந்தார் எனவும் என்வர் ஹோஷா அவரை விமர்சிக்கின்றார். மாவோ பல படைப்புகளில் தமது கருத்தை விளக்கியுள்ளார். இவற்றுள் ''புதிய ஜனநாயகம் பற்றி'' என்ற கட்டுரை மிக முக்கியமானது. ''சீனப் புரட்சி இரண்டு படி களைத் தாண்ட வேண்டும். முதலாவது புதிய ஜனநாயகப் புரட்சி பின்னர் சோஷலிசப் புரட்சி இவை இரண்டும் சாராம்சத்தில் வேறுபாடான புரட்சிகரப் போக்குகள் ஏககாலத்தில் வித்தியாச மானவையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவும் ஆகும். இரண்டாவது போக்கை அதாவது சோஷலிசப் புரட்சி என்பதை முதற்போக்கின் பின் அதாவது முதலாளித்துவ ஜனநாயக இயல்புடைய புரட்சியைப் பூர்த்தியாக்கிய பின்தான் நடத்த முடியும். ஜனநாயகப் புரட்சி என்பது சோஷலிசப் புரட்சிக்கான அத்தியாவசியத் தயாரிப்பாகும். சோஷலிசப் புரட்சி என்பது ஜனநாயகப் புரட்சியின் தவிர்க்க முடியாத தொடர்ச்சியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த இரண்டு புரட்சி கட்டங்களிலும் முதலாவது இரண்டாவதற் கான நிலைமைகளை வழங்குகின்றது எனவும் இந்த இரண்டும் இடையில் முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் இடையீட்டுக் கட்டம் ஒன்று ஏற்படாத முறையில் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறுவது சரியானது. வளர்ச்சி பற்றிய மார்க்சியத் தத்துவத்துக்கு இசைவானது'' என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த இரண்டு வேறுபட்ட புரட்சிக் கால கட்டங்களின்போது தொழிலாளி வர்க்கம் வேறுபட்ட நேச அணிகளை கொண்டிருக்கும் என்று இது அர்த்தப்படும். புரட்சியின் ஜனநாயகக் கட்டத்தின் போது, இரட்டைத் தன்மையுடைய தேசிய முதலாளி வர்க்கத் துடன் ஐக்கியப்படவும் போராடவும் முடியும் என்று மாவோ கூறினார். ''தேசிய முதலாளி வர்க்கத்தின் இந்த இரட்டைத் தன்மை காரணமாக, குறிப்பிட்ட காலத்திலும் குறிப்பிட்ட நிலை மைகளிலும் ஏகாதிபத்தியம், அதிகார முதலாளித்துவம், யுத்தப் பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு எதிரான புரட்சியில் அது கலந்து கொள்ளும் என்றும் புரட்சிகர சக்திகளின் ஒரு அங்கமாக அது விளங்க முடியும் என்றும் நாம் முடிவுக்கு வரலாம். ஆனால் வேறு சில வேளைகளில் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு உதவி புரிந்து அது பெரும் முதலாளி வர்க்கத்துக்குச் சேவை புரியலாம்'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மாவோ விளக்கிக் கூறிய முரண்பாடு பற்றிய தத்துவத்தையும் என்வர் ஹோக்ஷா தவறானது என்றார். முரண்பாட்டின் விதி, அதாவது எதிர்மறைகளின் ஒருமைப்பாடு என்ற விதி பொருள் முதல்வாத இயங்கியலின் மிகவும் அடிப்படையான விதி எனவும் மற்ற விதிகள் அனைத்தும் அதிலிருந்து தோன்றுகின்றன எனவும் மாவோ கூறினார். இரண்டு மார்க்கத் தத்துவம் பற்றிய மாவோவின் கருத்துக்கள் சம்பந்தமான இந்த விதியின் பிரயோ கத்தை அவர் குறிப்பாக மறுத்தார். என்வர் ஹோக்ஷாவின் கருத்தில் ஒரு கட்சியில் ஒரு மார்க்கம்தான் இருக்கமுடியும். ஆகவே கட்சிக்குள்ளே இரண்டு மார்க்கங்கள் நிலவுவதாகக் கருதுவது மார்க்சியமல்லாதது என்று அவர் கூறினார். ஆனால் மாவோ முரண்பாட்டின் சர்வ வியாபகத்தைத்தான் குறிப்பிட்டார். அதாவது முரண்பாடு எதிலும் நிலவுகின்றது. சிந்தனையிலும் நிலவுகின்றது. கட்சிகளுக்குள்ளேயும் நிலவுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு கட்சி அல்லது தனிநபர் ஒரேகுரலில் தான் பேசமுடியும், பேசவும் வேண்டும் என்பதும் சரி. ஆனால் அந்த ஒரே குரல் இரண்டு முரண்பாடான கருத்துக்களுக்கிடையி லான உக்கிரமான மோதலில் விளைவாகத்தான் எப்பொழுதும்



ஏற்படுகிறது. இந்த அர்த்தத்தில் கட்சிக்குள்ளேயும் ஒரு தனி நபருக்குள்ளேயும் கூட எப்பொழுதும் இரண்டு மார்க்கங்கள் நிலவுகின்றன. இந்த இரண்டு மார்க்கங்களுக்கிடையிலான சரியானதற்கும் பிழையானதற்கும் இடையிலான முரண்பாட்டின் அடிப்படையில்தான் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படுகின்றன. இதனை மறுப்பார் மார்க்சிய இயங்கியலை மறுப்பதாகும்.

''முரண்பாடு பற்றி'' என்ற கட்டுரையில் தோழர் மாசேதுங், வேறுபட்ட கருத்துக்கிடையிலான எதிர்ப்பும் போராட்டமும் கட்சியில் எப்பொழுதும் நடைபெறுகின்றன என்று சுட்டிக் காட்டினார். இது கட்சிக்குள்ளே வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாட்டினதும் சமுதாயத்தில் புதியதுக்கும் பழையதுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டினதும் பிரதிபலிப்பாகும். கட்சியில் முரண்பாடு இல்லாமற் போனால், அவற்றைத் தீர்ப்பதற்கு சித்தாந்தப் போராட்டம் இல்லாது போனால் கட்சியின் வாழ்வு முடிந்துவிடும். இதனால்தான் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி ஏற்பட்டபோது அதனைக் கெட்ட விஷயமல்ல நல்ல விஷயம் என்று மாவோ வரவேற்றார். மாவோ தலைமையி லான புரட்சிகர சக்திகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் நவீன திரிபுவாதத்துக்கும் தம்மை விற்று சோவியத் யூனியனில் ஏற்கனவே நடந்ததுபோல முதலாளித்துவ மீட்சிப் பாதையில் சீனாவை எடுத்துச் செல்ல விரும்பிய எதிர்ப்புரட்சிகர சக்தி களுக்குமிடையில் நடைபெற்றதோர் மகத்தான வர்க்கப் போராட் டமாகும் அது. ஆனால் இதனை என்வர் ஹோக்ஷாவினால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் முரண்பாடு பற்றிய மார்க்சியத் தத்துவத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை.

எதிர்ப் புரட்சிவாதிகளையும் மக்கள் மத்தியிலான முரண்படும் சக்திகளையும் கையாள மாவோ கடைப்பிடித்த முறைகளையும் என்வர் ஹோக்ஷா விமர்சித்துள்ளார். ரஷ்யாவில் எதிர்ப்புரட்சிகர வர்க்கமான முதலாளி வர்க்கத்தை முடித்துக் கட்டுவதைத் தவிர பாட்டாளி வர்க்கத்துக்கு வேறு வழி இருக்கவில்லை என்பதை மாவோ ஏற்றுக்கொண்ட அதே வேளையில் சீனாவில் சற்று வித்தியாசமான நிலைமை நிலவியது என்று குறிப்பிட்டார். 1956 அளவில் பெரும்பாலான எதிர்ப்புரட்சிவாதிகள் துப்பரவு செய்யப்பட்டார்கள். ஆகவே எதிர்ப்புரட்சிவாதிகளுக்கும் மக்களின் எதிரிகளுக்கும் கடுமையான நடத்துகையை முன்வைத்த அதே வேளையில் மற்ற எதிரிகளைப் பொறுத்தவரையில் வேறுபட்ட ஜனநாயக அறிவுறுத்தல் முறையும் உழைப்பின் மூலம் புனருருவாக்கமும் நடத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகக்கூடுதலான மக்களைச் சுட்டுக் கொல்லக் கூடாது எனவும் கைது செய்யப்படுவோரின் தொகைக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும் எனவும் தவறுகள் கண்டுபிடிக்கபடும்போது திருத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். சீனாவில் குட்டி முதலாளி வர்க்கத்தினர் பெருந்தொகையாக இருக்கின்றபடியாலும் (நிலப் பிரபுக்கள், பெரும் முதலாளிகள் தவிர) மக்களில் தொழிலாளி வர்க்கம் அல்லாத பகுதியினரில் பெரும்பாலோரை வென்றெடுக்க வேண்டிய தேவை இருந்தபடியாலும் இந்தக் கொள்கை முன் வைக்கப்பட்டது.

இது போலவே ''நூறு மலர்கள் மலரட்டும் நூறு கருத்தோட் டங்கள் முட்டி மோதட்டும்'' என்ற கொள்கையும் மக்கள் மத்தியில் போட்டி போடும் கருத்தோட்டங்களின் போராட்டத் திற்கு ஊக்கமளிக்கவே முன்வைக்கப்பட்டது. ஆனால் இது கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும். மக்கள் மத்தியிலான தவறான கருத்துக்களை நிர்வாக நடவடிக் கைகள் மூலம் அடக்கி ஒடுக்குவது தவறானது என மாவோ கருதி னார். இத்தகைய தவறான கருத்துக்கள் வெளிவந்து போட்டி யையும் போராட்டத்தையும் சந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் கருதினார்.சித்தாந்தப் போராட்டத்தில் சோஷலிசம் சாதகமான நிலைமையில் இருக்கின்றபடியால் சரியான கருத்துகள் வெற்றி பெறுமென்று அவர் சந்தேகத்திற்கிடமின்றி நம்பினார். அரசின் அடிப்படை அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் உழைப்பாளி மக்களின் கரங்களில் இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி பலமானதாகவும் அதன் கௌரவம் உயர்வானதாகவும் இருந்தது. ஆகவே சிரத்தையான அறிவுறுத்தல்தான் ஒரேயொரு சித்தாந்தப் போராட்ட முறையாகும் கொடூரமான நிர்ப்பந்தம் அல்ல.

''நூறு மலர்கள் மலரட்டும்'' என்ற இயக்கம் நச்சுக்களை களுக்கு எதிரான சித்தாந்தப் போராட்டமாகும். கலாச்சாரத் துறையில் மார்க்சியத்தின் மேம்பாட்டுக்கான இயக்கமாகும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வலதுசாரிகள் மேற் கத்தைய பாணி ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுத்தனர். ஆட்கள் அடிக்கப்படுவது போன்ற அசிங்க சம்பவங்களும் இந்த இயக்கத்தின்போது இடம் பெற்றன. மாவோ கூறியவாறு ''நச்சுக்களைகளை வெளிவர அனுமதித்தால்தான் அவற்றைப் பிடுங்கி எறியமுடியும்.'' குதித்து முன்வந்து தம்மை அம்பலப் படுத்திய முதலாளித்துவ வலதுசாரிகளுக்கு எதிராக உக்கிரமான எதிர்த் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. அவர்கள் தோற்கடிக்கப் பட்டனர்.



ஜனநாயகப் புரட்சியில் கலந்துகொண்ட அனைத்து வர்க்கங் களையும் புரட்சிக்குப் பின் அரசாங்கத்தில் கலந்துகொள்ள அனுமதித்த மாவோவின் கொள்கையையும் என்வர் ஹோக்ஷா விமர்சித்துள்ளார். ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் அதிகார முதலாளி வர்க்கத்துக்கும் எதிராகப் புரட்சியின் தொழிலாளர்களுடன் நகர்ப்புற முதலாளி வர்க்கத்தில் ஒரு பகுதியினரும் தேசிய முதலாளி வர்க்கமும் நேச அணி சேர்ந்து கொண்டதன் விளைவாகச் சீனாவிற் தோன்றியதோர் விசேஷ நிலைமை இது. இது வரலாற்று உண்மை. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை என்ற அடிப்படையிலும் சோஷலிசத்துக்கான மாற்றம் என்பதை மற்றக் கட்சிகள் ஏற்றுக்கொண்டதன் பேரிலும் இந்தக் கொள்கை கடைபிடிக்கப்பட்டது. ஆனால் என்வர் ஹோக்ஷா இந்த ''கம்யூனிஸ்ட் கட்சியினதும் ஜனநாயகக் கட்சியினதும் நீண்ட கால சகவாழ்வையும் பரஸ்பர மேற்பார்வையையும் விரும்பவில்லை. இடதுசாரி கம்யூனிசம் என்ற நூலில் லெனின் வருமாறு கூறினார். ''பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கை பற்றிய பின்னரும் பல ஆண்டுகளுக்கு எங்கெங்கும் வர்க்கங்கள் நிலைபெற்றுள்ளன. வர்க்கங்களை அழிப்பது என்பது நிலப் பிரபுக்களையும் முதலாளிகளையும் துரத்தியடிப்பது என்று மாத்திரம் அர்த்தப்படாது. இது ஒப்பீட்டளவில் இலகுவாகச் செய்து முடிக்கப்படுகின்றது. சிறுபண்ட உற்பத்தியாளர்களை அழித்தொழிப்பதையும் அது குறிக்கும். (சிறுபண்ட உற்பத்தி யாளர்கள் முதலாளித்துவத்தையும் முதலாளி வர்க்கத்தையும் தொடர்ச்சியாக தினசரி, ஒவ்வொரு மணித்தியாலமும், தன்னிச் சையாகவும் பெருமளவிலும் உற்பத்தி செய்கின்றார்கள்) அவர் களைத் துரத்தி அடிக்கவும் முடியாது, நசுக்கவும் முடியாது. நாம் அவர்களுடன் இணக்கமாக வாழவேண்டும். மிகவும் நீண்டகால, மந்தமான, தொடர்ச்சியான ஸ்தாபன வேலையின் மூலம்தான் அவர்களைப் புனர்போதனை அளிக்கமுடியும்; அளிக்க வேண்டும்.''

இறுதியில் சர்வதேசிய ரீதியில் ஸ்டாலினும், கொமின்ரேனும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையையும் மாசேதுங்கையும் விமர்சித்ததை என்வர் ஹோக்ஷா குறிப்பிடுகின்றார். புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை, பாட்டாளி வர்க்க சர்வதேசியம் புரட்சிப் போராட்டத்தின் யுத்த தந்திரம் தந்திரோபாயங்கள் முதலியவற்றிலும் சீனப் புரட்சியின் யுத்ததந்திரம், தந்திரோபா யங்கள் ஆகியவற்றிலும் மார்க்சிய-லெனினியத்தின் கோட்பாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை மாவோ உறுதியாக்க கடைப்பிடிக்கத் தவறினார் என்று இந்த விமர்சனங்கள் கூறுகின்றன.

கொமின்ரேனுக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் வேற்றுமைகள் இருந்தன என்பது உண்மையே. ஆனால் ஏறக் குறைய எல்லாப் பிரச்சினைகளிலும் மாவோ சரி என நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. இதனை ஸ்டாலின்தான் முதலில் ஏற்றுக் கொண்டவர். புரட்சியின் இயல்பு பற்றி இரண்டு தரப்புகளுக்கு இடையில் எந்த வேற்றுமையும் நிலவவில்லை. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்று இரண்டு தரப்புகளும் கருதின. விவசாயிகளின் பிரதான பாத்திரம் விவசாயப் புரட்சி-ஆயுதப்புரட்சி தான் சீனாவின் ஒரேயொரு பரிகாரம் என்பது ஆகியவற்றிலும் கருத்து வேற்றுமை நிலவவில்லை. மாவோ சோவியத் யூனியனை சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் தாயகமாகவும் தளமாகவும் கருதினார். அக்டோபர் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவத் தையும் அதன் உலக ரீதியான பாதிப்பையும் சரியாகப் புரிந்து கொண்டார். ஆனால் சீனப் புரட்சியின் யுத்ததந்திரம் தந்திரோ பாயங்கள் ஆகியன பற்றி வேற்றுமைகள் இருந்தன. 1927-க்கும் 1935-க்கும் இடையில் லிலிசான், வாங் மிங் ஆகியோரின் மார்க்கங்களின் மூலம் நகரங்களில் ஏககாலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், கொரில்லா யுத்தத்துக்குப் பதிலாக நிலையான யுத்தத்தில் ஈடுபடுதல், கிராமிய புரட்சி தளப் பிரதேசங்களைக் கட்டியமைக்க மறுத்தல் ஆகியவற்றில் கொமின்ரேனின் செல்வாக்குத் தெரிந்தது. வாஸ்தவத்தில், சியாங்கை ஷேக்கின் 5-வது சுற்றி வளைப்பிலிருந்து தப்புமுகமாகவே நீண்ட படை நடப்பு நடத்தப்பட்டது. 1973 ஏப்ரலில் எமது கட்சிப் பிரதிநிதிக் கோஷ்டியுடன் நடத்திய கலந்துரையாடலில் அல்பேனியத் தோழர்கள் நீண்ட படை நடப்பை சிறுமைப்படுத்தி செஞ்சேனை நிலையான போரில் ஈடுபட்டு பிரமாண்ட இழப்புகளைத் தவிர்த்திருக்கலாம் என்று கூறினார்கள். அல்பேனியத் தோழர்கள் கூறிய கொள்கையைக் கடைப்பிடித்திருந்தால் புரட்சியும் இருந்திருக்காது, கட்சியும் இருந்திருக்காது, மாவோவும் இருந்திருக்கமாட்டார் என்பதை கூறத் தேவை யில்லை. மாவோவை அதிகாரத்துக்குக் கொண்டுவந்த சுன்யி மாநாட்டையும் அல்பேனியர்கள் பிரதிநிதித்துவத் தன்மையற்ற மாநாடு என்று விமர்சித்துள்ளார்கள். உலகில் நடைபெற்ற மிகவும் உக்கிரமான உள்நாட்டு யுத்தம் ஒன்றின்போது முற்றிலும் சட்டரீதியான, பிரதிநிதித்துவமான மாநாடு ஒன்றை அவர்கள் எதிர்பார்த்தார்களா?



இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவிலும் சீனக் கம்யூனிஸ்டு களுடன் ஸ்டாலின் வேற்றுமைகளைக் கொண்டிருந்தார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர் சியாங்கை ஷேக்கிற்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தில் சீனக் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற முடியும் என்பது பற்றி அவர் சந்தேகம் கொண்டிருந்து உள்நாட்டு யுத்தத்தின்போது கூட சியாங்குடன் உறவுகளை வைத்திருந்தார். ஆனால் தான் செய்தது தவறு என்பதை ஏற்றுக் கொண்ட பெருந்தன்மை உடையவர் ஸ்டாலின்.

ஸ்டாலின் இத்தகைய தவறுகளை இழைத்தபோதும் மாவோ அவரை மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியாகக் கருதினார். அடிப்படையில் அவர் சரி எனவும் கருதினார். அத்துடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இழைத்த தவறுகளுக்கு கொமின்ரேனையும் சீனாவிலுள்ள அதன் பிரதிநிதிகளையும் அவர் குற்றஞ்சாட்டவில்லை. சீனத் தேசிய நிலைமையின் குறிப்பான இயல்புகளைக் கருத்தில் எடுக்காது சோவியத் மாதிரியைக் குருட்டுத் தனமாகப் பின்பற்ற முயன்ற சீனக் கம்யூனிஸ்டுகளைத் தான் அவர் குற்றஞ்சாட்டினார்.

சோவியத் திரிபுவாதத்துக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்டுகளின் நிலைபாடு சரியான, கோட்பாட்டு ரீதியான, மாக்சிய லெனினிய அடிப்படையில் அமைந்தது அல்ல என்றும் என்வர் ஹோக்ஷா தனது நூலில் கூற முற்பட்டுள்ளார். மாவோவின் தலைமையிற் தான் சீனக் கட்சி 'லெனினியம் நீடுழீ வாழ்க' என்ற நூலை வெளியிட்டு மகத்தான வாதப் பிரதிவாதத்தை ஆரம்பித்து வைத்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வேறு சில மேற்கு ஐரோப்பிய திரிபுவாதக் கட்சிகளுக்கும் எழுதப்பட்ட ஒரு டசின் கடிதங்களைக் கொண்ட இந்த வாதப் பிரதிவாதம் சிந்தனைத் தெளிவிலும் தர்க்க ஆழத்திலும் தலை சிறந்தவை. அவற்றைப் படித்த உலகம் பூராவுமுள்ள ஒரு சந்ததி மாக்சிய—லெனினிய வாதிகள் புரட்சிகரைக் கோட்பாட்டையும் புரட்சிகர வேலை நடையையும் கற்றுக் கொண்டார்கள். இதை இன்று மறுப்பது உண்மைக்குப் புறம்பானதாகும்.

மாவோ எப்பொழுதும் அமெரிக்கசார்பாக இருந்தார் அல்லது அவர் தனது நிலைப்பாட்டை எப்பொழுதும் மாற்றிக் கொண்டிருந்தார் என்று எம்மை நம்பவைக்க அல்பேனிர்யகள் முயலுகின்றார்கள். இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமெரிக்காவில் சியாங்கை ஷேக்கிற்கு ஆதரவான குழுவும் மாவோவிற்கு ஆதரவான குழுவும் இருந்தன என்று எமது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதிநிதிக் கோஷ்டியிடம் அவர்கள் கூறினார்கள். யப்பானிய பாசிஸத்துக்கு எதிரான பொதுப் போராட்டத்தில் எவரை ஆதரிக்கவேண்டும் என்பதில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் மத்தியில் கருத்து வேற்றுமைகள் நிலவியது உண்மையே. சியாங்கா? மாவோவா? யப்பானியர்களுக்கு எதிராக உண்மையில் போராடுவது சீனக் கம்யூனிஸ்டுகள் தான் சியாங்கின் கீழிருந்த கொமிந்தாங் அல்ல என்ற காரணத்தால் சீன கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று விரும்பிய நேர்மையான அமெரிக்கர்கள் இருந்தார்கள். இதனால் மாவோ அமெரிக்க சார்பானவர் ஆகிவிட மாட்டார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் பொருத்த மாவோவின் மனோபாவம் தெளிவானது, உறுதியானது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது யப்பானிய பாசிஸம் சீனாவில் பிரதான எதிரியாகிய போது யப்பானிய பாசிஸத்துக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குமிடையே முரண்பாட்டை அவர் பயன்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டணி என்ற கொள்கையைக் கடைபிடித்தார். ஆனால் பாசிஸத்துக்கு எதிரான யுத்தம் முடிந்ததும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தில் சியாங்கை ஷேக்கிற்கு ஆதரவளிப்பதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் யப்பானிய பாசிஸத்தின் இடத்தை எடுத்து சீனாவில் பிரதான எதிரியாகிய போது சீனாவை விடுதலை செய்வதற்குத் தோற்கடிக்கப்பட வேண்டிய பிரதான எதிரியாக அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கருதினார். அவ்வாறே அவர் அதனைத் தோற்கடிக்கவும் செய்தார்.

பிந்திய ஆண்டுகளில் மாவோவின் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை யாரும் சந்தேகிக்க முடியாது. அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பு கொரியாவுக்குள் நிகழ்ந்தபோது அங்கு சீனத் தொண்டர் படையை அவர் அனுப்பினார். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த இந்தோசீன மக்களுக்கு அவர் பூரண ஆதரவளித்தார். அதுபோலவே சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த சகல நாட்டு மக்களுக்கும் அவர் பூரண ஆதரவு அளித்தார். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான சகல சக்திகளையும் ஐக்கியப்படும்படி 1970ல் அவர் வெளியிட்ட புகழ்பெற்ற அறிக்கை இன்னும் எங்கள் காதுகளில் ஒலிக்கின்றது.

ஆனால் இந்தக் காலத்தில் சர்வதேசிய நிலைமையில் புதியதோர் அம்சம் தோன்றியது. 1968-ல் சோவியத் திரிபுவாதிகள் சேக்கோஸ்லோவாக்கியாவுக்குள் படையெடுத்து தாம் ஒரு சமூக ஏகாதிபத்திய வல்லரசு என்ற வளர்ச்சியைக் காட்டினார்கள். ஒரு புதிய ஏகாதிபத்தியம் தோன்றிவிட்டது. சக்திகளின் உறவில் ஏற்பட்ட மாற்றங்களை மாவோ கவனத்தில் எடுத்தார். இதற்கும் பின்னர் மாவோ சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் மனித குலத்தின் இரட்டை எதிரிகள் என்றே கருதினார். ஆனால் சோவியத் சமூக ஏகாதிபத்தியமே சீனாவுக்குப் பெரிய ஆபத்தாக அமைகின்றது என்றும் அவர் கூறினார்.



1973 ஆகஸ்ட் 24-ம் திகதி முதல் 28-ம் திகதி வரை நடைபெற்றதும், மாவோ தலைமை வகித்த கடைசி மாநாடுமான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 10-வது காங்கிரசின் அறிக்கையில் பின்வரும் சிறப்பான விளக்கம் காணப்படுகின்றது. ''ஆகவே சர்வதேசிய முன்னணியில் எமது கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். கட்சியின் உறுதியான கொள்கைகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும் முழு உலகிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்துடனும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுடனும் தேசங்களுடனும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு கீழறுப்பு ஆகியவற்றுக்குள்ளான சகல நாடுகளுடனும் எமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி ஏகாதிபத்தியத்துக்கும் காலனிசத்துக்கும் நவ காலனிசத்துக்கும் எதிரான குறிப்பாக அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரண்டு மேல்நிலை வல்லரசுகளுக்கும் எதிரான மிகப் பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும். உலகம் பூராவுமுள்ள நேர்மையான மார்க்சிய-லெனினியக் கட்சிகளுடனும் ஸ்தாபனங்களுடனும் ஐக்கியப்பட்டு நவீன திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தை நாம் இறுதிவரை நடத்தவேண்டும்.''

மாவோ மீது அவதூறு பொழிவதன் மூலம் என்வர் ஹோஷாவும், அல்பேனியத் தொழிற் கட்சியும் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்துக்கு பெரும் சீரழிவைச் செய்துள்ளனர். ஆகவேதான் அவர்களை அம்பலப்படுத்தி நிராகரிக்கவேண்டும். மாசேதுங் சிந்தனையை நிராகரிக்கும் எவரும் வாஸ்தவத்தில் மார்க்சியம்-லெனினியத்தை நிராகரிக்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 16. மார்க்சிய - லெனினியவாதிகள் சர்வதேசிய ரீதியில் ஐக்கியப்படுதல்

1976-ல் மாவோவின் மறைவுக்குப் பின் சீனாவில் ஏற்பட்ட
1976-ல் மாவோவின் காட்டிக்கொடுப்பினாலும்
சீரழிவினாலும் பின்னர் அல்பேனியாவின் காட்டிக்கொடுப்பினாலும்
சர்வதேசிய மார்க்சிய-லெனினிய இயக்கம் கடுமையாக பாதிக்கப்
பட்டது. சந்தேகமும் விரக்தியும் எங்கும் தலைவிரித்தாடின.
ஆனால் விரைவில் நேர்மையான மார்க்சிய - லெனினியவாதிகள்
மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையைப் பாதுகாக்க
ஒன்று திரண்டார்கள். இந்த விசயத்தில் அமெரிக்க புரட்சிகர
கம்யூனிஸ்ட் கட்சி முன்னணிப் பாத்திரத்தை வகித்தது.
மாசேதுங் சிந்தனைக்கு ஆதரவாக அது பல நூல்களை
வெளியிட்டது. இக்கட்சியின் தலைவர் பொப் அவாக்கியன்
எழுதிய'' மாசேதுங்கின் அழியாத சாதனைகள்''என்ற நூலும்
''மாவோவுடன் ஐந்து பேர்'' என்ற தலைப்பிலான நூலும்
இவற்றில் அடங்கும். எமது கட்சியும் இதில் அதன் பாத்திரத்தை
வகித்தது

1980-ன் ஆரம்பப் பகுதியில் அமெரிக்கப் புரட்சிகரக்
1980-ன் ஆரம்பப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியும்
கம்யூனிஸ்ட் கட்சியும் சிலி புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியும்
சேர்ந்து'' மார்க்சிய லெனினியவாதிகளின் ஐக்கியத்துக்கும் சர்வ
தேசிய கம்யூனிச இயக்கத்தின் மார்க்கத்துக்குமான அடிப்படைக்
கோட்பாடுகள்'' என்ற தலைப்பிலான கூட்டுத் தஸ்தாவேஜுவை



விநியோகித்தன. இதன் அடிப்படையில் இந்த இரண்டு கட்சிகளும் இத்தஸ்தாவேஜுவை அடிப்படையில் ஏற்றுக்கொண்ட மார்க்சிய லெனினிய ஸ்தாபனங்களை அழைத்து சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் ஐக்கியத்தை மீண்டும் அமைப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்வதற்காக சர்வதேசிய மாநாடு ஒன்றை நடத்தின. 1980-ன் இலையுதிர் காலத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் 13 மார்க்சிய - லெனினியக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் கலந்து கொண்டன. இயற்கையாகவே மாநாடு இரகசியமாக நடைப்பெற்றது. எமது கட்சியும் அழைக்கப்பட்டு நான் அதில் கட்சியின் பிரதிநிதியாக கலந்து கொண்டேன். ஆண்டின் நடுப்பகுதியில் முதலாவது மாரடைப்பு எனக்கு ஏற்பட்டது. என்னுடைய ஆரோக்கியம் அவ்வளவு நல்லதாக இருக்கவில்லை. ஆனால் மாநாட்டின் முக்கியத்துவம் கருதியும் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் ஐக்கியத்துக்கு எம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தாலும் எனது டாக்டருடன் பேசி பயணம் செய்வதற்கான அனுமதியை நான் பெற்றுக்கொண்டேன். பணமும் ஒரு பிரச்சினையாக இருந்தது. நாங்கள் ஒரு பணம் நிறைந்த கட்சியல்ல. நான் பெரிதும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளபோதிலும் கடந்த 30 ஆண்டுகளில் சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் ஒரு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட போதிலும் இதுதான் நான் முதற் தடவை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு கட்சியோ சீனக் கம்யூனிஸ்டு கட்சியோ அல்பேனியக் கம்யூனிஸ்டு கட்சியோ அல்லது உலகத் தொழிற்சங்க சம்மேளனமோ ரிக்கெட்டுக்குக் காசு கொடாமல் செய்த பயணமாகும். ஆனால் நான் இந்தக் கஷ்டங்களைச் சமாளித்தேன். அறிவுரீதியில் இந்த மாநாடு மிகுதியும் பயனுள்ளதாக அமைந்தது. சர்வதேசிய கம்யூனிச ஐக்கியத்தை மீண்டும் அமைக்க வேண்டும் என்ற அவா அங்கிருந்தது. சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் ஐக்கியத்தை மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனைச் சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்வதன் அடிப்படையில்தான் கட்டி அமைக்கவேண்டும், கட்டியமைக்கப்பட முடியும் என்று எமது கட்சி மிகவும் உறுதியாகப் போராடியது. அல்பேனியர்கள் கிளப்பிவிட்ட மாவோ எதிர்ப்பு அலையின் பாதிப்பினால் மேற்கிலுள்ள மார்க்சிய லெனினியவாதிகளின் மத்தியில் குழப்பம் ஏற்பட்டிருந்தது. ஆனால் மாநாடு இந்தப் பிரச்சினையில் கூட இறுதியில் ஐக்கியத்தைக் கண்டது. பூரண கலந்துரையாடலுக்குப் பின்னர் மாநாடு,''தத்துவரீதியிலும் நடைமுறைரீதியிலும் மாவோஅளித்த தலைமை பல முன்னணிகளில் மார்க்சிய - லெனினியத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அளவு ரீதியான குணரீதியான வளர்ச்சியையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. கடந்த சில பத்தாண்டுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வரலாற்று ரீதியான அனுபவத்தின் தத்துவார்த்த செழிப்பாகவும் அமைகின்றது'' என்று கருதியது. ''மாவோவின் பங்களிப்புகளைப் பாதுகாத்து வளர்த்தெடுக்காமல் திரிபுவாதத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பொதுவில் பிற்போக்கையும் தோற்கடிப்பது சாத்தியமில்லை'' என்று அது மேலும் பிரகடனம் செய்தது.

இரண்டு வாரங்கள் நடைபெற்ற இந்த மாநாடு பல பிரச்சினைகளில் ஒருமித்த கருத்துக்கு வந்தது. இவற்றை உள்ளடக்கி 13 மார்க்சிய—லெனினிய ஸ்தாபனங்களின் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. ''சகல நாடுகளினதும் மார்க்சிய-லெனினியவாதிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களுக்கும்'' என்ற தலைப்பில் அது வெளிவந்தது. இந்தக் கூட்டறிக்கை வங்காளம், சீனம், சிரியோல், ஒல்லாந்து, ஆங்கிலம், பார்சி, பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி, மலையாளம், நேபாளம், சிங்களம், ஸ்பானிஷ், தமிழ், துருக்கி, ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டது. எந்த இந்திய மார்க்சிய—லெனினியக் கட்சியோ, குழுவோ இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. இது பெரிய குறைபாடு ஆகும். ஆனால் மாநாடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மத்திய புனரமைப்பு கமிட்டியுடன் தொடர்பு கொண்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள முடியாதபோதும் இந்தக் கட்சியின் பிரதிநிதி ஒருவர் இம்மாநாட்டின் முடிவுகளை அமுல்படுத்த அமைக்கப்பட்ட இணைப்புக் கமிட்டியில் சேர்ந்து கொண்டார். ''வெல்வதற்கோர் உலகம்'' என்ற சர்வதேசிய சஞ்சிகையைப் பிரசுரிப்பது இந்த முடிவுகளில் ஒன்றாகும். 1984 ஜனவரியில் இரண்டாவது சர்வதேசிய மாநாடு நடைபெற்றவரை இச் சஞ்சிகையின் இரண்டு இதழ்கள் தான் வெளிவந்தன.

1984-ல் நடைபெற்ற இந்த இரண்டாவது மாநாடு பற்றிக் குறிப்பிட்டுவிட்டு சிறீலங்காவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதினேன். முதலாவது சர்வதேசிய மாநாடு நடைபெற்றபோதும் முன்னேற்றம் மந்தமாகவும் வளைவு சுழிவாகவும் இருந்தது. ஆரம்ப உற்சாகம் மங்கிய பின் சில அங்க ஸ்தாபனங்கள் பின்வாங்கிக்கொண்டன. புதிய சக்திகள் சேர்ந்து கொண்டன. சிலி புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி உட்கட்சி ஸ்தாபனப் பிரச்சினைகளால் பின்வாங்கிக் கொண்டது. இது பெரியதோர் இழப்பு.



சிலித் திரிபுவாதிகளின் சரசமாடும் கொள்கையினால் சிலி நாட்டில் பாசிஸம் வெற்றி பெற்றதை வீரதீரமாக அம்பலப்படுத்தியவர்கள் இந்தத் தோழர்கள். புதிதாகச் சேர்ந்து கொண்ட சக்திகளில் துருக்கி கம்யூனிஸ்ட் கட்சி அடங்கும். அதன் தலைமை முன்னர் அல்பேனியாவுக்குச் சார்பான மார்க்கம் ஒன்றை கடைப்பிடித்தது. ஆனால் அவர்கள் கட்சி மாநாடொன்றில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் தவறற்ற தன்மை மீண்டும் கட்சியில் உறுதிப்படுத்தப்பட்டது.

புதிய இணைப்புக் கமிட்டி மார்க்சிய-லெனினியவாதிகளின் இரண்டாவது சர்வதேசிய மாநாட்டுக்கான தயாரிப்புகளைச் செய்தது. இந்த மாநாடு 1984 ஜனவரியில் நடைபெற்றது. மீண்டும் இரகசியமாகவே அது நடைபெற்றது. எமது கட்சியும் அழைக்கப்பட்டு நானே மீண்டும் பிரதிநிதியாகச் சென்றேன். முதலாவது மாநாட்டுக்குப் பின்னர் 1981-ல் நான் மீண்டும் மாரடைப்புக்கு ஆளாகினேன். 1981 யூலையில் வியென்றாவில் நான் கொறனரி பை பாஸ் சேர்ஜரி என்று அழைக்கப்படும் இரத்த நரம்பு ரண சிகிச்சை செய்து கொண்டேன். பின்னர் எனது ஆரோக்கியம் சீரடைந்தபோதும் இருதயத்தின் நிலைமை நிச்சயமற்றதாக இருந்தது. இருப்பினும் இந்த மாநாட்டில் நான் கலந்துகொள்வதில் உறுதியாக இருந்தேன்.

இந்த இரண்டாவது மாநாட்டுக்கான ஸ்தாபனத் தயாரிப்பும் சித்தாந்தத் தயாரிப்பும் முந்தியதிலும் பார்க்கச் சிறப்பாக இருந்தன. 18 கட்சிகளும் ஸ்தாபனங்களும் அதில் கலந்து கொண்டன. பெரு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளின் பிரசன்னத்தினால் இந்த மாநாடு பெரிதும் கவனத்தை இழுத்தது. அப்பொழுது பெரு கம்யூனிஸ்ட் கட்சி உலகின் முக்கியமானதோர் புரட்சிக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்தது. துருக்கி கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) ஈரான் கம்யூனிஸ்டுகளின் யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதி கோஷ்டிகள் என்னை பெரிதும் கவர்ந்தன. துருக்கியும் ஈரானும் பிரதானமாக முஸ்லீம் நாடுகள். ஆனால் மிகவும் வளர்ச்சியடைந்த மார்க்சிய-லெனினிய இயக்கங்கள் அங்கிருக்கின்றன. துருக்கிக் கட்சி ஆரம்பத்திலிருந்தே சட்டவிரோதக் கட்சி. இக் கட்சியின் தலைவர்களில் ஒரு பகுதியினர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். அங்கு வாழும் துருக்கிக் குடியேற்றத் தொழிலாளர்கள் மத்தியில் அவர்களுக்குப் பெரும் செல்வாக்கு நிலவுகின்றது. மேற்கு ஜெர்மனியில் மாத்திரம் துருக்கித் தொழிலாளர்களின் தொகை 10 லட்சத்துக்கு மேலானது, வியப்பை ஏற்படுத்தும் முறையில் துருக்கிப்பிரதிநிதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோஷ்டியில் பல பெண்கள் இருந்தார்கள். ஈரான் பிரதிநிதிக்
கோஷ்டியில் தலைவரும் ஒரு பெண்ணே ஆவார். கொமெய்னியின்
ஆட்சியில் ஈரான் கட்சி தலைமறைவாக வேண்டியேற்பட்டது.
ஆனால் நாட்டில் பலமான தளங்கள் அதற்குண்டு. பெரும்
பாலான பிரதிநிதிகளின் சராசரி வயது 30-40 ஆக இருந்தது.
அமெரிக்கர்கள், துருக்கியர்கள், ஈரானியர்கள், இந்தியர்கள்,
தென் அமெரிக்கர்கள் அனைவருமே இளைஞர்களாக இருந்
தார்கள். 64 வயதுடைய நான் அவர்கள் மத்தியில் மிகுதியும்
வயதுடையவனாக உணர்ந்தேன். என்னிலும் வயது கூடியவராக
நியூசிலாந்தைச் சேர்ந்த ஒருவரே இருக்கிறார். என்னிலும் பத்து
வயது கூட. நேபாளப் பிரதிநிதி என்னிலும் 15 வயது
இளையவர். மற்றவர்கள் அனைவரும் இளைஞர்கள் இது நல்லது.
ஜீவத்துடிப்பும் உற்சாகமும் முன்னேறும் திட சித்தமும் உடைய
வர்கள் அவர்கள். ஆனால் அவர்களுக்கு அனுபவம் குறைவு.
பெரும்பாலான பிரதிநிதிகளுக்கு இரண்டாம் உலக யுத்தம்
பற்றியோ மூன்றாவது கம்யூனிச அகிலத்தின் நடவடிக்கைகளைப்
பற்றியோ நேரடி அனுபவம் கிடையாது. இவர்களில் பலர்
ட்ரொஸ்கிய செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள். அதனைச் சரியாக
மதிப்பீடு செய்ய அவர்களால் முடியவில்லை. இந்திய துருக்கி
நேபாள பிரதிநிதிகளுடன் சேர்ந்து நான் அவர்களுடன் விறுவிறுப்
பான சித்தாந்தக் கலந்துரையாடல்களை நடத்தினேன். மூன்றாவது
கம்யூனிச அகிலத்தின் வெற்றிகளையும் தோல்விகளையும் சரியாக
மதிப்பீடு செய்யும்படியும் குறிப்பாக ஸ்டாலினின் பாத்திரத்தைப்
பற்றி யதார்த்தப் பூர்வமான, இயங்கியல் ரீதியான அணுகுமுறை
ஒன்றை எடுக்கும்படியும் நான் மாநாட்டுக்கு அறிவுறுத்தினேன்.
கடந்த காலத்தைக் கணிப்பிட நிகழ்கால நிறைகளைப் பயன்
படுத்தக் கூடாது என நான் வற்புறுத்தினேன்.

பூரண கலந்துரையாடல்களுக்குப் பின்னர் ஏகோபித்த கருத்து
ஏற்பட்டது. பிரசன்னமாய் இருந்த கட்சிகளும் ஸ்தாபனங்களும்
புரட்சிகர சர்வதேசிய இயக்கமாகத் தம்மை அமைத்துக் கொள்ள
முடிவெடுத்தன. புரட்சிகர சர்வதேச இயக்கத்தின் (RIM)
பிரகடனம் ஒன்று நிறைவேற்றப்பட்டு அது 22 மொழிகளில்
வெளியிடப்பட்டது. சியாங் சிங். சாங் சியாவ் மற்றும் சீனப்
பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகளுக்கான செய்தி ஒன்றையும்
உலகம் பூராவிலும் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் புரட்சிப்
போராளிகளுக்கான செய்தி ஒன்றையும் அது அங்கீகரித்தது.
பெரு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பாலஸ்தீன மக்களின் நீதியான
போராட்டத்துக்கும் ஆதரவளிக்கும் செய்திகளும் அங்கீகரிக்கப்



பட்டன. இறுதியில் மாநாடு புதிய கம்யூனிச அகிலம் ஒன்றை
அமைப்பதற்கு ஊக்கத்துடன் வேலை செய்வதற்கென கமிட்டி
ஒன்றைத் தேர்ந்தெடுத்தது. ''வெல்வதற்கோர் உலகம்'' என்ற
சஞ்சிகையை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டின் முடிவில் அதன் முடிவுகளையும் புரட்சிகர
சர்வதேசிய இயக்கத்தின் ஸ்தாபகத்தையும் அறிவிக்க லண்டனில்
பத்திரிகையாளர் மாநாடொன்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.
இந்த மாநாட்டில் சட்டரீதியாகக் கலந்துகொண்ட சில பிரதிநிதி
களில் ஒருவன் என்ற முறையில் இந்தப் பத்திரிகையாளர்
மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு எனக்குத் தரப்
பட்டது. எதிர்பாரா தாமதத்துக்குப் பின்னர் 1984ஆம் ஆண்டு
மார்ச் 12-ம் திகதி லண்டன் சர்வதேசிய பத்திரிகைக் கேந்திரத்தில்
அது வெற்றிகரமாக நடைபெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 17. 1983 யூலைக்குப் பின்

1983 யூலை—ஆகஸ்டில் ஏற்பட்ட சோகமான நிகழ்ச்சிகளைப் பற்றி முந்தியதோர் அத்தியாயத்தில் நான் சுருக்கமாக விவரித்துள்ளேன். சிறீலங்காவின் நவீன வரலாற்றில் பெரும் பிளவை ஏற்படுத்திய சம்பவமாக இது அமைந்தது. இதற்குப் பின்னர் முன்னரைப் போல் எந்த விஷயமும் இருக்க மாட்டாது. தமிழரைப் பொறுத்தவரையில் அது அவர்களின் விரக்தியையும் வெறுப்பையும் அதிகரித்திருக்கிறது. ஒற்றையாட்சி சிறீலங்காவில் சிங்களவர்களுடன் ஒன்றாக வாழ முடியாது என்ற உணர்வைப் பெருக்கியிருக்கின்றது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் நாட்டை விட்டு அகதிகளாகவும் வேலை வாய்ப்புகள் நாடியும் வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் இப்பொழுது பிரதான மேற்கத்தைய நாடுகளின் தலைநகரங்களிலும் குறிப்பாக இந்தியாவிலும் இருக்கின்றனர். போகக் கூடியவர்கள் அனைவரும் போய் விட்டார்கள் அல்லது போய்க் கொண்டிருக்கிறார்கள். அதே வேளையில் தமிழரின் பல பகுதியினர் யூலைச் சம்பவங்களாலும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களாலும் தீவிர உணர்வுடையவர்கள் ஆகியுள்ளார்கள். அரசாங்கத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பெரும் ஆத்திரமும் கொரில்லாப் போராட்டத்தில் தீவிரவாதிகளுக்கு அவர்கள் அளிக்கும் ஆதரவும்



இதனைக் காட்டுகின்றன. தமிழ் மக்கள், குறிப்பாக வடக்கில் வாழும் தமிழ் மக்கள் தமது வரலாற்றிலேயே மிகவும் கஷ்டமான காலத்துக்கூடாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். வடக்கில் சகஜவாழ்வு நம்பமுடியாதளவிற்குச் சீர்குலைக்கப்பட்டுள்ளது. தனியார் போக்குவரத்து அவர்களுக்குக் கிடையாது. கண்காணிப்பு வலயம் என்று அரசாங்கம் அழைக்கும் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டுள்ளது. அவர்களின் பல வீடுகள் ராணுவ நடவடிக்கைகளுக்காகத் தகர்த்தெறியப்பட்டுள்ளன. வடக்கின் பெரும்பகுதி பந்தோபஸ்து வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. மீனவர்கள் கடலுக்குச் செல்வது தடுக்கப்பட்ட படியால் மீன்பிடித் தொழில் பூரணமாக ஸ்தம்பிதமாகியுள்ளது. சமீபத்தில் பெருந்தொகையான மக்கள் தென் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றதற்கு இவையே பிரதான காரணங்களாகும்.

சிங்களவர்களைப் பொறுத்தவரையில் யூலை நிகழ்ச்சிகளால் பெருந்தேசிய இனவெறி அலை ஒன்று எழுந்திருக்கிறது. சகிப்புத்தன்மை என்பது அறவே அற்றுப் போனது. யூலை சம்பவங்கள் நிகழ்ந்ததற்குச் சற்றுப் பின்னர் அவர்களில் ஒரு சில பகுதியினர் மத்தியில் குற்ற உணர்வு ஏற்பட்டிருந்தது. சுய விமர்சன முயற்சி கூட ஏற்பட்டது. ஆனால். இந்தக் காலகட்டம் விரைவில் மறைந்தது. பிற்போக்கான மதகுருமாரினதும் கூடுதலான வகுப்புவாத உணர்வுடைய அரசியல்வாதிகளினதும் தூண்டுதலில் தமிழருக்கு 1981-ம் ஆண்டில் மாவட்ட சபைக்கு மேலாக எதனையும் வழங்கக்கூடாது என்ற அபிப்பிராயம் மேலோங்கியது. சிறீலங்கா அரசாங்கம் சர்வதேசியரீதியில் முற்றிலும் தனிமைப்பட்டதை ஒட்டி பெரும் ஏமாற்றமும் கவலையும் ஏற்பட்டது. ஆனால் இந்தத் தனிமைப்பாட்டுக்கான காரணங்களைச் சிரத்தையுடன் ஆராயும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் பிரதமர் பிரேமதாசாவின் தலைமையில் வகுப்புவாதப் பிரகிருதிகள் எந்த நன்மையும் பயக்காத இந்திய எதிர்ப்பு அலை ஒன்றைத் தோற்றுவித்தனர். வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இந்த விஷயத்தில் வருந்தத்தக்க பாத்திரம் ஒன்றை வகித்தன. அவை சிங்கள வகுப்புவாதக் கொள்கைக்கு இசைந்து போயின. எந்த ஆங்கிலப் பத்திரிக்கையும் சிங்களப் பத்திரிக்கையும் தொலை காட்சி நிலையம் வானொலி நிலையம் ஆகியவையும் தமிழர் பிரச்சினையை எடுத்துக்கூற இடந்தரவில்லை. அரசினால் உருவாக்கப்பட்டு வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் ஊட்டி வளர்க்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட தமிழருக்கு எதிரான ஜன்னி பிதற்றல் நம்பமுடியாத முறையில் நடைபெற்றது. தேசிய பாதுகாப்பு நிதி என்பதற்குப் பணம் வழங்கும்படி மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். இந்த நிதி உண்மையில் ஆயுதங்களை—வெடிமருந்துகளை வாங்கி தமிழர்களைக் கொல்வதற்கு பணம் திரட்டும் நிதியே தவிர வேறெதுவும் அல்ல.

இந்தியாவின் அறிவுறுத்தலின் பேரில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1984-ல் சர்வகட்சி மாநாடு ஒன்றை ஜனாதிபதி நடத்தினார். ஜனாதிபதி புத்த குருமாரின் மகா சங்கவையும் இந்த மாநாட்டுக்கு அழைத்திருந்தபடியால் ஆரம்பத்திலேயே இந்த மாநாடு தோல்வியைத் தழுவும் மாநாடாக அமைந்தது. புத்த குருமாருக்கான அழைப்பு மாநாட்டை இழுத்தடிப்பதற்கான அழைப்பேயாகும். சிங்களவர் மத்தியிலுள்ள மிகவும் வகுப்புவாதப் பிரிவினர் மத்தியில் புத்த மத குருமாரும் அடங்குவர். அவர்கள் தமிழருக்கு எந்தச் சலுகைகளையும் அளிப்பதை எதிர்ப்பார்கள் என்பதும் நன்கு அறிந்ததே. இதற்கு முன்னர் ஜனாதிபதி தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றைப் பற்றி இந்தியத் தலைவர்களுடன் உடன்பாட்டுக்கு வந்திருந்தார். இணைப்பு - சி என்று இது அழைக்கப்பட்டது. ஆனால் அவருடைய வகுப்புவாத, பிற்போக்கான சகபாடிகளின் அமுக்கம் காரணமாக ஜனாதிபதி இணைப்பு'சி'யை மாநாட்டில் சமர்ப்பிக்கவில்லை. பிறகு ஓராண்டு கால வீண் பேச்சு வார்த்தைகளின் பின் ஜனாதிபதி இந்த மாநாட்டை ஒத்திப்போட்டு இந்த மாநாட்டின் பேச்சு வார்த்தைகளின் விளைவாக ஏற்பட்டவை என்று கூறி சில பிரேரணைகளை அறிவித்தார். ஆனால் இந்தப் பிரேரணைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி மாத்திரமல்ல மகா சங்கவும் அவருடைய அரசாங்கத்தின் சில பகுதியினரும் கூட எதிர்த்து நிராகரித்தனர். இந்தப் பிரேரணைகளைப் பகிரங்கமாக விமர்சித்ததற்காக அமைச்சர் சிறில் மத்யூ அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார்.

அப்பொழுது ஜனாதிபதி இப் பிரேரணைகளை வாபஸ் பெறுவதாக அறிவித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி தான் இதற்குப் பொறுப்பு என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார். ஆனால் மகா சங்கவின் எதிர்ப்பு சிறில் மத்யூ போன்ற வகுப்புவாதிகளின் எதிர்ப்புதான் ஜனாதிபதி பிரேரணைகளை வாபஸ் பெறச்செய்தது என்பதை அனைவரும் அறிவர். வாபஸ் பெறப்பட்ட இந்தப் பிரேரணைகளை ஜனாதிபதி அறிவித்தபோது சிறில் மத்யூ பகிரங்கமாக அவற்றைத் தாக்கினார். அரசாங்கத்துக்கும் சிங்கள பௌத்தர்கள் மத்தியிலும் வெறிபிடித்த வகுப்புவாதப் பிரகிருதிகளுக்குமிடையில் மோதல் ஒன்று ஏற்படவிருந்தது போல் தோன்றியது. மத்யூவிற்கு மகாசங்கவின் ஆதரவு இருந்தது என அறியப்பட்டது. பிரசித்திபெற்ற கலனி விஹாரயில் ஐயாயிரம் புத்தமத குருமார் கூடியிருந்தனர் என்ற வதந்திகூட அடிபட்டது. ஆனால் ஜனாதிபதி சிறில் மத்யூவை அமைச்சரவையிலிருந்து நீக்கி நிலைமையை சமாளித்தார். ஆனால் அதே வேளையில் அரசாங்கம் சிறில் மத்யூவுடன் தொடர்புபடுத்தப்பட்ட இனவெறி கொள்கையை முழுதாகக் கையேற்றுக்கொண்டது பின்னர் மத்யூ இன்றி மத்யூவாதம் இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி பிரிவினையையும் வன்முறையையும் கைவிட்டாலன்றித் தான் அதனுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தத் தயாராயில்லை என்று ஜனாதிபதி இப்பொழுது கூறத் தொடங்கினார். அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற அரசாங்கக் கொள்கையையும் அவர் அறிவித்தார். இது குதிரைக்கு முன்னால் ரதத்தை நிறுத்துவது போன்றது. தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணத் தவறியதால் தான் ''பயங்கரவாதம்'' தோன்றியது என்பதை ஜனாதிபதி மறந்துவிட்டார். விரைவில் அரசியல் தீர்வு ஒன்றை காண்பதன்மூலம் தான் கூறப்படும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பதையும் அவர் மறந்துவிட்டார்.



தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், ஒரு சிலரைத் தவிர, பேச்சுவார்த்தைகளினால் மேற்கொண்டு எதனையும் சாதிக்க முடியாது என்று தெரிவித்தார்கள். எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் கொரில்லாப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தீவிரவாதக் குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். தமது நடவடிக்கைகளும் தீவிரவாதக் குழுக்களின் போராட்டமும் ஒன்றுக்கொன்று இசைவானவையே தவிர முரணானவை அல்ல என்ற முடிவுக்கு வந்தவர்களாக அவர்கள் தோன்றினார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் அடக்குமுறை மிகவும் மோசமானதாக இருந்தது. யுத்த காலப் பிரிட்டனில் வழக்கில் இருந்தவற்றிலும் பார்க்கக் கடுமையான சட்டங்கள் அமுலுக்கு வந்தன. வட கடலோரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கண்காணிப்பு வலயத்தினால் மீன்பிடித் தொழில் ஸ்தம்பிதமாகியது. யாழ்ப்பாண தீபகற்பத்துக்கு வெளியேயுள்ள ஆறு பிரதான தீவுகள், மன்னார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடக்கம் முல்லைத்தீவு வரையான நூறு மீட்டர் நிலப்பரப்பு, புண்ணாலை முதல் பருத்தித் துறை வரை நெடுஞ்சாலை ஆகிய வற்றை உள்ளடக்கும் ''தடை செய்யப்பட்ட பிராந்தியம்'' ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. எவரும் எழுத்துமூல அனுமதியின்றி இந்தப் பிராந்தியத்துக்குள் புகவோ அல்லது அங்கு தங்கியிருக்கவோ முடியாது. அத்துடன் வடமாகாணத்தின் பெரும்பகுதி ''பாதுகாப்புப் பிராந்தியமாக'' பிரகடனம் செய்யப்பட்டது. அனுமதியின்றி எவரும் அங்கிருந்து வெளியேறவோ அங்கு உட்புகவோ முடியாது. தனியார் போக்குவரத்து அனுமதியில்லாமல் நடை பெற முடியாது. சைக்கிள்கள் கூட ஓட்டமுடியாது.

ஆயிரக்கணக்கான மீனவர்கள் வேலை இழந்தனர். ராணுவம் தன்னிஷ்டப்படி தடை செய்யப்பட்ட பிராந்தியத்திலுள்ள வீடுகளை அழித்தொழித்தது. மக்கள் மென்மேலும் அதிகமான அடக்குமுறையைச் சந்தித்தனர். இவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் படகுகளில் பாக்கு நீரிணையைக் கடந்து தமிழ்நாட்டுக்குப் பயணமானார்கள். குறுகிய இரண்டு மாத காலத்துக்குள் அங்கு அகதிகளின் தொகை ஒரு லட்சத்து இருபதினாயிரத்தைத் தாண்டியது. இது தமிழ்நாடு மாநில அரசாங்கத்துக்கும் இந்திய மத்திய அரசாங்கத்துக்கும் புதிய பிரச்சினைகளை உருவாக்கியது. அகதிகளுக்கு உறைவிடமும் உணவும் வழங்க இந்தியா உடன் பட்டது. ஆனால் இந்த அகதிகள் திரும்புவதற்கான தக்க சூழ்நிலைகளை விரைவில் உருவாக்குமாறு சிறீலங்கா அரசாங் கத்தை உறுதியாக வேண்டிக் கொண்டது.

1984-ன் இறுதியில் நடைபெற்ற இந்தியா பொதுத் தேர்தல் களுக்குப் பின்னர் தமிழ்நாடு மாநில அரசாங்கத்தின் அமுக்கத்தி லிருந்து மத்திய அரசாங்கம் விடுதலையாகும் என்று சிறீலங்கா அரசாங்கம் ஆசைக் கனவு கண்டது. இந்திரா காங்கிரஸ், அண்ணா தி.மு.க., ஆகியவற்றின் கூட்டணியிடம் தி.மு.க. தோற்றதை அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள சிறீலங்கா தமிழருக்கு ஆதரவான சக்திகளுக்குக் கிடைத்த தோல்வி எனவும் அவர்கள் தவறாக வியாக்யானம் செய்தார்கள். ஒருபுறத்தில் சிறீலங்கா தமிழரின் பிரச்சினை இத் தேர்தலின் பிரச்சினை அல்ல. மறு புறத்தில் ஆசனங்களை இழந்தாலும் தி.மு.க. அதிகமான வாக்குகளைப் பெற்றது. பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சிறீலங்கா தமிழர் பிரச்சினையை ஒட்டி இந்திய மத்திய அரசாங்கத்தின் மனோபாவத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.



1987-ன் ஆரம்பத்தில் வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் பெரிதும் அதிகரித்தன. வடக்கில் என்ன நடைபெறுகின்றது என்பதைத் தெற்கிற்கு அறிவிக்கும் ஒரே வழியாக தமிழ்த் தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளை தெற்கிற்கும் பரப்பி னார்கள். இதனால் பல குற்றமறியாத சிங்களவர்கள் கொல்லப் பட்டனர். 1985 ஏப்ரல் மாதத்தில் அனுராதபுரத்தில் இவ்வாறு பல சிங்களவர்கள் கொல்லப்பட்டனர். உள்நாட்டு யுத்தம் தெற்கிற்கும் பரவலாம். சிங்களவர்களின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்பதைச் சடுதியாக அரசாங்கமும் சிங்கள மக்களும் உணர்ந்து கொண்டார்கள். மனோபாவங்கள் மாறின. பிரதமர் தனது இந்திய எதிர்ப்புக் கூச்சலை நிறுத்தினார் மகா சங்க கூட இந்திய மத்திய அரசாங்கத்துடனும் தமிழ்நாடு மாநில அரசாங்கத் துடனும் மாத்திரமல்ல, சென்னையில் வசிக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று கோரியது. இந்தியாவுக்கு வரும்படியான ராஜீவ்காந்தியின் அழைப்பை மாதக் கணக்காக உதாசினம் செய்துவந்த ஜனாதிபதியும் இப்பொழுது முழந்தாளிட்டு புதுடில்லி சென்றார்.

இதன்விளைவே இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்த திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆகும். முதல் தடவையாக சிறீலங்கா அரசாங்கம் பிரதிநிதிக் கோஷ்டியை மட்டுமல்ல, ஐந்து தீவிரவாதக் குழுக்களின் பிரதிநிதிக் கோஷ்டிகளையும் எதிர் நோக்கியது. இதனால் தீவிரவாதிகளுக்கு இது காலவரை இல்லாத சர்வதேசிய அங்கீகாரம் சர்வகட்சி மாநாட்டின்போது தமிழர் நிராகரித்திருந்த அதே திட்டத்தை முன்வைத்ததன் மூலம் இம் மாநாட்டைக் கேலிக்கிடமாக்கியது.

மாநாடு தோல்வியுற்ற பின்னர் இரண்டு தரப்பினரையும் பேசவைக்க இந்திய தரப்பு பல முயற்சிகளை எடுத்தது. ஆனால் தோல்வி கண்டது. சிறீலங்காவில் நெருக்கடியில் இந்தியாவின் பாத்திரத்தைத் தெளிவாக புரிந்துகொள்வது அவசியம். இந்தியா ஒரு சோஷலிச நாடல்ல; இந்திய அரசாங்கம் ஒரு புரட்சிகர மான அரசாங்கமல்ல, பெரும் பூர்சுவா வர்க்கம் அதனை ஆளுகின்றது. தனது சொந்த தேசிய சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்கூட இந்தியா முற்றிலும் வெற்றி காணவில்லை. இந்தியாவுக்கு எப்பொழுதும் விஸ்தரிப்புவாத நோக்கங்கள் உண்டு. இந்தியாவின் ஆளும் வர்க்கம் பிரிட்டிஷ் ராஜ்ய இடத்தை எடுத்து தென் ஆசியாவில் ஆதிக்க சக்தியாக விளங்க எப்பொழுதும் கனவு கண்டு வருகின்றது. நேபாளம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூட்டான், சிக்கிம் முதலிய சிறிய அண்டைநாடுகளை நடத்தியது போல் சிறீலங்காவையும் அதன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர அது எப்பொழுதும் முயன்று வருகின்றது.

தமிழ்நாட்டில் ஐந்து கோடியே முப்பது லட்சம் தமிழர்கள் வாழ்கின்ற காரணத்தால் சிறீலங்காத் தமிழர்களின் அபிலாசைகளுக்கு அனுதாபங்காட்ட அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள போதிலும் இந்திய அரசாங்கத்துக்குப் பின்னாலுள்ள பிற்போக்கு சக்திகள் சிறீலங்கா அரசாங்கத்துக்கு உதவி செய்ய முன்வந்து அதனைத் தமக்குக் கட்டுப்பாடுடையதாக்கி தமது செல்வாக்கு பிராந்தியத்துக்குள் சேர்த்துக் கொள்ள என்றுமே பின்நின்றதில்லை.

திம்புவில் சிறீலங்கா அரசாங்கம் அர்த்தமுள்ள பிரேரணைகளை முன்வைத்திருந்தால் இந்திய அரசாங்கம் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராகச் செயல்படத் தயாராக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. திம்புப் பேச்சு வார்த்தைகள் முடிந்ததும் முடியாததுமாக தீவிரவாதக் குழுக்களின் மூன்று தலைவர்களை இந்தியா வெளியேற்றியது இதைக் காட்டியது. ஆனால் இந்தியா தமிழ்நாட்டின் எதிரொலிப்பைக் கருத்தில் கொள்ளாமல் செயற்பட்டது. தீவிரவாதத் தலைவர்கள் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து தமிழ்நாடு முழுவதுமே கொந்தளித்து எழுந்தது. ஒரு வாரத்துக்குள் தனது முடிவை மாற்ற இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டது. தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது முழுத் தமிழ் நாட்டையுமே பகைக்க நேரிடும் என்ற படிப்பினையை ராஜீவ் பெற்றுக் கொண்டார். தமிழ் நாட்டில் ஐந்து கோடியே முப்பது லட்சம் தமிழர்கள் வாழ்வதும் ஒரு இனத்தவர் என்ற அடிப்படையில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு அவர்கள் ஆதரவளிப்பதும் தமிழ்த் தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளுக்கு ஒரு தளமாக தமிழ்நாட்டைப் பாவிக்க முடியும் என்பதும் தமிழ்த் தீவிரவாதிளுக்குப் பெரிதும் சாதகமான விஷயம் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்த பேச்சு வார்த்தை முயற்சி 1986-ல் இடம்பெற்றது. சிறீலங்கா அரசாங்கம் பேச்சு வார்த்தைகளுக்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைக் கொழும்புக்கு அழைத்தது. தீவிரவாதிகள் இதில் கலந்து கொள்ளவில்லை. கொரில்லாப் போராட்டம் மென்மேலும் வெற்றி பெற்றதனால்தான் சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களுக்கு கூடுதலான சலுகைகளை வழங்க முன்வந்தது என்பதில் சந்தேகமில்லை. தமிழர்களுக்கு மாவட்ட



அபிவிருத்தி சபைகளுக்கு மேலாக எதனையும் வழங்க முடியாது என்று சத்தியம் செய்தார்கள். இப்பொழுது மாகாண சபைகளை அதிகார பரவலாக்க அம்சமாகப் பிரேரித்து செயல்முறை விவரங்களை விவாதிக்க ஆரம்பித்தனர். ஆனாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்களின் மொழி வழிப் பிரதேசம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை அவர்கள் இன்னும் முழுதாக நிராகரித்தார்கள்.

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டதா அல்லது எவ்வளவுக்கு உடன்பாடு ஏற்பட்டது என்பதை எவரும் அறிய மாட்டார். ஆனால் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் அனைத்தும் சிறீலங்கா அரசாங்கத்தின் பிரேரணைகளை அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை எதற்கும் அடிப்படையை வழங்காத பிரேரணைகள் என்று சரியாகவே நிராகரித்துள்ளன.

1986 யூன் மாதத்தில் முன்வைக்கப்பட்ட ஜனாதிபதியின் பிரேரணைகளை விவரமாக ஆராயாமல் ஒன்றைக் குறிப்பிடுவது அவசியம். இந்தப் பிரேரணைகளின் அடிப்படைக் குறைபாடு என்னவென்றால் தீர்ப்பதாகக் கருதும் பிரச்சினைகளுக்கு அவை முகங்கொடுக்கவில்லை என்பதாகும். எமக்கு முன்னாலுள்ள பிரச்சினை தமிழ் பேசும் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினை. ஆனால் ஜனாதிபதியின் பிரேரணைகளில் ‘தமிழ்’ என்ற வார்த்தையே காணப்படவில்லை. இது தவிர, மாகாணக் கவுன்சில் திட்டம் முழு நாட்டுக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கான திட்டமாக முன்வைக்கப்படுள்ளது. தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக அல்ல. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாகாணக் கவுன்சில்களை வழங்குவதை மூடிமறைப்பதற்காக அனைத்து ஒன்பது மாகாணங்களுக்கும் மாகாணக் கவுன்சில் வழங்கப்படுகின்றது. (இவற்றில் ஏழு மாகாணங்கள் அதிகாரப் பரவலாக்கத்தை ஒருபோதும் கேட்டதில்லை.)

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து தனியொரு தமிழ் பேசும் மொழிவழிப் பிரதேசத்தை அமைக்க வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை நிராகரிப்பதற்கு முன்வைக்கப்படும் காரணம் அது ஜனநாயகமானது அல்ல என்பதாகும். ஆனால் ஜனநாயகத்தின் இந்தப் போலிப் பக்தர்கள் கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 75 சதவீதத்தினர் தமிழ் பேசும் மக்கள் என்பதை மறந்து விடுகின்றனர்.

www.tamilarangam.net



தமிழர் என்போர் மிக நீண்டகாலமாக வடக்கு கிழக்கு, மாகாணங்களில் தொடர்ச்சியான பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஒரு தேசிய இனத்தவர் என்பதையும் ஆகவே அவர்களுக்கு பிரிவினை உரிமை உட்பட சுய நிர்ணய உரிமை உண்டு என்பதையும் ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சிறீலங்கா அரசாங்கத்துக்கு முடியாமல் இருப்பதன் ஒரு அடிப்படைக் காரணமாகும். இந்த உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படாவிட்டால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இந்த உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் முற்போக்கான சிங்கள - தமிழ் மக்கள் தமிழ் மக்களை வருமாறு வேண்டிக் கொள்ளலாம். சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தனியொரு அரசை ஸ்தாபிக்க வேண்டாம் எனவும் கூட்டாட்சி முறையில் அல்லது வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கிய தமிழ் பேசும் மொழிவழிப் பிரதேசத்துக்கு (பொலிஸ், நிலம் ஆகியவற்றின் மீது பூரண அதிகாரம் உட்பட) பூரண பிரதேச சுயாட்சி என்ற வடிவத்தில் அதனைப் பயன்படுத்தும்படியும் சிறீலங்காவின் சகல புரட்சிகர சக்திகளினதும் ஐக்கியத்தின் பெயரில் கேட்டுக் கொள்ளலாம்.

ஆனால் இத்தகைய வளர்ச்சி இன்றைய நவ காலனிச நிலைமையிலோ அல்லது யூ.என்.பி. அல்லது சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலோ ஏற்பட முடியாது. இத்தகைய வளர்ச்சி ஏற்படுவதற்கு சிறீலங்காவிலுள்ள யூ.என்.பி. எதிர்ப்பு புரட்சிகர சக்திகள் பாடுபட்டு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள புரட்சிகர சக்திகளை ஐக்கியப்படுத்தி பிற்போக்கான அடக்குமுறையான யூ.என்.பி. அரசாங்கத்தை தூக்கியெறிந்து அதனிடத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான மக்கள் ஜனநாயக அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பது சிறீலங்காவின் ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாகும். இந்தப் புரட்சியில் மொழி, சாதி,இன பேதமின்றி சிங்களவர் தமிழர் இரு சாரார் மத்தியிலுமுள்ள புரட்சிகர சக்திகள், குறிப்பாகத் தொழிலாளர், விவசாயிகள், தீவிர மனோபாவம் உடைய புத்திஜீவிகள் ஆகியோர் ஒன்றிணைய வேண்டும்.



மக்கள் பேரணி

www.tamilarangam.net

# பின்னுரை

இந்த நூலை எழுதி முடித்ததற்குப் பின் இலங்கையில் சில முக்கியமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இந்த நூலைப் பிரசுரிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் இந்த நிகழ்ச்சிகள் பற்றிக் சுருக்கமான ஆய்வு ஒன்றைச் செய்யும் முகமாக இந்தப் பின்னுரையை எழுதுகின்றேன்.

இந்தக் காலத்தில் நடந்த பிரதான நிகழ்ச்சி இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் எமது நாட்டின் வடக்கு, கிழக்கிற்குள் இந்திய விஸ்தரிப்புவாதப் படைகள் வந்ததும் ஆகும். சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த முட்டாள்தனமாக முயற்சித்ததைத் தொடர்ந்தே இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. பெரும் எண்ணிக்கையான துருப்புகள் வடக்கிற்கு அனுப்பப்பட்டன. யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றவும் பிரபாகரனைப் பிடிக்கவும் முயற்சி எடுக்கப்பட்டது. பெரும் ஆரவாரத்துடன் சிறீலங்கா ராணுவம் அதன் அபகீர்த்தியான 'ஒப்பரேஷன் லிபரேஷனை' நடத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வட கிழக்கு மூலையான வடமராட்சியை விடுதலை செய்ததாகக் கூறியது. ஆனால் பிரபாகரனும் புலிகளும் வலையில் சிக்கவில்லை. கொரில்லாக்கள் வடமராட்சிக்குள் மீண்டும் புகுந்து நெல்லியடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்திருந்த ராணுவ முகாமை தகர்த்தெறிந்து யுத்தத்திலான மிகப் பெரிய சேதங்களை ஏற்படுத்தினார்கள்.

இந்தியா இத்தகைய தருணத்தை எதிர்பார்த்திருந்தது. தமிழரைப் பாதுகாப்பது என்ற பெயரில் இலங்கைக்கு மேல் அதன் மேலாதிக்கத்தை நிறுவும் நீண்டகால ஆசையை நிறைவேற்ற முடியும் என இந்தியா புரிந்து கொண்டது. அது முதலில் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப் போட்டது. பின்னர் உணவுப் பொருள்களுடன் தலைமன்னாருக்கு கப்பல்களை அனுப்பியது. இக்கப்பல்களை இலங்கை அரசாங்கம் திருப்பி அனுப்பியது. ஆனால் குறுகிய காலத்தில் இலங்கை ஜனாதிபதி இந்தியாவிடம் சரண் அடைந்தார். இந்தியனுக்கு எதிராக கூட்டணி ஒன்றை அமைக்கும் கடைசி நேர முயற்சியில் அவர் பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு தூதர்களை அனுப்பினார். ஆனால் இதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. இந்திய மேலாதிக்கத்திற்கு அடிபணிவதை தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

1987 யூலை 29-ல் ராஜீவ் காந்தி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்தார். அவர் தமக்கு அளிக்கப்பட்ட ராணுவ மரியாதையைப் பார்வையிட்டபோது ஒரு கடற்படைப் போராளி தனது துவக்கின் பிற்பக்கத்தால் அவரை அடித்துக் கொல்லமுயற்சித்தார். ஆனால் காந்தி தலை குனிந்து நேராக அடிவாங்காது தப்பித்துக் கொண்டார்.

அடுத்தநாள் இரவு பிரம்மாண்ட ரஷ்ய அன்ரேனோவ் விமானங்களில் ஆயிரமாயிரம் இந்திய விஸ்தரிப்புவாத துருப்புகள் இலங்கையின் வடக்கு—கிழக்கிற்கு வந்து சேர்ந்தனர். இதே விமானங்களில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சிறீலங்கா படைகளை தெற்குக்கு எடுத்துச் சென்றன.

இவ்வாறு கூறப்படும் சுதந்திரத்தின் நாற்பது ஆண்டுகளின் பின்னர் இலங்கை மீண்டும் இன்னொரு பெரு வல்லரசின் மேலாதிக்கத்தின்கீழ் வந்தது. அந்த வல்லரசு விஸ்தரிப்புவாத இந்தியா ஆகும்.

தம்மை இலங்கை சிங்களத் துருப்புகளிடமிருந்து பாதுகாக்க வந்தவர்கள் இந்தியர்கள் என்ற தவறான நம்பிக்கை



யில் தமிழர்கள் இந்திய ராணுவத்திற்கு பூமாலை போட்டு அவர்களைக் கட்டித் தழுவி தேநீர் வழங்கினார்கள். ஆனால் இந்தத் தேனிலவு இரண்டு மாதத்திற்கு மேல் நீடித்திருக்கவில்லை. ஒக்டோபர் 10ஆம் திகதி இந்தியத் துருப்புகள் தமிழர் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. சிறீலங்காத் துருப்புகள் செய்ததிலும் பார்க்க மோசமான அட்டூழியங்களை இந்தியத் துருப்புகள் செய்தார்கள். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்கள். கட்டடங்கள் சேதமாக்கப்பட்டன. அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். விரைவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். எண்ணூறுக்கும் மேலான இந்தியத் துருப்புகள் கொல்லப்பட்டனர். எந்த இந்திய யுத்தத்திலும் இறந்ததிலும் பார்க்க இந்த எண்ணிக்கை கூடுதலானது.

ஆனால் ஆரம்பத்திலிருந்தே தெற்கில் எதிரொலிப்பு வித்தியாசமாக இருந்தது. சிங்களவர் எப்போதும் இந்திய எதிர்ப்புடையவராக இருந்தனர். ஏனென்றால் அநுராதபுர, பொலநறுவ நாகரிகங்களின் பழம்புகழை நாசமாக்கிய புராதன தென்னிந்திய படையெடுப்புகளின் நினைவு அவர்களின் மனதில் எப்போதும் இருக்கிறது.

பழைய இடதுசாரிக் கட்சிகள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்க்கத் தவறியதால் வகுப்புவாத, அரை பாசிச, ஜே.வி.பி. சிங்கள இனத்தின் ரட்சகராக தோன்றி இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்த்தது. அரசாங்க எதிர்ப்பு, தமிழர் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு உணர்வுகளை ஜே.வி.பி. நன்கு பயன்படுத்திக் கொண்டது.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் தமிழ்பேசும் சிறுபான்மையின மக்களின் எந்த அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்க்கவில்லை. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை அது வழங்கவில்லை. தமிழ்த் தாயகம் என்று பிரச்சினையில் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பை ஒரு தற்காலிக விவகாரமாக்கியது. கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றப் பிரச்சினைகளை அது தொடவில்லை.

சிங்களத்துடன் தமிழையும் ஒரு உத்தியோகப் பூர்வமான மொழி ஆக்கியதுதான் இந்த ஒப்பந்தத்தின் ஒரு நல்ல அம்சமாகும். தமிழர்களை கலந்து ஆலோசிக்கவில்லை என்பது இந்த ஒப்பந்தத்தின் அடிப்படை குறைபாடு ஆகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்ப் புரட்சிகர யுத்தத்தின் சுவாலைகளை நீருற்றி அணைத்து தமிழர்களின் கவனத்தைத் திசை திருப்பிவிட்டு பாராளு மன்ற சந்தர்ப்பவாத அரசியல் சகதியில் அவர்களை அமிழ்த்துவதே இந்த ஒப்பந்தத்தின் பிரதான முயற்சியாகும். ரவையை விளக்கி அவர்கள் வாக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பி னார்கள். இதுதான் சகல ஏகாதிபத்தியவாதிகளினதும் மற்றும் பிற்போக்குவாதிகளினதும் பெரும் நோக்கமாகும். இலங்கை மக்கள் மீது இந்த உடன்படிக்கையைத் திணிப்பது அவர் களுடைய நலன்களுக்கு உகந்ததாக இருந்தது.

இலங்கை மீதான நவகாலனிய ஆதிக்கமும் தமிழ்பேசும் சிறுபான்மை மக்களின் பிரச்சினையும் இலங்கை அரசியலின் மையப் பிரச்சினைகளாகத் தொடர்ந்து விளங்கின. தமிழ்ச் சிறுபான்மையின் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதால் இந்திய விஸ்தரிப்புவாத ராணுவம் இலங்கைக்கு வந்தது. இதனால் கொந்தளிப்பும் பதற்றமும் நாட்டில் ஏற்பட்டன. இந்தப் பிரச் சினையைத் தீர்க்காததை பயன்படுத்தி ஜே.வி.பி.,எஸ்.எல்.எப்.பி. எம்.இ.பி. முதலிய வகுப்புவாதக் கட்சிகள் மோசமான சிங்கள இனவெறியைக் கிளப்பிவிட்டு விஷயத்தை மேலும் சிக்கலாக்கு கின்றன.

உடன்படிக்கையாலும் இந்தியத் துருப்புகள் இங்கு வந்ததாலும் தமிழ் மக்களை அவை கொடிய முறையில் அடக்கி ஒடுக்கியதாலும் தமிழர் போராட்டத்துக்கு ஒரு தற்காலிக பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது. பல தவறுகளை அது இழைத் துள்ளபோதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான் உலகின் நாலாவது பெரிய ராணுவத்துக்கு எதிராக ஓராண்டுக்கு மேலான காலம் எதிர்த்து நின்று போராடுகின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொள்கையிலும் நடைமுறையிலும் தந்திரோபாயப் பெருந்தவறுகளை இழைத் துள்ளது. ஆனால் அவர்கள் பிரதான எதிரியான இந்திய விஸ்தரிப்புவாதிகளுக்கு எதிராகப் போராடுகிறார்கள். ஆகவே தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய எந்த விமர்சனமும் அவர்களுடன் அதே யுத்த அணியில் நின்று எமது துப்பாக்கியை இந்திய விஸ்தரிப்புவாதிகளுக்கு எதிராகச் செலுத்தும் நிலைமையில் செய்யப்பட வேண்டும்.

இன்றைய தேக்க நிலைமைக்கு வழிவகுத்த, தீவிரவாதக் குழுக்களின் குறைபாடுகளை ஆராய்வது பொருத்தமானது.



பிற்போக்கான, இனவாத சிங்கள அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடத் தமிழ்த் தீவிரவாதிகள் எடுத்த முடிவு சரியானது. அவர்கள் இவ்வாறு தமிழர்களின் தன்மானத்தைக் காப்பாற்றி சர்வதேசிய கொரில்லாப் போராட்டத்தின் வரலாற்றில் புகழ்மிக்க அத்தியாயம் ஒன்றை எழுதினார்கள். தமக்கு மேற்பட்ட சக்திகளை எதிர்த்துப் போராடுவதில் அவர்கள் காட்டும் துணிவும் வீரமும் பாராட்டத்தக்கவை.

ஆனால் அவர்கள் தவறும் இழைத்துள்ளார்கள். இதில் மிகவும் கடுமையான தவறு இந்தியாவில் அவர்கள் பூரணமாகத் தங்கி இருந்ததாகும். இந்தியா ஒரு புரட்சிகர நாடல்ல. பெரும் பூர்ஷ்வாக்களால் ஆளப்படும் ஒருநாடு, தமிழ்ப் போராட் டத்தைப் பயன்படுத்தி வங்காள தேசத்தில் அவர்கள் செய்தது போல், இலங்கை மீது தமது மேலாதிக்கவாதத்தை ஸ்தாபிப் பதே அவர்களுடைய விஸ்தரிப்புவாத நலன்களாகும் என்பதை இவர்கள் முற்றிலும் பொருட்படுத்தவில்லை. சகல விடுதலை இயக்கங்களும் இந்தத் தவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும் எந்த இயக்கமும் தன்னிலேயே தங்கி இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் வளர்ச்சி மந்தமானதாக இருக்கலாம். சந்தேகத்துக்குரிய வெளிநாட்டு உதவியுடன் சடுதியாக ஊதிப் பெருப்பது இலேசு. ஆனால் அந்த உதவி வாபஸ் பெறப்படும் போது நாம் மூக்குடைப்பட்டு நிலத்தில் விழுவோம். ஆனால் சுயசார்பில் தங்கி இருந்தால் இது நடைபெறாது.

இரண்டாவதாக, தீவிரவாதிகள் மேம்பட்ட சக்திக்கு எதிராகத் தமது சக்திகளை ஐக்கியப்படுத்த தவறிவிட்டார்கள். சொந்த சக்திகளை ஐக்கியப்படுத்தி எதிரியைத் தனிமைப் படுத்துவது சாதாரண அடிப்படைத் தந்திரம். ஆனால் ஒருமுனை வாதம் காரணமாகவும் புரட்சிகரமற்ற குட்டிபூர்ஷ்வா தலைவர் கள் காரணமாகவும் தீவிரவாதிகள் இதைச் செய்ய முடியவில்லை இதிலும் மோசமானது, இயக்க மோதலாகும். இதனால் ஒருவர் பின் ஒருவராக அழிக்கும் எதிரியின் பணியை இவர்களே செய்கின்றார்கள். இது எவ்விதத்திலும் மன்னிக்க முடியாதது.

மாசேதுங்[6] முன்வைத்த மக்கள் யுத்தத்தில் தந்திரோபாயங் களை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. மேம்பட்ட சக்திகளுக்கு எதிரான சிக்கலான யுத்தம் ஒன்றில் இந்தத் தந்திரோபாயம் தான் அவர்களுக்கு வெற்றியைத் தந்திருக்கும். ஏறக்குறைய சகல தீவிரவாத ஸ்தாபனங்களும் கொள்ளை, பணப்பறிப்பு, அடித்துத் தாக்குதல், அச்சுறுத்தல், படுகொலை ஆகியன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அப்பாவி சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் படுகொலை செய்தது அவர்களுடைய மோசமான குற்றமாகும். இதே வேளையில் இந்தத் தீவிரவாத இயக்கங்களை மக்களுக்கு ஆயுதம் அளிக்கவும் அவர்களை எதிரிக்கு எதிராகப் போராடச் செய்யவும் மறுத்துள்ளன.

அவை பொதுஎதிரி ஜயவர்த்தனா அரசாங்கத்துக்கும் இந்திய விஸ்தரிப்புவாதத்துக்கும் எதிரான சகல சிங்கள புரட்சிகர சக்திகளுடன் ஐக்கிய முன்னணியை நாடவும் அமைக்கவும் தவறி விட்டன.

இந்த ஸ்தாபனங்களில் எதுவும் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையோ சுய விமர்சனத்தையோ நடைமுறைப் படுத்தாதது இன்னொரு அடிப்படை தவறாகும். இதனால் தலைவர்களின் தவறுகளை விமர்சிக்கவும் முடியாத, திருத்தவும் முடியாத நிலைமை ஏற்படுகின்றது.

## ஐக்கிய சோஷலிசக் கூட்டணி

கூறப்படும் நாலு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சம சமாஜக் கட்சி, சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, நவலங்கா சம சமாஜக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிளவுபட்டதும் விஜய குமாரணதுங்கா தலைமையிலானதுமான சிறீலங்கா மக்கள் கட்சி ஆகியன ஐக்கிய சோசலிசக் கூட்டணி ஒன்றை அமைத்தது இக்காலத்தில் நடந்த இன்னொரு முக்கியமான நிகழ்ச்சியாகும். விஜய குமாரணதுங்கா தான் இந்தக் கூட்டணியை ஏற்படுத்தப் பெரிதும் பாடுபட்டார். ஆனால் அதன் ஆளபவு அறிவிக்கப்படுவதற்கு முன் ஜே.வி.பி.காரர் அவரைக் கொடிய முறையில் சுட்டுக்கொன்றார்கள். அவருடைய இறுதிச் சடங்கு பிரமாண்ட அரசியல் வைபவமாகியது. சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஐந்து இலட்சத்துக்கு மேலான மக்கள் கலந்து கொண்டார்கள். விஜயகுமாரணதுங்கா மீது மக்கள் காட்டிய ஆதரவும் அனுதாபமும் தனியே அவருடைய இடதுசாரி அரசியலுக்குக் கிடைத்ததல்ல. அவர் இலங்கையின் மிகவும் அழகான, மிகவும் மக்கள் ஆதரவைப் பெற்ற சினிமா நடிகராக இருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும்.

அவருடைய மனைவி (திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவின் இரண்டாவது மகள்) ஐக்கிய சோஷலிசக் கூட்டணி அமைவது





பற்றிய கைச்சாத்தீட்டு வைபவத்தில் துணிகரமாக இருந்தார். இந்த வைபவம் படுகொலை செய்யப்பட்ட தலைவரின் பூதவுடலுக்குப் பக்கத்தில் நடைபெற்றது. ஆனால் பின்னர் அவர் தமது குழந்தைகளுக்கு தீங்கு செய்யப்படும் என்ற அச்சுறுத்தல்களைக் கண்டு ஐரோப்பாவுக்கு சென்றார். இதை எழுதும் வேளையில் அவர் அங்கேயே இருக்கின்றார்.

ஐக்கிய சோஷலிசக் கூட்டணிக்கு இப்பொழுது தலைவர் கிடையாது. அதற்கென்று ஒழுங்கான பொதுக்கொள்கையும் கிடையாது. 1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன ஆகியவற்றுக்கிடையிலான ஐக்கிய இடதுசாரி முன்னணி உடன்படிக்கை இதே இடத்தில் கைச்சாத்திடப்பட்டது என்பதையும், அது 9 மாத காலம் கூட நின்றுபிடிக்கவில்லை என்பதையும் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஐக்கிய சோஷலிச கூட்டணியின் கதையும் இதுவாகத்தான் அமையும். இதற்குப் பிரதான காரணம் இந்தக் கூட்டணி புரட்சிகர மார்க்சியக் கொள்கைகளுக்கு மாறாக நின்று தேர்தல்களில் போட்டி போடுவதில் மட்டும் அக்கறை கொள்வதாகும். தேர்தலில் கூட 1988 ஜனாதிபதித் தேர்தலில் போட்டி போடுவதா இல்லையா என்பது பற்றி அதனால் எந்த உடன்பாட்டுக்கும் வரமுடியவில்லை. அதன் பகுதிகளில் ஒன்றான சிறீலங்கா மக்கள் கட்சி அபேட்சகர் ஒன்றை நிறுத்தியது. மற்றவை வேறுபட்ட அளவில் அவருக்கு ஆதரவு அளித்தன.

அரசாங்கத்துக்கு எதிராக நேரடியாகப் போராட மறுத்தல், பிற்போக்கான இலங்கை - இந்திய உடன்படிக்கையையும் இந்திய விஸ்தரிப்புவாதத் துருப்புகள் இலங்கைக்குள் ஆக்கிரமித்ததையும் எதிர்க்க மறுத்தல் ஆகிய ஐக்கிய சோஷலிசக் கூட்டணியின் சீர்திருத்தவாதக் கொள்கைகள் காரணமாக ஐக்கிய சோஷலிசக் கூட்டணி பொது மக்கள் மத்தியில் எந்த ஆழமான செல்வாக்கையும் வகிக்க முடியவில்லை.

ஐக்கிய சோஷலிசக் கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகள் பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிசத்துக்கு சமாதான மாற்றம் ஏற்பட முடியாது என்பதையும் பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசு இயந்திரத்தை வன்முறையால் உடைத்தெறியாமல் இந்த மாற்றம் ஏற்பட முடியாது என்பதையும் உணராதிருக்கும்வரை இன்னும் பல தோல்விகளைக் கண்டு புரட்சிகர இயக்கத்தை மேலும் பல தசாப்தங்கள் பின்தள்ளிவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாகாணசபைத் தேர்தல்கள்

1988-ன் நடுப்பகுதியில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றது இன்னொரு முக்கிய நிகழ்ச்சியாகும். அதிகாரம் பரவலாக்கலுக்கான கோரிக்கை சிங்களவர்கள் மத்தியில் இல்லாதிருந்தபோதும் அரசாங்கம் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஏழு மாகாணங்களில் மாகாண சபைகளை உருவாக்கும் மசோதா ஒன்றை அரசாங்கம் அங்கீகரித்தது. இந்த மாகாண சபைத் தேர்தல்கள் யூ.என்.பி.-க்கும் ஐக்கிய சோஷலிச கூட்டணிக்கும் இடையே நேரடி மோதலாக அமைந்தன. இந்த மசோதாவை எதிர்த்தபடியால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் சில சிறிய சிங்களக் கட்சிகளும் தேர்தல்களைப் பகிஷ்கரித்தன. யூ.என்.பி. இந்தத் தேர்தல்களில் இலேசாக வெற்றி பெற்றது. ஆனால் தமது கட்சியை மீறி வாக்களித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் வாக்குகள் காரணமாக ஐக்கிய சோஷலிசக் கூட்டணியின் வாக்குகள் அதிகரித்தன.

ஜனாதிபதி பிரகடனம் ஒன்றின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு மாகாணமாக இணைத்த பின்னர் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. பந்தோபஸ்து நிலைமையைப் பொறுத்தவரை, சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்தும் வாய்ப்பு எதுவும் இருக்கவில்லை என்பது தெளிவு. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரினார்கள். குறிப்பிடத்தக்க நிர்வாகம் எதுவும் அப்பொழுது இருக்கவில்லை. இத்தகைய நிலைமையில் இந்தியர்கள் சுதந்திரமும் நியாயமும் அற்ற தேர்தல் ஒன்றை நடத்தினார்கள். தமிழர்கள் உடன்படிக்கைக்கு ஆதரவாகவும் யுத்தத்துக்கு எதிராகவும் பெரும்பான்மையாக வாக்களித்தார்கள் என்பது விழல்தனமான பேச்சு. வடமாகாணத்தில் தேர்தல் நடைபெறவில்லை. அபேட்சகர்கள் போட்டியின்றி மாகாண சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். கிழக்கு மாகாணத்தில் எல்லாத் தமிழர்களும் வாக்களித்தார்கள் என்றில்லை.

இந்தியர்கள் முன்னாள் திரிபுவாதக் குழுக்களை ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையில் ஒன்று சேர்த்து ஒரு கூட்டணியாக அவற்றை அமைத்து ஆசனங்களைப் பகிர்ந்துக் கொடுத்தனர். இந்த அபேட்சகர்களை இந்திய ஹெலிகாப்டர்கள் கச்சேரிகளுக்கு எடுத்துச் சென்றன. இந்திய ஹெலிகாப்டர்கள் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அபேட்சகர்களைக் கொண்டு வந்தபோது கச்சேரிக்குள்



வேறு எவரும் உட்புக முடியாதவாறு இந்தியர்கள் உள்ளூர் ஊரடங்கு ஒன்றைப் பிரகடனம் செய்திருந்தார்கள். அத்துடன் அவர்கள் அண்டையில் உள்ள ஆட்களை அவர்கள் கூடுதலாக பணம் வைத்திருந்தார்களோ என்று தேடினார்கள். இந்திய அமைதிகாக்கும் படை பந்தோபஸ்து வழங்கியது மட்டுமல்ல, தேர்தல் சாவடிகளிலும் வேலை செய்தது. இந்திய பூர்ஷ்வா ஜனநாயகம் இவ்வாறு செயற்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் வாழைச் சேனையில், வசிக்கும் என்னுடைய சகோதரன் முறையானவர் ஒருவர் இந்திய அமைதி காக்கும் படையின் சமாதானம் பற்றிய உதாரணம் ஒன்றை என்னிடம் கூறினார். அவரும் அவருடைய மனைவியும் இன்னும் இரண்டு பேரும் வாக்களிக்கச் சென்றிருந்தார்கள். வாக்குச் சாவடியில் பொலிசார் இருந்தனர். தேர்தல் திணைக்களத்தைச் சேர்ந்த எவருமே இருக்கவில்லை. எத்தனை வாக்குகள் தேவை என்று ஒரு பொலிஸ்காரர் கேட்டார். அவருக்கு 4 வாக்குச் சீட்டுகள் கொடுக்கப்பட்டன. வாக்காளர் பட்டியல் எதுவும் பார்க்காமலேயே இது செய்யப்பட்டது. உடனே ஆயுதந்தரிந்த ஈ.பி.ஆர்.எல்.எப். ஊழியர்கள் அவரைச் சுற்றி சூழ்ந்து அவரிடமிருந்து வாக்குச் சீட்டுகளை எடுத்துக் கொண்டனர். தாம் அவற்றைப் போடுவார்கள் என்று கூறினார்கள்.

இந்தத் தேர்தல் ஒரு கேலி நாடகம் என்பதும் ஈ. பி. ஆர். எல். எப்.-பிற்கும் அதன் கூட்டணிகளுக்கும் மக்கள் ஆதரவு இல்லை என்பதும் டிசெம்பர் ஜனாதிபதித் தேர்தலின்போது பூரணமாக நிரூபிக்கப்பட்டது. அவர்கள் ஆதரித்த அபேட்சகரான ஓ.சி. அபயகுணசேகராவுக்குத் தமிழ் வாக்குகள் கிடைக்கவில்லை. திருமதி. பண்டாரநாயக்காவென்றால் வடக்கு கிழக்கு மாகாண சபை கலைக்கப்படும் என்று அஞ்சி அவர்கள் சிறீமாவோவை ஆதரிக்கவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வாக்காளர்களில் 15 சதவீதத்தினர்தான் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தார்கள். இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறைகூவல் விடுத்ததை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை இது காட்டியது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப்.-வும் அதன் கூட்டாளிகளும் நடந்து கொள்ளும் முறை பற்றியும் சில வார்த்தைகள் கூற வேண்டும். இந்தியர்களால் நிதி உதவி அளிக்கப்பட்டும் ஆயுதம் அளிக்கப்பட்டும் உள்ள இவர்கள் தமிழ் மக்கள் மேல் சவாரி செய்கிறார்கள். புலிகளை வேட்டையாடுவது என்ற

www.tamilarangam.net



பெயரில் அவர்கள் புலிகளின் ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராக வாய் திறக்கத் துணியும் அனைவரையும் வேட்டையாடுகின்றார்கள். இந்திய அமைதிகாக்கும் படையின் உதவியுடன் அவர்கள் பயங்கர ஆட்சி ஒன்றை நடத்துகின்றார்கள். அவர்களின் போக்குவரத்து வசதி அனைத்தையும் இந்திய அமைதிகாக்கும் படையே கவனிக்கின்றது. ஈ. பி. ஆர். எல். எப். கொள்ளையடித்து சூறையாடும் வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

யாழ்ப்பாணம் அதிமேற்றிராணியார் 1-01-89 சண்டே டைம்சுக்கும் கூறியுள்ளபடி ஈ.பி.ஆர்.எல்.எப்.-பும் இந்திய அமைதிகாக்கும் படையும் தமது போக்குகளை மாற்றி தமிழ் மக்களை இம்சிப்பதை நிறுத்தினாலே அவை தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியும். எமக்கு அமைதியும் ஜனநாயகமும் தேவை. ஆனால் அவை எமக்குள் திணிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

இந்திய அமைதிகாக்கும் படை இலங்கை விட்டுச் செல்லக் கூடாது என்று இயக்கம் நடத்தும் ஒரேயொரு பிரதான ஸ்தாபனம் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகும். இந்திய அமைதி காக்கும் படை இலங்கையை விட்டுச் சென்றால் சிங்கள ராணுவத்தில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு எவரும் இருக்க மாட்டார்கள் என்பது சிலருடைய வாதமாகும். இதற்கான பதில் இலேசானது. இந்திய ராணுவம் இங்கே வருவதற்கு முன் தமிழ் மக்களை யார் பாதுகாத்தார்கள்? தீவிரவாதக் குழுக்கள் ஐக்கியப்பட்டு மக்களை ஆயுதபாணியாக்கி உண்மையான கொரில்லா மக்கள் யுத்தத்தை நடத்தினால் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு இந்திய ராணுவம் தேவையில்லை.

## 1988 ஜனாதிபதி தேர்தல்

1988 ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியன பற்றியும் சற்றுப் பார்ப்போம். ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்திய சில மாதங்களில் இலங்கையில் முன்னென்றும் காணாத அரசியல் அமைதி இன்மையும் கொந்தளிப்பும் பதற்றமும் நிலவின. இது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கீழ் யூ. என். பி. அரசாங்கம் கடைப்பிடித்த பிற்போக்குக் கொள்கைகள் நாட்டில் சகல வடிவ ஜனநாயகத்தையும் துண்டாடியமை ஆகியவற்றின் விளைவாகும். அரசாங்கம் மக்களின் பார்வையில் சட்டபூர்வத்



தன்மை அனைத்தையும் இழந்து விட்டது. பதினொரு ஆண்டுகளாக நிலவி வரும் பாராளுமன்றமும் இங்கிலாந்தில் ஒலிவர் க்ராம்வெல்லின் காலத்தில் நிலவிய நீண்டகாலப் பாராளுமன்றத்தைப் போல பத்தாம்பசலியாகி விட்டது.

1982 ஜனாதிபதித் தேர்தல் நேர்மையானதாகக் கருதப்படவில்லை. அதில் அதிகார துஷ்பிரயோகமும் ஜனநாயக விரோதச் செயல்களும் இடம்பெற்றன. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மிகவும் பலமான எதிராளியான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் பேரில் குடியியல், அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் தடுக்கப்பட்டார். தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே நக்சல்வாதக் குழு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொய்க் கூறினார். இந்தக் குழு பாராளுமன்றத்தில் அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்க வேண்டும் என்று கூறி அவர் விஜயகுமாரணதுங்க, ஓ. சி. அபயகுணசேகரா போன்றவர்களை தடைக்காவலில் வைத்தது மாத்திரம் அல்ல. சர்வஜன வாக்கெடுப்பு இன்னபிற நடத்தி பாராளுமன்றம் பொதுத் தேர்தலைப் பின்போடவும் செய்தார். தடைக்காவலில் வைக்கப்பட்ட குமாரணதுங்க அபயகுணசேகர போன்றோர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி அபேட்சகர் கொப்பெக்கடுவவுக்கு ஆதரவாக மிகுதியும் பாடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கூறப்படும் நக்சல்வாதிகள் என்போர் ஒருபோதும் விசாரணை செய்யப்படவில்லை. இன்று வரை ஜனாதிபதி சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே ஒரு நக்சல்வாதக் குழு இருக்கின்றது என்ற தமது குற்றச்சாட்டுக்கு ஆதாரம் காட்டவில்லை. ஆனால் அவர் இதைப் பயன்படுத்தி அடிமைத்தனமான பத்திரிகைகள் மூலமும் அரசுக்குச் சொந்தமான வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலமும் கம்யூனிச எதிர்ப்புக் கூச்சல் ஒன்றை எழுப்பினார். பாராளுமன்ற ஜனநாயகத்தின் வரலாற்றில் பாராளுமன்றத் தேர்தல் ஒன்று சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பின்போடப்பட்டது இலங்கையில் தான் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பு அவசர கால நிலைமையின் கீழ் நடத்தப்பட்ட முன்னர் அறியாத தேர்தல் துஷ்பிரயோகங்கள் அதில் இடம் பெற்றன. பொது இடங்களில் தேர்தல் சின்னங்களை காட்சிக்கு வைப்பது பற்றிய தேர்தல் சட்டங்கள் பகிரங்கமாக அத்துமீறப்பட்டன. வேண்டிக் கொண்டபோதும் கூட பொலிஸ் மா அத்தியட்சர் தலையிட மறுத்தார். சில மாதங்

www.tamilarangam.net



களுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட இந்த சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிய தேர்தல் ஆணையாளரின் அறிக்கை இந்தத் துஷ்பிரயோகம் அனைத்தையும் முழுதாக ஊர்ஜிதம் செய்தது.

அரசாங்கம் 1983 மே மாதம் தொடக்கம் இடையீடின்றி அவசரகால நிலைமையின் கீழ் நாட்டை ஆண்டு வந்தது. வேலை நிறுத்த உரிமை, கூட்ட உரிமை பொலிஸ் அனுமதியின்றி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் உரிமை ஆகிய சகல ஜனநாயக உரிமைகளும் மக்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டன. அரசியல் எதிராளர்கள் அடித்துத் தாக்கப்பட்டார்கள். அரசாங்கத்துக்குப் பாதகமான தீர்ப்புகள் வழங்கிய நீதிவான்கள் தூஷிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்கள். நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்ட பொலிஸ் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றார்கள். இவ்வளவும் நடந்தும் அமெரிக்காவுக்குப் பயணம் சென்றிருந்தபோது ஜனாதிபதி இலங்கையை ஒரு ஐந்து நட்சத்திர ஜனநாயகம் என்று வர்ணித்தார்.

இவற்றால் இந்த அரசாங்கம் மக்களால் சட்டபூர்வமானதாகக் கருதப்படவில்லை. ஆகவே புதிய தேர்தல் நடைபெற வேண்டும், காலத்தை மீறி வாழும் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தினம் தினம் அதிகரித்தது. வேகத்துடன் எழுந்தது. இதனுடன் அவசரகால நிலைமையை நீக்க வேண்டும். அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்ய வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், அரை ராணுவ ஸ்தாபனங்களைக் கலைக்க வேண்டும், ஆகியன போன்ற கோரிக்கைகளும் எழுந்தன.

இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் இந்திய விஸ்தரிப்புவாதத் துருப்புகள் நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் ஆக்கிரமிப்பை இழைத்ததும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதாக அமைந்தன. இந்திய - இலங்கை உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட வேண்டும். இந்தியத் துருப்புகள் நாட்டிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற இரட்டை கோஷங்கள் பல மேடைகளில் எதிரொலித்தன. இயற்கையாகவே சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, எம். பி. ஆகிய வகுப்புவாதக் கட்சிகள் தமது அரசாங்க எதிர்ப்புப் பிரச்சாரத்துடன் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் சேர்த்து பெரும் சந்தடி செய்தன. இந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கியிருக்க வேண்டிய ஐக்கிய சோஷலிசக் கூட்டணி உடன்படிக்கையை ஆதரித்தது மாத்திரமல்ல. இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கவும் மறுத்தது. ஆகவே அது மௌனியாகவிருந்து தனிமைப்பட்டது.



இது ஜே.வி.பி.-க்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. ஐக்கிய சோஷலிசக் கூட்டணி சரியான நிலைப்பாட்டை எடுக்காத காரணத்தால் ஜே.வி.பி. சிங்கள இனத்தின் இரட்சகராகத் தோன்றி இந்திய எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணியில் நின்றது. அதன் இயக்கம் பேச்சளவில் நின்று விடவில்லை. அரசாங்க ஆயுதச் சாலைகளிலிருந்து கணிசமான தொகை ஆயுதங்களைத் திருடிய ஜே.வி.பி.யும் அதன் ராணுவப் பிரிவும் உடன்படிக்கையையும் அரசாங்கத்தையும் ஆதரிப்பவர்களையும் மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றியவர்களையும் கொல்ல ஆரம்பித்தது. இத்தகைய விஷயம் இலங்கையில் முன்னர் ஒருபோதும் நடைபெறவில்லை. யூ.என்.பி.யின் தலைவர், அதன் பொதுச் செயலாளர், ஒரு அமைச்சர், ஒரு துணை அமைச்சர் நூற்றுக்கணக்கான யூ.என்.பி உறுப்பினர்கள் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பாராளுமன்றத்தில் வைத்து ஜனாதிபதியைப் படுகொலை செய்வதற்கான முயற்சி வெற்றி பெறவில்லை.

மொத்தம் 700 யூ.என்.பி. உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பான்மையோர் சாதாரண மக்கள் கிராமசேவகர்கள், தபால் பியோன்கள் உப தபால் அதிபர்கள் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டவர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள் ஆகியோர் ஆவர்.

இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் சிறீலங்கா மக்கள் கட்சி, சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் பலர் ஜே.வி.பி. பயங்கர நடவடிக்கைகளின் மூலம் ஹர்த்தால்களையும் (கடை அடைப்பு) வேலை நிறுத்தங்களையும் கூட நடத்தியுள்ளது. இந்த வேலை நிறுத்தங்களோ ஹர்த்தால்களோ மக்களின் சுயவிருப்பத்தின் பேரில் ஏற்பட்டனவை அல்ல. ரி-56-க்குப் பயந்தே அவை ஏற்பட்டன. ஜே. வி. பி.-யின் பயங்கர நடவடிக்கைகளை அரசாங்கம் பகிரங்கமாகத் தண்டிக்க அவ்வளவு முன்வரவில்லை என்பது விந்தையானது. அது சாந்தி செய்யவே முயற்சித்தது. ஜே.வி.பி. மீதான நீண்டகாலத் தடையை அது நீக்கியது. இந்த தடை ஒருபோதும் நியாயப்படுத்தப்படவில்லை. இப்பொழுது அரசாங்கம் அதன் நேசக் கரங்களை ஜே.வி.பி.-க்கு நீட்டி அதன் கோரிக்கைகளை விவாதிக்க தயார் என்று பிரகடனம் செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அவருடைய அரசாங்கமும் ஜே.வி.பி. பிரச்சினையைக் கையாளுவதில் ஒரே குழப்பத்தை உருவாக்கினார்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். 1971 ஜே.வி.பி. கிளர்ச்சி தோல்வி அடைந்தபின் கொல்லப்பட்ட பெரும் எண்ணிக்கையான ஜே.வி.பி. ஊழியர்கள் தவிர அதன் தலைவர்கள் நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்பட்டு நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்கள். அதன் தலைவரான விஜயவீரா ஆயுட் கால தண்டனை பெற்றார். 1977 பொதுத் தேர்தலில் யூ.என்.பி. வென்றதுதான் தாமதம் அரசாங்கம் சிறையில் இருந்த ஜே.வி.பி. தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி பண்டாரநாயக்காவுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் எதிராகவும் பிரச்சாரம் செய்யும் பட்சத்தில் அவர்களை விடுதலை செய்ய உடன்பட்டது. இவ்வாறு யூ.என்.பி.அதன் குறுகிய கட்சி நலன்களை தேசத்தின் நலன்களுக்கு மேலாக வைத்தது. ஜே.வி.பி. ஒப்புக்கொண்டபடி நடந்து திருமதி பண்டாரநாயக்காவுக்கும் இடதுசாரி கட்சிகளுக்கும் எதிராக உக்கிரமான பிரச்சாரம் ஒன்றைச் செய்தது. அதன் தலைவர்கள் யூ.என்.பி. நியாயவாதிகளால் பயிற்றப்பட்டு ஜனாதிபதி கமிஷனுக்கு முன்னால் திருமதி பண்டார நாயக்காவுக்கு எதிராக சாட்சியம் அளித்து அவர் குடியியல் உரிமைகளை இழப்பதற்குத் துணை புரிந்தார்கள். இக்காலத்தில் ஜே.வி.பி. ஜனநாயகப் போக்கில் ஒரு அங்கமாகச் செயல்பட்டது. 1982 ஜனாதிபதித் தேர்தலில் அது போட்டியிட்டு சுமார் 4 சதவிகித வாக்குகளைப் பெற்றது. அந்நிய நிதி உதவி பெற்று— ஈராக்கின் உதவி என்று கூறப்பட்டது. விஜயவீரா ஆடம்பரமான மே தின ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஒழுங்கு செய்தார்.

ஆனால் யூ.என்.பி. கட்சிக்குள்ளே குழப்பம் உருவாகிக் கொண்டிருந்தது. மீண்டும் ஜனாதிபதி, ஜே.வி.பி., சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, நவலங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றை 1983 யூலையில் தடைசெய்து ஜே.வி.பி.யைத் தலைமறைவு வேலைகளில் ஈடுபட நிர்ப்பந்தித்தார். 1983 வகுப்புவாத வன்முறைகளில் இந்தக் கட்சி எதுவும் கலந்து கொண்டதாக எந்த சாட்சியமும் எக்காலத்திலும் முன்வைக்கப்படவில்லை.

இதற்கிடையில் ஜே.வி.பி. அரசாங்கத்துக்கு எதிரான இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. பின்னர் அதன் அரசியல் கருத்துகளுடன் வேறுபட்டவர்களுக்கு எதிராகத் தனிநபர் பயங்கரவாதத்தில் ஈடுபட்டது. 1987 யூலையில் இந்திய விஸ்தரிப்புவாத துருப்புகள் ஆக்கிரமிப்பு நடத்தியமை சிங்கள இனவெறியைக் கிளப்பிவிட்டு தேசபக்தர்களாக வேடம் போட ஜே.வி.பி.-க்கு நல்லதோர் வாய்ப்பினை அளித்தது.



மீண்டும் அரசாங்கம் மென்மையான முறைகளையும் வன்மையான முறைகளையும் பாவித்தது. அது ஜே.வி.பி. மீதான தடையை நீக்கி அதன் கோரிக்கைகளை விவாதிக்க உடன்பட்டது. ஆனால் ஜே வி.பி. இதற்குப் பதில் அளிக்கவில்லை. அப்பொழுது அரசாங்கம் அதன் அதிர்ச்சிப் படையான விசேஷ பணிப்படையை தெற்கிற்கு அனுப்பி கடுமையான அடக்குமுறையை நடத்தியது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள் என அறிய வருகின்றது.

எப்படி இருப்பினும் ஜே.வி.பி. கொலைகள், ஹர்த்தால்கள் வேலை நிறுத்தங்கள் ஆகியனவும் அவசரகால நிலைமை தொடர்ந்து நிலவியதும் நூற்றுக்கணக்கான முற்போக்குவாதிகள் தொடர்ந்து தடைக்காவலில் வைக்கப்பட்டிருந்ததும் சுதந்திரமான நியாயமான தேர்தல் நடத்துவதற்கு உகந்தனவாக இருக்கவில்லை. அரசாங்கத்துக்கு எதிரான உணர்வு உச்ச கட்டத்தை அடைந்தது. ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படியும் இத் தேர்தலுக்கு முன் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படியும் கோரிக்கைகள் எழுந்தன. அத்துடன் அவசரகால நிலைமை உட்பட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் ரத்துச் செய்யும்படியும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படியும் எதிர்கட்சிப் பிரதிநிதிகள் உட்பட்ட காபந்து அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படியும் கோரிக்கைகள் எழுந்தன.

சிக்கலில் மாட்டிக் கொண்ட அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியையும் இத்தேர்தலுக்கு அடுத்த நாள் பாராளுமன்றமும் கலைக்கப்படும் என்பதையும் அறிவித்து பொது ஜன அபிப்பிராயத்தை திருப்திபடுத்த முயற்சித்தது. பாராளுமன்ற தேர்தலும் 1989 பெப்ரவரி 15-ல் நடைபெறும் என அறிவிக்கப் பட்டது. ஆனால் மக்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். ஜனாதிபதி தேர்தலில் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அதிகாரத்தையும் அரசு இயந்திரத்தையும் பாவிப்பதை அவர்கள் விரும்பவில்லை. இந்த மக்கள் கோரிக்கைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடைபெற்றதா என்ற வினாவை இப்பொழுது எழுப்புவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீணானது. ராணுவமும் பொலிசாரும் விசேஷ அதிகாரங்களைக் கொண்டிருக்கும் அவசரகால நிலைமையின் கீழ் நடைபெறும் எந்தத் தேர்தலும் சுதந்திரமானதாக இருக்க முடியாது என்பது எனது கருத்து. வாக்குத் துஷ்பிரயோகம், தேர்தல் மோசடி ஆகியன பற்றி நான் விவரமாக எடுத்துக் கூற விரும்பவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் வழக்கு ஒன்று இருக்கின்றது. அதில் சாட்சியம் அதிகம் அளிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

தாம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்கள் மக்கள் தம்மை ஆதரிக்கின்றார்கள் என்று யூ.என்.பி.-யும் ஜனாதிபதி பிரேமதாசாவும் கூச்சலிடுகின்றார்கள். இது பூர்ஷ்வா வர்க்க பாராளுமன்ற அமைப்பின் இன்னொரு கேலி நாடகமாகும். பிரேமதாசா திருமதி பண்டாரநாயக்காவை குறுகிய வாக்கு வித்தியாசத்தாலேயே தோற்கடித்தார். பிரேமதாசா பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கையில் 28 சதவீத வாக்குகளையே பெற்றார். நாட்டின் கால்வாசி மக்கள் தொகையின் ஆதரவே அவருக்கு இருக்கின்றது. சிறிமாவோவுக்கு ஆதரவு கூடுதலாக உள்ளது என்று கருதப்பட்ட தென் மாகாணத்தில் மக்களை அச்சுறுத்தி வாக்களிக்காமல் செய்ததன் மூலம் ஜே.வி.பி. பிரேமதாசாவுக்குத் துணை புரிந்துள்ளது. யூ.என்.பி.-க்கும், ஜே.வி.பி.-க்கும் இடையில் நிலவிவரும் கூட்டும், மோதலும் ஆகிய உறவை இது எடுத்துக் காட்டுகின்றது. ஜே.வி.பி.யின் உதவியின்றி பிரேமதாசா வென்றிருக்க முடியாது என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

திருமதி பண்டாரநாயக்கா தோற்றதற்கு வேறு காரணங்களும் உண்டு. யூ.என்.பி.-யிலும் பார்க்க வித்தியாசமான கொள்கையையும் வேலைத் திட்டத்தையும் அவர் மக்கள் முன்னிலையில் வைக்கத் தவறினார். யூ.என்.பி.-யும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரே குழுவின் ‘ஏ’ பிரிவும் ‘பி’ பிரிவும் என்று மக்கள் கருதினால் அது அவர்களுடைய தவறில்லை. திருமதி பண்டாரநாயக்கா நிகழ்த்திய தொலைக்காட்சி சொற்பொழிவு ஒன்றில் சேர் ஜோன் கொத்தலவாலை, டட்லி சேனநாயக்கா, டி. எஸ். சேனநாயக்கா ஆகியோரை எஸ்.டபிள்யூ.ஆர். பண்டாரநாயக்காவுடன் சமானமாக எமது தேசியத் தலைவர்கள் என்று குறிப்பிட்டார். அப்பொழுது என்ன வித்தியாசம் இருக்கின்றது.

திருமதி பண்டாரநாயக்கா சில தந்திரோபாயத் தவறுகளையும் இழைத்தார். பல்வேறு யூ.என்.பி. விரோத சக்திகளின் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க அவர் முயற்சித்தார்.



ஆனால் ஐக்கிய சோஷலிசக் கூட்டணி இன்றி எட்டு அரசியல் கட்சிகளின் முன்னணி ஒன்றை அவர் அமைத்தார். ஜே.வி.பியும் சர்வ பல்கலைகழக மாணவர் சம்மேளனமும் அதில் இருந்தன. ஆனால் இதனால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. துப்பாக்கி ஏந்திய ஜே.வி.பி.யுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்த அவருடைய தேசிய பொறுப்புணர்வைப் பற்றி சந்தேகத்தை எழுப்பியது. ஜனாதிபதியாகினால் ஜே.வி.பியை அவரால் கண்டிப்புடன் கையாள முடியுமா என்ற சந்தேகம் எழுந்தது. இதனால் அவர் சில வாக்குகளை இழந்திருக்கலாம். இனப் பிரச்சினையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி யூ.என்.பி.யிலும் பார்க்க வலதுசாரியானது என்பது நன்கு தெரிந்ததே. தமிழருக்கு மாகாணசபைகள் என்ற வடிவத்தில் அதிகாரப் பரவலாக்கத்தை அது எதிர்த்தது. தற்பொழுது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் திருமதி பண்டாரநாயக்கா இனப் பிரச்சினைக்கு புதியதோர் தீர்வை அறிவித்தார். இந்திய இலங்கை ஒப்பந்தத்திலும் பார்க்க இது சிறப்பானதாகத் தோன்றியது. திருமதி பண்டாரநாயக்கா வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பை ஏற்றுக்கொண்டார். கிழக்கு மாகாணத்தில் அம்பாறையில் ஒரு மூஸ்லீம் மாகாணம் அமைக்கப்படும். மீதம் வடக்கு கிழக்கு தமிழர்களுடையதாக இருக்கும். பலமான சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படும், தமிழ்மொழி சிங்களத்துடன் உத்தியோக பூர்வமான மொழியாக இருக்கும். இதுதான் சிறீமாவோ வைத்த திட்டம்.

இதனால் சிறீமாவோ தமிழருக்கு இப்பொழுதும் எந்த உரிமையையும் கொடுக்க தயாராக இல்லாத சிங்கள வகுப்பு பிரகிரதிகளின் பகைமையை சம்பாதித்தார். மறுபுறத்தில் தமிழர்களின் வாக்குகளை அவர் பெறமுடியவில்லை. தமிழருக்கு இந்த பிரேரணைகள் சரியாக விளக்கப்படவில்லை. திருமதி பண்டாரநாயக்காவின் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி யூ.என்.பி. கட்டுப்பாடானதாகவும் ஸ்தாபன ரீதியானதாகவும் அமையவில்லை.

தேர்தலில் சாதியும் செல்வாக்கு செலுத்தியது. ஆனால் இது எவ்வாறு என்பதை விபரமாகக் கூறமுடியாது. பிரேமதாசாதான் கடந்த நாற்பது ஆண்டுகளில் உயர்சாதியில் இருந்துவராத முதல் ஜனாதிபதி ஆவார். உயர்சாதி வாக்குறுதிகள் பல பிரேமதாசாவுக்கு செல்லாது என்று பலர் நினைத்தார்கள். கோயிகம சாதி வாக்கு கோயிகம அல்லாத சாதிகளின் வாக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களிலும் பார்க்க குறைவானவை. கோமி அல்லாதோரின் வாக்கு களை சேர்த்து தோற்கடிக்க முயற்சி ஒன்று எடுக்கப்பட்டது. பிரேமதாசா சிறில் மத்யூ விஜயவீர ஆகியோர் இந்த இயக்கங் களை நடத்தினார்கள். இந்த முயற்சி வெற்றி பெற்றதா? எதிர்கால சமூகவியலாளர்கள் தான் பதில் கூறமுடியும்.

ஐக்கிய சோஷலிசக் கூட்டணியின் அங்கங்களின் ஒன்றான சிறீலங்கா மக்கள் கட்சியின் ஒ. சி. அபயகுணசேகர இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு அபேட்சகராகப் போட்டியிட்ட போதும் கூட்டணி இத்தேர்தலில் போதிய செல்வாக்கை வகிக்க வில்லை. நவலங்கா சமசமாஜக் கட்சி மட்டும் அவரை ஆதரித்தது. மற்ற இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள் மேடைகளில் தோன்றியதே அரிது.

ஐக்கிய சோஷலிசக் கூட்டணி அபேட்சகரை நிறுத்துவதா அல்லது யூ.என்.பிக்கு எதிராக ஒரு பொது அபேட்சகரை ஆதரிப்பதா இந்தப் பிரச்சினையில் இவர்கள் மத்தியில் பிணக்கு ஏற்பட்டது. இலங்கைப் பாராளுமன்ற தேர்தல்களைப் பொறுத்த வரையில் ஒரு விஷயம் எப்பொழுதும் சரியாக இருந்து வந்துள்ளது. யூ.என்.பி. மிகப்பெரியதும் மிகுதியும் ஸ்தாபன ரீதியில் அமைந்ததுமான கட்சியாகும். அதற்குத் திடமான தேர்தல் தொகுதி ஆதரவு உண்டு. ஒவ்வொரு யூ.என்.பி. அபேட்சகருக்கும் எதிராக ஒரேயொரு யூ.என்.பி. எதிர்ப்பு அபேட்சகரை நிறுத்தித்தான் அதைத் தோற்கடிக்க முடியும். 1956-லும், 1960 யூலையிலும், 1970-லும் அது இவ்வாறுதான் தோற்கடிக்கப்பட்டது. இது பூர்ஷ்வா வர்க்க ஜனநாயகத் தேர்தலின் விதி. இதற்கு மாறாக செல்வது யூ.என்.பி. விரோத சக்திகளுக்குத் தோல்வியை ஏற்படுத்தும். புரட்சிப் பாதை இன்னொரு விஷயம்.

ஒ. சி. அபயகுணசேகர போட்டியிடாது விட்டிருந்தால், ஐக்கிய சோஷலிசக் கூட்டணி யூ.என்.பி.யைத் தோற்கடிக்க முழு முயற்சி எடுத்திருந்தால் விளைவு வித்தியாசமானதாக இருந் திருக்கும்.

இந்தத் தேர்தலின் இன்னொரு அம்சம் பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் சோகக் கதையாகும். பிற்போக்கான பூர்ஷ்வா வர்க்கத் தலைவரான எஸ். தொண்டமான் தலைமையில் அவர்கள் இரையாகும் வெள்ளாடுகளைப் போல கூட்டங் கூட்ட மாகச் சென்று யூ.என்.பி. அபேட்சகர்களுக்கு வாக்களித்தார்கள்.



இது உண்மையில் பெரும் சோக சம்பவமாகும். 1948-ல் யூ.என்.பி.தான் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்தெடுத்தது. எமது நாட்டின் வெளிநாட்டு செலாவணியின் பெரும் பகுதியை சம்பாதித்துத் தரும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை அது தேயிலை ரப்பர் தோட்டங்களில் நாடற்ற, வாக்கற்ற அடிமை களாக வைத்திருந்தது. இன்று அவர்களுக்கு சில உரிமை களை வழங்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் இது யூ.என்.பி-யின் பெருந்தன்மையால் ஏற்பட்டதல்ல. வடக்கிலும் கிழக்கிலும் அது இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுடன் உள் நாட்டு யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறது. அமைதி யின்மையின் அறிகுறிகள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் தோன்றுகின்றன. இன்னொரு முன்னணி அங்கு ஏற்படுவதை யூ.என்.பி. விரும்பவில்லை. இதனால்தான் சில கோரிக்கைகளை வழங்க யூ.என்.பி. ஒத்துக்கொண்டது. தொண்டமான் இந்த நிலைமையை நன்கு பயன்படுத்திக் கொண்டார். ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அவர்களுடைய சகோதரர்களின் போராட்டத்தினால் தான் இழந்த சில உரிமைகளை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் பெற்றுக் கொண்டார்கள் என்பதை மனதில் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் பிரஜாவுரிமை, வாக்குரிமைகளை பறித்த யூ.என்.பிக்கு அது இழந்த உரிமைகளைத் தந்துவிட்டது என்ற காரணத்தால் வாக்களிப்பது உதைத்த காலை நக்குவது போன்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலும் யூ.என்.பி. ஆட்சியிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் குறைந்த சம்பளம் பெறுபவர்களும் மிகவும் மோசமான நிலைமைகளில் வாழ்பவர்களும் ஆவர். அவர்களுடைய வாழ்க்கை நிலைமையில் ஏறக்குறைய எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்த நாட்டின் புரட்சிகர இயக்கத்தில் பெரும் தோட்டத் தொழிலாளர்கள் முன்னணிப் படையாக விளங்கவேண்டும். அவர்கள் பிற்போக்கின் ஆதரவாளர்கள் ஆகியதற்குக் காரணம் பிற்போக்கான இலங்கை தொழிலாளர் காங்கிரசினதும் அதன் தலைவரான தொண்டமானினதும் தவறு மாத்திரமல்ல, இட்து சாரி இயக்கம் அவர்களுடைய அரசியல் உரிமைகளுக்காகப் போராடததும் ஆகும். (எமது செங்கொடி சங்கம் 60-ம் 70-ம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்டுகளில் அவர்களுடைய அரசியல் உரிமைகளுக்காகப் போராடியது) பெருந் தோட்டத் தொழிலாளர்களை இலங்கைத் தொழிலாளர்களுடன் இணைக்க இடதுசாரி இயக்கம் தவறி விட்டது.

## 1989 பாராளுமன்றத் தேர்தல்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே 1989 பாராளுமன்றத் தேர்தல்கள் 1989 பெப்ரவரி 15-ல் நடைபெறும் என்று பிரகடனம் செய்யப்பட்டது. எப்பொழுது பாராளுமன்றத்தைக் கலைத்து எப்பொழுது தேர்தலை நடத்துவது என்பது பற்றி ஜே.ஆருக்கும் பிரேமதாசாவுக்கும் இடையில் கருத்துவேற்றுமை இருந்தது போலத் தெரிகின்றது. ஆகஸ்ட் வரை பாராளுமன்றம் தொடர்ந்து இருக்கவேண்டும் எனவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்தான் பாராளுமன்றக் கலைப்பைப் பற்றித் தீர்மானிக்கமுடியும் எனவும் பிரேமதாசா விரும்பியதாகத் தெரிகின்றது.

ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என்ற மக்கள் கோரிக்கை ஏற்கனவே எழுந்துவிட்டது. ஜே.ஆர். சற்று விட்டுக் கொடுத்து ஜனாதிபதி தேர்தலுக்கு அடுத்தநாள் பாராளுமன்றத்தைக் கலைத்து பெப்ரவரி 15-ஐத் தேர்தல் தினமாகப் பிரகடனம் செய்தார். இதனை விரும்பாத பிரேமதாசா தம்முடைய அதிருப்தியைப் பல சொற்பொழிவுகளில் வெளிக்காட்டினார். ஆனால் அதை மாற்ற அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

குறுகிய வாக்கு வித்தியாசத்தால் என்றாலும் ஜனாதிபதித் தேர்தலில் வென்ற பின்னர் யூ.என்.பி. சாதகமான நிலைமையில் அதன் தேர்தல் வேலையை ஆரம்பித்தது. நிர்வாக அதிகாரம் யூ.என்.பி.-க்கு கிடைத்து விட்டது என்பதை அறிந்து கொண்ட பலர் அதற்கு எதிராக வாக்களிக்க விரும்பவில்லை. யூ.என்.பி., சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலும் பார்க்க நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட இயக்கத்தை நடத்தியது. ஜனாதிபதித் தேர்தலில் பின் குழப்பத்தில் ஆழ்ந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி பெப்ரவரி 5ஆம் திகதிதான் அதன் ஒழுங்கான இயக்கத்தை ஆரம்பித்தது.

அத்துடன் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் பலமான வன்முறைப் போராட்டம் நடைபெற்றது. அதன் 10 அபேட்சகர்



களும் கூடுதலான ஆதரவாளர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஹிங்குரானக்கொடாவில் நடைபெற்ற அதன் ஆரம்பக் கட்டத்தில் திருமதி பண்டாரநாயகாவைப் படுகொலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. யூ.என்.பி. ஆட்கள் சிலரும் சுட்டுக்கொல்லப் பட்டது உண்மை. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் பார்க்கக் கூடுதலாக நடைபெற்ற இந்தக் கொலைகளுக்கு யார் பொறுப்பு என்பதை சரியாக கூறமுடியாமல் இருக்கின்றது. அநேக கொலைகளை ஜே.வி.பி.யின் ராணுவ பிரிவே செய்திருக்க வேண்டும். சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூடுதலான ஆதரவை எதிர்பார்த்த தென் மாகாணத்தில் ஜே.வி.பி-யின் அச்சுறுத்தலால் வாக்களிக்கச் சென்றவர்களின் எண்ணிக்கை மிகுதியும் குறைந்தது. அங்கு சில வாக்குச் சாவடிகள் செயற் படவே இல்லை. பாதைகளில் மரங்களைத் தறித்து வீழ்த்தி வேறு சில வாக்குச் சாவடிகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் நடந்ததுபோல் ஹர்த்தால் களோ, வேலை நிறுத்தங்களோ, மின்வெட்டு நீர்வெட்டோ ஏற்படவில்லை.

யூ.என்.பி. நன்கு வாக்குகளைப் பெற்று 225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 125 ஆசனங்களைப் பெற்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி 67 ஆசனங்களைப் பெற்றது. மீதி ஆசனங்கள் சிறிய கட்சிகளுக்குக் கிடைத்தன. ஈரோஸ் என்ற சுயேச்சைக்குழு 13 ஆசனங்களைப் பெற்றது. முஸ்லீம் காங்கிரஸ், மகாஜன எக்சன் பெரமுன, ஐக்கிய சோஷலிசக் கூட்டணி ஆகியன ஒவ்வொன்றும் மூன்று ஆசனங்களைப் பெற்றன. ஒரு காலத்தில் நாட்டில் செல்வாக்கான சக்தியாக விளங்கிய ஐக்கிய சோஷலிசக் கூட்டணிக்கு இத்தேர்தல் படுதோல்வியாக அமைந்தது. சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சிறீலங்கா மக்கள் கட்சிக்கும் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஆசனம் தானும் கிடைக்க வில்லை.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்பதையும் இத்தேர்தல் எடுத்துக் காட்டியது. தமிழ் மக்கள் முதலில் சிங்கள இராணுவத்தாலும் பின்னர் இந்தியர்களாலும் தாக்கப்பட்டபோது சென்னையில் வாழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் முட்டாள்தனமாக அரசியல் அரங்கிற்கு மீண்டும் வந்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட் டார்கள். அவர்கள் அனைவரும் தோற்கடிக்கப்பட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்கள் கௌரவத்துடன் அரசியலில் இருந்து விலகி இருந்தால் மரியாதையாக இருந்திருக்கும்.

உண்மையில் இந்தியத் தூதரகம்தான் அரசியல் போராட்டத்தில் அவர்களை கலக்கச் செய்தது. ஈ.பி.ஆர்.எல்.எப்., டேலொ, ஈ.என்.டி.எல்.எப். போன்ற மற்ற இந்தியச் சார்புக் குழுக்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பதாகையின் கீழ் பொது முன்னணியாக நின்று போரிடச் செய்தது. வடக்கிலும் கிழக்கிலும் ஈ.பி.ஆர்.எல்.எப்.-பிற்கு உள்ள உண்மையான ஆதரவைத் தேர்தல் காட்டியது. வடமாகாணத்திலான தேர்தல் இந்தியாவுக்குப் பெரும் அடியாக விழுந்தது. இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு எடுத்தும், ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவுடனும் போட்டியிட்ட ஈரோஸ் பெரும்பான்மை ஆசனங்களை வென்றது.

தேர்தலுக்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பாய்ந்து யூ.என்.பி.-க்குச் சென்ற துரோகிகளான சி. ராசதுரை, திருமதி பத்மநாதன் ஆகியோரும் ஒரேயொரு யூ.என்.பி. அபேட்சகராக வெற்றி பெற்ற கே.டபிள்.யூ. தேசநாயகமும் தோற்கடிக்கப்பட்டார்கள். யூ.என்.பி. அபேட்சகர் என்ற முறையில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அதற்குப் பெருந்தோட்டப் பிரதேசங்கள் பெரும் பலம் இருக்கின்றபோதும் தோல்வி கண்டது. விடுப்பு வாக்கை ஒருவருக்கொருவர் போடுவதென்று யூ.என்.பி.-க்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று இருந்தபோதும் அது ஒப்பேறவில்லை.

தமிழர்கள் யூ.என்.பி.-க்கு வாக்களித்தார்கள். ஆனால் சிங்கள வாக்காளர்கள் இ.தொ.கா. அபேட்சகர்களுக்கு வாக்களிக்கவில்லை எனத் தெரிகின்றது. பாராளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தைப் பெற்ற இ.தொ.கா. அபேட்சகர் அதன் பொதுச் செயலாளரான எம்.எஸ். செல்லச்சாமி ஆவார். அவர் கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றார். தேர்தலில் திரு. தொண்டமான் கடுமையான படிப்பினை ஒன்றினைப் பெற்றுக் கொண்டார்.

யூ.என்.பி.யை ஒரு தேர்தலில் தோற்கடிக்க முடியும் என்ற போதிலும் எம்மை அடக்கும் பிற்போக்குச் சக்திகளை ஒரு தேர்தல் மூலம் தூக்கி எறிய முடியாது என்பதையே இந்த இரண்டு தேர்தல்களும் எமக்குப் போதிக்கின்றன. லெனின் ஒரு தடவை



கூறியது எனது நினைவுக்கு வருகின்றது. ''பூர்ஷ்வா வர்க்க நுகத்தடிகளின் கீழ் சம்பள அடிமைத்தன நுகத்தடிகளின் கீழ் நடைபெறும் தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் பெரும்பான்மையைப் பெற வேண்டும். அதற்குப் பின்தான் அது அதிகாரத்தைப் பெற வேண்டும் என்று கயவர்கள் அல்லது முட்டாள்கள்தான் சிந்திப்பார்கள். வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை ஆகியவற்றின் இடத்தில் பழைய முறையிலான, பழைய அதிகாரமுடைய வாக்களிப்பை வைப்பது முட்டாள்தனத்தின் அல்லது ஆஷாடபூதித்தனத்தின் சிகரமாகும்'' மாறாக பாட்டாளி வர்க்கம் அதன் பக்கத்துக்கு மக்களை வென்றெடுக்க பூர்ஷ்வா வர்க்கத்தை முதலில் தூக்கி எறிந்து விட்டு அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

எமது கட்சி பூர்ஷ்வா வர்க்க பாராளுமன்ற ஜனநாயகத்தை நிராகரிப்பது தேர்தல்களைப் பகிர்ந்தளிக்கும்படி பல ஆண்டுகளுக்கு முன்னர் விடுத்த அறைகூவலின் அவதாரிப்புடன் இந்நூலை முடிக்க விரும்புகிறேன். இன்றுள்ள நவகாலனிச பொருளாதார சட்டக் கோப்புக்குள் எந்தக் கட்சியும் அல்லது கட்சிகளின் கூட்டணியும் அதிகாரத்துக்கு வந்தாலும், முதலாளித்துவத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் காவல்நாயாக செயற்படும். அடக்குமுறையான பூர்ஷ்வா வர்க்க அரசு இயந்திரத்தை வன்முறையால் உடைத்தெறியாமல் மக்களின் எந்த அடிப்படைப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

www.tamilarangam.net

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 3 | கௌமன் | கௌமன் |
| 6 | ஒருவல் | ஒருவர் |
| 6 | யூ.என்.பி.யார் | யூ.என்.பி.யால் |
| 15 | பாணற்துறை | பாணந்துறை |
| 68 | மகாதேவ் | மகாதேவா |
| 79 | பெறேராயே | பெறேராவே |
| 134 | தினத்தறு | தினத்தன்று |
| 155 | 0-வது | 20-வது |
| 165 | குணசேகரன் | குணசேகரா |
| 170 | ஒல்லடந்தக் | ஒல்லாந்துக் |
| 177 | விஜியமகாதேவி | விஹாரமகாதேவி |
| 177 | கொற்றாப்பட்டி | கொள்ளுப்பிட்டி |
| 181 | சங்கங்களைக் | சங்கானைக் |
| 182 | மாவிட்டபுரடர் | மாவிட்டபுர |
| 183 | மானிப்பாள் | மானிப்பாய் |
| 185 | விடுதலையாகச் | சுதந்திரமாக |
| 219 | சசெய்து | செய்து |
| 219 | ந்தேகமில்லை | சந்தேகமில்லை |
| 231 | கவலையை | கலவையை |
| 249 | விரதுங்க | வீரதுங்க |
| 265 | 72 ரூபா | 27 ரூபா |
| 275 | அதைச்சராகவிருந்த | அமைச்சராகவிருந்த |
| 337 | வாக்குறுதிகள் | வாக்குகள் |
| 343 | பகிர்ந்தளிக்கும்படி | பகிஷ்கரிக்கும்படி |
| 343 | அவதாரிப்புடன் | அவதானிப்புடன் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்.சண்முகதாசன், 1943-ல் இலங்கைப் பல்கலைக் கழக பட்டப் படிப்பை முடித்தபின் இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியின் முழுநேர அரசியல் ஊழியரானார்.

1963-ல் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் எழுந்த தத்துவார்த்த போராட்டத்தில், அன்றைய இலங்கைப் பொதுவுடைமைக் கட்சிக்குள் மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்தார். பின்னர் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியின் தோற்றத்தில் முக்கிய பங்காற்றி அதன் பொதுச் செயலாளராகவும் ஆனார்.

இலங்கைத் தொழிற்சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் இருந்த சண்முகதாசன், தமது வாழ்நாட்களில் தொழிற்சங்கப் போராட்டங்கள் பலவற்றில் பங்கெடுத்துள்ளார்.

அவரது அரசியல் வாழ்க்கை இடதுசாரி இயக்கத்துக்கு இணையாகவே நடந்தேறி வந்திருக்கிறது. இந்த நூலில் காணப்படும் இவரது நினைவுகள் இடதுசாரி இயக்கத்தின் முறையான வரலாறு ஆகும்.

சண்முகதாசன் பரவலாக பயணம் மேற்கொண்டவர். பல அரசியல் நூல்களும் எழுதியுள்ளார்.

தற்போது அவருக்கு வயது 70.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்